ௐ.

ஸ்ரீசுவாமி தயாணந்த சரஸ்வதியாசின்

சத்தியார்த்தப் பிரகாசம்.

(உண்மைப்பொருள் விளக்கம்)

இரண்டாம் பாகம்

மொழிபெயர்ப்பு ஆசிரியர்

எம். ஆர். ஜம்புநாத ஐயர்.

ஆர். நடேச ஐயர், பி. ஏ.,

ஆரியபுத்தகாலயம்

14, பள்ளியப்பன் தெருவு, சௌகார்பேட்டை

சென்னை.

1926

உரிமை பதிவு செய்தது]

[விலை ரூபா 2-8-0

PRINTED AT
THE 'VAVILLA' PRESS
MADRAS.—1926.

பொருளடக்கம்.

—:o:—

		பக்கங்கள்
1.	11-வது அத்தியாயத்தின் முகவுரை	
2.	11-வது அத்தியாயம்	 1-142
3.	12-வது அத்தியாயத்தின் முகவுரை	 143-144
4.	12-வது அத்தியாயம்	 145-215
5	13-வது அத்தியாயத்தின் முகவுரை	... 216-217
6.	13-வது அத்தியாயம்	 218-275
7.	14-வது அத்தியாயத்தின் முகவுரை	... 276
8.	14-வது அத்தியாயம்	... 277-336
9.	எனது கொள்கை	 337-344
10.	சூசிகை	 345-347

குறிப்பு.

——

இவ்விரண்டாம் பாகத்துடன் சத்தியார்த்தப் பிரகாசம் முடிவைப் பெறுகிறது. நான் முன்னரே கூறியுள்ளதுபோல் ஆசிரியரது கருத்தையும் பொருளையும் தழுவியே மொழிபெயர்த்துள்ளேன். இது சிறப்பாகப் பதினான்காவது அத்தியாயத்திற்கு ஏற்கும். முகம்மதியர்களால் தர்ம நூலெனக் கருதப்படும் குர்-ஆன் ஷரீபுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாதது ஒரு குறையேயாகும். குர்-ஆனைப் பொருத்தவரையில் முக்கியமாக நான் கருத்தையும் பொருளையும் ஒட்டியே பதினான்காவது அத்தியாயத்தில் எடுத்துக் காட்டாக ஆளப்பட்டுள்ள மேற்கோள்களை மொழிபெயர்த்துள்ளேன். எனவே வாசகப்பிழைகள் சொற்பிழைகள் இருத்தல் கூடும். ஆனால் பொருள் வேற்றுமை யிராதென்று கூறுவேன்.

எம். ஆர். ஜ.

பதினேழாவது அத்தியாயத்தின்

முகவுரை.

——:o:——

ஐயாயிர வருடங்களுக்கு முன்னர் உலகில் வேதமதந் தவிர வேறு எம்மதமும் இருந்ததில்லை என்பதை மறுப்பார் எவருமிலர். உண்மைக்கும், அறிவிற்கும், சிந்தனைக்கும் ஒத்து இருப்பது இவ்வேதமதமொன்றே. மகாபாரதத்திற்குப் பின்னர்தான் சமுகத்தில் புதிய மாறுதல்கள் துவக்கமாயின. தீமைகள் புகுந்தன. அஞ்ஞானம் என்பது மனித ஜாதியின் உள்ளத்தை இல்லமாகக் கொண்டது. சந்தேகம், அவநம்பிக்கை என்னும் பேய் மனித ஜாதியைப் பிடித்து ஆட்டிற்று. ஜனங்கள் அவரவர் மனோபாவங்களுக்கேற்றவாறு சமயங்களை வகுத்தனர். பின்னர் பல சமயங்கள் தோன்றலாயின. இச்சமயங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். புராணி, ஜைனி, கிரானி, குரானி என்பவையாகும். இவைகளிலும் கொள்கை வேற்றுமையுண்டு. ஒவ்வொரு கொள்கையிலும் பல்வேறு பிரிவுகள். சண்டை, சச்சரவு முதலியவைகள் பின்னர் தொடர்ந்தன. இம்மதங்களைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்து நன்மை, தீமைகளை வெளியிட்டுள்ளோம். அறிவாளி பட்சபாதமில்லாது படித்து அறிந்து சத்தியத்தை ஏற்று அசத்தியத்தை விட்டுவிடலாம்! இந்தியாவிலுள்ள புராணமதங்களைப்பற்றிய ஆராய்ச்சியை 11-வது அத்தியாயத்தில் கூறியுள்ளோம். எவரையும் புண்படுத்த வேண்டுமென்பது எமது நோக்கமல்ல. நல்லெண்ணத்துடனேயே செய்துள்ளோம். சத்திய வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். சத்தியாசத்தியத்தை நிர்ணயஞ் செய்து உலகில் சத்தியத்தை நிலவச் செய்வதும், அசத்தியத்தை அகற்றுவதுமே என் வாழ்நாளின் நோக்கம். அதற்கேற்க இதை ஆக்கியுள்ளேன். சத்தியத்திற்கும் நியாயத்திற்கும் முரண் இல்லாது வாழ்க்கை நடத்துவது மனிதன் கடனாகும். மதச் சச்சரவு, வீண் வாதம் இவைகளால் எவ்வளவு தீமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நோக்குங்கள். இக்கொள்கைச் சண்டை நிற்கும் வரையில் நம்மிடம் அமைதி ஏற்படாது என்பதை எல்லோரும் அறிவார்கள். அறிஞர் சத்தியாசத்தியங்களை அறிந்து, அவைகளுக்கு விரோதமானவைகளை விலக்கவேண்டும். மனிதன் சச்சரவை விடுத்து மனித ஜாதியின் நலத்தை நாடவேண்டும். அங்ஙனம் இருப்பின் சத்தியமாகிய ஒரேமதம் எங்கும் நிகழும். அதற்கேற்ற வழியைப்பற்றி இதன் முடிவில் சுருக்கமாய்க் கூறுவோம். எங்கும் சத்தியமும், நித்தியமுமாகிய ஒரேமதம் பரவுமாறும், எல்லோருடைய மனதிலும் சத்தியமத ஊக்கமும் உற்சாகமும் மேற்படுமாறும் எல்லாம்வல்ல முழு முதற்கடவுள் அருள்புரிவாராக. கற்றோருக்கு ஒரு வார்த்தை போதுமானதல்லவா?

——

சச்சிதாநந்தேசுவராய நம:.

சத்தியார்த்தப் பிரகாசம்.

(இரண்டாம் பாகம்)

பதினொன்றாவது அத்தியாயம்.

ஆரியவர்த்தத்திலிருக்கிற (இந்தியா) பற்பல மதங்களினுடைய விசாரணை.

இப்பொழுது ஆரிய லோகத்தினுடைய அதாவது ஆரியவர்த்தத்தில் (இந்தியா) வசிக்கிறவர்களுடைய மதங்களைப் பற்றி விசாரிப்போம். இவ்வாரியவர்த்தத்திற்குச் சமானமான பூமி பூகோளத்தில் ஒன்றுமே கிடையாது. இதற்குச் சுவர்ண பூமி யென்றும் பெயருண்டு. ஏனெனில் சுவர்ணம் முதலான ரத்தினங்களை இது விளைவிக்கிறது. இக்காரணத்தை முன்னிட்டே சிருஷ்டியின் ஆரம்பத்தில் ஆரியர்கள் இங்கு வசிக்கவந்தார்கள். நாம் சிருஷ்டி விஷயங்களைப்பற்றி சொன்னவிடத்தில் உத்தம புருஷர்களுக்கு ஆரியர்களென்றும் அதிலிருந்து வேறுபட்டவர்களுக்குத் தஸ்யுக்களென்றும் பெயரிருப்பதாகச் சொன்னோம். உலகத்து மற்றைய தேசத்தவர்கள் யாவரும் இதைப் புகழ்ந்து* பரிசன வேதி கிடைக்கும்படியான நாடெனவும் நம்புகிறார்கள். பரிசனவேதிகிடைப்பது பொய்யானபோதிலும் சாமானிய உலோகத்தை—தரித்திர அயல் நாட்டார்களைப் பணமுள்ளவர்களாக—தங்கமாகச் செய்யும் சக்தி இதற்குள்ளது.

एतद्देशप्रसूतस्य सकाशादग्रजन्मनः ।
स्वं स्वं चरित्रं शिक्षेरन् पृथिव्यां सर्वमानवाः ॥ மனு. 2. 20.

ஐயாயிரம் வருடங்களுக்கு முந்தி சிருஷ்டியின் துவக்கத்தில் ஆரியர்களே சகலதேயத்து அதிபதிகளாயிருந்தார்கள். அதாவது பூலோகமுழுவதும் ஒரே இராஜ்யமாருந்தது. கௌரவ பாண்டவர்களினுடைய காலம் வரையிலும் இந்நாட்டின் அரசர்களைக் கீழ்ப்படிந்து அவர்களுடைய சட்டங்களை ஜனங்கள் மேற்கொண்டுவந்தார்கள். இதற்குச்சிருஷ்டி முதற்கொண்டு பிரமாணமாயிருக்கும் மனுஸ்மிருதியே தக்க அத்தாக்ஷி. பூகோளத்திலிருக்கும்படியான

* தொட்ட தெல்லாவற்றையும் தங்கமாகச் செய்யுங்கல்.

சகல பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர, தஸ்யுமிலேச்ச ஜனங்கள் அவர்களுக் கேற்ற வித்தைகளையும் கலைகளையும் அத்தேசத்திலிருக்கும் படியான பிராம்மணர்களிடமிருந்தே அதாவது வித்வான்களிடமிருந்தே கற்றுக்கொண்டார்கள். கேளுங்கள்! மகாராஜ யுதிஷ்டிரருடைய ராஜசூயயாக பரியந்தமும் மகாபாரதயுத்த பரியந்தமும் இவர்களுடைய ஆதீனத்திலேயே சகல இராச்சியங்களும் இருந்தன. சீனதேசத்துப் பகதத்தனும் அமெரிக்காவின் பப்ருவாகனனும், ஐரோப்பாதேசத்துப் பூனைக் கண்களை யொத்த பிடாலாக்ஷனும் கிரேக்க ராஜனும் பர்ஷியாவின் சல்ய ராஜனும் இன்னும் முதலானவர்களும் கட்டளை யிட்டபிரகாரம் இராஜசூய யாகத்திற்கும் மகாபாரத யுத்தத்திற்கும் வந்திருந்தார்கள். இரகு மகாராஜன் அதிகாரத்தை இராவணனும் கீழ்ப்படிந்திருந்தான். ஸ்ரீராமச்சந்திரருடைய காலத்தில் அவன் விரோதமானவுடன் அவனைத்தண்டித்து இராஜ்யத்தை நஷ்டப்படுத்தி அவனுடைய தம்பி விபீஷணனுக்கு இராச்சியாபிஷேகஞ் செய்து வைத்தார். சுவாயம்பவ ராஜன் முதற்கொண்டு பாண்டவர்கள் பரியந்தம் ஆரியசக்கரவர்த்திகளே இராச்சியம் செய்துகொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு பரஸ்பர விரோதத்தினால் நஷ்டம் ஏற்பட்டது. ஏனெனில் பரமாத்மாவினுடைய சிருஷ்டியில் கர்வம் பிடித்தவர்கள், அநியாய காரியஞ்செய்கிறவர்கள் அவித்வான்கள் இவர்களுடைய இராஜ்யம் வெகு நாள் நிலைநிற்காது. அதிகப்பணத்தினாலும் கணக்கற்ற உபயோகத்தினாலும் ஆலசியம் தைரியமின்மை, பொறாமை, துவேஷம் ஆர்வம் முதலானவைகள் உண்டாவது உலக இயல்பே எனத்தோன்றுகிறது. அப்பொழுது நாட்டில் நல்லஅறிவுகுன்றி துர்குணங்களும் துஷ்டகாரியங்களும் உண்டாகிறது. அதாவது மாம்சாகாரம் மதுபானம் பால்யவிவாகம் அடங்காமை இவைகள்விருத்தியாகின்றன.

எவராலும் எதிர்த்துநிற்கக்கூடாவண்ணம் ஜனங்களினுடைய இராணுவப்பயற்சியும் தளவாடங்களும் விருத்தியாகுங்கால் பட்சபாதம் அதிகரித்து அநியாயம் பெருகுகிறது. இவ்விரண்டுகெடுதல்களும் உண்டாகுங்கால் பரஸ்பர விரோதம் உண்டாகிறது. அல்லது அவர்களைவிடக் கீழ்குலத்துதித்த சாமர்த்தியமுள்ள வேறொருவன் சிவாஜியும் கோவிந்தசிங்கும் மொகலாய ராஜாங்கத்திற்கு விரோதமாகக் கிளம்பி அவர்களுடைய இராச்சியத்தைச் சின்னாபின்னம் செய்ததுபோல் சாமர்த்தியமுள்ளவனாகிறான்.

अथ किमेतैर्वा परेऽन्ये महाधनुर्धराश्चक्रवर्तिनः केचित् सुद्युम्नभूरिद्युम्नेन्द्रद्युम्नकुवलयाश्वयौवनाश्ववद्ध्र्यश्वाश्वपतिशशबिन्दुहारिश्चन्द्राऽम्बरीषनक्तुसर्यातिययात्यनरण्याक्षसेनादयः । अथ मरुत्तभरतप्रभृतयो राजानः ॥

மைத். உப. I. 4.

சிருஷ்டி முதல் மகாபாரதயுத்தம்வரை சக்கரவர்த்திகளும் சார்வபௌமர்களும் ஆரிய குலத்திலிருந்தே உண்டானவர்கள் என்பது இதனால் நன்கு விளங்குகிறது. இவர்களுடைய சந்தானங்கள் துரதிருஷ்டவசத்தினால் ராஜப்

பிரஷ்டர்களாய் விதேசிகளினுடைய பாததூளிகளாய் விட்டார்கள். சுத்யும்னன், பூரித்யும்னன், இந்திரத்யும்னன், குவலயாசுவன், யௌவனாசுவன், வனுதிரஸ்வன், அசுவபதி, சசவிந்து, அரிச்சந்திரன், அம்பரீஷன், நகுத்து சர்யாதி, யயாதி, அனரண்யன், மருத்த, பரதன் முதலான சகல பூமியிலேயும் பிரசித்தியான சார்வபௌம சக்கரவர்த்திகளினுடைய பெயர்கள் காணப்படுவது போலவே சுவாயம்பவ முதலான பெயரும் மனுஸ்மிருதி மகா பாரதம் முதலான கிரந்தங்களில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. அஞ்ஞானிகளும் பட்சபாதமுள்ளவர்களுமே இதைப்பொய் என்பார்கள்.

வினு :—ஆக்னேயாஸ்திரம் முதலானவைகளெல்லாம் எழுதப்பட்டிருக்கிறதே. அவைகள் உண்மையா பொய்யா? துப்பாக்கி முதலானவைகள் அச்சமயத்திலிருந்ததா இல்லையா?

விடை:—ஆமாம் அது உண்மையே. துப்பாக்கியும் வெடிமருந்தும் அக்காலத்தில் உபயோகத்திலிருந்தன. சாஸ்திரம் பயிற்சி இவைகளைக்கொண்டு செய்யலாம்.

வினு:— தேவதைகளினுடைய மந்திரபலத்தைக்கொண்டு இவைகளுண்டானவைகளா?

விடை :—இல்லை. ஆழ்ந்தவிசாரணையை (மந்திரம்)க்கொண்டு அஸ்திர சஸ்திரங்கள் செய்யக்கூடும். பலவார்த்தைகள் ஒன்றுசேர்ந்திருக்கும் படியான பதங்களைச் சபிப்பதினுலொன்றும் உண்டாகாது. மந்திரத்தினுல் அக்கினியை உண்டாக்கக்கூடும் என்கிறவர்களிடம் ஜபிக்கிறவர்களுடைய தொண்டையையும் நாக்கையும் ஏன் அது எரிக்கிறதில்லை யென்று கேழ்க்கவேண்டும். தன் சத்துருவின் மரணத்தைக்கோருங்கால் தானே இறந்து போவது என்னவிந்தை? மந்திரம் என்பதிற்கு விசாரணைஎன்று அர்த்தம். அதனுலேயே இராச்சியகாரியங்களை விசாரணை செய்கிறவனுக்கு ராஜமந்திரி என்றுபெயர்.

அம்மாதிரியே சிருஷ்டிப் பொருள்களினுடைய ஞானத்தை அறிந்து அதை உபயோகப்படுத்தி தொழில்களிலும் இயந்திரங்களிலும் பல விஷயங்களைப் பிரசுரஞ்செய்கிருர்கள். உதாரணமாக் கொளித்தினவுடன் பாணமாகவோ வெடியுள்ளதாகவோ இருக்கும் இரும்புடன் தேவையுள்ள வஸ்துவைச்சேர்த்தால் அக்கினி சேர்க்கையால் வாயு மண்டலத்தில் பாய்ந்து ஆகாசத்துடனே அல்லது சூரியக்கிரணங்களுடனே சேருங்கால் நெருப்புப் பிடித்து ஆக்னேயாஸ்திரமாகிறது. தன்னுடைய புகைப்பட்டவுடன் மேகமாகும்படியான பொருளையுடைய வருணாஸ்திரத்தை எதிர்க்கட்சித் தலைவன் போடுவானேயானல் அப்பொழுது அது பலனற்றுப் போகிறது. அது ஆகாசத்துடன் கலந்தவுடன் மழையாகப் பெய்து நெருப்பை அணைக்கிறதினுல் வருணாஸ்திரமாகிறது. இம்மாதிரியே—நாகபாசமும்—சத்துருவின் பேரில் பிரயோகிக்குங்கால் அவர்களுடைய அவயவங்களை முடக்கிவிடும். மோகனாஸ்திரமும்—பிரமையை உண்டு பண்ணும்படியான அதனுடைய புகை சத்துருக்களின் வீரர்களை மயக்கும். பாசுபதாஸ்திரம்—கம்பியிலிருந்தோ கண்ணாடியிலிருந்தோ உண்டு செய்த

காந்தத்தைக் கொண்டு சத்துருவைக் கொல்லக் கூடிய ஒரு விதமான ஆக்னேயாஸ்திரமாகும்.

தோப் (துப்பாக்கி) பந்தூக் (கைத்துப்பாக்கி) இவ்விரண்டும் அந்நிய பாஷையைச் சேர்ந்தது. சம்ஸ்கிருதத்தை யாவது அல்லது வேறு எந்த இந்திய சுதேசபாஷையையாவது சேர்ந்ததில்லை. தோப்புக்கு சம்ஸ்கிருதத்தில் சதத்துவனி என்றும் 'பந்தூக்கு'க்குப் பூஷண்டி என்றும் பெயர். சம்ஸ்கிருதம் அறியாதவர்களும், படிக்காதவர்களும் சொல்லுவதைப் புத்திமான்கள் உண்மையானதென்று கருதக்கூடாது. பூகோளத்தில் விளங்கும்படியான சகல வித்தைகளும் ஆரியவர்த்தத்திலுண்டானவைகளே. இங்கிருந்தே எகிப்திற்கும அங்கிருந்து கிரீசுக்கும், அங்கிருந்து ஐரோப்பா முழுவதும் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா முதலான தேசத்திற்கும் பரவிற்று. இப்பவும் ஆரியவர்த்த நாடே சம்ஸ்கிருத வித்தையில் முந்தினதாயிருக்கிறது. ஜர்மனி தேசத்தில் சம்ஸ்கிருதம் ஓங்கி வளர்ந்திருக்கிறதென்பதும மாக்ஸ் மூலர் அறிந்த மாதிரி சம்ஸ்கிருதம் வேறு யாருக்கும் தெரியாதென்பதும், "கொட்டையில்லாத ஊரில் ஆமணக்கெண்ணெய் செடியே மரம்" என்பது போலிருக்கிறது. சமஸ்கிருதப்பிரசாரமில்லாத ஐரோப்பிய நாட்டில் மாக்ஸ் மூலர் கொஞ்சம் படித்ததானது அந்நாட்டில் மேலே. ஆனல் இந்தியாவுடன் உற்றுநோக்குங்கால் அது ஒன்றுமாகாது. ஜர்மன் கலாசாலைத் தலைவர் ஒருவரிடமிருந்து அவ்விடத்தில் சம்ஸ்கிருத தபால் ஒன்றின் அர்த்தத்தை அறிகிறவர்கள் ரொம்பகுறைவே யென்று அறிந்தேன். மாகஸ் மூலருடைய சம்ஸ்கிருத இலக்கியங்களையும் அவருடைய வேதவியாக்கியானங்கள் கொஞ்சத்தையும் பார்த்தபிறகு அங்குமிங்கும் கிடைக்கும்படியான ஆரியவர்த்த ஜனங்களுடைய உரையை வைத்துக்கொண்டே அவர் செய்திருக்கிறார் என்று எனக்கு விளங்குகிறது. உதாரணமாக "யுஞ்சந்தி பக்னமருஷம் சரந்தம் பரிதஸ்துஷ: ரோ சந்தே ரோசனாதிவி" இவ்வாக்கியத்திலுள்ளவார்த்தைக்குக் குதிரையென்று அர்த்தம் பண்ணுகிறார். சாயணச்சாரியர் அதைச் சூரியன் என்று பண்ணுவது கூட மேலாயிருக்கிறது. நான் என்னுடைய "ரிக்வேதாதி பாஷிய பூமிகை"யில் நன்கு விளக்கிக் காட்டியிருக்கும் வண்ணம் இதனுடைய உண்மையான பொருள் பரமாத்மாவே யாகும். இவைகளிலிருந்து ஜர்மனியிலும் மாக்ஸ் மூலருக்கும் சம்ஸ்கிருத வித்தையில் நிபுணத்துவம் எவ்வளவு உண்டென்று அறிந்துகொள்ளவும்.

பூலோகத்திலிருக்கும் படியான சகலமதஙகளும் கலைகளும் ஆரியவர்த்த நாட்டிலிருந்தே உண்டானவைகள். பைபிள் இன் இந்தியா என்னும் புஸ்தகத்தில் ஜைகாலயட் என்னும் பிரஞ்சுக்காரர் சகல கலைக்கும் நல்ல ஸ்தாபனங்களுக்கும் களஞ்சியம் ஆரியவர்த்த நாடு என்கிறார். சகல சாஸ்திரங்களும் தத்துவங்களும் இத்தேசத்திலிருந்தே உண்டானதென்றும் சொல்லுகிறார். அவர் பரமேச்வரனை என்ன பிரார்த்தனைச் செய்கிறாரென்றால் "ஆதிகாலத்தில் ஆரியவர்த்த நாடு உன்னதஸ்திதியை அடைந்திருந்தது போல் என்னுடைய தேசத்தையும் செய்யவும் என்கிறார். டாராசிகோஹ் ராஜனும் சம்ஸ்கி

கிருத பாஷையில் வித்தையும் கலையும் பூராவாக விருப்பதுபோல் வேறு எந்த பாஷையிலும் இல்லையெனவே அபிப்பிராயப்படுகிறார். நான் அரபி முதலான பாஷைகளைக் கற்றும் என்னுடைய சந்தேகங்கள் தீர்ந்து களிப்பை யடையவில்லை என்றும் சம்ஸ்கிருதத்தைப் பார்த்துக் கேட்டபிறகே சந்தேக மன்னியிலாய் மனங்களிப்படைந்தேன் என்கிறார்.

காசிமாநகரிலுள்ள ராசி சக்கரமானது சரியாகக் கவனிக்கப்படா விட்டாலும் வான சாஸ்திரத்தில் அது எவ்வளவு மேன்மையான விஷயங் களை விளக்குக்கிற தென்று கவனிக்கவும். ஜயபுரி அரசர்கள் அதைச் சரிவரப் பார்த்து வருவார்களேயானால் நன்றாயிருக்கும்.

நாயகமணியாய் விளங்கி மேன்மைப் பெற்றிருந்த இந்நாடானது மகா பாரத யுத்தத்தில் அடைந்த அதிர்ச்சியிலிருந்து மீறி இன்னும் பழையஸ்தி தியை அடையவில்லை. சகோதரர்களுக்குள் சண்டை ஏற்பட்டு அடித்துக் கொள்வார்களேயானல் நாசம் உண்டாகும் என்பதில் ஏதாவது சந்தேகமும் உண்டோ?

विनाशकाले विपरीतबुद्धिः ॥

நாசம் வருங்காலத்தில் புத்தியும் மயங்கி விபரீதமாகிறது. சொல்லும் படியான நல்லவார்த்தைகளெல்லாம் நம்பிக்கை யற்றதாயும், அப்பொழுது தீச்சொற்களெல்லாம் நன்மையுள்ளதாயும் மாறுகிறது. அக்குருக்ஷேத்திர ரணகளத்தில் வித்வான்கள், இராஜர்கள், இராஜராஜர்கள், ரிஷிகள் முதலான வர்கள் கொலை யுண்டு மாண்டு வித்தையும் வேதோக்த தர்மமும் குன்றிவிட் டது. பொறாமை பேராசை ஆர்வம் முதலானவைகள் ஜனங்களின் மனதைக் கவர்ந்தன. பலமுள்ளவர்கள் தேசத்தைக் கைப்பற்றி அரசர்களென்று அறிவித் துக் கொண்டார்கள். இம்மாதிரியாக இராஜாங்கம் பிளவுண்டிருக்குங் காலத்தில் வெளி தேசங்களை எவர்கள் அதிகாரத்தின்கீழ் வைத்துக் கொண்டிருக்கக் கூடும்?

பிராம்மணர்களே வித்தை யற்றவர்களாகும் பொழுது க்ஷத்திரியர்கள் வைசியர்கள் சூத்திரர்கள் அறிவற்றுப்போவதைப் பற்றிக்கேழ்ப்பானேன். தலை முறை தலைமுறையாய அர்த்தத்துடன் வேதம் முதலான சாஸ்திரங்களை ஓதி வந்ததும் மறைந்து விட்டது. கேவலம் ஜீவனோபாயத்திற்கு மாத்திரம் பிராம் மணர்கள் பாடஞ் செய்து வந்தார்கள். அதைக்கூட அவர்கள் க்ஷத்திரியர் களுக்கும் பிறர்களுக்கும் சொல்லிக் கொடுக்கவில்லை. அவித்வான்கள் ஜனங் களின் போதகர்களாகவே வஞ்சனை, கபடம், புரட்டு, அதர்மம் முதலானவை கள் விருத்தியாயிற்று. பிராம்மணர்கள் தங்கள் ஜீவனத்திற்கு ஏதாவது ஒரு வழிதேட வேண்டுமென்று யோசித்து நிச்சயஞ் செய்து கொண்டு க்ஷத்திரியர் முதலானவர்களுக்கு "நாங்கள்தான் உங்களுடைய பூஜ்ய தேவதைகள். எங்களை வணங்காமல் உங்களுக்கு முக்தி கிடையாது. எங்களைப் பூஜை செய்

மல் போனால் கஷ்டமான நரகத்தில் விழுவீர்கள்" என்று உபதேசஞ் செய்தார்கள்.

வேதங்களிலும் ரிஷி முனிகளால் வரையப்பட்ட சாஸ்திரங்களிலும் பூர்ண வித்தையை உடையவர்களேயும் தார்மிகர்களேயும் பிராம்மணன் என்று சொல்லுவதுபோக இப்பொழுது மூர்க்கனும் தூர்த்தனும், காமியும் வஞ்சகனும், தர்மமற்றவனும் **பிராம்மணன்** என்று கூறிக்கொண்டு தன்னுடைய வழிப்பாட்டைத் தேடுகிறான். உண்மை வித்வான்களுடைய குறிகள் இவர்களிடம் எவ்விதமாய் விளங்கும்? க்ஷத்திரியர்கள் முதலானவர்கள் சம்ஸ்கிருதம் முழுவதும் அறியாமல் போக்வே பிராம்மணர்கள் சொல்லும்படியான கட்டுக்கதைகளை யெல்லாம் உண்மையென நம்பினார்கள். பெயரினால் மாத்திரம் பிராம்மணர்களாயிருக்கும் இவர்கள் தைரியமாய் தங்களுடைய மாயவார்த்தைகளினால் அவர்களேக்கட்டி **ब्रह्मवाक्यं जनार्दनः ॥** என்பதைப் படித்துக்கொடுத்தார்கள், "பிராம்மணன் முகத்திலிருந்துவரும் வார்த்தைகளெல்லாம் நேராக பகவான் வாயிலிருந்தே" வந்தது என்பதாம்.

வித்தையைவிட தனத்தை அதிகம் கொண்டிருந்த இச்க்ஷத்திரியர்கள் அவர்களினுடைய ஆட்டத்திற்கு ஆளானபிறகு பெயரினல் பிராம்மணர்களான இவர்களுக்கும் விஷயசுகங்களே அனுபவிக்கத்தக்கச்சமயம்வாய்த்தது. பூமியிலிருக்கும்படியான நல்லபதார்த்தங்கள் சகலமும் பிராம்மணர்களுக்கென்றே சொன்னார்கள். சுருங்கச்சொல்லுங்கால் குணம் கர்மம் சுபாவம் இவைகளினால் ஏற்படும் பிராம்மணன் முதலான வர்ணவியவகாரங்களே நாசப்படுத்தி பிறப்பினுலுண்டாகிற தென்றுவைத்தார்கள். இறந்தவர்களின்பேரில்கூட எஜமானர்களிடமிருந்து தானங்கள்வாங்கிக்கொள்ள வாரம் பித்தார்கள். இவர்கள் மனம்போன பிரகாரம் காரியம் செய்யவாரம்பித்தார்கள். "நாங்கள்தான் பூதேவர்கள்" என்றும்" எங்களுடைய பணிவிடை யன்னியில் தெய்வலோகம் எவருக்கும் கிடையா" தென்றும் சொன்னார்கள். புழு பூச்சி எரும்புமுதலியவைகளாக மாறி கோரநரகத்தைவிட இழிவான உலகத்தையடைய யோக்கியதையற்ற காரியத்தைச்செய்யும் அவர்களே "உங்களுக்கு எவ்வுலகம் கிடைக்குமோ" என்றால் கடுஞ்சினங்கொண்டு அவர்கள் "பிரம்மதுரோகிவினஸ்யதி" என்கிறபிரகாரம் நாங்கள் உங்களேச்சபித்தால் நாசமடைவீர்கள் என்றுசொல்லுவார்கள். பூர்ணவேதஞ்ஞானமிருந்து பரமாத்மாவை அறியும் படியானவும் தர்மாத்மாக்களானவுமான உலக உபகாரிகளே எவன் தூஷிக்கிறானே அவன் அவசியம் நரகத்தை யடைவான். அவர்களேப் பிராம்மணர்களென்றாவது அவர்களே சேவை செய்யவாவது கூடாது.

வினு :—அவ்விதமாயின் நாங்கள் யார்?

விடை :—நீங்கள் **போப்கள்.**

வினு :—போப் என்பவர் யார்?

விடை :—போப் என்பதற்கு லத்தீன் பாஷையில் தகப்பன் பெரியவர் என்று அர்த்தம். ஆனால் இப்பொழுது எவன் வஞ்சகத்தினால் தன் எண்ணத்தைச் சாதித்துக் கொள்ளுகிறானே அவனுக்குப் **போப்** என்று பெயர்.

வினா:—எங்கள் தாயும் தகப்பனும் பிராம்மணர்களான படியினாலும் நாங்கள் சாதுக்களின் சீடர்களான படியினாலும் **பிராம்மணர்களும் சாதுக்களுமாகிறோம்.**

விடை:—அது உண்மையே. தகப்பன் தாய் பிராம்மணன் பிராமணத்தியானதினாலும் ஏதோ ஒரு சாதுவினுடைய சீடனானதினாலுமே ஒருவன் பிராம்மணனும் சாதுவுமாகமாட்டான். குணகர்மம் சுபாவம் இவைகளினாலும் பரோபகாரத்தினாலுமே பிராம்மணனாகவும் சாதுவாகவுமாகிறான். ரோமாபுரியின் போப்கள் தங்களுடைய சீடர்களுக்கு இம்மாதிரி சொல்லுவது உண்டு "உங்களுடைய பாபங்களை என்முன் கூறிவிட்டால் நான் அதை மன்னித்து விடுவேன். எங்களுடைய பணிவிடையும் உத்திரவும் மன்னியில் யாரும் சுவர்க்கத்தையடைய முடியாது. உங்களுக்குச் சுவர்க்கத்திற்குப்போக இஷ்டமுண்டானால் இங்கே என்னிடம் எவ்வளவு திரவியம் சேகரிக்கிறீர்களோ அங்கே அவ்வளவு இலாபங் கிடைக்கும்". இதைக்கேட்டவுடன் புத்தியன்னியில் பணம் அதிகமுள்ளவர்கள் சுவர்க்கத்திற்குப் போகவேண்டும் என்கிற அவா மிகுதியினால் போப்பிற்கு வேண்டிய அளவு பணத்தை யளிக்கிறார்கள். அப்பொழுது அவர் இயேசு மேரி இவர்களுடைய சிலுவையின் முன்னின்று ஹுண்டியல் எழுதுவார் "ஏ. ஏசுநாதா! தங்களுடைய கணக்கில் ரூ 10,0000 சுவர்க்கத்திற்கு வருவதற்காக இவ்விடத்தில் கட்டியிருக்கிறான். அவன் சுவர்க்கத்திற்கு வந்தால் அப்பொழுது நீங்கள் தங்கள் தகப்பனுடைய இராஜ்யத்தில் ரூ 25,000க்கு வீடு தோட்டம் நந்தவனங்களும், ரூ 25000 க்குக் குதிரை, வண்டி, நாய், சேவகன்களும், ரூ 25,000க்கு அன்னம் ஆகாரம் துணிகளும் மீதி ரூ 25000க்கு ரொக்கமாய் அவனுடைய அண்ணன் தம்பி சிநேகிதன் முதலானவர்களுடைய செலவிற்கும் கொடுக்கவேண்டியது" பிறகு போப் தன்னுடைய கை நாட்டை வைத்து கெஞ்சுவோனுக்கு "உன்னை அடக்கம் செய்யுமுன் உன் தலையணியின் கீழ் இதை வைக்கச் சொல்லு. அப்பொழுது வானத்திலிருந்து தேவதூதர்கள் வந்து அழைத்துக் கொண்டு போய் உண்டியிலில் கண்டிருக்கும் வண்ணம் சகல வசதிகளும் செய்வார்கள்" என்று சொல்லிக்கொடுப்பார்கள்.

சுவர்க்கத்தின் ஒப்பந்தம் போப்பையே சேர்ந்ததென்று தோன்றுகிறது. ஐரோப்பாவில் மூடத்தனமிருந்தவரையில் போப்பினுடைய லீலைகள் நடந்தேறிவந்தது. படிப்பும் ஞானமும் விருத்தியாகவே இதுகுறைந்துகொண்டே வந்தது. ஆனாலும் அடியுடன் ஒழியவில்லை. ஆரியவர்த்தநாட்டிலும் போப்க்கள் லட்சக்கணக்கான உருவமெடுத்து அவர்களுடைய மாய வலையைப்பரப்பினார்கள். அதாவது அரசனுக்கும்பிரஜைகளுக்கும் படிப்பில்லாமல் நல்லபுருஷர்களுடைய சங்கமும் அன்னியில் செய்துவிட்டார்கள். அல்லும் பகலும் தப்புவழியைக்காட்டுவதிலேயே காலத்தைக்கழிகிறார்களே ஒழிய வேறு வழிகளில்லை. கள்ளங்கபடத்தினால்காரியங்கள் செய்கிறவர்களே போப்க்கள். அவர்களில் கூடதர்ம சிந்தையுள்ள வித்வான்கள் பரோபகாரிகளிருக்கிறார்கள். அவர்களைப் பிராம்மணர்களென்றே ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஆகையால் கபடமு

ளவர்கள் வேஷதாரிகள் சுய காரியப்பிரியமுள்ளவர்கள் இவர்களைப் போப்க்க ளென்றும் உத்தமபுருஷர்களைச் சாதுக்களென்றும் அறியவேண்டும். சமணர் கள் மகம்மதியர்கள் கிறிஸ்துவர்கள், இவர்களுடைய வலையினின்று தப்பி வேதம் முதலான சாஸ்திரத்தை இசையுடன்கூட ஓதி ஓதுவிக்கிற பிராம்மணர்களில் லாமலிருந்தால் எவர்களால் ஆரியர்களுடைய மனதில் வேத ஆசையையூன்றி சரியான வருணாச்சிரமதர்மத்தைக் காப்பாற்றமுடியும்? உண்மையான பிராம் மணர்களும் சாதுக்களுமே அதைச்செய்திருக்கிறார்கள்.

போப் லீலைகளிலிருந்தும் சமணம் முதலான நம்பிக்கைகளிலிருந்தும் தப்புவது விஷத்திலிருந்து அம்ருதத்தை எடுப்பதுபோலாம். சீடர்கள் வித்தை யற்ற பொழுதுகொஞ்சம் கற்றபோப்க்கள் அகந்தையுள்ளவர்களாய் ஒருவருக் கொருவர்சேர்ந்து நிச்சயஞ்செய்துக்கொண்டுராஜன் முதலானவர்கள் முன்னி லையில் பிராம்மணர்களும் சாதுக்களும் தண்டிக்கக்கூடாதவர்கள் என்று சொன் னார்கள்.

பிராம்மணர்கள் சாதுக்கள் விஷயத்தில் உபயோகிக்கவேண்டிய இவை களைத் தங்களுக்குத் தானென்றே சொல்லிவந்தார்கள். பொய் வார்த்தைகளையு டைய புஸ்தகங்களை யெழுதி தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த பெரிய ரிஷி கள் முனிகளின் பெயரால் அதை வெளியிட்டார்கள். பெரிய ரிஷிகளின் பெய ரைக்கொண்டு அதைஜனங்களுக்கு அறிவித்து காட்டின் சட்டங்களினால் பாதிக்கப்படாதவர்களாய் தங்களிஷ்டப் பிரகாரம் உலாவி வந்தார்கள். அதா வது உறங்குதல் உண்ணுதல் விழித்தல் உட்காருதல் போவது முதலானவைக ளையும் தங்களுடைய சம்மதமன்னியில் செய்யக்கூடாதென்கிறார்கள். உண் மையில் போப்போன்ற இப்பிராமணர்களும் சாதுக்களும் தங்களிஷடப் பிரகா ரம் செய்யலாமென்றும் அவர்களைத் தண்டிக்கக் கூடாதென்றும் ராஜர்களு டைய மனதில் பதியப்பண்ணி விட்டார்கள். இவ்வளவு முட்டாள் களானவுடன் போப்க்கள் தங்கள் மனம் போனபிரகாரம் செய்யவாரம்பித்து இதரர்களை யும் செய்யச் சொன்னார்கள். இத்தீயக்குணங்கள் மகாபாரத யுத்தத்திற்கு முந்தியே வேரூன்றி ரிஷிகள் முனிகளிருந்த போதிலும் அலட்சியம் அசட் டை விரோதம் துவேஷம் இவைகளினுடைய முளை அப்பொழுதே கண்டு பெரிய மரமாகிவிட்டது. உண்மை உபதேசம் எப்பொழுது குலைந்ததோ அப் பொழுதே இந்தியாவில் அவித்தை பரவி பரஸ்பர விரோதம் உண்டாயிற்று. ஏனென்றால் சாங்கியத்தில் சொல்லியிருக்கும் வண்ணம்.

उपदेश्योपदेष्टृत्वात् तात्सिद्धः । इतरयान्धपरम्परा ॥ சாங். 3. 76. 81.

உண்மை உபதேசம் ஓங்கியவருங் காலத்திலேயே தர்மார்த்தகாம மோட் சம் நன்கு சித்திக்கும். உத்தம உபதேசகர்களும் கேழ்க்கிறவர்களுமில்லாத காலத்தில் அடர்ந்த இருள் ஆழ்ந்து கொள்ளுகிறது. சத்புருஷர்கள் உண்மை யாய் சத்தியோபதேசஞ் செய்யுங்கால் அஞ்ஞான இருள் மறைந்து மெய்ஞ்ஞா னம் வெளியாகிப்பரவுகிறது.

பிறகுபோப்க்கள் தங்களையும் தங்களுடைய ஜனங்களையும் பூஜை செய்வதினாலேயே உங்களுக்கு க்ஷேமம் உண்டாகுமென்றனர். எல்லோரும் இவர்களுடைய வசமானபிறகு போப்க்கள் தங்கள் வேலைகளைமறந்து சிற்றின்பங்களில் அமிழ்ந்தார்கள். அவர்கள் இடையனைப்போலவும் இவர்கள் ஆடுகளைப் போலவும் மாறி வித்தை பலம் புத்தி பராக்கிரமம் வீரத்தனம் முதலான நற்குணங்கள் நாசமாகி விட்டன. சிற்றின்பங்களிலிறங்கின வுடனே மாம்சம் சாப்பிடவும் சாராயம்குடிக்கவும் ஆரம்பித்தார்கள். இதிலிருந்தே

வாம மார்க்கிகள்

உதித்து சிவ உவாச, பார்வத்யேளவாச பைரவ உவாச, சிவன் சொன்னார், பார்வதி சொன்னாள், பைரவன் சொன்னார் என்று எழுதி தந்திரங்களென்ற பெயரையும் அளித்தார்கள்: அவைகளில் கீழ்க்கண்ட நூதன விஷயங்கள் காணப்படுகின்றன.

मद्यं मांसं च मीनं च मुद्रा मैथुनमेव च ।
एते पञ्च मकाराः स्युर्मोक्षदा हि युगे युगे ॥ காளி தந்திரம்.

மதுபானம், மாம்சம், மீன், பணியாரம் மைதுனம் என்னும் 'ம'வில் ஆரம்பமாகும் இவ்வைந்தும் எப்பொழுதும் மோட்சத்தையளிக்கும்.

प्रवृत्ते भैरवीचक्रे सर्वे वर्णा द्विजातयः ।
निवृत्ते भैरवीचक्रे सर्वे वर्णाः पृथक् पृथक् ॥ குலார்னவ தந்திரம்.

பைரவீசக்கரத்திலிருக்கும் வரையில் சகலவர்ணங்களும் பிராம்மணர்களே. அதிலிருந்து பிரிந்தால் அவரவர்கள் தங்கள் தங்களுடைய வர்ணத்தையடைகிறார்கள்.

पीत्वा पीत्वा पुनः पीत्वा यावत्पतति भूतले ।
पुनरुत्थाय वै पीत्वा पुनर्जन्म न विद्यते ॥ மகாநிர்மாண தந்திரம்.

குடித்துக் குடித்துக் குடித்துக் கீழே விழுந்து திரும்பி எழுந்திருந்தும் எவன் குடிக்கிறானோ அவனுக்கே மறு பிறப்பு கிடையாது.

मातृयोनिं परित्यज्य विहरेत् सर्वयोनिषु ।
वेदशास्त्रपुराणानि सामान्यगणिका इव ॥
एकैव शाम्भवी मुद्रा गुप्ता कुलवधूरिव । ஞானசகலினி தந்திரம்

தாயிடம் தவிர மற்றவர்களுடன் சம்போகஞ் செய்யலாம். வேதங்களும் சாஸ்திரங்களும் சாதாரண விலைமாதர்களைப் போலவேயாம். சாம்பவீமுத்திரையோ காணமுள்ள குடும்ப ஸ்திரீயைப் போலாகும்

இவர்களுடைய லீலையைப் பாருங்கள். வேத விரோதமாயும் அதர்மமாயுமிருக்கும்படியான காரியங்களை வாமமார்க்கிகள் சிலாக்கிய மென்று கருதுகின்றார்கள். மாம்சம், மதுபானம், மீன், பணியாரம் புணர்ச்சி இவைகளையெல்லாம் மோட்ச சாதனங்களாகக் கருதுகிறார்கள். நல்ல ஆடவர்களைச் சிவனாகவும் பெண்டிர்களைப் பார்வதியாகவும் கருதி,

अहं भैरवस्त्वं भैरवी ह्यावयोरस्तु सङ्गमः ।

"நான் தான் சிவன்" "நீதான் பார்வதி" சம்யோகம் செய்யலாம் என்று சொல்லி யாராயிருந்தபோதிலும் அவர்களுடன் ஒன்று கூடுகிறார்கள். அதில் கெடுதல் ஒன்றையும் அவர்கள் அறிகிறதில்லை. தொடக்கூடாத ஸ்திரீகளை அவர்கள் ரொம்ப சுத்தமுள்ளவர்களாகக் கருதுகிறார்கள். உதாரணமாக சாஸ்திரங்களால் தீண்டக்கூடாதெனப்பட்ட சூதகஸ்திரீகள் வாமமார்க்கிகளால் ரொம்ப சுத்தமுள்ளவளாகக் கருதப்படுகிறாள்.

रजस्वला पुष्कर तीर्थं चांडाली तु स्वयं काशी चर्मकारी प्रयागः स्याद्रजकी मथुरा मता । अयोध्या पुक्कसी प्रोक्ता ॥ உருத்திரயாமல தந்திரம்.

சூதகஸ்திரீயுடன் சம்யோகஞ் செய்வது புஷ்கரஸ்நானத்திற்குச் சமானமென்றும், சண்டாளியுடன் சேருவது காசியாத்திரைக்குச் சரியானதென்றும், சக்கிலிச்சியுடன் சேருவது பிரயாகை ஸ்நானத்திற்கு ஒப்பானதென்றும் வண்ணாத்தியுடன் கூடுவது மதுராபுரியாத்திரைக்குச் சமானமென்றும், வேசியுடன் கூடுவது அயோத்தியாத்திரைக்குச் சரியான தென்றும் கருதுகிறார்கள். மதுவைப் புண்ணியதீர்த்தம் என்றும் மாம்சத்தைச் சுத்தமென்றும், புஷ்பமென்றும் மீனை மூன்றாவதென்றும் நீர்க்கரி என்றும், மைதுனத்தை நான்காவதென்றும் பணியாரத்தை ஐந்தாவதென்றும் யாரும் அறியாமலிருக்கப் பெயர் வைத்திருக்கிறார்கள். தங்களைத் தாமரையை யொத்தவர்கள், நல்ல மனதுடையவர்கள் வீரர்கள், தயை யுள்ளவர்கள் பலமுள்ளவர்கள் எனவும் வாமமார்க்கத்தைத் தழுவாதவர்களை முள்ளை யொத்தவர்களென்றும், புரட்டர்களென் மெலிந்தவர்களென்றும் பெயரிட்டு இருக்கிறார்கள்.

பைரவீ சக்கரத்திலிருக்கும் வரையில் பிராம்மணன் முதல் சண்டாளன் வரையில் துவிஜன் ஆகிறார்களென்றும் அதிலிருந்து கலைந்தவுடன் அவரவர்கள் தங்களுடைய பழைய வர்ணத்தை யடைகிறார்களென்றும் சொல்லுகிறார்கள். வாம மார்க்கிகள் பூமியின் பேரிலோ அல்லது பலகையின் மேலோ ஒரு முக்கோணத்தையோ அல்லது சதுரத்தையோ அல்லது சக்கரத்தையோ எழுதி அதின் பேரில் சாராய ஜாடியை வைத்துப் பூஜை செய்து

ब्रह्म शापं विमोचय । हेमद्य ॥

மதுபானமே! நீ பிரம்ம சாபத்திலிருந்தும் மீண்டவன் என்கிறார்கள். வாமமார்க்கத்தவர்களைத் தவிர வேறு யாரும் வரக்கூடாத விடத்தில் ஆடவர்களும்

பெண்டீர்களும் கூடி புருஷர்கள் ஸ்திரீகளை நிர்வாணமாகச் செய்து பூஜை செய்கிறார்கள். ஸ்திரீகளும் புருஷர்களை நிர்வாணமாகச் செய்து பூஜை செய்கிறார்கள். பிறகு, தன்னுடைய மனைவி, பெண், தாய் சகோதரி, நாட்டுப் பெண்ணவர்களாயிருந்த பொழுதிலும், புருஷர்கள் எந்த ஸ்திரியையாவது மைதுனஞ் செய்யலாம்.

பிறகு பாத்திரம் ஒன்றில் சாராயம் நிறைத்து ஒரு தட்டு நிரம்ப மாம்சம், பணியாரம், இவைகளையும் வைக்கிறார்கள். அப்பொழுது அவர்களுடைய ஆசன் அவைகளைக் கையிலேந்தி **भैरवोऽहम् । शिवोऽहम् ॥**

நான்தான் பைரவன். நான்தான் சிவன். என்று சொல்லி அதைக்குடிக்கிறான். மிகுதியை மற்றவர்கள் குடிக்கிறார்கள். பிறகு எந்த ஸ்திரீயையாவது அல்லது வேசியையாவது, அல்லது புருஷனையாவது நிர்வாணமாகச் செய்து கையில் கத்தியைக் கொடுத்து தேவி என்றாவது மகாதேவன் என்றாவது அழைத்து அவளுடையவோ அல்லது அவனுடையவோ மர்ம ஸ்தானங்களைப் பூஜை செய்து அத்தேவியை மதுபானம் செய்யச் செய்து மீதியானவர்களும் அதிலிருந்தே குடிக்கிறார்கள். மயக்கம் வரும் வரையில் குடித்து சகோதரி, தாய், பெண், யாராயிருந்த போதிலும் அவர்களுடன் கூடி மைதுனஞ் செய்ய வெண்டியதே. மயக்கம் அதிகமாய் விட்டால் அவர்களுக்குள்ளேயே கைச்சண்டை, செருப்படி, தலைக்குத்தலை யிழுத்தல், ஒருவரையொருவர் அடித்தல் முதலானவைகள் ஏற்படுகிறது. யாராவது வாயிலெடுத்தால் அவர்களில் அகோரி அதாவது சர்வசித்தியை யடைந்திருக்கிறவர் கக்கினவைகளைச் சாப்பிடவும் சாப்பிடுகிறார்கள். கீழ்க்கண்டவர்களே சர்வசித்தியை யடைந்தவர்கள் :—

हालां पिबति दीक्षितस्य मन्दिरे सुप्तो निशायां गणिकागृहेषु । विराजते कौलवचक्रवर्ती ॥

புட்டிபுட்டியாகக்குடித்து கெட்டவழிகளிருப்பதற்காக விலைமாதர்கள் வீடுகளில் படுத்துறங்கிவெட்க மற்று பயமற்றுப் போகிறவனே வாமமார்க்கிகளுள் சிறந்த சக்கரவர்த்தியாக கருதப்படுகிறான். அதாவது அதிகக் கெடுதல்களைச் செய்கிறவனே அவர்களுள் பெரியவனாகவும் நல்ல கிரியைச்செய்து கெட்டக் கார்யங்களைச் செய்ய நடுங்குகிறவன் சிறியவனாகவும் எண்ணப்படுகிறான். ஏனென்றால்

पाशबद्धो भवेज्जीवः पाशमुक्तः सदा शिवः ॥

ஞானசங்கலனீ தந்திரம் சுலோகம். 43.

இத்தந்திரத்தில் கூறும் வண்ணம் உலக, மரியாதை சாஸ்திர மரியாதை, குல மரியாதை, தேசமரியாதை, இவைகளினால் கட்டுப்பட்டிருக்கிறவன் ஜீவனாகிறான் (மனிதன்.) இவைகளன்னியில் கெட்டகாரியங்களைச் செய்கிறவன் சிவன் (தெய்வீகமானவன்).

உடீஸ் தந்திரத்தில் கிரயாங்கம் ஒன்று இம்மாதிரி சொல்லப்பட்டிருக்கிறது. வீட்டுச் சுவர்களின் ஒவ்வொரு மாடத்தின் பேரிலும் சாராயம் நிறைந்த குப்பிகள் வைக்கப்பட்டிருக்கவேண்டும். ஒருவன் முதல் மாடத்திலிருக்கும் படியான சாராயப்புட்டியைக் குடிக்கட்டும். பிறகு இரண்டாவதிற்குப் போய் அதையும் குடிக்கவேண்டும். நான்காவதிற்கும் போய் குடித்து கீழே மரத்துண்டைப்போல் விழும்வரையில் குடித்துக் கொண்டே போகவேண்டும். கொஞ்சம் ஞாபகம் வந்தவுடன் முன் மாதிரியே குடித்துக் குடித்து கீழே விழவேண்டும். நான்காம் தடவையும் இம்மாதிரி செய்து எழுந்திருப்பானேயானால் அவனுக்கு மறு பிறப்பே கிடையாது. உண்மையாதெனில் அவர்களுக்கு மானிட ஜன்மம் கிடைப்பதே அரிது. நீசகுலத்துதித்து வெகுகாலம் அதிலேயே யிருப்பார்கள். வாமமார்க்கிகளினுடைய தந்திரத்தில் சொல்லுவது யாதெனில் தாய் ஒருவளைத் தவிர மீதி எவருடனும், பெண் சகோதரி முதலானவர்களுடன், சம்யோகஞ் செய்யலாம். இவர்களுடைய பத்து மகாவித்தைகள் பெயர் பெற்றது. இதில் மாதங்கி வித்தையில் தேர்ச்சி பெற்றவன்

"मातरमपि न त्यजेत्" என்பான். தாயுடன் கூடசம்யோகஞ் செய்யலாம், அன்னாரையும் விடக்கூடாது.

சம்யோக சமயத்தில் சித்தியடைவோம் என்கிற மந்திரத்தை ஜபஞ் செய்கிறார்கள். இத்தகைய புத்தியில்லாதவும் மூடர்களுமானவர்களும் பூகோளத்தில் வெகு கொஞ்சமே!! பொய்யைச் சரியென்கிறவர்கள் உண்மையை நிந்திக்க வேண்டும். வாமமார்க்கிகள் கூறுவதைக் கவனியுங்கள். வேதங்களும் சாஸ்திரங்களும் விலைமாதர்களுக்குச் சமானமானவைகள். ஆனால் சாம்பவீமுத்திரையோ மேன்மை வாய்ந்த குலஸ்திரீயை ஒத்தவள் என்கிறார்கள். வேத மதத்தை இவர்கள் கைப்பற்றினது அதிசயமல்ல. இவர்களுடைய மதம் பரவ ஆரம்பித்தவுடன் கபடமாய் வேதங்களினுடைய பெயரால் கீழ்க்கண்டவைகளைப் போன்ற சில கெடுதல்களைக் கலந்தார்கள்.

सौत्रामण्यां सुरां पिबेत् । प्रोक्षितं भक्षयेन्मांसं वैदिकी हिंसा हिंसा न भवति ॥
न मांसभक्षणे दोषो न मद्ये न च मैथुने ।
प्रवृत्तिरेषा भूतानां निवृत्तिस्तु महाफला ॥ மனு. 5. 53

சௌத்ராமணியாகத்தில் பதுபானஞ்செய்யட்டும், யாகத்தில் இறைச்சியை சாப்பிடட்டும். வைதிக யாகத்தில் செய்யப்பட்ட கொலை கொலையாகாது. மாம்சம் சாப்பிடுவதிலும் மதுபானத்திலும் மைதுனம் செய்வதிலும் தீமை எற்படாது. எனெனில் விருத்திபண்ண அதுவேவழி. ஆனால் செய்யாமலிருப்பதிலேயிருந்தும் பெரிய பயனேற்படும். "சுரா" என்பதற்குச் சோமரசம் என்றர்த்தம். அதாவது சோம இதழ்களினுடைய சாராகும். யாகத்தில்

மாம்சம் சாப்பிடுதல் முதலான கெடுதல்களை ஏற்படுத்தின வாமமார்க்கிகளை, வைதீக ஹிம்சை ஹிம்சையாகாது என்னும்பொழுது, அவர்களையும் அவர்கள் குடும்பத்தவர்களையும் ஹோமஞ் செய்வதினால் என்ன கெடுதலுண்டாகுமென்று கேழ்க்கவேண்டும். மாம்சாகாரம் மதுபானம் செய்தல் பரஸ்திரியிடம் போகுதல் முதலானவைகள் தோஷமில்லையென்றால் அது சிறுபிள்ளைத்தனமேயாகும். ஏனெனில் பிராணிகளைத் தொந்திரவு செய்யாமல் மாம்சம் கிடைக்காது. தப்பன்னியில் தொந்திரவு செய்யக்கூடாது. மதுபானம் எப்பொழுதும் தள்ளப்பட்டிருக்கிறது. ஏனெனில் வாமமார்க்கிகளின் கிரந்தங்களில் தவிர வேறு எதிலும் அதைச்சரியென்று சொல்லப்படவில்லை. எப்பொழுதும் அது தள்ளப்பட்டதே. இதைத் தோஷமில்லை என்கிறவனே தோஷமுள்ளவனாகிறான். ரிஷிகளுடைய கிரந்தங்களில் கையாடி முனிகளின் பெயரால் புஸ்தகங்களெழுதி கோமேதம் முதலானவைகள் சரியென்று இடையில் எழுதினார்கள். இம்மிருகங்களையடித்து யாகஞ் செய்வதினால், எஜமானனும் மிருகமும் சுவர்க்கத்தை யடைகிறது என்றார்கள். பிராம்மணத்திலிருக்கும் அசுவமேதம் கோமேதம் நரமேதம் முதலான வார்த்தைகளைச் சரிவர அறியாததினாலேயே இத்தகைய பொய்ப் பொருள்கள் பண்ணினார்கள். அவைகளைச் சரிவர அறிந்திருந்தால் இத்தகைய அசத்தியங்கள் நம்மிடை புகுந்திராது.

வினா :—அசுவமேதம் கோமேதம் நரமேதம் முதலானவைகளினுடைய உண்மைஅர்த்தம் என்ன?

राष्ट्रं वा अश्वमेधः । — சதபதம் 13. 1. 6. 3.

अन्नंहि गौ । — சதபதம். 4. 3. 1. 15

अग्निर्वा अश्वः । आज्यं मेधः ॥ — சதபதம்.

விடை:—குதிரை பசு முதலான மிருகங்கள், மனிதன் முதலானவைகளைக் கொலை செய்து ஹோமஞ்செய் என்று எழுதப்படவில்லை. இது கேவலம் வாமமார்க்கிகளினுடைய புஸ்தகங்களிலெழுதப்பட்ட தப்பர்த்தமாகும். இம்மாதிரி வார்த்தைகள் எங்கு வந்தபோதிலும் அது வாமமார்க்கிகளால் செய்யப்பட்டவையே என்று அறிந்துக்கொள்ள வேண்டியது. நியாய நெறிபிரகாரம் பிரஜைகளை எஜமானன் அரசன் பாலனஞ் செய்வதும் வித்தைகளை யளிப்பதும் அக்கினியில் நெய் முதலானவைகளை ஹோமம் செய்வதுமே அசுவமேதம். ஆகாரம் இந்திரியங்கள் சூரியக்கிரணங்கள் பூமி இவைகளைச் சுத்தமாகச் சரிவர காப்பாற்றுவது கோமேதமும் மனிதன் இறந்த பிறகு விதிப் பிரகாரம் அவன் சரீரத்தைத் தகனஞ் செய்வது நரமேதமும் ஆகும்.

வினா :—யாகம் புரிவதினால் எஜமானன் மிருகம் இவ்விரண்டும் சுவர்க்கத்தையடைவது மன்னியில் ஹோமத்திற்குப் பிறகு மிருகங்கள் உயிர் பிழைக்கிறது, என்கிறார்களே, இது உண்மையா இல்லையா?

விடை :—உண்மையாகாது. சுவர்க்கத்தை யடையுமேயானால் அவ்விதம் சொல்லுகிறவர்களைக் கொன்று ஹோமம் செய்து சுவர்க்கத்தை யடையலாமே, அல்லது அவனுடைய தாய் தந்தையர்களையும் பெண்மக்களையும் கொன்று ஹோமம் செய்து அடையலாமே. திரும்பவும் உயிர்ப் பிழைத்தெழுந்து இருக்கலாமே?

வினா :—வேதத்தில் மந்திரங்களில்லாமல் போனால் வேறு எங்கிருந்து யாக காலத்தில் அவைகளைப் படிக்கிறார்கள்?

விடை :—வேத மந்திரங்களையாரும் படிக்காமலிருக்க முடியாது, ஏனென்றால் அவைகள் எல்லாம் ஒருசப்தமேயாகும். மிருகங்களைக் கொலை புரிந்து ஹோமம் செய்ய வேண்டும் என்பது அவைகளின் அர்த்தமல்ல. "அக்னியே ஸ்வாஹா" அக்கினியில புஷ்டியைத்தரக் கூடிய வாசனைத் திரவியம் நெய் முதலான சிரேஷ்டமான பொருள்களை ஹோமம் செய்வதினால் ஆகாசம், மழை ஜலம், இவைகள் எல்லாம் சுத்தம் அடைந்து உலகத்திற்கு நன்மையைக் கொடுக்கிறது. இந்தசத்திய அர்த்தம் தன்னலத்தைக் கோரும்படியான அந்த மூடர்களுக்கு எட்டவில்லை. ஏனெனில் இதரர்களுடைய நன்மையைப்பாராமல் தன்னலத்தைகோருகிறவர்களே இவர்கள்.

போப்களினுடைய துராசாரங்கள் விருத்தியாகி, இறந்தவர்களுக்காகத் தர்ப்பணமும் சிராத்தமும் செய்ய வாரம் பித்தவுடன் மகாபயங்கரமானவும் வேதங்களை நிந்தனை செய்கிறதுமான பௌத்த மதம் சமண மதம் முதலானவைகள் வெளிவந்தன. கோராக்பூர் அரசன் ஒருவரிருந்தார். அவருடைய போப்கள் ஒருயாகஞ் செய்தார்கள். அவனுடைய பிரியமுள்ள ராணி குதிரையுடன் சமயோகம் செய்ததினால் இறந்துபோகவே இராஜன் விரக்தியடைந்து தன் பிள்ளைக்குப் பட்டத்தை யளித்துவிட்டு சாதுவாய் போப்களினுடைய சூழ்ச்சிகளை வெளிப்படுத்தவாரம்பித்தார். **ச்ாரவாகம் அபாணகம்** என்னும் இரண்டு பிரிவுகள் சமணமதத்திலும் பௌத்த மதத்திலும் உண்டு. அவர்கள் கீழ்க்கண்டமாதிரி சுலோகங்களை எழுதியிருக்கிறார்கள்.

पशुश्चेन्निहितः स्वर्गं ज्योतिष्टोमे गमिष्यति ।
स्वपिता यजमानेन तत्र कस्मान्न हिंस्यते ॥
मृतानामिह जन्तूनां श्राद्धं चेत्तृप्तिकारणम् ।
गच्छतामिह जन्तूनां व्यर्थं पाथेयकल्पनम् ॥

ஒரு விலங்கைக் கொன்று ஹோமம் செய்வதினால் அவைகள்சுவர்க்கத்தையடையுமேயானால் அந்த எஜமானன் ஏன் தன்தாய் தந்தையர்களைக் கொன்று சுவர்க்கத்திற்கு அனுப்புதல்கூடாது?

இறந்த மனிதர்களுடைய திருப்திக்காகச் சிராத்தம் தர்ப்பணம் ஆகுமேயானால் வெளிதேசம் போகிறஜனங்கள் வழிச்செலவிற்கும் சாப்பாட்டிற்கும்

பணம் கொண்டுபோவது பிரயோசன மில்லாதது. ஏனெனில் சிராத்தம் தர்ப் பணம் இவைகள் இறந்தவர்களுக்குச் சேரும்பொழுது, வெளிதேசம் போயிரு க்கிறவர்களுடைய வழிச்சாப்பாட்டிற்கு வீட்டிலேயே அவருக்கென்று பாகஞ் செய்து வைத்தால் ஏன் அவரைச்சேராது. தூரதேசத்திலே அல்லது பத்து அடி தூரத்திலே யிருக்கும்படியானவர்களுக்கே இவைகள் சேராமல் போகும் பொழுது இறந்தவர்களிடம் ஒருபொழுதும போய்'சேரஇயலாது. இம்மாதிரி உபதேசங்கள் ஜனங்கள் மனதைக்கவரவே அவர்களுடைய மதம் பரவிற்று. அரசர்களும் இதைத் தழுவினவுடன் போப்க்களும் இதைத்தழுவ ஆரம்பித் தார்கள். ஏனென்றால் பணம் அதிகமாய் கிடைக்குமிடத்தில் இவர்கள் போவார்கள். சமணர்களிலும் பலவித லீலைகளிருக்கின்றன. அவைகள் பன் னிரண்டாவது அத்தியாயத்தில் விவரிக்கப்படும். அநேகம்பெயர் இதை ஒப்புக் கொண்டார்கள். ஆனால் மலைப்பிரதேசம் தக்ஷிணம். இவைகளிலுள்ளவர்கள் சமணமதத்தை அங்கீகரிக்கவில்லை. சமணர்களுக்கு வேத அர்த்தம் தெரி யாமல், போப் லீலைகளைப்பார்த்து பிரமைகொண்டு வேதத்திலிருப்பதாக நம்பி வேதங்களையே தூஷிக்க வாரம்பித்தார்கள். அவைகளை ஓதுவிக்கிறது ஓதுவது, யக்ஞோபவீதம், பிரம்மச்சரியம், முதலான நியமங்களை நாசம் செய் தார்கள். கிடைத்தவரையில் வேதம் முதலான புஸ்தகங்களை நஷ்டம் செய் தார்கள். ஆரியர்களைத் துன்புறுத்தி துக்கத்திற்கு ஆளாக்கினார்கள். அவர்களு க்கு அதிகாரம் வந்து பயமன்னியிலானபோது தங்களுடைய மதத்தவர்களை யும் சாதுக்களையும் ஸ்தாபித்து வேத மார்க்கத்தவர்களையும் அவமதித்து பட்சபாதத்துடன் தண்டனையும் விதித்தார்கள். சுகமாகவும் சௌகர்யமாக வும் வாழ்ந்து கர்வம் மேலிட்டதினால் மரியாதையற்றும் ஆனார்கள். விருஷபதே வன் முதல் மகாவீரன் வரையிலுள்ள அவர்களுடைய தீர்த்தக்கார்களுக்குப் பெரிய பதுமைகளைச் செய்து பூஜை செய்யவாரம்பித்தார்கள். அதாவது அர்த் தமில்லாத மூர்த்தி பூஜை (கல்பாஷணம் முதலான விக்கிரக பூஜை) சமணர் களுடன் ஆரம்பமாயின. பரமேசுவரனைப்பற்றின ஞானங்குன்றின பிறகு வெறும் மூர்த்தி பூஜைகளாரம்பித்து சமணர்களினுடைய ஆதிக்கியம் 3000 வருஷங்களுக்கு முன்கியிருக்கலாம். வேதார்த்த ஞானங் குன்றியும் 2500 வரு ஷம் இருக்கலாம். இந்தியாவில் சமணர்களுடைய ராஜ்யம் சுமார் 300 வருட காலம் இருந்தது.

ஸ்ரீசங்கராசாரியர்.

2300 வருடங்களுக்கு முன்னால் திராவிட தேசத்தில் உதித்த பிராம்மண பிரம்மசாரியான சங்கராசாரியர் இலக்கணம் முதலான சகல சத்திய சாஸ் திரங்களையும் கற்று சத்தியமான ஆஸ்திக வேதமதம் சீர்குலைந்து நாஸ்திக சம ணமதம் பரவிவிட்டதே, இதை எவ்விதத்திலாவது அடக்கவேண்டும் என்று யோசனைபண்ணினார். சங்கராசாரியர் சாஸ்திரங்களை மாத்திரம் கற்காமல் சம ணமத புஸ்தகங்களைக் கண்டும் அறிந்தும் இருந்தார். வாதஞ்செய்வதில்

அவர் மகாவல்லவர். அதைக் கொண்டே உபதேசங்களினாலும் சம்வாதங்களினாலும் உலகத்தைத்திருப்பலாம் என்பதாக வெண்ணி உஜ்ஜைனி நகரத்தையடைந்தார். அப்பொழுது சமண புத்தகங்களையும் கொஞ்சம் சம்ஸ்கிருதத்தையும் படித்திருந்த சுதன்வா என்னும் ராஜன் அங்கிருந்தார். அவ்விடத்தில் போய் உபதேசஞ் செய்யவாரம்பித்து இராஜனுடன் இம்மாதிரி சொன்னார். நீ சம்ஸ்கிருதம் சமண நூல்கள் இவைகளைப்படித்து சமணமதத்தையும் நம்புகிறாய். ஆகையினால் சமண பண்டிதர்களுடன் கூட என்னுடைய சம்வாதத்திற்குச் சபை ஒன்று கூட்டி ஜயித்தவர்களுடையமதத்தை ஒப்புக்கொண்டு நீயும் அதைத் தழுவவேண்டுமென்றார். சுதன்வா ராஜன் சமண மதவாதியாயிருந்தபோதிலும் சம்ஸ்கிருத நூற்களையும் படித்திருந்ததினால் அவனுடைய புத்தியில் கொஞ்சம் வெளிச்சம் பிரகாசமாகிக்கொண்டிருந்தது. இதனால் அவனுடையமனதில் அதிக மிருகத்தன்மை யில்லாமலிருந்தது. ஏனெனில்படித்த வித்வான்கள் சத்தியாசத்தியத்தை அறிந்து உண்மையைக் கைப்பிடித்து தப்பை விடுவார்கள். கற்றுணர்ந்த எவரும் கிடைக்காதவரையில் சுதன்வாராஜன் எது தப்பு எது உண்மைஎன்கிறது தெரியாமல் சந்தேகத்திலிருந்தான். ஸ்ரீசங்கராசாரியாருடைய வார்த்தைகளைக் கேட்டவுடன் பெருமகிழ்ச்சியடைந்து நான் சம்வாதம் ஒன்றுக்கு வேண்டிய வசதிகள் செய்வேன். சத்தியாசத்தியத்தைத்திட்டமாக நிர்ணயஞ் செய்யவேண்டும் என்றான். வெகு தூரத்திலிருந்து சமண பண்டிதர்களை வரவழைத்துச் சபை கூட்டினான். அதில் ஸ்ரீசங்கராசாரியர் வைதிக மதத்திற்கும் சமணர்கள் வேத விரோத மதத்திற்குமாக அமர்ந்தார்கள். அதாவது ஸ்ரீசங்கராசாரியர் கட்சி வைதிகமதத்தை ஸ்தாபிக்க வேண்டியது. சமணர்களைக்கண்டிக்கவேண்டியதுமே. சமணர்களின் கட்சியோ அவர்கள் மதத்தை நிலைநிறுத்தி வைதிகமதத்தைக் கண்டனஞ் செய்ய வேண்டியதே. பலநாள்கள் சபைகள்கூடிற்று. சிருஷ்டிகர்த்தா அநாதியான ஈச்வரன் யாரும்கிடையாது என்பதும் இச்சகம் ஜீவன் இவைகள் அநாதிஎன்பதும் இவை இரண்டிற்கும் உற்பத்தி நாசமேகிடையாது என்பதுமே சமணர்களுடைய வாதம். இதற்கு மாறாக சங்கராசாரியருடைய மதம் என்னவெனில் அநாதியான ஈசுவரனே இவ்வுலகின் கர்த்தா. இவ்வுலகமும் ஜீவனும் பொய். ஏனென்றால் அப்பரமேசுவரன் தன்மாயையினால் இவ்வுலகத்தைச் சிருஷ்டித்திருக்கிறான். அவனே இதைக்காப்பாற்றி பிரயளத்தையும் கொண்டு வருகிறான். ஜீவனும் பிரபஞ்சமும் கனவைப்போலவே பரமேச்வரன் தானாகவே உலகரூபமெடுத்து லீலைகளைச்செய்கிறான். வெகு நாள்வரையில் வாதம் நடந்தது. கடைசியில் புத்தியினாலும் பிரமாணத்தினாலும் சமணமதம்கண்டனஞ் செய்யப்பட்டு சங்கரர் மதம் கண்டனஞ் செய்யபடாததாய்இருந்தது. அப்பொழுது சமணபண்டிதர்களும் சுதன்வா ராஜனும் வேதமதத்தை அங்கீகாரஞ்செய்து அதைத்தழுவினார்கள். சமணமதத்தையும் கைவிட்டார்கள்.

நாடு முழுவதும் அப்பொழுது ஒரு பெரிய எழுச்சி ஏற்பட்டது. தன்னுடைய இதர இஷ்ட சிநேகித அரசர்களுக்கு, சங்கராசாரியுடன் வாதஞ்

செய்யச் சபைகூட்டும் படி, சுதன்வாராஜன் எழுதினன். ஒரு விடத்தில் சமணவாதம் தோற்கப்பட்டுப் போகவே எங்கும் அவர்கள் தோல்வியையே அடைந்து வந்தார்கள். அக்காலந்தொட்டு இந்தியா முழுவதும் சுற்றுவதற்காகச் சுதன்வா முதலிய அரசர்கள் ஏற்பாடுகள் செய்து சங்கராச்சாரியருக்கு மெய்க்காவலர்களையும் கொடுத்து சேவகர்களையும் கூட அனுப்பினர்கள். அக்காலந்தொட்டு பூநூல் தரிக்க வாரம்பித்து ஜனங்கள் வேதங்களை ஓதவும் ஓதுவிக்கவும் ஆரம்பித்தார்கள். பத்துவருடம் இந்தியா முழுவதும் சுற்றிச் சமணர்களைக் கண்டனஞ் செய்து வேதங்களினுடைய கருத்தை வெளியிட்டு ஸ்தாபித்தார். இப்பொழுது பூமியிலிருந்து எடுக்கப்படும் படியான சிதருண்ட விக்கிரகளெல்லாம் சங்கரருடைய காலத்தில் உடைக்கப் பட்டவைகள். உடைபடாதவை சமணர்களால் பயந்து பூமியில் புதைக்கப் பட்டவைகள். அவருக்கு முன்னிருந்து வரும்படியான சைவசமயம் வாமமார்க்கம் இவைகளைச் சங்கராசாரியார் கண்டனஞ் செய்தார். அச்சமயத்தில் நாட்டில் பணமும் அதிகமாயிருந்து தேசபக்தியும் ஓங்கியிருந்தது. சமணவாலயங்கள் வேத பாடசாலைகளுக்கென்றிருந்தபடியினுல் சங்கரா சாரியரும் சுதன் வாவும் அவைகளைக் கவனிக்கவில்லை. வைதிகமதத்தை ஸ்தாபனஞ் செய்து அதைப் பரவச்செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வரும் பொழுது வெளிக்கு மாத்திரம் வைதிகமதத்தைப் பற்றி அந்தரங்கச் சமணர்களான இரண்டு வேஷதாரிகள் ஸ்ரீசங்கரா சாரியருடைய அன்புக்காளாகி அவருக்கு விஷத்தை அளித்து விட்டார்கள். ஸ்ரீசங்கராசாரியருக்கு அதன் பயனுய் சரீரத்தில் கொப்பளங்கள் வெடித்து ஆறுமாதத்திற்குள் இறந்துவிட்டார். அப்பொழுது எல்லோருக்கும் துக்கம் மேலிட்டு வித்தையைப் பிரசாரம் செய்யவேண்டும் என்கிற எண்ணமும் பிற்போக்கடைந்தது. அவருடைய சீடர்களோ அவருடைய **சாரீரிக பாஷ்யத்தை** (வேதாந்த சாஸ்திரம் சங்கரபாஷ்யம்) போதித்து வந்தார்கள். சமணர்களைக் கண்டனஞ் செய்வதற்காகப் பிர்ம்மம், சத்தியம் என்றும், உலகம் பொய்யென்றும் ஜீவனும் பிரம்மமும் ஒன்றென்றும் சொல்லிவந்ததைப் போதித்து வந்தார்கள். இதற்காகத் தெற்கே சிருங்கேரியிலும், மேற்கே பூகோவர்த்தனத்திலும் வடக்கே ஜோசி துவாரகையிலும் சாரதாபீடத்திலும் மடங்கள் ஸ்தாபனஞ் செய்தார்கள். ஸ்ரீசங்கராசாரியருடையசீடர்கள் இவைகளிலிருந்து கொண்டு பணத்தையும் அதிகாரத்தையும் அடைந்து ஆனந்தமாகவிருந்தார்கள். ஸ்ரீசங்கராசாரியாருக்குப் பிறகு அவர்களுடைய சீடர்கள் மிகவும் மரியாதை செய்யப் பட்டவர்களானுர்கள்.

ஜீவனும் பிரம்மமும் ஒன்று என்பதும் உலகம் பொய் என்பதுமே ஸ்ரீசங்கரா சாரியருடைய உண்மையான மதமாவென்று கவனிக்க வேண்டும். சமணமதக் கண்டனத்திற்காக அவர் அதை எண்ணிருந்தால் சரியே. அவருடைய சொந்த மதக்கொள்கையாய் அது இருந்திருக்குமேயானுல் தப்பு என்றே சொல்ல வேண்டும். இதுவே நவீன வேதாந்திகளினுடைய தர்மமாகும்.

வேதாந்தி :—கயற்றில் பாம்பு, சூரிய வெளிச்சத்தில் கிளிஞ்சல், கானலில் ஜலம் கந்தர்வ நகரம் இந்திர ஜாலம் இவைகளைப் போலவே இவ்வுலகம் பொய்யானது. பிரம்மம் ஒன்றே உண்மையானது —(சித்தாந்தி) பொய் என்று நீங்கள் எதைச் சொல்லுகிறீர்கள்? (வேதாந்தி) இல்லாத பொருள் எது இருப்பதுபோல் காணப்படுகிறதோ (சித்) இல்லாத பொருள் எவ்வண்ணம் இருப்பது போல் காணப்படும்? (வேதா) அத்யாரோபத்தினால் (சித்) அத்யாரோபம் என்றால் என்ன? (வேதா).

वस्तुन्यवस्त्वारापणमध्यास । अध्यारोपापवादा निष्प्रपंचं प्रपंच्यते

உண்மையானதிலிருந்து மாறாக நினைப்பது அத்யாரோபம் அல்லது அத்தியாசம். தப்பெண்ணங்களை நிராகரிப்பது அபவாதம். இவ்விரண்டையுங் கொண்டே பிரபஞ்ச ரகித (மாறுதலன்னியிலிருக்கும்) பிரம்மத்தில் பிரபஞ்ச ரூபத்தைக் காண்பிக்கிறார்கள் (சித்) கயற்றை வஸ்துவாகவும் சர்ப்பத்தை வஸ்து இல்லாததாகவும் நினைத்து இம்மாய வலையில் நீங்கள் விழுந்து விட்டீர்கள். சர்ப்பம் மாத்திரம் வஸ்துவாகாதா என்ன? கயிற்றில் ஆகாதென்று நீங்கள் சொல்லுவீர்களானால் வேறு எங்கேயாவது அல்லது அதனுடைய எண்ணம் நம்முடைய மனதிலாவது இல்லையா என்று கேழ்க்கிறோம்? அவ்விதமிருக்கும்படியான சர்ப்பம் வஸ்து இல்லாததாகவாகாது. இம்மாதிரியே கிளிஞ்சலை வெள்ளியாக நினைப்பதுவுங் கூட பொய்யென்று காண்பிக்கக் கூடும். ஆகையினால் கனவில் காணும் வஸ்துக்கள் பாவத்தில் இருக்கவேண்டும். அவைகளினுடைய குணங்கள் நம்முடைய ஞாபகத்திலிருக்கின்றன. இதனாலே அவைகள் அத்தியாரோபத்தினாலிருக்கிறதென்று சொல்லுதல் முடியாது. (வேதா) காணாததும் கேழ்க்காததுங் கூட எவ்விதம் உண்மையாகும். உதாரணமாகத் தலை வெட்டுண்ட பிறகு எவ்விதம் அழக்கூடும்? ஜலதாரை எப்படி மலையின் பேரில் போகக் கூடும்? (சித்) இதுவும் உங்களுடைய சித்தாந்தத்தை நிரூபிக்கவில்லை. பாராமலும் கேழ்க்காமலும் உருவம் மனதிலே உண்டாகாது. உருவம் அன்னியில் அனுபவமும் உண்டாகாது. ஒருவனுடைய தலையானது ரணகளத்தில் வெட்டப்பட்டதையும் அவனுடைய தாய் தந்தையர்கள் அழுததையும், ஜலதாரை ஊற்றிலிருந்து மேலே ஓடினதையும் பார்த்ததினாலேயே மனதில் எண்ணங்கள் உதிக்கின்றன. கனவு சமயத்தில், தான் முன்னால் கண்டதையும் கேட்டதையும் மனதினால் பார்க்கிறான். கனவில் தனக்குத்தானே பார்க்கிறபடியினால் தன் தலையை வெட்டுண்டதாகவும் தானே அழுவதாகவும் அருவிமேற் புறமாய் ஓடுவதாகவும் காண்கிறான். ஆகையினால் இவைகளெல்லாம் தப்பெண்ணங்களினுடைய உதாரணமாகாது. குறிப்பெழுதுகிறவன் முதலில் தான் கண்டும் கேட்டும் இருக்கும்படியான எண்ணங்களைக் காகிதத்தில் குறித்துக் கொள்ளுவது போலவும், சித்திரக்காரன் பிம்பத்தைப்பார்த்து மனதில் உருவத்தைச் செய்து கொள்ளுவது போலவும் இருக்கின்றன. தன்னுடைய ஆசனைக் கனவில் காண்பது போல் கனவில் எண்ணங்களினுடைய ஞாபகமிருக்கின்றன. கொஞ்ச நாட்களுக்கு முந்தி நடந்த விஷயங்களின் ஞாபகமும் எண்ணமும் மனிதனுக்கு மறந்து போகின்றன. முன்னடந்த அது

பவத்தைப் பார்க்கவாவது கேழ்க்கவாவது பனிதனால் முடியவில்லை. விழிப்புக் காலத்திலுள்ள ஞாபகம் அவனுக்குக் கனவில கிடையாது. ஆகையினால் அத்யாரோபம், அத்தியாசம் இவைகளுக்கு நீ சொல்லும் இலட்சணங்கள் சரியாகாது. விவர்த்தவாதம் அல்லது கயற்றில் பாம்பு முதலானவைகளைக் காணுவதும் சரியில்லாததே. பிரம்ம மாயையில் உலகமிருக்கிறது என்பதும் பொய்யே. (வேதா) அதிஷ்டான மன்னியில்-எது காப்பாற்றுகிறதோ—அத்யஸ்த-காப்பாற்றப்படுகிறது—வெளியாகிறதில்லை. மேற் சொன்ன திருஷ்டாந்தத்தில் கயறு அன்னியில் போனால் பாம்பினுடைய எண்ணம் மனதில் வந்திராது. கயிற்றில் பாம்பு கிடையாது. சிறு வெளிச்சத்தில் இருட்டுக்கலந்து இருப்பதினால் அகஸ்மாத்தாய் கயிற்றைக் கண்டு பாம்பு என பயமுறுகிறான். வெளிச்சத்தில் காணுங்கால் இத்தப்பெண்ணம் அவனைவிடுகிறது. இப்படியே பிரம்மத்தில் ஜகமிருக்கிறது என்கிற தப்பெண்ணம் பிரம்மத்தைப் பிரத்தியட்சமாய் அறிவதினால் வெளிச்சத்தில் பாம்பு பயம் போய்க் கயா தானென்பது நிச்சியமாவது போல், மாறுகிறது. (சித்) பிரம்மத்தில் உலகமிருக்கிறதென்கிற தப்பான கொள்கையை யார் அனுபவிக்கிறான்? (வேதா) ஜீவன் (சித்) ஜீவன் எங்கிருந்து உண்டானவை?(வேதா) அஞ்ஞானத்திலிருந்து (சித்) அஞ்ஞானம் எங்கிருந்து உண்டாகி எங்கே யிருக்கிறது? (வேதா) அஞ்ஞானம் அநாதி. அது பிரம்மத்திலிருக்கிறது. (சித்) அவ்வஞ்ஞானம் அதற்குச் சொந்த மானதா அல்லது வேறானதா? யாருக்கு அஞ்ஞான உண்டாயிற்று? (சித்) சிதாபாசத்திற்கு. (சித்) சிதாபாசத்தினுடைய ஸ்வரூப மென்ன? (வேதா) பிரம்மம். பிரம்மத்திற்குப் பிரம்மத்தினுடைய அஞ்ஞானம் அதாவது ஸ்வரூபத்தையே மறந்திருக்கிறது (சித்) அதை மறப்பதின் காரண மென்ன ? (வே) அறிவின்மையே. (சித்) அறிவின்மை சர்வவியாபியான சர்வஞ்ஞனுடையகுணமா அல்லது அற்பஞ்ஞனுடையதா? (வே) அற்பஞ்ஞத்தினுடையது(சித்)அனந்த சர்வஞ்ஞ சேதனத்திலிருந்து இரண்டாவதான வேறு சேதனத்தில் நீங்கள் நம்புகிறீர்களா? அற்பஞ்ஞம் எங்கிருந்து வந்தது? அற்பஞ்ஞம் சேதன பிரம்மத்திலிருந்து வேறான தாயிருந்தால் சரிதான். பிரம்மம் தன் ஸ்வரூபத்தை யறியாமலிருந்தால் மனித சரீரத்தில் ஒரு பக்கம் கஷ்டம் உண்டானால் சரீரம் முழுவதும் பாதிக்கப்படுவதுபோல் அது முழுவதும் பரவும். (வேதா) இவைகளெல்லாம் உபாதியினுடைய குணமாகும். பிரம்மத்தினுடையதாகாது. (சித்) உபாதி சடப் பொருளா? சேதனப் பொருளா? சத்தியமா அல்லது அசத்தியமா? (சித்) சேதன மென்றாவது சட மென்றாவது, சத்தியமென்றாவது அசத்திய மென்றாவது கூற முடியாதது. (வேதா) தங்கம் பித்தளை இரண்டையும் கலந்து செய்யப்பட்ட ஒன்றைப்பரிட்சித்துப்பார்க்கக் கொண்டுபோன விடத்தில் அது தங்கமும் இல்லை பித்தளையுமில்லை. இரண்டையுங் கொண்டு செய்தது என்பது போலிருக்கிறது (வேதா) கடாகாசம் (பானையிலிருக்கும் படியான ஆகாசம்) மடாகாசம் (வீட்டின் ஆகாசம்) மேகாகாசம் (மேகத்தின் ஆகாசம்) மகதாகாசம் (விசாலமன) பெரிய ஆகாசம்) இவைகள் வெவ்வேறாகக் காணப்பட்ட போதிலும் எல்லாம் ஒரே ஆகாசத்தின் தோற்றங்கள் தான். அவ்விதமே

மாயை அவித்தியா சமஷ்டி வியஷ்டி, அந்தக்கரணம் இவைகளெல்லாம் ஞானமில்லாதவர்களுக்கு வேறாகத் தோன்றுகிறது. உண்மையில் ஒன்றேதானுண்டு.

अग्निर्यथैको भुवनं प्रविष्टो रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥ கடோபநிடதம். 5.9.

நெருப்பானது பெரியது சிறியது வட்டவடிவமானது அகல மானது முதலான வடிவங்களைத்தான் வியாபித்திருக்கும் படியான அந்தந்த வஸ்துக்களின் உருவங்களை அடைந்து அவைகளிலிருந்து தனியாக விருப்பது போல் சர்வவியாபியான பரமாத்மா அந்தக் கரணத்தில் வியாபித்து அதன் உருவத்தை யடைந்திருக்கிறார். ஆனால் அதிலிருந்து வேறாயு மிருக்கிறார்.

(சித்) இம்மாதிரி நீங்கள்சொல்லுவதும் சரியாகாது. பானை, வீடு, மேகம் ஆகாசம் இவைகளை வேறுபட்டவைகளாகக் கருதுவது போலவே காரிய காரண ரூபமான உலகம், ஜீவன் இவைகளைப் பிரம்மத்திலிருந்தும் பிரம்மத்தை இவைகளிலிருந்தும் வேறுப்பட்டவைகளாக நினைக்கக் கூடாது?

(வேதா) நெருப்பு சகலமானவைகளிலும் சென்று பார்வைக்கு அந்தந்த உருவங்களை யடைவது போல் பரமாத்மா சடம், ஜீவன் இவைகளில் வியாபித்து அஞ்ஞானிகளுக்கு உருவங்களைக் கொண்ட வராகக் காணபபடுகிறார். உண்மையில் ஜடமுமில்லை. ஜீவனுமில்லை. தண்ணீர் நிறைந்த நூறு பாண்டங்களில் சூரியன் நூறு விதமான பிரதி பிம்பங்களைக் கொண்டு ஜ்வலிக்கிறது. உண்மையில் சூரியன் ஒருவனே. பாண்டங்களிலிருந்து ஜலம் ஓடிப்போவதினால் சூரியன் இல்லாமல் போகவில்லை. அசையாமலும் போகவில்லை சுற்றாமலும் போகவில்லை. இம்மாதிரியே பிரம்ம அந்தக் கரணத்திலிருக்கிறார். இதற்கே சிதாபாசம் என்றும் பெயர். அந்தக்கரணம் உள்ளவரையிலும் ஜீவனும் உண்டு. ஞானத்தினால் அந்தக் கரணம் நாசமடைந்த பின்பு ஜீவன் பிரம்மஸ்வரூபமாகின்றது. இச்சிதாபாசம் பிரம்ம சுவரூபத்தை யறிகிறதில்லை. அனுபவிக்கிறது சுகப்படுகிறது, துக்கப்படுகிறது, பாபம், புண்ணியம், ஜனன மரணம் இவைகளை யடைகிறது என்று நினைக்கிறது, பிரம்ம சுவரூபம் தன்னுடைய உண்மையானநிலைமை இவைகளை அறியாத வரையிலும் சம்சாரக்கட்டுக்கு விடுகிறதில்லை.(சித்) இவ்வுதாரணமும் வீணே! ஏனென்றால் சூரியன் உருவமுள்ளவன். இம்மாதிரியே பாண்டங்களும் அதிலிருக்கும்படியான தண்ணீரும் ஜலபாத்திரத்திலிருந்து சூரியனும் வேறானது. சூரியனிலிருந்து ஜலபாத்திரம் வேறானது. இதனாலேயே பிரதிபிம்பம் ஒலிக்கிறது. உருவமற்றதாயிருந்தால் பிரதி பிம்பம் ஒலிக்கவே ஒலிக்காது. பரமேச்வரன் உருவமற்று எங்கும் ஆகாசத்தைப்போல் பரவியிருக்கிறபடியினாலும் பிரம்மத்திலிருந்து பதார்த்தங்களாவது பதார்த்தங்களிலிருந்து பிரம்மமாவது வேறாகவிருக்கமுடி[illegible] வியாப்ய வியாபகசம்பந்தத்தினால் ஒன்றுபடவு மிருக்க முடியாது. அதாவது

வியாப்ய வியாபகத்தை அன்வய வியதிரேக பாவத்தினலே பார்ப்போமேயா னல் அவைகள் சம்பந்தப்பட்டும் எப்பொழுதும் வேருகவும் இருக்கிறது.

அவைகள் ஒன்ருயிருக்குமேயானல் வியாப்யவியாபக சம்பந்தம் பிருக தாரண்ய உபநிடதத்தில் அந்தர்யாமி பிராம்மணத்தில் திட்டமாய் எழுதப்பட் டிருக்கும் வண்ணம் உண்டாகாது. உருவம் இல்லாததற்குப் பிரதிபிம்பம் ஒலி க்காதாகையினல் பிரம்மத்திற்கும் பிரதிபிம்பம் கிடையாது. அந்தக்கரணேபா தையினல் பிரம்மத்தை நீங்கள் ஜீவனகக் கருதுவது சிறுபிள்ளைத் தனமாக விருக்கிறது. அந்தக்கரணம் சலன முள்ளது, அசைவையுடையது, வேருனது, பிரம்மமோ அசைவற்றது பூர்ணமானது. பிரம்மத்தையும் ஜீவனையும் நீங்கள் வேருகநினைப்பீர்களே யானல் இதற்கு என்னபதிலளிப்பீர்கள்? அந்தக் கரண மிருக்கும் இடத்தில் பிரம்மத்தை அஞ்ஞானியாகவும் அதுவில்லாத விடத்தில் ஞானியாகவும் நம்புகிறீர்களா? அது இருக்கு மிடமெல்லாம் ஒரு குடையா னது வெயிலை மறைத்து அது மூடப்பட்டவுடன் வெய்யிலை விடுவதுபோல் அந்தக்கரணமும், பிரம்மத்தை ஒரேகனத்தில் ஞானியாகவும் கட்டுள்ளவனு கவும் விடப்பட்டவனகவும் செய்கிறது. பிரம்மம் சேதனமானபடியினல் முழுவதும் பரவும்படியான அந்தக்கரணம் ஒரேவிடத்திலிருக்குமேயானல் பிரம்மம் அஞ்ஞானியாகமாறுகிறது. மதுராவில் அந்தக்கரணத்தையுடைய பிரம்மம் என்னபார்த்ததோ அதையே காசியில் அந்தக்கரணத்தினல் ஞாபகம் வைத்துக் கொள்ளமுடியாது. ஏனென்ருல் ஒருவன் பார்த்ததை மற்ருெரு வனல் ஞாபகம் வைத்துக்கொள்ளமுடியாது. மதுராபுரியில் பார்த்த சிதாகா சம் காசியிலிருக்கமுடியாது. மேலும் மதுராபுரியில் பிரகாசமாயிருக்கிற பிரம் மமானது காசியிலுள்ளது போலாகாது. பிரம்மம் ஜீவனபிருக்குமேயானல் ஜீவன் சர்வஞ்ஞமாயிருக்க வேண்டியது. பிரம்மத்தினுடைய பிரதி பிம்பம் தனியானல் முன் கேட்டு பார்த்ததின் ஞானமுண்டாகாது. பிரம்மம் ஒன்றென் பதைக்கொண்டு ஞாபக மிருக்கிறது என்ருல் ஒரு புறத்திலேற்படும்படியான அஞ்ஞானமோ அல்லது கஷ்டமோ பிரம்மம் முழுவதையும் பாதிக்கும். இம்மா திரி உதாரணங்களினல் நித்திய சுத்த புத்த முக்த குணமுள்ள பிரம்மத்தை நீங்கள் அசுத்த அஞ்ஞானக்கட்டுப்பட்ட முதலான தோஷங்களையுடைய தாகச் செய்கிறீர்கள்.

(வேதா) ஆகாசத்தினுடைய பிரதி பிம்பம் கண்ணடி தண்ணீர் இவை களில் ஒலிப்பது போலவே உருவமற்ற வஸ்துக்களுங்கூட பிரம்மத்தை ஒலிக்கச்செய்யும். ஆழமுள்ளதாயும் அகண்டமாயும் நீலமாயும் அது அங்கே காணப்படுகிறது. அம்மாதிரியே சகல அந்தக்கரணங்களிலும் பிரம் மத்தைக் காட்டுகின்றது.

(சித்) ஆகாசத்திற்கு உருவமில்லாவிடில் அதை யாரும் காணமுடி யாது. பார்க்கமுடியாது. ஒரு வஸ்துவைக் கண்ணடியிலும் தண்ணீரிலும் எவ்விதம் காணமுடியும். திட்டமான உருவத்தையுடையவைகளையே காண முடியும். உருவமற்றவைகளை முடியாது.

(வேதா) மேலே நீல நிறமாகவும் கண்ணுடியில் காணப்படுவதும் வேறு என்ன (சித்) அவைகள் பூமியிலிருந்து ஆவியாக மாறின ஜலம் பூமி, அக்கினி இவைகளினுடைய துளிகள். ஜலமில்லாத விடத்திலிருந்து மழை எவ்விதம் வரக்கூடும்? ஆகையினுல் தூரத்தில் கூடாரத்தைப் போல் காணப் படுவது ஒரு பெரிய தண்ணீரின் கோளம். நுரை, பனி, நீர்க்கோளம் கூடாரம் இவைகளைப்போல் ஆகாயத்தில் தண்ணீர் காணப்படுகிறது.

(வேதா) கயறு பாம்பு கனவு முதலான எங்களுடைய உதாரணங்கள் பொய்யா? (சித்) இல்லை. நான் முன்னேயே காண்பித்தமாதிரி நீங்கள் அதை அறிந்ததே தப்பு. முதலில் யார் இவ்வஞ்ஞானத்திலிருந்தார்களென்பதைச் சொல்லுங்கள். (வேதா) பிரம்மம்.

(சித்) பிரம்மம் அற்பஞ்ஞுமா அல்லது சர்வஞ்ஞுமா?

(வேதா) சர்வஞ்ஞனுமல்ல. அற்பஞ்ஞனுமல்ல. ஏனென்ருல் இவையிரண்டும் உபாதியுடன் கலந்தது.

(சித்) உபாதியுடன் கூடி எது இருக்கிறது?

(வேதா) பிரம்மம்.

(சித்தா) பிரம்மம் சர்வஞ்ஞனும் அற்பஞ்ஞனுமிருந்தால் நீங்கள் அற்பஞ்ஞத்தையும் சர்வஞ்ஞத்தையும் கழிக்கவேண்டும். உபாதியை கற்பிதம் அதாவது பொய்யென்பார்களேயானுல் கற்பிக்கப்பட்டவர்களும் யார்?

(வேதா) ஜீவன் பிரம்மமா அல்லது அதிலிருந்து வேருனதா?

(சித்) வேருனது. ஏனெனில் பொய்யாயுங்கற்பனையுள்ளதாயு மிருந்தால் அது பிரம்மமாயிருக்க முடியாது. எதனுடைய கற்பனைப் பொய்யாயிருக்கிறதோ அது சத்திய மாயிருத்தல் முடியாது.

(வேதா) நாங்கள் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பொய்யாகக் கருதுகிருேம். வாயினுல் சொல்லுவது கூடப் பொய்யே.

(சித்) நீ பொய் சொல்லுகிறவனும் பொய்யை ஆதரிப்பவனுமிருந்தால் நீயே என் பொய்யாயிருக்கூடாது?

(வேதா) பொய்யும் மெய்யும் நம்முடைய கற்பிதமே. நாம் அவ்விரண்டினுடையவும் சாட்சிகள்.

(சித்) பொய்க்கும் மெய்க்கும் ஆதாரமாயிருந்தால் நீ தனவானும் திருடனும் இருப்பாய். இதனுலே நீ அத்தாட்சியாயிருக்க முடியாது, ஏனெனில் எப்பொழுதும் சத்தியத்தைக் கருதுகிறவர்கள் சத்தியத்தைப் பேசுகிறவர்கள் சத்தியத்தைச் செய்கிறவர்கள் பொய்யைக் கருதாதவர்கள் பேசாதவர்கள், செய்யாதவர்கள் இவர்களே பிரமாணிகர்கள். உங்களுடைய வார்த்தைகளேயே நீங்கள் பொய்யாக்குவீர்களானுல் நீங்கள் பொய் சொல்லுகிறவர்களாகிறீர்கள்.

(வேதா) பிரம்மத்திலிருந்து அதிலேயே மறைகிற அநாதியான மாயையில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?

(சித்) நம்பிக்கை கிடையாது. ஏனெனில் வஸ்து அன்னியில் பாவனை யிருப்பதாக நீங்கள் மாயையை நம்புகிறீர்கள். இல்லாத வஸ்துவைப் பாவனை யிலிருப்பதாக மனக்கண் குருடர்களே நம்புகிருர்கள். இல்லாத வஸ்துவை இருப்பதாக நினைப்பது இயலாதது. மலடிவயிற்றுப் பிள்ளையின் உருவப்படம் கிடையாது.

सन्मूलाः सोम्येमाः प्रजाः ॥

இம்மாதிரியான சாந்தோக்ய உபநிடதத்தின் வார்த்தைகளுக்கு விரோதமாக விருக்கிறது.

(வேதா) வசிஷ்டர் சங்கராசாரியர் முதல நிஸ்சலதாஸர் வரை உள்ள பண்டிதர்களையும் அவர்கள் எழுதினவைகளையும் நீங்கள் கண்டனஞ் செய்கிறீர்களா? நாங்கள் அவர்களை நன்கு படித்தவர்களாகக் கருதுகிறோம்.

(சித்) நீ பண்டிதனு அல்லது பாமரனு?

(வேதா) நாங்கள் கற்று அறிந்தவர்கள்.

(சித்) வசிஷ்டர் சங்கராசாரியர் நிஸ்சலதாஸர் இவர்களுடைய கட்சியைத் தாங்கள் ஸ்தாபனம் பண்ணுங்கள், நாங்கள் அதைக் கண்டனஞ் செய்வோம். எக்கட்சி ஜயிக்கிறதோ அதுவே பெரியதாகும். உங்களுடையதும் அவர்களுடையதும் கண்டனஞ் செய்ய முடியாததாயிருக்குமேயானல் அதைக்கொண்டு ஏன் எங்களுடைய வார்த்தைகளை மறுக்ககூடாது? அப்பொழுது உங்களுடைய வார்த்தைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கது. சங்கராசாரியர் முதலானவர்கள் சமணர்களை வெல்ல வெண்ணி இவ்வார்த்தைகளைக் கையாடியிருக்கக்கூடும். ஏனெனில் தேசகாலத்திற்கேற்பத் தன்னுடைய கட்சி ஜெயிக்க சுயநலங்கருதும் சிலவித்வான்கள் தன்னுடை ஆத்மா ஞானத்திற்கு விரோதமாக வாதஞ் செய்வதுண்டு. ஜீவனும் ஈசுவரனும் ஒன்றென்றும் உலகம் பொய்யென்றும் ஜனங்களுடைய காரியம் மெய்யல்ல வென்றும் கருதுவது உண்மையாகாது நிஸ்சலதாஸ் நிபுணத்தைக்கவனியுங்கள். தன்னுடைய **விருத்தி பிரபா கரத்தில்** ஜீவனும் பிரம்மமும் ஒன்றென்பதற்கு இரண்டும் சேதன குணத்தைக் கொண்டிருக்கிறபடியினுல் ஒன்றென்கிருர்.

जीवो ब्रह्माऽभिन्नश्चेतनत्वात् ॥

இதுமிகவும் குறுகிய புத்தியுடையவர்களுடைய பார்வையாகும். குணங்களில் ஒற்றிருக்கும்படியான பொருள்கள் ஒருபொழுதும் ஒன்ருகாது. சடமாயிருப்பதைக்கொண்டு பூமியும் ஜலமும் ஒன்றென்றுவைத்துக்கொள்வோம்.

पृथिवी जलाऽभिन्ना जडत्वात् ॥

இது பொய்யாவதுபோலவே நிஸ்சலதாசருடையதும். ஏனெனில் ஜீவன் கட்டுப்பட்டதினுல் ஞானத்தை உடையது. தப்பக்கூடியது. பரப்பிரம்மமோ எங்குமிருக்கிறது சர்வஞ்ஞன், தப்பாதது ஆகையினுல் ஜீவனும் பிரம்மமும் வேருனது. வாசனை உறுதி முதலான தன்மைகள் பூமியைச்சேர்ந்தது. இளகுந்தன்மை அசையுந்தன்மை முதலானவைத்தண்ணீருடையது அவைகளுக்குமாருனது. இம்மாதிரியே பிரம்மம் ஜீவன் இவைகளினுடைய வெவ்வேருன

குணங்கள் இவைகளை ஒன்றுபடுத்தாது. அவைகள் எப்பொழுதும் சேர்ந்ததில்லை, சரியானதில்லை. ஒன்றாகவும் ஆகாது. சரியானதாகவும் ஆகாது.

யோகவாசிஷ்டம்.

யோகவாசிஷ்டம் எதோ ஒருபுதியவேதாந்தியால் எழுதப்பட்டிருக்கவேண்டும். வால்மீகி வசிஷ்டர் ராமச்சந்திரர் முதலானவர்களால் எழுதபடவில்லை. ஏனென்றால் அவர்கள் வேதங்களைக் கைப்பற்றினவர்கள். அவர்கள் வேதவிரோதமாக எழுதவும் கேழ்க்கவும் பேசவும் மாட்டார்கள்.

வினு:—வியாசருடைய சாரீரிக சூத்திரத்தில் ஜீவனும் பிரம்மமும் ஒன்றென்று சொல்லப்பட்டில்லையா? பாருங்கள்.

(1) सम्पाद्याऽऽविर्भावः स्वने शब्दात् ॥ (2) ब्राह्मेण जैमिनिरुप-
न्यासादिभ्यः ॥ (3) चितिन्मात्रेण तदात्मकत्वादित्यौडुलोमिः ॥
(4) एवमप्युपन्यासात् पूर्वभावादविरोध बादरायणः ॥
(5) अत एव चानन्याधिपति ॥ வேதாந்தசூத்திரங்கள்.

(1) 'ஸ்வ' என்னும் வார்த்தையினால் பிரம்மஸ்வரூபமென்று அறியவேண்டுமாகையினால் பூர்வத்தில் பிரம்மரூபமாயிருந்த ஜீவன் தன்னுடைய ஈசுவரரூபத்தையடைந்து வெளிப்படுகிறது. (2) ஈசுவரத்தன்மையையடையும் வரையில் பிரம்மசுவரூபத்துடன் ஜீவனிருக்கிறதென்று ஜேய்முனி சொல்லுகிறார் (3) அவுட்டுலோமி ஆசாரியார் பிருகதாரண்யத்திலிருக்கும் வண்ணம் ஜீவனும் பிரம்மமும் ஒன்று என்பதைக்கொண்டு சைதன்ய உருவத்தில் ஜீவன்பிரம்மத்தையடைகிறது என்கிறார். (4) வியாசமுனிவர் முன்சொல்லப்பட்ட ஈசவரனையடையக்கூடிய உபன்னியாசம், முதலான ரூபங்களினுடைய காரணங்களினால் ஜீவன் பிரம்ம சுவரூபத்தையடை வதென்பதை விரோதமாக வெண்ணவில்லை (5) யோகி ஒருவன் ஈசவரனுடன் தன்னுடைய பிரம்ம ஸ்வரூபத்தை யடைந்து, வேறு அதிகாரங்களிலிருந்து மீறி தான் தானாகவே பரம்ம சுவரூபத்தினால் முக்தியிலிருக்கிறான்.

விடை:—இச்சூத்திரங்களின் சரியான பொருள் இவைகளல்ல. எதுவரையில் ஜீவன் தன்னுடைய சொந்தமான சுத்த சுவரூபத்தையடைந்து சகலகெடுதல்களையுங் களைந்து பரிசுத்தமாக வில்லையோ அதுவரையில் யோகத்தினால் ஈசவரத்தன்மையை அடைந்துமறைந்திருக்கும். தான் பிரம்மத்தை யறிந்து ஆனந்தத்திலிருக்க முடியாது. (2) இவ்விதமே பாபம் முதலியவைகளிலிருந்து மீறி ஈசுவரத்தன்மையுடன் யோகியாகிறவனே பிரம்மத்துடன் கூடி முக்தியின் ஆனந்தத்தை யனுபவிக்கிறான். இதுவே ஜெய்மினியின் கொள்கை. (3) அவித்தை முதலான தோஷங்களை விட்டு சுத்த சைதன்ய ஸ்வரூபத்துடன் கூடும் வரையில் பிரம்ம ஸ்வரூபத்திற்குச்சரியான சம்மந்தத்தை யடைகிறது. (4) பிரம்மத்துடன் கூட ஈசுவரத்தன்மை சுத்தவிஞ்ஞானம் இவைகளை ஜெயித்து ஜீவன் முக்த

னான பிறகு தன்னுடைய நிர்மலமான பூர்வஸ்வரூபத்தையடைந்து ஆனந்தத்தை அனுபவிக்கிறது. வியாசருடைய கொள்கையும் இதுவே. (5) யோகி பரிசுத்த நோக்கங்களுள்ளவனாகும் பொழுது தானாகவே பரமேச்வரனை யடைந்தவனாகி முக்தியின் சுகங்களை யனுபவிக்கிறான். அங்கே சுவாதீனத்துடனிருக்கிறான். உலகில் ஒன்று முக்கியம் மற்றொன்று முக்கியமில்லாதது என்பதுபோல் முக்தியில் கிடையாது. முக்தியடைந்தஜீவன்கள் யாவும் ஒன்றாகவே வசிக்கின்றன. இம்மாதிரி இல்லாமல் போகுமேயானால்.

नेतरोनुपपत्तेः — I. I. 16.
भेदव्यपदेशाच्च ॥ — I. I. I7.
विशेषणभेदव्यपदेशाभ्यां च नेतरौ ॥ — I. 2. 22.
अस्मिन्नस्य च तद्योगं शास्ति ॥ — I. I. 16.
अन्तस्तद्धर्मोपदेशात् ॥ — I. I. 20.
भेदव्यपदेशाच्चान्यः ॥ — I. I. 21.
गुहां प्रविष्टावात्मानौ हि तद्दर्शनात् ॥ — I. 2. II.
अनुपपत्तेस्तु न शारीरः ॥ — I. 2. 3.
अन्तर्याम्यधिदैवादिषु तद्धर्मव्यपदेशात् ॥ — I. 2. I8.
शारीरश्चोऽभयेऽपि हि भेदेनैनमधीयते ॥ — I. 2. 20.

வேதாந்த சூத்திரம்.

மேற்கண்ட சூத்திரங்களின் பிரகாரம் பிரம்மத்தைவிடவேறான ஜீவன் சிருஷ்டிகர்த்தாவாய் இருக்கமுடியாது. ஏனென்றால் ஜீவனுடைய எல்லைக்குட்பட்டுள்ள ஞானம், குணம், சக்தி இவைகள் பூலோகசிருஷ்டிக்குத் தகாதது. ஆகையினால் ஜீவன் பிரம்மாவாகாது.

रसं ह्येवायं लब्ध्वा नन्दी भवति

ஜீவனும் பிரம்மாவும் பிளவுப்பட்டது. ஆகையினாலேயே இவ்விரண்டினுடைய வித்தியாசங்களும் தெளிவாயிருக்கிறது. இம்மாதிரியில்லாமலிருக்குமேயானால் ரச அதாவது ஆனந்தஸ்வரூப பிரம்மத்தையடைந்து அது ஆனந்தஸ்வரூபமாகவிருக்கமுடியாது. அடையவேண்டிய விஷயம் பிரம்மமும் அடையக்கூடிய விஷயம் ஜீவனுமாகவிருக்கிறது. எனவே ஜீவனும் பிரம்மமும் ஒன்றாகாது.

दिव्यो ह्यमूर्त्तः पुरुषः स बाह्याभ्यन्तरो ह्यजः ।
अप्राणो ह्यमनाः शुभ्रो ह्यक्षरात्परतः परः ॥ — முண்டகோ. I 2.

பிரம்மம் சுத்தமானது, உருவமில்லாதது, சகலத்திலும் நிறைந்தது, உள்ளும் புறமும் நிரந்தரமாயிருப்பது, பிறப்பு இறப்பற்றது, அவயவங்களில்லாதது, சுவாசம் வாங்குதல், சுவாசம் விடுதல், சரீரம், மனது இவைகளினுடைய சேர்க்கையிலிருந்து மாறினது, ஒளிமயமானது, இவைகளே பரமாத்மாவினு

டைய சிறப்புக்குணங்களாகும். நாசமற்றது பிரகிருதியிலிருந்தும் மேலானது அதைவிட சூக்ஷ்மமானது. இவைகளே ஜீவனுடைய விசேஷங்கள். பரமேச்வரன் அதைவிட சூக்ஷ்மமாயிருக்கிறார். அதாவது பிரம்மம் சூக்ஷ்மமானது. இப்பிரம்மத்தை அந்தர்யாமி என்கிற முதலான தர்மங்களைச் சொல்வதுமுண்டு.

ஜீவன் பரவியிருக்கிறபடியினால் வியாபித்திருக்கிற பிரம்மத்திலிருந்து வேறாயிருக்கிறது. ஏனென்றால் வியாப்யவியாபக சம்பந்தத்தில் கூடவித்தியாசங்கள் உண்டாகிறது. பரமாத்மா ஜீவனிலிருந்து வேறானவர் போலவே இந்திரியம் அந்தக்கரணம் பூமிமுதலானவைகள் திசைகள் வாயு சூரியன் தெய்வீகத்தன்மையை கொண்டதினாலுண்டாகும் சந்தோஷம் இவைகளிலிருந்து பரமாத்மா வேறானவர். இம்மாதிரி உபநிடதங்களின் வாக்கியங்களிலிருந்தே ஜீவனும் பரமாத்மாவும் தனியானதெனத்தெரியும். இன்னும் பலவாக்கியங்கள் உபநிடதங்களிலிருக்கின்றன.

சரீத்தையுடைய ஜீவன் பிரம்மமாகாது. ஏனென்றால் பிரம்மத்தினுடைய குணகர்மஸ்வபாவங்கள் ஜீவனிடத்தில் ஒலிக்காது.

(அதிதைவ) சகலசிரேஷ்டமான மனது முதலான இந்திரியாதி பொருள்களிலும் (அதிபூதம்) பிருதிவிமுதலான பூதங்களிலும் (அத்யாத்ம) சகல ஜீவன்களிலும் பரமாத்மா மறைவான ரூபமாயிருக்கிறார். ஏனென்றால் அப்பரமாத்மாவினுடைய பரவுங்குணம் உபநிடதங்களில் எங்கும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சரீரத்தையுடைய ஜீவன் பிரம்மமாகாது. ஏனெனில் பிரம்மத்திலிருந்து ஜீவனுடைய வித்தியாசம் ஸ்வரூபத்தினாலேயே உண்டாகிறது.

சாரீரிக சூத்திரங்களிலுங்கூட ஸ்வரூபத்தினால் பிரம்மத்தியனுடையவும ஜீவனுடையவும் வித்தியாசம் வெளிப்படுகிறது. இம்மாதிரியே வேதாந்திகளினுடைய. "உபக்கிரம்" "உபசம்காரம்" செல்லாது. அவர்கள் ஆரம்பம் (உபக்கிரம்) பிரளயம் இவ்விரண்டையும் பிரம்மத்திலிருந்தென்றே நம்புகின்றார்கள். பிரம்மத்தைவிட வேறு ஒன்றையும் அவர்கள் நம்பாதபடியினால் உற்பத்தி பிரளயத்தைக்கூட பரமாத்மாவினுடைய தர்மம் என்றெண்ணுகிறார்கள். ஆனால் வேதம் முதலான சத்தியசாத்திரங்கள் உத்பத்தி நாசம் இவைகளிலிருந்து பிரம்மத்தை மீறினவனாகச்சொல்லுகிறது. வேற்றுமையற்றவர், பரிமாணமற்றவர், சுத்தம், சநாதனம், முதலிய விசேஷ குணங்களையுடைய பிரம்மத்தில் மாறுதல், உற்பத்தி, அஞ்ஞானம், முதலானவைகளைக் காட்டுவதற்கு வேதாந்திகளுடன் கோபங்கொள்வார். பிரளயத்தில் கூட பிரம்மா, பிரகிருதி, ஜீவன், இம்மூன்றும் இருந்துவருகிறது. ஆகையினால் உபக்கிரமும் உபசம்காரமும் வேதாந்திகளினுடைய பொய் கற்பனையே. இவர்களில் இம்மாதிரியே இன்னும் சாஸ்திரம் முதலான அனுபவப்பிரமாணத்திற்கு விரோதமான பல அழுக்குகள் இருந்துவருகின்றன.

இதற்குப் பிறகு சமணர்களையும் சங்கராசாரியையும் பின்பற்றினவர்கள் பரவி, இந்தியாவில் சபைகூட்டி வந்தாகள். சங்கராசாரியருக்கு முந்நூறு வருடங்களுக்குப் பின்னால் உஜ்ஜைனி மகாராஜ விக்கிரமாதித்யன் கொஞ்

சம் பிரசித்தமானர். அவர் ராஜர்களின் உள்ச்சண்டையை விலக்கி சமதானத்தை நிலை நிறுத்தினர். பிறகு மகாராஜ **பர்த்திருகரி** காவ்யம் சாஸ்திரம் முதலானவைகளில் கொஞ்சம் வித்வானயிருந்து வைராக்கியத்தையடைந்து இராஜ்யத்தை விட்டுவிலகினர். விக்கிரமாதித்தியனுக்கு ஐந்நூறு வருடங்களுக்குப் பிறகு **போஜராஜன்** விளங்கினர். வியாகரணம், காவ்யம், அலங்காரம், முதலானவைகளைத் தன்னுடைய ராஜ்யத்தில் ஆட்டிடையன் **காளிதாசனும்** 'இரகுவம் சத்தை'ச்செய்யும் வண்ணம் பரவச்செய்தார். நல்ல பாக்கள் கட்டி கொண்டுவருவோர்களுக்குப் போஜராஜன் தக்கப்பரிசு அளித்து சன்மானித்து வந்தார். அவருக்குப் பிறகு அரசர்களும் சீமான்களும் படிப்பதை விட்டார்கள். சங்கராசாரியருக்கு முன்னிருந்தே வாமமார்க்கிகள் சைவசமயத்தவர்கள் முதலானவர்களிருந்த பொழுதிலும் பலமன்னியிலிருந்தார்கள். மகாராஜ விக்கிரமாதித்தியனுடைய காலந்தொட்டுதான் சைவர்களுடைய பலம் அதிகரித்தது. வாமமார்க்கிகளில் மகாவித்தை போன்ற பத்து பிரிவினைகளிருப்பதுபோல் சைவர்களிலும் பாசுபாதம் முதலான பிரிவுகளிருந்தன. சங்கராசாரியாரைச் சிவனுடைய அவதாரம் என்று எண்ணினர்கள். அவரைப் பின்பற்றினவர்களும் சந்நியாசிகளும் சைவர்களை யடைந்து சிவனுடைய பத்னியான தேவியைப் பூசித்து வாமமார்க்கத்தைச் சேர்ந்தார்கள். சைவர்கள் மகாதேவனைப் பூசித்தார்கள். இருவரும் உருத்திராக்ஷம் அணிந்து விபூதியைப் பூசிகொள்பவர்களே. ஆனல் வாமமார்க்கிகளைப்போல் சைவர்கள் வேத விரோதிகளல்ல.

சைவமதம்

धिक् धिक् कपालं भस्मरुद्राक्षविहीनम् ॥
रुद्राक्षान् कण्ठदेशे दशनपरिमितान्मस्तके विंशती द्वे,
षट् षट् कर्णप्रदेशे करयुगलगतान् द्वादशान्द्वादशैवं ।
बाह्वोरिन्दोः कलाभिः पृथगिति गदितमेकमेवं शिखायाम्,
वक्षस्यष्टाऽधिकंयः कलयति शतकं स स्वयं नीलकण्ठः ॥

இம்மாரி பாக்களை அவர்களுண்டுபண்ணி சொல்ல வாரம்பித்ததாவது:— எவர்களுடைய தலையில் விபூதியும் கழுத்தில் உருத்திராக்ஷமும் இல்லையோ அவர்களைச் சண்டாளனுக்குச் சமானமானவர்களாய் தள்ளிவைக்கவேண்டும். (2) கழுத்தில் 32, தலையில், 10, ஒவ்வொருகரத்திலும் 6, மணிக்கட்டு ஒவ்வொன்றிலும் 12, கைகள் ஒவ்வொன்றிலும் 16, தலைமுடியில் 1, மார்பில் 108 உருத்திராட்ச மணிகளை அணிகிறவர்களே சிவஸ்வரூபம். இம்மாதிரியே சக்தி பூஜைக்காரர்களும் நம்புகிறார்கள். வாம மார்க்கிகளும், சைவர்களும் ஒன்றுசேர்ந்து லிங்கம், ஜலாதாரி என்று சொல்லப்பட்ட ஆண் பெண் குறிகளைப் பூஜை செய்து அதைப் பரவச்செய்யவும் கட்டுப்பட்டார்கள். அதைப் பூஜைசெய்வதில் அவர்களுக்கு நாணம் தோன்றவில்லை போலும். அது காட்டாளர்களுடைய செய்கை யென்றும் ஆகையினுல் அது தகுதியல்ல வென்றும் அவர்களுடைய புத்திக்குப்படவில்லைபோலவும். கவி ஒருவர் கூறும்

வண்ணம் स्वार्थी दोषं न पश्यति ॥ தன்னயக்காரர்கள் தங்களுடைய வேலையை முடித்துக் கொள்வதில் கெடுதல்களையும் குற்றங்களையும் கவனிக்கிறதில்லை. அவைகளைச் சுத்தமான தென்றும் நம்புகிருர்கள். கல்ச் சிலைகளையும், இனங்களின் குறிகளையும் பூசிப்பதினலேயே பலவிதமான தர்மார்த்த காம மோட்சங்களும் உண்டாகுமென்று நம்பினர்கள். போஜராஜனுக்குப் பிறகு சமணர்கள் விக்கிரகங்களைத் தாபித்து அதைப் பூஜை செய்ய வாரம்பித்தவுடன், இந்த போப்க்களுடைய சீடர்களும் சமணவாலயங்களுக்குப் போக வாரம்பித்தார்க்ள். மேல் நாடுகளில் புதுமதங்கள் ஆரம்பித்து கிரேக்கர்களும் முகம்மதியர்களும் இந்தியாவிற்கு வரவாரம்பித்தவுடன் போப்கள் இம்மாதிரியான

न वदेद्यवनीं भाषां प्राणैः कण्ठगतैरपि ।
हस्तिना ताडयमानोऽपि न गच्छेज्जैनमन्दिरम् ॥

சுலோகங்களைக் கட்டவாரம்பித்தார்கள். "கஷ்டங்கள் எவ்வளவுண்டான பொழுதிலும் பிராணனுக்கே ஆபத்து அதாவது மரணமே வந்தபொழுதிலும் யாவனர்களுடைய அதாவது மிலேச்சர்களுடைய பாஷையை வாயினல்கூட சொல்லக்கூடாது. மதம்பிடித்த யானை பின்பற்றின பொழுதிலும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவுங்கூட சமண ஆலயங்களுள் நுழையக்கூடாது. சமண ஆலயங்களில் நுழைந்து உயிரைக்காப்பாற்றிக் கொள்ளுவதைவிட யானையினுடைய காலடிமிதியினல் இறப்பது மேலானது." இம்மாதிரி தங்களுடைய சீடர்களுக்கு உபதேசஞ் செய்தார்கள். உங்கள் மதத்திற்கு ஏதாவது பிரமாணப் புத்தகங்கள் உண்டாவென்று வினவினல் இருக்கிறது பாருங்கள் என்று மார்க்கண்டேய புராணத்திலிருந்து சில பாகங்களையும் துர்காபாடத்திலிருந்து தேவியுடைய வர்ணனையும் படித்துக் காண்பிப்பார்கள். போஜராஜனுடைய காலத்தில் வியாசருடைய பெயரால் மார்க்கண்டேய, சிவபுராணங்களை எவரோ ஒருவர் செய்து விட்டார். இது ராஜனுக்குத் தெரிந்தவுடன் அப்பண்டிதரிகளின் கையை வெட்டி தண்டனையை அளித்து எவராவது காவியம் முதலான கிரந்தங்கள் செய்தால் அதைத் தன்னுடைய சொந்த பெயரிலேயே வெளியிடுதல் வேண்டும் என்றும் ரிஷி முனிகளினுடைய பெயரால் செய்யக் கூடாதென்றும் பறைசாற்றினன். இது போஜராஜனல் செய்யப்பட்ட சஞ்சீவினி என்னும் நூலில் காணப்படும். இது குவாலியார் இராச்சியத்துப் பிண்ட என்னும் பட்டணத்தின் திவாரி பிராம்மணர்களிடமிருக்கிறது. இது லகுனராவ், சாகிபனும், அவருடைய குமாஸ்தா ராமதயால் சௌபேயினலும் பார்க்கப்பட்டிருக்கிறது.

அதே புத்தகத்தில் வியாசர் 4400ம் அவருடைய சிடர்கள் 5600, சுலோகங்களையும் அதாவது 10,000 சுலோகங்கள் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனல் விக்கிரமாதித்திய மகாராஜ காலத்தில் அது 20000 மாக பெருகிவிட்டது. தன் தகப்பனர் காலத்தில் 25,000 சுலோகங்களும் தன்னுடைய யௌவன காலத்தில் 30,000 மாயிருந்த தென்று போஜராஜன் சொல்லியிருக்கிருர். இம்மாதிரி பெருகிக்கொண்டு போகுமேயானல் மகாபாரத

புத்தகம் ஒட்டகச்சுமை ஒன்றைப் போலாய்விடும். ரிஷி முனிகளினுடைய பெயரால் புராணம் முதலிய கிரந்தங்கள் செய்யப்படுமே யானால் இந்தியர்கள் மயங்கி உண்மையான வைதிக தர்மத்தை இழந்து நாசமடைவார்கள். வேத ங்களிடத்தில் ராஜனுக்கிருந்த ஆசை இதிலே யிருந்தே விளங்குகிறது.

घट्यैकया क्रोशदशैकमश्वः सुकृत्रिमो गच्छति चारुगत्या ।

वायुं ददाति व्यजनं सुपुष्कलं विना मनुष्येण चलत्यजस्रम् ॥போஜப்பிரபந்தம்

ராஜபோஜனுடைய இராஜ்யத்திலும் அதற்கடுத்த நாட்டிலும் ஒரு மணி யில் $22\frac{1}{2}$ கோசம் அல்லது 45 மைல், 1 கெடி அல்லது 48 நிமிஷத்தில் 11 கோசம் $22\frac{1}{2}$ அல்லது .22 மைல் போகக்கூடிய சக்தியையுடைய குதிரை யைப்போன்ற இயந்திரங்கள் செய்யக்கூடிய சிற்பவேலைக்காரர்களிருந்தார்கள். அது பூமியின்பேரிலும் ஆகாசத்திலும் போகக்கூடியது. மேலும் பங்கா ஒன்று செய்திருந்தார்கள். அது மனிதவுதவியன்னியில் தானாகவே சுற்றவும் சுற்றும். காற்றையுங் கொடுக்கும்.

இவ்விரண்டும் இக்காலம் வரையிலிருந்திருக்குமேயானால் ஐரோப்பியர் களுக்கு இவ்வளவு அகம்பாவம் இராது.

போப்புக்கள் தங்கள் சிஷ்யர்களை சமணவாலயங்களுக்குப் போகாமல் தடுத்த போதிலும் அவர்கள் அதை பொறுக்கமுடியவில்லை. சமணர்களு டைய கதையைக் கேழ்ப்பதற்கும் அவர்களுடைய சட்டங்களை அறிவதற்கும் சென்றார்கள். பிறகு சமணபோப்க்கள் புராணிகப் போப்புகளுடைய சீடர் களை இச்சகம் பேசி ஏய்க்க வாரம்பித்தார்கள். அப்பொழுது புராணிகர்கள் செய்த யோசனையாவது :— உபாயம் ஒன்று செய்யாவிடில் தங்களுடைய சிடர்கள் சமணர்கள் ஆய்விடுவார்கள் என்று அறிந்தார்கள். பிறகு சமணர்களு க்குச் சரியாக அவதார மூர்த்திகளின் ஆலயங்களைக் கட்டி புஸ்தகங்கள் எழுத வாரம்பித்தார்கள். 24 சமண தீர்த்தங்கரர்களுக்குச் சரியாக 24 அவதாரங் களையும் ஆலயங்களையும் மூர்த்திகளையும் செய்தார்கள். சமணர்களுடைய ஆதி, உத்திர, புராணங்களைப் போல் பதினெண் புராணங்களையும் செய்தார்கள்.

போஜ ராஜனுக்கு 150 வருஷங்களுக்குப் பிறகு வைணவமதம் ஆரம்ப மானது. ஆரம்பத்தில் கஞ்சரவர்ணத்திலுதித்த சடகோபரென்பவரால் பிர சாரம் செய்யப்பட்டது. பிறகு பெறுக்குகிறகுலத்துதித்த முனிபாணன் என் பவனாலும், பிறகு யவனவம்சத்திலுத்த .யாவனாசாரியாலும் பரவச்செய் யப்பட்டது. நான்காவதாகப் பிராம்மணகுலத்துதித்த ராமனுஜரால் இம்மதம் பெரியதாயிற்று. சைவர்கள் சிவபுராணத்தையும், சக்தி பூஜைக்காரர்கள் தேவீ பாகவதத்தையும்,வைணவர்கள் வைணவபுராணத்தையும் முறையே செய்தார் கள். எவனும் பிரமாணங்களாக எடுத்துக்கொள்ளமாட்டானென்னும் எண் ணத்தினால் தங்களுடையபெயரைக்காண்பிக்காமல் முனிகளின் பெயரால்புரா ணங்களைச்செய்தார்கள். இவைகளுக்கு உண்மையானபெயர் நவீனமே யாகும். புராண (அல்லது பழையது) என்பது கூடாது. ஆனால் தரித்திரர்கள் தங் கள் பிள்ளைகளுக்கு மகாராஜாதிராஜன் என்றும் பெயர் வைக்கும் பொழுது

என்ன அதிசயமிருக்கிறது. இவர்களுக்குள்ளிருக்கும்படியான சகல சச்சரவுக ளெல்லாம் புராணங்களிலும் அப்படியே நிரம்பி ததும்பி யிருக்கின்றன.

தேவிபாகவதத்தில் ஸ்ரீ என்னும் ஸ்திரீ ஸ்ரீபுரத்தின் அதிகாரியாக விருந் வதாகச் சொல்லுகின்றது. அவள்தான் உலகம் சகலத்தையும் சிருஷ்டித்தாள். பிரம்மா விஷ்ணு மகாதேவனையுங்கூட அவளே சிருஷ்டித்தாள். அத்தேவிக்கு இஷ்டம் வந்தபொழுது கையைத் தேய்த்துக்கொண்டிருந்ததாகவும் அப்பொ ழுது ஒரு கொப்பளம் உண்டானதாகவும் அதிலிருந்து பிரம்மா உண்டானதா கவும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது நீ என்னை விவாகஞ் செய்துக் கொள் என்று சொன்னாள். நீ என்தாயானபடியினால் பிரம்மா உன்னுடன் மணம்புரிந்து கொள்ள முடியாது என்றார். இதைக்கேட்டு கோபம் வந்து தாய் பிள்ளையை சாம்பலாகும்படி சபித்தாள். பிறகு முன்மாதிரி தேய்க்கவே இரண் டாவது பிள்ளை உண்டானான். அவருக்குப்பெயர் விஷ்ணு என்று வைத்து அவரிடத்திலும் கலியாணம் செய்துகொள்ளென்று வினவினாள். அவரும் அதை ஏற்காமல் போகவே அவரையும் சாம்பலாக்கிவிட்டாள். மறுபடியும் முன்செ ய்தபிரகாரமே மூன்றாவது பிள்ளையை உண்டுபண்ணி மகாதேவன் என்று பெயரிட்டாள். அவரிடத்திலும் விவாகம் செய்துக்கொள் எனவே நீ வேறு ஸ்திரீயின் சரீரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றார். அவ்விதமே தேவி செய்ய மகாதேவர் இதோ விழுந்திருக்கிற இரண்டு குவியல்களும் என்னவென வினவினார். தேவி இரண்டும் உன்சகோதரர்களென்றும் என்பேச்சைக்கேழ்க் காமல் போனதினாலேயே சாம்பலாகச் செய்தேன் என்றாள். அப்பொழுது மகா தேவன் என்னால் தனியாக ஒன்றும் செய்யமுடியாது என்றார். மூவர்களையும் மணந்துகொள்ளுமாறு இன்னும் இரண்டு ஸ்திரீகளையுண்டுபண்ணவேண்டும் என்றார். தேவி அம்மாதிரியேசெய்ய மூவர்களுடன் கூடவிவாகம் நடந்தே றியது.

தாயுடன் கலியாணஞ் செய்துகொள்ளாமல் சகோதரிகளுடன் செய்து கொண்டார்கள். இதைச்சரியென நம்பலாமா? பிறகு இந்திராதிகளை உண்டு பண்ணி பிரம்மா விஷ்ணு உருத்திரன் இந்திரன் இவர்களுடைய பல்லா க்குத்தூக்கிகளாகச் செய்தாள். இம்மாதிரி பாவனையுள்ள கட்டுக் கதைகள் எழு தப்பட்டிருக்கின்றன. இத்தேவியுடைய சரீரத்தையும் அவளுடைய ஸ்ரீபுரத் தையும் அவளுடைய தாய்தகப்பன் இவர்களையும்செய்தது யாரென்றும் போப் க்களைக் கேட்கவேண்டும். தேவி ஆரம்பமில்லாதவள் என்பார்களேயானால் அது சம்யோகத்தினால் உண்டாகிற ஜன்மமானபடியினால் அநாதியாய் ஒரு பொழுதும் இருக்கமாட்டாது. தாய் பிள்ளையுடன் விவாகஞ்செய்து கொள்வத ற்கு இஷ்டப்படாமல் பயந்தால் சகோதரியுடைய விவாகம் மாத்திரம் எவ்வி தம் நல்லதாகும்? தேவீபாகவதத்தில் மகாதேவர் விஷ்ணு பிரம்மாமுதலானவர் களை அற்பத்தனமாயும் கேவலமாயும் தேவியைப்பெரியதனமாயும் மேன்மை வாய்ந்தவளாயும் எழுதியிருப்பதுபோலவே சிவபுராணத்தில் தேவிமுதலானவர் களை மிகக்கேவலமாய் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது இவர்களையெல்லாம் மகாதேவனின் தாசனாகவும் மகாதேவனைச் சகலருடைய தாசனாகவும் செய்ய

ப்பட்டிருக்கிறது. உருத்திராட்ச மணிகளணிந்து விபூதி பூசிக்கொள்வதினால் முக்திகிடைக்குமேயானால் தினந்தோறும் புழுதியில் புரளும் கழுதை முதலான மிருகங்களுக்கும் பழம் கொட்டை சங்கு முதலானவைகளை அணியும் பீல் கஞ்சீரா முதலான மலைவாசிகளுக்கும் ஏன் சுவர்க்கம் கிடைக்காது?

வினா:—காலாக்னி ருத்ரோப நிஷத்தில் விபூதி பூசிக்கொள்ளகட்டளை யிடப்பட்டிருக்கிறதே? அதென்னப்பொய்யா? "திராயுஷம்ஜமதக்னே" என்னும் யஜுர்வேதம் முதலான வேதமந்திரங்களில் சாம்பல் பூசிக்கொள்ள விதி யிருக்கிறதே. உருத்திரனுடைய கண்ணீர்களிருந்து உண்டான மரத்தையே புராணங்கள் உருத்திராக்ஷம் என்கின்றன. ஆகையினால் அவைகளை அணிந்து கொள்வதினால் புண்ணியம் கிடைக்கிறது. ஒரு உருத்திராக்ஷம் அணிந்தால் கூட சகலபாபங்களும் நீங்கி சுவர்க்கத்தையடைகிறோம். எமராஜனுக்கும் நரகத்திற்கும் பயப்படவேண்டியதில்லை.

விடை:—தன்சரீரம் முழுவதையும் சாம்பலினால்பூசிக்கொண்ட ஒருவனாலேயே காலாக்னிருத்திரம் எழுதப்பட்டது. ஏனென்றால் "யஸ்ய பிரதமா ரேகா ஸா பூர்லோக" என்பதைப்போன்ற அர்த்தமில்லாத வார்த்தைகள் அதிலிருக்கின்றன. "பிரதிதினம் கையினால் நெற்றியில்இழுக்கப்பட்ட கோடானது பூமியாகும்". இது எவ்விதம் உண்மையாகும்? இம்மாதிரி மந்திரங்களினால் சாம்பல் அல்லது திரிபுண்டரம் தரித்துக்கொள்ளுதல் என்று ஆகாது, ஆனால் "சக்ஷுர்வைஜமதக்னி" (சதபதம்.)

ஹே பரமேச்வர என் கண் பார்வையானது (திராயுஷம் திருணி) அதாவது முந்நூறு வருடபரியந்தம் இருக்கட்டும். கண்கெடாமலிருக்கும் படியான தர்மகாரியங்களையே செய்யட்டும்.

கண்ணீரிலிருந்து மரம் உண்டாகக்கூடுமென்பது என்ன புத்தியில்லாத்தனம்? பரமேச்வரனின் இயற்கை யமைப்பை எவராலேயாவது மாற்றமுடியுமா? பரமாத்மா எந்த மரத்திற்கென்று விரையை உண்டுபண்ணினனோ அந்த விதையிலிருந்தே அம்மரம் உண்டாகிறது.

எவ்வளவு உருத்திராக்ஷம் சாம்பல், துளசி, தாமரை, பத்திரம், சணல், சந்தனம், முதலானவைகளைக்கழுத்தில் அணிந்தாலும் எல்லாம் மிருகத்தன்மையையுடைய காட்டுமனிதனின் காரியமாகிறது. இவைகளை உபயோகிக்கிற வாமமார்க்கிகளும் சைவர்களும் பொய்வேஷக்காரர்களாயும், விரோதிகளாயும், செய்யவேண்டியகாரியங்களை விடுகிறவர்களாயு மிருக்கிறார்கள். இவர்களிலிருக்கிற கொஞ்சம் சிறந்தவர்கள் இவ்வார்த்தைகளில் நம்பால் நற்கரியைகளைச் செய்கிறார்கள். உருத்திராக்ஷம் பஸ்பம் அணிந்துகொள்வது எமராஜனுடைய தூதர்களைப் பயப்படச்செய்யுமேயானால் போலிஸ் சேவகர்களையாவது அது பயப்படச்செய்யவேண்டுமே? உருத்திராக்ஷம், சாம்பல் உபயோகிக்கிறவர்கள் நாய் சிங்கம், பாம்பு, தேள், ஈ, கொசு முதலானவைகளைப் பயப்படசெய்யாமல் போனால் பெரிய நீதிபதியினுடைய சேவகர்கள் ஏன் அதற்குப் பயப்படுவார்கள்.

வினு:—வாமமார்க்கிகளும் சைவர்களும் நல்லவர்களில்லாமல் போனல் வைணவர்கள் நல்லவர்களா?

விடை:—வேத விரோதிகளானபடியினுல் இவர்களிடத்தும் வெகுகெடுதல் களிருக்கின்றன.

வினு:— नमस्ते रुद्र मन्यवे, वैष्णवमसि, वामनाय च, गाणनां त्वा गणपतिँ हवामहे,भगवती भूयाः, सूर्य आत्मा जगतस्तस्थुषश्च, இவ்வித வேதப்பிரமாணங்களிலிருந்து சைவம் முதலான மதங்கள் உண்டாகிறபடியினுல் நீங்கள் ஏன் அதைக்கண்டிக்கவேண்டும்?

விடை:—இவ்வார்த்தைகளிலிருந்து சைவம் முதலிய சாம்பிரதாயங்கள் வெளியாகவில்லை. ஏனென்றால் பரமேச்வரன் பிராணன், வாயு, ஜீவன், அக்னிமுதலானவைகள் ருத்திரனுடைய பெயர்களாகும் 'ருரோதகர்த்தாருத்ர' அதாவது துஷ்டர்களைத் தண்டிக்கிற பரமாத்மாவிற்கு வந்தனம். பிராணனுக்கும் ஜீரணக்கருவிக்கும் அன்னமளித்துக் காப்பாற்றிக்கொள்வது என்பதே பொருளாகும். (நம இதி அன்னநாம—நிகண்டு. 2. 4.)

மங்களாகாரமாய் சகல உலகத்திற்கும் சுபத்தைசெய்கிற அப்பரமாத்மாவை வணங்கவேண்டியது. சிவனை (கருணைக்கடல்) பூஜிப்பவனே **சைவன்.** விஷ்ணு (எங்கும்பரவியுள்ளவர்) வைப்பூஜிப்பவனே **வைணவன்.** கணபதி (கணங்களின்தலைவர்) யைப்பூஜிப்பவனே **கணபதன்.** சராசரமான சகல உலக ஆத்மாவையும் எங்கும் பரவியுள்ள தெய்வத்தையும் பூஜிப்பவனே **சௌரசன்.** உருத்திரன், சிவன், விஷ்ணு, கணபதி, சூரியன், பகவதீ, முதலான சகலமானவைகளும் சர்வேசுவரனின் பெயர்கள். இவைகளினுடைய உண்மையை அறியாமல் சண்டைய உண்டுபண்ணி விட்டார்கள். எப்படி யென்றால்:—

ஒரு பைராகிக்கு இரண்டு சீடர்களிருந்தார்கள். அவர்கள் பிரதிதினமும் குருவினுடைய பாதங்களைப் பிடித்துத் தேய்த்துக்கொண்டு வந்தார்கள். ஒருவன் வலது காலையும் மற்றவன் இடதுகாலையும் பிடித்து சிசுருஷைசெய்து வந்தான். ஒருநாள் ஒரு சீடன் கடைத்தெருவிற்குப்போயிருந்தான். மற்றொருவன் தனக்சென்று ஏற்பட்ட காலைப்பிடித்துகொண்டிருக்கும் பொழுது குரு சரீரத்தைத்திருப்பிக்கொடுக்கவே இரண்டாவது சீடன் பிடிக்கவேண்டிய கால் இந்தக்காலின் மேல்விழுந்தது. இதைக்கண்டதும் சீடன் ஒருதடியை எடுத்து மேலேவிழுந்த காலை அடிக்கவாரம்பித்தான். அப்பொழுது குருவானவர் ஏ! துஷ்டா!! என்ன காரியம்செய்தாய்? என்றார். அதற்குச்சீடன் நான்சிசுருஷை செய்யவேண்டிய காலில் ஏன்இந்தக்கால் வந்துவிழவேண்டும்? என்றான். இதற்குள் கடைதெருவிற்குப் போயிருந்த இரண்டாவது சீடனும் திரும்பிவந்து தான் சிசுருஷை செய்யவேண்டிய காலைப் பிடிக்க ஆரம்பித்தான். அது வீங்கியிருப்பதைப்பார்த்து குருவைக் காரணங்கேட்டான். அவர் நடந்தசங்கதிகளையெல்லாம் சொன்னார். சீடன் ஒன்றும் பதிலளிக்காமல் பெரியதடி ஒன்றைக்கைப்பற்றிக்கொண்டு குருவினுடைய இரண்டாவதுகாலை யையப்புடைத்தான்,

குரு உரக்கச்சத்தஞ் செய்தார். அப்பொழுது பெரும்புலம்பல் உண்டாகவே ஜனங்கள் திரளாக அங்குவந்து கூடினார்கள். சாதுவிற்கு விளைந்த ஆபத்தைக் கண்ணுற்று விசனமுற்றார்கள். அவர்களில் புத்திசாலியான ஒருவன் சீடர்களுடைய அடிகளிலிருந்து சாதுவை விடுவித்து மூர்க்க சிஷ்யர்களைப் பார்த்து இவ்விரண்டுகால்களும் உங்கள் குருவினுடையதே. இவைகளைச் சிசுருஷை செய்வதினால் அவருடைய சுகத்தையே தேடுகிறீர்கள். இதற்குத் துக்கங்கொடுப்பதினால் அவருக்குத் துக்கத்தைக்கொடுக்கிறீர்கள் என்று உபதேசஞ்செய்தான்.

ஒரேகுருவினுடைய சேவையில் சிஷ்யர்கள் எப்படிவிளையாடினார்களோ அப்படியே ஒரே அகண்ட சச்சிதானந்த ஸ்வரூப பரமாத்மாவிற்கு விஷ்ணு உருத்திரன் என்கிற முதலானபெயர்களையளித்து விளையாடுகிறார்கள். முதல் அத்தியாயத்தில் விளக்கியிருக்கும் வண்ணம் இதனுடைய உண்மையான அர்த்தத்தை அறியாமல் **சைவம் சாக்தம் வைணவம்** முதலான சாம்பிரதாயப்பெயர்களைக்கொண்டு ஜனங்கள் ஒருவருக்கொருவருடைய பெயரை நிந்தனைசெய்கிறார்கள். தங்களுடைய புத்தியைக்கொண்டு விஷ்ணு உருத்திரன் முதலான பெயர்கள் இரண்டற்ற ஒரே சர்வகியர்த்தாவாயும் சர்வாந்தர்யாமியுமான ஜகதீசனுடைய குணகர்மஸ்வபாவங்களுக்கேற்ற பலபெயர்கள் என்று அறிகிறதில்லை. இம்மாதிரி ஜனங்களின்பேரில் ஈச்வரனுக்குக் கோபம் வராதா?

சக்கிராங்கித வைணவர்கள்.

இவர்களுடைய அற்புத மாயையை இப்பொழுது கேழ்ப்போம்.

तापः पुण्ड्रं तथा नाम माला मन्त्रस्तथैव च ।
अमी हि पञ्च संस्काराः परमैकान्तहेतवः ॥
अतप्ततनूर्न तदामो अश्नुते । इति श्रुतेः ॥ ராமானுஜ படலபத்ததி.
दोहा—बाना बडा दयाल का, तिलक छाप और माल ।
यम डरपे काल्ू कहे, भय माने भूपाल ॥

(1) கையில் சூடு செய்து கொள்வது, நெற்றியில் சூலத்தைப்போல் எழுதிக்கொள்ளுவது, ('தாஸ்' என்பதில்முடிகிற) பெயரைவைத்துக்கொள்ளுவது, கழுத்தில் மாலையை அணிந்துகொள்ளுவது, மாயையின் ஞானத்தை அறிவது, இவ்வைந்தும் பரம ஏகாந்தத்தை யளிக்கின்றன. சங்கு, சக்கரம், கதை, பத்மம், இவைகளுடைய சூடுண்ட ஒரு இரும்பைக்கொண்டு கையில் முத்திரை பிடித்துக்கொண்டபின்னர் பாலுள்ள ஒரு பாத்திரத்தில் அதை நனைக்கிறார்கள். சிலர் அப்பாலைக்குடிப்பதும் உண்டு. அப்பாலைக்குடிப்பதினால் மனிதருடைய மாம்சத்தில் ஆசை ஒருவருக்கு உண்டாகிறதென்பது இதனால் வெளிச்சமாகிறது. இவ்விதகாரியங்களினால் பரமேச்வரனையடையலாம் என்றும் சங்கு சக்காராதிகளினால் சரீரத்தில் சூடுபோடாமல் ஜீவன் பரமேச்வரனையும் அடையாது என்கிறார்கள். எப்படியென்றால் இராஜ்யத்தின் அதிகார முத்திரைக்கோலைக்கண்டு ஜனங்கள்பயப்படுவது போலவே விஷ்ணுவினுடைய

சங்கு சக்கரம் முதலான ஆயுதச் சின்னங்களைபார்த்து எமராஜனும் அவரு டைய கூட்டத்தவர்களும் பயப்படுகிறார்களாம்.

நெற்றியிலும் கையிலும் அடையாளங்கள் வைத்துக்கொள்ளுவதும், மாலை யை அணிந்துக்கொள்ளுவதும், பகவானுடைய சின்னங்களாம். திரிசூலத்திற் குச்சரியாய் நெற்றியில் எழுதிக்கொள்ளுவதும், நாராயணதாஸ் விஷ்ணுதாஸ் என்று "தாஸ்" சப்தமுடிவையுடைய பெயரைவைத்துக் கொள்ளுவதும், தாம ரை மாலையை அணிந்து கொள்ளுவதும், (ஐந்தாவதாக) ஓம் நமோ நாராய ணாய என்பதும் இவர்களுடைய அடையாளங்களாகும். இவ்விதமாகச் சாதா ரண ஜனங்களுக்குச் சொல்வதும் இயல்பு.

ओं नमो नारायणाय ॥ श्रीमन्नारायणचरणं शरणं प्रपद्ये ॥ श्रीमते नारायणाय नमः श्रीमते रामानुजाय नमः ॥

இம்மாதிரி மந்திரங்களைத் தனவந்தர்களுக்கும் மரியாதை யுள்ளவர்களுக்கு மென ஏற்படுத்திபிருக்கிறார்கள். கவனியுங்கள்! இதுவும் கடைவியாபாரமும் ஒன்றேயன்றோ? பார்வை எப்படியோ அப்படியே அவர்களுடைய மரியாதை யும். இவ்வைந்து சம்ஸ்காரங்களும் சக்கிராங்கித முக்திக்குக் காரணங்களாகும்.

நாராயணனுக்கு வந்தனம்! லக்ஷ்மியுடன்கூடின நாராயணனுடைய பாத கமலங்களில் சரணமடைகிறோம். பிரகாசிக்கிற நாராயணனுக்கு நமஸ்காரத் தை அளிக்கிறோம். வாமமார்க்கிகள் ம வில் ஆரம்பமாகும் ஐந்தையும் நம்புவதுபோல் சக்கிராங்கிதர்கள் பஞ்ச சம்ஸ்காரத்தைப் போற்றுகிறார்கள். சூடுபோடும்பொழுது சொல்லப்படும்படியான இம்மந்திரத்தின் உண்மையான அர்த்தம் என்னவென்றால்.

पवित्रं ते विततं ब्रह्मणस्पते प्रभुर्गात्राणि पर्येषि विश्वतः ।
अतप्ततनूर्न तदामो अश्नुते शृतास इद्वहन्तस्तत्समाशत ॥
तपोष्पवित्रं विततं दिवस्पदे ॥ இருக். ௯. 83. I. 2.

(I) பிரம்மாண்டம் வேதம் முதலானவைகளைக் காப்பாற்றும்படியான ஓ புரபுவே' சர்வசாமர்த்தியவானும் சர்வசக்திமானுமிருக்கும் நீ வியா ப்தியினால் உலகிலிருக்கிற சகல பொருள்களிலும் வஸ்துக்களிலும் பரவியிருக்கி றாய். உன்னுடைய அந்த பரவுதலானது பரிசுத்த ஸ்வரூபமாயிருக்கிறபடியி னால் பிரம்மசரியம், உண்மை உரைத்தல், துறவரம், பொறுமை, யோகாப்பியா சம், அடக்கப்பட்ட ஐம்புலன்கள் சத்சங்கம், பரிபக்குவம் அடையாத ஆத்மா, அந்தக்கரணம் இவைகளில்லாதவர்கள் உன்னுடைய சுயரூபத்தை அடை கிறதில்லை. பூர்வோத்திர தபசினால் சுத்தமானவர்களே இதைஆசரியித்து உன் னுடைய சுத்தசுயரூபத்தை செவ்வனே அடைகிறார்கள்.

பிரகாசஸ்வரூபமான பரமேச்வரனுடைய சிருஷ்டியில் பரிசுத்த நடத் தையென்னும் தவத்தைப் புரிகிறவர்களே பரமாத்மாவை அடையத்தகுதி யுள்ளவர்கள்.

இம்மந்திரத்திலிருந்து சூடிடுதல் என்று எங்ஙனம் அர்த்தங்கொள்ள முடியும்? அவர்கள் படித்தவர்களா அல்லது முட்டாள்களா? அவர்கள்வித்வான்களாயிருந்தால் ஏன் இவ்விதமான ஒவ்வாத அர்த்தங்களைச் செய்யவேண்டும்? ஏனெனில் இதில் "அதப்ததனூ:" என்றிருக்கிறதே தவிர "அதப்தபுஜைகதேச" என்றில்லை. அதப்ததனு என்றால் உள்ளங்கால்முதல் தலைமுனைவரையிலுள்ள சரீரம் என்று பொருள். இப்பிரமாணத்தைக்கொண்டு சரீரத்தைச் சுட்டுக்கொள்ளவேண்டுமென்று சக்கிராங்கிதர்கள் சொல்லுவார்களேயானால் அவர்களுடைய சரீரத்தை அக்கினி ஜ்வாலையில் எரித்துக் கொள்ளவேண்டியதே. அவ்விதம் செய்தபோதிலும் இம்மந்திர அர்த்தத்திற்கு விரோதமேயாகும். ஏனெனில் மந்திரத்தில் "தப" என்பதற்கு சத்தியம் பேசுதல் பரிசுத்தகர்மம் முதலானவைகளைச்செய்தல் ஆகியவைகளாம்.

ऋतं तपः सत्यं तपः श्रुतं तपः शान्तं तपो दमस्तपः ॥ தைத்ரே. 10. 8.

மனச்சுத்தம் சத்தியத்தைப்போற்றல், சத்தியத்தைப்பேசுதல், சத்தியத்தைச்செய்தல், மனதை அதர்மத்தில் விடாமலிருத்தல், வெளி இந்திரயங்களை அநியாயகாரியங்களில் செல்லுவதிலிருந்துதிருப்புதல்; அதாவது சரீரம் இந்திரியம் மனது இவைகளினால் சுபகாரியங்களைச்செய்தல்; வேதம்முதலான சத்தியவித்தையை ஓதுதல் ஓதுவித்தல்; வேதானுகூலமாய் காரியங்களைச் செய்தல், முதலான உத்தமதர்ம யுக்தமானகாரியங்களைச் செய்வதற்கே தப வென்றுபெயர். சூடுண்ட லோகங்களைக்கொண்டு புண்ணாக்கிக்கொள்ளுவது தப வாகாது. சக்கிராங்கிதர்கள் தங்களைப்பெரிய வைணவர்களாகக் கருதுகிறார்கள். தங்களுடைய தீயவழக்கங்களையும் காரியங்களையும் கவனிக்கிறதில்லை. இந்நம்பிக்கையின் முதல்போதகாசாரியர் சடகோபர். காபாலினால்லிய ற்றப்பட்ட பக்திமாலைசக்கிராங்கிதர்களுடைய நூலாகும். இவைகளின் பிரகாரம் டூம் (தாழ்ந்த) குலத்துதித்த யோகி சடகோபர்.

विक्रीय शूर्पं विचचार योगी ॥

ஜல்லடை செய்துவிற்று வந்தவராகச்சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அவர் கஞ்சர (வேசிக்கு) ஜாதியில் பிறந்தவர். பிராம்மணர்களுடன் படிக்க வேண்டுமென்றும் அவர்கள் படிப்பதைக் கேழ்க்கவேண்டுமென்றபொழுதும் அவர்களால் தள்ளப்பட்டிருக்கவேண்டும். அவர் அப்பொழுது பிராம்மணர்களுக்கு எதிரிடையாய் திலகம்வைத்துக் கொள்ளுவது சூடிட்டுக்கொள்ளுவது முதலான சாஸ்திரவிரோதமான சாம்பிரதாயங்களைச் செய்திருக்கக்கூடும். அவருடைய சீடர் முனிவாகனர், சண்டாளவர்ணத்திலுதித்தவர். அவருடைய சீடர் யாவனாச்சாரியர். கிரேக்க அல்லது துருக்கக்குலத்திலுதித்தவர். தன்னுடைய பெயரை யமுனாச்சாரியார் என்று மாற்றிக்கொண்டார். அவருக்குப் பிறகு ராமானுஜர் பிராம்மண குலத்திலுதித்தவர். பிறகு சங்கிராங்கிதரானார். அவருக்குமுந்தி நூல்களெல்லாம் சுதேசபாஷையிலேயே எழுதப்பட்டுவந்தன. ராமானுஜர் கொஞ்சம் சம்ஸ்கிருதம் படித்து சம்ஸ்கிருதத்திலேயே சுலோகங்களையும் சாரீரக சூத்திரங்களையும் உபநிடத உரைகளையும், சங்கராசாரிய

ருக்கு எதிராகச்செய்தார். அத்வைதம் அதாவது ஜீவனும் பிரம்மமும் ஒன்றென்றும் இரண்டாவதான வேறுவஸ்து உண்மையிலொன்றுமில்லை யென்றும், பிரபஞ்சம் பொய்யென்றும் மாயை யென்றும் அநித்தியமென்றும் சங்கராசாரியர் நம்பினார். இதற்குமாறாக ராமானுஜர் ஜீவன், பிரம்மம், மாயை இம்மூன்றும் நித்தியமென்று நம்பினார். சங்கராசாரியர் பிரம்மத்திலிருந்து ஜீவனையும் காரணவஸ்துவையும் வேறாக நம்பாதது சரியாகாது.

இந்த அம்சத்தில் ராமானுஜர் (விசிஷ்டாத்வைதம்) ஜீவன் அதாவது மாயையுடன் கூடின பரமேச்வரன் ஒன்றுதானென்று எண்ணி இம்மூன்றையும்போற்றி அத்வைதமென்று சொல்லுவதும் எப்பொழுதும் வீண்காரியமேயாகும். ஈச்வரனுடைய ஆதினத்தில் ஜீவனைப் பரதந்திரனாக வெண்ணுவது, மணி மாலைகளை உபயோகிப்பது, நெற்றியில் திலகமிடுவது, மாலையைத் தரிப்பது, மூர்த்தி பூஜை முதலான பொய் நம்பிக்கை, இவைகளே சுருங்கச் சொல்லில் சக்கிராங்கிதர்களுடைய கெடுதல்கள். சக்கிராங்கிதர் முதலானவர்கள் வேத விரோதமாயிருப்பது போல் சங்கராசாரியர் மதத்தவர்களில்லை.

விக்கிரக ஆராதனை

வினா :—மூர்த்தி பூஜை எங்கிருந்து உண்டாச்சுது?

விடை :—சமணர்களிடமிருந்து

வினா :—சமணர்கள் ஏன் அதைத் துவக்கினார்கள்?

விடை :—அறியாமையினால்.

வினா :— சாந்தத்துடன் தியான ஸ்திதியில் உட்கார்ந்திருக்கும் விக்கிரகத்தைப் பார்க்கையில் மனதும் அம்மாதிரியே மாறுகிறது.

விடை :—மனது சேதனமானது. விக்கிரகமோ சடமானது. விக்கிரகத்திற்குச் சரியாய் மனதும் சடமாகக் கூடுமா? விக்கிரக ஆராதனைப் பெறும் புரட்டே? சமணர்களால் கொண்டுவரப்பட்டது. ஆகையினால் இதைப்பற்றி பன்னிரண்டாவது அத்தியாயத்தில் பேசுவோம்.

வினா:—சக்தி முதலான விக்கிரகங்கள், சமணர்களை அனுசரித்ததாயில்லை. எனவே சமணர்களிடமிருந்து பின்பற்றப்படவில்லை.

விடை :—சமணவிக்கிரகங்களைப் போல் சக்தி விக்கிரகங்களில்லையென்பது உண்மையே. சமணவிக்கிரகங்களைப் போல் இவர்களும் செய்திருப்பார்களேயானால் அவைகளுடன் தடுமாற்றம் உண்டாயிருக்கும். ஆதலால் மாறாகவே பண்ணினார்கள். சமணர்களுடன் விரோதஞ் செய்து கொள்ளுவது இவர்களுடைய வேலையாகவும் இவர்களுடன் விரோதஞ் செய்து கொள்ளுவது அவர்களுடைய முக்கிய நோக்கங்களாயுமிருந்தன. சமண விக்கிரகங்களை நிர்வாணமாயும் தியானாவஸ்தையிலிருப்பதாயும் வைராக்ய மடைந்தவர்களுக்குச் சரியாயும் செய்தார்கள். அதற்கு எதிரிடையாய் வைணவர்கள் மனம் போன வண்ணம் அலங்கரிக்கப்பட்ட ஸ்திரீகள் வர்ணங்கள், ராகங்கள், அநுபவங்கள், விஷய சுகங்கள் இவைகளுடன் கூடினதாயும் நிற்கிறமாதிரி உட்கார்ந்திருக்

கிற மாதிரியாகவும் செய்தார்கள். சமணர்கள் சங்கு, கிலுங்கு, மணிக்கிலுக்கு தோல்வாத்தியம், இவைகளைத் தங்களுடைய ஆராதனையில் உபயோகப்படுத்திக் கொள்வதில்லை. வைணவர்களோ பெருமுழக்கமிடுகிறார்கள். இம்மாதிரி லீலைகளினால், வைணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்த போப்புகளின் சிடர்கள் சமணர்களுடைய ஜாலத்தில் சிக்கிக்கொள்ளாமல் தங்களுடைய லீலையிலேயே அமிழ்ந்திருந்தார்கள். வியாசர் முதலிய மகரிஷிகளின் பெயரால் கற்பனையானதும் நடக்கக் கூடாததுமான பல கட்டுக்கதைகளை எழுதினார்கள். அவைகளைப் புராணம் என்றழைத்து ஜனங்களுக்கு அதிலிருந்து கதைகளையும் சொல்லவாரம்பித்தார்கள். பிறகு அதிசயமான புரட்டுகளைக் கையாள வாரம்பித்தார்கள். இதர போப்க்களும் தங்களுடைய ஜீவனத்தின் பொருட்டு இம்மாதிரி லீலைகளைக் கைக்கொண்டார்கள். பொய் விக்கிரகங்களைச் செய்து விட்டு ரகசியமான மலை காடுகளில் ஒளித்து அல்லது பூமியின் கீழேயாவது புதைத்து பிறகு தங்களுடைய சிடர்களுடன் எனக்கு இரவு கனவில் மகாதேவர், பார்வதி, இராதை, கிருஷ்ணன், சீதை, ராமர், லக்ஷிமி நாராயணர் ஹனுமார் முதலானவர்கள் தோன்றி அவ்விடத்திலிருப்பதாகச் சொன்னார்களென்று வெளிப்படுத்துவார்கள். நாம் அங்கிருந்து அதை எடுத்து கோயில் கட்டி ஸ்தாபனஞ் செய்து தன்னைப் பூசாரியாக வைத்தால் அவர்களுடைய மனோபீஷ்டம் நிறைவேறும் என்பார்கள். பணமுள்ள குருடர்கள் போப்க்களின் இக்கட்டுரையைக் கேட்டு உண்மையென நம்பி விக்கிரகம் எங்கிருக்கிறதென்று கேழ்ப்பார்கள். அப்பொழுது என்னுடன் வந்தால் அக்காட்டிலாவது மலையிலாவது காட்டுவேன் என்பார்கள். அக்குருடர்கள் அவர்களுடன் சென்று பார்த்து ஆச்சரியமடைந்து போப்க்களின் கால்களில் விழுந்து சொல்லுவார்கள் "உங்களின் பேரில் தேவதைகளுக்கு வெகு பிரியமாயிருக்கிறது. நீங்கள் அதை எடுத்துப் பிரதிஷ்டை செய்து பூஜைபண்ணி எங்களுடைய மனோபீஷ்டங்களைப் பலிக்கச்செய்யுங்கள்." ஒரு போப் இவ்விதமான புரட்டுக்களில் ஜயிக்கிறதைக் கண்டு மற்ற போப்புகளும் தங்களுடைய ஜீவனத்தின் பொருட்டு இம்மாதிரியான லீலைகளைக் கைக்கொள்வார்கள்.

வினா:—பரமேச்வரன் உருவமற்றவர். அவரைத் தியானத்தினால் காண முடியாது. ஆகையினாலேயே அவருடைய ஆராதனைக்கு விக்கிரகம் அவசியமானது. விக்கிரத்துக்கு முன் நின்று தலையை வணங்கி கைகூப்பி வேறொன்றையும் எண்ணாமல் அவரைத்துதித்துப் பெயரைச்சொல்லுவதில் என்னகெடுதலிருக்கிறது?

விடை:—பரமேச்வரன் உருவமற்றவராயும் சர்வவியாபியாயுமிருக்கிறபடியினால் அவருடைய விக்கிரகத்தைச் செய்யமுடியாது. விக்கிரத்தைகண்டமாத்திரத்தில் பரமேச்வரனுடைய ஞாபகம் வருமேயானால், ஈச்வரனுடைய அற்புதத்தை விளக்குகிறதாயும், மனிதர்கள் சிறிய மூர்த்திகள்செய்ய ஆதாரமாயுமுள்ள பரமேச்வரனால் ஆக்கப்பட்ட பூமி, ஜலம், அக்கினி, வாயு, செடி இவைகளைக்கண்டு ஏன் பரமேச்வரனை நினைக்கக்கூடாது? விக்கிரத்தைப்பார்த்தால் பரமேச்வரன் ஞாபகம் உண்டாவதென்று நீங்கள் சொல்லுவது வீண்பொய்யே.

எதிரில் விக்கிரகம் இல்லாமல் போனால் பரமேச்வரனுடைய எண்ணம் அற்றுபோய் தனியாய் திருட்டுத்தனம் வியபசாரித்தனம் முதலான கெட்டகாரியங்களைச் செய்யக்கூடும். ஏனெனில் அச்சமயத்தில் அவனையாரும் காணவில்லையென்று ஒருவன் அறிகிறான். ஆகவேகெடுதல்களைச் செய்வதிலிருந்து ஒருவன் அஞ்சுகிறதில்லை. விக்கிரக பூஜை செய்வதினால் இவ்வித தீவினைகள் விளைகின்றன. பாருங்கள்! விக்கிரகங்களைக் கவனியாமல் சர்வவியாபகமாயும், சர்வாந்தர்யாமியாயும் நீதிபதியாயும் பரமாத்மாவை எங்கும் இருக்கிறவராகவும் நினைத்து நம்புகிற மனிதன் பரமேச்வரனுக்கு விரோதமான காரியங்களைக் கெடுதல் என்றறிந்து ஒருகணநேரமாவது தன்னிடத்திலிருந்து வேறானவராக அவரை எண்ணாமலிருக்கிறான். அப்பொழுது கெட்டக்காரியங்களைச்செய்யமாட்டான். ஏனெனில் மனது வாக்கு கர்மம் இவைகளைக்கொண்டு ஏதாவது ஒரு தீக்காரியஞ்செய்தால் அந்தர்யாமியாயிருப்பவரின் நியாயதண்டனையைத் தப்பமுடியாதென்று அறிவான். வெறும்பெயரை உச்சரிப்பதினால் மாத்திரம் பலன் ஒன்றும் உண்டாகாது. கற்கண்டு கற்கண்டு என்று சொல்லுவதினால் இனிப்பும் நீம் (வேப்பிலை) என்பதினால் கைப்பும் வாயில் உண்டாகிறதில்லை. அவைகளைச் சாப்பிடும் பொழுதே அவைகளினுடைய உருசி நமக்குத் தெரிகிறது.

வினா:—பெயர்களைச் சொல்லுவது குற்றமாகுமா? புராணங்கள் எல்லாம் அதைப்பெரியதாகப் போற்றுகிறதே?

விடை:—நீங்கள் பெயர்களைச் சொல்லும்விதமும் அதை ஸ்மரணைச் செய்யும் வழியும் தப்பானது.

வினா:—எங்களுடையவழி ஏன் தப்பானது?

விடை:—வேதவிரோதமானபடியினால்.

வினா:—வேதவழியைக் கூறுங்கள்.

விடை:—நியாயகாரி என்பது ஈச்வரனின் ஒருபெயர். பட்சபாதமற்று பரமாத்மா எல்லோருக்கும் சரிவர நியாயஞ்செய்வதுபோலவே அதைஅறிந்து எப்பொழுதும் காரியங்களையே செய்யவேண்டும். அநியாயம் ஒருபொழுதும் செய்யக்கூடாது. இம்மாதிரிசெய்தால் ஒரேபெயர் கூட மனிதனைக் கெடுதல்களிலிருந்து காப்பாற்றும்.

வினா:—பரமேச்வரன் உருவமற்றவரென்று நாங்களும்அறிவோம். ஆனால் அவர் சிவன், விஷ்ணு, கணேசன், சூரியன், முதலான தேவர்களின் சரீரத்தையெடுத்து கிருஷ்ணன் முதலான அவதாரங்களைக் கொண்டபடியினால் விக்கிரகங்களைச்செய்வது கூடவா பொய்யாகும்?

விடை:—அதுவும்பொய் "அஜஏகபாத்" "அகாயம்" பரமேச்வரனுக்குப் பிறப்பு இறப்பு சரீரத்தையடைதல் இவைகள்கிடையாது, என்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அறிவினால்கூட பரமேச்வரனுக்கு அவதாரம் கிடையாது என்றுதெரிகிறது. ஏனென்றால் எங்கும் ஆகாயத்தைப்போல் வியாபகமாயும், அனந்தமாயும், சுகதுக்கம் பார்வை முதலான குணங்களில்லாதவருமா

மிருக்கிறவர், வீரியத்துளியிலும் சரீரத்தின் கர்ப்பப்பையிலும் எவ்விதம் வரக்கூடும்? ஒரே தேசத்தில் வசிக்கிறவனே வந்து போகவுங்கூடும். அளவற்றவும் பார்க்கமுடியாதவும் ஒருசிறிய அணுவிலுங்கூட இருக்கிறவர் அவதாரம் யெடுக்கிருரென்பது மலடிவயிற்றுப் பிள்ளைக்கு விவாகம்நடந்து அவர்களுடைய பேரப் பிள்ளையைப் பார்க்கிறப் பேச்சுப்போலிருக்கிறது.

வினு :—பரமேச்வரன் எங்கும் பரவியிருந்தால் விக்கிரகத்திலும் இருக்க வேண்டுமே? அப்பொழுது ஒருபொருளிலிருப்பதாக வெண்ணி அவரைப் பூசை செய்வது ஏன் நல்லதாகாது? சாணக்கியன் சொல்லும் வண்ணம்.

न काष्ठे विद्यते देवो न पाषाणे न मृण्मये ।
भावे हि विद्यते देवस्तस्माद्भावो हि कारणम् ॥

பரமேச்வரன் கல், கட்டை, பூமி, மண்இவைகளிலில்லை. நம்முடைய எண்ணம் இருக்கிறவிடத்திலேயே அவர் சித்தமாகுகிருர்.

விடை :—பரமேச்வரன் எங்கும் பரவியிருக்கிறபடியினல் ஒருபொருளில் மாத்திரம் இருப்பதாகவும் மற்றபொருளில் இல்லாததாகவுங் கருதுவது அரச சக்கரவர்த்தி தன்னுடைய அரசாங்கம் பூராகவும் அதிகாரம் செலுத்துவதை விட்டு ஒருசிறிய குடிசைக்கு அவரை எஜமானனுக நினைப்பதுபோலாகிறது. இது அவருக்குப் பெரிய மானக்குறைவு ஆகாதா? சர்வவியாபகர் என்று நினைத்தால் விக்கிரங்களுக்குப் பூஜைசெய்ய தோட்டங்களிலிருந்து பூக்கொய்வானேன்? சந்தினத்தை நெற்றியில் வைப்பானேன்? தூபங்காட்டுவதேன்? மணி, கிளிங்கு, கைத்தாளம், மத்தளம், இவைகளினுல் கோஷம் செய்வதேன்? உன் கரங்களில் அவரிருக்க கைகளைச்கூட்டுவதேன்? அவர் உன்தலையிலிருக்க அதை விக்கிரகத்திற்கு முன்னின்றுவணங்குவதேன்? தண்ணீரில்அவர்இருக்க என் விக்கிரகத்தை அதில் மூழ்க்கவேண்டும். இறைவன் சகலபொருள்களிலும் இருக்கிறபடியினுல் வியாபித்திருக்கிறவரை நீபூஜைசெய்கிருயா? அல்லது வியாபத்திருக்கும் வஸ்துவைப்பூஜைசெய்கிருயா? வியாபிக்கிறவரைவணங்கினுல் ஏன் வெறுங்கல்லிற்குப் புஷ்பம் சந்தனம் முதலானவைகளை அளிக்கவேண்டும்? வியாபித்திருக்கும் வஸ்துக்களை வணங்கினுல் பரமேச்வரனையா துதிக்கிறீர்கள்? இம்மாதிரிபொய் ஏன் சொல்லுகிறீர்கள்? நாங்கள் கல்விலங்குமுதலானவைகளைப் பூஜைசெய்கிருேமென்று ஏன் உண்மையை உரைக்கக்கூடாது? உங்களுடைய நம்பிக்கை உண்மையானதா? பொய்யானதா? என்று சொல்லுங்கள். அதுஉண்மையானுல் உங்களுடைய நம்பிக்கையினுல் பரமேச்வரனைக் கட்டுப்படுத்துகிறீர்கள்?

உங்களுடைய நம்பிக்கையினுல் மண்ணைத் தங்கம் வெள்ளி முதலான உலோகங்களாகவும், ரத்தினம் வைடூரியம் முதலான விலையுயர்ந்த பதார்த்தங்களாகவும், கடல்நுரையை முத்தாகவும், தண்ணீரைத் தயிராகவும் மோராகவும் மண்ணைமாவாகவும் சர்க்கரையாகவும் ஏன் செய்யககூடாது? கஷ்டத்தை நீங்கள் நினைக்குங்கால் ஏன் அதை அடைகிறதில்லை? சுகத்தைநினைக்குங்கால் ஏன் அதை அநுபவிக்கிறதில்லை? குருடன் கண்ணிருப்பதாகநினைத்து

ஏன் பார்வையை அடைகிறதில்லை? இறப்பதின் எண்ணமில்லாமலிருந்தும் ஏன் மரணத்தை யடைகிறீர்கள்? ஆகையினால் உங்களுடைய எண்ணங்களும் நம்பிக்கைகளும் ஒருபொழுதும் உண்மையாகாது. இருப்பதையிருக்கும் வண்ணம் எண்ணுவதே சரியான நம்பிக்கை. உதாரணமாகநெருப்பை நெருப்பென்றும் நீரை நீர் என்றும் எண்ணுவது சரியானதாகும். தண்ணீரை நெருப்பென்றும் நெருப்பைத் தண்ணீரென்றும் எண்ணுவது தப்பெண்ணமாகும். இருக்கிறதை இருக்கும் வண்ணம் அறிவதே ஞானம். வேறுவிதமாக நினைப்பது அஞ்ஞானம்.

வினா :—வேதமந்திரங்களினால் பிரதிஷ்டை யாகாதவரையில் தேவதைகள் வருகிறதில்லை. பிரதிஷ்டை செய்தவுடன் வருகிறது. விசர்ஜனம் செய்வதினால் போய்விடுகிறது.

விடை :—மந்திரம் படித்து ஆவாகனஞ்செய்வதினால் தேவதைகள் வருவார்களேயானால் விக்கிரகங்கள் ஏன் உயிருள்ளதாக வாகிறதில்லை? விசர்சனம் செய்தவுடன் ஏன் அது விட்டுப்போகிறதில்லை. அது எங்கிருந்து வந்து எங்கே போகிறது? கேளும்! சகோதரனே!! முழுமுதற்கடவுள் வருகிறதுமில்லை போகிறதுமில்லை. மந்திரபலத்தைக்கொண்டு பரமேச்வரனைவரவழைக்கமுடியுமேயானால் அம்மந்திரத்தைக்கொண்டு இறந்துபோன உன்பிள்ளையினுடைய சரீரத்தில் ஏன்உயிரைவரவழைக்கக்கூடாது? ஜீவாத்மாவை விசர்சனம் செய்து உன்விரோதிகளை ஏன் வதைக்கக்கூடாது? ஏ! பாமரர்களே!! வஞ்சகம் பேசி உங்களைஇவர்களுடைய காரியத்திற்கு உபயோகஞ்செய்துக் கொள்ளுகிறார்கள். வேதங்களில் விக்கிரக ஆராதனைக்கும் பரமேச்வரனுடைய ஆவாகன விசர்ஜனத்திற்கும் ஒருஎழுத்துக்கூட ஆதாரமாகச்சொல்லப்படவில்லை.

प्राणा इहागच्छन्तु सुखं चिरं तिष्ठन्तु स्वाहा । आत्मेहागच्छतु सुखं चिरं तिष्ठतु स्वहा । इन्द्रियाणीहागच्छन्तु सुखं चिरं तिष्ठन्तु स्वाहा ॥

வினா:—இம்மாதிரி வேதமந்திரங்களிலிருக்கிறதே. ஏன் இல்லையென்கிறீர்கள்?

விடை :—அடே! புத்தியைக்கொஞ்சம் உபயோகஞ்செய். சகலமும் வைப்புக்கட்டப்பட்ட வாமமார்க்கிகளுடைய வேதவிரோதமான தந்திரங்களில் போப்க்களால் எழுதப்பட்டவைகள். வேதவார்த்தைகளில்லை.

வினா :—தந்திரங்கள் பொய்யா?

விடை:—அவைகள் முழுப்பொய்யே. ஆவாகனம், பிராணபிரதிஷ்டை, என்னும் விக்கிரக விஷயம் முதலியவைகளுக்கு ஒருமந்திரங்கூட வேதங்களிலில்லை. 'ஸ்நாநம் சமர்பயாமி' (செய்து வைக்கிறேன்) என்பதைப்போன்ற வசனங்கள்கூட கிடையாது."விலங்கு கல் முதலான விக்கிரகங்களைச்செய்து ஆலயங்களில் ஸ்தாபித்து சந்தனம் அக்ஷதைகளினால் பூஜைசெய்யுங்கள்" என்று ஒரு அணுமாத்திரங்கூட காணவில்லை.

வினா :—விக்கிரக ஆராதனைக்கு வேதங்களில் விதியில்லையென்றால் மறுப்புமில்லையே? கண்டனமிருந்தால் "பிராப்தௌ சத்யாம் நிஷேதஹ" மூர்த்திகள் உண்டாவதிலிருந்தே அதுவும் உண்டாகவேண்டும்.

விடை :—விதிகளில்லாமல் போனபோதிலும் பரமேச்வரனுக்குப்பதிலாக வேறு பிறபொருள்களைப் பூஜைக்கு எடுக்கக்கூடாதென்றும் எப்பொழுதும் தள்ளவேண்டும் என்றும் விதித்திருக்கிறது.

अन्धन्तमः प्रविशान्ति येऽसम्भूतिमुपासते ।
ततो भूय इव ते तमो य उ सम्भूत्यां रताः ॥ யஜுர் 40. 9.

பிரம்மஸ்தானத்தில், உண்டாகாத அநாதிபிரகிருதி காரணங்களைப் பூசிக்கிறவன் அஞ்ஞானத்திலும் துக்கசமுத்திரத்திலும் முழுகுகிறான். வெளிப்படையாயிருக்கிற இயற்கையை அதாவது பூமி, கல், மரம், முதலான காரிய ரூபங்களையும் மனிதன்முதலான சரீரங்களையும் பிரம்மத்திற்குப் பதிலாக உபாசனைசெய்கிறவன் பெரு மதியீனனாய் வெகுகாலம் துக்க ரூபமான நரகத்தையடைந்து நீண்டகால உபத்திரவங்களை அனுபவிக்கிறான்.

न तस्य प्रतिमा अस्ति ॥ யஜுர் 32. 3.

சகல ஜகத்திலும் பரவியிருக்கிற உருவமில்லாத அப்பரமாத்மாவிற்குச் சரியான பரிமாணமாவது விக்கிரகமாவது கிடையாது.

यद्वाचानभ्युदितं येन वागभ्युद्यते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ கேனோபநிடதம்.

இதோ! ஜலம். எடுத்துக்கொள்!! என்றுஜலத்தை நோக்கி ஜனங்கள் சொல்லுவது போல் வார்த்தைகளினால் சொல்லமுடியாதவனைப் பிரம்மம் என்று அறிந்து உபாசனைசெய். அவனுடைய பார்வையினாலும் சக்தியினாலுமே நம்முடைய வார்த்தை ஏவப்படுகிறது. அதற்கு வேறுபட்டவைகளெல்லாம் உபாசனைக்குத்தகுந்ததில்லை.

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ கேனோபநிடதம்.

கருத்திற்கு இணங்காதவராயும் மனதை அறிகிறவராயுமிருக்கிறவரைப் பிரம்மன் என்று அறிந்து நீ உபாசனைசெய். அதிலிருந்து வேறானஜீவன் அந்தக்கரணம் உண்டு. அதைப் பிரம்மஸ்தானத்தில் வைத்து உபாசனை செய்யாதே.

यच्चक्षुषा न पश्यति येन चक्षूंषि पश्यन्ति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ கேனோபநிடதம்.

கண்களின் பார்வைக்கு அகப்படாமல் சகலத்தையும் கண்களைக் கொண்டு பார்க்கச்செய்கிற அவரையே பிரம்மன் என்று அறிந்து உபாசனைசெய். அதிலிருந்து தனியான சூரியன் மின்னல் அக்கினி முதலான சடப்பொருள்களை உபாசனை செய்யாதே.

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदं श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ கேனோபநிடதம்.

காதினல் கேழ்க்கமுடியாதவும் காதைக் கேழ்க்கச் செய்கிறவரையுமே **பிரம்மன்** என்று அறிந்து உபாசனே செய். அதிலிருந்து விலகின சப்தம் முதலானவைகளே உபாசனே செய்யக்கூடாது.

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥ கேனுேபநிடதம்.

பிராணனல் அசைக்கப்படாதவும் பிராணனே ஓடச்செய்கிறவரையுமே பிரம்மமென அறிந்து உபாசி. அதிலிருந்து வேருன வாயுவை உபாசிக்காதே.

இம்மாதிரி இன்னும் தடுப்புக்கள் அநேகமிருக்கின்றன.

பிராப்தமாயும் அப்பிராப்த மாயுள்ளவைகளினுடைய பூஜை வேதங்களினுல் தடுக்கப்பட்டுள்ளது. உட்கார்ந்திருக்கிறவனே அங்கிருந்து போகச்செய்வது பிராப்தமாகும். கிணற்றில் விழாதே; துஷ்ட சகவாசஞ் செய்யாதே; வித்தை யில்லாதவனுயிராதே; இவைகளெல்லாம் அப்பிராப்தத் தடுப்புக்களாகும். மனிதனுடைய ஞானத்தில் அப்பிராப்தமாகாத கடவுளே, பிராப்தமாகச் செய்வது கூடாது. ஆகவே கல், விலங்கு முதலானவைகளுடைய பூஜைகள் எப்பொழுதும் அறவே தடுக்கப்பட்டிருக்கிறது.

வின :—விக்கிரக ஆராதனேயில் புண்ணியமில்லாமல் போனுலும் பாபங் கிடையாதே?

விடை :—கர்மங்கள் இருவகைப்படும். சத்தியம் பேசுதல் முதலானவைகளேப்போன்ற வேதங்களால்விதிக்கப்பட்டவை—**விகிதம்**. பொய்ப்பேசுதல் முதலானவைகள் வேதங்களால் தடுக்கப்பட்டவை—**நிஷித்தம்**. விகிதங்களேச் செய்வது தர்மமும், அதைவிட்டுவிடுவது அதர்மமுமாகும். இவ்விதமே நிஷித்த காரியங்களேச் செய்வது அதர்மமும், செய்யாமலிருப்பது தர்மமுமாகும். வேதநிஷித்தமான விக்கிரக பூஜை முதலானவைகளேச் செய்வதினல் நீங்கள் ஏன் பாபிகளாகமாட்டீர்கள்?

வின:—கவனியுங்கள்! வேதங்கள் அநாதி. எனவே விக்கிரகங்களுக்கு என்னவுபயோகமிருந்தது. ஏனென்றல் தேவதைகள் பிரத்தியட்சமாயிருந்தார்கள். இவ்வழக்கமோ தந்திரங்கள் புராணங்கள் இவைகளுடையபிற்காலத்திலிருந்து வந்தது. மனிதனுடைய ஞானமும் சக்தியும் குன்றினபிறகு பரமாத்மாவினுடைய தியானத்தில்கவனத்தைச் செலுத்தமுடியாமல் விக்கிரக பூஜையைக் கொண்டார்கள். ஆகையினல் அஞ்ஞானிகளுக்கே மூர்த்தி பூஜை ஏற்றதாகும். படிப்படியாக ஏறியே மேலே போகவேண்டும். முதல்படியை விட்டுவிட்டால் மேலே போகமுடியாது. மூர்த்தி பூஜை முதல்படியேயாகும் இவைகளேப் பூஜைசெய்து ஞானமடைந்து அந்தக்கரணம் சுத்தமானபிறகே பரமாத்மாவைத் தியானஞ் செய்யமுடியும். வில்வித்தைக்காரனும் சிறு துப்பாக்கிச் சேவகனும் முதலில் கண்களுக்குப் புலப்படும் வஸ்துக்களில் அம்பையும் குண்டையும் எய்து பழக்கிக்கொண்டு, பிறகு கண்ணிற்கெட்டாதவைகளில் குறிபார்த்துவைப்பது போலவே முதலில் ஸ்தூலவிக்கிரகத்

தைப் பூஜைசெய்து பின்னர் சூக்ஷ்ம பிரம்மத்தையடையவேண்டும். புருஷனை அடையு முன்னல் பெண்கள் சிறு விளையாட்டுக் கருவிகளுடன் ஆடுவது போலவுமேயாகும். ஆகையினுலேயே விக்கிரகஆராதனை கெடுதலாகாது?

விடை:—வேதத்திற்குச் சரியாயிருப்பது தர்மமும் அதற்கு எதிரிடையாகயிருப்பது அதர்மமுமானல் நீங்கள்கூறுவதிலிருந்தே அதர்மம் என்று விளங்குகிறது. வேதவிரோதமான நூல்களைப் பிரமாணமாக கருதுவது நாஸ்திக வாதமாகும்.

नास्तिको वेदनिन्दकः ॥

या वेद बाह्याः स्मृतयो याश्च काश्च कुदृष्टयः । மனு. 2. 11.
सर्वास्ता निष्फलाः प्रेत्य तमोनिष्ठा हि स्मृताः ॥
उत्पद्यन्ते च्यवन्ते च यान्यतोन्यानि कानिचित् ।
तान्यर्वाक्कालिकतया निष्फलान्यनृतानि च । மனு. 12. 95. 96.

வேதங்களைப் பழிக்கிறவன், அவமதிக்கிறவன், மறுக்கிறவன், விரோதமாகவிருக்கிறவன் இவர்களெல்லாம் நாஸ்திகர்கள். துன்மார்க்கர்களால் வேதவிரோதமாய் எழுதப்பட்ட இப்புத்தகங்கள் உலகத்தைத் துக்க சாகரத்தில் அமிழ்த்துகிறது. அவைகளெல்லாம் பலனற்றது. சக்தியு மற்றது. இவ்வுலகிலேயும் பரலோகத்திலேயும் இருள் மயமான துக்கத்தையளிக்கிறது.

வேதவிரோதமாய் தற்காலத்தில் எழுதப்பட்ட இப்புத்தகங்கள் சீக்கிரம் பிரயோசனமற்றுப் போகிறது. அவைகளைப்போற்றுவதும்நிஷ்பலமாயும்பொய்யாயுமிருக்கிறது. ஆகையினல் பிரம்மா முதல் ஜைமினிமகரிஷிவரையிலுள்ளவர்களின் மதம் யாதெனில் வேதவிரோதங்களைப்பின்பற்றுதல் கூடாதென்பதே. வேதானுகூலத்தை அனுசரிப்பதேதர்மம். ஏனெனில் அவைகள் மெய்ப்பொருளை விளக்குகிறது. அவைகளுக்கு எதிராய்ப்புராணங்கள் தந்திரங்கள் எவ்வளவு இருந்தபோதிலும் வேத விரோதமானபடியினல் பொய்யே. வேதத்திலிருந்து மாறின புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கும் விக்கிரக ஆராதனையும் அதர்மரூபமானது. சடபூஜைகளினல் மனிதனுடைய ஞானம் விருத்தியடையாது. உள்ள அல்ப்பஞ்ஞானமும் குன்றிப்போய்விடும். ஞானிகளின் பணிவிடையினலும் சங்கத்தினலும் ஞானம்விருத்தியாகும், விலங்குகளினலும் கற்களினலும் ஆகாது. கல்முதலான மூர்த்திபூஜையினல் பரமேச்வரனுடைய தியானம் எங்ஙனமாவது உண்டாகுமோ? உண்டாகாது. விக்கிரக ஆராதனையும் படியாகமாட்டாது. தவறினல் மனிதன்இலும்புகளை உடைக்கக்கூடிய ஒருபெரிய கணவாயேயாகும். எழுந்திருக்க முடியாமல் அதிலேயே மறிக்கிறுன். பெரியமேதைகளான யோகிகளினுடைய சேர்க்கைகளினல் விளையும் நல்ல பயிற்சி மெய்யறிவு முதலானவைகளே பரமேச்வரனை உப்பரிகைக்குச் செல்லப் படிகளைப்போலாகின்றன. விக்கிரக ஆராதனையினல் யாரும் ஞானியானதில்லை. சகலவிக்கிர ஆராதனைக்காரர்களும் அஞ்ஞானியாயிருந்து மானிட

பிறப்பைவீணாக்கி இறந்திருக்கிறார்கள். இறக்காமலிருக்கிறவர்களும் மானிடபிறப்பினுடைய தர்மார்த்தகாம மோக்ஷபலனையடையாமல் பிரயோசனமற்றுக் குலைந்துபோயிருக்கிறார்கள். ஸ்தூலசூக்ஷ்ம உறவைப்போல் விக்கிரக ஆராதனையும் பிரம்மமும் ஆகாது. விக்கிரக ஆராதனை விளையாட்டுக்கருவிகளுடன் ஆடுவது போலாகாது. அக்ஷராப்பியாசமும் நல்ல பயிற்சியுமே பிரம்மத்தையடையவேண்டிய சாதனத்தில் விளையாட்டுக்கருவிகளாகும். நல்ல பயிற்சியும் வித்தையும் அடைகிறவனே ஏற்றசமயத்தில் பரமாத்மாவை அடைவான்

வினா :—உருவமுள்ளதில் மனதை நிறுத்தமுடியும். உருவமில்லாததில் மனது நிலைநிற்கிறதில்லை. ஆகையினாலேயே விக்கிரக ஆராதனை அவசியமாகிறது.

விடை :—உருவமுள்ளதில் மனது ஒருபொழுதும் நிலைநிற்காது. ஏனென்றால் அதைச் சீக்கிரமாக மனது இழுத்துக் கொண்டு விக்கிரகத்தினுடைய அவயவங்களிலிருந்து அவயவங்களுக்கு மனதுமாறுகிறது. உருவமில்லாத பரமாத்மாவைக்கிரகிப்பதில் எவ்வளவு சாமர்த்தியம் மனதிற்கு இருந்த பொழுதிலும் அதுமுடிவைக் காண்கிறதில்லை. அவயவங்களன்னியிலிருப்பதினால் சஞ்சலமும் கிடையாது. குணம் கர்மம் ஸ்வபாவங்களைத்தேடி ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும். உருவமுள்ளதில் நிறுத்தமுடியுமேயானால் உலகிலுள்ளோர்யாவரும் தங்களுடைய மனதைக் கட்டுப்படுத்தியிருப்பார்கள். உலகிலிருக்கும்படியான புருஷன் ஸ்திரீ பிள்ளை பணம் சிநேகிதன், முதலியவைகளில் மனது லயப்பட்டிருக்கிறது. அடக்கமும் அடைகிறதில்லை. உருவமில்லாததில் மனது செல்லுமேயானால் அது அத்தன்மையினால் அடக்கத்தையடைகிறது. ஆகையினால் விக்கிரக ஆராதனை செய்வது அதர்மமானது. 2. கோடிக்கணக்காய் ஆலயங்களில் செலவுசெய்யப்படுவதினால் அது ஏழ்மைத்தனத்தை விளைவிக்கிறது. ஆர்வத்தையும் கடமைகளில் அசிரத்தையையும் உண்டுபண்ணுகிறது. 3. ஸ்திரீ புருஷர்கள் ஆலயங்களில கூடுவதினால் வியபசாரம் அடிதடி சண்டை, வியாதி முதலானவைகள் உண்டாகின்றன. 4. தர்மார்த்தகாமமோட்சத்தையடைய அவைகளையே சாதனங்களெனக்கருதி புருஷத்தன்மையற்று மானிடஜன்மம் வீணாகிறது. 5. பலவாறான விரோத ஸ்வரூபங்களையும் பெயர்களையும் சரித்திரங்களையுமுடைய விக்கிரகங்களினால் ஜனங்களுள் ஒத்துமைகுலைந்து அவர்கள் விரோத மதங்களிலிறங்க ஒருவருக்கொருவர் பிளவு ஏற்பட்டு நாட்டிற்கே நாசம் உண்டாகிறது. 6. மதங்களுடைய வெற்றியும் பிறர்களுடைய தோல்வியும் தன்நம்பிக் கையினாலேயே உண்டாகிறதென்று எண்ணி வீண்காலங்கழிக்கிறார்கள். பிறர்கள் ஜய மடைந்துவிட்டால் இராஜ்யத்தின் சுதந்திரமும் செல்வச்சுகங்களும் எதிரிவசமாகிறது. இவர்களும் சத்துருக்களின் கைவசமாகி குயவனின் கழுதை போலவும் சத்திரக்காரனின் குதிரை போலவும் பலவிதத் துக்கங்களை யடைகிறார்கள். 7. "உனக்குப் பதிலாக உன்பெயரையாவது பிரதிமையையாவது உபயோகப்படுத்துகிறான்." என்றால் ஒருவனுக்குக்கோபம்வந்து சொல்லுகிறவனை அடிக்கப்

போவதுபோல் பரமேசுவரனை உபாசனைசெய்யவேண்டிய விடத்தலாவது மனதிலாவது விலங்குகள், கற்கள் முதலியவைகளுடைய விக்கிரகங்களை வைத்து பூஜைசெய்தால் துர்புத்தியுடையவர்களுடைய சத்தியநாசத்திற்குப் பரமேச்வரன் என்னதான் செய்யமாட்டார். 8. மயக்கவெறியினால் ஆலயங்களிலும் தேசதேசாந்திரங்களிலும் அலைந்து திரிந்து துக்கத்தையடைந்து தர்மம், சம்சாரம் பரமார்த்த முதலானவைகளினுடைய வேலையை நாசஞ் செய்து திருடன் முதலானவர்களால் பீடிக்கப்பட்டு வஞ்சகர்களால் ஏமாற்றவும் படுகிறார்கள். 9. துன்மார்க்க பூசாரிகளுக்குப் பணத்தையளிக்கிறார்கள். அவர்கள் அதை விலைமாதர்களையடைதல் மீன் மாம்சாகாரம், அற்பவிஷயங்களில் சண்டை இவைகளில் செலவழித்து, ஈவோர்களுடைய நலத்தைக் கெடுத்து அவர்களுக்குத் துக்கத்தையும் உண்டுபண்ணுகிறார்கள். 10. பெற்றோர்களைக் கௌரவிக்காமல் அவமானஞ்செய்து கல்விக்கிரகங்களைப் போற்றுவதினால் செய்நன்றி மறந்தவர்களாகிறார்கள். 11. விக்கிரகங்களை யாராவது உடைத்தோ அல்லது திருடனாவது திருடிக்கொண்டோபோய்விட்டால் மாரையடித்துக்கொண்டு அலறுகிறார்கள். 12. பூசாரிகள் பரஸ்திரீகள் சேர்க்கையினாலும் பூசாரிமனைவிகள் பரபுருஷர்களுடைய சேர்க்கையினாலும் மிகக்கெட்டுப்போய் புருஷன் பெண்சாதி என்கிற அந்நியோன்ய ஆசையையே இழக்கிறார்கள். 13. எஜமானன், வேலைக்காரன் என்கிறமுறை சரியாகவில்லாதபடியினால் பரஸ்பரவிரோதத்தன்மை ஏற்பட்டு கெட்டு நாசத்தையும், அடைகிறார்கள். 14. சடத்தைத் தியானிக்கும் ஆத்மாவானது சடபுத்தியை உடையதாகவே ஆகிறது. ஏனென்றால் ஜடத்தன்மை அந்தக்கரணத்தின் மூலமாய் ஆத்மாவில் பிரவேசிக்கிறது. 15. சுவாசனையுடன் கூடின புஷ்பம் முதலியவைகளைக், காற்று ஜலம் முதலானவைகளுடைய துர்நாற்றத்தைப் போக்கவும் ஆரோக்கியத்திற்காகவும் பரமேச்வரன் உண்டுபண்ணியிருக்கிறார். பூசாரிகள் அதைக் கொய்யாமல் விட்டு விட்டால் வெகுநாள் வரையில் அதனுடைய சுகந்தம் ஆகாசத்தில் பரவி வாயு ஜலம் இவைகளைச் சுத்தஞ் செய்து கொண்டிருக்கும். நிறைந்த நருமணம் வீசுவதற்குள்ளேயே அதைக்கொய்து விடுகிறார்கள். அவைகள் கால்வாய்களில் எறியப்பட்டு அதிலுள்ள அழுக்கு ஜலத்துடன் கலந்து துர்நாற்றத்தை உண்டுபண்ணுகிறது. கல்லின் மேல் சமர்ப்பணஞ் செய்வதற்காகவா பரமாத்மா நருமணத்துடன் கூடின புஷ்பம் முதலானவைகளை உண்டு பண்ணினார். 16. புஷப்பங்களின் மேலிருக்கும் சந்தனம் அரிசி முதலியவைகள் ஜலம் மண் முதலியவைகளினுடைய சேர்க்கையினால், கீழே அழுகி மனிதர்களுடைய மலங்களிலிருந்துஉண்டாகும் துர்நாற்றத்தைப்போல் துர்கந்தத்தை யுண்டு பண்ணுகிறது. அதிலிருந்து ஆயிரக்கணக்கான கிருமிகளுண்டாகி இறக்கின்றன. பல கெடுதல்கள் விக்கிரக ஆராதனையிலிருந்துண்டாகின்றன. நல்லவர்களெல்லோரும் அதைவிட்டு விடவேண்டியது. விக்கிரக ஆராதனை செய்கிறவர்களும் செய்வோர்களும் முன்சொன்ன கெடுதல்களிலிருந்து ஒருபொழுதும் மீறமாட்டார்கள்.

பஞ்சதேவ பூஜை.

வினா —எவ்விதமான விக்கிரக ஆராதனையும் செய்யக்கூடாதா? ஆரிய வர்த்த நாட்டில் பஞ்சதேவ பூஜை என்னும் பெயர் ஆதிகாலந்தொட்டு பரம்பரையாயிருந்துவருகிறதே. சிவன், விஷ்ணு, அம்பிகை கணேசன் சூரியன் இவர்களுடைய விக்கிரகங்களைச் செய்து பூஜை செய்வது பஞ்சதேவ பூஜையில்லையா?

விடை :—எவ்விதமான விக்கிரக ஆராதனையுங்கூடாது. ஆனால் கீழே காணப்பட்டவைகளுக்குப் பூஜை அதாவது மரியாதை செய்ய வேண்டும். பஞ்சதேவபூஜை, பஞ்சாயதன பூஜை இவ்வார்த்தைகள் சிறந்த பொருளையுடையதாயிருக்கிறது. அறிவில்லாத மூடர்கள் அதனுடைய சிறந்த அர்த்தத்தை விட்டு தள்ளப்பட்டதைக் கொண்டார்கள். சிவன் முதலிய ஐந்து விக்கிரகங்களைச்செய்து தற்பொழுது பூஜை செய்வதைக் கண்டனம் செய்தாய்விட்டது. வேதானுகூலமானவும் வேதப் பிரகாரமுமான பஞ்சாயதன தேவபூஜையும் மூர்த்திபூஜையும் இவைகளேயாகும்.

मानो वधीः पितरं मोत मातरम् ॥ யஜுர். 16. 15.

आचार्य्यो ब्रह्मचर्येण ब्रह्मचारिणामिच्छते ॥ அதர்வ 11. 5. 17.

अतिथिर्गृहानागच्छेत् ॥ அதர்வ 15. 13. 6.

अर्चत प्रार्चत प्रियमेधासो अर्चत ॥ ரிக்வேத

त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि त्वामेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि ॥ தைத்ரேய 1. 1.

कतम एको देव इति स ब्रह्म त्यदित्याचक्षते ॥ சத. 14. 6. 7. 10.

मातृदेवो भव पितृदेवो भव आचार्यदेवो भव अतिथिदेवो भव ॥

पितृभिर्भ्रातृभिश्चैताः पतिभिर्देवरैस्तथा ।
पूज्या भूषयितव्याश्च बहुकल्याणमीप्सुभिः ॥ மனு. 3. 88.

उपचर्यः स्त्रिया साध्व्या सततं देववत्पतिः ॥ மனு

பூஜை செய்ய வேண்டிய வடிவமுள்ள முதல் விக்கிரகம் அன்னையே. மக்கள் உடல் பொருள் உயிர் மூன்றினாலும் பணிசெய்து தாயைத்திருப்தி செய்தல் வேண்டும். அவரை உபத்திரவஞ் செய்வதுகூடாது. இரண்டாவதாக மரியாதை செய்யவேண்டிய தேவன் தகப்பனே. தாயுக்குச் சரியாய் அவரையும் உபசரிக்கவேண்டும். மூன்றாவது. வித்தையை யளிக்கும் ஆசான். அவரையும், உடல் பொருள் உயிர்களினால் சேவை செய்யவேண்டும். நான்காவது அதிதி. வித்வான் நியாயமானவர், கபடமற்றவர், சகலருடைய நன்மையைக் கோருகிறவர், உலகத்தைச் சுற்றி சத்திய உபதேசத்தில் சகலருடைய சுகத்தைச் செய்கிறவர், அவரைப் பூஜை செய்தல் அவசியமாகும். ஐந்தாவது பெண்டிருக்கு ஆடவரும், ஆடவருக்குப் பெண்டிரும் பூஜிக்கத்தகுந்தவர்கள். இவ்வைந்து மூர்த்திகளே தேவர்களாகிறார்கள். இவர்களினுடைய சேர்க்கையினாலேயே

மானிட தேகத்தின் உற்பத்தி, காப்பு சத்தியப்பயிர்ச்சி வித்தை, சத்தியோபதேசம், இவைகளுண்டாகின்றன. இவைகளே பரமேச்வரனை அடையப்படிகளாகும். இவர்களை ப்பணியாமல் விலங்கு முதலான மூர்த்திகளின் பூஜையைச் செய்கிறவர்கள் வேத விரோதிகளே ஆவார்கள்.

வினு :—மாதா பிதாக்களைப் பணிந்து மூர்த்தி பூஜையும் செய்வதினுல் என்ன கெடுதல்களுண்டு?

விடை :—விலங்குகள் முதலிய மூர்த்தி பூஜையை எப்பொழுதும் கைவிட்டு அன்னை முதலான மூர்த்திகளைச் செய்வதிலேயே நன்மையுண்டாகும். நேரான சுகத்தை யளிக்கும்தாய் முதலிய தேவர்களை விட்டு விலங்கு, கல், முதலியவைகளில் தலையை உடைத்துக் கொள்ளுவது மிகவும் கெட்டகாரியம். தாய் தகப்பன் முன்னுல் நைவேத்திய பதார்த்தங்களை வைத்தால் பூசாரிகளுக்கு மிகுதி வைக்கமாட்டார்கள் என்னும் பயத்தினுலேயே அவர்கள் விலங்கு, முதலிய மூர்த்திகளினுடைய பூஜையை கைக்கொண்டதாகத் தெரிகிறது. ஆகையினுல் விலங்கு, கல், முதலிய விக்கிரகங்களைச் செய்து மணியடித்து சங்கு ஊதிப் பலவித சப்தங்கள் செய்து கையைக்காட்டி அதாவது அன்னபானுதிகளை நாங்கள் சாப்பிடும்பொழுது நீங்கள் ஏமார்ந்திருங்கள் எனத் தாங்களே சாப்பிடுகிருர்கள்.

'ஒருவனிடத்தில் கைவிரலைக் காட்டி என் பெருவிரலை எடுத்துக்கொள் என்றுகூறி அவன் முன்னிருக்கும் யாவற்றையும் தானே அபகரித்துக்கொள்வது போலாகிறது. அவர்பூசாரி. அதாவது பூஜையினுடைய "அரி" சத்துரு. டாம்பிகமாய் வஸ்திரங்கள் தரித்துக்கொண்டு அழகானவிக்கிரங்களுக்கு அலங்கரித்துப் புத்தியில்லாதபேதைகளை ஏமாற்றி இவர்கள் செல்வச்செருக்குடன் வாழுகிருர்கள். தர்மமுள்ள அரசன் ஒருவனிருந்தால் இவர்களைக் கற்குழிகளில் வேலை செய்யவும் வீடுகள் கட்டவும் அமர்த்திக்கொண்டு உயிருக்கு அத்தியாவசியமான அன்னபானுதிகளையளிப்பான்.

வினு :—பெண்களினுடைய சிலையைக் காணுங்கால் காமஎண்ணங்களுதிப்பதுபோல் தன்மறுப்பும் சாந்தமும் அடைந்த விக்கிரகத்தைக் காணுங்கால் வைராக்கியமும் சாந்தியும் ஏன் உண்டாகாது ?

விடை :—ஒருபொழுதும் ஆகாது. ஏனென்ருல் விக்கிரகத்தினுடைய சடத்தன்மை முதலானகுணங்கள் ஆத்மாவில் பிரவேசிப்பதினுல் ஆராயும் சக்தியும் மந்தப்படுத்துகிறது. விவேகமன்னியில் விரக்தியும் விரக்தியன்னியில் விஞ்ஞானமும், விஞ்ஞானமன்னியில் அமைதியும் உண்டாகாது. உண்டாகிறகொஞ்சமும் பெரியார்களுடைய சேர்க்கை, உபதேசம் அவர்களுடையசரித்திரத்தைக் கேட்டுப்பார்த்தல் முதலானவைகளினுலேயே ஏற்படும். ஏனெனில் குறைதோஷங்களை யறியாமல் மூர்த்தியைக் காணுவதினுல் மாத்திரம் விச்வாசம் உண்டாகாது. அன்புவுண்டாவதற்குக் காரணம் குணங்களை அறிதலேயாம். இம்மாதிரி மூர்த்திபூஜை முதலான தீச் செயல்களினுலேயே ஆரியவர்த்த நாட்டில் வேலையற்ற பூசாரிகள் பிச்சைக்காரர்களாகவும் சோம்

பேரிகளாகவும் புருஷப்பிரயத்தனமன்னியிலும் கோடிக்கணக்காக இருக்கிறார்கள். அவைகளே சகலஉலகத்திலேயும் அறிவீனத்தைப்பரவச்செய்திருக்கின்றன. விக்கிரக ஆராதனையில் அதிகப்பொய்யும் வஞ்சகமுமிருக்கின்றன.

அற்புதங்களும், க்ஷேத்திரங்களும்.

வினா :—காசிமாநகரில் ஔரங்கசீப்பிற்குக் காண்பித்த **லோடபைரவ** முதலான கணக்கற்ற அற்புதங்களைப் பாருங்கள். முகம்மதியர்கள் ஆலயநாசத்திற்காக தகர்த்தபொழுது பெரும்வண்டுகள் வெளிக்கிளம்பி சேவகர்கள் அனைவரையும் கலவரப்படுத்தி ஓடச்செய்தது.

விடை :—இது விக்கிரகத்தினால் செய்யப்பட்ட அற்புதமல்ல. அங்கே வண்டுகளின் கூண்டிருந்திருக்கவேண்டும். அவைகள் குரூரமான படியினால் எவராவது இதாந்திரவு செய்யுங்கால் அவர்களைக் கொட்டும். அங்கு காணப்பட்ட பால்தாரையின் அற்புதமானது பூசாரிகளால் கற்பிக்கப்பட்டது.

வினா :—மிலேச்சனுக்குத் தரிசனம் கொடுக்காமலிருக்க **மகாதேவன்** கிணற்றிலும் **வேணீமாதவன்** பிராம்மணன் வீட்டிலும் மறைந்து கொள்ளவில்லையா?

விடை :—**கோடபான், காலபைரவன் லோடபைரவன்** முதலான பூத பிரேத கருட கணங்களைக்கொண்டு ஏன் முகம்மதியர்களை அடித்து வென்றிருக்கக் கூடாது? மகாதேவ விஷ்ணு புராணங்களில் சொல்லியிருக்கும் வண்ணம் **திருபுராசுரன்** முதலிய பயங்கரமான துஷ்டர்களைச் சாம்பலாக்கினது போல் ஏன் துருக்கர்களைச் சாம்பலாக்கியிருக்கக்கூடாது. இதிலிருந்து பாஷாணாதி விக்கிரகங்கள் முகம்மதியர்களுடன் சண்டைச் செய்யக்கூடியதல்லவென்று விளங்குகிறது. முகம்மதியர்கள் ஆலயங்களையும் விக்கிரகங்களையும் உடைத்துக் கொண்டுவரும்பொழுது காசிமாநகரைச் சேரவே பூசாரிகள் அப்பாஷாணலிங்கத்தைக் கிணற்றிலெறிந்து வேணிமாதவத்தை பிராம்மணன் வீட்டில் மறைத்து வைத்தார்கள்.

காசியில் காலபைரவன் பயத்தினால் எமதூதர்கள் வரவில்லையானால் பிரளயகாலத்திலும் காசிமாநகரம் அழிவையடையாததானால் மிலேச்சர்களுடைய தூதர்களுக்கு ஏன் பயந்து விட்டது? தங்களுடைய அரசாங்க ஆலயத்தை ஏன் அழிவிற்கு விட்டு விட்டார்கள்? இதெல்லாம் போப்க்களினுடைய மாயை.

வினா :—கயாவில் சிராத்தம் செய்வதினால் பித்ருக்களுடைய பாபம் விலகிப்போய் சிரார்த்தத்தினுடைய புண்யவிசேஷத்தினால் அங்கிருந்து பித்ருக்கள் சுவர்க்கத்தை யடைகிறார்கள். அங்கே பித்ருக்களே கையை நீட்டிப் பிண்டத்தை வாங்கிக் கொள்ளுகிறார்கள். இதுவுமா பொய்?

விடை :—இது முழுப்பொய்யே. பிண்டமளிப்பதின் விசேஷம் இதுவானால், பித்ருக்களுடைய சுகத்திற்காகப் பிண்டத்திற்குச் செலவாகிற லக்ஷக்கணக்கான ரூபாயை வேசித்தனம் முதலான பாபங்களில் கயாவாசிகள்

செலவு செய்கிறார்களே. அப்பாபமும் அவர்களையணுகாதா? கை நீட்டுதல் கூட தற்காலம் காணப்படுகிறதில்லை. மழைக்காலங்களில் பூமியில்பள்ளத்தை வெட்டி அங்கு மனிதன் ஒருவன்கண்ணிற்படாது மறைந்திருக்கக்கூடும். பிறகு அவனைத் தர்ப்பைப் பில்களால் மூடி கையை நீட்டச்சொல்லிப் பிண்டத்தைக் கொடுத்திருப்பான். புத்தி தீட்சணையற்ற எவனையாவது ஏமாற்றி அவர்கள் இம்மூட நம்பிக்கையைப் பரவச்செய்திருக்கலாம். இதில் அதிசயம் ஒன்றுமில்லை. பைஜ் நத்தை இராவணன் கொண்டு வந்தான் என்பதும் இதைப் போல் கட்டுக்கதையே.

வினா :—கல்கத்தாவில காளி காமாக்ஷி முதலான தேவிகளை இலட்சக் கணக்கான ஜனங்கள் மரியாதை செய்கிறார்கள். இதுவும் அற்புதமல்லவா?

விடை :—கொஞ்சங்கூடஇல்லை. இக்குருட்டுஜனங்கள் ஒருவருக்குப்பின் ஒருவராய் ஆடுகள்போல் சென்று பள்ளத்தாக்குகளில் விழுகிறார்கள். விழுந்தும் குருட்டு வழியை விடுவதில்லை. ஒரு மடையனுக்குப் பின் மற்றவன் சென்று மூர்த்தி பூஜை ரூபமான அகழில் விழுந்து துக்கத்தை யடைகிறான்.

புரி ஜகந்நாதம்

வினா :—ஜகந்நாதர் தனது சரீரத்தை மாற்றிக் கொள்ளுங்காலத்தில் சந்தனக்கட்டையொன்று சமுத்திரத்தில் மிதந்துவரக்காண்கிறது (2)அடுப்பின் மேல் ஏழுகொப்பரை நிறையவைக்கப்பட்ட அரிசி முழுவதும் வெந்து விடுகிறது. (3) ஜகந்நாத சுவாமி பிரஸாதத்தை உண்ணுதவர்கள் குஷ்டரோகம் அடைகிறார்கள். (4) ஜகந்நாதருடைய இரதம் தானகவேஓடுகிறது. (5)இந்திரதிம்னன் காலத்தில் தேவதைகளே ஆலயத்தைக்கட்டினார்கள் (6)பகவான் சரீரத்தைக் கழட்டுங்காலத்தில் அரசன் பூஜாரி தச்சன் முதலியவர்கள் இறந்து போகிறார்கள். இவ்வற்புதங்களைப் பொய்யென்று உங்களால் சொல்லமுடியாது.

விடை :—பன்னிரண்டு வருடகாலம் ஜகந்நாதத்தில் பூஜைசெய்து கொண்டிருந்த ஒருவர் மதுராபுரிக்கு வந்திருந்தார். அவர்என்னைக்கண்டபொழுது இவைகளைக்கேட்டேன். இதெல்லாம் உண்மையல்லவென்றார். (1) தன்னுடைய சரீரத்தைமாற்றிக் கொள்ளுங்காலத்தில் படகில் ஏறிச்சென்று சந்தனக் கட்டையைப்போட்டுவிட்டு வருவார்களென்று விளங்கவில்லையா? அலைகளில் மோதுண்டு அது கரையைச் சேருகிறது. அதை எடுத்துத் தச்சர்கள் விக்கிரகஞ் செய்கிறார்கள். (2) பாகஞ்செய்யுங் காலத்தில் சமயலறை கதவு மூடப்பட்டிருப்பதினால் சமையற்காரனைத் தவிர வேறுயாராலும் உள்ளே நடக்கும் விஷயத்தை அறிய முடியாது. பார்க்கவும் முடியாது. சுற்று வட்டமாக ஆறு அடுப்பு வெட்டி நடுவிலொன்றையும் வெட்டுகிறார்கள். அரிசியும் ஜலமுமுள்ள ஒவ்வொரு கொப்பரையின் அடியிலும் நெய் மண் சாம்பல் முதலியவைகளைப் பூசுகிறார்கள். ஆறு அடுப்புக்களின் பேரிலும் அவைகளை வைத்து அரிசி வெந்து பக்குவமானவுடன் கீழே எடுத்து அடிப்பாகத்தை நன்றாய்க் கழுவி விடுகிறார்கள். ஏழாவது கொப்பரையில் வேறே அரிசியும் தண்ணீரும் வைக்கிறார்கள். நடு அடுப்பில் ஒன்றின் பேரிலொன்றாக அடுக்கி ஏழாவது கொப்

பரையை நடுவில் வைக்கிறார்கள். பிறகு ஆறு அடுப்பையும் இருப்புப் பட்டைகளினால் மூடிவிடுகிறார்கள். மறுபடி எல்லோரும் வந்து பார்க்கக் கதவைத் திறந்துவிடுகிறார்கள். அங்குள்ள தனவந்தர்களை யழைத்து மேல் கீழ் கொப்பரைகளிலுள்ள அரிசி பக்குவமாயிருப்பதையும் மத்தியிலுள்ளது ஆகாமலிருப்பதையும் காண்பிக்கிறார்கள். கொப்பரைக்குப் பணம் அளிக்கவேண்டுமென்கிறார்கள். மூளையைவிடப்பணமதிகமுள்ளவர்கள் தங்கம் வெள்ளி முதலியவைகளைக் காணிக்கையாக அளிக்கிறார்கள். பிரதி மாதமும் அளிப்பதாகச் சிலர் வாக்குங் கொடுக்கிறார்கள் (3) சூத்திரன் உள்பட நீசஜாதி ஜனங்கள் நைவேத்தியங் கொண்டு வருகிறார்கள். நைவேத்தியமானவுடன் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மிகுதியைக் கொப்பரையிலிடுகிறார்கள். அது ஈவோர்களுடைய வீட்டிற்கு அனுப்பப்படுகிறது. எல்லோரும்—ஏழை, கிரகஸ்தன், சாது, ஆண்டி முதல், சூத்திரன், ஒதுக்கப்பட்டவர்கள் வரை—ஒரே பந்தியிலுட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். ஒரு பந்தி சாப்பிட்டு எழுந்த பிறகு மற்றொரு பந்தி அவ்விடத்திலேயே போடுகிறார்கள். இலைகளையும் எடுப்பதில்லை அதாவது அவர்களுடைய எச்சிலைச் சாப்பிடுகிறார்கள். இது துராசாரமல்லவா? அங்கு செல்லும் அதிகமான ஜனங்கள் சாதங்களைச் சாப்பிடாமல் தங்கள் கையினாலேயே சமைத்துச் சாப்பிட்டு வருகிறார்கள். ஒருவருக்கும் குஷ்ட ரோகம் வருவதைக் காணவில்லை. ஜகந்நாத நகரிலேயே அநேகம் குஷ்ட ரோகிகளிருக்கிறார்கள். பிரசாதத்தைச் சாப்பிட்டும் அவர்களுடைய வியாதி தீரவில்லையே. இது பைரவீசக்கரத்தில் வாமமார்க்கத்தவர்களால் உண்டு பண்ணப்பட்டது. இதற்கு உதாரணமாக கிருஷ்ணனுக்கும் பலதேவருக்கும் சகோதரியான சுபத்திரை இரண்டு சகோதரர்களுக்கும் நடுவில் மனைவி ஸ்தானத்தில் விளங்குவதைச் சொல்லலாம். பைரவீ சக்கரம் இல்லாமல் போயிருந்தால் இது உண்டாயிராது. (4) இரதச்சக்கரத்தில் ஏதாவது ஒரு இயந்திரம் இருக்க வேண்டும். சரியாக நடத்தினால் இரதம் அசைகிறது. இல்லாத பட்சத்தில கும்பலின் நடுவில் நின்று விடுகிறது. அப்பொழுது பூசாரிகள் தானஞ்செய்யுங்கள்! புண்ணியம் பெறுங்கள்! ஜகந்நாதர் களிப்படைந்து தன்னுடைய இரதத்தைப் போகச் செய்து நம்முடைய தர்மத்தை நிலை நிறுத்தட்டும்!!! என்று கூவுகிறார்கள். பணம் சேரும் வரையில் இவ்விதமாகக் கூவி அது நின்றவுடன் விரஜ வாசியான ஒருவன் நல்ல உடை தரித்துக் கொண்டு சால்வைகளைப் போட்டுக் கொண்டு கைக்கூப்பி "ஏ ஜகந்நாத சுவாமி! கிருபைகூர்ந்து இரதத்தைப்போகச் செய்யுங்கள். எங்களுடைய தர்மத்தைக் காப்பாற்றுங்கள்" என்று துதி செய்கிறான். இம்மாதிரி சொல்லி சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து இரதத்தின் பேரில் ஏறுகிறான். அப்பொழுது இயந்திரம் சரியாகத்திருப்பப்பட்டு, ஆயிரக்கணக்கான ஜனங்களுடைய கரகோஷங்களின் இடையே அசைந்து போகிறது. ஜனங்களும் கயிற்றை இழுக்கிறார்கள். (5) ஆலய தரிசனத்திற்காகப் பல ஜனங்கள் செல்லுகின்றனர். கோடிக்கணக்கான ஜனங்கள் விக்கிரகத்தைக்காணச்செல்லுமிடத்திற்பகல்வேளையில்கூட விளக்குப்போட்டுப்பார்க்கவேண்டியவளவு இருளாயிருக்கிறது. மூர்த்தியின் இருபுறமும் திரைகளால் மறைக்கப்பட்டு அதை இழுத்தால் பூசாரிகள் உள்ளேயிருந்து, மூர்த்தி

யை உடனே மறைக்கிருர்கள். அங்கு குழுமியிருக்கிற ஜனங்களை நோக்கி பூசாரிகள் "ஆராதனை செய்யுங்கள். உங்களுடைய பாபம் விலகிப்போகும். அப்பொழுது தரிசனங் கிடைக்கும் சீக்கிரமாகச் செய்யுங்கள்" என்கிருர்கள் இவ்விதம் வஞ்சகர்கள் பாமரஜனங்களைக் கொள்ளை யடிக்கின்றனர். அப்பொழுது திரை ஒதுக்கப்பட்டு பக்தர்கள் பகவானைக் கண்டு ஜயகோஷம் செய்தானவுடன் மரியாதையன்னியில் வெளியே அனுப்பப்படுகின்றனர். இந்திரதமனுடைய வம்சக்காரர்கள் இன்னும் கல்கத்தாவிலிருக்கிருர்கள். அவன் தனவானுகவும் தேவி பூஜைக்காரனுகவுமிருந்தான். இலட்சம் ரூபாய்கள் செலவு செய்து ஆலயத்தைக் கட்டினன். ஆரியவர்த்த தேசத்தில் சமபந்தி போஜனம் செய்து வைக்க வேண்டுமென்று எண்ணினன். ஆனல் அம்மடையர்கள் அவர்களுடைய வழியை எவ்விதம் கை விடுவார்கள் ? கோவிலைக் கட்டின சிற்பிகளையே தேவர்களென நம்பவேண்டும். அரசன், புரோகிதன், தச்சன் முதலானவர்கள் அச்சமயத்தில் இறப்பதில்லை. அம்மூவர்களும் அங்கு நன்ருகப் பிரசன்னமாயிருக்கிருர்கள். இவர்கள் தங்களை விடத்தாழ்ந்தவர்களுக்கு அதிக உபத்திரவம் கொடுத்ததினுல் அவர்கள் இவர்களுக்குப் பாஷாணம் அளித்திருக்கக் கூடும். மூர்த்தியினுடைய நடுவில் ஒரு பொந்து இருக்கிறது. அதில் தங்க சம்படத்தில் ஒரு சாலிக்கிராமம் வைத்திருக்கிருர்கள். இதைப் பிரதி தினமும் கழுவின ஜலத்தைப் புண்ய நீராகக் கருதுகிருர்கள். இரவில் மூர்த்தியின்மேல் அவர்கள் விஷத்தின் சத்தைத் தெடவுகிருர்கள். அதைக் கழுவின ஜலத்தை மூவரும் அருந்தின பின் உயிர் துறக்கிருர்கள். அப்பொழுது இப்பெருந்தீனிக்காரர்கள் ஜகந்நாதர் தன்னுடைய சரீரத்தைக் கழற்றுங் காலத்தில் மூன்று பக்தர்களையும் கூடவே இழுத்துக் கொண்டு விட்டார் என்ற கற்பனையை உண்டு பண்ணி விட்டார்கள். இவ்விதக் கட்டுரைகள் பணத்தை அபகரிப்பதற்காகவே செய்யப்பட்டுள்ளன.

இராமேசுவரம்.

வினு :—இராமேசுவரத்தில் கங்கை ஜலம் அதின்பேரில் விழும்பொழுது லிங்கம் பெரியதாகின்றதே. அது பொய்யா என்ன?

விடை :—ஆமாம் அது பொய்யே. பகல்காலத்திலும் ஆலயத்தில் இருள் சூழ்ந்திருப்பதினுல் இரவும் பகலும் விளக்கு ஏற்றிவைக்க வேண்டியதாயிருக்கிறது. ஜலதாரை விழும்பொழுது மின்னலையொத்த பிம்பம் தண்ணீரில் தெரிகிறது. இதைத்தவிர்த்து வேறு ஒன்றும் அங்கு கிடையாது. கல் பெரியதாகிறதில்லை. சிறிதும் ஆகிறதில்லை. அதிலிருக்கிறவண்ணமே தான் இருக்கிறது. இம்மாதிரியான மோசடிகளினுல் புத்தியில்லாதவர்களை ஏமாற்றுகிருர்கள்.

வினு :—ராமேச்வரம் ராமச்சந்திரரால் கட்டப்பட்டதே. மூர்த்தி பூஜை வேதவிரோதமானுல் ராமச்சந்திரர் ஏன் மூர்த்திஸ்தாபனஞ்செய்யவேண்டும்? வால்மீகி ஏன் அதை ராமாயணத்தில் கூறவேண்டும்?

விடை :—ராமசந்திருடைய காலத்தில் லிங்கத்தினுடைய அடையாளங் கூட கிடையாது. தட்சிணதேசத்தில் ராமன் என்றபெயருள்ள அரசன்

லிங்கத்தின் பெயரால் ராமேச்வரம் என்று ஆலயத்தை அழைத்தான். சீதையை அழைத்துக்கொண்டு ஹனுமான் முதலானவர்களுடன் ராமர் ஆகாயமார்க்கமாய் கப்பலில் உட்கார்ந்துகொண்டு இலங்கையிலிருந்து அயோத்திக்குத் திரும்பி வருங்காலத்தில் சீதையினிடம் சொன்னதாவது.

अत्र पूर्वं महादेवः प्रसादमकरोद्विभुः ।
सेतुबन्ध इति ख्यतम् ॥ வால்மீகி. லங்காகாண்டம், ஸ. 128, சு. 20.

ஹே! சீதே!! உனது பிரிவாற்றாமையினால் நாங்கள் வியாகூலமடைந்து திரிந்துகொண்டிருந்தோம். அப்பொழுது இங்கு நான்கு மாதமிருந்தோம். எங்கும் பிரகாசமாய் தேவர்களுக்கெல்லாம் தேவராய் பரமாத்மாவாயிருக்கிற பரமேச்வரனைத்தியானித்தோம். அவருடைய கிருபையினால் எங்களுக்குத் தேவையான யுத்தசாமான்கள் யாவுங்கிடைத்தன. இச்சேதுவை நாங்களே கட்டி இலங்கைக்குவந்து ராவணனை யடித்து உன்னை எடுத்துவருகிறோம்'' இதைத்தவிர்த்து வேறொன்றும் வால்மீகி எழுதவில்லை.

தட்சிணம்.

रङ्ग हैकालियाकन्त को । जिसने हुक्का पिलाया सन्त को ॥

வினா :—தட்சிணத்தில் **காலியாகாந்தம்** என்னும் விக்கிரகமிருக்கிறது. அது இன்றைக்கும் நெருப்புப்புகை விடுகிறது. விக்கிரக ஆராதனை பொய்யானால் இதுவும் பொய்யாகாதா?

விடை :—பொய்யே. இதெல்லாம் போப்லீலைகளே. விக்கிரகத்தின்வாய் ஆழமாயிருந்து அதிலிருந்து ஒருகுழாய் சுவரின்மார்க்கமாய் அடுத்தவீட்டிற்குள்ளே போகலாம். ஹுக்கா தயாரித்து, அதிலிருந்து குழாயை விக்கிரகத்தின் வாயில் வைத்தவுடன் திரையை இழுத்து மறைத்துவிட்டு வெளியே வருகிறான். உள்ளே யிருக்கிறவன் புகைக்குடிக்கிறான். சலசலசப்தம் ஹுக்காவிலுண்டாகிறது. விக்கிரகத்தின் வாய் மூக்கு இவைகளின் வாயிலாக பின்னால் பிணைத்திருக்கும் குழாய் மூலமாய் புகையும், ஆவியும் வெளிவருகிறது. அக்காலத்தில் சந்தேகமன்னியில் பலருடைய பணத்தை அபகரிப்பார்கள்

துவாரகை.

வினா :—பாருங்கள்! **டாகோர் விக்கிரகம்** துவாரகையில் பக்தன் ஒருவனுடன் போகவில்லையா? விக்கிரகம் அதிகபாரமுள்ளதாகவிருந்தபொழுதிலும் இரண்டரை குண்டுமணித்தங்கத்திற்குச்சரியாக இடைஇருந்தது. இது அற்புதமல்லவா?

விடை :—இல்லை. பக்தன் விக்கிரத்தைத் திருடிக்கொண்டுபோயிருக்க வேண்டும். இரண்டரை துலாம் எடையுள்ள தங்கத்தாளிருக்கிறதென்ற கயற்றைக்கஞ்சா மயக்கத்திலுள்ளவர்கள் திரித்துவிட்டனர்.

சோமநாதபுரம்.

வினு:—சோமநாதர் பூமிக்குமேல் காற்றில் நின்றுகொண்டிருந்தார். இது
பெரும் அதிசயமல்லவா? பொய்யாகுமா!

விடை:—சந்தேகமா! பொய்யே!! விக்கிரகத்தின் மேலும்கீழும், மின்சார
சக்தியுள்ள கற்கள் இருந்தன. அவைமேலுங் கீழுமிருந்தபடியினுல் விக்கிர
கம் நடுநிலைவகித்திருந்தது. மாமூதுகஜினி ஆலயத்தின்பேரில் படையெடுத்த
காலத்தில்அதைபூமிக்குச்சமமாக்கி பூசாரிகளையும் பக்தர்களையும் கடுங்கஷ்டத்
திற்கு ஆளாக்கினுன். 10,000 மனிதர்களைக்கொண்டு லட்சக்கணக்கானவர்களை
த்தோற்கடித்தான். நல்லஅற்புதமே! போப் பூசாரிகள் கடவுளைப் பூஜித்து வண
ங்கி வேண்டிக்கொண்டு சொன்னதாவது "ஏ! மகாதேவனே!! இம்மிலேச்சனை நீர்
அடித்து எங்களைக் காப்பாற்றுவீர்" சீடர்களான இராஜர்களுக்கு அவர்கள் "நீங்
கள் கவலையற்று இருங்கள். மகாதேவன் பைரவரையாவது அல்லது வீரபத்திர
ரையாவது அனுப்பிக்கொடுப்பார். அவர்கள் சகல மிலேச்சர்களையும் அடித்து
கண்களைக் குருடாக்கிவிடுவார்கள். இப்பொழுதே எங்களுக்குப் பிரசன்னமாகி
ஹனுமான் துர்கா பைரவ முதலானவர்கள் கனவில் வேண்டிய சகலத்தையும்
செய்வோமென்று சொன்னதாகச் சொல்லுவார்கள். ஒன்றுமறியாத இராஜர்
கள் போப்புகள் சொல்லுவதைநம்பி படையெடுப்பவனை எதிர்க்காமலிருந்
தார்கள். ஜோசியமறிந்த பலபோப்புகளில் ஒருவன் இப்பொழுது உங்களுடைய
சண்டைக்கு நல்லகாலமில்லை என்றும், வேருருவன் எட்டாம் மடத்தில் சந்தி
ரன் என்றும், மற்றும் ஒருவன் யோகினி எதிரில் காணப்படுகிறுள் என்றும்,
சொல்லுவன். இவ்விதபொய் வார்த்தைகளினுல் அவர்களைதப்பு வழிகளில்
திருப்பினுகள். மிலேச்சர்களுடைய படையைமுற்றுகைசெய்த காலத்தில்
கஷ்டத்திருந்து தப்பித்துக்கொள்ளமுயன்றார்கள். நூற்றுக்கணக்கான பூசாரி
களும் அவருடைய சீடர்களும் அகப்பட்டுக்கொண்டார்கள். பூசாரிகள் அஞ்ச
விபந்தம்செய்துகொண்டு ரூ 30,000,000, ஈடுகொடுப்பதாகவும் கோவிலையும்
விக்கிரகத்தையும் விட்டுவிடும்படியாகவும் வேண்ட முகம்மதியர்களோ தாங்கள்
விக்கிர ஆராதனைக்காரர்களில்லை, விக்கிரகங்களை உடைக்கிறவர்களே என்று
சொல்லி அதை ஒத்துக்கொள்ளாமல் ஆலயத்தை நாசம்செய்யவாரம்பித்தார்
கள். டிக்கப்பட்டு கூரை கீழேவிழுந்தவுடன் மின்சாரக் கல்லும் நழுவிக் கீழே
விழுவ விக்கிரகமும் விழுந்தது. அதை உடைத்துப் பார்த்தபொழுது
ரூ 8,00,000,00 பெருமான இரத்தனங்களிருந்தது. போப் பூசாரிகளை
க்கசையடித்தபொழுது அநேகார்கள். பொக்கிஷம் எங்கிருக்கிறதென்று கேட்க்க
தண்டனைக்குப்பயந்து இருக்குமிடத்தைத் தெரிவித்தனர். அவைகளைக்
கொள்ளையடித்து அவரையும் அவர்களுடைய பக்தர்களையும் அடிமைகளாக்கிக்
கொண்டு தானியங்களை அறுக்கவும், புல்வெட்டவும், மலமூத்திரங்களைக் கழுவ
வும், உபயோகப்படுத்திக்கொண்டு, வருத்ததானியங்களைச் சாப்பிடவுங் கொடு
த்தார்கள். அந்தோ!! கல் பூஜைசெய்தும் ஏன் அவர்கள் நாசமடையவேண்
டும்? பரமேச்வரனுடைய பூஜையினுல் மிலேச்சர்களை ஓடச்செய்து நாசஞ்
செய்திருக்கலாமே!! பல விக்கிரகங்களுக்குப் பதிலாக சூரவீரபுருஷர்களைப்

பூஜைசெய்திருந்தால் அவர்களிடமிருந்து எவ்வளவு உதவி கிடைத்திருக்கும்? ஆசாரிகள் கற்களை ஆணையுடன்பூஜைசெய்தும் ஒருகல்லாவது அவைகளிருந்த விடத்தைவிட்டு விலகி படைஎடுக்கிற ஒருவன் தலையில் விழுந்து உடைக்காமலிருந்தது. விக்கிரகத்திற்குச் சரியாய் வீரபுருஷன் ஒருவனைப் பூஜைசெய்திருந்தால் அவன் தன்னுடைய வேலையாட்களைக் காப்பாற்றி சத்துருக்களை முறியடித்திருப்பான்.

நர்ஸீயுடைய உண்டியல்.

வினா:—துவாரகையிலுள்ள ரஞ்சோட் (ஸ்ரீகிருஷ்ணனின் மற்றொரு பெயர்) நர்ஸீமேதா விற்கு உண்டியல் பத்திரம் அளித்து கடன்களைத் திருப்பிக்கொடுக்கச்செய்தார். இவைகள் பொய்யா?

விடை:—யாராவது சாவகாரி ரூபாயைக் கொடுத்து கடனைத்தீர்த்திருக்க வேண்டும். வேறுயாராவது ஸ்ரீகிருஷ்ணன் உண்டியலைக்கொடுத்தான் என்று திருட்டுத்தனம செய்திருக்கவேண்டும். 1914 விக்கிரக சகாப்தத்தில் (1858ம் ஆண்டில்) ஆங்கிலேயர்கள் பீரங்கிப் படையைக்கொண்டு ஆலயத்தை விக்கிரகங்களுடன்கூட நாசஞ்செய்தார்களே. அப்பொழுது விக்கிரகம் எங்குசென்றிருந்தது? பகேர்கள் அவர்களுக்குள்ள வீரத்தன்மையுடன்கூட சண்டைசெய்து சத்துருக்களையடித்தார்கள். விக்கிரகங்கள் ஏன் ஒருவரின் காலைகூட உடைக்கவில்லை? ஸ்ரீகிஷ்ணனைப்போன்ற ஒருவரிருந்திருந்தால்கூட அவர்களைத் தோற்கடித்து ஓடச்செய்திருக்கலாம். தங்களைக் காப்பாற்றுபவர்களே அடிபடும்பொழுது இவர்களை ஏன் அடிக்கக்கூடாது?

ஜ்வாலாமுகி

வினா—ஜ்வலாமுகி பிரத்தியட்சமான தெய்வமாச்சுதே. சலவையுடன் சாப்பிடுகிறாள். நைவேத்தியம் அளித்தால் பாதியை உண்டு மிகுதியான பாதியைத் தொடாமல் அப்படியே விட்டுவிடுகிறாள். முஸ்லீம் சக்கரவர்த்திகள் அதை அணைக்க அதன் பேரில் ஜலதாரையையும் அதை அடக்க இரும்புப் பட்டைகளையும் அடித்தார்கள். ஆயினும் ஜ்வாலை தணியவில்லை. ஹிங்கலாஜ் தேவியும் நடு நிசியில் குதிரையின்மேல் சவாரி செய்வது காணப்படுகிறது. உள்ளே கர்ச்சிப்பதும் கேழ்க்கிறது. சந்திர கூபம் (சந்திரனுக்கு வேண்டிய கிணறு) பேசுகிறது. யோனிதந்திரத்திலிருந்து வெளி வந்தவர்களுக்குப் மறு பிறப்பு கிடையாது. டேம்ரா அணிந்து கொள்ளுவதினால் பெரியவனாவான். ஹிங்கலாஜ் போகாதவன் பாதி பெரியவனே. இவைகளெல்லாம் நம்பக்கூடாததா?

விடை:—இல்லை. ஜ்வாலாமுகி என்று சொல்லும்படியான எரி மலையிலிருந்து நெருப்பு வெளிவருகிறது. பூசாரிகளுடைய லீலை அங்கு வெகு விநோதமானது. உருகுகிறநெய்யுள்ள கரண்டியை தீயின்பேரில் கொண்டுபோனால் அதில் உடனே தீப்பிடிக்கிறது. தீயிலிருந்து தூரமாகக் கொண்டுபோய் விட்டால் அது அணைந்து விடுகிறது. கொஞ்சம் எரிந்து மீதியானது அப்படி

யே கரண்டியிலிருக்கிறது. இவ்விதமே ஜுவாலாமுகியிலும் நடக்கிறது. அக்னி ஜுவாலை சகலத்தையும் எரித்து விடுவது போலவும் காட்டுத்தீ வீட்டுத்தீ சகலத்தையும் எரித்து விடுவது போலவும் ஜுவாலாமுகியிலுள்ள நெருப்பு எல்லாவற்றையும் எரித்து விடுகிறது. இதில் அற்புதம் ஒன்று மில்லை. ஹிங்கலாஜில் சாவாரி செய்கிற தேவியொன்றையும் காணுவதற்கில்லை. வேறு ஒன்றுங்கிடையாது. ஆலயம் ஒன்று, ஜலாசயம் ஒன்று, இங்கு மங்கும் சில தண்ணீர் குழாய்கள் இவைகளே காணப்படுகின்றன. போப்க்களினுடைய பித்தலாட்டத்தைத் தவிரவேறென்றும் அங்கு கிடையாது. அடியிலிருந்து கொப்பளம் வெளிக்கிளம்பி தண்ணீர் மட்டத்திற்கு மேல் வருகிற சேர் நிறைந்த குட்டை யொன்றிருக்கிறது. ஊற்றில்லை. அதையே சபல யாத்திரை என்கிருர்கள். யாத்திரிகர்களைக் கொள்ளை யடிப்பதற்கென்றே யோனிதந்திரத்தை உண்டுசெய்திருக்கிருர்கள். டும்ரா (ரட்சை) கட்டிக்கொண்டு ஒருவன் பெரியவனுனல் தினந்தோரும் பொதி சுமக்கும் கழுதையும் பெருமையை அடைந்து விடுமே? ஒருவன் உயர, தர்ம காரியங்களைச் செய்யவேண்டும். ரட்சை உயிர்வைத்தராது.

அமிர்தசரஸ்

வினு:—அமிர்தசரஸின் ஜலம் அமிர்தமே. மேருடியின் பாதிப்பழம் இனிமையாயிருக்கிறது. (குர்தாஸ் பூரில்) ஒரு மதில் இருக்கிறது. அதை (ஆட்டும் பொழுது) வளைந்து கொடுக்கிறது. ஆனுல் உடைந்து போகிறதில்லை. ரேவால்சரத்தில் மலைகள் நீரில் மிதக்கின்றன. அமரநாதத்தில் லிங்கங்கள் தாணுகவே உண்டாகின்றன. (அநேகம்) பிரஜைகள் ஹிமாயல மலையிலிருந்து வருவதும் அங்கிருந்து திரும்பிப்போவதும் தெரியவருகிறது. இவைக்ள் நம்பகூடாதவைகளா?

விடை:—ஆம். யோக்கியதையற்றதே. பெயருக்கு மாத்திரம் அமிர்தசரஸ் (அமிர்த-அமிர்தம் சரஸ்-ஏரி), என்றுள்ளதே தவிர, உண்மையானதல்ல. காடாக விருந்தகாலத்தில் அதனுடைய ஜலம் நன்ருக விருந்தது. ஆகையினுலேயே அதற்குப் பெயர் அமிர்தத் தண்ணீர் என்றிருந்தது. அது உண்மையான அமிர்தமாயிருந்தால் அங்கு எவரும் இறந்து போகக் கூடாதே. (அசைத்தால்) வளைந்து கீழே விழுாமலிருக்கும் வண்ணம் (குர்தாஸ் பூர்) மதில்ச் சுவரைக் கட்டியிருக்க வேண்டும். மேருடி இனிமையாயிருப்பது தாமரைகளின் சேர்க்கையாலேயே யல்லவோ? அது பித்தலாட்டமாகவே யிருக்கவேண்டும். ரேவால் சரத்தில் மலைகள் மிதப்பதில் ஏதாவது இயந்திர சூழ்ச்சி யிருக்கவேண்டும். புருக்கள் பழகினதாயிருந்து மலைக்குள் மறைந்திருந்து மனிதர்களால் விடப்படவேண்டும். இம்மாதிரி வழிகளினுல் இப்பாதகர்கள் பாமரஜனங்களுடைய பணத்தைக் கொள்ளையடிக்கிருர்கள்.

ஹரித்துவார்.

வினு:—ஹரித்துவாரம் மோட்சவாசலாகும். ஹரிபடிகளில் ஸ்நானம் செய்வதினுல் பாபங்களிலிருந்து ஒருவன் மீட்கப்படுகிருன். தபோவனத்தில் வசிப்பதினுல் தபஸ்வியாகிருன். கங்கோத்திரத்தில் கோமுகியும் உத்தரகாசியில்

குப்தகாசியும் திருயுகிநாராயணமும் காணப்படுகிறது. **பதரிநாராயணத்தில்** ஆறுமாதபூஜை தேவர்களாலும் ஆறுமாதபூஜை மனிதர்களாலும் செய்யப்படு கிறது. **பசுபதி** எனப்படும் மகாதேவனுடைய முகம் நேபாளத்திலும், குண்டி கேதார்நாதத்திலும், முழங்கால் ஜகந்நாதத்திலும், பாதங்கள் அமரநாதத்தி லும், முறையே இருக்கின்றன. இவைகளைத் தரிசித்து ஸ்நானம் செய்வதினால் முக்தி பெறக்கூடும். கேதாரம் பதிரி இவைகளிலிருந்து சுவர்க்கம் போக வேண்டுமென்றாலும் அப்படியே செய்யலாம். இவைகளைபபற்றி உங்களுடைய எண்ண மென்ன?

விடை :—வடக்கிலுள்ள பாதைவழியாய் போவதற்கு முதல் ஆரம்பம் ஹரித்துவாரம். ஹர்கிபௌடி என்பது சமீபத்திலுள்ள ஸ்நானகுளத்தின் படிக ளின்பெயராகும். உண்மையைச் சொல்லுவோமேயானால் "ஹர்கிபௌடி" (எலு ம்புகளின் படிகளே) ஏனெனில் ஆரியவர்த்தத்திலுள்ள சகலபாகங்களிலிருந்தும் எலும்புகள் அங்கே எறியப்படுகின்றன. அவைகளிலிருந்து அவஸ்தைப்படும் வரையில் பாபம் போகாது. தபோவனம் அப்பொழுதிருக்கலாம். இப்பொழுது அது பிட்சுகவனம். (பிச்சைக்காரர்களுடைய வனமாயிருக்கிறது). தபோ வனத்தில் போயிருப்பதினாலே தபசு உண்டாகாது. தபசு புரிவதினாலேயே தான் தபோநிலையைப்பெறகூடும். பொய்சொல்லுகிற பலகடைக்கார்கள் அங்கு இருக்கிறார்கள். மலைமேலிருந்து (கங்கோத்ரி) விழுகிற ஜலதாரை கங்கை நதியாகிறது. அயோக்கியர்கள் சிலர்யாராவது ஏழைஜனங்களை ஏமாற்றுவதற் காக அதைப்பசுமாட்டு முகத்தைப் போல் மாற்றியிருக்கவேண்டும். அதுவே போப்களினுடைய சுவர்க்கம். உத்திரகாசி முதலான விடங்கள் தியானத்திற்கு நல்லது. ஆனால் பொய்வஞ்சகர்கள் அங்கும் அவர்களுடைய கபடத்தைச் செய் கிறார்கள்.

தேவப்பிரயாகை புராணிகர்களுடைய லீலைகளே. அது வீண் பொய்யே, அலகநந்தாவும், கங்கையும் சேரும் இடம் அது. அங்கே தேவதைகள் வசிக் கிறார்கள் என்றவைகளைப் போன்ற நூல்களைப் புராணிகர்கள் நூற்காமல் போனால் யார் இவர்களுக்குப் பணமளிப்பார்கள்? **குப்தகாசி** என்பது கிடை யாது. அதெல்லாம் வெளிப்படையானதே. போப்க்களினுடைய பத்து அல் லது இருபது தலை முறை வரையிலிருக்கலாம். ஆனால் கடந்த மூன்று தலை முறைகளாக அது அங்கு இல்லை. **தப்தகுண்டம்** (சூடான நீர் குளத்தின்) ஜலம் சூடாக விருக்கிறது. ஏனெனில் அதிகமான இயற்கைச் சூடுடைய மலை யின் உள்ளே பாய்ந்து சூடுண்டுவருகிறது. அடுத்தாற் போலிருக்கிற இன்னு மொரு குளத்தின் நீர் குளிர்ச்சியாயிருக்கிற தென்றால் சூடில்லாத மலையின் பாகத்தின் மூலமாய் பாய்ந்து வருகிறது. **கேதர்நாதமிருக்கும்** படியான நாட் டின் வளம் செழித்திருக்கிற படியினால் போப்க்களும் அவர்களுடைய சீடர் களும் அங்கே கற்களின் மேல் ஆலயங்கட்டி விட்டார்கள். அங்கே மகந்து பூசாரி புரோகிதன் முதலானவர்கள் புத்தியைவிட பணம் அதிகமுள்ள குருட ர்களிடமிருந்து அடித்துப்பணம்வாங்கி விஷயசுகங்களினுடைய ஆனந்தங்களை அனுபவிக்கிறார்கள். **பதரி நாராயணத்திலும்** இவ்வித வழிப்பறிக் கொள்ளைக்

காரர்கள் பலபேர்களிருக்கிருர்கள். ராவல்ஜீ தான் அவர்களுடைய தலைவன். ஒருபெண்ணுடன் நில்லாது பல ஸ்திரீகளைப் பெண்டாடுதலைத் தர்மமாகக் கொண்டிருக்கிருன். ஆலயத்தைப் பசுபதி யென்றும் விக்கிரகத்தைப் பஞ்ச மூர்த்தி யென்றும் அழைக்கிருர்கள். இவர்கள் கண்டிக்கப் படாமலிருக்கும் வரையில் இக்கெடுதல்கள் பெருகிக்கொண்டே வரும். அங்கு வசிக்கும் உள்ளூர் ஜனங்கள் தீர்த்தவாசிகளைப்போல் பணத்தைக் கொள்ளையடிக்கிறவர்களில்லை. நாட்டின் இப்பாகமானது வெகு ரமணீயமாகவும் இன்பமாகவுமிருர்கிறது.

விந்தியேசுவரி.

வின:—விந்தியாசல மலைகளில் விந்தியேசுவரி,காளி அஷ்ட புஜீ (எட்டு கரங்களைக் கொண்டவள்) இவைகள் பிரத்தியட்சமாகக் காணப்படுகின்றன. (2) விந்தியேசுவரி ஒரு நாளைக்கு மூன்று உருவங்களை எடுத்துக் கொள்ளுகிருள். அவளுடைய இடத்தில் ஒரு ஈ கூட கிடையாது. (3) பிரயாகை க்ஷேத்திர ராஜன். அங்கு தலை க்ஷவரஞ் செய்து கொள்ளுகிறவர்கள் சித்தியை யடைகிருர்கள். கங்கை யமுனை சங்கமமாகுமிடத்தில் ஸ்நாநம் செய்வதினல் இஷ்ட சித்தியாகிறது. (4) இப்படியே அயோத்தியும் சகல ஜீவராசிகளுடன் கூட சுவர்க்கத்தை யடைந்துளது. (5) சகல தீர்த்தங்களிலும் பெரிது மதுராபுரி. (6) பிருந்தாவனம் கிருஷ்ண லீலைகளினல் புனிதமானது (7) கோவர்த்தன யாத்திரையும் விரஜயாத்திரையும் பெரும் பாக்கியவந்தர்ளுக்கே கிடைக்கும். (8) சூரிய கிரகணத்தில் குருக்ஷேத்திரத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடுகிருர்கள். இவைகளெல்லாம் பொய்யா?

விடை:—நேராகப் பார்வைக்குத் தெரிவது கல்லினல் செய்யப்பட்ட மூன்றுவிக்கிரகங்களே (2)பூசாரிகள்செய்யும்அலங்காரத்தினல்மூன்றுவேளைகளில் மூன்று விதமாகத் தெரிகிறது. ஆயிரக் கணக்கான ஈக்கள் அங்கிருக்கின்றன. இதை நானே நேராகப் பார்த்திருக்கிறேன். (3) ஆதி காலத்தில் பிரயாகையில் அம்பட்டனிருந்திருக்க வேண்டும். அவன் போப்ர்களுக்குப் பணங்கொடுத்தாவது அல்லது தானகவேயாவது க்ஷவரஞ் செய்து கொள்வதின் மகிமையின் சுலோகங்களை எழுதியிருக்கவேண்டும். பிரயாகையில் ஸ்நானஞ் செய்வதினல் சுவர்க்கத்தை யடைந்தால் வீட்டிற்கு யாரும் திரும்பி வரக்கூடாது. மூழ்கிப் போனவனுடைய ஜீவன் ஆகாசவாயுடன் கலந்து திரிந்து பிறப்பை யடைவதையும் எவரும் பார்க்கிறதில்லை. பணப்பேய் பிடித்தவர்களினலேயே தீர்த்த ராஜன் என்றபெயரளிக்கப்பட்டது. ராஜனுக்கும் பிரஜைக்கும் உள்ளசம்பந்தத்தை சடத்தில் விளக்க முடியாதாகையினல் பிரயாகைக்குச் சொல்லுவது மடத்தனமாகும் (4) அயோத்தி நகரம் அதிலுள்ள நாய் கழுதை, தோட்டிகள், பெருக்குகிறவர்கள், கக்கூஸ் முதலியவைகளுடன் கூட மூன்று தடவை சுவர்க்கத்திற்குச் சென்றதென்பது நம்ப முடியாதது. அது ஒரு பொழுதும் சுவர்க்கத்திற்குப் போகவில்லை. அது சுவர்க்கத்திற்குச் சென்றது என்பதானது போப்களினுடைய கற்பனைக்கதையே. இப்பொய் கர்ணபரம்பரையாய் வந்து விட்டது. நேய்மிஷாரண்யம் முதலானவைகளைப்

பற்றினதும் இவ்விதம் கற்பனை செய்யப்பட்டவையே. (5) மூன்று உலகங்களி லிருந்தும் மதுராவை நினைக்கக் கூடாது. அதிலுள்ள மூன்று பிராணி களிலிருந்து மீதி, பூமி ஜலம் ஆகாசம் இவைகளில் கூட இளைப்பாருதல் முடியாது. ஒன்று மதுராவின் பூசாரி. யமுனாநதியில் எவன் ஸ்நானம் செய்யப்போனபொழுதிலும் தன்னுடைய சுங்கத்தை வாங்கிக்கொள்ளவும் அர்த்தமில்லாமல் "எஜமான்! எனக்கு கஞ்சா, மிளகு, லட்டு, முதலியவை களைச் சாப்பிட்டுக்குடித்து எஜமானனுடைய கீர்த்தியைத் துதிக்க பணங்கொ டுங்கள்" என்று உளரவும் செய்கிறார்கள். இரண்டாவது ஆமைகள். நீ என்ன செய்த போதிலும் உன்னைக் கடித்து விடும். ஸ்நானப் படித்துறையில் வெகு கஷ்டத்துடனே ஸ்நானஞ் செய்து அவைகளினுடைய கூட்டத்திலிருந்து தப்பி த்து வரவேண்டும். மூன்றாவது. மரத்தின் பேரிலிருக்கும் சிவந்தவாயை யுடைய குரங்குகள். தலைப்பாகை, தொப்பி, ஆபரணம் எதுவாயிருந்த பொழு திலும் கையிலிருந்து எடுத்துக் கொண்டு போய் மனிதனைக் கடித்து கீழே தள்ளி மறிக்கச்செய்து விடும். இவைகளெல்லாம் அவர்களுடை சீடர்களாலும் ஆராதனைக்குத் தகுதியானவைகளாகக் கருதப்படுகின்றன. மணங்குக் கணக் கான தானியங்கள் பல வகைகளும் சர்க்கரையும் ஆமைக்கும் குரங்கிற்கும் அளித்து பணமும் மிட்டாய்களும் போப்க்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பிருந்தாவனம் முன்காலத்திலப்படியே இருந்திருக்கும். ஆனால் இப்பொழுது சிறுவர்களும் சிறுமிகளும் ஆண்டிகளும் அவர்களுடைய வேலைக்காரிகளும் தங்களுடைய தீய வழக்கங்களைச் செய்யும் படியான வேசிகளுடைய வனமாக வே யிருக்கிறது. இம்மாதிரியாகவே கோவர்த்தனத்தில் தீபாவளி சமயத்திலும் விரஜ யாத்திரைகளிலும் போப்க்கள் யாத்திரிகர்களிடமிருந்து பணம் பிடுங்கு வதிலேயே கைதேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். குருக்ஷேத்திரத்திலும் ஜீவனோ பாயம் இவ்விதமே நடக்கிறது. அவர்கள் நடுவிலுள்ள தார்மிகபுருஷர்கள் போப்லீலைகளிலிருந்து வேறாகவே யிருக்கிறார்கள்.

வினா:—விக்கிரக ஆராதனையும் தீர்த்த யாத்திரைகளும் தொன்று தொட்டு வருகிறதே. அது எப்படி பொய்யாகும்?

விடை:—தொன்று தொட்டது என்று எதைச்சொல்லுகிறீர்கள்? எப்பொழு தும்என்றால் வேதம் பிராம்மணம் ரிஷி முனிகளால் எழுதப்பட்ட நூல்களில் இவைகள் ஏன் காணப்படவில்லை? விக்கிரக ஆராதனை 2000 அல்லது 2500 வருடங்களுக்கு முன் வாமமார்க்கத்தவர்களிடமிருந்தும் சமணர்களிடமிருந் தும் ஆரம்பித்தது. ஆதியில் ஆரியவர்த்தம் இதைக்கொண்டிருக்கவில்லை. தீர்த்த யாத்திரையுங் கிடையாது சமணர்கள் கிர்னார், பாலிடானு, சிகரம், சத்ருஞ்ச யம், ஆபு முதலான க்ஷேத்திரங்களை உண்டு பண்ணினவுடன் அதற்குச் சரி யாக இவர்களும்ஏற்படுத்திக்கொண்டார்கள். இவைகளினுடைய ஆரம்பத்தைக் காணவிரும்புகிறவர்கள் 'பண்டாக்கள்' வைத்திருக்கும் படியான பழைய பதிவு புத்தகங்களையும் பித்தளை சாசனங்களையும் பரிட்சித்து பார்க்கவேண்டும். அப்பொழுது இவைகள் 500 அல்லது 1000 வருஷங்களுக்குள்ளேயே ஏற்ப் பட்டதென்பது தெளிவாகும். ஒரு பத்திரமாவது 1000 வருடங்களுக்கு

முந்தினதாக இராது. ஆகையினல் க்ஷேத்திரங்கள் ஆதிகாலம் தொட்டு இல்லை. தற்காலத்தியதே.

வினு :—ஸ்தலயாத்திரையும் நாமஸ் மரணையும் பொய்யானவையா?

விடை :—பாபங்கள் தீர்ந்து போகுமே யானுல் ஏழைகள் தனவந்தர்களாயிருக்கவேண்டும். குருடர்கள் பார்வையை அடையவேண்டும்; குஷ்ட்டரோகிகளுக்கு ரோகம் தீரவேண்டும்; இராஜ்ஜிய மிழந்த மன்னர்கள் அதைத் திரும்பவும் பெறவேண்டும். இவைகள் நடக்கிறதில்லை. எனவே ஒருவருடைய பாப புண்யங்கள் தீர்க்கக் கூடியதல்ல.

गङ्गागङ्गेति यो ब्रूयाद्योजनानां शतैरपि ।
मुच्यते सर्वपापेभ्यो विष्णुलोकं स गच्छति ॥
हरिर्हरति पापानि हरिरित्यक्षरद्वयम् ॥
प्रातःकाले शिवं दृष्ट्वा निशिपापं विनश्यति ।
आजन्मकृतं मध्याह्ने सायाह्ने सप्तजन्मनाम् ॥

இச்சுலோகங்கள் பேரப்புப் புராணங்களிலிருக்கின்றன. ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலிருந்த பொழுதிலும் கங்கை என்று சொல்லுகிறவர்களுடைய பாபம் நாசமாய் விஷ்ணு உலகமான வைகுண்டத்தை யடைகிருர்கள். (2) 'ஹரி' இவ்விரண்டு எழுத்துக்களின் உச்சரிப்பால் எல்லா பாபங்களும் விலகிப் போகிறது. ராம, கிருஷ்ண, சிவ, பகவதீ, என்று சொல்வதின் மகிமைகளும் அதுவே யாகும் (3) காலையில் சிவலிங்கத்தையாவது அதன் விக்கிரகத்தையாவது தரிசனஞ் செய்கிறதினுல் ராத்திரியில் செய்த பாபங்களும், மத்தியான தரிசினத்தினுல் வாழ் நாள் முழுவதும் செய்த பாபங்களும் சாயந்திர தரிசனத்தினுல் முன் ஏழு பிறப்புப் பாபங்களும் நாசமடைகிறது. இது பொய்யா?

விடை :—பொய் என்பதில் சந்தேகமும் உண்டோ? கங்கா, ஹரி, ராம, கிருஷ்ண, சிவ, பகவதி, இந்நாமஸ்மரணையினுல் பாபம் விலகிப்போகாது, விலகுமேயானுல் எவரும் துக்கமுள்ளவராக யிருக்கமாட்டார்கள். பாபஞ் செய்வதிலிருந்தும் அஞ்சமாட்டார்கள். இக்காரணத்தினுலேயே போப் லீலைகளில் பாபம் அதிகரித்துக் கொண்டேபோகிறது. பாபம்செய்த பிறகு தீர்த்த யாத்திரையும் நாமஸ்மரணையும் செய்தால் அது நிவர்த்தியாகி விடுவதாக இம் மூடர்கள் நம்புகிருர்கள். இந்நம்பிக்கையினுல்பாபத்தைச் செய்து இவ்வுலகிலேயும் பூலோகத்திலேயும் உண்மையான சுகங்களை யநுபவிக்கிறதில்லை. செய்த பாப கர்மங்களின் பலனை யனுபவித்தே, தீரவேண்டும்.

வினு :—ஆனுல் சத்தியமான தீர்த்தமும் நாமஸ் மரணையும் எது?

விடை :—வேதம் முதலிய சத்திய சாத்திரங்களை ஓதுதல் ஓதுவித்தல், தர்ம வித்வான்களுடைய சேர்க்கை, பரோபகாரம், தர்மாசாரணை, யோகாப்பியாசம், ஒருவரை விரோதியாதிருத்தல் கபடமன்னியிலிருத்தல், சத்தியத்தைச் சொல்லல் சத்யத்தைக் ஏற்றல், பிரம்மசரியத்தை ஆதரித்தல் ஆசான் அதிதி மாதா பிதா இவர்களுடைய சேவை, பரமேச்வரனைத் துதித்து

உபாசனை செய்வது, சாந்தி, அடக்கப்பட்ட இந்திரியம், நற்குணம் தர்மத்துடன் கூடின புருஷபிரயத்னம், ஞானம் விஞ்ஞானம் முதலான சுபகுண கர்மங்களினால் துக்கங்களிலிருந்து மாறுவது இவைகளே தீர்த்தங்களாகும். ஜலமும் நிலமும் தீர்த்தங்களாகாது. ஏனெனில்:—

जना यैस्तरन्ति तानि तीर्थानि ।

எதைச் செய்து மனிதன் துக்கங்களிலிருந்து மீறுகிறானோ அதுவே தீர்த்தம். ஜலமும் நிலமும் தாண்டுவதற்கு உபயோகமாகாது, அவைகள் ஒருவனை மூழ்கச் செய்கின்றன. படகுகளும் கப்பல்களுமே தீர்த்தங்களாகும் ஏனெனில் அதைக் கொண்டே சமுத்திரம் முதலானவைகளைத் தாண்டுகிறோம்.

समानतीर्थे वासी ॥ அத. 4. 4. 108.

नमस्तीर्थ्याय च ॥ யஜுர். 16.

எப்பிரம்மசாரிகள் ஆசாரியரிடத்தில் ஒரே புஸ்தகத்தைப் படிக்கிறார்களோ அவர்களே சமான தீர்த்தவாசி. அதாவது ஒரே தீர்த்தத்தை வணங்குகிறவர்கள். வேதாதி சாத்திரம், சத்தியப்பேச்சு முதலான தர்மலக்ஷணங்களினால் சாதுவிற்கு அன்னம் முதலிய பதார்த்தங்களை யளித்து அவரிடமிருந்து வித்தையை அறியவேண்டும். இவைகளுக்கேத் தீர்த்தமென்று பெயர். நாமஸ்மரணைப் யென்றால், பரமேச்வரனை நினைப்பதே. பரமேச்வரா, ஈச்வரர், நியாயஞ் செய்கிறவர், தயாளு, சர்வசக்தி யுள்ளவர், முதலான பெயர்கள் பரமேச்வரனுடைய குணகர்மஸ்வபாவங்களுக்குத் தக்கவாறிருக்கின்றன. எல்லோரையும்விடப்பெரியவராயிருப்பதினால் பிரம்மாவென்றும், ஈச்வரனுக்கெல்லாம் ஈச்வரனாயிருப்பதினால் பரமேச்வரன் சாமர்த்தியத்துடன் கூடினவராயும் நியாயஞ்செய்கிறவராயும் ஒரு பொழுதும் அநியாயம் செய்யாதவராயும் இருக்கிறபடியினால் ஈச்வரன் என்றும், சகலரிடத்திலும் தயை கிருபை இவைகளுடன் கூடினவராயிருப்பதினால் தயாளுவென்றும், தன்சக்தியினாலேயே சகல சராசர உலகசிருஷ்டி ஸ்திதி சம்காரம் செய்கிறபடியினாலும் வேறு யாருடைய உதவியு மில்லாதபடியினால் சர்வ சக்திமான், என்றும், பலவித ஜகத்தினுடைய பொருள்களைச் சிருஷ்டிப்பதினால் பிரம்மா வென்றும், சர்வத்திலும் வியாபித்துக் காப்பாற்றுவதினால் விஷ்ணு வென்றும் சகலருக்கும் தேவரான படியினால் மகாதேவரென்னும், பிரளயத்தைச்செய்வதினால் உருத்திரன் என்றும் நாமங்கள்வழங்கபட்டுள்ளன. ஆகையினால் அவரைப் போலவே மனிதன் இருக்க முயலவேண்டும். அதாவது பெரிய காரியங்களைச் செய்து பெரியவனாகட்டும். சாமர்த்திய முள்ளவைகளில் சாமர்த்தியமாயிருக்கட்டும். அதர்மத்தை ஒருபொழுதும் செய்யாதிருக்கட்டும். எல்லாவற்றிலும் தயையுள்ளவனாக இருக்கட்டும். சகல விதமான சாதனங்களையும் பழகட்டும். கைத்தொழில் வித்தைகளை விருத்தி செய்து பலவிதப் பொருள்களைச் செய்யட்டும். தன்னைப் போலவே மற்றவர்களிடத்தும் நடக்கட்

டும். சகலரையும் காப்பாற்றட்டும் வித்வான்களில் வித்வானுயிருக்கட்டும். துஷ்டகர்மம் செய்கிறவர்களைத் தண்டித்து நல்லவர்களை காப்பாற்றட்டும். இவ்விதம் பரமேச்வரனுடைய குணகர்மத்தின் பிரகாரம் தன்னுடைய குண கர்மஸ்பாவத்தை யறிந்து செய்துகொள்வதே பரமேச்வரனுடைய நாமஸ் மரணையாகும்.

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुरेव परं ब्रह्म तस्मै श्रीगुरवेनमः ॥

வினு:—இம்மாதிரியான குருபூஜைநல்லதா? குருவினுடைய பாதங்களைக் கழுவி அதைக்குடித்து அவருடைய கட்டளைப் பிரகாரம் நடந்து கொள்ளல். லோபியாயிருந்தால் வாமனனுக்குச் சமானமாயும்,கோபமுள்ளவனுயிருந்தால் நரசிம்மனுக்குச் சமானமாயும்,போகமுள்ளவனுயிருந்தால் ராமருக்குச்சமான மாயும் காமமுள்ளவரா யிருந்தால் கிருஷ்ணனுக்குச் சமானமாயும் குருவை முறையே நினைக்கவேண்டியது. குரு என்ன பாபம் செய்த பொழுதிலும் அதைக் கவனிக்ககூடாது. சத்குரு தரிசனத்தில் அசுவமேத பலன் உண்டென்று அறி யவேண்டும். இவை சரியானதாகத் தோன்ற வில்லையா?

விடை:—பிரம்மா, விஷ்ணு, மகேச்வரன், பரப்பிரம்மம் முதலானவை கள் பரமேச்வரனுடைய பெயர். குருமகாத்மியம் குருகீதை இவைகளெல்லாம் பெரிய போப் லீலைகள். தாய், தகப்பன் ஆசாரியன் அதிதி இவர்களே சரியான குரு. இவர்களைச் சேவைசெய்து இவர்களிடமிருந்து வித்தையைக்கற்று விரு த்திசெய்யவேண்டியது சிஷ்யனின்கடமை. ஆனுல் குரு, லோபியாயும் கோப முள்ளவனுயும் இருந்தால் அவனை எப்பொழுதும் விட்டுவிட வேண்டியது. அரசன் சிஷ்யர்களைச் சிட்சிக்கவேண்டும். அதற்கும் வழிப்படா விட்டால் (அர்கியம் பாத்திரம்)பிராணனையும் பழிவாங்க வேண்டும். அதில்தோஷம் ஒன்றும் கிடையாது. குருத்தன்மை எளிதில் சுலபமாக ஏற்பட்டு விடாது. கழுத்தில்மாலை யணிந்து கொள்ளுவதும், நெற்றியில் திலகம் வைத்துக்கொள்ளுவதும் வேத விரோதமான மந்திரங்களை உபதேசஞ்செய் வதும் குருத்தன்மையை யளிக்காது. ஆட்டிடையனைப் போலாகிறுன், இடை யன் பால் முதலானதை உபயோகித்து வியாபாரஞ் செய்ய ஆடுகளை வைத்துக் கொண்டிருப்பது போல் இவர்கள் சீடர்களிடம் பணம் அபகரிப்பதற்காக வைத்துக் கொண்டிக்கிறுர்கள்.

लोभी गुरू लालची चेला, दोनो खेलें दाव ।
भवसागर में डूबते, बठै पथर का नाव ॥

பேராசை பிடித்த குரு—ஆண் பெண்—சீடர்களிருவரும் தனக்குக் கொஞ்சம் கொடுக்கவேண்டுமென்று அறிகிறுன். தன்னுடைய பொய் வார்த் தைகளிலிருந்து தப்புவித்து பாபங்களிலிருந்து காப்பாற்றுவார் என்று சீடன் அறிகிறுன். வஞ்சகர்களிருவரும் உலகத்தினுடைய துக்க சமுத்திரத்தில் கல்லினுல் செய்த படகில் உட்காருகிறவர்கள் முழுகிப்போவது போல்,

முழுகுகிறார்கள். இம்மாதிரி குரு சீடர்களுடைய முகத்திலேயும் விழிக்காதே யுங்கள். அவர்களுடன் எவனும் சேர விரும்பவுங் கூடாது. அவருடன் சேருகிற வர்கள் கஷ்ட சமுத்திரத்தில் மூழ்க்கப்படுகிறார்கள். பொய் நம்பிக்கைகளைப் பரவச் செய்யும், இந்த ஆட்டுபோப் குருவானவர்கள் பூசாரி புராணிகர்களைப் போலவே கபடகாரியங்களைக் கையாளுகிறார்கள். இதெல்லாம் சுயநலங்கோரு கிறவர்களுடைய செயலே. பிறநலம் கோருகிறவர்கள் தனக்குக் கஷ்ட்டம் வந்த பொழுதிலும் உலக உபகாரம் செய்வதிலிருந்து பின் வாங்க மாட்டார்கள். குரு மகான்மியம் குரு கீதை முதலிய இவைகளெல்லாம் கபட நாடகக் குருமார்களால் செய்யப்பட்டவையாகும்.

अष्टादशपुराणनां कर्त्ता सत्यवतीसुतः ॥
इतिहासपुराणाभ्यां वेदार्थमुपबृंयेत् ॥ மகாபாரதம்.
पुराणान्यखिलानि च ॥ மனு.
इतिहासपुराणं पंचमं वेदानां वेदः ॥ சாந்தோ. 7. 1.
दशमेऽहनि किंचित्पुराणमाचक्षीत ॥
पुराणविद्या वेदः ॥

புராண ஆசிரியர்.

(1.) பதினெண் புராணங்களைச் செய்தவர் வியாசமுனிவர். வியாசருடைய வார்த்தைகளை அவசியம் பிரமாணமாக எடுத்துக்கொள்ளவேண்டும். (2) இதிகாசம், மகாபாரதம், 18 புராணங்கள் இவைகளிலிருந்தே வேதார்த்தங்களை அறியவேண்டும். ஏனெனில் இதிகாசப்புராணங்கள் வேதத்தின் பொருளுக்கு ஒத்ததாயிருக்கிறது. (3) பித்ரு கர்மங்களில் புராணம் ஹரிவம்சம் முதலானவைகளுடைய கதையைக் கேழ்க்கவேண்டும். (4) இதிகாச புராணங்கள் ஐந்தாவது வேதங்களாகும். இவ்விதப் பிராமணங்களினால் புராணங்களுடைய பிரமாணமும் புராணங்களுடைய பிராமணத்தினால் விக்கிரக ஆராதனை, தீர்த்தயாத்திரை, இவைகளினுடைய பிரமாணமும் சித்தமாகிறது. ஏனெனில் புராணங்களிலேயே விக்கிர ஆராதனை தீர்த்தயாத்திரை இவைகளுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன. (5) அசுவமேத யாகத்தின் முடிவான பத்து நாட்களில் புராணங்களினுடைய சில கதைகளையாவது கேழ்க்கவேண்டும். (6) புராண வித்தை வேதார்த்தங்களை விளக்குகிறதினால் வேதமே யாகும்.

விடை :—பதினெண் புராணங்களைச் செய்தவராக வியாசரிருந்தால் அவைகளில் இவ்வளவு பொய் கற்பனைகளிராது. ஏனெனில் சாரீரிக சூத்திரம், யோகசூத்திரம், பாஷியம் முதலிய வியாசரால் எழுதப்பட்ட நூற்களைக் காணுவதனால் வியாசர் பெரிய வித்வான் சத்தியவாதி, தார்மிகர், யோகிஎன்று தெளிவாகிறது. அவர் இவ்விதப்பொய் கட்டுரைகளை ஒரு பொழுதும் எழுதியிருக்கமாட்டார். சாம்பிரதாய பரஸ்பர விரோதமானவர்களே பாகவதம் முதலான மதி கெட்ட மாறுபாடான புஸ்தகங்களை எழுதியிருத்தல் வேண்டும்.

அ[illegible]களில் வியாசருடைய குணம் ஒரு துளியேனும் கிடையாது. வேதசாத்திர வி[illegible]ம் அசத்தியவாதத்தையும் எழுதுவது வியாசருக்குச் சமானமான வித்வான்களுடைய வேலையாகாது. இவைகள் சண்டையை விரும்பும் தன்னலங்கோருகிறவர்களினுடையது. இவை இதிகாசம் புராணமாகாது.

ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथानाराशंसीरिति ॥

இது பிராம்மணத்தினுடையவும் சூத்திரத்தினுடையவும் வசனம். ஐத்ரேயம், சதபதம், சாம, கோபத பிராம்மண கிரந்தங்களுக்கு இதிகாசம் புராணம் கல்பம் காதா நாரசம்சி எனப்பெயர்கள் ஐந்து. (இதிகாச) ஜனக யாக்ஞயவல்கிய சம்வாதத்தைப் போன்றது. (புராணம்) ஜகத்துற்பத்தி முதலியவைகளுடைய வர்ணனை (கல்பம்) ,வேத விசேஷங்களுடைய அர்த்தத் திருத்தவணம்செய்வது. (காதா), திருஷ்டாந்தங்களைக் கொண்டு விஷயங்களைத் தெளிவாக்குவது .(நாரசம்ஸி),மனிதர்களுடைய—புகழத்தகுந்தது தகாதது--காரியத்தை விரித்துரைத்தல் இவைகளினலேயே வேதார்த்தம் வெளிச்சமாகிறது. ஞானிகளுடையப் புகழைக் கொஞ்சம் கேழ்ப்பதே பித்ருகர்மமாகும். அசுவமேத முடிவிலும் இதையே கேழ்க்கவேண்டும். வியாசரால் செய்யப்பட்ட [illegible] கேழ்ப்பதும் கேழ்க்கச் செய்வதும் அவர் பிறப்பிற்குப் பின்னலேயே முடியும். முனலேலேமுடியாது. வியாசர் பிறப்பதற்கு முந்தியே வேதார்த்தங்களை ஒதியும் ஓதுவித்தும் கேட்டும் கேழ்க்கச்செய்துங் கொண்டிருந்தார்கள். ஆகையால் சகலத்தையும் விட 'பழைய பிராம்மணகிரதங்களே இத்தகுதிகளுக்குச் சரியாயிருக்கின்றன. வீண்தோற்ற முள்ள புதியதும் மதிகெட்ட மாறுபாடானவும் குறைவானவுமான பாகவதம்' சிவபுராணம் முதலிய பொய் தூஷணை செய்யும் புஸ்தகங்கள் இத்தகுதிகளுக்குச் சரியாகாது. வேதங்களை ஓதி வேதார்த்தங்களைப் பரவச் செய்ததினலேயே வேதவியாசர் என்றுபெயர்வந்தது. வட்டம் ஒன்றின் மத்திய ரேகையை வியாசர் என்பார்கள். அதாவது இருக்வேதம் முதல் அதர்வவேதம் வரையிலுள்ள நான்கு வேதங்களைப்படித்திருந்தார். சுகதேவர் ஜைமுனி, முதலானசீடர்களுக்கும் கற்றுக்கொடுத்தார். அவருடைய பிறப்புபெயர் கிருஷ்ணத்வைபாயனர். வியாசர் வேதங்களை ஒன்று கூட்டிரைன்பது சரியானதல்ல. ஏனெனில் அவருடைய தகப்பன் தாதா, அவருடையபிதா முதலியவர்களான பராசரர்,சக்தி, வசிஷ்ட்டர், பிரம்மா முதலான வர்கள் நான்கு வேதங்களையும் படித்திருந்தார்கள். அவர் வேத சங்கிரக்காரராயிருந்தால் இவைகள் எப்படி நடந்திருக்கக்கூடும்?

வினு:—புராணங்களிலுள்ளவைகளெல்லாம் பொய்யா அல்லது கொஞ்சமேனும் உண்மையுண்டோ?

விடை —பொய் அதிக மிருக்கின்றன. தப்புக்களை மறைப்பதற்கானவைகளில் உண்மை யிருக்கின்றன. இருக்கிற உண்மை யெல்லாம் வேதம் முதலிய சத்தியசாத்திரங்களிலிருந்தும், பொய் எல்லாம் போப்க்களினுடைய யோசனையிலிருந்துமே. உதாரணமாக சிவபுராணத்தில் சைவர்கள் சிவனைப் பரமேச்வரனுக நினைத்து விஷ்ணு பிரம்மா இந்திரன் கணேசன் சூரியன் முதலானவர்

களை அவருடைய வேலையாட்களாகக் கருதுகிறார்கள். விஷ்ணு புராணத்தில வைணவர்கள் விஷ்ணுவைப் பரமாத்மாவாக நினைத்து சிவன் முதலியவர்களை விஷ்ணுவின் தாசனாக எண்ணுகிறார்கள். தேவிபாகவதத்தில் தேவியைப் பரமேச்வரியாகவும் சிவன் விஷ்ணு முதலியவர்களை அவளுடைய கையாட்களாகவும் செய்திருக்கிறார்கள். ஜனங்களுடைய வைப்புக் கட்டுக்களில்லாமல் போனால் இவைகள் வேறென்னவாகக் கூடும். இவ்வாறான மாறுபாடுகள் ஒரே மனிதனால் செய்யப்பட்டிராது. அதிலேயும் வித்வான்களாலேயா செய்யப்பட்டிருக்கமுடியும்? ஒரு சார்பார் உண்மை யென்றால் மற்றொரு சார்பினர் பொய் யென்கிறார்கள். இரண்டாவது உண்மையானால் மூன்றாவது பொய்யே. இப்படியே முடிவுவரையிலும். ஒவ்வொரு புராணமும் முறையே போற்றும் கர்த்தாவை, மற்ற புராணங்களுடைய கர்தாக்களின், கர்த்தாவாகச் செய்கிறது விஷ்ணு புராணமோ விஷ்ணுவையும், தேவி புராணம் தேவியையும், கணேச காண்டம் கணேசனையும், சூரிய புராணம் சூரியனையும், வாயு புராணம் வாயுவையும் முறையே சொல்லுகின்றன. சிருஷ்ட்டி கர்த்தா இரட்சகன் சம்காரன் இவைகளைச் செய்கிறவனை. எப்படி உற்பத்தி செய்யக்கூடுமென்றும், உற்பத்தி செய்கிறவன் சிருஷ்ட்டிக்குக் காரணமாக ஒரு பொழுதும் ஆக முடியாதென்றும் கேட்டால் வாயடைத்துக் கொண்டுபதில்கூறாமலிருப்பார்கள். சிருஷடி செய்யப்பட்ட பொருள்கள் சிருஷ்டியிலிருந்து தனியாயும் சிருஷ்ட்டிக்குக் காரணமாயும், எப்படி இருக்கக்கூடும்?

சிவபுராணப் பிரகாரம் நான் சிருஷ்டிசெய்யவேண்டும் என்று சிவன் எண்ணினார். உடனே நாராயண என்று சமுத்திரத்தை உண்டுபண்ணினார். அதனுடைய நாபியிலிருந்து ஒரு தாமரைமலரும் அதிலிருந்து பிரம்மாவும் உண்டானார்கள். சமுத்திரத்திலிருந்து கை நிறையஜலமெடுத்து பார்த்துவிட்டு கீழே ஜலத்திலெறியவே நீர்க் குமிழியுண்டாச்சுது. அதிலிருந்து ஒருவர் உண்டானார். அவர் பிரம்மாவுடன் "ஏ பிள்ளாய்சிருஷ்டியை உண்டுபண்ணு" என்று சொன்னார். அதற்கு "நான் உன் பிள்ளையில்லை" யென்று பிரம்மா பதிலளித்தார். "நீதான் என் பிள்ளை" என்றார். இருவருக்கும் தர்க்கம் ஆரம்பமாய் 1000 தேவவருடங்கள் பரியந்தம் ஜலத்தில்சண்டை நடந்தது. அப்பொழுது மகாதேவன் தான் சிருஷ்டிக்கென்று அனுப்பின இருவர்களும் சண்டைசெய்து கொண்டிருப்பதை அறிந்தார். அப்பொழுது அவர்களிருவரிட மிருந்தும் லிங்கம் ஒன்று தோன்றி ஆகாசத்தை நோக்கிற்று. அதைக் காண இவருக்கும் ஆச்சரியமாய் அதனுடை திருமுடியையும் திருவடியையும் காண ஆவலுள்ளவர்களாய் இம்முடிவிற்கு வந்தார்கள். திருமுடியை சீக்கிரமாய் அறிந்துவருகிறவன் தகப்பன் என்றும் கடைசியாய் வருகிறவன் பிள்ளை யென்றும் நிச்சயஞ்செய்து கொண்டார்கள். விஷ்ணுகூர்மாவாதரமெடுத்து கீழேசென்றார். பிரம்மா அன்னபக்ஷி அவதாரமெடுத்து மேலேபறந்தார்.

இருவரும் மனோவேகமாய் சென்றார்கள். 100. தேவ வருடங்கள் சென்றும் திருவடியையும் திருமுடியையும் காணவில்லை. அப்பொழுது கேழே

யிருக்கும் விஷ்ணுவும், மேலேயிருக்கும் பிரம்மாவும் "முன்னால் தெரிந்து கொண்டு போனால் எனக்குப்பிள்ளையாவான்" என யோசித்தார்கள். பிரம்மா இவ்வித ஆழ்ந்த யோசனையிலிருக்குங்கால் ஒரு பசுவும் தாழம்பூவும் மேலேயிருந்து கீழே விழுந்துகொண்டிருந்தது. எங்கிருந்துவருகிறாய் என்று வினவ அவைகள் லிங்கத்தினுடைய திருமுடியிலிருந்து வருகிறோம், ஆயிரம் வருஷமாச்சுது என்றது. பிரம்மா லிங்கத்திற்கு ஆரம்பம் முடிவு உண்டா இல்லையாவென்று கேட்டார். அவைகள் முடிவற்றது என்றது. என் கூடவந்து லிங்கத்தினுடைய முடியில் பால் தாரை வர்ஷிக்கிறதென்றும் பூமாரிபொழிகிறதென்றும் சாட்சிசொன்னால், உங்களுக்கு இளைப்பாறுதல் அளிப்போம்" என்றார். அதற்கு அவைகள் பொய்சாட்சிசொல்ல முடியாதென்றது. பிரம்மா உடனே சினங்கொண்டு "அடா சாட்சியங்கொடுக்காவிடில்இக்கணமே எரித்துச் சாம்பலாக்கி விடுவேன்" என்றார். அவைகளிரண்டும் பயந்து நீங்கள் விரும்புகிற விதமே கூறுவோம் "என்றது. பிறகு எல்லோரும் கீழேவந்தார்கள். விஷ்ணு முன்னமேயே வந்திருந்தார். பிரம்மாவும் வந்து திருவடியைக் கண்டீர்களா வென்று வினவ, நான் காணவில்லை என்றார் விஷ்ணு. உடனே பிரம்மா "நான் பார்த்துவந்திருக்கிறேன்" என்றார். சாட்சியார் என்று விஷ்ணு கேழ்க்கவே பசுவும் புஷ்பமும் நாங்கள் லிங்கத்தின் சிகரத்திலிருந்தோம் என்றது. அப்பொழுது லிங்கத்திலிருந்து ஒரு ஒலி தோன்றி நீ பொய் சொன்னதினால் உன்னுடைய மடலை என்னுடைய அல்லது வேறுதேவர்களுடைய பூஜையில் உலகத்தில் உபயோகிக்க மாட்டார்கள் என்றும், பூஜை செய்கிறவர்களுக்கும் நாசமேற்படும் என்றும்,சபித்தது. பொய்சொன்ன முகமானது மலமாயவிட்டதென்றும் அதனால் மலத்தைச் சாப்பிடவேண்டும் என்றும் *பசுவையும் சபித்தது. நீபொய் சொன்னதினால் உன்னுடைய பூஜையை உலகில் யாரும்செய்யமாட்டார்கள் என்று பிரம்மாவைச் சபித்தது. உண்மையை உரைத்ததினால் எங்கும் பூஜிக்கப்படுவாயென்று விஷ்ணுவைத்துதித்தது. அதன்பிறகு லிங்கத்தைப் பிரம்மாவும் விஷ்ணுவும் துதித்தார்கள். துதிக்கவே சடைமுடியுடன் கூடின ஒருவர் லிங்கத்திலிருந்து வெளிவந்து நான் சிருஷ்டி செய்ய அனுப்பினேன். ஏன் சண்டை செய்து கொண்டிருக்கிறீர்களென்றார் ? சாமான்களன்னியில் சிருஷ்டிசெய்ய முடியாதென்று பிரம்மாவும் விஷ்ணுவுங் குறைகூறினார்கள். அப்பொழுது மகாதேவர் தன்னுடைய சடைமுடியிலிருந்து சாம்பலை எடுத்து இதைக்கொண்டு சிருஷ்டி செய்புங்கள் என்றார்.

சிருஷ்டிதத்துவமும் பஞ்ச பூதங்களும் இல்லாத காலத்தில் பிரம்மா விஷ்ணு மகாதேவனுடைய சரீரம், சமுத்திரம், தாமரை, லிங்கம், பசு, சாம்பல் முதலானவைகள், எங்கிருந்துஉண்டாச்சுதென்று புராணஞ் செய்தவர்களைக்கேழ்க்கவேண்டும் ? அது அவர்களுடைய தாதா வீட்டிலிருந்து வந்ததா ?

பாகவதத்தில் சொல்லும் வண்ணம் விஷ்ணுவினுடைய நாபியிலிருந்து தாமரை, தாமரையிலிருந்து பிரம்மா, பிரம்மாவினுடைய கால்பெருவிரலிலிருந்து

* உன்முகத்தையாரும் வணங்கமாட்டார்கள் காலையே வணங்குவார்கள்.

ஸ்வயம்புவர், இடதுகால் பெருவிரலிலிருந்து ராணிசத்தியரூபி, அவளுடைய நெற்றியிலிருந்து அத்திரி, மரீசி, முதலிய பத்துமக்கள், அவர்களிடமிருந்து பத்துபிரஜாபதிமுறையே உண்டாகி அவர்களுடைய பதின்மூன்றுபெண்களுக்கும் கலியாணம் காசியபருடன் நடந்தேறியது. அவர்களில் திதியிலிருந்து தைத்யனும், தனுவிலிருந்து தானவனும், அதிதியிலிருந்து ஆதித்தியனும், விநிதியிலிருந்து பக்ஷிகளும், கத்ருவினுல் சர்ப்பமும், ஸரமாவினுல் நாய் நரி முதலானவைகளும் இன்னும் மிகுதியான பெண்களிலிருந்து யானை குதிரை, ஒட்டகம், கழுதை, எருமை, புல், முள், மரங்கள் முதலானவைகள் உண்டானதென்றும் சொல்லப்படுகின்றன. சபாஷ்! பாகவதத்தைச்செய்த தொண்டிவிளையாட்டுக்காரர்களே! உங்களிடம் என்னவென்று சொல்வது. இவ்விதப்பொய்வார்த்தைகளை எழுதுவதில் உங்களுக்கு நாணம் தோன்ருமல் போய்விட்டதே. ஸ்திரீ புருஷ ரஜவீரிய சேர்க்கையினுலேயே மானிடப் பிறப்புண்டாகும். பரமேச்வரனுடைய சிருஷ்டித்தன்மைக்கு எதிரான பசு பட்சி சர்ப்பம் முதலானவைகள் எக்காலமும் உண்டாகாது. யானை, ஒட்டகம் சிங்கம், நாய் கழுதை, மரம் செடி, முதலானவைகளைத் தரிக்க ஸ்திரீகளுடைய கர்ப்பத்திற்கு வழியேது? சிங்கம் முதலியவைகளுண்டானவுடன் ஏன் தாய் தந்தைகளை அடித்து விழுங்கவில்லை? மானிடசரீரத்தினுல் பசுபட்சி மரஞ்செடிகள் எவ்விதம் உண்டாகும்? அசம்பாவிதமான இல்லீலைகளினுடைய மாயையில் இதுவரையில் ஜனங்கள் ஏமார்ந்திருந்ததே வருத்தத்திற்கு இடமாயிருக்கிறது. பெருங் குருடர்களான போப்களும் அகக்கண் புறக்கண் இவ்விரண்டும் குருடர்களான அவர்களுடைய சிடர்களும் இப்பொய்கட்டுரைகளை நம்புவதே விந்தை. அவர்கள் மனித பிறப்பா அல்லது வேறு ஏதாவதா? பாகவதம் முதலிய புராணங்களெழுதினவர்கள் கர்ப்பத்திலேயே அல்லது பிறந்தவுடனேயே ஏன் நாசமாயிருக்கக்கூடாது? ஏனெனில் இப்போப்க்கள் பிழைத்திராமலிருந்தால் ஆரியவர்த்தநாடு இருள், துக்கம் இவைகளில் லயப்பட்டிராது.

வினு:—இவைகள் மாறுபட்டதல்ல. எம்மணவாளனுக்குக் கலியாணமோ அம்மணவாளனையே புகழுகிருர்கள். விஷ்ணுவைத்துதிக்குங்கால் விஷ்ணுவையே பரமேச்வரனுகவும், மற்றவர்களைத் தாசனுகவும், சிவகுணங்களைச் சொல்லுங்கால் சிவனைப்பரமாத்மாவாகவும் மிகுதியானவர்களை வேலைக்காரனுகவும், அறிகிருர்கள். பரமேச்வரனுடைய மாயையினுலேயே எல்லாம் செய்யப்படுகிறது. மானிடப்பிறப்பை பரமேச்வரனுல் செய்யமுடியும் பாருங்கள் காரணமன்னியில் தன்னுடைய மாயையைக்கொண்டே சகல சிருஷ்டியையும் செய்திருக்கிருர். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை. வேண்டுமென்று நினைப்பதைச் செய்கிருர்.

விடை:—ஓ! பேதை ஜனங்களே!! கலியாணத்தில் யாருடைய மேன்மையைப்புகழுகிருர்களோ அவனை எல்லோரையும் விட அதிகமாகவாவது அல்லது இதரர்களைவிட இழிவாகவாவது அல்லது தாஷனையாகவாவது அல்லது எல்லோருக்கும் தகப்பனுகவாவது செய்கிறதில்லை. ஏ போப்புகளே இச்சகம் பேசு

கிறவன் சோமாளி இவர்களைவிட அதிகமானது உங்களுடைய பெரும்புரட்டே. நீங்கள் பின்பற்றுகிறவனை எல்லோரையும் விட உயர்ந்தவனுயும் விரோதமானவனைத் தாழ்ந்தவனுயும் செய்வீர்களானுல் சத்தியத்தினுலும் தர்மத்தினுலும் உங்களுக்குயாது பிரயோஜனம்? நீங்கள் சுய காரியப்புலிகளே! மனிதனிடத்திலே மாயை குடிக்கொண்டிருக்கிறது. வஞ்சகம், பேசுகிறவன் கபடமுள்ளவன், இவர்களையே மாயாவி என்பார்கள். பரமேச்வரனிடத்தில் பொய் வஞ்சகம், முதலான தோஷங்களில்லாதபடியினுல் அவரை மாயாவி எனமுடியாது. ஆதி சிருஷ்டியில் காசியபரும் அவருடைய மனைவிக்கும் பசு பட்சி சர்ப்பம் மரஞ்செடி முதவியவைகள் உண்டானுல் இக்காலத்திலும் அவ்விதப் பிறப்புகள் ஏன் உண்டாகிறதில்லை? சிருஷ்டி தன்மையைப்பற்றி முன்சொன்னதே (எட்டாவது அத்தியாயம்) சரியானது. அவைகளைத் தப்பர்த்தம் பண்ணினதினுலேயே போப்க்கள் மேற் கண்டபிதற்றலுக்கு ஆளானுர்கள்.

सतपतः. 7. 5. 1. 5.

तस्मात् काश्यस्य इमाः प्रजाः ॥

சதபதத்தல் சகல சிருஷ்ட்டியையும் காச்யபரே உண்டுபண்ணினுரென்றிருக்கிறது.

நிருக்தம். 2.2.

कश्यपः कस्मात् पश्यको भवतीति ॥

சிருஷ்ட்டி கர்த்தாவாகிய பரமேச்வரனுக்குக் காசியபர் என்றபெயர் இக் காரணத்தினுல் வந்தது.

पश्यतीति पश्यः पश्य एव पश्यकः ।

எவர் பிரளய மன்னியில் சராசர ஜகத்திலுள்ள சகல ஜீவராசிகள் இவைகளுடைய கர்மம் வித்தை முதலானவைகளை உள்ளவாரே பார்க்கிருரோ அவரே, பஸ்யகர், பார்க்கிறவர். "அத்யாந்தவிபர்யஸ்சா" இம்மகாபாஷ்யத்தின் பிரகாரம் முதலெழுத்துகடைசியிலேயும் கடைசிஎழுத்துமுதலிலேயும் மாறிப் போவதினுல்: "பஸ்யக" என்பதைக் "கஸ்யப" என்று செய்தார்கள். இதனுடைய பொருளை அறியமாட்டாமல் கஞ்சா கஷாயத்தைக் குடித்து சிருஷ்ட்டித் தன்மைக்குத்தர்க்கம் பண்ணுவதிலேயே வீணுக்கிஞர்கள்.

மார்க்கண்டேய புராணமும் சிருஷ்டியும்.

மார்க்கண்டேய புராணத்தினுடைய துர்க்காபாடத்தில் கூறும் வண்ணம் தேவர்களுடைய சரீரத்திலிருந்து ஒரு ஒளி உண்டாய், அதிலிருந்து ஒரு தேவி உண்டானுள். அவளே மகிஷாசுரனை யடித்தாள். இரக்தபீஜனுடைய சரீரத்திலிருந்து ஒருதுளி ரத்தம் பூமியில் விழுந்ததினுல் அவனுக்குச் சரியான இரத்தபீஜர்கள் உண்டானுர்கள். அதிலிருந்து உலகம் முழுவதும் இரத்தபீஜர்கள்நிறைந்து விட்டார்கள். இரத்தநதியும் ஓடிற்று. இம்மாதிரியான காப் பூனைக் கதைகளினுல் இப்புத்தகம் நிறைந்திருக்கிறது. உலகமுழுவதும் ரத்தபீஜர்கள் நிறைந்துபோனுல் தேவி, அவளுடையசிங்கம், சேனை, இவைகளெல்லாம் எங்கேயிருந்தது? தேவியிலிருந்து ரத்தபீஜன் தூரத்திலிருந்தானென்ருல் சகல உலகம்முழுவதிலும் அவர்கள் நிறைந்திருக்க முடியாது? அப்படி நிறைந்திருக்குமே

யானால் பசு, பட்சி, மனிதன், மிருகம், முதலான அறிவுள்ளவைகளும் நிலம் முதலியவைகளெல்லாம் எங்கேயிருந்தது?

ஸ்ரீமத்பாகவதம் என்று சொல்லப்பட்டதினுடைய லீலையைக் கூறுவோம். கேளுங்கள் பிரம்மாவிற்கு நாராயணன் உபதேசித்ததாவது.

ज्ञानं परमगुह्यं मे यद्विज्ञानसमन्वितम् ।
सरहस्यं तदङ्गञ्च गृहाण गदितं मया ॥ பாக. ஸ்க 2. அத் 60. சுலோ. 30.

ஏ" பிரம்மாவே! ரகசியமாக தர்மார்த்தகாமமோட்சத்தின் பாகமாகிய மறைபொருளான ஞானம் விஞ்ஞானம் இவைகளை என்னிடமிருந்து அறி" ஞானத்தினுடைய குணத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியதவசியமில்லை. மறைபொருள் ஞானத்திற்கு மறுபடியும் இரகசியம் என்று சொல்லுவது கூறியது கூறுதலாகிறது. முதல் சுலோகமே அர்த்தமில்லாமல் கோணலாயிருக்கும் பொழுது முற்றுங்கோணலாய் ஏனிருக்கக்கூடாது? நாராயணன் பிரம்மாவிற்கு வரம் அளித்ததாவது.

भवान् कल्पविकल्पेषु न विमुह्यति कर्हिचित् ॥ பாக 2. 9. 36.

சிருஷ்ட்டி சக்கரத்திலும் பிரளயநாசத்திலும் ஏய்க்கப்படமாட்டாய் என்றார். இம்மாதிரி எழுதி மறுபடியும் பத்தாவது ஸ்கந்தத்தில் மோகத்திலகப்பட்டு செங்கன்றைத் திருடினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டிலும் ஒன்று உண்மையாகவும் மற்றொன்று பொய்யாகவும் இருக்கவேண்டும். வைகுண்டத்தில் ஆசை, பொறாமை, கோபம், பேராசை துக்கம்கிடையாது. இருந்தும் சனகசகோதரர்கள் வைகுண்டவாயிலில் கோபம் செய்துகொள்ளுவானேன்? கோபமுள்ளவிடமாக சுவர்க்கம் எப்படியிருக்கும்? ஜயவிஜயர்கள் வாயிற்காப்போர்களாயிருந்து எஜமானனுடைய கட்டளையைக் காப்பாற்ற வேண்டியவர்களானதினால் சனகசகோதரர்களைத்தடுத்தது எவ்விதம் தப்பாகும்? அவர்கள் குற்றமற்றவர்களானதினால் அவர்களைப் புகழவும்முடியாது. இகழவும் முடியாது. ஆனால்பூமியில் விழுந்துவிடு என்று சபித்தார்கள். அங்கு பூமியில்லாமல் ஆகாசம் வாயு, அக்கினி, ஜலம், இவைகளே இருந்ததென்று இவர்கள் விழுந்ததிலிருந்து வெளிச்சமாகிறது. நிலத்தினுடைய ஆதரவன்னியில் வாசற்படி நந்தவனம், முதலானவைகள் எப்படியிருந்தது? ஜயவிஜயர்கள் சனகசகோதரர்களை வேண்டிக்கொண்டதாவது. ஓ! பிரபுவே நாங்கள் திரும்பவும் வைகுண்டத்திற்கு எப்பொழுது வரக்கூடும். அதற்கு அவர்கள் நேசப்பான்மையுடன் நாராயணனுக்குப் பக்திபாராட்டினால் ஏழாவது பிறப்பிலும், விரோதப்பான்மையுடன் பக்திபாராட்டினால் மூன்றாவது பிறப்பிலும் வைகுண்டத்தையடைவீர்களென்றார். இதில் யோசனை செய்ய வேண்டியதன்னவெனில், ஜயவிஜயர்கள் நாராயணருடைய சேவகர்கள். அவர்களைக்காப்பாற்றி உதவிசெய்ய வேண்டியது நாராயணனுக்கு ஏற்பட்டவேலை. காரணமன்னியில் தன் சேவகர்களுக்குத்தண்டனையும் துக்கத்தையுங்கொடுக்குங்காலத்தில் எஜமானன் அவர்களைத்தண்டிக்காவிடில் அவ்வேலையாட்களை எல்லோரும் துன்புறுத்துவார்கள். ஜய

விஜயர்களை மரியாதைசெய்து சனக சகோதரர்களுக்கு தக்கசிக்ஷை அளித்திருக்கவேண்டும். ஏனெனில் உள்ளே வர ஏன் பிடிவாதம்செய்யவேண்டும்? வேலையாட்களுடன் ஏன் வீண் சண்டை செய்து சாபத்தையளிக்கவேண்டும். அவர்களுக்குப்பதிலாக சாபத்தையளித்து சனகசகோதரர்களை பூமியில் தள்ளியிருக்கவேண்டும். நாராயணனுடைய வாசத்திலேயே இவ்வளவு ஊழல்களிருக்குமேயானால் அவருடைய சேவர்களென்று அழைத்துக்கொள்ளும் வைணவர்கள் கஷ்டப்படுவது கொஞ்சமேயாகும். பிறகு அவர்கள் ஹிரணியாக்ஷன் ஹிரணியகசிபன் என்பவர்களாகப் பிறந்தார்கள். அவர்களில் ஹிரண்யாட்சனை வராகாவதாரத்தில் கொன்றார். அக்கதையின் விவரமாவது.

பூலோகத்தைப் பாயாகச் சுற்றி தலையணிவைத்துக் கொண்டுத் தூங்கினான். விஷ்ணு வராகாவதாரமெடுத்து தன் கொம்புகளினால் அவன் தலையின் கீழிருந்து பூமியைத்தூக்கினார். அவன் விழித்தெழுந்ததும் இருவருக்கும் சண்டை உண்டாகி அதில்வராகம் ஹிரண்யாக்ஷனைக் கொன்று விட்டது. பூமி உருண்டை வடிவமானதா அல்லது பாயைப்போல் மட்டமானதா வென்று இவர்களை வினவவேண்டும். அவர்களால் பதில் சொல்லமுடியாது. ஏனெனில் புராணிகர்கள் பூகோள சாஸ்திரவிரோதிகள். பூமியைப் பாயாகச் சுற்றித்தலையில் எடுத்துக்கொண்டு போனகாலத்தில் அவன் எதின் பேரில் தூங்கினான்? வராகம் எதன்பேரில் காலடிகளை வைத்துக்கொண்டு வந்தது? தன்னுடைய முகத்தில் வராகம் பூமியைத் தாங்கிநின்றபொழுது எதன் பேரில் நின்றுகொண்டு இருவரும் சண்டை செய்தார்கள்? அவர்களுக்கு ஆதாரம் ஒன்றுமில்லையே. பாகவதபுராணத்தைச்செய்த போப்பினுடைய மார்பில் நின்று சண்டை செய்தார்களோ என்னமோ? அப்பொழுது போப் எதில் படுத்துத்தூங்கினார். இதுஒருபுரட்டன் வேறொரு புரட்டனிடம் வந்து, 'ஐயா பொய் சொல்லுகிறவரே', என்பதுபோலிருக்கிறது. பொய் பேசுகிறவர்களுடைய வீட்டிற்குப் புரட்டுச் செய்கிறவன் வந்தால் வீண் பொய்க்குக்குறைவு முண்டோ ?

ஹிரண்யகசிபுவிற்குப் பிரகலாதன் என்ற ஒருபிள்ளை யிருந்தான். பக்தனாயிருந்தான். அவனைப்படிக்கத்தகப்பனார் பாடசாலைக்கனுப்பினார். உபாத்தியாயரை அப்பொழுது தன் பலகையில் நாராயணா நாராயணா வென்றுஎழுதிக்கொடுக்கச்சொன்னான். இதையறிந்த தகப்பன் என்சத்துருவின் பெயரை ஏன்சொல்லுகிறாய் என்றார்? பையனோ அதைச்சொல்லுவதிலிருந்து தயங்கவில்லை. அப்பொழுது கைகால்களை இருக்கக்கட்டி மலைமேலிருந்து கீழேஉருட்டிவிட்டார்கள். கிணற்றில் தள்ளிவிட்டார்கள். ஆனால் பையனோ பாதிக்கப்படவில்லை. இருப்புத்தூண் ஒன்றைப் பழுக்கக்காய்ச்சின பிறகு உன்னுடைய இஷ்டதேவதையான நாராயணன் உண்மையானால் இதைத்தொடுவதினால் உனக்குச்சூடுண்டாகாது என்றான். பிரகலாதன் அதைத்தொடப் போனான் உடனே தன்னைப்புண்படுத்திவிடுமோவென்றசந்தேகம் உதித்தது. நாராயணன் சிறிய எரும்புகளை அதில்புகவிட்டார். அதைக்காணவும் அவன் சந்தேகம்தீர்ந

தது. அதைத்தொடபோனான். அப்பொழுது தூண் இரண்டாகவெடித்து. அதிலிருந்து பாதிமனிதன் பாதிசிங்கமுமான நரசிம்மர் வந்து தகப்பனைப் பிடித்து வயிற்றைக் கிழிக்கவே இறந்துவிட்டான். பிறகு பிரகலாதனைத் தடவிக்கொடுத்து வேண்டியதைக்கேள், என்றார். அவன் தன் தகப்பனாரின் நற்கதியை வேண்டினான். இருபத்தியொன்று தலைமுறையைச் சேர்ந்த உன் உறவினர்கள் நற்கதியை அடைவார்களென நரசிம்மர் வரமளித்தார். இப்பொழுது கவனியுங்கள். அதைப்போலவே இதுவும் ஆதாரமற்ற வெறும் புரட்டே. பாகவதம் படிக்கிறவர்களை யாவது மலைமேலிருந்து கீழே உருட்டவேண்டும். இக்கதை உண்மையானால் காயமன்றியில் அவன் கீழேவிழவேண்டும். உண்மையாக என்னவாகுமென்பது நமக்குத்தெரியும். எந்நாராயணனும் அவன் உதவிக்குவரமாட்டான். அவனும் துண்டுதுண்டாகச் சிதறிப்போய் விடுவான். பள்ளிக்கனுப்பினதில் தகப்பன் தப்பு ஒன்றும் செய்யவில்லை. தான் படிப்பதை விட்டு பைராகியாக வேண்டுமென்கிற பெரும் முட்டாளாயிருந்தான் பிரகலாதன். பழுக்கக்காய்ச்சின இரும்பில் எரும்புஓடி பிரகலாதன் அதைத்தொட்டும் எரிந்துபோகவில்லை யென்று நம்புகிறவர்களைப் பழுக்கக்காய்ந்த இரும்புத்தூணைக் கட்டிக்கொள்ளச்செய்ய வேண்டும். அவன் காயப்படாமலிருந்தால் பிரகலாதனும் கஷ்டப்படாமலிந்திருக்கலாமென்று நம்பலாம். மேலும் நரசிம்மனே ஏன் எரிந்துபோக வில்லை? அவர்களுடைய மூன்றாவது பிறப்பில் சனக சகோதரர்கள் வைகுண்டத்தை யடைவார்கள் என்று கொடுத்த வரனை உன்னுடைய நாராயணன் மறந்துவிட்டாரா? பாகவதத்தில் சொல்லும் வண்ணம்பிரம்மா, பிரஜாபதி, காச்யப, ஹிரண்யாக்ஷன், ஹிரண்ய கஸ்யனுபே. ஆகையினால் நான்காவது தலை முறையில்பிரகலாதனை உண்டானான். இருபத்தியொன்றாவது தலை முறையிலுண்டாகவில்லை. அவனுடைய 21 தலை முறைக்காரர்கள் நற்கதியை யடைந்தார்களென்பதுஎவ்வளவு முட்டாள்தனமாகும். அதே ஹிரண்யாக்ஷன் ஹிரண்யகச்யபன், ராவணன், கும்பகர்ணன், சிசுபாலன், தந்தவக்கிரன், முதலானவர்களாகப் பிறந்தார்கள். பிரகலாதனுக்கு நரசிம்மன் கொடுத்தவரம் என்னவாச்சுது? அறிவீனர்களே அறிவில்லாத இவ்வார்த்தைகளை நம்புவார்சள் படித்து புத்தியுள்ளவர்கள் நம்பமாட்டார்.

பூதனை.

रथेन वायुवेगेन ॥ பாகவதம் 10. 39. 83.
जगाम गोकुलं प्रति ॥

நம்சனால் கோரப்படவே அக்ரூரர் வாயுவேகத்துடன் ஓடுகிற குதிரை கட்டின ரதத்திலுட்கார்ந்து சூரிய உதயத்திலிருந்து பிரயாணமாய் மதுராவிலிருந்து நான்குமைல் தூரத்திலுள்ள கோகுலத்தைச் சாயந்திரம் அடைந்தார். பாகவதம் செய்தவரைச் சுற்றிச் சுற்றியே குதிரை வந்திருக்க வேண்டும் அல்லது வழி தப்பி பாகவதம் செய்தவருடைய வீட்டில் கம்சனுடன் தூங்கப் போயிருக்கவேண்டும். பூதனையுடைய சரீரம் 8 மைல் நீளமுள்ளதாகவு பலமைல்கள் அகலமுள்ளதாகவுமிருந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. அவளைக்

கொன்று சரீரத்தை மத்துராவிற்கும் கோகுலத்திற்கும் நடுவில் வைத்தார். இது உண்மையானால் இவ்விரு பட்டணங்களும் போப்க்களுடைய வீடும் (அவளுடைய சரீரத்தின்) கீழ் புதைந்து போயிருக்கும்.

அஜாமேல் கதை இவ்விதமிருக்கிறது. முழுப் பொய்யான இது இவ்விதம் எழுதப்பட்டதோ. நாரதர் சொன்னதின் பேரில் தன்பிள்ளைக்கு நாராயணன் என்று பெயர் வைத்தான். தான் இறக்குந்தருவாயில் பெயரைச் சொல்லி பிள்ளையை அழைத்தான். தன் பிள்ளைக்குப் பதிலாக நாராயணனே (திருமால்) வந்தார். பிள்ளையைக் கூப்பிடுகிறான் தன்னை யல்லவென்று நாராயணனுக்கு அவனுடைய அந்தக்கரணபாவத்தை யறிய முடியாதா? நாமமகிமையே இவ்வளவு யிருக்கும் பொழுது இப்பொழுது நாராயண ஸ்மரணை செய்கிறவர்களுடைய துக்கங்களைத் தீர்ப்பதிற்கு ஏன் வருகிறதில்லை.

இப்படியே சுமேருமலையினுடைய சுற்றளவும் வான சாஸ்திரத்திற்கு விரோதமாயிருக்கிறது. பிரயவி-- ராஜனுடைய ரதத்தின் அடிச்சுவடுகளினால் சமுத்திரம் உண்டாச்சு. ..9 கோடி யோஜனை தூரமிருக்கிறது பூமி. இவ்விதப் பொய்க் கதைகள் பாகவதத்திலிருக்கின்றன. அவைகளுக்கு எண்ணிக்கையில்லை.

பாகவத ஆசிரியர்.

இப்பாகவதத்தைச் செய்தவர் போப (वोव) தேவர். அவருடைய சகோதரர் கீதகோவிந்தத்தை இயற்றிய ஜயதேவர். தன்னுடைய நூலான "ஹிமாத்ரியில்" தானே ஸ்ரீமத்பாகவதம் முதலானவைகளைச் செய்தவரென்று சுலோகஞ் செய்திருக்கிறார். அது எழுதியிருந்த மூன்று ஏட்டுப் பிரதிகளிருந்தன. ஒன்று இழந்துபோய்விட்டது. இழந்து போனதிலுள்ளவாரே கருத்துள்ள கீழ்க்கண்ட இரண்டு சுலோகங்களைச் செய்திருக்கிறோம். இவைகளை நிச்சயம் செய்துகொள்ள விரும்புகிறவர்கள் ஹிமாத்ரியைப் பார்க்கவேண்டும்.

हिमाद्रेः सचिवस्यार्थे सूचना क्रियतेऽधुना ।
स्कन्धाऽध्यायकथानां च यत्प्रमाणं समासतः ॥
श्रीमद्भागवतं नाम पुराणं च मयेरितम् ।
विदुषा बोबदेवेन श्रीकृष्णस्य यशोन्वितम्

பிரதமமந்திரியான ஹிமாத்திரி, பண்டிதபோபதேவருடன் சொன்னதாவது நீ செய்த ஸ்ரீமத் பாகவதத்தைப் படிக்கவும் கேழ்க்கவும் எனக்கு ஒழிவு கோமில்லை. படித்துபாகவதத்தை அறிந்து கொள்ளுமாறு சுருக்கமாய் சுலோகங்களெழுது என்றார். இழந்துபோன ஏட்டில் பத்துசுலோகங்களிருந்தன. பதினொன்றிலிருந்து ஆரம்பமாகும் கீழ்க்கண்டவைகளெல்லாம் போபதேவராலேயே செய்யப்பட்டது.

बोधन्तीयि हि प्राहुः श्रीमद्भागवतं पुनः । पञ्च प्रश्नाः शौनकस्य सूतस्यात्रोत्तरं विपु ॥
प्रश्नावतारयोश्चैव व्यासस्य निर्वृतिः कृतात् । नारदस्यात्र हेतूक्तिः प्रतीत्यर्थं स्वजन्म च॥

सुप्तघ्नं द्रौण्यभिभवस्तदस्त्रात्पाण्डवा वनम् । भीष्मस्य स्वपदप्राप्तिः कृष्णस्य द्वारिकागमः॥
श्रोतुः परीक्षितो जन्म धृतराष्ट्रस्य निर्गमः । कृष्णमर्त्यत्यागसूना ततः पार्थमहापथः ॥
इत्यष्टादशभिः पादैरध्यायार्थः क्रमात् स्मृतः । स्वपरप्रतिबन्धोनं स्फीतं राज्यं जहौ नृपः॥
इति वैराग्ये दार्ढ्योक्तौ प्रोक्ता द्रौणिजयादयः ।

பன்னிரண்டு புத்தகங்களுடைய சுருக்கம் போபதேவரால் செய்யப்பட்டு பிரதமமந்திரி ஹிமாத்ரிக்குக் கொடுக்கப்பட்டது. இவைகளுடைய விவரம் அறியவிரும்புவோர்கள் ஹிமாத்ரிஎன்ற பெயருடைய நூலைப் பார்க்கவேண்டும்.

இவ்விதமான பாசாங்குகள் இதரபுராணங்களிலும் இருக்கின்றன.

மகாபாரதத்திலிருக்கிற ஸ்ரீகிருஷ்ணனுடைய ஜீவியசரித்திரம் மிகவும் சிலாகிக்கத் தகுந்ததாயிருக்கிறது. அவருடைய குணகர்ம சுவபாவங்களெல்லாம் ஆப்தர்களுடையதைப் போலிருக்கிறது. தன் வாழ்நாள்முழுவதிலும் தீச்செயல்ஒன்றையும் செய்ததாகக் காணப்படவில்லை. பாகவத ஆசிரியரோ எவ்வளவுகெடுதல்களையும் பாபங்களையும் சேர்க்கவேண்டுமோ அவ்வளவையும் சேர்த்திருக்கிறார். பால் தயிர் வெண்ணெய் முதலியவைகளைத் திருடினதாகவும் குப்ஜஎன்னும் தாசியுடன் சேர்ந்ததாகவும், பரத்தையருடன் ஜலக்கிரீடையும், புரலீலையும் செய்ததாகவும் முதலானபொய்களையும் தோஷங்களையும் சுமத்தியிருக்கிறது. இதைப்படித்தும்படிக்கக்கேட்டுமிருக்கிற பிறமதக்காரர்கள் நம்மைகுறைகூறுகிறார்கள். பாகவதமில்லாமலிருந்தால் கிருஷ்ணனைப் போன்ற மகாத்மாக்களுக்கு என்னவிதமாகப் பொய்தூஷணை உண்டாயிருக்கக் கூடும்?

சிவபுராணத்தில் பன்னிரண்டு ஜோதி லிங்கங்கள் உண்டு எனச் சொல்லப்படுகிறது. இந்தலிங்கங்களில் ஜோதியொன்றையுங்காணோம். இரவில் விளக்கு வெளிச்சமன்னியிலும் காணமுடியாது. இவைகளெல்லாம் போப்களுடைய சூழ்ச்சியே தவிர வேறு ஒன்றுமில்லை.

வினா :--வேதங்களை ஓதச்சக்தியில்லாத பொழுது ஸ்மிருதியும், ஸ்மிருதியைப் படிக்கச்சத்தியில்லாதபொழுது சாஸ்திரமும், சாஸ்திரம் படிக்கவலியில்லாத பொழுது புராணங்களும், செய்யப்பட்டது. கேவலம் ஸ்திரீசூத்திரர்களுக்கே அது. ஏனெனில்வேதங்களை ஓதவும் கேழ்க்கவும் இவர்களுக்கதிகாரங் கிடையாது.

விடை :—இதுபொய்யே. ஏனெனில் படிக்கும்சக்தி படிக்கச்செய்வதினாலேயேவரும். வேதங்களை ஓதவும் கேழ்க்கவும் சகலமானவர்களுக்கும் அதிகாரமுண்டு. பாருங்கள் சரித்திரமே அதற்குத்தக்க சாட்சியாகும். கார்கிமுதலான பெண்மணிகள் சாந்தோக்கிய உபநிஷத்தில் வேதங்களை ஓதினதாகவும் பிறப்பினால் சூத்திரனான ஜானசுருதியும் கூட ரைக்யமுனியிடம் வேதம்படித்ததாகவும் இருக்கிறது. மேலும் யஜுர் வேதம் 26 அத்தியாயம் இரண்டாவது மந்திரத்திலே ஜாதிவேற்றுமையன்னியில் ஓதலாம், கேழ்க்கலாம் என்றிருக்கிறது. இவ்விதப் பொய்க்கிரந்தங்களைச்செய்து ஜனங்களை

மெய்யானவைகளிலிருந்து திருப்பித்தன்னுடைய உபயோகத்திற்காகப் பிரயோஜனப்படுத்துக்கொள்ளுகிறவர்கள் ஏன்மகாபாபிகளாக மாட்டார்கள்?

வித்தையில்லாத புருஷர்களை விழுங்குகிற கிரகச்சக்கரம் எப்படியிருக்கிறதென்று பாருங்கள். (1) ஆகிருஷ்ணேன ரஜஸா, சூரிய மந்திரமாம் (2) இமம் தேவா அஸபத்வைசுவத்வம். சந்திரனுடையதாம் (3) அக்னிர்மூர்த்வா திவ: ககுத்பதி: செவ்வாயுடையது (4) உத்புத்ய ஸ்வாக்னே. புதனுடையது. (5) பிரகஸ்பதே அதிய தர்யே பிரகஸ்பதி யுடையது. (6) "சுக்ரமன்தஸ:" சுக்கிரனுடையது. (7) "சன்னோ தேவீ ரபிஷ்டயே" சனி (8) "கயாநஸ்சித்திர ஆபுவ. ராகு (9) கேதும் கிருண் உன்னகேதவே. கேதுவுடையது.

இவ்வார்த்தைகளெல்லாம் பொய்யே, எண்ணிக்கை (1) சூரியன் பூமி இவைகளுடைய இழுக்குந் தன்மையைக்கூறுகிறது. (2) நல்லராஜனுடைய குணத்தைச் சொல்லுகிறது (3) அக்கினி (யுடைய குணகுணங்களை) வருணிக்கிறது. (4)யாகம் செய்யும் எஜமானன் (5) வித்வான்கள், இவர்களுடைய (குணங்களையும் தகுதிகளையும்) சொல்லுகிறது (6) வீரியத்திற்கும் அன்னத்திற்கு முள்ள உறவு (7) ஜலம், பிராணன், பரமேச்வரன் (குணங்களையும் தன்மையயும்) சொல்லுகிறது. (8) (நல்ல) மித்திரனுடைய தகுதிகளைச் சொல்லுகிறது (9) ஞானத்தை அறிவதின் (முக்கியமும் அவசியமும்) மந்திரமாகும்.

இவைகள் கிரகங்களைப்பற்றினவையாகாது. பொருள் அறியாததினாலேயே பிரமை என்னும் வலையில்விழுந்து விட்டார்கள்.

வினா:—கிரகங்களுடைய பலன் உண்டா இல்லையா?

விடை:—போப்லீலைகளிலிருப்பது போலில்லை. சூரியன் சந்திரனுடைய வெப்பம் குளிர்ச்சி அல்லது காலம் முதலானவைகள் நமது பிரகிருதிக்கு அனுகூலமாகவும் பிரதிகூலமாகவுமாகிறது. போப்லீலைகளில் சொல்லுகிறதாவது: தாராளசிந்தையுள்ளவரே! எஜமானனே!! இன்றைக்கு எட்டாவது சந்திரன் சூரியன் முதலானவர்கள் கெட்டமடத்திலிருக்கிறார்கள். இரண்டரை வருடம் சனீசுவரன் உங்களுடைய காலைப்பிடித்திருக்கிறது. உங்களுக்குப்பெரும் ஆபத்துகள் விளையும். வீட்டைவிட்டு உங்களை அயல்நாடுகளில் அலையச் செய்யும். கிரகத்திற்கு ஜபம், பாடம், பூஜைசெய்யவேண்டும். கிரகத்தின் பெயரால் எங்களுக்கு தானஞ் செய்தால் துக்கங்களெல்லாம் நீங்கிப்போகும். உங்களுக்கும் கிரகத்திற்கும் யாது சம்பந்தம் உண்டென்று இவர்களைக் கேழக்கவேண்டும். கிரகம் என்பதென்ன? இதற்கு அவர்கள் பதிலளிப்பதாவது:

दैवाधीनं जगत्सर्वं मन्त्राधीनाश्च देवताः ।
ते मन्त्रा ब्राह्मणाधीनास्तस्माद् ब्राह्मणदैवतम् ॥

பிரமாணத்தைப் பாருங்கள். தேவதைகளுடைய ஆதீனத்தில் சகலஉலகமும், மந்திரத்தினுடைய ஆதீனத்தில் தேவதைகளும், பிராமணனுடைய ஆதீனத்தில் மந்திரமும் இருக்கிறது. இதனாலேயே பிராமணனைத் தேவதை என்பார்கள். ஏனெனில் வேண்டிய தேவதையை மந்திரபலத்தினால் வரவழைத்

துப் பிரசன்னமாகச்செய்து காரியங்களை சித்திசெய்துக்கொள்ள எங்களுக்கே அதிகாரமுண்டு. அவ்வளவு மந்திரசக்தி எங்களுக்கில்லாமல் போனால் நாஸ்திகர்கள் எங்களை உலகிலிருக்க விடமாட்டார்கள்.

சத்தியவாதி:—திருடர்கள், கொள்ளைக்காரர்கள், கெட்ட காரியஞ்செய்கிறவர்கள் இவர்களின்பேரில் உங்களுடைய தேவதைக்கு அதிகாரமிருக்கவேண்டும். தேவதைகளே அவர்களைக் கெட்டகாரியஞ்செய்யச் சொல்லவேண்டும். இது சரியானால் உங்களுடைய தேவர்களுக்கும், ராக்ஷசர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் கிடையாது. உங்களுடைய அதிகாரத்தில் மந்திரமிருந்து அதைக்கொண்டு சகலத்தையும் சாதித்துக்கொள்ள முடியுமேயானால், அம்மந்திரங்களினால் தேவர்களை வசஞ்செய்துக்கொண்டு அரசர்களுடைய கஜானாவை எடுத்துவரச்சொல்லி வீட்டிலுட்கார்ந்து கொண்டு ஏன் ஆனந்தமாயிருக்கக்கூடாது? சனீச்வரன் முதலானவர்களுக்குக் கொடுக்கும் எண்ணெய் தானம் வாங்க ஏன் வீடுவீடாக ஏறிச்செல்லுகிறீர்கள்? குபேரனைக் கைவசஞ்செய்துக்கொண்டு வேண்டிய திரவியத்தை ஏன்வாங்கிக் கொள்ளக்கூடாது? பாடுபட்டுத்தேடிச் சம்பாதித்த ஏழைகளின் பணத்தை ஏன் உபகரிக்கிறீர்கள்? உங்களுக்கு தானம் அளிக்கிறதினால் கிரகங்கள் திருப்தியடைந்தும், அளிக்காததினால் திருப்தியடையாமலும் இருக்கும்பொழுது சூரியாதிகிரகங்களுடைய திருப்தி அதிருப்தி இவைகளை நேரில்கண்டுபிடிக்க முடியுமா? எட்டாமடத்து சந்திரன் அல்லது சூரியனுள்ள ஒருவன், மூன்றுவது மடத்திலுள்ள ஒருவன் இவ்விருவர்களையும் ஜியேஷ்ட (வைகாசி ஆனி) வெயிலில் கால் செருப்பன்னியில் வெறும் மைதானத்தில் நடக்கச்சொல்லுங்கள். பார்ப்போம்.

இவர்களுடன் கிரகம் சந்தோஷமாயிருந்தால் இவர்களுடைய சரீரமும் பாதங்களும் வறண்டுபோகாது. சந்தோஷமன்னியிலிருந்தால் வறண்டுபோய் விடும். புஷ்யமாதபௌர்ணமி ராத்திரியில் அவர்களிருவரையும் நிர்வாணமாக நிற்க வைக்கவேண்டும். ஒருவருக்குக்குளிர்ந்தும் மற்றொருவருக்குக்குளிராமலுமிருந்தால் கிரகங்கள் நன்மைசெய்கிறதென்றும் தீமைசெய்கிறதென்றும் ஆகிறது. கிரகங்கள் உங்களுக்கு உறவினர்களா? அவர்களுக்கும் உங்களுக்கும் தபால் தந்திபோக்குவரத்துண்டா? உங்களிடம் மந்திரசக்தி யிருந்தால் நீங்கள் ஏன் தனவானாகவும் ராஜனாகவும் ஆகக்கூடாது? சத்துருக்களை ஏன்உங்கள்வசம் செய்துக்கொள்ளக்கூடாது? வேதங்களுக்கும் ஈச்வரனுக்கும் விரோதமாய் போப்லீலைக்கொண்டவனே நாஸ்திகன். கிரகங்கள் ஒருவனுக்கு நன்மையைத் தருமாறு செய். உங்களுக்குத்தான் தானஞ்செய்யவேண்டுமா? நீங்கள் என்ன கிரகங்களிடமிருந்து ஒப்பந்தசீட்டுவாங்கிவந்து இருக்கிறீர்களா? உங்களிடமே அனுமதிப்பத்திரமிருந்தால் சூரியன்முதலானவர்களை வீட்டிற்கழைத்து நெருப்பில் இறக்கச்செய்யுங்கள். உண்மையென்னவென்றால் சூரியன் முதலானவர்கள் சடங்கள். அவைகளால் யாருக்கும் துக்கத்தையாவது சுகத்தையாவது அளிக்கமுடியாது. கிரகதானங்களில் வசிக்கிற நீங்கள் எல்லோருமே அவைகளினுடைய விக்கிரகங்கள். ஏனெனில் கிரகவார்த்தையுடைய அர்த்தமும் உங்களுக்கே தகுதியானதாயிருக்கிறது. "எவர்கள் வாங்கிக்கொள்ளுகிறார்களோ அவர்

களே கிரகங்கள்.'' நீங்களாகவே அரசன், பிரபு, சாவுகாரி, வியாபாரி, ஏழை இவர்களிடம் சென்று சொல்லாதவரையில் நவக்கிரகங்களுடைய ஞாபகம் அவர்களுக்குக் கிடையாது. சூரியன், சனீசுவரன் முதலானவைகளுடைய உருவெடுத்த நீங்களே ஒருவனைப்பிடித்தால் துன்புறுத்தாமல் விடுகிறதில்லை. உங்களிடம் வராதவனை நாஸ்திகன் என்று பழிகூறுகிறீர்கள்.

போப்:—நாங்கள் முன் சொல்லும் பிரகாரம் ஆகாசத்தில் சந்திரன் சூரியன் இவர்களுடன் ராகு கேதுவுடைய சேர்க்கையினுல் பிரத்தியக்ஷமான கிரகணங்கள் உண்டாகிறது. இப்படியே கிரகத்தினுடைய பலனும். பணமுளவன், ஏழை, அரசன், பிச்சைக்காரன் சுகமுள்ளவன் துக்கமுள்ளவன் இக்குணங்களெல்லாம் கிரகத்தினுலேயே உண்டாகும் பலன்.

சத்தியவாதி:—கிரகண ரூபமான பிரத்தியக்ஷ அனுமானங்கள் வான சாஸ்திரத்தைச் சார்ந்தது. ஜோதிடத்தைச் சேர்ந்ததல்ல. வான சாத்திரமே உண்மையானது. மனிதசரீரத்தில் கிரகங்களுடைய குணங்களினுல் விளையும் நன்மை தீமை உண்டாகும் வரையில் ஜோதிடமும் உண்மையே. ஒன்றுக்கொன்று நேராகச் சுற்றிக் கொண்டிருக்கும் படியான சூரியன் சந்திரனைக் கவனித்து வான சாஸ்திரத்தைக் கொண்டு எக்காலத்தில் சூரியனுடையவோ அல்லது சந்திரனுடையவோ முழு அல்லது பாதி கிரகணம் உண்டாகும் மென்று சொல்லலாம்.

छादयत्यर्कमिन्दुर्विधुं भूमिभाः ॥ கிரகலாகவம்.

இவ்விதமே சித்தாந்த சிரோமணி, சூரியசித்தாந்தம் முதலானவைகளிலுமிருக்கின்றன. பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் சந்திரன் வரும்பொழுது சூரியக்கிரகணமும், சூரியன் சந்திரனுக்கு நடுவில் பூமிவரும் பொழுது சந்திர கிரகணமும் உண்டாகிறது. அதாவது சந்திரனுடைய நிழல் பூமியின் பேரிலும் பூமியின் நிழல் சந்திரன் பேரிலும் விழுகிறது. சூரியன் பிரகாச சுரூபமாகவேயிருப்பதினுல் அதன் பேரில் எதனுடைய நிழலும் விழுகிறதில்லை. பிரகாசித்து கொண்டிருக்கிற சூரியன் அல்லது தீபம் இவைகளுடைய நிழல் திரும்பி விழுவதைப் போலவே கிரகணமும் ஆகிறதென்று அறியுங்கள். தன்னுடைய கர்மங்களினுலேயே மனிதர்கள் தனவான் ஏழை ராஜன் பிச்சைக்காரன் முதலானவர்களாக ஆகிருர்கள். கிரகங்களினுல் இல்லை. பெரும்பாலான ஜோதிடர்கள் தங்களுடைய பெண் பிள்ளைகளின் விவாகத்தை கிரகங்களுடைய கணக்குப் பிரகாரமே செய்கிருர்கள். செய்தும் சண்டை சச்சரவுகளினுல் இல்லறசுகம் இல்லாமல் போய் புருஷன் அல்லது மனைவியை இழந்தவர்களாக ஆகிருர்கள். ஏன் இவ்விதமாக வேண்டும். ஆகவே கர்மங்களுக்கேற்ற பயனை யடைகிருேம். கிரகங்கள் சுகத்துக்கங்களுக்குக் காரணமாகாது. மனிதனுக்கும் அவனுடைய செய்கைகளுக்கும் சம்பந்தம் உண்டாக்கூடாத அவ்வளவு தூர விடத்திலிருக்கிற கிரகங்கள் மானிடத்தீர்ப்பை எவ்விதம் மாற்றமுடியும்? செய்கைகளுடைய பலனைச்செய்வது ஜீவன். அதனை அநுபவிக்கச் செய்வது பரமாத்மா. நீ கிரகத்தினுடைய பலன் என்று நினைத்தால் இவ்வுலகில் அதே

(பிறக்குந்தருணத்தில் துருவ நக்ஷத்திர இருப்பைக்கொண்டு ஜாதகம் எழுதுகி றீர்கள்) ஒரு நபருக்கு மேல் பிறக்கவில்லையா? இல்லை யென்றால் நீங்கள் சொல்லுவது உண்மை யாகாது. உண்டு என்றால் ஒருவனைப்போல் மற்றொருவன் சக்கரவர்த்தியாகிறதில்லை. ஜீவனோபாயமாகவே இவைகள் செய்யப்பட்டவை யென்றால் நாங்கள் நம்புவோம்.

வினா :—கருட புராணமும் பொய்யா?

விடை :—ஆமாம் அசத்தியமே.

வினா :—இறந்த ஜீவனுடைய கதி என்னவாகிறது

விடை: ஊழ் வினைக்கேற்றவாறு.

வினா:—யமராஜன் சித்திரகுப்தன், மந்திரி ரொம்பபயங்கரமான மை மலையையொத்த அவர்களுடையசேவகர்கள், ஜீவனைப்பிடித்துக்கொண்டுபோகிறார்கள். பாபபுண்ணிய பிரகாரம் நரகத்தையும் சுவர்க்கத்தையும் முறையே அளிக்கிறார்கள். அதற்காகவே தானம் சிராத்தம் தர்ப்பணம் வைதரணியைத்தாண்ட கோதானம் முதலானவைகளைச் செய்கிறார்கள். இவைகளெல்லாம் எப்படி பொய்யாகக் கூடும்?

விடை :—எல்லாம் போப் லீலைகளுடைய வைப்புக் கட்டுகளே. எல்லாவிடத்திலுமுள்ள ஜீவன்கள் அங்கு சென்று அவைகளுக்கு யம தர்மராஜன் சித்திரகுப்தன் முதலானவர்கள் நியாயம் அளிப்பார்களே யானால், யமலோகத்திலேயே ஜீவன் பாபம் செய்யும் பொழுது வேறு யமலோகமிருக்கவேண்டுமல்லவோ? அங்கு நியாயதிபதி அவைகளுக்கு நியாயமளிக்கவேண்டும். பர்வதம் போலுள்ள யமதூதர்களுடைய சரீரம் ஏன் கண்ணிற்குப் புலப்படுகிறதில்லை? இறந்துபோகிற மனிதனிருக்கிற அறையில் அவர்களுடைய ஒரு விரல் கூட நுழையமுடியாதே? பாதைகளிலும் தெருக்களிலும் ஏன் அவர்கள் தடுக்கப்படுகிறதில்லை. அவர்கள் சூக்ஷ்ம சரீரத்தை எடுத்துக் கொள்ள கூடியவர்களென்றால் மலையை யொத்த சரீரத்தின் எலும்புகளை அவர்கள் போப்களின் வீட்டிலன்னியில் வேறு எங்குவைக்கக்கூடும்? பெரிய காடு முதலானவைகளில் தீப்பிடிக்கும் பொழுது கோடிக்கணக்கான எறும்பு முதலானவைகள் உயிர் துறக்கின்றன. அவைகளையழைத்துச் செல்லகணக்கற்ற யமதூதர்கள் வரவேண்டும். அப்பொழுது வானம் இருள்சூழ்ந்திருக்கவேண்டும். ஜீவன்களைப் பிடிக்கும் சந்தடியில் அவர்களே ஒருவருக்கொருவர் மோதிக்கொள்வார்கள். பெருங்கற்பாறைகள் மலைமேலிருந்து கீழேவிழுவதுபோல் அவர்களுடைய சரீரத்தின் பெரும் பாகங்கள் கருடபுராணம்படித்துக் கேழ்க்கிறவர்களுடைய வீட்டினுள்விழும். அவர்களும் அதினால் அடிப்பட்டு இறந்து போவார்கள். அல்லது அவ்வீட்டு வாயிற்படி அல்லது தெரு அடைப்பட்டுபோய் அப்பொழுது வீட்டிலிருந்து வெளிவரவும் வழியில்நடக்கவும் முடியாமல் போய்விடும். அப்பொழுது என்ன செய்வார்கள்?

சிராத்தம் தர்ப்பணம்.

சிராத்தம், பிண்டப்பிரதானம், தர்ப்பணம், முதலியவைகள் இறந்தஜீவனை யடைகிறதில்லை. இறந்தவர்களுடையபிரதிநிதியான போப்பினுடைய வீட்டை

யும், வயிற்றையும் அடைகிறது. வைதரணீநதியைத்தாண்டச்செய்யும் பசுவானது போப்க்களினுடைய வீட்டையாவது கசாப்புக்கடையை யாவது அடைகிறது. நைகள் இங்கேவதைக்கப்பட்டு அல்லது சுடப்பட்டு போகும்பொழுது அங்குவாலை எப்படி பிடித்துகொள்ளக் கூடும்? இதை விளக்க ஒரு சிறு கதையுண்டு.

குடியானவனின் பசு.

குடியானவன் ஒருவனிருந்தான். அவனுக்கு இரண்டுபடிபால் கறக்கக்கூடியதான பெரிய பசு ஒன்றிருந்தது. அதனுடைய பால் வெகு உருசியுள்ளதாயிருந்தது. அவனுடைய போப்பும் அதைக்குடித்ததுண்டு. இதை அவன் தகப்பன் மரணகாலத்தில் எப்படியாவது அடைந்துவிடவேண்டும் என்று நிச்சயஞ் செய்து கொண்டான். தெய்வ யோகத்தால் கொஞ்ச நாளைக்குள் அவன் தகப்பனுடைய மரண சமயம் நெருங்கியது. வாய்ப்பேச முடியாமற் போகவே கட்டிலுடன் கீழேகொண்டுவந்து விட்டார்கள். பிராணன் போகிற சமயமும் நெருங்கிவிட்டது. உற்ருர் உறவினர் முதலானவர்கள் சுற்றியிருந்தார்கள். அச்சமயத்தில் போப் "எஜமானனே! உன்கையினுல் இப்பொழுது **கோதானம்** செய் என்ருன். குடியானவன பத்துரூபாயைத் தகப்பன்கையில்வைத்து சங்கற்பம் சொல்லுங்களென்ருன், உடனே போப் "என்ன பசுவிற்குப்பதிலாகப் பணத்தை வைக்கிருயே? உன்தகப்பன் ஒரு முறைக்குமேல் இறந்துபோகப்போகிருரு? இச்சந்தர்ப்பத்தில் உயிருள்ளதாயும் நல்லதாயும் சிறந்ததாயுமுள்ள பசுவைக்கொண்டுவா. இம்மாதிரியான பசுவையே தானஞ் செய்யவேண்டும்.

(குடி)எங்களிடம்பசுஒன்றே தானிருக்கிறது. அதன்னியில் எங்களுடைய மக்களின் சம்ரக்ஷணை நடைபெறுது. ஆகவே அதைக்கொடுக்க முடியாது. இருபது ரூபாய் வாங்கிக் கொண்டு சங்கற்பம் செய்யுங்கள். இந்தரூபாய்க்கு வேறு கறவைபசுவை வாங்கிக்கொள்ளலாம் என்ருன்.

(போப்)நல்லது. நல்லது. உன்தகப்பனை விட பசுமேலாய் போய்விட்டதா? **வைதரணீ** நதியில் முழுகச்செய்து உன்தகப்பனுக்குத் துக்கங்கொடுக்க விரும்புகிருயா? ஆகா! நீ உண்மையான பிள்ளையே! முன்னுல் சந்தேகப்பட்டுத் தயங்கிகொண்டிருந்த குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் அவர்களுக்கு ஜாடைக்காட்டவே போப் வழிக்கு வந்துவிட்டார்கள். அவனும் சொன்னபிரகாரமேபசுவை போப்புக்குத் தானஞ் செய்து விட்டான். அவர்களெல்லோரும் சொன்னதைக் குடியானவனுல் தடுக்க முடியவில்லை. தகப்பனும் இறந்துவிட்டார். போப்பும் குட்டியுடன் கூடின பசுவை ஓட்டிக்கொண்டு பால் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு **வீ**டடைந்தான். அவைகளைக் கட்டிவிட்டு பாத்திரத்தை நம்பிக்கையுள்ள விடத்தில் வைத்துவிட்டுத் திரும்பவும் குடியானவன் வீட்டிற்குவந்தான். சுடலைக்குப் பாடையுடன் சென்ருன். பிரேததகனஞ் செய்தான். அங்கேயும் **தசாகாத்திரம், சபண்டீகரணம்** முதலான சடங்குகளைச் செய்து முடிப்பதில் அவனைத் தொந்திரவு செய்து **மகாப்பிராம**

ணத்தில் பிச்சைக்காரர்களுக்கு அதிகபணம் வாங்கிக் கொடுத்தான். சடங்குகள் முடிவையடையும் வரையில் குடியானவன் அயல்வீட்டுக்காரர் உறவினர்களிடமிருந்து கெஞ்சி பிச்சையெடுத்துப் பிழைத்திருந்தான். தகப்பனிறந்த பதினன்காம்நாள் விடியற்காலையில் போப்பினுடைய வீட்டிற்குச் சென்றான். அவன் போகும்பொழுது பால்கறந்து செம்பில் நிறைத்துக்கொண்டிருந்த போப் எழுந்திருந்து சொன்னதாவது. எஜமானனே உட்காருங்கள்.

(குடி) நீங்களிங்கேவாருங்கள். (போப்) பால்ச்செம்பை வைத்துவிட்டு வருகிறேன். (குடி) இல்லையில்லை அதையும் இங்கே கொண்டுவாருங்கள். போப் யோசனை செய்து போயுட்கார்ந்து செம்பையும் முன்னால் வைத்தான். (குடி) நீபெரிய பொய்யன். (போப்) நான் என்ன பொய் சொன்னேன்? (குடி) தயவு செய்து என் பசுவை ஏன்வாங்கிக் கொண்டுவந்தீர்களென்று சொல்லுங்கள். (போப்) உன்தகப்பன் வைதரணீ நதியைத் தாண்டுவதற்கு. (குடி) அப்படியானல் பசு ஏன் வைதரணீ நதியை யடையவில்லை. நீங்கள் அதை செய்திருப்பீர்களென்று நம்பியிருந்தேன். உங்கள் வீட்டில் கொண்டுவந்து வைத்திருக்கிறீர்கள். வைதரணீ நதியைக் கடப்பதில் என் தகப்பன் யாது யாது கஷ்டங்களையனுபவித்தாரென்று எவருக்குத்தெரியும். (போப்) இல்லை. இங்கே இத்தானத்தினுடைய மகிமையினால் வேறொரு பசுவை அவருக்குக் கொடுத்திருப்பார்கள். (குடி) வைதரணீ இங்கிருந்து எவ்வளவு தூரத்திலுள்ளது? எத்திசையிலுள்ளது? (போப்) இவ்விடத்திலிருந்து 300,000,000 கோசதூர முள்ளது. ஏனெனில் பூமியின் மத்தியரேகை 490,000000 கோசமேயுள்ளது. தெற்கு மேற்கிலிருக்கிறது. (குடி) இங்கேயிருந்து தபாலோ தந்தியோ அனுப்பியிருக்கவேண்டும். அவ்விடத்தில் இன்னன்னுருடைய தகப்பனுக்கு வைதரணீயைத் தாண்டுவதற்குப் பசுகொடுத்தாச்சுதென்று பதில் சமாச்சாரம் கிடைத்திருந்தால் அதைக் காண்பியுங்கள். (போப்) தந்தியுமில்லை. தபாலுமில்லை. கருட புராணம் பிரமாணமே. (குடி) கருடபுராணத்தை நாங்கள் எப்படி நம்ப முடியும்? (போப்) எல்லோரும் நம்புவது போலவே.

(குடி) இப்புத்தகம் உங்களுடைய வர்க்கத்தினர்களால் ஜீவனோபாயத்திற்காகச் செய்யப்பட்டது. ஏனெனில் பிள்ளைகளைவிடத் தகப்பனுக்குப் பிரியமுள்ளவர்கள் கிடையாது. என்தகப்பனர் எங்களுக்குப் பசு அனுப்பென்று தந்தி தபால் எதாவதனுப்பினல் அப்பொழுதுநான் அதைவைதரணீநதிக்கரைக்குக்கொடுத்தனுப்பி அதைக்கொண்டு கடந்தபிறகு அப்பசுவைமறுபடியும்வீட்டிற்கழைத்துவந்து பெண்பிள்ளைகளுக்குப் பாலைக்கொடுத்து நானும் குடிப்பேன். கொண்டுவாருங்கள் பால்நிறைந்த செப்பு,பசு,கன்றுகுட்டியையும்என்று சொல்லி அவைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினன்.

(போப்) கொடுத்த தானத்தைத் திரும்பவாங்கிக்கொண்டு போவதினல் நீங்கள் நாசமடைவீர்கள்.

(குடி) மூடுங்கள் வாயை. நாங்கள் பாலில்லாமல் கஷ்டப்பட்ட பதிமூன்று நாள் துன்பங்களுக்கும் பழிவாங்குவேன்.

அப்பொழுது போப் பேசாமலிருந்துவிட்டான். குடியானவனும் தன் பசு, கன்றுகுட்டி, செம்பு முதலானவைகளுடன் வீடுபோய் சேர்ந்தான்.

இக்குடியானவனைப் போன்றவர்களதிகமாகவிருந்தால் இவ்வுலகில் போப்பு லீலைகள் அவ்வளவதிகமாகச் செல்லாது. இவர்கள்மேலும் சொல்லுவதாவது. பித்ருக்களுடைய சரீரத்தின் பத்துபாகங்களுக்கும் பிண்டமளிப்பதினால் பத்து அவயவங்களுண்டாய் சபண்டி செய்யும்பொழுது சரீரத்துடன் கூடஜீவன் சேர்ந்து (கைபெருவிரல் பரிமாணமேயுள்ளது) யமலோகத்திற்குப் போகிறது. இதுஉண்மையானால் தூதர்கள் வரவேண்டியது வீணேயாம். சரீரம்சேருமென்ருல் தன்னுடையமனைவி பெண்பிள்ளை இஷ்ட்டமித்திரர் முதலானவர்களுடைய ஆசை மேலிட்டு ஏன் திரும்பிவரக்கூடாது?

வினு :—சுவர்க்கத்தில் கிடைப்பதொன்று மில்லை? இவ்விடத்தில் கொடுக்கும்படியான தானமே அங்குசேருகின்றது. ஆகவேதானங்கள் சகலமும் செய்யவேண்டியது.

விடை:—சத்திரங்கள், தானஞ்செய்யும் ஜனங்கள், இஷ்டமித்திரர்களுடைய(விருந்து)கூட்டங்கள்,நல்லஆடைகள், இவைகளுள்ள இவ்வுலகமே உங்களுடைய சுவர்க்கத்தை விடமேலானது. உங்களுடையப் பிராமணப்பிரகாரம் சுவர்க்கத்திலொன்றுமே கிடைக்கிறதில்லை. தயை பச்சாதாபம் இல்லாதவும் பஞ்சம் மேலிட்டதும் கெட்டுப்போனதுமான இவ்வித சுவர்க்கத்திற்குப் போப்க்களே போகட்டும். நல்லோர்களுக்கு அங்கு என்னவேலை?

வினு:—யமலோகமில்லையென்ருல் இறந்தபிறகு ஜீவன் எங்குசெல்லுகிறது ? இதற்குத்தீர்ப்பு சொல்லுகிறவர்கள் யார்?

விடை :—உங்களுடைய கருடபுராணம் சொல்லுவது பிரமாணமல்ல. வேதங்களில் சொல்லப்பட்டது இதுவே

यमेन वायुना सत्यराजन् ॥

இவ்வித வேதவார்த்தைகளினால் யம வார்த்தைக்கு வாயு என்றிருக்கிறது. சரீரத்தைவிட்டு வாயுவுடன் கூட அந்தரிட்சத்ததில் ஜீவனிருக்கிறது. பட்சபாதமில்லாத பரமாத்மாவே தர்மராஜா. அவரே எல்லோருக்கும் நியாயஞ் செய்கிறவர்.

வினு :—நீங்கள் சொல்லுவதிலிருந்து பசுமுதலான தானங்கொடுக்கக் கூடாதென்றும் தானம் புண்ணியம் ஒன்றும் செய்யக்கூடாதென்றும் விளங்குகிறது.

• விடை :—நீசொல்லுவது வீண்புரட்டே. நல்லபாத்திரமறிந்து பிச்சையிடவேண்டும். பொன் வெள்ளி பச்சை வைடூரியம் மரகதம் ஆடையுடை வீடு முதலானவைகளைக் கொடுக்கவேண்டும். தீயோர்களுக்கு ஒருபொழுதும் பிச்சையிடகூடாது.

வினு :—நல்லோர் தீயோர், என்று அறிவதெப்படி?

நல்லோர் தீயோர்.

விடை :—சூதுள்ளவன், கள்ளன், தன்னலங்கருதுகிறவன், காமி, காமக்ரோதலோப மோகத்துடன் கூடினவன், பிறர்களுக்குத் தீங்குசெய்கிறவன் பேராசையுள்ளவன், பொய்பேசுகிறவன், அறிவில்லாதவன், சோம்பலுள்ளவன், கொடுக்கிறவர்களிடமே மறுபடியும் பிடிவாதஞ் செய்கிறவன், வாசற்படியிலுட்கார்ந்து பிச்சைக்குத் தொந்திரவு செய்கிறவன், வழி மறிக்கிறவன், இல்லையென்றால் கவனியாமல் இரந்துகொண்டே யிருக்கிறவன் திருப்தியற்றவன், கொடாதவனை நிந்திக்கிறவன் ஏசுகிறவன் திட்டுகிறவன், ஒரு தடவைப்பிச்சைக் கொடாமல்போனால் முன்பலதடவைகள் கொடுத்திருந்த பொழுதிலும் பகைத்துக்கொள்ளுகிறவன், வெளிக்குச் சாதுவேடம் போடுகிறவன், இதரர்களுக்குத் தப்புவழிகாட்டி ஏமாற்றுகிறவன், நிறையவிருந்துண்டும் பஞ்சகோலமிடுகிறவன், முகமன் பேசிதுதிசெய்து தன்காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறவன், அல்லும் பகலும் பிச்சையெடுப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பவன், பலமாக லாகிரிவஸ்துக்களையும் கஞ்சாவையும் பிடித்து விருந்துண்ணவழைத்தால் இதரர்களுடைய செலவில் அதிகமாகச் சாப்பிடுகிறவன், மயக்கத்தினால் வேலையை அசட்டைசெய்கிறவன், சத்தியமார்க்கத்தைப் பழித்து கெட்டவழிகளில் தன்காரியத்திற்காகச் செல்லுகிறவன், வேறு யோக்கியதையுள்ள புருஷனுடைய சேவைசெய்வதற்கன்னியில் தன் சீடருக்கு சுயசேவையின் அவசியத்தையே உபதேசிக்கிறவன், சத்தியவித்தை முதலானவைகளை விரோதிக்கிறவன், உலகவிரோதி அதாவது மனைவிபுருஷன் தாய் தகப்பன் பெண்பிள்ளைகள் அரசன் குடிமக்கள் இஷ்டமித்திரர்கள் முதலானவர்களைப் பகைத்துக்கொள்ளுகிறவன், இக்குணங்களெல்லாம் கெட்டபாத்திரத்தினுடைய இலட்சணங்களாகும்.

பிரம்மச்சாரி, அடக்கப்பட்ட இந்திரியங்களை யுடையவன், வேதவித்தைகளை ஓதுகிறவன், நற்குணமுள்ளவன், சத்தியவாதி, பரோபகாரப்பிரியன், புருஷப்பிரயத்னமுள்ளவன், உதாரகுணம் வித்தை தர்மம் இவைகளுடைய நிரந்தர மேன்மையைச் செய்கிறவன், தர்மாத்மா, சாந்தம் நிந்தை ஸ்துதிஇவைகளில் சந்தோஷம் துக்கமில்லாதவன், பயமற்றவன், பிரயத்தனமுள்ளவன், யோகி ஞானி சிருஷ்டித்தன்மை, வேதங்களினுடைய ஞானம் ஈச்வரனுடைய குணகர்மஸ்வபாவம் இவைகளின் பிரகாரம் நடக்கிறவன், நியாயவழிப் பிரகாரம் பக்ஷபாதமன்னியில் சத்தியோபதேசம் சத்தியசாத்திரங்களை ஓதுவித்து ஓதுவிக்கிறவன், முகஸ்துதி செய்யாமலிருக்கிறவன், உள்ளதை உள்ளவாறே புகழ்ந்துபேசுகிறவன், தன்னுடையதைப்போலவேஇதரர்களுடைய சுகதுக்கம் கஷ்டம், லாபம் முதலானவைகளை அறிகிறவன், அறிவின்மை சந்தோஷம், பிடிவாதம் பேராசை முதலியவைகளன்னியிலிருக்கிறவன், அம்ருதத்திற்குச் சரியாய் இகழையும், விஷத்திற்குச்சரியாய் புகழையும் கருதுகிறவன், சந்தோஷத்துடன் கொடுப்பதை திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுகிறவன் ஆபத்துக்காலத்திலும் கேட்டுக்கொடாதவர்களை நிந்திக்காமலும் கோபித்துக் கொள்ளாமலும் அங்கிருந்து திரும்பிவருகிறவன், சுகபுருஷர்களுடன் சினேகப்பான்மையுடனும்

துக்கப்பட்டவர்களிடத்தில் கருணையுடனும் புண்யாத்மாத்மாக்களிடத்தில் ஆனந்தத்துடனும் பாபிகளிடத்தில் "உபேக்ஷா" அதாவது ராகத்துவேஷ மன்னியிலும் இருக்கிறவன், சத்தியத்தை பெரிதுங் கருதுகிறவன், சத்தியவாதஞ் செய்கிறவன், கபடமில்லாதவன், பொறுமை துவேஷ மன்னியில் பெரு நோக்கு உடையவன், சத்புருஷன், தர்மத்துடன் கூடினவன், துராசாரமில்லாதவன், தன்னுடல் பொருள் ஆவி மூன்றையுங்கொண்டு பரோபகாரம் செய்வதிலேயே சிந்தனை கொண்டு பிறர்களுடைய சுகத்திற்காக தன்னை அர்ப்பணஞ் செய்கிறவன், ஒஷ்டி சுபலக்ஷணங்களுடன் கூடினவனே நல்லபாத்திரமாகிறுன். ஆனால் பஞ்சகாலங்களிலும் ஆபத்துக்காலங்களிலும் அன்னபானவஸ்திரம் ஔடதம் முதலியவைகளுக்குச் சகலமானவர்களும் யோக்கியதையுள்ளவர்கள்.

வினு :—ஈகையாளர்கள் எத்தனைவகைப்படுவார்கள்?

விடை :—மூன்றுவகை. உத்தமன், மத்தியமன், நிகிருஷ்டன். தேச காலம் பாத்திரம் இவைகளையறிந்து, சத்தியவித்தை தர்மம், பரோபகாரம் இவைகளுடைய மேன்மைக்காகத் தானம்செய்கிறவனே உத்தமன். தன் புகழுக்காகவும் நலத்திற்காகவும் தானம்செய்கிறவன் மத்தியமன். தன்னுடையவும் இதரர்களுடையவும் நன்மைக்காக உபதேசஞ்செய்யாமல் விலைமாதர், முகமன்பேசுகிறவன், கோமாளி, முதலானவர்களுக்குக் கொடுக்கிறவன், கொடுக்குமுன் ஏளனம் அவமானம் செய்கிறவன், பாத்திரம்—நல்லது கெட்டது—அறியாமல், எல்லா சாமான்களையும் ஒரேவிலைக்கு விற்கிற கடைக்காரனைப்போல் கொடுக்கிறவன், தன்சுகத்திற்காகவும், நன்மைக்காகவும் தர்மாத்மாக்களைத் துன்புறுத்துகிறவன் இவர்களே நிகிருஷ்டமானவர்கள். அதாவது நன்குவிசாரித்து வித்வான் தர்மாத்மாக்களை மரியாதை செய்கிறவன் உத்தமனுகவும், விசாரணையொன்றுமன்னியில் தன்புகழுக்காகச் செய்கிறவன் மத்தியமனுகவும், குருட்டுத்தனமாய் பலனற்றதானத்தைச் செய்கிறவன் நிகிருஷ்டனுகவுமாகிறுன்.

வினு :—தானத்தினுடைய பலன் இவ்வுலகிலேயே கிடைக்குமா? அல்லது பரலோகத்திலேயா ?

விடை :—எங்கும் கிடைக்கும்.

வினு :—தானுகவே உண்டாகுமா அல்லது பிறர்களாலுண்டாகுமா?

விடை :—பயனையளிக்கிறவர் ஈச்வரனே. திருடர்கள் முதலானவர்கள் சுயமாகவே சிறையை அடைய விரும்புகிறதில்லை. அரசனே அவர்களை வலுவிலனுப்புகிறுன். தர்மாத்மாக்களுடைய சுகத்தைத்தேடி திருடன்முதலானவர்களிடமிருந்து காப்பாற்றி அவர்களுக்கு நல்லதை அவன் அளிக்கிறுன். அவ்விதமே பரமாத்மா எல்லோருடைய பாபபுண்ணியத்திற்கேற்ற வண்ணம் சுகதுக்கரூபமான பலனை யளிக்கிறுர்.

வினு :—கருடபுராணம் முதலானவைகளெல்லாம் வேதார்த்தத்தையாவது, வேதங்களையாவது, மேன்மைப்படுத்துகிறதா? இல்லையா?

விடை :—இல்லை. வேதங்களுக்கு விரோதமாய் மாறுபட்டவைகளைப் போதிக்கிறது. தந்திரங்களுமப்படியே. புராணங்களையும் தந்திரங்களையும் நம்புகிறவன் ஒருவனுடைய மித்திரனுகவும் உலகவிரோதியாகவுமாகிறுன். ஏனெ

னில் ஒருவருக்கொருவர் விரோதஞ்செய்யுந்தன்மை யுடையதாயிருக்கிறது. வித்வான் என்றழைத்துக்கொள்ளும் எவனும் இதைநம்பக் கூடாது. நம்புவது அறிவின்மையின் அடையாளமாகும்

உபவாச தினங்கள்.

சிவபுராணப் பிரகாரம் திரயோதசி சோமவாரம், ஆதித்திய புராணப்பிரகாசம் ஞாயிற்றுகிழமை, சந்திரகண்டப்ரகாரம் செவ்வாய், புதன், வியாழன் வெள்ளி, சனிக்கிழமை, விஷ்ணுபுராணப பிரகாரம் ஏகாதசி, வாமன பிரகாரம் துவாதசி; நிருசிம்மம் அனந்தப் பிரகாரம் சதுர்தசி, பௌர்ணமி; திக்பாலர்களுக்குத் தசமி; துர்கா தேவதைக்கு நவமி; வசுக்களுக்கு அஷ்டமி; முனிகளுக்குச் சப்தமி; ஸ்வாமி கார்த்திகைக்குச் சஷ்டி; நாகபஞ்சமி; கணேசருக்குச் சதுர்த்தி; கௌரிக்குத் திருதீயை; அச்வனிகுமாரருக்குத் துவிதீயை; அத்தியாதேவிக்குப் பிரதமை; பித்துருக்களுக்கு அமாவாசை; இத்தினங்களில் உபவாசம் இருக்கவேண்டும். இத்தினங்களில் எம்மனிதன் எங்கிருந்தபோதிலும் அன்னபானம் செய்வானேயானல் நரகத்தை யடைவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்நாட்களிலும் திதிகளிலும் போப்பும் அவருடைய சிடர்களும் சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் நரகத்தை யடைந்தவர்களாவார்கள். பைத்தியகார்களாலெழுதப்பட்டிருக்கிறநிர்ணயசிந்து, தர்மசிந்து, விரதார்க்க முதலானவைகள் கூறுவண்ணம் சைவர்கள் ஏகாதசியன்று விரதமிருக்க, மற்றவர்கள் துவாதசிதினத்தன்றே ஏகாதசி விரதமிருக்கும்படியான அநியாயத்தைச் செய்துவிட்டது. விரதமிருப்பதிலுங்கூட சண்டை சச்சரவுகளை விளைத்திருக்கும்படியான போப்லீலைகளை என்னவென்பது? அவர்களுள் தயையென்பதே கிடையாது. ஏகாதசிவிரதம் தன் சுயநலத்திற்காகவே விதிக்கப்பட்டிருக்கிறது.

एकादश्यामन्ने पापानि वसन्ति ।

உள்ளபாபம் சகலமும் ஏகாதசி தினச்சாப்பாட்டிலிருக்கிறது. சாப்பாட்டில் யாருடைய பாபங்களிலிருக்கிறது? எனப்போப்களைக்கேழ்க்கவேண்டும்? உன்னுடையதா? உங்கப்பனுடையதா? ஏகாதசிச்சாப்பாட்டில் சகலபாபங்களும் ஒருங்கே கூடியிருக்கிறதென்றால் அந்நாளில் ஒருவருக்கும் துக்கமும் கஷ்டமும் இருக்கவேகூடாது. ஆனல் கடும்பசி தாகம் துக்கம், எல்லாம் அன்றேதானிருக்கிறது!! பாபத்தினுடைய பயன் துக்கம். சாப்பிடாமல் விரதமிருப்பதுபாபம். இதை பெருமகிமையாகப் புகழ்ந்திருக்கிறார்கள். ஒன்றுமறியாத பேதைகள் இவ்விதக் கதைகேட்டு உண்மையென நம்புகிறார்கள்.

பிரம்ம லோகத்தில் வேசி ஒருவளிருந்தாள். அவள் தப்புசெய்துவிடவே பூமியில் விழுந்துவிடவேண்டியதென்று சாபமுண்டாச்சுது. துதித்து மறுபடியும் என்னசெய்து நான் சுவர்கத்தையடைய முடியுமென்றுவினவினாள். அதற்கு அவர் ஏகாதசிவிரதபலனை உனக்கு எவராவது அளித்தால் நீ சுவர்க்கத்திற்கு வரமுடியுமென்றார். ஆகாயவிமானத்துடன் பட்டணம் ஒன்றில் விழுந்தாள். அவ்வூர் அரசன் நீயார் என்று அவளைக்கேட்டான். நடந்த வர

லாற்றையெல்லாம் கூறிவிட்டு ஏகாதசி விரதபலனை யாராவது அர்ப்பணஞ் செய்துவிட்டால் நான்சுவர்க்கத்தைச் சேரமுடியுமென்ருள். அரசன் நகரமுழுதும தேடிப்பார்த்தும் ஏகாதசிவிரதமிருந்தவர்கள் எவரும் கிடைக்கவில்லை. ஒருநாள் சூத்திரஸ்திரீ புருஷனிருவருக்கும் மனஸ்தாபமுண்டாகி கோபத்தினல் மனைவியானவள் இரவும்பகலும் உண்ணுமலிருந்தாள். தெய்வ வசத்தால் அன்று ஏகாதசி தினமாயிருந்தது. இராஜசேவர்கள் கேட்டபொழுது அவள் நான் ஏகாதசி என்று [illegible] தேசசையாய் சாப்பிடாமலிருந்தேன் என்று [illegible] சொன்னதை அவர்கள்கேட்டு அவளை அரசன் முன்கொண்டுவந்தார்கள். ஆகாயவிமானத்தைத்தொடு எனவே அவள்தொட்டாள். அதுவும் உடனே மேலே எறிப்பறந்தது. ஞாபகமன்னியிலிருந்த ஏகாதசிவிரதபலன் இவ்வளவிருக்கும்பொழுது தெரிந்து ஞாபகத்துடன் செய்தால் அளவில்லாப்பலன்கள் ஏன் உண்டாகாது?

ஐயோ! குருட்டு ஜனங்களே! நீங்கள் கூறுவது உண்மையானல் வெத்திலை பாக்கு பீடி, சுவர்க்கத்தில் இல்லாததினல் அவைகளையனுப்ப விரும்புகிருேம். ஏகாதசிவிரதமிருக்கிற சகலருடைய பயனும் நமக்குக்கிடைக்கட்டும். ஒருவெற்றிலை அங்குபோய் சேருமேயானல் லக்ஷக்கணக்கான இலைகளை அங்கு அனுப்புவோம். நாங்களும் உபவாசமிருப்போம். ஒருஇலையாவதுபோய்ச்சேராமற்போனல் உபவாசத்தினல் உண்டாகும் மரண ஆபத்திலிருந்து உங்களைக் காப்பாற்றுவோம். அவர்கள் ஏகாதசி இருப்பத்திநான்கிற்கும் தகுந்தபெயர் கொடுத்திருக்கிருர்கள். ஒன்றுக்கு '**தனதா**' (பொருளைக்கொடுப்பது) மற்ருென்றுக்கு '**காமதா**' (மனேபீஷ்டங்களைப் பூர்த்திசெய்வது) இன்னென்றுக்கு **புத்திரதா** (மக்கட் பேரையளிப்பது) வேருென்றுக்கு **நிர்ஜலா** (தண்ணீரில்லாதது) என்றுபெயரளித்திருக்கிருர்கள்.

ஏழைஜனங்கள் அநேகம்பெயர்கள், ஆசையுள்ளவர்கள், வம்சமில்லாதவர்கள், ஏகாதசிவிரதங்காத்ததினல் கிழவர்களாய் இறந்து போயிருக்கிருர்கள். பொருள், இஷ்டசித்தி, மக்கட்பேரு ஒன்றும் உண்டாகவில்லை. ஒருமணிநேரம் தண்ணீர் அருந்தாமல் போனல் சோர்வையடையும் படியான ஜியேஷ்ட்ட (வைகாசி - ஆனி) மாத சுக்லபக்ஷத்தில் விரதமிருப்பதினல் கடுந்துக்கத்தையும் கஷ்டத்தையும் அடைகிருர்கள். வங்காள தேசத்து விதவைகளே இவ்விரதத்தினல் பெருந்துக்கதிற்கு ஆளாகிருர்களாம். இறைச்சிக்காரனுக்கு- இதை யுண்டுசெய்த- இதைஎழுதுங்கால் மனதில் கொஞ்சங்கூட இரக்கம் இல்லாமலிருந்ததே. இரக்ககுணமுள்ள நெஞ்சமாயிருக்குமே யானல் ஜலத்தை, ஜலமென்றும், **பௌஷ்யமாத** சுக்லபக்ஷ ஏகாதசியை நிர்ஜலமென்றும் அழைத்திருக்கும். அவ்விதம் செய்திருந்தால் கொஞ்சம் நலமாயிருக்கும். தயையினல் போப்களுக்குயாது ஆகவேண்டும்? "எவனிருந்தாலும் இருக்கட்டும், இறந்தாலும் இறக்கட்டும். எவ்விதத்திலாயினும் போப்களுடைய வயிறு நிறையவேண்டும்!! என்றுபழமொழியைக்கைக்கொண்டதாகவிருக்கிறது. கர்ப்பஸ்திரீகள், கலியாணமான ஸ்திரீ புருஷர்கள், சிறுவர்கள், சிறுமிகள் உபாவாசம் மிருக்கவேகூடாது. விரதமிருக்கவேண்டுமென்ருல் பசியில்லாத

தினத்திலும் அஜீர்ணமானதினத்திலுமே இருக்கவேண்டும். அச்சமயங்களில் பால்அல்லது சர்க்கரையுடன் கலந்தஜலத்தை குடிக்கவேண்டும். பசியிருக்குங் காலத்தில் சாப்பிடாமலும், பசியில்லாதகாலத்தில் சாப்பிட்டு மிருக்கிறவன் பலவித பிணிகளை யடைந்து துன்பங்களை அனுபவிப்பான். இப்வைத்தியக்காரர்கள் எழுதுவதை யாரும் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளுதல் கூடாது.

மதப்பிரிவினைகள்.

குரு சிஷ்ய மந்திரோபதேசம, மதப்பிரிவினைகள் பலவகைகளுடைய கொள்கைகள் இவைகளைப்பற்றி விவரிப்போம்.

வினா:—விக்கிரக ஆராதனைக்காரர்கள் முதலானவர்கள் சொல்லுகிறதாவது. வேதங்கள் அநித்தியமானது. இருக்வேதத்திற்கு 21 சாகைகளும், யஜுர் வேதத்திற்கு 101 சாகைகளும், சாமவேதத்திற்கு 1000 சாகைகளும், அதர்வ வேதத்திற்கு 9 சாகைகளும் முறையே உண்டு. இவைகளில் சிலசாகைகளே யிருக்கின்றன. மிகுதியானவைகளெல்லாம் இழந்துபோய் விட்டன. அவைகளிலேயே விக்கிரக ஆராதனைக்கும் தீர்த்த யாத்திரைக்கும் பிரமாணமிருக்கின்றன. இல்லாமற் போயிருந்தால் புராணங்களில் எங்கிருந்து வரும்? காரியங்களிலிருந்து காரணத்தை யறியமுடியும்பொழுது புராணங்களைப்பார்த்து விக்கிரக ஆராதனைக்குப் பிரமாண மிருக்கு மென்பதில் சந்தேக மென்ன?

விடை:—மரத்தைப் போலவே கிளைகளிருக்கும். அதற்கு மாறுபாடா யிராது. கிளைகள் பரிமாணத்தில் வித்தியாசப்பட்டிருந்த பொழுதிலும் விரோதப்பட்டதாயில்லை. கிடைக்கும்படியான சாகைகள் எல்லாவற்றிலும் விக்கிரக ஆராதனைக்கும் தீர்த்த யாத்திரைக்கும் பிரமாணங் கிடையாது. ஆகவே இழந்துபோன சாகைகளிலும் கிடையாது. வேதங்கள் நான்கும் கிடைக்கின்றன. அவைகளுக்கு மாறுபாடாய் சாகைகளிராது. விரோதமானதைச் சாகைகளால் சரியென்றும் கூறமுடியாது. ஆகவே புராணங்கள் வேதங்களுடைய சாகையாகாது. கட்சி பிரதிகட்சிக்காரர்களாலெழுதப் பட்டதும், ஒன்றுக் கொன்று வேறுபடுகிறதுமான புஸ்தகங்களாம். வேதங்கள் பரமேச்வரனால் செய்யப்பட்டதென்று நீங்கள் நம்பினால் முனிகளின் பெயரால் பிரசித்தமாயிருக்கும் ஆச்வலாயனம் முதலானவைகளை வேதங்களுக்குச் சரியாய் ஏன் நினைக்கக் கூடாது? கிளைகளையும் இலைகளையும் கண்டு அரசமரம், வடமரம், மாமரம், என்று மரங்களை தெரிந்து கொள்ளுவது போல் ரிஷிமுனிகளால் எழுதப்பட்ட வேதாங்கம், நான்கு பிராம்மணம், அங்கம், உபாங்கம், உபவேதம் முதலியவைகளைக் கண்டு வேதார்த்தத்தை அறிகிறோம். ஆகையினாலேயே இவைகளைச் சாகையென்று கருதுகிறார்கள். வேதங்களுக்கு விரோதமானவைகள் பிரமாணமாகவும் அவைகளுக்கு அநுகூலமானவைகள் அப்பிரமாணமாகவுமாகா. இழந்த சாகைகளைக் கொண்டு விக்கிரக ஆராதனை முதலானவைகளை ஸ்தாபிக்கப் பிரமாண முண்டென்றால் இப்பொழுது வழக்கத்திலிருக்கும் படியான வருணாச்ரம தர்ம விதிகள் இருக்கிற சாகைகளுக்கு விரோதமானதெனலாம். அதாவது சூத்திரனை அல்லது ஓதுக்கப்பட்டவனைப் பிராம்மணனென்றும், பிராம்மணனைச் சூத்திரன் அல்லது

ஒதுக்கப்பட்டவன் என்றும், அநியாயமாயிருப்பதை நியாயமென்றும், கடமையைக் கடமையல்லவென்றும் பொய்ப் பேசுதலைத் தர்மமாகவும் உண்மை உரைப்பதை அதர்மமாகவும் எழுதியிருத்தல் வேண்டும். வேறெவ்விதம் நீங்கள் பதிலளிப்பீர்கள்? இழந்து போனசாகைகள் வேதங்களுக்கு அநுகூலமாயும் இருக்கிற சாகைகளின் பிரகாரம், வருணசிரம தர்மத்தையும் நாம் நம்பவேண்டியது அவசியமாகும். அதாவது பிராம்மணர்களுடைய பெயர் பிராம்மணன், சூத்திரர்களின் பெயர் சூத்திரன். அப்படியில்லாவிடில் வர்ண ச்ரமதர்மவிதி முதலானவைகள் மாறுபட்டுவிடும். ஜைமினி,வியாசர்,பதஞ்சலி முதலானவர்களுடைய காலம் வரையில் சகல சாகைகளும் இருந்ததென்று நம்புகிறீர்களா இல்லையா? நம்பினால் விக்கிரக ஆராதனை முதலிய வழக்கங்களை ஏன் அவர்கள் குறிப்பிடவில்லை? நம்பவில்லை யென்றால் இழந்துபோன சாகைகளிலிருந்த தென்பதற்கு ஆதாரம் என்ன? ஜைமினி மீமாம்சத்தில் சகல கர்ம காண்டத்தையும், பதஞ்சலி யோகசாத்திரத்தில் உபாசனகாண்டம் முழுவ்தையும், வியாசர் சாரீரிக சூத்திரத்தில் ஞானகாண்டம் சகலத்தையும், வேதானுகூலமாய் எழுதியிருக்கிறார்கள். மண், கல், முதலிய விக்கிரக ஆராதனை, பிரயாகை முதலான தீர்த்த யாத்திரை இவைகளின் பெயர்கூட இந்நூல்களில்லை. இல்லாமலிருந்த எங்கிருந்து எழுதக்கூடும்? வேதங்களிலிருந்தால் அவர்கள் எழுதாமலிருந்திருக்க மாட்டார்கள். ஆகவே இழந்துபோன சாகைகளிலும் மூர்த்திபூஜை முதலியவைகளுக்குப் பிரமாணங் கிடையாது. இச்சாகைகளெல்லாம் ஈச்வரனால் செய்யப்பட்ட வேதமாகாது. ஏனெனில் இவைகள் வேத மந்திரத்தின் சிலவற்றின் உரைகளாலும் ஸ்திரீ புருஷர்களுடைய ஜீவிய சரித்திரங்களினாலும் நிறைந்திருக்கிறது. இவைகளெல்லாம் வேதங்களாகாது. வேதங்களில் மனிதனுடைய ஜீவிய சரித்திரம் கிடையாது. அவைகளில் வித்தையின் உபதேசமே செய்யப்பட்டிருக்கிறது. மனிதன் ஒருவனுடைய பெயர் கூடக் கிடையாது. ஆகவே விக்கிரக ஆராதனை எப்பொழுதும் தள்ளப்பட்டதே. மூர்த்தி பூஜை ஸ்ரீராமச்சந்திரன் ஸ்ரீகிருஷ்ணன், நாராயணன் சிவன் முதலானவர்களை, பெரும் நிந்தைக்கும் ஏளனத்திற்கும் காரணமாக்கி விட்டது. அவர்கள் போற்றதக்க ராஜாதிராஜாக்களென்றும் அவர்களுடைய மனைவிகளான சீதா, ருக்மணி லக்ஷ்மி பார்வதி முதலானவர்கள் பெரும் மகாராணிகளென்றும் உலகம் அறிந்த விஷயமேயாகும். அவர்களுடைய விக்கிரகங்களை ஆலயங்களில் ஸ்தாபித்து பூசாரிகள் அவர்களுடைய பெயரால் பிச்சையெடுக்கிறார்கள். அவ்விதம் செய்வதினால் அவர்களை ஆண்டிகளாகச் செய்து விட்டார்கள். "மகாராஜ்! சேட்!! சாவுகாரி!!! பெரியோர்களே வாருங்கள், தரிசனஞ்செய்யுங்கள். சரணாம்ருதத்தை யருந்துங்கள். கொஞ்சம் ஏதாவது கொடுங்கள். சீதாராம், கிருஷ்ண, ராதாகிருஷ்ண, லக்ஷ்மீநாராயண, மகாதேவ பார்வதி இவர்களுக்கு மூன்று தினமாக அன்னபானங்கிடையாது.

இன்றைக்கும் இவர்களிடம் ஒன்றுமில்லை. சீதை முதலானவர்களுக்குப் புதிய மூக்குப் பொட்டு ஒன்று செய்து கொண்டு வாருங்கள். அம்மா! அவர்களுக்கு அளிக்க அன்னம் முதலியவைகளை யனுப்புங்கள். ராமகிரு

ஷ்ணர்கள் சாப்பிடட்டும். எல்லோருக்கும் ஆடை உடைகள் கிழிந்ததாயிருக்கிறது. கோவில் மண்டபத்தில் பழுது, எனவே ஒழுகுகிறது. விக்கிரகத்திற்கென்றிருந்த சிலவற்றையும் திருடர்கள் திருடிக்கொண்டு போய் விட்டார்கள். கொஞ்சம் எலிகளால் நாசஞ்செய்யப்பட்டுப் போய்விட்டது. கண் கூட்டிலிருந்து ஒரு நாள் விழியை எடுத்துக் கொண்டோடி விட்டது. எங்களால் வெள்ளிக் கண் திரும்பவைக்க முடியாதாகையினால் கிளிஞ்சலை வைத்திருக்கிறோம்." என்று கூவி பிச்சை யெடுக்கிறார்கள். ராமலீலையும், ரசக்கிரீடையும நடித்துக் காண்பிக்கிறார்கள். சீதாராம், ராமகிருஷ்ணனுடைய நாட்டியத்தை நடனஞ் செய்கிறார்கள். அச்சமயங்களில் அதிகாரிகள் ராஜா, மகந்து முதலானவர்கள் அதைக் கண்ணுற்றுப் பார்க்கிறார்கள். சீதையும் ராமரும் ஆலயத்தில் நின்று கொண்டிருக்கும் பொழுது பூஜாரி மகந்து இவர்கள் சுகமாய் பீடத்திலாவது அல்லது மஞ்சத்திலாவது தலையணையை ஆதாரமாக வைத்துக் கொண்டு சாய்ந்து உட்கார்ந்திருக்கிறார்கள். வெயில் காலத்திலுங் கூட தாழ்ப்பாளிட்டு உள்ளடைத்து விட்டிருக்கிறார்கள். தாங்கள் நல்ல காற்றில் கட்டிலை விரித்துப் போட்டுக் கொண்டுத் தூங்குகிறார்கள். பூஜாரிகள் தங்களுடைய நாராயணனை டப்பியில் மூடிவைத்து துணியைக் கொண்டு வெளியில் சுற்றி, குரங்குகள் தங்கள் குட்டியை கழுத்தில் தொங்க விட்டுத் தூக்கிக் கொண்டு போவது போல் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். விக்கிரகத்தை எவராவது உடைத்து விடுவார்களேயானால் அப்பொழுது அழுகுரலுடன் மாரை அடித்துக் கொண்டு "சீதாராமர், ராதாகிருஷ்ணர், சிவன் பார்வதிஇவர்களைத் துஷ்டர்கள் உடைத்து விட்டார்கள். வேறொரு விக்கிரகத்தை நல்ல ஆட்களைக் கொண்டு சலவைக் கல்லால் செய்து பூஜை செய்யவேண்டுமென்று" புலம்புகிறார்கள். நாராயணனுக்கு நெய் யில்லாமல் ஆகாரம் அளிக்க முடியாது, "உன்னால் அதிகமாகக் கொடுக்க முடியாமற் போனாலும் கொஞ்சமாவது கொடுத்தனுப்ப வேண்டியது" என்கிறார்கள். ரசக்கிரீடை ராமலீலை, முதலானவைகளுடைய முடிவில் சீதை, ராமன், கிருஷ்ணன் ராதை வேடந்தரித்துக் கொண்டிருக்குஞ் (சிறுவர்களை) அனுப்பி (பார்க்கிறவர்களிடமிருந்து) பிச்சை யெடுக்கச் சொல்லுகிறார்கள். உத்சவம் அல்லது சந்தை நாட்களில் பையன் ஒருவனை யழைத்து தலையில் மகுடத்தை வைத்து கிருஷ்ணனாக மாற்றி நடுத் தெருவில் நிற்கவைத்து பிச்சை யெடுக்கச் சொல்லுகிறார்கள். இது எவ்வளவு அவமானமான செய்கை யென்று இதைப் படிக்கிறவர்களே ஊகித்துங்கொள்ளட்டும். சீதை ராமன் முதலானவர்கள் இவ்வளவு ஆண்டிகளாகவும் பிச்சைக்காரர்களாகவுமா விருந்தார்கள்? இப்படிச்செய்து காண்பிப்பதினால் அவர்களுக்கு ஏன் அவமரியாதையும் ஏளனமும் உண்டாகாது? இதனாலேயே மரியாதையுள்ளவர்களுக்கு நிந்தை உண்டாகிறது. அவர்களிருந்த காலத்தில் சீதை உருக்மணி லக்ஷ்மி, பார்வதி முதலானவர்களை நடுத்தெருவில் கடைமேடையில் நிறுத்திவைத்து "வாருங்கள்! இவர்களைத் தரிசனஞ் செய்யுங்கள். நைவேத்தியம் ஏதாவது படையுங்கள்" என்று சொல்லி யிருந்தால் இவ்விதச் செயல்களைச்செய்ய விட்டிருக்கமாட்டார்கள். இகழ்ச்சிக்கும், கேலிக்கும், ஆளாக்கி யிருந்தால் அவர்களைத்தண்டனை யன்னியில் விட்டிருக்கமாட்டார்கள். தண்டனையையடை

யாத பூஜாரிகள் அதிகரித்து, மூர்த்தி விரோதிகளுடைய கை யப்புடைத்தனு க்கு ஆளாகி இன்னும் இருக்கிறார்கள். இத்துன்மார்க்கத்தை விடும் வரையில் இருந்தே வருவார்கள். ஆரியவர்த்த நாட்டிற்குப் பிரதி தினமும் பெருந்தீங்கு விக்கிரக ஆராதனைக் காரர்களுடைய ஒடுக்கத்தினாலேயும் அவர்களுடைய துர் செயல்களினாலேயேும் விளைகிறது. ஏனெனில் பாபத்தினுடைய பலன் துக்கமாகும். விலங்குகள் முதலான விக்கிரகங்களுடைய நம்பிக்கையினால் வெகுஜனங்கள் தீங்கை யடைந்திருக்கிறார்கள். இத்தீய வழக்கத்தை விடாமல் போனால் பெருகிக் கொண்டே போகும். இவர்களில் (விக்கிரக பூஜை செய் கிறவர்களில்) பெரும் பாதகர்கள், வாமமார்க்கத்தவர்களே. அவர்கள் சாதார ணமான ஒருவனைச் சீடனாக்கிக் கொண்டால் கீழ்க்கண்ட தந்திரங்களை உபதே சஞ் செய்கிறார்கள்.

दं दुर्गायै नमः । भं भैरवाय नमः । ऐं ह्रीं क्लीं चामुण्डायै विच्चे ॥

தம் துர்காயை நமஹ (துர்காதேவியை வணங்குகிறோம்). பம் பைரவாய நமஹ (பைரவனை வணங்குகிறோம்) ஏம் ஹ்ரீம் கிலீம் சாமுண்டாயை நமஹ. வங்காளத்தில் ஏகாக்ஷரமந்திரத்தையே பெரும்பாலும் உபதேசஞ் செய்கி றார்கள்.

ह्रीं, श्रीं, क्लीं ॥

ஹ்ரீம், ஸ்ரீம், கிலீம், சீடர்கள் தனவந்தர்களாயிருந்தால் மந்திரம் முழு வதையும் கற்பிக்கிறார்கள். பத்து மகாவித்தையின் மந்திரங்களாவன

ह्रां ह्रीं ह्रुं बगलामुख्यै फट् स्वाहा ॥

ह्रुं फट् स्वाहा ॥

ஹராம், ஹ்ரீம், ஹ்ரூம், பகலா முக்யைபட், ஸ்வாஹா,

ஹ்ரூம், பட் ஸ்வாஹா,

பிறர்களைக் கொல்லுவதற்கும் பெண்களின் கற்பை யழிப்பதற்கும், கணவர்களிடமிருந்து அவர்களைப் பிரிப்பதற்கும் தன் வசமாக்கிக் கொள்ளுவ தற்கும் இன்னும் பலவற்றிற்கும் மந்திரங்களை உபயோகமாக்கிக் கொள்ளு கிறார்கள். இக்காரியங்களைச் சாதிக்க மந்திரத்தினாலாகாது. ஒருவனைக் கொல்ல முற்படுங்காலத்தில் கொலை செய்ய வேண்டுமென்கிறவரிடமிருந்து, முன்கொண்டே பேசின தொகையைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். கொலை செய்யவேண்டிய வனுடைய பிரதிமையொன்றை மாவினாலோ அல்லது மண்ணினாலோ செய்து அதனுடைய மார்பு, நாபி, கழுத்து, இவைகளில் கத்தியை நுழைக்கிறார்கள். கண், காது, கால்களில், ஆணியை அடிக்கிறார்கள் அதன் பேரில் பைரவன் அல்லது துர்காவினுடைய விக்கிரகம் ஒன்றைச் செதுக்குகிறார்கள். அதனுடைய ஒரு கையில் திரி சூலத்தைக் கொடுத்து ஹிருதயத்தில் குத்துகிறார்கள். பலிபீடம் ஒன்று செய்து மாம்சம் முதலான வைகளை ஹோமஞ் செய்துகொண்டு தூதர்களையனுப்பி விஷம் முதலானவை

களைக்கொடுத்து மரண உபாயத்தைத் தேடுகிறார்கள். இக்கிரியைகள் நடந்து கொண்டிருக்குங்கால் அவன் கொல்லப்பட்டு விட்டால் அவனை பைரவதேவருடைய சித்தன் என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள். "பைரவோ, பூத, நாதாஸ்ச" என்கிற பாடத்தையும் படிக்கிறார்கள்.

मारय, उच्चाटय, विद्वेषय, छिन्धि, भिन्धि, वशीकुरु, खादय, भक्षय, त्रोटय, नाशय, मम शत्रून् वशीकुरु, हुं फट् स्वाहा ॥

மாரய, உச்சாடய, வித்வேஷய, பிந்தி, வசீகுரு, காதய, பக்ஷய, த்ரோடய, நாசய, மமசத்ரூன் வசீகுரு, ஹூம் பட் ஸ்வாஹா, இம்மந்திரங்களை ஜபித்து மதுபானம் மாம்சாகாரம் இவைகளை மனங்கொண்ட வரையில் குடித்துங் கொண்டு இரண்டு புருவங்களுக்கும் நடுவில் செந்தூர திலகமணிந்து கொள்ளுகிறார்கள். சில சமயங்களில் ஆட்களைக் கொண்டு வந்து அடித்து ஹோமம் செய்து அவன் மாம்சத்தைக் காளி முதலானவைகளுக்குச் சமர்ப்பிக்கிறார்கள். பலி பீடத்திலிட்டு அதைச் சாப்பிடவும் சாப்பிடுகிறார்கள். பைரவீசக்கரத்தில் சேர்ந்து மாம்சாகாரம் மதுபானம் செய்ய மறுக்கிறவர்களைக் கொன்று அவனுடைய மாம்சத்தைப் பலி பீடத்திலிடுகிறார்கள். **அகோரிகள்** இறந்த சரீர மாம்சத்தையும் சாப்பிடுகிறார்கள். **அஜரீகளும் பஜரீகளும்** மலத்தைச் சாப்பிட்டு மூத்திரத்தையுங் குடிக்கிறார்கள். வாம மார்க்கத்தவர்களில் இருதிறத்தினர்க ளிருக்கிறார்கள். **சோளீமார்க்கி**—ரவிக்கை வழியைக் கைப் பற்றினவர்கள். **பீஜமார்க்கி**—விரை அல்லது பீஜமார்க்கத்தவர்கள்.

சோளீமார்க்கி

சோளீமார்க்கிகள்—தங்கள் மனைவிகள், புருஷர்கள் பிள்ளைகள் பெண்கள், சகோதரர்கள், தாய்மார்கள் நாட்டுப் பெண்கள்—ஒன்றாக ஒரு விடத்தில் ரகசியமாகக் கூட்டங்கூடி மதுபானம் செய்கிறார்கள். ஸ்திரீ ஒருவளை நிர்வாணமாகச் செய்து அவளுடைய இரகசிய இந்திரியங்களைப் பூஜித்து **துர்காதேவி** என்றும் அழைக்கிறார்கள். மனிதனொருவனை நிர்வாணமாகச் செய்து அவனுடைய இரகசிய இந்திரியங்களுக்குப் பெண்களெல்லோரும் பூஜை செய்கிறார்கள். மதுபானஞ் செய்து மயக்கம் தெளிந்த பிறகு அங்கு குமிழி யிருக்கும் ஸ்திரீகள் எல்லோரின் ரவிக்கைகளை ஒன்றாகச்சேர்த்து குலுக்கி ஒரு மட் பாண்டத்தில் வைக்கிறார்கள். ஒவ்வொருவனும் தனித்தனியாக அங்கு போய் பாண்டத்தினுள்ளிருக்கும் ரவிக்கை யொன்றை எடுத்துக் கொள்ளுவான். ரவிக்கைக் குரியவள்—தன்னுடைய தாய் சகோதரி பெண் நாட்டுப் பெண்—யாராயினும் அந்தச் சமயம் அவனுடைய மனைவியாவாள். மயக்கவேகத்தினால் ஒருவருக்கொருவர் செருப்பு முதலானவைகளினால் அடித்து சண்டை செய்து கொள்ளுகிறார்கள். இரவை இவ்விதம் கழித்த பிறகு பொழுது புலராம லிருக்கும் பொழுதே வீடடைந்து தங்கள், தாய், சகோதரி, பெண்கள், நாட்டுப் பெண்கள், முதலானவர்களைச் சரியாக அறிந்து அப்படியே நடத்தியும் வருகிறார்கள்.

பீஜமார்க்கிகள் சம்யோக சமயத்தில் ஜலத்தில் வீரியத்தைக் கலந்து குடிக்கிருர்கள். இத்தகைய ஈனக் காரியங்கள் முத்தியை யளிக்குமென்று நம்புகிருர்கள். சாதாரணமாக அவர்கள் அறிவு, விசாரணை சகவாசம் இல்லாதவர்கள்.

சைவம்.

வினு :—சைவர்கள் சரியானவர்களா?

விடை :—எப்படி சரியாகக் கூடும்? "பிரேத நாதனைப் போலவே பூத நாதனும்". வாமமார்க்கிகள் மந்திரோபதேசத்தினுல் பணத்தை அபகரிப்பது போலவே, சைவகர்களும் "ஓம் நமசிவாய :" என்பவைகளைப் போன்ற பஞ்சாக்ஷர மந்திரங்களை உபதேசஞ் செய்து உருத்திராக்ஷம், விபூதியணிந்து, மண், கல் முதலானவைகளினுல் லிங்கத்தைச் செய்து பூஜை செய்கிருர்கள். "ஹர ஹர, பம்பம்" என்கிற சப்தத்தை ஆடு கனைப்பதுபோல் கனைக்கிருர்கள். கரகோஷஞ் செய்வதினுலும் பம்பம், என்று சொல்லுவதினுலும் பார்வதி திருப்தி யடைகிருளென்றும், மகாதேவன் பஸ்மாசுரன் முன்னுல் ஓடின காலத்தில் கேலிச்சிரிப்பும் பம்பம் சப்தமும் உண்டானபடியினுல் அவர் திருப்தியடைகிறதில்லை என்று சொல்லுகிருர்கள். ஆட்டைப்போல் கனைப்பதினுல் பரமேச்வரன் திருப்தியடைகிருராம். பார்வதி திருப்தியடைகிறதில்லையாம். ஏனெனில் பார்வதியுடைய பிதா தக்ஷப்பிரஜாபதியுடைய தலைவெட்டுண்டு அக்னிகுண்டத்தில் எறியப்பட்டபொழுது, அவருடையசரீரத்தின் மேல் ஆட்டின் தலையைவைத்தார்கள். அப்பொழுது ஆட்டைப்போல்கனைத்தார். காற்று கிறைந்த கன்னங்களை மாறிமாறி அடிப்பதினுல் இச்சப்தம் உண்டாகும். சிவராத்திரி யன்று கண்விழிப்பார்கள். இவைகளெல்லாம் முத்தியையளிக்குமென்று நம்பிக்கைகொண்டே வாமமார்க்கிகளைப்போலவே இவர்களும் வழித்தப்பினவர்கள். துளைத்தகாதுடன்கூடின பக்கிரிகள், நாதர்கள், புரிகள், ஆரண்யர்கள், பர்வதர்கள், சாகரர்கள், கிரகஸ்தர்கள் இவர்களெல்லாம் சைவர்களே. சிலர் இரண்டு குதிரைகளிலும் சவாரி செய்வார்கள். அதாவது சைவம் வாமமார்க்கம் இரண்டையும் நம்புவார்கள். வைணவர்களாயுமிருக்கிருர்கள். தந்திரபுஸ்தகங்களிலொன்றில் கூறுவதென்ன வென்ருல்.

अन्तः शक्ता बहिश्शैवाः सभामध्ये च वैष्णवाः ।
नानारूपधराः कौला विचरन्ति महीतले ॥

அகத்தில் வாமமார்க்கிகள். வெளியில்சைவர்கள். அதாவது உருத்திராக்ஷம் விபூதிதரிக்கிறவர்கள். சமூகத்தின் நடுவில் வைணவர்களென்பார்கள். இம்மாதிரி பலவித வேஷங்களைத் தரித்துக்கொண்டு வாமமார்க்கிகள் உலகில் திரிந்து வருகிருர்கள்"

வைணவம்.

வினு :—வைணவர்கள் உண்மையானவர்களா?

விடை :—கொஞ்சங் கூட இல்லை,

அவர்களெப்படியோ இவர்களுமப்படியே. விஷ்ணுவின் தாசர்கள் என்கிறார்கள். ஸ்ரீவைணவர்களென்னும் படியான சக்காராங்கிதர்கள் எல்லோரையும் விட உயர்ந்தவர்களென்கிறார்கள். இது வீண் பொய்யே.

வினா: --என்ன இது இல்லாததா? எல்லோரையும்விட உயர்ந்தவர்களே. நாராயணனுடைய சரணமகலங்களையொத்த திலகத்தையும் ஸ்ரீயுடைய மஞ்சள்கோட்டையும் அணிந்துகொள்ளுகிறோம். இதனாலேயே நாங்கள் ஸ்ரீவைணவர்களாகிறோம். நாராயணனைத்தவிர வேறுயாரையும் பணிகிறதில்லை. லிங்கத்தின் தரிசனங்கூடசெய்கிறதில்லை. தரிசனம்செய்தால் எங்கள்நெற்றியிலிருக்கிற ஸ்ரீவெட்கப்படுகிறாள். ஆல் மந்தரம் முதலான தோத்திரங்களைப்படிக்கிறோம். நராய்ணனை மந்திரானுகூலமாப் பூஜைசெய்கிறோம். மாம்சம் சாப்பிடுவதில்லை. மதுபானம் செய்வதில்லை. எனவே உயர்ந்தவர்கள்.

விடை :—உங்களுடைய நெற்றியிலுள்ள அடையாளத்தை நாராயணனுடைய பாதமாகவும் மஞ்சள்கோட்டை ஸ்ரீயாகவும் நினைப்பதுவீணே. எனெனில் இது உங்களாலேயே தரிக்கப்பட்டது. ஊர்வலயானைநெற்றியிலெழுதுவது போல் உங்களுடைய நெற்றியிலும் எழுதிக் கொள்கிறீர்கள். நெற்றியில் விஷ்ணு பாதங்களுடைய குறிகள் எங்கிருந்து வந்தது? வைகுண்டம்போய் பாதங்களுடைய முத்திரையை நெற்றியில் கொண்டுவந்தார்களா? ஸ்ரீ சடமா? சேதனமா?

விடை :—சேதனம்.

வினா :—இக்கோடு ஜடமான படியினால் ஸ்ரீயாகாது. ஸ்ரீ செய்யப்பட்டவளா படாதவளா, வென்றுகேழ்க்கிறோம்? செய்யப்படாதவளா யிருந்தால் இது ஸ்ரீயாகாது, ஏனெனில் தினந்தோரும் இதை நீங்களே தரிக்கிறீர்கள். ஸ்ரீநெற்றியில் வாசம்செய்யும் பொழுது எத்தனை வைணவர்களின் முகம் சோபை யன்னியிலிருக்கிறது. நெற்றியில் ஸ்ரீ யிருக்கும்பொழுது வீடுவீடாக ஏன் பிச்சையெடுத்து வயிறு வளர்க்கவேண்டும்? வெட்கமற்றவும் பிடிவாதமுள்ளவர்கள் நெற்றியில் ஸ்ரீயை வைத்துக்கொண்டு பெருந் தரித்திரர்களைப் போல் நடிப்பது போலவேயாம்.

பரிக்கால் என்ற பெரும் வைணவபக்தன் ஒருவனிருந்தான். மற்றவர்களைக் கொள்ளையடித்துத் திருடி மோசம் செய்து பாசாங்குபண்ணி பணத்தைப் பெற்று வைணவர்களுக்களிப்பதில் அவனுக்குப் பெருஞ் சந்தோஷம். ஒரு சமயத்தில் அவனுக்குத் திருடுவதற்கு ஒன்றுங் கிடைக்கவில்லை. மோசம் செய்வதற்கும் துணை கிடைக்க வில்லை. எனவே, மனோவியாகூல மடைந்து திரிந்து கொண்டிருக்கும் பொழுது நம்முடைய பக்தன் துக்கத்திலிருக்கிறான் என்று விஷ்ணு அறிந்துகொண்டார். அதியவே பெரிய சாவகாரியைப்போல் வேஷந்தரித்துக்கொண்டு மோதிரம் முதலானவைகள் அணிந்து ரதத்திலுட்கார்ந்து விஷ்ணு, அவன் எதிரே வந்தார். பரிக்கால் அவரிடம் சென்று "இருக்கிற பொருள்கள் எல்லாவற்றையும் கழற்றிவிடு. இல்லாவிடில் உதைத்துக் கொன்றுவிடுவேன்" என்று உரக்கக் கூவினான். கழற்றுவதற்கு நாராயணன்

கொஞ்சம் தயங்கின படியினால் பரிக்கால் அவர் கை விரலைவெட்டி மோதிரத்தை எடுத்துக் கொண்டான். நாராயணன் களிப்படைந்து சதுர்புஜ சரீரத்துடன் தரிசனங்கொடுத்து "நீ என்னுடைய ஆப்தமான பக்தன். திருடு, கொலை, மோசம் முதலானவைகளினால் பொருள்களை அபகரித்து வைணவர்களுக்களிக்கிறாய். இதனால் நீ புனிதனாகிறாய்" என்றருளினார். பரிக்கால் சென்று சகல பொருள்களையும் வைணவர்களுக்கு அளித்தான். கப்பல் வியாபாரி ஒருவரிடம் பரிக்கால் வேலைக்கு அமரவே அவரும் ஒரு சமயத்தில் கப்பலில் தூர தேசத்திற்கு அழைத்துச் சென்றார். திரும்பி வரும் பொழுது வியாபாரி கப்பல்நிறைய கொட்டைப்பாக்கை நிறைத்திருந்தான். பரிக்கால் கொட்டைப் பாக்கு ஒன்றையெடுத்து இரண்டு சரி துண்டாக்கி ஒரு பாதியை கப்பலில் போட்டுவிட்டு "கப்பலில் பாதிப்பாக்குப்" பரிக்காலுடையது என்று வியாபாரியை எழுதச் சொன்னான். வியாபாரி அவ்விதம் எழுதவேண்டிய அவசியமில்லை, வேண்டுமானால் ஆயிரம் பாக்கு எடுத்துக்கொள் என்றார். அதற்குத் தான் மோசம்செய்கிறவனில்லை என்றும், பிறருடையதைத் தன்னுடையதென்று பொய் சொல்லுகிறவனில்லை யென்றும் தன்னுடைய பாதிப்பாக்கே தனக்கு வேண்டியதென்றும் சொன்னான். வியாபாரி ஒன்றுமறியாது எளிதில் மோசம் போனான். பரிக்கால் கோரினவண்ணம் எழுதிக்கொடுத்தார். கரைவந்தவுடன் கப்பற் சரக்குகளை இறக்குந்தருவாயில் பாக்கில் பாதியை பரிக்கால் கேட்க வியாபாரி கொடுத்தான். பரிக்கால் அதைப் பெற்றுக்கொள்ளாமல் கப்பலில் பாதி பாக்கு தன்னுடையதென்றும், அப்பங்கு தனக்குச் சேரவேண்டும் என்றும் சொன்னான். நியாயஸ்தலத்திற்கும் பிராது செய்து கொண்டான். நியாயாதிபதி வியாபாரிக்கு விரோதமாகவே தீர்ப்புத் தந்தார். பாக்கில் பாதிப் பங்கைபெற்றுக் கொண்டு வைணவர்களிடம் அவைகளைச் சமர்ப்பித்தான். இன்றும் பரிக்காலனின் விக்கிரகத்தை ஆலயங்களில் வைத்துப் பூஜை செய்கிறார்கள். இக்கதையைப் **பக்தமாலையில்** காணலாம். வைணவர்கள், அவர்களுடைய சிஷ்யர்கள், நாராயணன் இம்மூவர்களும் கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்த பூசாரிகளா, வென்பதைப் புத்திமான்கள் யோசித்தல் அவசியம். இவைகளொன்றிலிருந்து கொண்டு நல்லவனாயிருக்கலாம். ஆனால் எல்லாவற்றிலுமிருந்து கொண்டு எப்பொழுதும் நல்லவனாயிருக்க முடியாது. திலகத்திலும் மாலையிலும் வித்தியாசப்பட்டு எவ்வளவு விதங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறார்களென்பதைக் கவனிக்க வேண்டியது. ராமனந்திகள் கோபிச்சந்தனமும் நடுவில் சிகப்புக் கோடுடன் திலகமும் வைத்துக் கொள்ளுகிறார்கள்; நிமாவதர்கள் இரண்டு குறுகிய கோடுகளின் மத்தியில் கருப்புப் பொட்டு ஒன்றையும், மாத்வர்கள் நடுவில் கருப்புக்கோடு ஒன்றையும் அணிந்துகொள்ளுகிறார்கள். கௌடவங்காளிகள் வாளையொற்ற குறி, ராமப்பிரசாதிகள் இருபக்கமும் அரைச் சந்திரபிம்பமும் நடுவில் வட்டமான வெள்ளைக் குறியும் கொள்கிறார்கள். அவைகளின் கருத்தும் வகுப்புக் கேற்றவாறு மாறுகின்றன. ராமனந்திகள் சிகப்புக் கோட்டை நாராயணன் மார்பிலுள்ள லக்ஷ்மியெனவும் கோசாவிகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மார்பிலுள்ள ராதை யெனவும் எண்ணுகிறார்கள்.

பக்தமாலையில் கீழ்க்கண்ட சிறிய கதை யொன்றுண்டு.

மர நிழலில் ஒரு மனிதன் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். தூங்கிய வண்ணமே இறந்தும் போனான். மேலே யிருந்து காகம் ஒன்று எச்சமிட்டது. அவன் நெற்றியில் அது விழுந்து திலகமாக விளங்கிற்று. யமதூதர்கள் அவனை அழைத்துச் செல்லவந்தார்கள். அதே சமயத்தில் விஷ்ணு தூதர்களும் அங்கு வந்தார்கள். சரீரத்தை எடுத்துச் செல்லுவதில் சண்டையுண்டாச்சுது. சவத்தைத் தாங்கிச் செல்ல இருவர்களும் தங்கள் தங்கள் எஜமானனுடைய உத்திரவைக் காண்பித்தார்கள். விஷ்ணு தூதர்கள் "வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்ல எங்களுடைய எஜமானன் உத்திரவாயிருக்கிறது, பாருங்கள். நெற்றியில் வைணவதிலகம் இருக்கிறது, என்றார்கள். அப்பொழுது யமதூதர்கள் ஒன்றும் பேசாமல் ஒதுங்கினார்கள். விஷ்ணுவின் தூதர்கள் வைகுண்டத்திற்கு எடுத்துச் செல்ல நாராயணனும் அங்கு வந்தார். தானாகவே உண்டான திலகத்திற்கு இவ்வளவு மகிமை யுண்டானால் பிரேமையுடன் தன் கையினாலேயே தீட்டிக் கொண்டால் நரகத்திலிந்து மீறி வைகுண்டத்திற்குச் செல்வார்களென்பதில் என்ன அதிசயமிருக்கிறது? நெற்றியில் சிறு திலகம் வைத்துக் கொள்ளுவதினால் வைகுண்டம் போனால், முகம் முழுவதையும் அல்லது சரீரம் முழுவதும் கருப்பாக்கிக் கொள்வதினாலும் பூசிக்கொள்வதிலும் வைகுண்டத்திற்குப் போவார்களா? மாட்டார்களா? இவைகளெல்லாம் எனவே பொய்யென்று தோன்றவில்லையா?

வைணவர்களில் காகிகள் அநேகம்பேர்கள் இடுப்பைச்சுற்றித் துணியைக் கட்டிக் கொண்டு, அனல் முன் உட்கார்ந்து கொண்டு, சடையை வளரவிட்டு சித்தர்களுடைய வேடத்தைத் தரித்து பெருந்தியானத்திலிருப்பது போலிருக்கிறார்கள். கஞ்சா, அபினி, பங்கி, முதலியவைகளைக் குடித்து கண்களைச் சிவப்பு நிறமாகவும் கலங்கினதாவும் செய்து கொண்டு கைப்பிடிமாவு, தானியம், காசு, முதலானவைகளைப் பிச்சையெடுத்து கிரகஸ்தர்களுடைய மக்களை ஏமாற்றி தன் சீடர்களாக்கிக் கொள்கிறார்கள்.

இவர்கள் அனேகமானவர் தொழில் செய்யும் வகுப்பைச் சேர்ந்தவர்களே. அறிவையடைவதில் ஆசையுள்ளவர்களைக் கண்டால் அவர்களைப் படிக்கவும் விடாது, செய்யும் உபதேசமாவது.

சந்தர்கள் (தெய்விகத்தன்மை வாய்ந்தவர்கள்) படிப்பதினால் யாது பிரயோஜனம்? வித்தையை கற்கிறவர்கள் இறந்து போகிறார்கள். ஏன் படித்துப் பல்லை நாசமாக்கிக் கொள்ளவேண்டும்? சாதுக்கள் ஊரைச் சுற்றித் திரிந்து சந்தர்களுடைய பணிவிடை செய்து ராமருடைய பஜனையைச் செய்ய வேண்டும்.!!

மடத்தனம், அறிவின்மை இவைகளுடைய உருவத்தைக் கண்டறியாதவர்கள் காகியைத் தரிசிக்க வேண்டும். தன்னிடம் வரும் எல்லோரையும்—தன் பெற்றோர்களுடைய வயது ஆனவர்களான போதிலும்—குழந்தாய் என்றழைப்பான். காகிகளைப் போலவே ரூகட, கூம்கட, கோதரியர்கள், ஜமாதவாலர்கள், சூத்ரேசாயிகள், அகாலியர்கள், துளைத்த காதுகளையுடைய ஜோகிகளும்.

காகியும் பண்டிதனும்.

காகியுடைய சீடன் ஒருவன் பாடஞ் செய்யும் பொருட்டு ஸ்ரீகணேசாயநம: என்று சொல்லிக் கொண்டே யிருந்தான். சொல்லிக் கொண்டே கிணற்றிலிருந்து நீர் இழுக்கப் போனான். கிணற்றண்டையிருந்த வடமொழிப் புலவர் ஒருவர் "ஸ்ரீகணேசாஜன்னம" என்று சொல்லுவதைக்கேட்டு "ஏ சாது பிழையுடன் கூறுகிறீர். ஸ்ரீகணேசாயநம: என்று சொல்லவேண்டும் என்ருர். குடத்து நிறைய ஜலமிழுத்துக் கொண்டு குருவிடம் சென்று யாரோ 'பொம்மன்' (பிராம்மணன்) நான் பிழையுடன் ஜபிப்பதாகச் சொன்னான், என்றதைக் கேட்டதும் அவன் எழுந்திருந்து நேராகக் கிணற்றண்டை சென்று புலவரைப் பார்த்து" என்னுடைய சீடனைத் தப்பு வழியில் திருப்புகிறீர், சபிப்பேன். உனக்கு என்ன தெரியும். பார்,உனக்கு ஒரே பாடந்தான் தெரியும். எனக்கோ மூன்று தெரியுமே 'ஸ்ரீகனேசாஜன்னமே; ஸ்ரீகனேசாயநமே ஸ்ரீகனேசாயாநயமே என்ருன்.

புலவர்:—கேளும் சாது. வித்தையைப் பயிலுவது மிகவும் கஷ்டமானது. படிக்காமல் எதுவும் வராது.

காகி :—போ இங்கிருந்து. வடமொழிப் புலவர்கள் எல்லோரையும் உறிஞ்சி யிருக்கிருேம். உரலும் உலக்கையுங் கொண்டு பொடியாக்கி கஞ்சா கஷாயத்தில் கலந்து அப்படியே குடித்திருக்கிருேம். சந்தர்களுடைய பலமே பெரியது. பிதற்றுகிறவனை உனக்கு என்ன தெரியும்?

புலவர் :—நீ வித்தை கற்றறிந்தவனுயிருந்தால் என்னிடம் பிழை கண்டிருக்கமாட்டாய். முறையாக நடந்துகொள்ள உனக்குத்தெரிந்திருக்கும். காகி "நீ என்னுடைய குருவாகவா விரும்புகிருய்? உன்னுடைய உபதேசங்கள் எனக்கு வேண்டாம்" என்று பிதற்றினன்.

புலவர் :—கேழ்க்கிற புத்தி உனக்கு எங்கிருந்து வரும். உபதேசத்தைக் கேட்டுதெரிந்து கொள்ள அறிவு வேண்டுமே.

காகி :—சகல வேதம் சாஸ்திரங்களைப் படித்து சந்தர்களை சத்காரஞ் செய்யாதவர்கள் படித்தும் படிக்காதவர்களாகிருர்கள்.

புலவர் :—நான் சந்தர்களைக் கண்டு செவ்வனே பேணினவன். ஆனல் உன்னைப்போல ஒழுக்கநெறிகளில் தவறினவர்களைப் பணியேன். நல்லோர்கள் வித்வான்கள் தர்மமுள்ளவர்கள், பரோபகாரிகள் இவர்களே சந்தர்கள்.

காகி:—பாருங்கள். அல்லும் பகலும் நிர்வாணமாயிருக்கிருேம். எரிநெருப்பு முன்னல் எல்லாக் காலங்களிலும் உட்கார்ந்திருக்கிருேம். அதிகமாக கஞ்சா சாப்பிடுகிருேம்; மூன்றுசாடி பங்கி 24 மணிநேரத்திற்குள் குடிக்கிருேம். அபினி முதலிய லாகிரி வஸ்துக்களை நெய் சரி இவைகளைப்போல் சாப்பிடுகிருேம். விஷப் பாஷாணம் அபினி முதலானவைகளையும் சாப்பிடுகிருேம்; அல்லும் பகலும் குடிமயக்கத்திலிருக்கிருேம்; கவலை விசாரம் என்பது கிடையாது. எதற்கும் அஞ்சுகிறதில்லை (பிச்சையெடுத்து) வசிக்கிருேம்; பக்கத்தில்

படுத்துத் தூங்குகிறவர்களுக்குத் தூக்கம்வராவண்ணம் பார்ப்பதுகடமை என்பதை மறந்தோம். இத்தகைய அருங்குணங்களைப் படைத்தவர்களா யிருக்கிறோம். நீங்கள் ஏன் எங்களை தூஷிக்கவேண்டும்? பிதற்றுகிற சிறுவனே! ஞாபகத்தில் வைத்துக்கொள்!! என்னைமறுபடியும், தொந்திரவுசெய்தால் இக்கணமே பொடியாக்கி விடுவேன்''

புலவர்:—இந்த லக்ஷணங்களெல்லாம் சாதுவில்லாதவன், மூர்க்கன், எத்தன் இவர்களுடையதே. "சாத்னோதி பராணி தர்மகாரியாணி சாது:" சிறந்த தர்மகாரியங்களைச் செய்கிறவன் எப்பொழுதும் பரோபகாரச்சிந்தை யுள்ளவன் துர்குணமில்லாதவன், சத்யோபதேசத்தினால் சகலருடைய உபகாரத்தை யுஞ்செய்கிறவன், இக்குணமுடையவர்களையே சாது வென்கிறார்கள்.

காகி :—விலகிப்போ ? சாதுக்களுடைய கர்மங்களைப்பற்றி உனக்கு என்னதெரியும்?சந்தர்களுடைய பலம் பெரியது. அவர்களுடன் கைகலக்காதே. இரும்புக்குறடுகளைக் கொண்டு உன்தலையை உடைத்து விடுவார்கள்.

புலவர்:—நல்லது காகி. உங்கள் வீடுபோய்சேருங்கள். என்னுடன் கோபம் வேண்டாம். இப்பொழுது யாருடைய அரசாட்சி நடக்கிறதென்று அறியீர் போலும். நீங்கள் எவரையாவது அடித்தால் உங்களைக்கைதுசெய்து ஜெயிலுக்கனுப்புவார்கள். கசையடிப்பார்கள். அல்லது ஏற்றசிக்ஷையை யளிப்பார்கள். அப்பொழுது என்ன செய்வீர்கள். இதுவோசாதுக்களுடைய லக்ஷணங்கள்.

காகி :—கூட வா. என்சீட்டனை எந்தபெரும் பிசாசை என்னிடம் காண்பித்துக் கொடுத்தாய்?

புலவர் :—பெரியோர்களுடைய சேர்க்கை கிடையாது உனக்கு. இருந்திருந்தால் இவ்வளவு அடர்ந்த அஞ்ஞானத்திலிருக்கமாட்டாய்?

காகி :—நானே மகாத்மாவாச்சுதே. எனக்கு உபதேசம் சேர்க்கை எதற்கு?

புலவர் :—உன்னுடைய பாக்கியமும் புத்தியும் உடையவர்கள் பெரும் அதிருஷ்டக்காரர்கள்.

காகி தன்னிருப்பிடம் போய்சேர்ந்தான். புலவரும் வீட்டுப்பக்கமாகத்திரும்பி விட்டார். பொழுது சாய்ந்து.மாலைக்கால மாச்சுது. காகியைப் பெரியவனெனக்கருதிப் பல காகிகள் வந்து "உங்களுக்கு நமஸ்காரம் என்று சாஷ்டாங்கமாகப் பணிந்து உட்கார்ந்தார்கள். பிறகு இவன் ஒருவனைப் பார்த்து "நீ என்ன படித்தாய்—ராம்தாஸ்'' என்றான். 'பெரியாரே—நான் விஷ்ணு சஹஸ்ர நாமம் படித்தேன்'' என்றான். மற்றொருவனை நீ என்ன படித்தாய் எனறான். இன்னின்ன காகியுடன் ராம சத்வராஜ படித்தேன் என்றான் கோலாப்தாஸ் பிறகு ராம்தாஸ் குருவை நோக்கி "ஐயா நீங்களென்ன படித்திருக்கிறீர்கள்'' என்றான். காகி நாம் கீதையைப் படித்திருக்கிறோம் என்றார். ராம்தாஸ் யாரிடமிருந்து என்றான்.

காகி அதற்கு சிறுபிள்ளாய் தூர விலகிப்போ—நமக்கு குருயாருங்கிடையாது. நான் பிரயாகையிலிருந்தபொழுது ஒரு எழுத்துக்கூட தெரியாது. ஆடைகளை அதிகமாக அணிந்துகொண்ட ஒரு பண்டிதனைக்கண்டபொழுது கீதையை அவனிடம் எடுத்துக்கொண்டுபோய் எழுத்து ஒன்றைக் காண்பித்து முடியுடன் கூடின இவ்வெழுத்தின் பெயரென்ன வென்று கேட்டேன். இப்படியே கீதை அத்தியாயங்கள் பதினெட்டையும் படித்து முடித்தேன். குருவென்று ஒருவரையும் ஏற்றுக்கொள்ள வில்லை.

அறியாமை இம்மாதிரியானவர்களை தன்னிருப்பிடமாகச் செய்து கொள்ளாமற்போனால் வேறு யாரைத்தான் செய்துக்கொள்ளும். இவர்கள் உபகாரமானதை ஒன்றும் செய்கிறதில்லை. குடிக்கிறது; மயங்கிக்கிடக்கிறது; சண்டையிட்டுக் கொள்ளுகிறது; உண்கிறது; உறங்குகிறது; கைத்தாளத்தைக்கொட்டுகிறது; மணியடிக்கிறது; சங்கை ஊதுகிறது; கனிந்து கொண்டிருக்கும் நெருப்பின் முன்னால் உட்கார்ந்திருப்பது; தேசத்தின் பல திசைகளிலும் வேலையற்று வீணே சுற்றித் திரிகிறது; இதுவே இவர்களுடைய வேலையாகும். வேறொன்றுங் கிடையாது. காகிகளுக்கு அறிவைப் புகட்டுவதைவிட கற்களைக் கரைப்பது சுலபம். ஏனெனில் இதில் சேர்ந்த அனேகம் பேர்கள் வேலை யாட்கள்—தின சரிக்கூலிக்காரர்கள். தன் வேலையை விட்ட குடிகள் தண்ணீர் தூக்கிகளே யாவார்கள். உடம்பு முழுவதும் சாம்பலைப் பூசிக்கொண்ட வைராகிகள் அல்லது காகிகளே யாவார்கள். அவர்கள் அறிவு சத்சங்கம் இவைகளுடைய நன்மைகள் தெரியாதவர்கள். அன்றன்று வழங்கும் குறிப்புச் சொற்களான சில மந்திரங்களுண்டு. இவர்களில் நாதர்களுடைய மந்திரம் "நம: சிவாய" காகிகளுடையது கிருசிம்ஹாய நம." ராமவதர்களுடையது ஸ்ரீராமச் சந்திராய நம: அல்லது "சீதாராமாப்யாம் நம:" கிருஷ்ண உபாசனைக் காரர்களுடையது ஸ்ரீராதாகிருஷ்ணப்யாம் நம:" "நமோபகவதே வாசுதேவாய" வங்காளினுடையது கோவிந்தாய நம:" என்பவைகளாம். இவ்வித மந்திரங்களைக் காதில் சொல்லி சிடர்களைச் சேர்த்துக் கொண்டு இவைப் போன்றவை உபதேசஞ் செய்கிருர்கள். சுரைக்காய் மந்திரத்தைக் கொள்ளுங்கள்.

जल पवितर शथल पाबितर और पवितर कुआ ।
शिव कहे सुन पार्वती तूंबा पवितर हुआ ॥

ஜலம் பவித்திரமானது; கிலம்பவித்திரமானது; கிணறு பவித்திர மானது சிவன் பார்வதிக்குச் சொன்னதாவது.

ஓ பார்வதியே! நீர் சுரைக்காய், பவித்திரமானது. இம்மனிதர்கள் யோக்கியதையுள்ள சாதுக்களாகவும் வித்வான்களாகவும் உலகஉபகாரம் செய்கிறவர்களாகவும் ஆகமுடியுமோ?

காகிகள் இரவும் பகலும் கட்டைகளையும் முட்புதர்களையும் எரியவிடுகிருர்கள். அதற்கு மாதம் அநேகரூபாய் செலவாகிறது. ஒரு மாதச் செலவில் நூரிலொரு பங்கைக் கொண்டாவது கம்பள ஆடைகளை வாங்கினால் ரொம்ப சுகத்திலிருக்கப்பார்க்கலாம். ஆனால் இதற்குப் புத்தி ஏது? நெருப்புகளில் உட்

கார்ந்திருப்பதினாலேயே தபஸ்வி என்றழைத்துக் கொள்ளுகிறார்கள். இவ்வித மானால் காட்டில் வசிப்போர், இவர்களைவிட பெரும் தபஸ்விகளாகக் கூடும்? சடையை வளர்த்துக் கொள்வதும் சாம்பலைப் பூசிக்கொள்ளுவதும் நெற்றியில் பொட்டுவைத்துக் கொள்ளுவதும் ஒருவனை தபஸ்வியாகச் செய்யுமே யானால் எவன் வேண்டுமானாலும் அவ்விதமாகக் கூடும். பார்வைக்குத் தியாக மூர்த்திகளைப் போலிருக்கு மிவர்கள் பேராவலுள்ளவர்கள்.

கபீர் பந்திகள்.

வினா :—கபீர்பந்திகள் சரியானவர்களா?

விடை :—இல்லை.

வினா :—ஏன் சரியானவர் களில்லை. கல் விலங்கு முதலானவைகளுடைய விக்கிரக பூஜையைக் கண்டனஞ் செய்கிறார்கள். புஷ்பங்களிலிருந்து கபீர் பிறந்து பிறகு புஷ்பத்துடனேயே சேர்ந்து விட்டார். பிரம்மா விஷ்ணு மகா தேவன் பிறப்பதற்கு முன்னமேயே கபீர் இருந்தார். கபீர் பெரும் சித்த புருஷர். வேத புராண ஆசிரியர்களுக்குத் தெரியாதது கூட கபீருக்குத் தெரியும். சத்தியநெறியை கபீர் காண்பித்திருக்கிறார். அவருடைய மந்திரம் "சத்திய நாமம் கபீரேயாகும்."

விடை:—அவனைச் சேர்ந்தவர்கள் படுக்கை, மஞ்சம், மெத்தைத் தைத்தபீடங்கள், மரப்பாதரட்சைகள் விளக்குகள் இவைகளைப் பூஜை செய்கிறார்கள். விக்கிரக ஆராதனைக்கு இவைகள் எவ்விதத்திலும் குறைந்த தில்லை. கபீர் புஷபப் புழுவாஎன்ன? அதிலேயே பிறந்து இறந்தும் தும் பூவாதற்கு? கபீருடைய கதை உண்மையென்றே தோன்றுகிறது. அதாவது:—காசிமாநகரில் கைக்கோளன் ஒருவனிருந்தான். அவனுக்கு மக்கட்பேரு இல்லாமலிருந்தது. ஒருதடவை விடியற்காலையில் பாதைவழியாய் போய்க்கொண்டிருக்குங் காலத்தில் கூடையில் புஷ்பங்களின் நடுவில் குழந்தை யொன்று விழுந்துகிடைப்பதைக் கண்டான். கூடையிலிருந்து குழவியை எடுத்து வீட்டிற்குச் சென்று மனைவியிடம் கொடுத்தான். அதைநெசவுத் தொழிலைப் பயில வயது வரும்வரையிலும் வளர்த்தார்கள். பிறகு அவனை பண்டிதர் ஒருவரிடம் அனுப்பினார்கள். பண்டிதர்கைக்கோளருக்குச்சொல்லித்தரமுடியாதென்றுமறுதார். பண்டிதர்கள் அநேகம் பெயர்களிடம் சென்றும் எல்லோரும் முடியாதென்று மறுத்துவிட்டார்கள். அவன் பாஷை நடைக்குவிரோதமாகவும் தப்பாகவும் பாக்கள் கட்டி நெசவுக்காரர்கள் முதலான ஈனஜாதியார்களிடம் தம்பூருக்குச் சரியாய் பாடிக்கொண்டே யிருந்தான். பஜனையும் பண்ணிக் கொண்டிருந்தான். முக்கியமாக வேதம் சாஸ்திரம் பண்டிதர் இவர்களைத் தூஷித்துக் கொண்டிருந்தான். அவனுடைய மாயவலையில் சிலமூர்க்கர்கள் விழுந்தார்கள். இறந்தபிறகு அவனைப்பெரிய சித்தபுருஷனாகச்செய்து விட்டார்கள். அவன் வாழ்நாளிற் செய்தபாக்களைப் பிறகுபாடிக்கொண்டிருந்தார்கள். காதைமூடிக் கொண்டால் கேழ்க்கும்சப்தத்தை அனந்த சப்தம் என்றார்கள். மனோ விருத்தியை சுருதி என்கிறார்கள். அதைக்கொண்டு அனஹத சப்தத்தைக் கேழ்ப்ப

தையே பரமேச்வரத்தியானமென்றும் அவனுக்குத்தான் சந்தன் என்றும் பெய ரிட்டார்கள். கால் கையில் அகப்படாதது மதுவே. நெட்டியைப்போல் நெற்றி யில் அடையாளம்வைத்து கழுத்தில் சந்தனமாலையும் அணிகிறார்கள். இக்கம் பிக்கைகளினால் என்ன உண்டாகக் கூடும்? குழந்தை விளையாட்டுப் போ லல்லவோ யிருக்கிறது இது.

நானக்.

வின:—பஞ்சாபில் நானக் ஒரு மதத்தை உண்டு பண்ணினார். அவரும் விக்கிரக ஆராதனையைக் கண்டனஞ் செய்தார். மகம்மதியர்களாவதிலிருந்து காப்பாற்றினார். மேலும் அவர் சாதுவுமல்ல. கிரகஸ்தனாகவே யிருந்தார். இம் மந்திர உபதேசமும் செய்தார்.

ओं सत्यनाम कर्त्ता पुरुष निर्भो निर्बैर अकालमूर्त अजोनि सहभंगुरु प्रसाद जप आदि सच जुगादि सच है भी सच नानक होसी भी सच॥

ஜபஜீ பௌடீ.

எவருடைய பெயர் சத்தியமோ அவரே கர்த்தா. அவர் புருஷபயம்விரோ தம் இவைகளில்லாத அகால மூர்த்தி. அவர் காலம் அல்லது பிறப்பு இல்லாத வர். அவர் பிரகாசஸ்வரூபர். குருவின் கிருபையினால் அவருடைய பெயரை ஜபஞ் செய்யுங்கள். அப்பரமாத்மாவே ஆதியிலிருந்தார். இப்பொழுது மிருக் கிறார். இன்னமும் இருப்பார். இம்மந்திரத்திலிருந்து நானக்கினுடைய எண்ணம் சிறந்தது என்றே புலப்படுகிறது.

விடை:—நானக்கினுடைய எண்ணம் நல்லஎண்ணமே. ஆனால் அவருக்கு அறிவு முதிர்ச்சி கிடையாது. தான்பிறந்த கிராமத்தவர்களுடைய மொழி யையே அறிவார். வடமொழி, வேதாதிசாஸ்திரம் இவைகளை அறியார். தெரிக் திருந்தால் நிர்பயத்திற்கு நிர்போ, என்று எழுதுவானேன்? இதற்கு இன்னும் ஒரு திருஷ்டாந்தம், அவருடைய ஸ்தோத்திரங்களேயாகும். வடமொழியில் அறிவுள்ளவராக நடித்துக்கொண்டார். வடமொழியைப் பயிலாமல் அதன் அறிவு எங்கிருந்து வரக்கூடும்? வடமொழி பேசிக்கூடக் கேட்டிராத கிராம வாசிகளின் முன்னால் அவன் பெரும் புலவனாயிருந்திருக்கலாம். பொதுப்புகழ் மொழிகளில், ஆசையின்றி அதைச் செய்திருக்கமாட்டான். கீர்த்திக்காகவது கஷ்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது தானறிந்த பாஷையிலுபதேசஞ் செய்து வடமொழி தெரியாதென்றிருக்கவேண்டும். கொஞ்சம் செருக்குள் ளவனாகயிருந்தபடியினாலேயே தற்புகழை ஸ்தாபிக்க எண்ணி கொஞ்சம் டம்பமும் செய்திருக்கவேண்டும். இதனாலேயே அவருடைய கிரந்தம் என்னும் நூலில் சிலவிடங்களில் வேதங்களைப் புகழ்ந்தும் சிலவிடங்களில் இகழ்ந்து மிருக்கிறார். இவ்விதம் செய்திராமற் போனால் வேதமந்திரங்க ளுடைய அர்த்தத்தை யாராவது கேழ்க்கக் கூடும். பதில் கூறவிடில் மானம் போய்விடும். இதையறிந்தே சிற்சிலசமயங்களில் தன் சீடர்களுக்குமுன் வேதங்களுக்குப் பாதக மாகவும் சாதக மாகவும் பேசி யிருக்கிறார். சாதக மாகப் பேசாமலிருந் திருந்தால் உலகம் அவரை நாஸ்திகன் என்று அழைத் திருக்கும், உதாரணமாக கிரந்தத்தின் ஓரிடத்தில் கூறுவதாவது:—

वेद पढ़त ब्रह्मा मरे चारों वेद कहानि ।
साध कि महिमा वेद न जाने ॥ சுகமனி பௌடீ 7, சோ 8.
नानक ब्रह्मज्ञानी आप परमेश्वर ॥ சு. பௌ. 8, சோ. 6.

வேதங்களைப் படிக்கிற பிரம்மாவும் இறந்துவிட்டார். வேதங்கள் நான்கும் கட்டுக்கதையே. ஏ! நானக்!! சாதுக்களின் பெருமையை வேதம் அறியாது. பிரம்மஞானம் உள்ளவனே பரமேச்வரன்

வினு:—பிரம்மாவைப் போன்ற வேதவித்வான்களிறந்திருந்தால் நானக் முதலானவர்களும் இறக்கவில்லையா? தங்களைச் சிரஞ்சீவிகளென்று அவர்கள் நினைத்துக்கொண்டு விட்டார்களா? ஞானம் அறிவு இவைகளின் களஞ்சியமல்லவோ வேதங்கள். நான்குவேதங்களையும் கட்டுக்கதை யென்னும் வார்த்தையே கட்டுக்கதை. மூடர்களுக்குச் சாதுக்களென்று பெயரிருக்க, விசாரித்து வேதங்களுடைய பெருமையையும் புகழையும் அவர்களெப்படி அறிய முடியும்? நான்கு வேதங்களை மாத்திரம் போற்றியிருந்தால் அவருடைய கட்சி தலைப்பட்டிராது? அவருக்கும் "குருபதவி கிடைத்திராது. சம்ஸ்கிருதத்தை அவர் அறியாதபடியினுல் இதரர்களுக்குப்படித்துக்காண்பித்து அவர்களை சிஷ்யர்களாகசெய்து கொண்டிருக்க முடியாது. அவர்காலத்தில் பஞ்சாபில் சம்ஸ்கிருத ஞானம் குலைந்து மகம்மதியர்களால் பீடிக்கப்பட்டிருந்த தென்பது உண்மையே. துருக்கர்களாவதிலிருந்து சிலரையும் காப்பாற்றினுர். நானக் பிழைத்திருந்த காலத்தில் அவருடைய கொள்கைகள் தலையெடுக்கவில்லை. பின்பற்றினவர்களும் அநேகம் பெயர்களில்லை. இறந்த பிறகு தங்களுடைய குருவைச் சித்தபுருஷனுகச்செய்து, அவருக்குப் பேரையும் பெரும் புகழையுமளிப்பது அறிவில்லாதவர்களுடைய வழக்கமாகும். சாதாரண ஜனங்களும் அவரை ஈச்வரனுக்குச் சமமாக வெண்ணுவார்கள். நானக் தனவந்தருமல்ல; பிரபுக்கட்சியைச் சேர்ந்தவருமல்ல; இருந்தும் அவருடைய சிஷ்யர்கள் நானக் சந்திரோதயம், ஜன்மசாகி, என்னும் நூல்களில் அவர் பெரிய பணக்காரர் சித்தர் என்றும் எழுதியிருக்கிறுர்கள். நானக் பிரம்மா முதலானவர்களைக் கண்டார்; பேச்சு வார்த்தைகளாடினுர்; எல்லோரும் இவரைப் போற்றினுர்கள்; நானக்கினுடைய விவாக சமயத்தில் மரகத மாணிக்க வைடூரியங்களால் அலங்காரம் செய்யப்பட்ட ரதகஜதுரகபதாதிகள் ஊர்யலம் வந்தது என்று எழுதப்பட்டிருக்கிறது. திரிக்கப்பட்ட வெறுங் கயரன்னியில் இவைகளெல்லாம் வேறென்ன? இதெல்லாம் அவரைப் பின்பற்றினவர்களுடைய குற்றமே தவிர நானக்கினுடையதில்லை.

அவரிறந்த பிறகு அவருடைய பிள்ளையுடன் உதாசிகளும் ராம் தாசுடன் நிர்மலர்களும் தோன்றினுர்கள். நானக்கினுடைய சிம்மாசனத்திலேறின எவ்வளவோ பெயர்கள் "கிரந்தத்தைக்" கையாடி அதில் அநேகம் தானகவே சேர்த்திருக்கிறுர்கள். பத்தாவது குருவின் பெயரே கோவிந்து சிங். அவர் காலத்திலிருந்து அதில் ஒன்றும் சேர்க்கப்படவில்லை. அது வரையிலிருந்த சின்ன புஸ்தகங்களெல்லாம் ஒன்றுகத்திரட்டப்பட்டது.

நானக்கிற்குப் பின் வந்தவர்கள், நூல்கள் பல செய்தார்கள். புராணங்களையொத்தப் பொய்க்கதைகளையும் செய்தார்கள். பிரம்மஞ்ஞானமுள்ளவன் பரமேச்வரன் என்பதைக் கொண்டு தெய்விகத் தன்மைகளை மேற்கொண்டார்கள். தங்களுடைய கர்மோபாசனைகளைக் கைவிட்டு இச்சீடர்கள் தெய்வத்திற்குப் பதிலாக குருவிற்கு மரியாதை செய்யத்தலைப்பட்டார்கள். இவ்விதமாக பெருந்தீமைகளை உண்டு செய்து விட்டார்கள். நானக் சொல்லியுள்ளவாறு கொஞ்சமாவது ஈசுவரபக்தி காண்பித்திருந்தால் நலமாயிருந்திருக்கும். உதாசிகள் நாங்களே பெரியவர்கள் என்கிருர்கள். நிர்மலர் தாங்களும் அப்படியே என்று சொல்லிக் கொள்ளுகிருர்கள். அகாலியர்களும் சூத்ரேசாகிகளும் எல்லோரையும் விட நாங்களே உயர்ந்தவர்களென்கிருர்கள். நானக்கைப் பின்பற்றினவர்களுள் கோவிந்தசிங்கே சூரவீராயிருந்தார். இவருடைய ஆள்களைத் துருக்கர்கள் கொடுங்கோன்மையுடன் நடத்தி வந்தார்கள். அதற்குப் பழிவாங்க அவர் அதிகமாகவிரும்பியும், வேண்டிய சாமக்கிரியைகளில்லாமலிருந்தது. மகம்மதியர்களோ உன்னதஸ்திதியிலிருந்தார்கள். ஆகவே குழுக்குபாயம் ஒன்று செய்தார். "நீ மகம்மதியர்களுடன் சண்டைக்குப்போ. ஜெயம் பெருவாய்" என தேவி வாக்களித்து, வாளாயுதம், ஒன்றையும் அளித்திருப்பதாக வெளிப்படுத்திஞர். ஜனங்கள் அநேகம் பெயர்கள் சேர்ந்தார்கள். வாமமார்க்கிகளுடைய ஐந்து ம' காரங்களும் சக்கராங்கதர்களுடைய ஐந்து சம்ஸ்காரங்களு மிருந்து வருவது போலவே க என்னும் எழுத்துக்களில் ஆரம்பமாகும் ஐந்து பொருள்களைத் தங்களுடைய சின்னங்களாச் செய்து கொண்டார்கள். இவ்வைந்தும் யுத்தத்தில் மிகவும் உபயோகமானவைகள். அவைகளாவன:—

(1) கேசம்:—க்ஷௌரஞ்செய்து கொள்ளாத தலைமயிர். சண்டையில் தடியடி கத்திகுத்து இவைகளிலிருந்து தலையைக்காக்கும்.

(2) கங்கண்:—அகாலியர்கள் தங்களுடைய தலைப்பாகையிலணிந்துகொள்ளும் பெரும் இரும்பு வளையங்கள்.

கடா:—மணிக்கட்டையும் மார்பையும் காப்பாற்ற மணிக்கட்டில் அணிந்துகொள்ளும் இரும்புக்காப்பு.

(3) காச்ச:—அரைக் கால் சட்டைகள். தாண்டுவதிலும் குதிப்பதிலும் மிகவும் உபயோகமாகும். மல்யுத்தக்காரர் களாலும் சிலம்புவேலைக்காரர்களாலும் உபயோகம் செய்யப்படுகிறது. சரீரத்தினுடைய மர்மஸ்தானங்களைக் காப்பாற்றி நடையைக் கஷ்டமன்னியில் சுலபமாச்செய்யும்.

(4) கர்தா:—கைச்சண்டையில் பிரயோஜனமுள்ள இருமுனையுள்ள கத்தி

(5) கங்கா:—தலைமயிரைச் சீவச்சீப்பு.

சமயம் புத்தி இவைகளுக்கேற்க இவ்வைந்தையும் கோவிந்தசிங் அணியச் செய்தார். அவரிருந்த வரையில் அவைகள் உபயோகமானதா யிருந்தது. இப்பொழுது அவைகளால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. யுத்தகாலத்தில் பிரயோஜனமாயிருந்த அவைகளை இப்பொழுதும் தன் மார்க்கத்துடன் சேர்த்துக் கொண்டிருப்பது விந்தையே. விக்கிரக ஆராதனையை அவர்கள் செய்வதில்லை

யென்பது உண்மையே. ஆனால் கிரந்தத்தை (அவர்களுடைய மத நூலை) விக்கிரகங்களைவிட அதிகமாய் வணங்குகிறார்கள். இதென்ன? விக்கிரக பூஜை யில்லையா? சடப்பொருள்களின் முன் வணங்குவதும் பூஜை செய்வதும் விக்கிரக ஆராதனையே. விக்கிரகக்காரர்கள் அதைக் கொண்டு வியாபாரஞ் செய்து பிழைப்பதுபோலவே இவர்களும் செய்கிறார்கள். பூசாரிகள் விக்கிர கங்களுடைய தரிசனத்தைக் காண்பித்துப்பணம் வாங்கிக்கொள்ளுவதுபோல் நானக்கைச் சேர்ந்தவர்களும் கிரந்தத்தைப் பூஜித்து பூஜிக்கவும் செய்து இனும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். விக்கிரக ஆராதனைக் காரர்களைப்போல் வேதத்தைப்போற்றுகிறதும்வணங்குகிறதுங்கிடையாது. வேதங்களை இவர்கள் கேட்டதும்கிடையாது; ஓதினது மில்லையே; அவர்கள் என்ன செய்யக்கூடும் எனலாம்? கேட்க்கவும் ஓதவுங் கிடைத்தால் அவர்களில் அறிவுள்ளவர்களும் பட்சபாதமற்றவர்களும் வேதமதத்தைத் தழுவிவிடுவார்கள். சாப்பாட்டு வித் தியாசம்குடி முதலானவைகளிலுள்ள கட்டுக்களிலிருந்தும் இவர்கள் மீறினது இவர்களுக்கு நல்லதே. அப்படியே விஷய சுகம், இறுமாப்பு, சுகம், இவைகளி லிருந்தும் மீறி வேதமதத்தைப் பரவச்செய்தால் நலமாயிருக்கும்.

தாது பந்திகள்.

வினா:—தாது பந்திகளுடைய சமயம் நல்லதா?

விடை:—வேத மார்க்கம் ஒன்றே நல்லது. முடியுமானால் அதையே பின் பற்றி நட. இல்லை யென்றால் எப்பொழுதும் துக்கத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகி விடுவாய். இவர்கள் சொல்லும் விதம் தாது குஜராத்தில் பிறந்தார். ஜயபூருக்கருகாமையிலுள்ள ஆமோத்தில் வசித்து 'தைலி' (வாணியன்) வேலையைச்செய்து வந்தார். ஈச்வரனுடைய சிருஷ்டி விசித்திரத்தின் லீலை யே லீலை. தாதுவையும் வணங்கவாரம்பித்தார்கள் வேதாதி சத்தியசாத்திரங் களுடைய வார்த்தைகளெல்லாவற்றையும் விட்டு 'தாதுராம்' என்று சொல்லு வதினாலேயே முத்தி கிடைக்கு மென்று கருதுகிறார்கள். சத்தியோபதேசகர் களில்லாதபொழுது இம்மாதிரி துர்நடத்தைகள் ஓங்கவாரம்பித்தன. கொஞ்ச நாள்கள் முந்தியே 'ராம் பக்தி' என்னும் மதத்தவர் ஷாபூரில் தோன்றினார்கள். சகல வேதோத்தமமான தர்மங்களையும் அவர்கள் விட்டு விட்டு ராமா, ராமா, என்று கத்துவதையே கைக்கொண்டார்கள். அதினாலேயே ஞானம் தியானம் முத்தியும் உண்டாகுமென்று நம்புகிறார்கள். பசி யெடுக்கும் பொழுது ராம நாமத்தைச்சொல்லிக்கொண்டிருப்பதினால் அன்ன ஆகாரம் கிடைக்கிறதில்லை. ஏனெனில் கிரகஸ்தர்களுடைய வீட்டிலிருந்தே அவைகள் கிடைக்கும். அவர்களும் விக்கிரக ஆராதனையைப் பற்றி குறைவாகப் பேசுகிறார்கள். பேசி யும் விக்கிரக ஆராதனையைச் செய்கிறார்கள். ஸ்திரீகளுடைய சேர்க்கையிலே யே வசிக்கிறார்கள். ஏனெனில் ராம்கீ (ராமசொல்லின் பெண்பால்) அன்னி யில் ராமனுக்கு ஆனந்தம் கிடைப்பது துர்லபம் என்கிறார்கள்.

ராமசிநேகன்.

ராமசரன் என்று ஒரு சாதுவிருந்தான். ஷாபூரில் உதயபுரம் சமஸ்தான த்தில் ஒரு பிரிவினையை உண்டாக்கினான். அவர்கள் ராமநாமத்தையே முக்

கிய மந்திரமாகவும் சித்தாந்தரகசியமாகவும் கருதுகிருர்கள். சந்ததாஸ் முதலானவர்கள் சொன்னதாக அவர்களுடைய புஸ்தகம் ஒன்றில் எழுதப்பட்டிருப்பதாவது:—

भरम रोग तब ही मिट्या, रट्या निरञ्जन राइ ।
तब जम का कागज फट्या, कट्या करम तब जाइ ॥

பகவானுடைய பெயரை ஒருவன் சொன்னல் சந்தேக நிவாரணமாகி, வியாதிகளெல்லாம் விலகி, பாபகிருத்தியங்களும் பிற கர்மங்களும் மன்னிக்கப்படும். யமனும் அவர்களுடைய பத்திரத்தைக் கிழித்தெறிந்து விடுவான். ராம் என்று வெறும் வார்த்தையைச் சொல்லுவதினல் அஞ்ஞானம் என்னும் பிரமை எப்படி நீங்கிப் போய்விடும் என்று புத்திமான்கள் ஊகிக்கவேண்டும். பாப புண்ணியப் பிரகாரம் அளிக்கப்படும் தண்டனைகளும் நன்மைகளும் எப்படி பலனற்றுப் போகும்? இம்மாதிரி கொள்கைகள் பாபங்களிலமுத்தி வாணுளையும் வீணுக்குகிறது. அவர்களுடைய முதல் குருவாகிய ராமசரன் சொல்லுவதைக் கவனியுங்கள்.

महमा नांव प्रताप की, सुणो सरवण चित लाइ ।
रामचरण रसना रटौ, क्रम सकल भद्र जाइ ॥
जिन जिन सुमर्या नांव कूं, सो सब उतर्या पार ।
रामचरण जो वीसर्या, सो ही जम के द्वार ॥

राम विना सब झूठ बतायो ॥

राम भजत छूट्या सब क्रम्मा । चंद अरु सूर देई परकम्पा ।
राम कहे तिन कूं भै नाहीं । तीन लोक में कीरति गाहीं ॥

राम रटत जम जोर न लाग ॥

राम नाम लिख पथर तराई । भगति हेति औतार ही धरही ॥
ऊंच नीच कुल भेद विचारै । सो तो जनम आपणो हारै ॥
संता कै कुल दीसै नांहीं । रांम रांम कह राम सम्हांहीं ॥
ऐसो कुण जो कीरति गावै । हरि हरि जन कौ पार न पावै ॥
रांम संतां का अन्त न आवै । आप आपकी बुद्धि सम गावै ॥

ராமசரன் முதலானவர்களுடைய நூல்களைப் படிப்பதினல் அவன் ஒன்றுமறியாத ஒரு கிராமவாசி என்றே தெரிகிறது. இல்லாமல் போனல் இக்கயிற்றை எப்படித் திரித்திருக்க முடியும்? வெறும் பேரைச் சொல்லுவதினல் பாபங்கள் விலகிவரும் என்று அவர்கள் உபதேசஞ் செய்வது முழுப்பொய்யே. தங்களுடைய வாணுளை மாத்திர மன்னியில் பிறருடைய வாணுளையும் இவ்விதப்பொய் உபதேசங்களினல் வீணுக்குகிருர்கள். போலீஸ் சேவகன், திருடன், கள்ளன், ஓநாய், பாம்பு, தேள், கொசு, இவைகளுடைய பயத்திலிருந்து

இரவும் பகலும் ராமன் பெயரைச் சொல்லியும் நீங்குகிறதில்லை. இதுவே இப்படியிருக்க யமராஜனைப் பற்றி என்ன சொல்ல விருக்கிறது. சர்க்கரை என்று சொல்லுவதினால் இனிக்காது. உண்மை உரைத்தல் முதலிய காரியங்களே மரண பயத்திலிருந்து ஒருவனை நீக்கும். ராம் ராம் என்று ஒருதரம் சொல்லியும் ராமன் கேழ்க்காமல் போனால் ஆயுள் பரியந்தமும் கேழ்க்க மாட்டான். இரண்டாந் தடவை சொல்லுவதும் வீணே. தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காகவும் பிறர் வாணாளை வீணாளாக்கவுமே இப்பொய்களையுண்டு பண்ணி யிருக்கிறார்கள். விதவைகளின் சிநேகிதர்களாயிருந்து கொண்டு ராம சிநேகிதன் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. காணும் பொழுதெல்லாம் விதவைகளுடன் கூடவே யிருக்கிறார்கள். இவ்விதப்புரட்டுக்கள் இந்தியா விலில்லாமலிருந்திருந்தால் ஆரியவர்த்த நாட்டிற்குக் கஷ்டதிசை எவ்வித முண்டாயிருக்கும்? தங்களுடைய சிடர்களுக்கும் தாங்கள் உண்ட மீதியைக் கொடுக்கிறார்கள். பெண்டிர்களுங் கூட காலில் விழுந்து நமஸ்காரம் செய்கிறார்கள். ஒன்று கூடியே சாதுக்களும் உட்கார்ந் திருக்கிறார்கள்.

மார் வார் தேசத்திலுள்ள கேடாபர் என்னும் கிராமத்தில்இவர்களுடையதைப்போன்ற மற்றொரு வகுப்பும் இருந்துவருகிறது. அதனுடைய சரித்திரம் என்னவென்றால் *தேட்ஜாதியைச் சேர்ந்த ராம்தாஸ் என்ற ஒருவனிருந்தான் அவன் பெருந்தந்திரக்காரன். அவனுக்கு இரு மனைவிகளிருந்தார்கள். கொஞ்ச நாள் அகோரியாக யிருந்து நாய்களுடன் கூட தின்னுக் கொண்டிருந்தான். பிறகு வாமமார்க்கத்தவர்களில் பிரிவான 'குண்டா பந்தைச் சேர்ந்தான். 'காம்ரிய' னானான். பிறகு தன் இரு மனைவி மார்களுடன் பாடிக்கொண்டு சுற்றிக்கொண்டிருக்குங் காலத்தில் ஜோத்பூர சமஸ்தானத்திலுள்ள சீதலத்தில் தேட்களுடைய குருவான ராமதாசைக் கண்டான். அங்கே ராம தேவருடைய வழியில் சேர்த்து தன் சிடனாக்கிக் கொண்டார். இந்த ராம்தாஸ் கேடா கிராமத்தில் அமர்ந்தார். இங்கு இவருடைய மதமும் சாபூரில் ராமசரணருடைய மதமும் இருந்து வந்தது.

ராமசரணர்.

ராம சரணருடைய வரலாறு என்ன வென்றால்:—அவர் ஜயபூரில் வியாபாரம் செய்து வந்தவர். தந்திரஷ் கிராமத்தில் ஒரு சாதுவை அடைந்து அவரைத் தன் குருவாகச் செய்து கொண்டார். பிறகு ஷாபூருக்குச் சென்று அங்கு அமர்ந்தார். ஏமாற்றல் என்பது வெகு சீக்கிரம அறிவில்லாதவர்களிடத்தில் குடிகொள்ளுதல் இயல்பே அல்லவா? ராமசரணருடைய பேச்சைப் பிரமாணமாக வைத்து கொண்டு, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வித்தியாசம் ஒன்றும் செய்யாமல் பிராம்மணன் முதல் நீசன் வரையில் இவருடைய சிஷ்ஷனர்கள். மண் குடங்களிலிருந்து சாப்பிடுகிற படியினால் இப்பொழுதும் குண்டா பந்திகளைப் போலவே யிருக்கிறார்கள். சாதுக்களுடைய எச்சல் முத

*ஒடுக்கப்பட்டு தீண்டாதவர்களெனப்படுவோர்.

லானவைகளைச் சாப்பிடுகிருர்க்ள். வேதமார்க்கத்தி லிருந்தும், மாதா பிதா உலகம் இவைகளிலிருந்தும், பிரித்து விடுகிருர்கள். ஜனங்களைச் 'சேல' (சீட) ஞகச் செய்து கொண்டு ராமநாமத்தையே மகாமந்திரமாகக் கருதுகிருர்கள், சூக்ஷ்ம வேத மென்றும் சொல்லுகிருர்கள். 'ராம' என்று சொல்லுவதினல் மாத்திரமே அனந்த ஜன்மங்களுடைய பாபம் நசித்துப் போகுமென்று நினைக்கிருர்கள்.

மற்றும் முக்தி எவருக்கும் கிடைக்காது என்கிருர்கள். மூச்சு இழுத்துக்கொள்ளும் பொழுதும் விடும்பொழுதும் 'ராம' என்கிறவனையே சத்திய குரு என்கிருர்கள். அவ்வித சத்ய குருவைப் பரமேச்வரனை விட மேலாக நினைக்கிருர்கள். அவனை விக்கிரகமாக்கி தியானமும் செய்கிருர்கள். சாதுக்களின் கால்களைக் கழுவின ஜலத்தையுங் குடிக்கிருர்கள். குருவை விட்டுச் சேலன் (சிஷ்யன்) பிரிந்திருக்கும் பொழுது குருவினுடைய நை நகத்தையும், தாடி மயிரையும், தன் கூட வைத்துக்கொண்டு அதைக் கழுவி அந்த ஜலத்தை பிரதி தினமும் அருந்த வேண்டுமென்கிருர்கள். ராம்தாஸ் ஹர ராம்தாஸ், இவர்களுடைய நூல்களையே வேதங்களை விடப்பெரியதாகக் கருதுகிருர்கள். அதைச் சுற்றி வந்து எட்டு நமஸ்காரம் செய்கிருர்கள். ஸ்திரீ புருஷர்களும் ராம மந்திர உபதேசம் ஒன்றையே செய்கிருர்கள். ராமஸ்மரணை யொன்றிலேயே மங்களத்தை யறிகிருர்கள். மீதி புத்தகங்களைப் படிப்பது கூட பாபமென்றும் சொல்லுகிருர்கள். அவர்களுடைய நூல் ஒன்றில் சொல்லுவதாவது.

पंडताइ पाने पड़ी, ओ पूरब लो पाप ।

राम २ सुमयाँ विना, रइग्यो रीतो आप ॥

वेद पुराण पड़े पड़ गीता, राम भजन बिन रइ गये रीता ॥

படிப்பது பிரயோஜன மற்றது. கற்றுக் கொள்ளுவது பாபகாரியம். ராமருடைய பெயரைச் சொல்லாமல் வேறு என்ன செய்த போதிலும் பிரயோஜனமற்றதே. ராமஸ்மரணைஇல்லாதவிடத்து வேதங்கள், புராணங்கள், கீதை இவைகளுடைய படிப்பு பிரயோஜன மற்றது. புருஷனுக்கு மனைவி சிசுருஷை செய்வதுபாபம். குருவிற்கும் சாதுவிற்கும் செய்வதே தர்மம். வருணச்சிரமம் சரியற்றதாம். ராம சிநேகிதனில்லாத பிராம்மணன் நீசனும் ராம சிநேகிதனயிருக்கிற சண்டாளனும் உத்தமனும். ஈச்வரனுடைய அவதாரத்தில் நம்புகிறதில்லை. முன்னே சொன்ன ராமசரண வார்த்தைகளில் நம்புகிருர்கள் அதாவது.

भणति हेति औतार ही धरही ॥

பக்தர்களுடைய நன்மைக்காக அவதாரஞ் செய்கிருர். இவ்விதமான புரட்டுகளும் தந்திரங்களும் ஆரியவர்த்தத்திற்குக் கெடுதலை விளைவிக்கிறதாயிருக்கிறது. புத்திமான் களுக்கு ஒரே வார்த்தையே போதுமானது.

கோசேனர்கள்.

வின :— கோகுலத்தில் கோசேனர்களுடைய வழி மிகவும் மேலானது. எப்படி ஐசுவரியத்தை அனுபவிக்கிருர்களென்று பாருங்கள். ஈச்வர சக்தியன்னியில் இவைகளுண்டாகக் கூடுமா?

விடை :—இவ் ஐச்வர்யங்பள் கிரகஸ்தர்களைச் சேர்ந்தது. கோசேனர்களுடைய தல்ல.

வினு :—மட த்தனம், கோசேனர்களுடைய பிரதாபத்தினுலேயே. ஏனெனில் இவ்வைச்வர்யங்கள் மற்றவர்களுக்குக் கிடைக்கிறதில்லை.

விடை :—மற்றவர்களும் கோசேனர்களைப் போல் வஞ்சகத்தையும் புரட்டையும் கையாண்டு வந்தால், சந்தேகமன்னியில் கிடைக்கும். ஆனுல் பாதகம் இன்னும் அதிக மாகும்.

வினு :— அதிலென்ன பா தகமிருக்கிறது. எல்லாம் கோலோகத்தினுடைய லீலையே?

விடை :—கோலோகத்தினுடைய லீலை யில்லை. கோசேனர்களுடைய லீலையே. கோலோக லீலையானுல் கோலோகமும் அப்படித் தானிருக்க வேண்டும். இம்மதம் தைலிங்கன தேசத்திலுண்டாச்சுது. லக்ஷ்மணபட்டன் என்ற தைலங்கப் பிராம்மணன் விவா கஞ் செய்து கொண்டு எக்காரணத்தினுலேயோ தாய் தகப்பன்மார்களை விட்டு விட்டுக் காசிக்குச் சென்று சந்நியாசம் வாங்கிக் கொண்டான். அங்கு எனக்குக் கலியாணமாக வில்லை யென்றுப் பொய் சொன்னுன். அதிர்ஷ்டட வசத்தால் அவனுடைய தாய் தகப்பன் மனைவி முதலான வர்கள் இவன் காசியில் சந்நியாசியா யிருப்பதை அறிந்து காசியை யடைந்து காஷாயம் அளித்தவர் ளிடம் சென்று, ஏன் இவனுக்குக் காஷாயம் கொடுத்தீர்கள்; இவனுக்குமனைவி ஒருவளிருக்கிருள் பாருங்கள் தன் புருஷனை அனுப்பமுடியாத பக்ஷத்தில் அவளும் காஷாயம் வாங்கிக் கொள்கிறேன் என்கிருள் என்ருர்கள். பிராம்மணனை அழைத்து நீ பெரும் பொய்யன் கிரகஸ்தாச்ரமத்தை எடுத்துக் கொள் என்ருர்கள். பொய் சொல்லி சந்நியாசம் எடுத்துக் கொண்டதின் பேரில் அதை விட்டு அவனும் சொன்ன பிரகாரமே மனைவியுடன் வீடு திரும்பப் போனுன். இம்மதத்திற்கு முதல் காரணம் பொய்யும் புரட்டுமே. தைலங்கத்திற்குத்திரும்பச் சென்றவுடன் ஜாதிச் சனங்களனைவரும், சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்ள். அங்கிருந்து அப்பொழுது வெளி யேறிக் காசிக் கருகாமையிலுள்ள சாணர்கட்டிற்கு அடுத்த சம்பாரண்யம் என்னும் காட்டை யடைந்து அங்கே ஒரு பையனை அவன் கண்டான். காட்டில் பையனை விட்டு விடக் கொஞ்ச தூரம் சென்று பெருந்தீயொன்றை எறிய விட்டிருந்தார்கள். பையனை காட்டு மிருகங்கள் அடிக்காமலிருக்கும் பொருட்டே அவ்விதம் செய்தார்கள். லக்ஷமணமட்டனும் மனைவியும் பிள்ளையை யெடுத்து தன்னுடைய தாகச் செய்துக் கொண்டார்கள். சிறு வயதில் காசியில் கொஞ்சம் படித்தான். விஷ்ணுசுவாமியுடைய ஆலயம் ஒன்றிற்குச் சென்ருன். அங்கு தன்னுடைய சேவகுக்கிக் கொண்டார்கள். அங்கு முறண் பட்டுக்கொண்டு காசிக்குத் திரும்பவும் வந்தான். காஷாயமும் உடுத்திக் கொண்டான். தன்னைப் போலவே ஜாதியிலிருந்து தள்ளப்பட்ட பிராம்மணன் ஒருவனுடன் பிறகு சேர்ந்தான். அவனுக்கு பெண் ஒருவளிருந்தாள். சந்நியாசத்தை விடுத்துக் கலியாணம் செய்து கொள்ளும் படி பெண்ணின் தகப்பன் சொன்னுன். தகப்பன்செய்த மாதிரியாகவே மகனும்செய்வதில் தடையென்ன?

கலியாணமான பிறகு விஷ்ணு சுவாமி கோவிலுக்குச் சென்றன். கல்யாணமாயிருந்த படியினுல் அங்கிருந்து தள்ளப்பட்டான். அறியாமைக் கிருப்படமாயிருக்கும் விரஜ தேசத்திற்குச் சென்று தன்னுடைய பொய் மூட்டைகளைப் பல விதமாகப் பரவச் செய்து "ஸ்ரீ கிருஷ்ணன் தன்னைப்பார்த்தான். கோலோகத்திலிருந்து மரணலோகத்திற்கு வந்த ஜீவன்களை யெல்லாம் பிரம்மசம்மந்தத்தினுல் சுத்தி செய்து கோலோகத்திற்கு அனுப்பச் சொன்னுர்" என்று சொல்லித் திரிந்தான். அறிவில்லாதவர்களுக் கேற்ற வாறு பேசி 84 பெயர்களைத் தன் சிஷ்யனுக்கிக் கொண்டான். கீழ்க் கண்ட சுலோகங்களைச் செய்து பலவாருகத் தன்னுடைய தென்றுன்.

श्रीकृष्णः शरणं मम । क्लीं कृष्णाय गोपीजनवल्लभाय स्वाहा ॥ கோபாலஸஹஸ்ரநாம

என்னடைக்கலம் ஸ்ரீகிருஷ்ணனே. கோக் களுடைய இஷ்டனை கிளீம் கிருஷ்ணனுக்கு இவ்விரண்டும் சாதாரண மந்திரங்கள். அடுத்த மந்திரம் பிரம்ம சங்கத்திற்கும் சமர்ப்பணத்திற்காகவும் செய்யப்பட்டிருக்கிறது.

श्रीकृष्णः शरणं मम सहस्रपरिवत्सरमितकालजातकृष्णवियोगजनिततापक्लेशानन्त-तिरोभावोऽहं भगवते कृष्णाय देहेन्द्रिय प्राणान्तः करणतद्धर्मांश्च दारागारपुत्राप्तवित्तेह-पराणयात्मना सह समर्पयामि दासोऽहं कृष्ण तवास्मि ॥

(ஸ்ரீ கிருஷ்ணனே என்னுடைய தஞ்சம். கணக்கில்லாத ஆயிரம் வருடங்கள் பிரிந்திருந்த விபோகத்தினுல் கஷ்டட்டம் துக்கம் முதலான அடர்ந்த இருள் சூழப்பட்டு ஏ! கிருஷ்ண இருக்கிரும். உனக்காக சரீரம் இந்திரியம், பிராணன், பெண், பிள்ளை, மனைவி, கௌரவம், தனம், உற்ருர் உறவினர்கள் ஆத்மா முதலானவைகளை அர்ப்பணம் செய்கிரும். நான் உன்னுடைய அடிமை) இரண்டு இனத்தையும் சேர்ந்த தன்னுடைய சிடர்களுக்கு இம்மந்திரத்தைச் சொல்லிக் கொடுக்கிருர்கள். இரண்டாவது மந்திரம் "க்ளீம்" என்று ஆரம்பமாகிறது. இது (வாமமார்க்கிகளுடைய) தந்திரங்களிலே யிருக்கிறது. இவ்வல்லபமதம் வாமமார்க்கிகளுடைய ஒரு பிரி வென்றே விளங்குகிறது. இதினுலேயே கோசேனர்கள் தங்கள் காலத்தை அதிகமாக ஸ்திரீகளுடைய சங்கத்தில் செலவு செய்கிருர்கள். மற்றவர் களுக்கில்லாமல் கோபிகளுக்கு மாத்திரமே கிருஷ்ணன் பிரிய முள்ளவர் மேலும். மாதர் போகங்களிலாசை யுள்ளவனே ஸ்திரீகளுடைய நேசனுகிருன். கிருஷ்ணன் இவ்விதம் இருந்தானு? "சகஸ்ர பரிவத்சரா" ஆயிரம் வருடம் என்பது வீணே. ஏனெனில் வல்லபரும் அவருடைய சீடர்களும் சர்வக்ஞ முள்ளவர்களல்லர். கிருஷ்ணன் வியோகமடைந்து ஆயிர வருடந்தானு ஆச்சுது?

வல்லபரும். அவருடைய மதமும் பிறக்குமுன்னமே கோலோகத்திற்குச் ஜீவன்களைக் கைத்தூக்கி விட ஏன் யாரும் வரவில்லை?

தாபம், கிலேசம் என்ற வார்த்தை களிரண்டும் ஏகார்த்த முள்ளபதங்களே. ஒன்றை உபயோகஞ் செய்வதே போது மானது. அனந்த வார்த்தையை யாவது 'சஹஸ்ர' வார்த்தையை யாவது விட்டிருக்க வேண்டும். இரண்

டையும் உபயோகப் படுத்துவது வீண் காரியமே. அனந்த காலமும் கஷ்ட துக்கங்களிலிருந்து மனிதன் உபத்திரவப் படுவானே யானால் வல்லபருடைய உதவியால் ஒன்று மாகாது. ஏனெனில் ஆரம்பமுடிவில்லாததே அனந்தமாகும். மேலும் தேகம், இந்திரியம், பிராணன், அந்தக் கரணம், அவனுடைய தர்மம் மனைவி வீடு வாசல் மக்கள், திரவியம் இவைகள் யாவற்றையும் ஏன் கிருஷ்ண னுக்கு அர்ப்பணஞ் செய்யவேண்டும்? கிருஷ்ணன் பூர்ண காமத்துடன்—நினைத்ததைச் செய்து கொள்ளக் கூடியதன்மை—கூடியவராகையினால் பிறர் எண்ணம் தேகம் இவைகளுக்கு ஆசைப்படமாட்டார். தேகத்தையும் அர்ப்பணம் செய்ய முடியாது. பாதாதி கேசம் பரியந்த முள்ளவைகளுக்கே சரீரமென்று பெயர். அதிலுள்ள கெட்ட வஸ்துக்களும் கூடவே சேர்ந்தது. மலம் மூத்திரம் இவைகளையும் அர்ப்பணஞ் செய்யவேண்டியது. அது எவ்விதம் முடியும்? பாப புண்ணிய ரூபமான கர்மங்களை அளிப்பதினால் அவைகளுக்கேற்ற பலாபலன்களை கிருஷ்ணனே அனுபவிக்கவேண்டியவராகிறார். பெயரால் மாத்திரம் கிருஷ்ணனுக்கு என்கிறார்களே தவிர உண்மையில் தங்களுக்காகவே சமர்ப்பணம் செய்து கொள்ளுகிறார்கள். சரீரத்திலுள்ள மலமூத்திரங்களைக் கோசேனர்கள் ஏன் சமர்ப்பணம் செய்யச் சொல்லுகிறதில்லை? "இனிப்பானவைகள் யாவற்றையும் விழுங்கி விட்டு கைப்பானதை உமிழ்ந்து விடு" என்று நடக்கிறார்கள் போலிருக்கிறது. கோசனர்களுக்குத் தவிர மறு சமயத்தவர்களுக்கு அர்ப்பணஞ் செய்யக் கூடாதென்று எழுதப்பட்டிருக்கிறது. பேராசையுடன் தன்னலத்தைக் கோறுவதாகாதா இது?

இதார்களுடையதைப் பரிக்கவும் வேதோக்த தர்மத்தை நாசஞ் செய்வதற்காகவுமே செய்யப்பட்ட சூழ்ச்சிகளாகும். சித்தாந்த இரகசியத்திலுள்ள கீழ்க்கண்ட சுலோகங்களிலிருந்து வல்லபருடைய கபடத்தை அறியலாம்.

श्रावणस्यामले यज्ञ एकादश्यां महानिशि ।
साक्षाद्भगवता प्रोक्तं तदक्षरश उच्यते ॥
ब्रह्मसम्बन्धकरणात्सर्वेषां देहजीवयोः ।
सर्वदोषनिवृत्तिर्हि दोषाः पञ्चविधाः स्मृताः ॥
सहजा देशकालोत्था लोकवेदनिरूपिताः ।
संयोगजाः स्पर्शजाश्च न मन्तव्याः कदाचन ॥
अन्यथा सर्वदोषाणां न निवृत्तिः कथञ्चन ।
असमर्पितवस्तूनां तस्माद्वर्ज्जनमाचरेत् ॥
निवेदिभिः समर्प्यैव सर्वं कुर्यादिति स्थितिः ।
न मतं देवदेवस्य स्वामिभुक्तिसमर्पणम् ॥
तस्मादादौ सर्वकार्ये सर्ववस्तुसमर्पणम् ।
दत्तापहारवचनं तथा च सकलं हरेः ॥

न ग्राह्यमिति वाक्यं हि भिन्नमार्गपरं मतम् ।
सेवकानां यथा लोके व्यवहारः प्रसिध्यति ॥
तथा कार्य्यं समर्प्यैव सर्वेषां ब्रह्मता ततः ।
गङ्गात्वे गुणदोषाणां गुणदोषादिवर्णनम् ॥

அவர்களின் கொள்கை களுடைய மூலதத்துவ மிதுவேயாம். ஸ்ரீ கிருஷ்ணன் இறந்து குறைந்தது 5000 வருடங்களான பிறகு, சிராவணமாத நடு நிசியில் வல்லபரை எப்படிக் கண்டார் என்று கேழ்க்கவேண்டும்? கோசேனர்களுடைய 'சேவ'னுகி எவன் தன்னுடைய திரவியம் சகலத்தையும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்கிருனே அவனுடைய சரீரமும் ஜீவனும் சகலதோஷங்களாலும் பாதிக்கப்படாது. அறிவற்றவர்களை ஏமாற்றி தன் வழியில் வசீகரஞ் செய்ய இதுவே வல்லபருடைய மோக்ஷமாகும். கோசேனர்களுடைய மாணக்கர்களின் (ஆண், பெண் இருவர்களின்) தோஷங்கள் சகலமும் நிவர்த்தியாகும் பட்சத்தில் பிணி, ஏழ்மைத்தனம் முதலிய துக்கங்களால் ஏன் அவர்கள் வருந்தவேண்டும்? தோஷங்கள் ஐந்து வகை யாகும் (i) இயற்கை தோஷம். காமக் குரோதாதிகளினுல் உண்டாகிறவைகள். (ii) ஒரே யிடத்தில் ஒரே சமயத்தில் செய்யப்படும் பாபங்கள் (iii) தடுக்கப்பட்டதென ஜனங்களால் சொல்லப்பட்டவை, வேதங்களால் பொய் யென்று காண்பிக்கப்பட்டவை(iv) தீய சகவாசத்தினுலுண்டாகும் சமூகக் கெடுதல்கள் அதாவது:—திருடு, களவு, தாய் சகோதரி, மக்கள், நாட்டுப் பெண், குருபத்னி முதலானவர்களுடன் முறை கெட்ட புணர்ச்சி செய்வது (v) தொடக் கூடாதவைகளைத் தொடுவது. இவ்வைந்து பாபங்களையும் கோசேனர்கள் மதிக்கக் கூடாது. அதாவது இவ்விஷயங்களில் அவரவர்களிஷ்டப் பிரகாரம் நடந்து கொள்ளலாம். இப்பாபங்களைத் தடுத்துக் கொள்ளுவதற்குக் கோசேனர்களுடைய கொள்கைகளை நம்புவதை விட வேறு வழி கிடையாது. ஆகையினுல் கோசேனர்களின் சீடர்கள் யாதொன்றையும் கோசேனற்கு அளித்து சமர்ப்பணஞ் செய்யாமல் அநுபவிக்கக் கூடாது. இக்காரணத்தைக் கொண்டே சீடர்கள் தங்களுடைய மனைவி, மக்கள், நாட்டுப் பெண், பொருள் இவைகளைக் குருவிற்குச் சமர்ப்பணஞ் செய்கிருர்கள். அனுபவித்ததை அளிக்க முடியாதாம். தன்னுடைய சொந்த மனைவியைக் கோசேனர் குருவுடைய சரணங்களில் சமர்ப்பிக்காமல், ஒருவனும் தொடவுங் கூடாது, என்பதே அவர்களுடைய விதி. ஏனெனில் எல்லாகாரியங்களையும் பொருள்களையும் முதன் முதலாகக் கோசேனற்கு அளிக்கவேண்டும். கோசேனருக்கு முதலில் மனைவி முதலானேர்களைச் சமர்ப்பணம் செய்துவிட்ட பிறகேதான் புணரல் வேண்டும. கோசேனருடைய கொள்கை களிலிருந்து வேருன மார்க்கத்தையும் கொள்கைகளையும் அவருடைய மாணுக்கர்கள் கேழ்க்கக் கூடாது. அங்கீகாரமும் செய்து கொள்ளக் கூடாது. இக்கொள்கைகள் அவர்களுடைய சீடர்களுள் பெயா பெற்றது. சமர்ப்பணஞ் செய்த சகல பொருள்களையும் பிரம்மத்தைச் சேர்ந்ததாகக் கருதவேண்டியது. வெவ்வேருன நதிகள் கங்கையுடன் சங்கமமாகி கங்

கையுடைய பெயரையும் அடைவது போலவே, கோசேனர்களைச் சேருகிறவர்களுக்குத் தீயகுணங்களெல்லாம் விலகி நன்மையே ஓலிக்கும். ஆகவே தன் சமயக் கொள்கைகளை புகழுதல் அவசியம். தன் காரியத்தை முடித்துக் கொள்ளுவதில் கோசேனருடைய மதம் மற்றெல்லா மதங்களைக் காட்டிலும் தேர்ச்சி பெற்றதாகும்.

பிரம்மாவுடைய இலக்ஷணம் ஒன்றையுங் கூட அறியாத சீடர்கள் இனத்தவர்களுக்கும் நீ எவ்விதம் பிரம்ம வித்தையை அளிக்க முடியும் என்று இவனைக் கேட்கவேண்டும். நாங்கள் பிராம்மணன் எங்களுடன் சேருவதினால் பிரம்மா சேர்க்கை யுண்டாகிற தென்றால் பிரம்மத்தினுடைய குணம் கர்மம் சுபாவம் கொஞ்சங் கூட உங்களிடம் காணப்படவில்லையே?

கேவலம் போகங்களை அநுபவிக்க மாத்திரமே பிராம்மணன் போலும். உங்களுடைய சிடர்களுடைய (இரு இனத்தையும் சேர்ந்த) மனைவி மக்களைச் சமர்ப்பணம் செய்யச்சொல்லிச் சுத்தமாக்குகிறீர்கள். உங்கள் சொந்த மனைவி மக்கள் நாட்டுப் பெண் முதலானவர்களைச் சமர்ப்பணம் செய்யாதபடியினால் அசுத்தமாக ஆகிறார்கள் இல்லையா? சமர்ப்பணஞ் செய்யாத பொருள்களை அசுத்தமாக நினைத்தால் அதிலிருந்து பிறந்த நீங்கள் ஏன் அசுத்தமாக மாட்டீர்கள். ஆகையாலே உங்களுடைய மனைவி மக்கள் நாட்டுப் பெண்கள் முதலானோர்களைப் பிறமதத்தவர்களுக்குச் சமர்ப்பணஞ் செய்யுங்கள். இல்லை முடியாது என்றால் பிறர் உங்களுக்கு மனைவி மக்களை அர்ப்பணஞ் செய்யும் வழக்கத்தை விட்டு விட்டு எல்லாம் வல்ல இறைவனால் சொல்லப்பட்டதும் வேத விகிதமான சன் மார்க்கத்தில் வந்து மனிதப்பிறப்பை பலனுள்ளதாகச் செய்து தர்மார்த்த காமமோட்சங்களை யடைந்து ஏன் ஆனந்தத்தை அனுபவிக்கக் கூடாது?

கோசேனர்கள் தங்களுடைய சம்பிரதாயக் காரர்களை "புஷ்டிமார்க்கத்தவர்" களென்கிறார்கள் உண்ணுவது, உறங்குவது, களித்திருப்பது மது பானம்செய்வது ஸ்திரீகளுடன்கூடி இஷ்டப்பிரகாரம் போகவிலாசஞ் செய்வதில் காலங்கழிக்கிறார்கள். பெருந்துக்கத்தை யளிக்கும் (புணர்ச்சி பெருக்கத்தால்) பலகொடிய மகாரோகங்களால் பிடிக்கப்பட்டு கஷ்டப்பட்டு எப்படி ஜனங்கள் இறக்கிறார் என்பது அவர்களுக்குத்தெரியும்? உண்மையாதெனில் அது புஷ்டிமார்க்கமில்லை. குஷ்ட்டி (குன்மரோகம்) மார்க்கமேயாகும். குஷ்டரோகக்காரர்களுடைய சரீர நரம்புகள், கழன்றுபோய் அழுகி ஒழுகுவதினால் அவஸ்தைப்பட்டுக் கடைசியில் இறந்துபோவது போலவே கோசேனர்கள் மிகவும் கஷ்டப்பட்டு மிகவருந்தி மரணமடைகிறார்கள். இதினாலேயே இதை நரகமார்க்கமெனலாம். ஏனெனில் துக்கத்திற்குப் பெயர் நரகம்; சுகத்திற்குப்பெயர்சுவர்க்கம். இக்கோசேனர்கள் தங்களுடையபொய்புரட்டுவலைகளை எங்கும் பரவும்படியாக வீசி எறிந்து மனிதர்களைப்பிடிக்கிறார்கள்." எவ்வளவு ஜீவன்கள் கோலோகத்திலிருந்து வந்திருக்கிறதோ அவ்வளவையும் கைதூக்கி விடவே அவதரித்தபுருஷோத்தமர்களாக்கும் நாங்கள்" என்கிறார்கள். எங்களுடைய உபதேசத்தைப் பெருபல் கோலோகங் கிடைப்பதில்லை" அங்கு

இருக்கும் புருஷன் ஸ்ரீ கிருஷ்ணன் ஒருவனே; மற்றவர்களெல்லோரும் மாதர்களே" என்கிருர்கள். அடடே! எங்களுடைய சமயமே உண்மையான சமயம். கோசேனர் களுக்குள்ள சீடர்களெல்லாம் கோபிகளாக மாற்றப்படுவார்கள் இருமனைவியுள்ள ஒருவனுக்கு எவ்வளவு ஆபத்துக்கள் உண்டாகிறதென்று யோசிக்கவேண்டும். ஒரு புருஷனும் கோடிக்கணக்கான மனைவிகளும் உள்ளவனின் இருப்பையும் துக்கத்தையும் அளவிடமுடியுமோ? கிருஷ்ணன் பெருஞ் சக்தியுள்ளவர் அவர் எல்லோரையும் திருப்தி செய்யக் கூடியவரென்ருல் 'ஸ்வாமினி' என்று சொல்லக்கூடிய அவருடைய மனைவிகளும் அவருக்குச் சரியான பலத்தை யுடையவர்களாயிருக்கவேண்டும். ஏனெனில் அவள் அவரில் பாதிபாகமுள்ளவள். காமபலம் ஸ்திரீக்கும் புருஷனுக்கும் சரியாயிருக்கிறது அல்லது புருஷனைவிட ஸ்திரீக்கு அதிகமாயிருக்கிறது. இதைப்போலவே என் கோலோகத்திலும் இராது? இதே மாதிரி வேறு ஸ்திரீகளுடன் கூட சுவாமினி ஸ்திரீகளுக்கு சண்டைசச்சரவுண்டாகும். ஏனெனில் சக்களத்திசண்டை மிகக்கொடியது. சுவர்க்கத்தினுடன் பார்க்குங்கால் கோலோகம் நரகத்தைப்போலவேயாகும். அதாவது இவ்விடத்தில் சம்யோகத்தினல் மூலக்கடுப்புமுதலான கெட்ட வியாதிகள் உண்டாவதுபோலவே கோலோகத்திலுமிருக்கும். சீ! சீ!! சீ!!! இப்பேதைமானிட உலகமே உங்களுடைய கோலோகத்தைவிட மேலானது. தன்னை ஸ்ரீ கிருஷ்ணன் என்று சொல்லிக்கொள்ளும் கோசேனன் பலமாதர்களுடன்கூடி லீலை செய்வதின் பலனுகக் கிரந்தி புண் பிரமேகம் முதலிய ரோகங்களினல் பிடிக்கப்பட்டு கஷ்டப்படுவது போலவே கோலோகத்தில் இவர்களுடைய ஸ்வாமியான ஸ்ரீ கிருஷ்ணனும் இவ்வியாதிகளிலிருந்து ஏன் பீடிக்கப்படமாட்டாரென்று சொல்லுங்கள்? இல்லை யென்ருல் அவருடைய சுரூபமான கோசேனர்கள் ஏன் பாதிக்கப்படுகிருர்கள் ?

வினு:—இச்சிலவுலகில் அவதாரம் செய்வதனல் ரோகம் பாபம் இவைகள் உண்டாகின்றன. கோலோகத்தில் உண்டாகாது ஏனெனில் அங்குபிணியும் பாபமுங் கிடையாது.

விடை:—போகே ரோக பயம். பயமுள்ளவிடத்தில் பிணி நிச்சயமாகவிருக்கும். கிருஷ்ணனுடைய கோடிக்கான பல ஸ்திரீகளுக்குச் சந்தானமுண்டாகிறதா? இல்லையா? உண்டென்ருல் அவைகள் ஆணு, பெண்ணு அல்லது இரண்டுமா? அவர்களெல்லாம் பெண்பிள்ளைகளென்ருல் விவாகம் அவர்களுக்கெல்லாம் யாருடன் நடக்கிறது. ஏனெனில் ஸ்ரீ கிருஷ்ணனைத் தவிர வேறு மனிதனும் அங்கு கிடையாதே. கிருஷ்ணன் ஒருவனைத் தவிர வேறுமனிதர்கள் அங்கு இருக்கிருர்களென்ருல் முன் சொன்னதிற்கு மாறுபாடாகும். அவர்கள் எல்லோரும் ஆண்பிள்ளைகளே யென்ருல் முன் கேள்வியே மறுபடியும் சரியாகிறது. அதாவது யாரை விவாகம் செய்துகொள்ளுவார்கள்? கோலோகத்திலுள்ள ஸ்திரீகளுடன்கூடவே காரியத்தைச் சரிப்படுத்திக்கொள்ளுகிருர்கள் என்று நம்பலாமா? கோபிகளைத்தவிர்த்து வேறு ஸ்திரீகளிருக்கிருர்களென்ருல் முன்சொன்னதிற்கு விரோதமாகிறது. உ குழந்தைகளை

கோலோகத்தில் பிறக்கிறதில்லையென்றால், கிருஷ்ணன் பேடனாயும் மாதர்கள் மலடிகளாயுமிருக்கவேண்டும். இது டில்லிபாதுஷாக்களின் விலைமாதர்களுடைய அந்தப்புரத்தைப்போலவேயாகும். இக்கோலோகம்.

கோசேனர்கள் தங்கள் சீடர்களின, ஆண் பெண், உடல்பொருள் ஆவிமூன்றையும் தனக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்கிறார்கள். இது சரியாகாது. ஏனெனில் விவாகசமயத்தில் ஸ்திரீ, புருஷனுக்குச்சமர்ப்பணம் செய்யப்படுகிறாள். மேலும் மனதுவேறாயிருக்க சமர்ப்பணம் செய்யமுடியாது. ஏனெனில் சரீரம் முழுதும் அர்ப்பணம் செய்யப்படும்பொழுது மனது மாத்திரம் தனியாகாது. மனதின் சம்மதமன்னியில் சரீரத்தை மாத்திரம் அளிப்பது விபசாரித்தனத்திற்குக் குறைந்ததாகாது. பொருள் விஷயத்திலுமப்படியே. மனது அன்னியில் எதையும் கொடுத்தளிக்கமுடியாது. சீடர்களை வேலை செய்யச்சொல்லி தாங்கள் சுகங்களை யனுபவிப்பதே கோசேனர்களின் உண்மையான நோக்கம். பல ஜாதி கோசேனர்கள் தைலங்க வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில்லை. தப்பித்தவறி இவர்களுக்குப் பெண்ணைக் கலியாணத்தில் கொடுத்துவிட்டால் ஜாதிபிரஷ்டஞ் செய்யப்பட்டு தீண்டாதவர்களாக கருதப்படுகிறார்கள். ஏனெனில் கோசேனர்கள் சாதிபிரஷ்டர்கள். அறிவற்று அல்லும் பகலும் சோம்பேரியாகத் திரிந்து காலத்தைக்கழிக்கிறார்கள். அவருடைய நடவடிக்கைகளைக் கவனியுங்கள். யாராவது சீடர்களழைத்தால் கோசேனர் அங்கு போய் கீழுட்கார்ந்து வாய்திறவாமல் மரப்பொம்மையைப் போலிருப்பார். மூர்க்கர்களுடைய பலம் மௌனமாயிருப்பதிலேயே இருக்கிறது என்பது போலவே காணப்படும். பேசினால் அவனுடைய மடத்தன்மை வெளியாகிவிடும். இமைகொட்டாமல் மாதர்களை விழித்துப்பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருப்பான். அவனால் பார்க்கப்பட்டவள் தன்னை மிகவும் அதிர்ஷடமுள்ளவளாக நினைத்துக்கொள்ளுகிறாள். அவளுடைய தாய், தகப்பன், புருஷன், சகோதரன், முதலானோர்களும் சந்தோஷமடைகிறார்கள். நமஸ்காரம் செய்யும்பொழுது ஸ்திரீகளெல்லோரும் அவனுடைய பாதங்களைத் தொடுகிறார்கள். அவனுக்கு இஷ்டப்பட்ட மாதர்களின் கைவிரலை காலால் கொஞ்சம் பலமாக அழுத்துகிறான் அல்லது கண்பார்வையைச் செலுத்துகிறான். அந்த ஸ்திரீயின் புருஷன் முதலான உறவினர்கள் மிகவும் பாக்கியமுள்ளவர்களாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். அவளுடைய புருஷனும உறவினர் முதலானவர்களும் கோசேனருடைய பாதசேவையிலிரு என்கிறார்கள். இவ்வழி புருஷனுக்கும் மற்றும்முதலான உறவினர்களுக்கும் பிடிக்காவிடில் நடுமனிதனைக்கொண்டு காரியததை நடத்திக் கொள்ளுகிறார். கோசேனருடைய ஆலயத்தைச்சுற்றிலும் அக்காரியத்திற்குவேண்டிய ஆட்களும் இருக்கிறார்கள். அவர்கள் தக்ஷிணையைக் "கொண்டுவாருங்கள் அளியுங்கள், கோசேனன், மனைவி மக்கள் முக்கிய சேவகர்கள் காலாட்படைகள் சுவாமி முதலாவர்களுக்குக் கொடுங்கள், என்று முறையிட்டு வாங்கிக் கொள்ளுகிறார்கள். இம்மாதிரி பெயர்களைச்சொல்லி பணத்தைவாங்கிக் கொள்ளுகிறார்கள். சீடன், இறக்குந்தருவாயில் அவன் மாரில்காலைக்கோசேனர் வைத்துதைத்து

வேண்டிய திர்வியத்தைப் பெற்றுக்கொள்ளுகிறான். மகாபிராமணர்கள், குத்தகைக்காரன், சுவம்சுமப்போன், கோவில்மணியக்காரன் முதலானவர்களுடையதைப்போல் இது காணப்படவில்லையா? சீடர்களுடைய கலியாணத்தில் கோசேனனைவரவழைத்து அவனைக்கொண்டே பெண்பிள்ளைகளுடைய பாணிக்கிரஹணத்தைச்செய்யச்சொல்லுகிறார்கள்.

ஸ்நான சமயத்தில் ஸ்திரீ புருஷர்களிருவரும் முக்கியமாய் ஸ்திரீகளும் மஞ்சள், குங்குமப்பூ கலந்ததைக்கொண்டு கோசேனருடைய சரீரத்தில் தடவித்துடைக்கிறார்கள். பெரிய பாத்திரத்தில் ஆசனப்பலகையிலமர்த்தி ஸ்நானஞ் செய்ய உதவி புரிகிறார்கள். பிறகு பீதாம்பரம் ஒன்று போர்த்திக்கொண்டுப் பாதரட்சைகள் அணிந்து வெளியே வருகிறான். அவனிடுப்புத்துணி தொட்டியில் எறியப்படுகிறது. அத்தொட்டித் தண்ணீரில் ஆசமனம் செய்கிறார்கள். சுகந்தவாசனைகளைக்கலந்து கோசேனருக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுக்கிறார்கள். அதைக் கடித்துக்கொஞ்சம் சாறைவிழுங்கிவிட்டு, மீதியுள்ளதை பக்கத்தில் சீடர்கள் நின்று ஏந்திக்கொண்டிருக்கும் வெள்ளிக் கோப்பையில் உமிழ்கிறான். அதைப் பிரசாதமாகக் கருதுகிறார்கள். இவர்களா மனிதர்கள்? என்ன? இதற்கதிகமான மடத்தனமும் அநாசாரமும் உண்டோ? அநேகம் பெயர்கள் சமர்ப்பணையைவாங்கிக்கொள்ளுகிறார்கள். அவர்களில சிலர் வைணவர்களுடைய கையிலிருந்தும் சாப்பிடுகிறார்கள். வேறு சிலர் சாப்பிடுகிறதில்லை. அவர்களால் கொடுக்கப்பட்ட விறகுகளைக் கூட ஜலத்தைக்கொண்டு கழுவின பிறகே எடுத்துக்கொள்ளுகிறார்கள். மாவு சர்க்கரை (வெள்ளை பழுப்பு) நெய் முதலானவைகளைக்கழுவாமல் உபயோகஞ் செய்வதினால் அவைகள் தீண்டலுள்ளதாகவாகின்றன. சுத்தஞ்செய்தால் சாமான்களே நஷ்டமாய்விடும் அன்றோ? ஸ்ரீ கிருஷ்ணனுடைய சிற்றின்பங்களிலும் விஷய சுகங்களிலும் அதிகப்பணத்தைச் செலவிடுவதாகவும் சொல்லுகிறார்கள் இவ்வனுபவங்களை யெல்லாம் அவர்களே பெருகிறார்கள். உண்மையைச் சொல்லுமிடத்து கோசேனர்கள் மிகவும் மானக்கேடான காரியங்களைச் செய்கிறார்கள். பீர்ச்சாங்குழல் நிறைய சாயநீரை இழுத்து, ஹோளி பண்டிகைக்கொண்டாட்டத்தில் மாதர்களுடையமர்மஸ்தானங்களிலும்இரகசியபாகங்களிலும் அதைப்பீச்சுகிறார்கள். பிராமணர்களுக்குதவாத உணவுப்பொருள்களை விலைக்கு விற்கிறார்கள்.

வினா:— கோசேனரே கடைவைத்துக்கொண்டு ரொட்டி பருப்பு அரிசி பதார்த்தங்கள் மரக்கறி முதலியவைகளை விற்கிறதில்லை. இச்சாமான்கள் நிறைந்த இலைகளையும் தட்டுக்களையும் சம்பளத்திற்கு பதிலாக வேலைக்காரனிடம் கொடுக்கிறார்கள். அவர்கள் விற்கிறதில்லை.

விடை:— மாதசம்பளத்தைப் பணமாகக் கொடுத்துவிட்டால் அவர்கள் ஏன் இதை ஒப்புக்கொள்ளுவார்கள்? கூலிக்குப்பதிலாக தங்களுடைய வேலையாட்களுக்கு அரிசி பருப்பு முதலிய உணவுப்பொருள்களை விற்கிறார்கள். கோசேனனே இக்காரியத்தைச் செய்வானானால் பிராமணன் முதலான அவனுடைய வேலையாட்கள் உணவுப்பொருள்களை விற்கிறபாபத்திற்குறியவனு

வான். முதல் இப்பாபத்தைத் தாங்களே செய்துவிட்டு இதரர்களையும் இத்துடன் இழுத்துக் கொள்ளுகிறார்கள். நாத்துவாரையைப்போன்ற சிலவிடங்களில் இவர்களே நேரிட விற்கிறார்கள். உணவு விற்பனை செய்வது நீசர்களுடைய தொழில். உத்தமர்களுடைய தல்ல. இவ்விதமானவர்களே ஆரியவர்த்தத்தைக்கீழ்திசைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள்.

சுவாமி நாராயணருடைய மதம்.

வினு:—ஸ்வாமி நாராயணருடைய மதமெப்படி ?

விடை:—சீதளாதேவியைப்போலவே, அவளுடைய வாகனமாகிய கழுதையும். இப்பழமொழி இதற்குத்தகுந்தது. பணம் முதலியவைகளை பறிப்பதில் கோசேனர்களுடைய விசித்திரலீலைகளைப்போலவே சுவாமி நாராயணருடையதும். சகஜானந்தா என்ற ஒருவன் அயோத்திக்குச் சமீபமுள்ள கிராமம் ஒன்றிலிருந்தான். பிரம்மச்சாரியாயிருக்கும் பொழுதே. குஜராத், கத்தியவார், கச், முதலான தேசங்களில் சுற்றிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனவனுக்கு இஷ்டமானமார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளகூடிய அறிவற்றவும் கபடமற்றவும் சாதாரணமுமான உள்ளூர் வாசிகளைக்கண்டான். அங்கு தன் பொய்வஞ்சகவலையை வீசி நாலைந்து பேர்களைச் சீடனுக்கிக்கொண்டான் அவர்கள் ஒன்றுகூடி யோசனைசெய்து சகஜானந்தன் நாராயணவதாரம் என்றும், பெரிய சித்தனென்றும், பக்தர்களுக்கு நான்கு கைகளுடன் பிரத்யக்ஷமாகித் தரிசனமளித்து வேண்டிய வரங்களையளிப்பாரென்னும் வெளிப்படுத்தினார்கள். சீடன் ஒருவன் தாதா காகார் என்ற கத்தியவாரில் பெரிய நிலச்சுவான்தாரை "உங்களுக்குச் சதுர்புஜநாராயணனைக் காணவேண்டுமானால் சகஜானந்தரை பூஜைசெய்யுங்கள்" என்றான். அவரும் அப்படியே சரி நல்லதென்றார். அவர் ஒன்றுமறியாதவர். சகஜானந்தன் தலையில்மகுடந்தரித்து இருகரத்திலேயும் சங்கையும் சக்கரத்தையும் ஏந்தி மேலேதூக்கிக் கொண்டான், மற்றொருவன் தன் இரு கையிலும் கதை தாமரையை ஏந்தி அவனுடைய அக்குள்கள் வழியாப் சேர்த்துக்கொண்டான். அப்பொழுது சதுர்புஜ நாராயணர் பிரசன்னமாய்விட்டார். நாராயணனை ஒருமுறைபார்த்ததும் கண்களை மூடிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் நாராயணன் சினங்கொள்வார் என்றும் சகஜானந்தனுடைய சிஷ்யர்கள் சொல்லிவைத்திருந்தார்கள். இவனுடைய பொய் வெளியாய்விடுமென்றும் அவர்கள் பயந்தார்கள் போலும். அசைவற்ற கற்சிலையைப்போல் பளபளப்பான ஆடைகளை அணிந்து சகஜானந்தன் நிற்கும் அறைக்கு அழைத்துச்சென்றார்கள். அங்கு அவன்பேரில் வெளிச்சத்தை வீசினார்கள். தாதாகாசர் சதுர்புஜநாராயண மூர்த்தியைக் கண்டவுடன் வெளிச்சத்தை மறைத்து விட்டார்கள். அவனுடையகாலில் எல்லோரும் விழுந்து நாராயணனை வணங்கிப்பணிந்து அவ்வறையிலிருந்து வெளிவந்தார்கள். தாதாகாசர்க்கும் நீ புனிதமாய் விட்டாய் இப்பொழுது நீ இப்பெரியாருடைய சீடனுக வேண்டுமெனச் சீடர்கள் சொன்னார்கள். அவரும் சீடனுக இசைந்தார். இவர்கள் அடுத்த அறைக்குள் போவதற்குள்ளாகச் சகஜானந்தன் தன் ஆடைகளை மாற்றி அங்கேயே மஞ்ச

மொன்றில் அமர்ந்தான். தாதாகாசர்க்குக்காண்பித்து பாருங்கள்! வேறு சுவரூபத்தை யெடுத்து இங்கு வீற்றிருக்கிருர்கள் என்ருர்கள். அவர்களுடைய வலேயில் அகப்பட்டுக்கொண்டு அப்பொழுதிலிருந்து சுவாமிநாராயணருடைய கொள்கைகளின் வேரு ஊன்றியது. ஏனெனில் தாதாகாசர் பெரிய ஜமீன்தாராயிருந்தார். அவ்வூரையும் சகஜானந்தன் தன்தலைமை ஸ்தானமாகச் செய்துக்கொண்டான். அங்கிருந்து பலவிடங்களுக்குச்சென்று உபதேசம் செய்துவந்தான். சாதுக்கள் அநேகம் பேரையும் சேர்த்துக் கொண்டான். சாதுக்கள் சிலரது கழுத்து நரம்புகளைக்கசக்கி நசுக்கிவிட்டு மூச்சுத்தெணரச் செய்துவிட்டு, இவரைச்சமாதியடையச் செய்துவிட்டேன் பார் என்பான். இவ்விதகுறும்புகாரியங்களெதையும் அறியாத கத்தியாவார் பேதை ஜனங்களை இவ்வாறு மயக்கிக்கொண்டு வந்தான். அவனிறந்தபிறகு சீடர்கள் மிகவும் அடாதபொய்க்காரியங்களேயும் வஞ்சகங்களேயும் கையாண்டு வந்தார்கள். கீழ்க் கண்டகதையினுல் இது நன்கு விளங்கும்.

திருட்டுக்காரியம் செய்துக்கொண்டிருக்கும் பொழுது கள்வன்பிடிக்கப்பட்டான். நியாதிபதி அவனுடைய மூக்கை நறுக்கிவிடவேண்டும் என்று தண்டனையை விதித்தார். மூக்கை நறுக்கினவுடனே அப்படுகள்ளன் ஆடிப்பாடி குதிக்கவாரம்பித்தான். ஏன் அம்மாதிரி செய்கிருன் என்று ஜனங்கள் வினவிஞர்கள். அது சொல்லக்கூடாதது என்று பதிலளித்தான். அப்படி சொல்லக்கூடாதது என்னவென்று அவர்கள் மறு படியும் வினவிஞர்கள். அவன் அதற்குமுன்னுல் கேட்பதும் பார்க்காததும் என்ருன். "வாருங்கள் வாருங்கள் என்ன விவரம் என்று சொல்லுங்கள்" என்ருர்கள். எனக்கு முன் பிரத்யக்ஷமாகச் சதுர்புஜ நாராயணன் நிற்கிருர் என்று சொல்லி ஆடிப்பாடி நான் புனிதமானேன் என்ருன். அவர்கள் ஏன் நாராயணனைக் காணமுடிகிறதில்லை என்றுஜனங்கள் கேட்டார்கள். அவர்களுடைய மூககு பார்வையை மறைக்கிறதென்றும் அதை அக்றறியபிறகே காணமுடியும் என்றும் அதற்கு முன்னுல் முடியாதென்றும் சொன்ஞன். அவர்களிலுள்ள சில முட்டாள் மூக்கையிழந்தபோதிலும் நாராயணனை காணவேண்டுமென்ருர்கள். நாராயணனைக்காண மூக்கைவெட்டிக்கொள்ளுவதாகவும் சொன்ஞர்கள். பாதகன் மூக்கை அறுத்து விட்டு "நான் செய்கிறமாதிரியே நீயும் செய்யவேண்டும். இல்லையானுல் ஏளனத்திற்கு ஆளாய் விடுவோம்" என்று காதில் இரகசியமாகச் சொன்ஞன். அதன்மேல் அம்மனிதனும் ஆடிப்பாடிக் களித்து சிரித்துத் தானும் நாராயணனைக் காணுவதாகச்சொன்னுன். வரவர நாராயணனைக்காண வேண்டுமென்று மூக்கை நறுக்கிக்கொண்ட ஜனங்களின் தொகை ஆயிரத்திற்கு மேலாய்விட்டது. அப்பொழுது பெரிய கூக்குரல் உண்டாச்சுது. தங்களுடைய கட்சியையும் 'நாராயணதரிசிகள்' நாராயணனைக்கண்டவர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள். அறிவில்லாத அரசனொருவன் இதைக்கேட்டு இவர்களை கூப்பிட்டு வரவழைத்தான். அங்கு சென்றவுடன் கூடிக்குலாவி ஆடிப்பாடிசிரித்து களித்தார்கள். நாராயணனை நேருக்குநேராகக் காணுவதாகச் சொன்ஞர்கள். அரசனுக்கு அது உண்மை யெனப்பட்டது, 'நாராயணதரிசிகள்' தன்னு

டைய மூக்கினுல் பார்க்கமுடியாது என்ருர்கள். அரசன் இது சரியெனநம்பி ஜோசியனே வரவழைத்து மூக்கை நறுக்கிக் கொள்ளுவதற்குச்சரியான முகூர்த்தகாலம் ஒன்றைபார்க்கும்படி ஏவினுன், அவர்கள் மாட்சிமை தங்கிய அரசனே! அன்னதாதாவே!. தசமி தினம் காலே எட்டுமணிக்கு மூக்கை நறுக்கிக் கொண்டு நாராயணனேக்காண ஏற்றமுகூர்த்தம் “ என்ருர்கள். அடே போப் ஜனங்களே! மூக்கையுமா நறுக்கிக் கொள்ளுவதற்கு பஞ்சாங்கத்தில் முகூர்த்தம் வைக்கப்பட்டிருக்கிறது !! தன்னுடைய மூக்கை நறுக்கிக்கொள்ள அரசன் நிச்சயம் செய்துகொண்டவுடன் ஆயிரம் பெயர்களேயும் இராஜாங்க செலவில் விருந்திற்கழைக்கும்படி உத்திரவிட்டார். இதைக்கண்டு அவர்கள் களிப்படைந்து ஆடிப்பாடித்திரிய வாரம்பித்தார்கள். திவானுக்கும் இன்னும் மற்ற புத்திவான்களுக்கும் இது பிடிக்கவில்லே. ௯0 வயதுள்ளகிழவர் (மாஜிதிவான்) ஒருவரிருந்தார். அச்சமயத்தில் திவானுபிருந்த அவருடைய பேரனின் பேரன் அவருக்கு எல்லாவற்றையும் தெரிவித்தான். அதன் பேரில் அவர் அம்மனிதன் கொடும்பாதகன் என்னே அரசனிடம் அழைத்துப்போ” என்று சொன்னபிரகாரமே செய்தான். அவர் ஆசனத்தி லமர்ந்த பிறகு நாராயதரிசிகளேப்பற்றினவை யெல்லாவற்றையும் அரசன் சந்தோஷத்துடன் சொன்னுன். வயது முதிர்ந்த திவான் அதாவது பழையமந்திரி, கேளும் மகாராஜனே அவசரப்படாதேயுங்கள், யோசனே செய்யாமல் செய்ததைபற்றி ஒருவன் பிறகு வருத்தப்படுகிருன் என்ருர்.

அரசன்:—அந்த ஆயிரம் பெயர்களுமா பொய் சொல்லுவார்கள் ?

திவான்:—அவர்கள் பொய் சொல்லுகிருர்கள் அல்லது மெய்சொல்லுகிருர்கள் என்று சரிவரவிசாரித்துபார்க்காமல் நிச்சயம் செப்யமுடியாது.

அரசன்:—எவ்விதம் விசாரணே செய்யமுடியும் ?

திவான்:—அறிவு, இயற்கையமைப்பு, நேர்பார்வை, முதலான பிரமாணங்களினுல்.

அரசன்:—படிக்காதவனுயிருந்தால் எவ்விதம் விசாரணே செய்யமுடியும்?

திவான்:—அறிந்தவர்களுடைய சேர்க்கையினுலும் ஞானவிருத்தியினுலும் செய்யலாம்.

அரசன்:— அறிந்தவர்களில்லாமல்போனுல்,

திவான்:—பிரயத்தனமுள்ளவனுக்காகாதது ஒன்றுமில்லே.

அரசன்:—இக்காரியத்தில் என்ன செய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்.

திவான்:—நான் கிழவன்; வீட்டிலேயே உட்கார்ந்திருப்பவன். இன்னும் கொஞ்சநாளே வாழ்வுண்டு. ஆகையினுல் முதலில் பரிக்ஷைசெய்வேன். பிறகு சரியென்பதை நீங்கள் செய்யலாம்.

அரசன்:—அது நல்ல யோசனேயே. திவானுடைய மூக்கை நறுக்க முகூர்த்தம் பார்க்கவும்.

ஜோசியன்:—மகாராஜாவினுடைய ஆக்ஞை. சுக்லபக்ஷம் பஞ்சமி திதி பத்து மணிக்கு முகூர்த்தம் நன்ருயிருக்கிறது. குறித்த தினத்தில் பஞ்சமி

என்று எட்டுமணிக்கு அரசன் முன் கிழ திவான் வந்தார். தன்னுடன் இராயிரம் படையாட்களை கூட்டிவரும்படியும் சொன்னார்.

அரசன்:—படைகளுக்கு அங்கு என்ன வேலை ?

திவான்:—ராஜதந்திரம் உங்களுக்கு அவ்வளவு தெரியாது. நான்சொன்ன பிரகாரம் செய்யுங்கள்.

அரசன்:—நல்லது சைனியத்தைத்தயாரியுங்கள்" 9-30 மணிக்கு எல்லோரையுமழைத்துக்கொண்டு அரசன் சென்றான். இவர்களைப் பார்த்து நாராயணதரிசிகள் பாடி சிறித்து ஆடவாரம்பித்தார்கள். இச் சமயத்தைக் கண்டு பிடித்தவரும் முதன் முதலில மூக்கு வெட்டுண்டவனையும் வரவழைத்து அரசன் இன்றைக்கு முதலில் நம்முடைய திவானுக்கு நாராயண தரிசனம் செய்துவை என்றார். பத்துமணியடித்தவுடன் கிழ திவானுடைய மூக்கின் கீழ் தட்டு ஒன்றை ஒருவன் பிடிக்க நாராயண தரிசிகளுடைய எஜமான் கூறிய கத்தி யொன்றைக்கொண்டு மூக்கை வெட்டி விட்டுத் தட்டில் வைத்தான். ரத்தவெள்ளம் மூக்கிலிருந்து பெருகி திவானுடைய முகம் வெளுத்துப்போய்விட்டது. அச்சண்டாளன் காதுடன் ரகசியமாய் "நீயும் சிரித்துக்கொண்டு எனக்கு நாராயணன் காணப்படுகிறார்" வெட்டுண்ட மூக்கு ஒன்றாகச்சேராது. நான் சொல்லுவதை செய்யாமல் போனால் ஊர் நகைப்புக்கு ஆளாகி விடுவீர். என்றான். இதைச் சொல்லி தூரவிலகி நின்றான். கைக்குட்டையை எடுத்து வெட்டுண்ட மூக்கில் திவான் வைத்து அழுத்திக்கொண்டார், தயவுசெய்து நாராயணனைக்காண்கிறீர்களா வென்று தெரிவியுங்கள் என்றான் அரசன். அரசனுடைய காதில் இரகசியமாய் "ஒன்றுமில்லை. வீணாக இவன் ஆயிரம் பேர்களை நாசம் செய்து விட்டான்" என்றார். அவர்களை என்ன செய்யவேண்டுமென்று அரசன் கேட்டான். கைதிசெய்து கடுந்தண்டனையை அளிக்கவேண்டும். சிறையிலிட்டு உயிருள்ள வரையில் வைத்திருக்கவேண்டும். அவர்களை எல்லாம் பொய் மார்க்கத்தில் திருப்பின பாதகனை கழுதைமேலேற்றி அவமானப்படுத்திக் கொலைசெய்ய வேண்டும் என்றார். அரசனும் திவானும் ஒருவருக்கொருவர் மெதுவாகப்பேசிக் கொள்வதிலிருந்து தெரிந்துகொண்டு நாராயணதரிசிகள் தப்பியோட பிரயத்தினம் பண்ணினார்கள். படைகள் நாலாபக்கமும் சூழ்ந்துகொள்ளவே தப்பியோட முடியவில்லை. எல்லோரையும்பிடித்துக்கைது செய்யப்பட்டது. அக்கொலை பாதககலகத்தலைவனின் முகம் கரும்புள்ளிகளால் மறைக்கப்பட்டும் கழுதை மேலேற்றி காதாந்த செருப்புமாலைகளைக்கழுத்தின் மேல் போட்டுப் பட்டண வீதிகளின் வழியாய் ஊர்வலம் வரட்டும். மண்ணுருண்டை, சாம்பல் முதலியவைகளைச்சிறுவாகள்மேலே எறியட்டும் என்றுஅரசன் உத்திரவிட்டார். ஜோடுகளால் அடிக்கட்டும் துண்டுதுண்டாக காய்கள் செய்யட்டும் இப்போக்கிரியை தண்டனை செய்யாவிடில் மற்றவர்களும் இத்தீயகாரியங்கள் செய்வதிலிருந்து விலகமாட்டார்கள் என்று அரசன் உத்திரவளித்துவிட்டான். இவ்விதமான மானபங்க முடிவை நாராயணதரிசிகளடைந்தார்கள். சகலவேத விரோதிகளாயும் இதரர்களுடைய திரவியத்தை மோசஞ்செய்வதிலேயும் கண்ணும் கருத்து

மாயும் சமர்த்தர்களாயுமிருக்கிறார்கள். மதபேதக்காரர்களுடைய கெடுதல்களே இவை. சுவாமி நாராயணக்காரர்கள் இத்தகைய தீச்செயல்களின் துணைகொண்டு மற்றவர்களை கொள்ளையிடுகிறார்கள். சாவுக்கிடையில் சகஜானந்தர் வெள்ளைக்குதிரையின் மீதேறி தங்களை அழைத்துக்கொல்லவந்ததாகவும் அதே கோவிலுக்கு வாரமொருமுறை வருவதாகவும் அறிவில்லாதவர்களை ஏமாற்றுகிறதற்காகவே சொல்லுகிறார்கள். திருவிழாநாட்களில் ஆலயத்தினுள் பூசாரிகளிருக்கிறார்கள். கீழேகடை ஒன்றுமிருக்கிறது. அதையும் ஆலயத்தையும் குழாய் ஒன்று சேர்க்கிறது. ஆலயத்தில் பூஜையளிக்கப்படும் தேங்காய்களையெல்லாம் குழாயின் வழியாய் கீழேயனுப்பிவிடுகிறார்கள். அத்தேங்காய்களை மறுபடியும் விலைக்கு வாங்கி மற்ற ஆராதனைக்காரர்கள் பூஜைக்குக் கொடுக்கிறார்கள். இவ்விதமாக ஒரே தேங்காய் அதே நாளில் ஆயிரந்தடவை விற்கப்படுகிறது. மீதி சாமான்களுமப்படியே. இப்பிரிவினைக்காரர்களிடத்தில் வேறு தனி விசேஷம் ஒன்றுண்டு. அந்தந்தசாதிக்கிசைந்த காரியங்களை அந்தந்த சாதுக்கள் செய்யவேண்டும். உதாரணமாகஅம்பட்டசாது க்ஷவரவேலை செய்கிறான். குயவனை சாது சட்டிபானை செய்கிறான். பானியா (கடைவைத்திருக்கும்) சாது பானியா வேலையைச்செய்கிறான். சூத்திர சாது சூத்திரனே. தங்களுடைய சீடர்களின்மேல் ஒருவிதவரியைச் சுமத்தியிருக்கிறார்கள். வேஷங்காட்டி கோடிக்கணக்கானவர்களை சிஷ்யர்களாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். பிரதிதினமும் விருத்தியாய்க்கொண்டே இருக்கிறார்கள். சகஜானந்தனுடைய சிங்காசனத்தைப்பின்பற்றுகிறவர்கள் விவாகஞ்செய்துகொண்டு கிரகஸ்தர்களாகிறார்கள். நாணயங்களணிந்து கொள்ளுகிறார்கள். சீடர்களுடைய அழைப்புக்கிணங்கி அவர்களுடைய வீட்டிற்குப் போகும்பொழுது கோசேனரைப்போலவே தன்பெயராலும் தங்கள் மக்கள் பெயராலும் தானங்களைப்பெறுகிறார்கள். தங்களுடையதை சத் சங்கம் என்றும் பிறமதஸ்தர்களுடையதை குசங்கமென்றும் அழைக்கிறார்கள். மற்றவர்கள் எவ்வளவு உத்தமமானவர்களாயும் அறிந்தவாகளாயு மிருந்தபோதிலும் தங்களுடையதைத்தவிர வேறான தர்மத்தில் எப்பொழுதும் அவர்களை ஒருபொழுதும் சட்டைசெய்கிறதுமில்லை. பணிகிறதுமில்லை. பிறமதத்தவர்களை மதிப்பதையும் பாபமாகக் கருதுகிறார்கள். இச்சாதுக்கள் மாதர்களின் முகத்தைக்கூட கண்ணெடுத்துப் பார்க்கிறதில்லை. வெளிப்படையாக மறைவில் என்னகெடுதல்களிருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? இவைகளெல்லாம் இன்னும் வெளியாகவில்லை. சில மைதுனசம்பவங்களும் வெளியாயிருக்கின்றன. நல்லபதவியி லிருக்கிறவர்கள் இறக்குந்தருவாயில் அவர்களை கிணற்றில் தள்ளிவிட்டு இன்னின்னமனிதன் சரீரத்துடன் வைகுந்தத்தை யடைந்தான் என்று பிரசித்தஞ்செய்துவிடுகிறார்கள். "சகஜானந்தரே நேராக அழைத்துச் செல்ல வந்தார். மகானுயிருந்தபடியினால் அவரை தாங்கள் எடுத்துக்கொண்டு போகக்கூடாதென்று சகஜானந்தருடன் மன்றாடியும் வேண்டியும் கேளாமல் வைகுண்டத்தில் இவர் அவசியம் வேண்டியவரென்று அழைத்துச்சென்றார். ஆகாயவிமானத்துடன் கூட சகஜானந்தரைக்கண்ணால் கண்டேன். அம்ம

காத்மாவை ஆகாய விமானத்திலேற்றிக்கொண்டு பூமாரி பொழிய சென்ருர்" என்ருர்கள். ஏதாவது சாது ஒருவருக்கு உடம்பு சரியன்னியில் வியாதியுடனிருந்து பிழைக்கிற நம்பிக்கையில்லாமல் போய்விட்டால் நாளேயிரவு வைகுண்டத்திற்குப் போவானென்று வெளிப்படுத்துகிருர்கள். இரவில் பிராணன் போகாமல் மூர்ச்சையடைந்து போனல் தான் சொன்ன வார்த்தைகள் பொய்யாகாமலிருக்கும் பொருட்டு கிணற்றில் தள்ளிவிடுகிருர்கள். இப்படியே "கோலோக்யகோசேனன் இறக்கும்பொழுதும்சிராட்டிவிட்டார்"என்கிருர்கள்.

கோசேனர்களாலும் சுவாமி நாராயணப் புரோகிதர்களாலும் உபதேசம் செய்யப்படும் மந்திரம் இதுவேயாம். "ஸ்ரீ கிருஷ்ணன் என்காணம்" என்று அவர்கள் சொல்வதற்கு ஸ்ரீ கிருஷ்ணனே என்னுடைய தஞ்சம் என்று அர்த்தம். "ஸ்ரீ கிருஷணன் என்னுடைய ஆசாவை சரணுகதியைத் தேடட்டும்" என்றும் ஆகும். வியாகரணம் முதலியவைகளுக்குச் சரியில்லாததும் ஒவ்வாததுமான அமைப்புடன் இப்பிரிவினர்களெல்லோரும் மந்திரங்களைச் செய்கிருர்கள். அவர்களுடைய முன்னோர் கல்விப்பயிற்சி அற்றவர். எனவே தர்க்க வியாகரணசாஸ்த்ரங்களை அறியார்கள்.

மத்வரீகள்.

வினு:—மத்வ மதம் சரியானதா ?

விடை:—பிரமதத்தவர்களைப்போலவே மத்வமதத்வர்களும் சக்கிராங்கிதர்களே. இந்த வித்தியாசம் மாத்திரந்தான். ஆனுல் ஒன்றுண்டு; ராமானுஜரை பின்பற்றுகிறவர்கள் ஆயுள்நாளில் ஒரே தடவைதான் சூடுபோட்டுக் கொள்ளுகிருர்கள். மத்வர்களோ வருடமொருமுறை சூட்டுமுத்திரையிட்டுக் கொள்ளுகிருர்கள். சக்கிராங்கிதர்கள் நெற்றியில் மஞ்சள்கோடு போட்டுக் கொள்ளுகிருர்கள். மத்வர்கள் கருப்புகோடுயிடுகிருர்கள். சக மத்வபண்டிதர் ஒருவருடன் மகாத்மா ஒருவருக்குக்கீழ்கண்ட வாக்குவாதம் நடந்தது.

மகாத்மா:—கருப்புக்கோட்டையும் சந்திரகலைபின் அடையாளத்தையும் ஏன் நெற்றியில் இழுக்கிறீர்கள்.

பண்டிதர்:—இதையிழுப்பதினல் வைகுண்டம் பெறலாம். மேலும் ஸ்ரீ கிருஷ்ணன் சரீரமும் சியாமளவர்ணமானது. (மகா) கரப்பு நிறக்கோடு ஒன்றையும் அர்த்தச்சந்திர பிம்பத்தையும் இழுத்துக்கொள்வதினல் வைகுண்டம் சேருவீர்களேயானல் முழுமுகத்தையும் கருப்பாகச்செய்து கொண்டால் எதையடைவீர்கள் ? நீங்களும் ஸ்ரீ கிருஷ்ணனைப்போலவே யென்றல் அவருடைய சரீரம் முழுவதும் கருப்பாயிருந்தமாதிரியே உங்களுடைய சரீரம் முழுவதையும் கருப்பாகச்செய்துகொள்ளவேண்டுமே ?

எனவே மத்வாகள் மேலானவர்களல்லர் வென்பது வெளிப்படையாகிறது.

லிங்காங்கிதர்கள்.

வினு:—லிங்காங்கிதர்களுடைய மதம் எப்படி ?

விடை:—சக்கிராங்கிதர்களுடைய பிரிவினையைப்போலவே சக்கிராங்கிதர்கள் சக்கிரத்தைக்கொண்டு சூட்டிக்கொள்வதைப்போலவும், நாராய

ணனைத் தவிரவேறுயாரையும் நம்புவதில்லைபோலவும், லிங்காங்கிதர்கள் லிங்க உருவமுள்ள அகசைக்கொண்டு சூடுபோட்டுக்கொண்டு மகாதேவனைத் தவிர வேறுயாரையும் நம்புகிறதில்லை. தங்கம் அல்லது வெள்ளியினால் கட்டியுள்ள லிங்கங்கள் ஒன்றைக்கழுத்தில் கட்டித்தொங்கவிட்டுக்கொள்வதே லிங்காங்கிதர்களுடைய ஒரு முக்கியமான வித்தியாசம். நீர அருந்தும் முன்னாலேகூட அதற்குக்காண்பித்தே குடிக்கிறார்கள், சைவர்களுடையதைப் போலவே லிங்காங்கிதர்களுடைய மந்திரோபதேசமும்.

பிரம்மசமாஜம்.

வினா:—பிரம்மசமாஜம், பிரார்த்தனைசமாஜம் இவைகள் நல்லதா ?

விடை:—அவர்களுடைய நம்பிக்கைகளில் கொஞ்சம் நன்மைகளும் பல தீமைகளும் இருக்கின்றன.

வினா:—பிரம்மசமாஜமும் பிரார்த்தனசமாஜமும் எல்லாவற்றையும் விட மேலானதே. இவைகளுடையகட்டளைகளும்நன்மையுள்ளதாயிருக்கின்றனவே.

விடை:—கட்டளைகள் எல்லாம் நல்லதாகா. ஏனெனில் வேதவித்தையற்றவர்களுடைய கட்டளை எவ்விதம் எப்பொழுது சத்தியமாயிருக்கும் ?

(I) கிறிஸ்துவமதத்தைத்தழுவதிலிருந்து கொஞ்சம் விக்ரக ஆராதனை நின்று வருகிறது.

(II) பொய்ப்புத்தகங்களுடைய தடைகளிலிருந்து ஜனங்களைக்கொஞ்சம் இது வருவித்திருக்கிறது.

வெறுக்கத்தகுந்தவைகளாவன:—

(I) இவர்களில் சுதேச பக்தி மிகக் குலைந்து இருக்கிறது. பலதுறைகளில் கிறிஸ்துவர்களைப் பின்பற்றியிருக்கிறார்கள். உண்ணுதல் அருந்துதல், விவாகஞ்செய்துகொள்ளுதல் இவைகளுக்கான கட்டுப்பாடுகளையும் ஒழுக்கங்களையும் மாற்றியிருக்கிறார்கள்.

(II) தன் தேயப்புகழையும் மூதாதைகளுடைய பெருமையையும் பாராட்டாமலிருப்பது மன்னியில் தூஷிக்கவும் செய்கிறார்கள். கிருஸ்துவர்களையும் ஐரோப்பியர்களையும் தங்களுடையஉபந்நியாசங்களில் ஆகாயமளாவப் புகழுகிறார்கள். பிராம்மாவைப்போன்ற மகரிஷிகளின் பெயரைக்கூடசொல்வதில்லை. சிருஷ்டிமுதல் இதுவரையில ஐரோப்பியர்களைவிட மேலான வித்வான்கள் கிடையாது என்கிறார்கள். ஆரியவர்த்தநாடு எப்பொழுதும் அறிவின்மையாலேயே வருந்திவருகிறது என்கிறார்கள். இது ஒரு பொழுதும் மேன்மையடையாது என்று சொல்லுகிறார்கள்.

(III) வேதங்கள, சாஸ்திரங்கள் இவைகளைப் புகழாமலிருப்பது மன்னியில் நிந்தனையும் செய்கிறார்கள். பிரம்மசமாஜக்காரர்களுடைய நூல்களில் சாதுக்களுடைய எண்ணிக்கையில் இயேசு, மோசஸ், மகம்மது, நானக் சைதன்யர் முதலானோர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர மகரிஷிகள் முனிகள் பெயர் ஒன்று கூடக்காணப்படவில்லை. சாதுக்களென்று அவர்களுடைய நூல்களில் காணப்பட்டவர்களால் உபதேசஞ் செய்யப்பட்ட

வைகளையே தழுவினவர்களென்று இதிலிருந்து ஒரு விதம் வெளியாகிறது. இவர்கள் ஆரியவர்த்தநாட்டில் பிறந்து இத்தேச அன்னபானாதிகளையே சாப்பிட்டும் குடித்தும் இப்பொழுதும் சாப்பிட்டுக்கொண்டும் குடித்துக்கொண்டும் இருந்து தன்னுடைய தாய் தகப்பன் தாதா முதலான மூதாதைகளின் சமயத்தைக்கைவிட்டு அந்நிய நாட்டுச்சமயங்களின் பேரில் அதிகப்பரிவு பேசி வித்தாயார்த்தி என அழைத்துக் கொள்ளுகிறார்கள். இத் தேசத்திலுண்டான வடமொழியை அறியாமல் ஆங்கிலபாஷையைப் படித்து அபிமானிகளாய் புதுச் சமயங்களை ஏற்படுத்த ஆவலுள்ளவர்களாக விருக்கிறார்கள். இவைகளெல்லாம் மானிடவர்க்கத்தின் அழியாநன்மைக்கும் அபிவிருத்திக்கும் ஏற்றவைகளாகுமா ?

(IV) கணக்கில்லாமல் சாப்பிட்டு அருந்துகிறார்கள். அதாவது துருக்கர்கள் ஐரோப்பியர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் முதலானவர்களுடன்கூடி அன்னபானம் செய்கிறார்கள். கலந்து அன்னபானம்செய்வது ஜாதிபேதத்தை விடுவது இவைகளினாலே நாமும் நம்தேசமும் சீர்திருத்தமடையும் என்று நம்பு வேண்டும். ஆனால் இவ்விதவார்த்தைகளினால் இல்லை. இந் நம்பிக்கைகளினால் இன்னும் கெடுதலே ஏற்படும் இதை அவர்களறியட்டும்.

வினா:—சாதிபேதம் ஈசுவரனால் ஏற்பட்டதா? அல்லது மனிதனால் செய்யப்பட்டதா ?

விடை:—ஈச்வரனாலும் மனிதனாலும் உண்டானதேயாம்.

வினா:—எவ்விதம் ஈச்வரனால் ஏற்படுத்தப்பட்டது; எவ்விதம் மனிதனால் செய்யப்பட்டது ?

விடை:—மனிதன், பக்ஷி, மிருகம், மரம், செடி, முதலியவைகள் ஈச்வரனால்ஏற்பட்டது. மிருகங்களில் பசு,குதிரை,யானை முதலானஜாதிகள்;மரங்களில் அசுவதமரம், வேப்பமரம், மாமரம் முதலானவைகள்; பக்ஷிகளில் அன்னம், காக்கை, சாலா முதலானவைகள்; ஜலஜந்துக்களில் மீன் முதலை முதலானவைகள் இச்சாதிகளெல்லாம் பரமேச்வரனால் ஏற்படுத்தப்பட்டவை. இவ்விதமே பிராம்மணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் முதலானவர்களும். (இதனால் அவர்கள் பிராம்மணன் க்ஷத்திரியன் முதலானவர்களாகவே பிறந்தார்களென்பதில்லை. பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்ற நால்வகையாக மனிதர்கள் பிரிக்கப்படுகிறார்கள்) பழவர்ணாசர்மதர்மவிதிகளில் கண்டிருப்பது போல் குணம் கர்மம் சுபாவம் இவைகளினாலேயே வர்ணவிபவகாரத்தைக்காணவேண்டியது அவசியமாகும். இது மனிதர்களுடைய வேலை. ஆனபடியினால் வர்ணாச்ரம தர்ம வியவகாரம் மனிதனால் செய்யப்பட்டதாகும். குணகர்ம சுபாவப்பிரகாரம் மனிதர்களை பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரனாக வகுத்து பிரிப்பது வித்வான்கள் ராஜாக்கள், இவர்களுடைய வேலையாகும். போஜனபேதங்களும் ஈச்வரனாலும் மனிதனாலும் செய்யப்பட்டது. உதாரணமாக சிங்கம் மாம்சாகாரி. காண்டாமிருகம் உற்பிஜாசனி. அவைகளுடைய உணவில் ஏற்பட்ட இப்பேதங்கள் ஈச்வரனால் செய்யப்பட்டவை. தேசகாலத்திற்கேற்ற போஜன வித்தியாசங்கள் மனிதனால் செய்யப்பட்டவை.

வினு:—ஐரோப்பியர்களைப்பாருங்கள். ஜோடு, கால்சட்டை, சிறுசொக்காய், முதலியவைகளைத் தரித்துக்கொண்டே ஹோட்டல்களில் வசித்து எல்லோரிடத்திலிருந்தும் சாப்பிடுகிறார்கள். இதுவே அவருடைய முன்னேற்றத்திற்கு முதற்காரணமாகும்.

விடை,—இதுவீண் பிரமையே. ஏனெனில் மகமதியர்கள் நீசர்கள் முதலானவர்களும் எல்லோரிடத்திலுமிருந்து சாப்பிடுகிறார்கள். இருந்தும் ஏன் அவர்கள் முன்னேற்றமடையவில்லை? அவருடைய முன்னேற்றத்தின் காரணங்களாவன:—

(1) ஐரோப்பியர்களுள் பால்யவிவாகம் கிடையாது. (2) பெண் பிள்ளைகளுக்கு நல்ல சிட்சையும் வித்தையுமே கொடுக்கிறார்கள். (3) சுயவரம் விவாகமிருந்துவருகிறது. (4) கெட்டவர்களுடைய சகவாசம் செய்யப் பெண்பிள்ளைகளை விடுகிறதில்லை. நல்ல அறிவாளர்களானபடியினால் நேர் நெறியற்றவர்களுடைய மாயவலையில் அகப்பட்டுக்கொள்ளுகிறதில்லை. (5) அவர்கள் என்ன செய்தபொழுதிலும் தீரவிளங்க ஆலோசித்து கூட்டங்கூடி விசாரணை செய்தே நடக்கிறார்கள். (6) தங்களுடைய ஜாதியின் மேம் பாட்டிற்காகத்தங்களுடைய உடல்பொருள் ஆவியையும்செலவிடுகிறார்கள்.(7) ஆலசியத்தை விட்டு உழைப்புள்ள வர்களாக விருக்கிறார்கள். (8) தங்கள் தேசத்தில் செய்யப்பட்டவைகளை அணிந்து கச்சேரிகளிலும் கார்யாலயங்களிலும் செல்ல அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தேசச் செருப்புகளுக்கு மேல் தன் தேசச் செருப்புக்களை மதிப்பதுபோல் பிரதேச மனிதர்களை மதிப்பதில்லை யென்று இதிலிருந்து தெரிய வேண்டும். (9) நூறு வருடங்களுக்கு மேலாக இத்தேசத்திலிருந்தும் ஐரோப்பியகள் இன்றைக்கும் ஆடை உடைகளைத்தன்தேசத்திலிருந்தது போலவே தரிக்கிறார்கள். தன் தேச சாம்பிரதாயத்தை அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை. உங்களி லநேகம் பேர்கள் அவர்களுடைய ஆடை உடைகளைக் கைப்பற்றியிருக்கிறீர்கள். இதிலிருந்து நீங்கள் அறிவில்லாதவர்களௌறும் அவர்கள் அறிந்த புத்திமான்களௌன்றும் விளங்கவில்லையா? புத்திமான் எவனும் குருட்டுத் தனமாய் ஒருவனைப் பின்பற்றமாட்டான். (10) செய்யவேண்டியவைகளை மிகவும் கவனத்துடன் செய்கிறார்கள். (11) ஆக்ஞைகளைக்கீழ்படிந்து நடக்கிறார்கள். (12) வியாபாரம் முதலியவைளில் தன் தேசத்தவர்களுக்கு உதவி புரிகிறார்கள். இப்பேர்பட்ட மாசற்ற குணங்கள் வழுவில்லாத முயற்சி முதலானவைகளே ஐரோப்பியருடைய முன்னேற்றத்திற்குக் காரணமாயிருக்கின்றன. சோடுசெருப்புகளை அணிந்து கொண்டு ஹோட்டல்களில் சாப்பிடுதல் முதலிய சாதாரணகாரியங்களினாலும் குணங்களினாலும் அவர்கள் பெரியவர்களாகவில்லை.

மேலும் அவர்களிலும் சாதிபேதமிருக்கிறது. ஐரோப்பியன் ஒருவன் என்னபதவி என்ன அதிகாரத்திலிருந்த போதிலும் பிறதேசத்து பெண்ணை மணம்புரிந்து கொண்டாலும் ஐரோப்பியபெண் பிரதேசக்காரன் ஒருவனை விவாகம் செய்து கொண்டாலும் அவர்களுடன் ஊடாடுவதைவிட்டு விடுகிறார்கள். அவனை அல்லது அவர்களைத்தள்ளிவைக்கிறார்கள். சமூகக்காரியங்க

ளுக்கு அவரையோ அல்லது அவளையோ அழைக்கிற தில்லை. அவர்களுடன் கூட உட்கார்ந்து சாப்பிடுகிறதுமில்லை. அவர்களுடைய பெண்பிள்ளைகளுடன்கல்யாணம் முதலிய சம்பந்தம் செய்து கொள்ளுகிறதில்லை. ஜாதிவித்தியாசமில்லாமல் போனால் இவைகளெல்லாம் வேறொன்னவாகும். அவர்களில் சாதிவித்தியாசமில்லை யென்று சொல்லி பேதை ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். அறிவின்குறைவால் அவர்கள்கூறுவதை நம்பும் மூடத்தன்மை யுள்ளவர்களாக யிருக்கிறீர்கள். ஆகவே தீரவிளங்கயோசனைசெய்து கூடிக்கலந்து பிறகு வருந்தாமலிருக்கும்படி செய்யுங்கள்.

மருந்தைத் தேடுபவன் நோயாளி. திடகாத்திரமான தேகத்தையுடையானுக்கு மருந்து தேவையில்லை கற்றறிந்த அறிஞன் நோயற்றவனைப்போன்றவன். அறிவின்மைதான் வியாதி. இந்நோயைப்போக்க சத்தியோபதேசமே ஏற்றமருந்து. அறிவீனர்கள் அன்னபானாதிகளை எடுத்துக்கொள்ளும் முறையில் தான் தர்யம் இருக்கிறதென்று கண்மூடித்தனமாக எண்ணுகிறார்கள். எல்லோராலும் ஏற்கப்பட்ட அன்னபானாதிகளை உட்கொள்ளும் முறையினின்று விலகுபவனை புன்தன்மையினர் தர்மப்பிரிஷ்டன் என்று ஒதுக்குறார்கள் அறிவு உனது நன்மைக்கா? அல்லது பிறர் நன்மைக்கா? என்று அறியவிரும்புகிறேன். மேற்கூறிய அன்னபானாதிதர்மத்தால் அறிவீனர்கள் பலன் அடைந்துள்ளார்களா? என்று பார்த்தல் நலம். அவர்கள் எப்பலனையும் அடையாவிடில் நான் என்ன செய்வது என்று சொல்லிச்சும்மாயிருத்தல் முறையாகாது. சரியானமுறையில் நடந்து வந்திருந்தால், உன்னைபின்பற்றுபவாகளும் உன் வழி நடந்து பலனை அடைந்திருப்பார்கள். உனது சொந்த நலத்தைநாடி அவர்களைக் கெடுத்துவிட்டாய். எனவே அறிஞர் சாதாரண ஜனங்கள் துக்கத்தைக்கடக்க ஒரு படகுபோல் உதவவேண்டும். எக்கர்மத்தால், சுயநலமும் பர நலமும் ஏற்படுமோ அதையே செய்ய வேண்டும்.

வினா:—எல்லாப்புத்தகமும் ஈசனால் எழுதப்பட்டதென்று நாங்கள் ந[illegible] கிறதில்லை. ஏனெனில் மனிதனுடைய புத்தி அளவுக்குள்[illegible]—தி. இதினாலேயே அவனால் செய்யப்பட்ட [illegible] தவறுந்தன்மையுள்ளதே. ஆகவே எல்லாவற்றிலிருந்தும சத்யத்தை ஏற்றுக்கொண்டு அசத்தியத்தை விடுத்து விடுகிறோம். சத்தியம் வேதத்திலிருந்தாலும்சரி, பைபிலிருந்தாலும்சரி வேறு எந்த நூலிலிருந்தாலும்சரி நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

விடை:—எவ்வார்த்தைகளினால் சத்தியத்தை இழுக்கிறவர்களாக இருக்கிறீர்களோ, அவ்வார்த்தைகளினாலேயே அசத்யத்தைக் கிரகிக்கிறவர்களாகவும் ஆகிறீர்கள். மனிதர்கள் எல்லோரும் தவறும் தன்மையுள்ளவர்களானபடியினால் நீங்களும் தவறுகிறவர்களே. ஆகையினால் நீங்கள் எழுதுபவை யெல்லாம் முழுமெய்யாகாது. ஆகவே உங்களை முழுவதும் நம்பக்கூடாது. உங்களுடைய நம்பிக்கைகள் விஷத்துடன் கலந்த ஆகாரத்தைப்போல் தள்ளிவிடத்தகுந்தது. எனவே உங்களுடைய நூலை வழுவற்றதாக ஒத்துக்கொள்ள முடியாது. வேறு மனிதர்கள் சர்வஞ்ஞமில்லாமலிருப்பது போலவே நீங்களும் இருக்கிறீர்கள். சில சமயங்களில் பிரமையினால் உண்மையைக்கைவிட்டு

அசத்தியத்தை தழுவுவீர்கள். ஆகையினால் சிலசமயங்களில் சர்வஞ்ஞரான பரமாத்மாவுடைய வசனங்களை அல்பஞ்ஞர்களாகிய நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். இந் நூலின் ஏழாவது அத்தியாயத்திய வேத உரையில் நாம் எழுதி யிருப்பது போல் நீங்கள் கொள்ளவேண்டியது, நம்பவும் வேண்டியது. இல்லை யானால் 'ஒருபக்கத்திலிருந்ததுபோலவே மறுபக்கத்திலும்' என்கிறபழமொழி உங்களுக்கு ஏற்கும். சகல சத்தியமும் வேதத்தில் அடங்கியிருக்க அசத்திய மென்று சொல்வதினால் உனக்கும் மற்றவர்களுக்கும் பெரும்பாதகம் செய்கிற வனாகிறாய். ஆகையினாலேயே ஆர்யவர்த்த தேச ஜனங்கள் உங்களை அவர்கள் சொந்தமாக நினைக்கிறதில்லை. தலைதலையாகபிச்சையெடுப்பதினால் நீங்கள் தேசத்தின் முன்னேற்றத்தில் பிரயோசனமில்லாமலிருக்கிறீர்கள். அதாவது சில கொள்கைகளை மகம்மதியர்களிடமிருந்தும், மற்றும் சிலவைகளைக் கிரிஸ்துவர் களிடமிருந்தும், வாங்கியிருக்கிறீர்கள். இவ்விதம் செய்வதினால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மைஉண்டாகுமென்று நினைக்கிறீர்கள். அதுஉன்னால் முடியாது. பெற்றோர்கள் உலகத்திலுள்ள குழந்தைகள் எல்லோரையும் போஷித்து வளர்க்கவெண்ணுவதுபோலவே உங்களுடையதும் உலகத்தைக்காக்கவெண்ணி த்தன்னுடையசொந்தபிள்ளையையே இழப்பார்கள். வேதம் முதலான சத்திய சாத்திரங்களைமானிக்காமல் உங்களுடைய வார்த்தைகளுண்மையாகாது. ஆன துமில்லை. ஆர்யவர்த்தநாட்டினுடைய முன்னேற்றத்தையும் செய்யமுடியாது. தேசத்திற்கு உண்டாயிருக்கும் நோய்க்குத்தக்கமருந்து எங்களிடம் கிடையாது. ஐரோப்பியர்கள் உங்களை கவனிக்கிறதில்லை. சுதேசவாசிகளோ உங்களை வேறு மதத்திற்குச் சரியாக நினைக்கிறார்கள். இப்பொழுதாவது தப்பை அறிந்து வேதம்முதலியவைகளை உன்னி தேசமுன்னேற்றத்தைச்செய்யலாம். சகல சத்தியமும் பரமேச்வரனால் வெளியாக்கப்பட்டதென்று நம்பும்பொழுது ரிஷிகளின் ஆத்மாவில் வெளிச்சம் செய்திருக்கிற வேதசத்தியங்களை ஏன் [illegible]ரிக்கக்கூடாது. வேதங்களை ஓதாமலும் ஓதுவதற்கு இஷ்டமில்லாமலும் வேதஞானம [illegible]மண்டாகும்?

6. உபாதானகாரணமன்னியில உலகம் [illegible]க்கியாச்சுதென்றும், கிறிஸ்துவர்கள் மகம்மதியர்கள் நம்புவதுபோல் ஜீவனுடைய உற்பத்தியிலும் நம்புகிறீர்கள். இவ்விஷயங்களைப்பற்றி ஏழு,எட்டாவது அத்தியாயங்களில் தர்க்கித்து சரியானதல்லவென்று காண்பித்திருக்கிறோம். காரணமன்னியில் காரியமுண்டாகமுடியாது.

7. பச்சாதாபம் பிரார்த்தனை இவைகளினால் பாபம் நிவாரணமாகும் என்று நம்புவது உங்களிடமிருக்கிற இன்னுமொரு தோஷமாகும். உலகத்தில் பாபம் விருத்தியாகி அதிகரிப்பதற்கு இவ்வெண்ணமும் ஒரு காரணமாகும். புராணிகர்கள் ஸ்தலயாத்திரை முதலியவைகளினாலும் சமணர்கள் 'நவகார மந்திர ஜபம், ஸ்தலயாத்திரைகளினாலும், கிறுஸ்துவர்கள் இயேசுவிடத்தில் நம்பிக்கையினாலும் மகம்மதியர்கள் '**நான் பச்சாதாபப்படுகிறேன்**'என்று சொல்லுவதினாலும், பாபம் நிவர்த்தி யாகிறதென்று முறையே நம்புகிறார்கள். இதனால் பாபகர்மங்கள் பயமில்லாமல் அதிகமாயிருக்கிறது. இவ்விஷயத்தில்

புராணிகர்களைப் போலவேயிருக்கிறீர்கள். வேதங்களை ஓதியிருப்பீர்களே யானால் அனுபவிக்காமல் பாபபுண்ணியங்கள் ஒழியாது என்று நன்கறிவீர்கள் இதற்குப்பயந்து பாபங்களுக்கு அஞ்சி தர்மம் செய்வீர்கள். அனுபவிக்காமல் பாபங்கள் ஒழிந்துபோகுமேயானால் ஈச்வரன் அநியாயம் செய்கிறவராவார்.

8. ஜீவனுடைய முன்னேற்றத்தை அனந்தமாக நம்புகிறீர்கள். இது கொஞ்சங்கூட சரியான நம்பிக்கையாகாது ஏனெனில் எல்லையற்ற ஜீவனுடைய குணகர்ம சுபாவத்தின் பலன் எல்லையற்றதாகவே யிருக்கும்.

வினு:—பரமேச்வரன் தயாளுவான படியினால் எல்லையை யுடைய கர்மங்களுக்கு எல்லையற்ற அனந்தமான பலனைக்கொடுக்கக்கூடும்?

விடை:—இவ்விதம் செய்தால் பரமேச்வரனுடைய நீதி தவறிப்போய் விடும். சத்கர்மங்களுடைய மேன்மைக்காகவும் யாரும் பாடுபட மாட்டார்கள். ஏனெனில் கொஞ்சம் கஷ்டப்பட்டால் கூட சத்கர்மங்களுக்கு அனந்தமான பலனை பரமேச்வரன் கொடுத்து விடுவார். பச்சாதாபம், பிரார்த்தனை, இவைகளில் பாபங்கள் அநேகம் நாசமாய் விடுகிறதென்ற போதிலும் அவ்வார்த்தைகளினால் தர்மநாசமும் பாபவிருத்தியுமே பரவியிருக்கிறது.

வினு.—சுய உணர்ச்சியினால் தோன்றிய ஞானத்தையே, வேதத்தைவிட அதிகமாகக் கருதுகிறோம். சுயஉணர்ச்சியினால் தோன்றிய ஞானம் பரமேச்வரனால் கொடுக்கப் பட்டிராமற் போனால் வேதங்களை எப்படி ஓதமுடியும்? ஓதுவிக்கமுடியும்? ஆகையினால் நாங்கள் சொல்லுவதே மிகவும் சரியானது.

விடை:—இதெல்லாம் பொருளற்ற பதங்களே. பிறரால் கொடுக்கப் பட்ட ஞானம் சுய உணர்ச்சியினால் தோன்றினதாக ஆகாது. சுய உணர்ச்சியினால் தோன்றினது சுயமானது. அது விருத்தியடைகிறதில்லை. குறைந்து போகிறது மில்லை. பிறரது முன்னேற்றத்தையும் நாடுகிறதில்லை. ஏனெனில் காட்டு மனிதர்களுக்கு இச் சுயஉணர்ச்சி, ஞானம், மிருந்தும் அவர்கள் எவ்வித முன்னேற்றத்தையும் தேடி விருத்தியடையவில்லை. கற்றறிந்த ஞானமே முன்னேற்றத்தின் காரணமாயிருக்கிறது. பாருங்கள் நம்முடைய சிறுவயதில் செய்யவேண்டியது, வேண்டாதது, தர்மம் அதர்மம், இவைகளுடைய உண்மையான குணங்களின் ஞானம் நமக்குக் கிடையாது. வித்வான்களுடன் படித்த பிறகே நல்லது, கெட்டது, தர்மம், அதர்மம் இவைகளைச் சரியாக அறியலானோம். ஆகையினால் சுய உணர்ச்சியினால் தோன்றிய ஞானம் எல்லாவற்றையும்விட மேலாக நினைப்பது சரியல்ல.

9. நீங்கள் புனர் ஜன்மத்தில் நம்புகிறதில்லை. இது கிருஸ்துவர்களுக்கும் மகம்மதியர்களுக்குமே யுள்ளது. இதற்குப்பதில் இந் நூலின் ஏழாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவன் நித்தியமானது. அதனுடைய கர்மங்களும் பிரவாகத்தைப்போல் நித்தியமானதென்று அறியுங்கள். * செய்கிறவன் கர்மம் இவ்விரண்டிற்கும் நித்தியமான சம்பந்தமிருக்கிறது. (அதாவது செய்கைக்கும் செய்கிறவனுக்கும் உள்ள உறவு குறைக்க முடியாதது. இப்

* இதன் விளக்கத்திற்கு 9 வது அத்தியாயத்தைப் பார்க்கவும்.

பிறப்பிற்கு முந்தி ஜீவன் வேலையன்னி யிலிருந்ததா ? இறப்பிற்குப் பிந்தி உட்கார்ந்திருக்குமா ? உங்களுடைய எண்ணப்பிரகாரம் பரமேச்வரன் கூடவேலை (இச்சிருஷ்டிக்குப்பிறகு) யன்னியிலிருப்பார். ஆத்மாவின் முன்னிருந்த நிலையிலும் இறந்தபிறகு அதன் மறுபிறப்பிலும் நம்பாமல் போனால் பாபபுண்ணியங்களுக்கு ஏற்றபலாபலன்களைக்கொடுக்கத் தவறியதாகப்பரமேச்வரன் ஆகிறார். இறந்தபிறகு ஜீவனுக்கு மறுபிறப்பு இல்லாதுபோனால், இப்பிறப்பில் செய்தக்காரியங்களுக்கு பலன்கிடையாது. ஏனெனில் இந்தஜன்மத்தில்செய்த பாபபுண்ணியங்களின் பலாபலத்தை மறுபடியும் பிறந்தாலொழிய அனுபவிக்க முடியாது. பூர்வஜன்மத்தில் பாபபுண்ணியங்களில்லாமல் போனால் பரமேசுவரன் அநியாயம் செய்கிறவனாயும், காரணமன்னியில் கஷ்டத்தைக்கொடுக்கிறவனாகவும் ஆகிறார். இப்பிறப்பில்செய்த பாபபுண்ணியங்களுக்கு ஏற்ற பலாபலன்களன்னியில் போய்விடும். ஆகையினால் புனர்ஜன்மத்தில் நம்பாதலிருத்தல் முடியாதகாரியம்.

10. ஈச்வரன் அன்னியில் திவ்யகுணங்களை யுடையபொருள்களிலும், வித்வான்களிலும், தேவர்களிலும், நம்பிக்கை வைத்தல் என்பது வெறும்பேச்சாகும் (ஏனெனில்) பரமேசுவரன் மகாதேவன் தேவர்களில்லாமல் போனால் சகலதேவர்களுக்கும் சுவாமி என்று எப்படி சொல்லக்கூடும் என்பதை சிந்தித்தல் நலம்.

11. அக்கினி ஹோத்திரம், முதலான பரோபகாரமான காரியங்கள் செய்வதில் நம்பாமலிருப்பது நல்லதல்ல.

12. ரிஷி, மகரிஷி முதலானவர்களால் செய்யப்பட்ட உபகாரங்களை மதிக்காமல் இயேசு முதலானவர்களால் செய்யப்பட்டதை மானிப்பது நல்லதாகாது.

13. அறிவு ஞானம் வித்தை முதலான காரியங்கள், வேதங்களான காரணமன்னியில் வந்தது என்பது முடியாத காரியம்.

14. அறிவின் அடையாளங்களாகிய யக்ஞோபவீதம், சிகை இவைகளை விட்டு மகமதியர் கிறிஸ்தவர் இவர்களுக்குச்சமமாக ஆவது சரியல்ல. ஆங்கில ஆடை உடைகளைத்தரித்து யோக்கியதையுள்ளவர்களாகவும் படித்தவர்களாகவும் காண்பித்துக் கொண்டு பரிசு முதலானவைகளைத் தேடும் பொழுது யக்ஞோபவிதமும் சிகையுந்தான கனமுள்ளதாக உனக்கு ஆய் விட்டது.

15. பிர்ம்மாவிற்குப் பிறகு ஆர்யவர்த்தத்தில் அநேக முனிகள் இருந்து விண்ணுற்றிருக்கிறார்கள். அவர்களைப் பெருமையாகக் கொண்டாடாமல் ஐரோப்பியர்களைக்கண்டு பெருமை அடைவதை, பட்சாபாதம் முகஸ்துதி என்று சொல்லாமல் வேறு என்ன வென்று சொல்லுவது ?

16. மண்ணுடன் விதை சேருவதிலிருந்து முளை வருவது போல், சடம் சேதனம், இவைகளுடைய சேர்க்கையினால் ஜீவனுடைய உற்பத்தியை நினைப்பது ஒன்றுக் கொன்று விரோதமாகிறது. உற்பத்திக்கு முந்தி ஜீவனுடைய தத்துவத்தை நினையாமலிருப்பதும் முன்னுக்குப் பின் விரோதமாயிருக்கிறது.

உற்பத்திக்கு முன்னல் சேதனமும் சடப்பொருளும் இல்லாமல் போனல் ஜீவன் எங்கேயிருந்து வந்தது. எதனுடன் சம்யோகமுண்டாச்சுது. இவ்விரண்டையும் சனுதனமாக நினைத்தால் நல்லதே. சிருஷ்டிக்குமுந்தி ஈச்வரனைத் தவிர வேறுயாரையும் நினைக்காத உங்களுடைய கட்சிக்கே விரோதமாகிறது.

ஆகையினுல் முன்னேற்றத்தை விரும்பினுல் ஆரியஸமாஜத்துடன் கூடிக் கலந்து அதனுடைய உத்தேசங்களை ஆச்ரயித்து அங்கீகாரஞ் செய்யுங்கள். இல்லையானுல் உங்களுடைய (வாணுளை வீணுக்கி) ஒரு லாபத்தையுமடைய மாட்டீர்கள். இத்தேசத்தினுடைய பொருள்களே நம்முடைய சரீரத்தைச் செய்கிறது. இப்பொழுதும் காப்பாற்றுகிறது. காப்பாற்றவும் போகிறது. அதனுடையமேன்மைக்கு உடல் பொருள் உயிர் இவைகளைத்தந்து பாடுபட்டு எல்லோரும் ஒன்றுகூடிக்கலந்து ஆவலுடன் உதவவேண்டும். இதுவே உங்களுக்கும் நமக்கும் ஏற்பட்ட நியாயம். ஆரியவர்த்தத்தை முன்னேற்ற ஆரிய சமாஜத்தைப்போல் வேறென்றுங்கிடையாது. நீங்கள் இந்தஸமாஜத்திற்குச் சகாயஞ்செய்தால் நல்லது. ஏனெனில் சமூகக்ஷேமத்திற்கு ஸமாஜத்தால் உழைக்க முடியுமே தவிர தனிப்பட்டவர்களால் முடியாது.

வினு:—நீங்கள் எல்லோரையும் கண்டனஞ்செய்தீர்கள். சமயங்கள் பலவும் நல்லதே. ஒன்றும் கண்டனத்திற்கு ஏற்றதல்ல. சொல்லுவதைவிட உங்களுடையது நல்லது என்கிறீர்கள். உங்களைவிட அதிகமாக மேம்பாடடைந்தவர்களும், உங்களுக்குச்சமரனமானவர்களுமே கிடையாதா? இவ்வளவு அகந்தையுடன் இருத்தல்கூடாது, பரமாத்வாவுடைய சிருஷ்டியில் அந்தஸ்து பலவுள்ளவர்களிருக்கிருர்கள். ஆகையினுல் ஒருவருக்கும் அகந்தைவேண்டாம்.

விடை:—தர்மம் எல்லோருக்கும் ஒன்ற அல்லது பலவா? பல என்ருல் மதங்கள் பலவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானதா? இல்லையா? வித்தியாசமானதென்ருல் உண்மை ஒன்ருகத்தானிருக்கமுடியும்? ஒன்றுக்கொன்று சரியாயிருக்கிறதென்ருல் பெயர்கள் பல வைத்துக் கொண்டிருப்பது பிரயோசனமற்ற காரியமே. ஆகவே தர்மமும் அதர்மமும் எல்லோருக்கும் ஒன்றே என்று ஏற்படுகிறது. அநேகங்கிடையாது. அவர்களிலிருந்து நாங்கள் வேருகச்சொல்லுவது இதுவே. பலமதங்களுடைய ஜாபிதாவை ஒருசக்ரவர்த்தி எடுப்பானேயானுல் எண்ணிக்கையில் ஓராயிரத்திற்குக் குறைவில்லாமலிருக்கும். அவைகளில் முக்கியமானது நான்கே யாகும், அவைகளாவன **புராணிகன், கிறிஸ்துவன், சமணன்** (அல்லது பௌத்தன்) **மகம்மதியனு**மாம். இந்நான்கிலேயுமே மற்றவைகளெல்லாம் கூடியிருக்கின்றன. அரசன் ஒன்று கூட்டி உண்மையை விசாரிப்பானேயாகில் முதலில் வாமமார்க்கியுடன் கேழ்க்க வேண்டும். "ஐயா இதுவரையில் எனக்கு குருயாருங்கிடையாது. எந்த மதத்தையும் தழுவமுமில்லை, தயவுசெய்து சகல சமயங்களிலும் எது மேன்மையானதென்றும் நான் எதைத் தழுவலாமென்றும் சொல்லுங்கள்"

வாமமார்க்கி:—எங்களுடைய மதமே மேன்மை பெற்றது. ஆராய்ச்சிக்காரன்:—மீதி 999 மதங்களைப்பற்றி உங்களுடைய அபிப்பிராய மென்ன?

வா.—அவைகளெல்லாம் பொய்யானது. நரகத்தையடையச்சொல்லு கிறது. ஏனெனில் வாமமார்க்கத்தைவிட மேலான தர்மங்கிடையாது.

ஆ.ன்:— உங்களுடைய தர்மம்யாது ?

வா:—பகவதியை மதிப்பது; மது மாம்சாகாராதி முதலிய ஐந்து வஸ்த் துக்களை உபயோகிப்பது. 'உருத்தராயிமலா' முதலிய 64 தந்திரங்களை மரி யாதைசெய்வதும். இன்னும்; இவைகளைப் போன்றவைகளுமேயாம். முக்திக்கு ஆசை யுண்டானல் எங்களுடையதைத் தழுவி சிஷ்யனுகுங்கள்.

ஆ.ன்:—நல்லது. இன்னும் இதர மகாத்மாக்களைக் கண்டு கேட்டு அவர்க ளுடைய சமயங்களைப் பற்றி விசாரிப்போம். பிறகு எதில் ஊக்கமும் ஆவலும் உண்டாகிறதோ அதில் சேருவோம்.

வா-கி:—ஏன் பிரமையிலகப்பட்டுக்கொள்ளுகிறீர் ? ஜனங்கள் உங்களை ஏமாற்றி அவர்களுடைய வலையில் போட்டுக் கொள்வார்கள். பிற சமயத் தவர்கள் யாரிடமும் பேசாதேயுங்கள். எங்களைச் சரணுகதியடையுங்கள். அல்லது பிறகு வருந்துவீர்கள். கவனித்துக்கொள்ளுங்கள் எங்களுடைய சமயத்தில் போகம், மோக்ஷம் இரண்டுமிருக்கின்றன.

ஆ.ன்:—சரி (மற்றவர்களிடமும்) இக்கேள்விகளைக்கேழ்ப்பேன்.

பிறகு சைவன் ஒருவனிடம் சென்று வாமார்க்கியைக் கேட்ட மாதிரியே கேட்டான். அவன் கூறினது போலவே இவனும்கூறி மேலும் கூறியதா வது:—சிவனைத் துதியாமலும் உருத்திராக்ஷம் அணிந்துகொள்ளாமலும் விபூதி பூசிக்கொள்ளாமலும், லிங்கார்ச்சனை செய்யாமலும் முத்தி கிடைக்காது. என்றான். அவனைவிட்டுவிலகி நவீனவேதாந்தியிடம் சென்றான்.

ஆ.ன்:—ஐயா உங்களுடைய சமயத்தைப்பற்றிச் சொல்லுங்கள்,

வேதாந்தி:—சமயமும் கிடையாது, சமயமில்லாததுங் கிடையாது. நாங் களே நேரான பிரம்மம். எங்களைத்தர்மமும் அதர்மமும் பாதிக்காது. உலகம் மாயை. ஜனனபாதையைவிட்டு நித்தியமுத்தனுக விரும்பினல் ஞானியாகி சுத்தசேதனமுள்ளவனுகவுமாகி தன்னையே பிரம்மமாகவும் நினைத்துக்கொள்ள வேண்டியதே.

ஆ-ன்.—நீ பிரம்ம நித்தியமுத்தனுனல் பிரமத்தினுடைய குணகர்மசுபாவம் ஏன் உன்னிடம் காணப்படவில்லை ? ஏன் சரீரத்தினல் கட்டுப்பட்டிருக்கிறாய்?

வேதா:—உங்களுக்குச்சரீரம் புலப்படுகிறதானல் நீங்கள் பிரமையில் முழுகியிருக்கிறீர்கள்? நாங்கள் பிரமத்தைத் தவிர்த்து வேறொன்றையும் காண கிறதில்லை.

ஆ-ன். பார்க்கிற நீயார்? யாரைப்பார்க்கிறாய் ?

வேதா:—பார்க்கிறவன் பிரம்மா. பிரம்மம் பிரம்மத்தைப் பார்க்கிறது.

ஆ ன்:—பிரம்மம் இரண்டா ?

வேதா:—இல்லை தன்னைத்தானேபார்க்கிறது.

ஆன்:—தன்னுடைய தோள்களின் பேரிலேயே ஒருவன் நிற்க முடியுமா? நீங்கள் சொல்லுவதில் பொருளில்லை. பித்தம் பிடித்தவனைப் போல் பேசுகிறீர்கள். பிறகு சமணர்களிடம் சென்று கேட்டான். அவர்களும் அப்படியே மறுமொழி தந்தார்கள். அத்துடன் நிற்காது மேலும் கூறியதாவது:—'சமண சமயத்தை' த்தவிர மற்றவைகளெல்லாம் பொய்யானவைகளே. உலக கர்த்தாவாய் அநாதியான ஈசுவரன் யாருமில்லை. அநாதிகாலந்தொட்டு இருக்கும் வண்ணமே உலகமிருந்து வருகிறது. எங்கள் சமயத்தை ஏற்று எங்களது சீடராகுங்கள்!! ஏனெனில் நாங்கள் எல்லாவிதத்திலும் நல்லவர்கள், எங்களுடைய கொள்கைகளும் உண்மையானவைகள். சமணசமயத்திலிருந்து வேறானவைகளெல்லாம் பொய்யானதே.

பிறகு கிறிஸ்துவன் ஒருவனிடம்சென்று இக்கேள்விகளை முன்போல் கேட்டான். அவனும் வாமமார்க்கிகளைப்போலவே பதிலுரைத்து மீண்டும் கூறியதாவது:—மனிதர்கள் எல்லோரும் பாபிகள். சுய சிரமத்தினால் பாபங்கள் கழியாது. இயேசுவின் பேரில் நம்பி பரிசுத்தனாகாதவரையில் முத்தியையடையமுடியாது. எல்லோருடைய பிரயாச்சித்தத்திற்கும் இயேசு தன் பிராணனைக் கொடுத்து தன் அன்பைக்காண்பித்தார். நீ கிறிஸ்துவனாகி விடு என்று கூறினான்.

இதையும் கேட்டுவிட்டு மௌல்வீ ஒருவரிடம் சென்று, அவன் சந்தேகத்தை அவருக்குத்தெரிவித்தான். எல்லோரும் சொன்னதைப் போலவே மௌல்வியும் சொல்லிவிட்டுக் கூறியதாவது:—

"இரண்டற்று ஒப்புயர்வற்று படைத்தவனையும் அவருடைய நபியையும் குர்-ஆனையும் நம்பாமல் தன்னைவெனும் காப்பாற்றிக் கொள்ளமுடியாது. இதை யார் மறுக்கிறார்களோ அவர்கள் நரகத்தையடைவார்கள். அவர்கள் காப்பிரிகள்." என்றான்.

பிறகு வைணவன் ஒருவனிடம் சென்று அவனையும் கேட்டான். அவன் இவைகளைவிட அதிகமாகச்சொன்னான். எங்களுடைய திலகம், சமாச்ரணக்குறி இவைகளைக்கண்டு எமனும் அஞ்சுவான் என்றான்.

ஆராய்ச்சிக்காரன் அப்பொழுது யோசனை செய்வான். கொசு, போலீஸ் சேவகன், கள்ளன், திருடன், சத்துரு, முதலானவர்களுக்கு இதைக்கண்டு பயமில்லாமல்போனால் எமதர்மராஜனுடைய தூதர்களா அஞ்ச போகின்றனர்? இன்னும் போகப்போக அந்தந்த சமயத்தவர்கள் தங்கள் தங்களுடையதே உண்மையான தென்றார்கள். சிலர் எங்களுடைய கபீர் நல்லவரென்றும் சிலர் நானக்தாது, சிலர் வல்லபர், சிலர் சகசானந்தர், சிலர் மாத்வர், முதலானவர்களைப்பெரியவர்களென்றும்அவதாரபுருஷர்களென்றும் முறையே சொல்லு வதைக் கேட்டான். ஆயிரம் சமயத்தவர்களையும் கேட்டு விசாரித்து பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தூஷணை செய்வதையுங்கண்டு இதில் யாரையும் குருவாகச்செய்து கொள்ளத் தகுதியற்றவர்கள். ஏனெனில் ஒவ்வொருவனுக்கும் 999 பெயர்கள் விரோதமாகக் கட்சி சொல்லுகிறார்கள் என்பதாக நிச்சயஞ்

செய்து கொண்டான். பொய்சொல்லும் வியாபாரிகள், விலைமாதர்கள், கோமாளிகள், இவர்கள் சர்க்கின்மேன்மை தங்களுடையே பெருமை இவைகளைப் பேசி மற்றவர்களை ஏளனஞ்செய்கிறவர்களைவிட இவர்கள் மேலானவர்களில்லை. பிறகு உபநிஷத்தில் சொல்லியிருப்பதை ஞாபகம் செய்துகொண்டான்.

तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् । समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥
तस्मै स विद्वानुपसन्नाय सम्यक् प्रशान्तचित्ताय शमन्विताय ।
येनाक्षरं पुरुषं वेद सत्यं प्रोवाच तान्तत्त्वतो ब्रह्मविद्याम् ॥ முண்டகோபநிஷத்

சத்தியத்தையடைய விரும்புகிறவன் 'சுகத்யாணி' அதாவது கையில் தக்கபரிசுடன் ஆடினவனுய், வேதப்பிரகாரம் பிரம்ம நிஷ்டை, பரமாத்மா, இவைகளைக் கையாளுகிறகுருவினிடம் செல்லட்டும். அறிவாளர்கள் சர்ந்தசித்தம் அடைக்கப்பட்ட ஐம்புலன்கள் முதலியவைகளையுடைய ஆராச்சிக்காரனுக்கு பரமாத்மாவினுடைய குணக்ர்மசுபாவங்களை உபதேசம் செய்யட்டும். மேலும் எச்சாதனங்களினுல் அவன் தர்மார்த்த ராமமோக்ஷங்களைப் பெற்று பரமாத்மாவை அறியமுடியுமோ அவைகளை உபயோகப்படுத்தும் வெருங் குணங்களையுடைய பெரியோரிடஞ்சென்று "ஓ பெரியவரே இப்படி வேறு பரிவினையால் சச்சரவுகளினுல் என் மனது குழம்பியிருக்கிறது. இவர்களில் ஏதாவதொன்றைப் பின்பற்றுவோனேயானுல் மீதி 999 பெயர்களையும் என் சத்துருவாக்கிக்கொள்வேன். 999 சத்துருக்களும் 1 மித்ரனும் உள்ளவனுக்குபலன் ஒரு பொழுதுண்டாகாது. எதை நான் அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று உபதேசஞ்செய்யுங்கள்" என்று வேண்டினுன்.

சத்குரு—அறியாமையின் பயன் அறிவின் சத்துருக்கள். பேதைகளைத் தப்புவழியில் திருப்பி தன்னுடைய ஜாலத்தினுல் மயக்கி சுயகாரியத்தைச்செய்துகொள்ளுகிருர்கள். எவ்வர்ர்த்தையில் 1000 பேர்களும் சேருகிருர்களோ அதையே வேதமாகக்கருதி, எதில் பரஸ்பர விரோதமாயிருக்கிறதோ அதைத் தப்பு என்றும் பொய்யென்றும் பாபமானதென்றும் அங்கீகாரஞ்செய்யக் கூடாதென்றும் அறிவாயாக.

ஆ.ன்:—நீங்கள் கூறுவதைக் கண்டறிவதெப்படி ?

ச.கு:— போய் கீழ்க்கண்ட வார்த்தைகளைக் கேள். எல்லோரும் ஒரே பதிலுரைப்பார்கள். என்று சொல்லி அனுப்பினுர்.

இதன்பேரில் உண்மையை அறியவிரும்பும் ஆராய்ச்சிக்காரன் ஆயிரம்பேர்கள் குழுமியுள்ள கூட்டத்தில் சென்று கேட்டதாவது:—"எல்லோரும் கேளுங்கள். மெய்ப்பொருள் தர்மமாகுமா? பொய்ப்பொருள் தர்மமாகுமா? என்றுன். ஏல்லோரும் ஒரே குரலுடன் உண்மையைச்சொல்வதினுல் தர்மமும் பொய்யைச் சொல்வதினுல் அதர்மமும் உண்டாகிறதென்று மறுமொழி கூறினுர்கள் இவ்விதமே வித்தையை அறிவது, பிரம்மச்சரியத்தைக் கைக்கொள்வது, சரியான பிராயத்தில் கலியாணம் செய்து கொள்ளுவது, சத்சங்கல்பம், மானிடப் பிரயத்தனம், சத்தியம், நல்ல சகவாசம், முதலானவைகளில் தர்மமும்

அவித்தையை அங்கீகாரம் செய்தல்' பிரம்மச்சரியத்தைக் கைக்கொள்ளாமலிருத்தல், வியபசாரம் செய்தல், தீய சகவாசம், அசத்திய வியவகாரம், பொய், கபடம், பிறருக்குக் கேடுசெய்வது இவைகளில் அதர்மமுமிருக்கிற தென்று ஒன்ருகச் சொன்னார்கள். அப்பொழுது ஆராய்ச்சிக்காரன் இவ்விதமே ஒன்று சேர்ந்து சத்திய தர்மத்தைமேம்படுத்தி பொய்மார்க்கத்தை ஏன் நாசஞ்செய்யக்கூடாதென்று கேட்டான். அவ்விதம் செய்வோமேயானல் எங்களைப்பாராட்டுகிறவர்கள் யாரிருப்பார்கள்? எங்களுடைய சீடர்கள் எங்களைவிட்டு விலகி விடுவார்ர்கள்? நாங்கள் சொல்லுவதைக் கீழ்ப்படியமாட்டார்கள். எங்களுடைய ஜீவனம் போய்விடும். இப்பொழுது நாங்கள் ஆனந்தத்துடனிருக்கிருேம். இவ்வநுபவங்களையெல்லாம் இழந்து விடுவோம். ஆகவே உண்மையான சமயத்தை நாங்கள் அறிந்திருந்த பொழுதிலும் எங்களுடைய பொய்ப் பிரிவினையானப் மதங்களையே உபதேசித்து வருகிருேம். உங்களுடைய உபாயங்களினல் "உலகத்தை ஏமாற்றி ஆனந்தம் அனுபவியுங்கள்" என்ற முதுமொழிக்கேற்ப சத்தியநெறியைத் தழுவாமலிருக்கிருேம். உலகில் யோக்கியனுக்கு ஒன்றும் கொடுக்கிறதில்லை. பொய்சொல்லி வேஷம்போட்டுக் கொள்ளுகிறவர்களே நன்ருக வாழுகிருர்கள், அல்லவா? ஆராய்ச்சிக்காரன் இவ்வித மோச வழிகளினல் மற்றவர்களை எமாற்றுகிறதற்கு அரசன் ஏன் உங்களைத்தண்டிக்கிறதில்லை என்ருன்.

அரசனையும் எங்களுடைய சீடனகச் செய்துவிட்டோம். பாருங்கள்!! எங்களுடைய எற்பாடெல்லாம் சரியாயும் ஒழுங்காயுமிருக்கிறது. எவனும் எங்களைத் தப்பியோட முடியாது.

ஆ.ன்:—பாமரர்களை மோசவழிகளினல் கொள்ளையடித்து துன்புறுத்துகிறீர்களே. பரமேச்வரனுக்கு முன் என்னபதில் சொல்லுவீர்கள்? கோர நரகத்தில் விழுவீர்களே. இவ்வளவு பெரிய அபராதம் செய்கிறீர்கள். இதை ஏன் விட்டு விடக்கூடாது? மதக்காரர்கள்:—எந்த நரகத்தில் விழுவோமென்றும் பரமேச்வரன் என்ன தண்டனையை அளிப்பாரென்றும், அக்காலத்தில் யோசிப்போம். இப்பொழுது ஆனந்தமாகச் சுகத்திலிருக்கிருேம். நாங்களும் சந்தோஷப்படவேண்டி ஜனங்கள் சுயமாகவே திரவியத்தை யளிக்கிருாகள். நாங்கள் பலாத்காரம் செய்யாமலிருக்கும்பொழுது அரசன் தண்டிக்கவேண்டிய அவசியமேது?

ஆ.ன்:—குழந்தைகளை ஏய்த்துத்திருடுகிறவனைப்போல் உங்களுக்குத் தண்டனையையளிக்கவேண்டும். ஏனெனில்,

अज्ञो भवति वै बालः पिता भवति मन्त्रदः ॥ மனு.

அறிவில்லாதவன் குழந்தை, அறிவையளிக்கிறவன் பிதா, பெரியவன். அறிவாளர்களாயும் படித்தவர்களாயுமிருக்கிறவர்கள் உங்களுடையவலையில் விழுகிறதில்லை. அறிவில்லாதவர்கள் குழந்தையைப் போலிருக்கிருர்கள். அவர்களே உங்களுடைய பொய்க்கும் வஞ்சகத்திற்கும் ஆளாகிருர்கள். அவர்களை மோசஞ்செய்வதற்கே உங்களுக்கு ராஜதண்டனையை அளிக்கவேண்டும்,

ம:—அரசன் பிரஜைகள் எல்லோரும் எங்களுடைய மதத்திலிருக்கிறார்கள். ஆகையினால் எங்களுக்குத் தண்டனையை அளிக்கிறவன எவன்? தண்டனையை அளிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் இத்தொழிலை விட்டு மற்றொன்றைக் கைப்பற்றுவோம்.

ஆ:— வேலையற்று உட்கார்ந்து பிறர்களை ஏமாற்றுகிறீர்கள். அறிவைக் கற்று கிரகஸ்தர்களுடைய மக்களைப் படிக்கச்செய்வது உங்களுடையவும் அவர்களுடையவும் நன்மைக்காகாதா ?

மத:—இளமைப்பருவம் முதல் இறக்கும் வரையில் சுகங்களைத் துறந்தும், பால்யாவஸ்தையிலிருந்து வயது காலம் வரையிலும் வித்தையைப் படித்தும், பிறகு படித்து கொடுப்பதிலேயும் உபதேசஞ் செய்வதிலேயும் வாழ்நாளைக்கழிப்பதினால் எங்களுக்கு என்ன பிரயோஜனம் ? என்ன லாபம் ? இப்படியே எங்களுக்கு லக்ஷரூபாய் ஒரு கஷ்டமுமன்னியில் கிடைக்கிறது. சுகமாகவும் சௌகரியமாகவும் வசிக்கிறோம். இவ்வாழ்வை விடுவானேன் ?

ஆ:—அபாரமான தீமைகளை இது விளைவிக்கும். தீராப்பிணிகளால் பீடிக்கப்பட்டு சிறுவயதிலேயே மரணத்தையடைகிறீர்கள். புத்திமான்கள் நிந்தித்தும் அதைப் பொருட்படுத்தாமலிருக்கிறீர்கள்.

टका धर्मष्टका कर्म टका हि परमं पदम् ।
यस्य गृहे टका नास्ति हा ! टका टकटकायते ॥
आना अंशकला प्रोक्ता रूप्योऽसौ भगवान् स्वयम् ।
अतस्तं सर्व इच्छन्ति रूप्यं हि गुणवत्तमम् ॥

சகோதரனே !

நீ சிறுபிள்ளை! உலகம் இன்னதென்று இன்னும் நீ அறிய சக்தியற்றிருக்கிறாய்! பொருளன்னியில் தர்மமும், நல்ல காரியமும் பரமபதமும் கிடைக்காதாம். பணமில்லாதவன் பணத்தைப் பற்றியே அடிக்கடி பேசுவான் "ஐயோ என்னிடம் பணமில்லையே. இவை யெல்லாம் அனுபவிக்க பணம் அல்லவோ என்னிடமிருக்கவேண்டும். இரண்டற்ற இறைவனைகேட்டு சக்தியுடன் கூடின எல்லோரும் புகழுகிறார்கள். அவரைக்கண்ணால் கண்டவர் யாருங்கிடையாது? ரூபாயின் 16 அணாவே புலப்படுகிற பிரத்தியக்ஷதெய்வம். சகல காரியங்களும் ரூபாயினாலேயே சித்தியாகிறபடியினால் அதைத்தேடுவதிலேயே எல்லோருமிருக்கிறார்கள்

ஆ:—உங்களுடைய எண்ணம் வெளியாய்விட்டது. உங்களுடைய உண்மையான கிறத்தைக்கண்டேன். சுயநலத்திற்காகவே நீங்கள் புரட்டுக்களையெல்லாம் கையாடுகிறீர்கள். அது உலகநாசத்தை விளைவிக்கிறது. சத்தியோபதேசம் உலக லாபத்தை உண்டுபண்ணுவது போலவே அசத்தியோபதேசமும் உலகநாசத்தை விளைவிக்கும். உங்களுக்கு வேண்டியது பணந்தானே ? ஏன் அதைவியாபாரம் செய்து சம்பாதிக்க கூடாது?

ம:—அப்பொழுது நாங்கள் கஷ்டப்படவேண்டும். நஷ்டத்தையுமடைய வேண்டும். இவ்வியாபாரத்திலே நஷ்டம் கிடையாது. எல்லாம் இலாபமே, கவனியுங்கள்; துளசியிலையை செம்புத்தண்ணீரில்போட்டு சரணகமலங்களில் சமர்ப்பித்து ஒரு துளசி ஜலத்தைக் கொடுக்கிறோம். கழுத்தில்மாலையை அணியச்செய்கிறோம். எங்களுடைய சீடனைச் செய்துக்கொள்ளுகிறோம். இவ்விதம் செய்துக்கொள்வதினால் சிஷ்யன் ஆயுள் பரியந்தமும் மிருகத்தைப் போல் உழைக்கின்றான். எங்களுக்கு இஷ்டமான வழிகளில் அவனைத் திருப்பலாம்.

ஆ:—இப்பணங்களெல்லாம் எதற்காகக்கொடுக்கிறார்கள்.

மத:—தர்மம் சுவர்க்கம் முத்தி இவைகளை யடைவதின்பொருட்டே.

ஆ:—நீங்களே முத்தர்களாகமாட்டீர்கள். முக்தி சுரூபத்தையாவது சாதனத்தையாவது அறியமாட்டீர்கள்: இப்படியிருக்க உங்களைப்பணிகிறவர்களுக்கு என்ன கிடைக்கும்? ம:—இறந்தபிறகு அடுத்த உலகத்திலேயே கிடைக்கும். இவர்கள் எங்களுக்கு எவ்வளவு கொடுத்துப் பணிவிடை செய்கிறார்களோ அவ்வளவே மறு உலகத்தில் கிடைக்கும்.

ஆ:—இவர்கள் கொடுக்குமளவு கிடைக்கிறதோ ?இல்லையோ! வாங்கிக் கொள்கிற உங்களுக்கு என்ன கிடைக்கும்? நரகமா அல்லது வேறு ஏதாவதா ம:—நாங்கள் துதிப்பதிலேயே காலத்தைக்கழிக்கிறோம். இதனுடையசுகமே எங்களுக்குக் கிடைக்கும்.

ஆ:—மரணத்திற்குப் பிறகு இங்கிருக்கிற திரவியத்திற்காகவே நீங்கள் துதிப்பதெல்லாம். மிக்ககவலையுடன் போஷித்துவரும்படியான சரீரமாம்சம் ஈற்றில் ஒருபிடி சாம்பலுக்குகூட உபயோகமாகாது. பரமேசுவரனை துதித்திருந்தால் உங்களுடைய ஆத்மா பரிசுத்தமாகும். ம:— நாங்கள் அசுத்தமானவர்களா ?

ஆ:—உங்களுடைய மனது ரொம்ப அழுக்குடன் கூடியதே.

ம:—உனக்கெப்படி தெரியும் ?

ஆ:—உங்களுடைய நடவடிக்கைகளிலிருந்து.

ம:—பெரியோர்களுடைய செய்கையும் நடவடிக்கையும் யானையுடைய பல்லுக்குச் சமானமானதாகும். காட்டுவதற்கு ஒரு வரிசைப்பல்லும், உண்பதற்கு வேறொருவரிசையும் இருப்பது போல் நாங்கள் அந்தரங்கமாகப் பரிசுத்தமானவர்கள். வெளிப்படையாக இக்கெட்டகாரியங்களைப் பொழுதுபோக்கியாகச்செய்கிறோம்.

ஆ:—அந்தரங்க சுத்தமிருந்தால் வெளிப்படையானக் காரியங்களும் சுத்தமாகவேயிருக்கும். ஆகையினாலே அந்தரங்கததில் அழுக்குடன் கூடினவர்கள். ம:—நாங்கள் எவ்விதமாவது இருக்கலாம், எங்களைப் பின்பற்றி நடப்பவர்கள் சரியானவர்கள்.

ஆ:—குருவைப்போலவே சிஷ்யர்களும். ம:—மனிதர்களுடைய குணம், கர்மம், சுபாவம் முதலானவைகள்வெவ்வேறாகவிருப்பதினால் ஒரு பொழுதும் ஒரே சமயமுண்டாகாது.

சமயங்களின் சேர்க்கை.

ஆ:—சிறுபிராயத்திலேயே ஒரே விதமான பயிற்சியைப்பெற்று உண்மையுறைத்தல், முதலான தர்மங்களைக் கிரகித்து பொய்ப்பேசுதல் முதலான அதர்மங்களை விட்டுவிட்டால் கட்டாயம் ஒரே மாதமாகக்கூடும். தர்மாத்மா அதர்மாத்மா என இரண்டுவிதமான மனிதர்களிருந்தே தீருவர்கள். அதர்மாத்மாக்களை விட தர்மாத்மாக்களதிகமிருந்தால் உலகில் சுகம் பெருகிக்கொண்டேயிருக்கும். அதர்மாத்மாக்கள் அதிகமாகும்பொழுது துக்கம் பெருகும். கற்றறிந்தவர்கள் எல்லோரும் ஒரே விதமாக உபதேசம் செய்தால் சமயங்கள் ஒன்றாய்ச்சேருவதற்குவெகுகாலமாகாது.

ம:—இது கலியுகம். சத்தியயுக வார்த்தைகளை இப்பொழுது எதிர்பாராதேயுங்கள். ஆ:—கலியுகமென்பது ஒரு கால அளவின் பெயராகாது. காலம்செய்கையற்றது. தர்மாதர்மகாரியங்களைச் செய்வதில் அது ஒரு பொருளாகாது. கலியுகமூர்த்திகள் நீங்களே. மனிதனிடத்திலிருக்கிற நன்மைகளும் கெடுதல்களும் இயற்கையாகவே உண்டானதில்லை. சேர்க்கையுடைய குணதோஷங்களினலேயே உண்டாகும சுவபாவங்கள்.

இவ்விதம்கூறிவிட்டு ஆப்த(உண்மையைஅறிந்துள்ளகுரு)னிடம்சென்று "ஐயா! நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள். இல்லாவிடில் நான் இப்பிரிவுகள் ஒன்றின் வலையில் சிக்கிக்கொண்டு நாசத்தையடைந்திருப்பேன். இவ்வேஷக்காரர்களின் வஞ்சகத்தை இனி நான் வெளிப்படுத்தி வேதோக்த சத்திய சமயததைதயேப் பரவச்செய்வேன்" என்றான்.

ஆப்தர்:—இது சாதாரணமாய் சகல மனிதர்களுடையவும், சிறப்பாய் துறவிகளுடையவும் அறிவாளர்களுடையவும் கடமையாகும். சகல மனிதர்களும் சத்தியத்தைத் தாங்கி அசத்தியத்தைகண்டித்து சத்தியோபதேசத்தினல் உபகாரம் செய்து அதை உபதேசிக்கவும் வேண்டும்.

வினு:— (தற்காலத்திய) பிரம்மச்சாரிகளும் சந்நியாசிகளும் சரியானவர்களா?

விடை:—ஆசிரம விதிகள் சரியானதே. ஆனல் தற்காலத்தில் இவர்களிடத்தும் பலவித கபட வஞ்சகங்கள் இருந்துவருகின்றன. அவர்களில் அநேகம் பிரம்மச்சாரி என்றழைத்துக்கொண்டு சடைமுடியை வளர்த்துக்கொண்டு பெருங்காரியங்களைச்செய்ய வல்லவர்களொக்கருதுகிறார்கள். ஜபம் செய்வதிலேயும், சம்ஸ்காரங்கள் செய்வதிலேயுமே, மூழ்கிக்கிடக்கிறார்கள். படித்தவர்கள் என்கிற பெயரைக்கூட அடைகிறதில்லை. பிரம்மச்சாரியென்றபெயரையளிக்கும் பிரம்ம அறிவாகிய வேதங்களைப்படிக்கிறதில்லை. இப்பிரம்மசாரிகளெல்லாம் ஆட்டின் கழுத்தின் கீழ் தொங்கும் கொழுப்பைப்போல பிரயோசனமற்றவர்கள். வித்தையில்லாமல் கமண்டலத்தையும், சொரைக் குடுக்கையுமேந்தி செல்லும் சந்நியாசிகள் பலபேர்களிருக்கிறார்கள். வேதமார்க்கமுன்னேற்றத்தைக் கொஞ்சமேனும் செய்கிறதில்லை. சிறுவயதிலேயே சந்நியாசம் வாங்கிக்கொண்டு அலைகின்றார்கள். வித்தியாப்

பியாசத்தையும் விட்டு விடுகிறார்கள். இவ்விதப்பிரம்மச்சாரிகளும் சந்நியாசிகளும் தலயாத்திரை செய்வதிலேயும் விக்கிரகங்களைத் தரிசிப்பதிலேயும் காலத்தைக் கழிக்கிறார்கள். வித்தையைப்பயிலாமல் மௌனஞ்சாதிக்கிறார்கள். ஏகாந்தமான விடங்களில் யனங்கொண்ட வரையில் அன்னபானம் செய்து படுத்து உறங்குகிறார்கள். பகை, பொறாமை பேராசைகளில் ஈடுபட்டு நிந்தை, தீயச்செயல, அடாதக்காரியங்கள் முதலானவைகளைச் செய்து வருகிறார்கள். காஷாயம்தரித்து தண்டம் சொம்புக்கைகையை எடுத்துக் கொள்வதினால் தங்களுடைய கடமை தீர்ந்து விட்டதென்றும் எண்ணுகிறார்கள். எல்லோரையும் விடமேலாக நினைத்து சிறந்தகாரியங்களைச் செய்கிற தில்லை. இவ்வித சந்நியாசிகள் உலகில் வீணாகவே வசிக்கிறார்கள். உலக நன்மையைச்செய்கிறவர்களே அவர்களில் சரியானவர்கள்.

வினா:—கிரி, புரி, பாரதி, முதலான கோசேனர்கள் நல்லவர்களா? ஏனெனில் கூட்டம்கூட்டமாக இங்குமங்குமலைகிறார்கள். ஆயிரக்கணக்கானச் சாதுக்களுக்கு ஆனந்தத்தையளிக்கிறார்கள். அத்வைத உபதேசத்தையே எங்கும் போதிக்கிறார்கள். கொஞ்சம் ஓதி ஓதவும் செய்கிறார்கள். ஆகவே அவர்கள் நல்லவர்களாம்.

விடை:—கிரி, புரி, முதலான பத்து பெயர்களும் பிற்காலத்திலுண்டானவை. சனாதனமானதில்லை. அவர்களுடைய கூட்டம் கேவலம் சாப்பாட்டிற்காகவே. அநேகம் சாதுக்கள் போசனத்திற்காகவே கூட்டத்தில்கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிலொருவனை மகாத்மாவாகச் செய்து அதிகாரத்தில் வைக்கிறார்கள். பிரதிமாலையிலும் உயர்ந்த சிம்மாசனத்தில் அவன் அமருவான். சாதுக்கள், பிராம்மணன் எல்லோரும் புஷ்பத்தைக்கையிலேந்தி அவன் முன்னின்று இம்மாதிரி,

नारायणं पद्मभवं वसिष्ठं शक्तिं च तत्पुत्रपराशरं च ।
व्यासं शुकं गौड़पदं महन्तम् ॥

சுலோகங்களைபடித்து ஹர ஹர வென்று பூமாரிபொழிந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வார்கள். இதையெல்லாம் செய்ய இஷ்டப்படாதவனுக்கு அவர்களுடன் வசிப்பது கூடகஷ்டமாகும். இவைகளை வேஷத்திற்காகவும், பார்வைக்காகவும், உலகத்திலமர்ந்து அனுபவிக்கவேண்டிய அளவு திரவியத்தையடையவேண்டியுமே செய்கிறார்கள், மடாதிபதிகளநேகம் பெயர்கள் கிரகஸ்தனயிருந்தபொழுதிலும் சந்நியாசியென்று சொல்லி அகங்கொள்ளுகிறார்கள். சந்நியாசிகளுக்கென ஏற்பட்ட (ஐந்தாவது அத்தியாயத்தைக்காண்க) கடமைகளொன்றையும் செய்யாமல் காலத்தை வீணாகவே கழிக்கிறார்கள். நல்ல உபதேசம் செய்கிறவர்கள் இவர்களுடைய விரோதியாகிறார்கள். இதிலநேகம் பேர்கள் விபூதியணிந்து ருத்திராக்ஷம் தரிக்கிறார்கள். சைவசம்பிரதாயத்தை அனுஷ்டிக்கிறார்களென்பதில் களிப்படைகிறார்கள். சமயவாதானுவாத சபைகளில் தங்களுடைய மதம் அதாவது சங்கராசாரியாரைத்தாங்கிச் சக்கராங்கிதர்களைக் கண்டிக்கிறார்கள். வேதமார்க்க உன்னதியைத்தாங்காமலும் பொய்மதங்களைக்

கண்டிக்காமலுமிருக்கிறார்கள். மகாத்மாக்களானபடியினால் இச்சந்நியாசிகள் தாங்குவதிலும் தள்ளுவதிலும் நமக்கென்னவேலை என்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சமுகத்திற்கும் வெறும் பாரமேயாம். இம்மாதிரியினாலேயே வேதமார்க்க விரோதிகளான வாமமார்க்கி, முதலான பிரிவுக்காரர்கள் கிறிஸ்துவர்கள், மகம்மதியர்கள், சமணர்கள், முதலானவர்கள் அதிகரித்து இன்னும் பெருகிக்கொண்டே போகிறார்கள். அவர்களோ (வேதமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள்) க்ஷீணதிசையை யடைகிறார்கள். அதை யறியவுமில்லை கொஞ்சங்கூட பரோபகாரபுத்தியும், செய்யவேண்டியகாரியங்களில் உற்சாகமும், இல்லாமல் எவ்விதம் அதை அறியமுடியும்? அன்னபானம்செய்வதையே பெரியதாக மதிக்கிறார்கள். உலகசிந்தைக்கும் ரொம்ப பயப்படுகிறார்கள். பொன்னாசை, பெண்ணாசை, உறவினர்களிடம் ஆசை, பொதுப்புகழ்மொழிகளில் ஆசை இவைகளையெல்லாம் சந்நியாசிகள் துறக்கவேண்டியது. இந்த ஆசைகளிலிருந்து மீறாதவர்களைச் சந்நியாசியென்று எப்படி சொல்லக்கூடும்? பட்சபாதமன்னியில் வேதமார்க்க உபதேசத்தினால் உலகத்திற்கு க்ஷேமத்தை விளைவிப்பதிலேயே அல்லும் பகலும் உழைப்பது சந்நியாசிகளுடைய சிறந்த கடமையாகும். தங்களுடைய ஆசிரம காரியங்களைச் செய்யாமலிருக்கிறவரையில் சந்நியாசி என்ற பெயர்களை வைத்துக்கொள்ளுவது வீணே. கிரகஸ்தர்கள் தங்களுடைய சொந்தகாரியத்திலே அக்கரை யுள்ளவர்களாயிருப்பதைக் காட்டிலும் சந்நியாசிகள் பரோபகாரத்தில் ஊக்கமுள்ளவர்களாயிருக்கும் பொழுதே ஆச்ரமங்களெல்லாம் ஓங்கி வளரும். உங்களுடைய கண்ணுக்கு முன்னாலேயே பொய் மதங்கள் பெருகிக்கொண்டே போகிறது. கிறிஸ்துவர்களாவும் மகமதியர்களாகவுமாகிறார்கள். தங்களுடைய இல்லத்தைச் செம்மையாகச் செய்து கொண்டுகாப்பாற்றி இதரர்களையும் சேர்த்துக்கொள்ள பிரயாசப்படுகிறதில்லை. மனமிருந்தால்தான் முடியும். நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் முன்னேற்றமடைவதற்கு உத்தமசீலர்கள் வராதவரையில் இவ்வாரியவர்த்தநாட்டிலேயும் மற்றஇடங்களிலேயும் முன்னேற்றமதிக முண்டாகாது. சத்தியசாத்திரங்களைப்படித்துப் படிக்கச்செய்வது, பிரம்மச்சரியாதி ஆச்சிரமங்களைச் சரிவர அனுஷ்டிப்பதிலேயுமே விருத்தி யுண்டாகும். தேச வளர்ச்சியும் உண்டாகும். சத்தியோபதேசமும் பரவும். நீங்களே அறியும்படி பல தீய குணங்களையுடையவும் பொய்யானதுமான பல வழக்கங்களிருந்து வருகிறதென்று ஞாபகத்தில் வையுங்கள். உதாரணமாக வியாபார புத்தியுள்ள சாது தன்னைச் சித்தன் என்று சொல்லிக் கொள்ளுகிறான். மலடிகளுக்குப்பிள்ளையை அளிக்கமுடியும் என்கிறான். இதைக்கேட்ட மாதர்கள் பலர் அவ்விடம் சென்று கைகூப்பி மக்கட்பேறு வேண்டுமென்று துதிக்கிறார்கள். சாதுவும் மக்கட்பேறு உண்டாகக் கடவது என்று ஆசீர்வாதஞ் செய்கிறான். மக்களைப் பெற்றவர்கள் சுவாமி உங்களுடைய வார்த்தையாலேயே உண்டாச்சுதென்கிறார்கள். பேதைப்பெண்களே!! கழுதை, நாய், கோழி முதலானவைகள் யாருடைய ஆசீர்வாதத்தினால் பெறுகின்றன என்றுகேட்டால் என்ன சொல்லுவார்கள். மற்றும் சிலர் இறந்தவர்களைப்பிழைக்கச்செய்ய முடியுமென்கிறார்கள். அறி

வில்லாதவர்கள் அதை உண்மையென நம்புகிறார்கள், தனக்கிருக்கிற சக்தி அவர்களுக்கிருக்குமேயானால் அவர்களே ஏன் இறந்துபோகிறார்கள். வேறு சிலதிருடர்கள் பெரியபுத்திமான்களையும் ஏமாற்ற உபாயம் செய்கிறார்கள். உதாரணமாக **தனசாரி, தக்கு** என்ற கூட்டத்தார்களை எடுத்துக்கொள்ளுவோம்.

ஐந்து அல்லது ஏழுபேர்கள் ஒன்றாகச்சேர்ந்து தூரதேசங்களுக்குப் போகிறார்கள். அவர்களுள் நல்ல சரீரபலமுடையவனைத்தலைவனாகச்செய்துக் கொள்ளுகிறார்கள். அத்தலைவன் அப்பொழுது சித்தபுருஷனாகிறான். பணமுள்ளவர்களைக்கொண்ட நகரம், கிராமம் எதையாவது அடைந்து அதற்குச் சமீபத்திலுள்ள அடர்ந்தானதும் தனியானதுமான ஒரு விடத்தில் அச்சித்தனைச் சிம்மாசனமிட்டு உட்கார்த்திவைப்பார்கள். பிறகுபட்டணத்திற்குச்சென்றுவழியில் வருகிறவர்களை யெல்லாம் இன்னின்னமகாத்மாவைக்கண்டாயா? என்று வினவுவார்கள். யார் எந்த மகாத்மா என்று கேட்டால் அவர் பெரிய சித்தபுருஷர், உன் மனதிலிருக்கிறதை சொல்லககூடியவர், அவர் சொல்லுவதெல்லாம் நடந்தே தீரும், அவர் பெரியயோகி, அவரைத் தரிசனம் செய்வதற்காகவே எங்களுடைய வீடுவாசல்களைவிட்டுத் தேடிக் கொண்டிருக்கிறோம். அம்மகாத்மா இந்தப்பக்கம் வந்திருப்பதாகக் கேழ்விப்பட்டோம்" என்பதாகச் சொல்லுவார்கள். கிரகஸ்தர்கள் இதைக்கேட்டு "அம்மகானைச் சந்தித்தால் எங்களுக்கும் தெரியப்படுத்துங்கள். தரிசனம் செய்வோம். மனதிலுள்ளவைகளை கேழ்ப்போம்" என்கிறார்கள். பகல் முழுவதும் இதேமாதிரி கண்ணில் கண்டவர்களை யெல்லாம் கேழ்ப்பார்கள். நகரத்தைச்சுற்றியும் வருவார்கள். இரவில் அவ்விடத்தில் எல்லோரும் போய் ஒன்றாகக் கூடி அன்னபானம் செய்து தூங்கிக்காலையில் எழுந்திருந்து, நம்சித்தருடைய துணையாளிகள் கிராமம் நகரம் முதலிய விடங்களுக்குச்சென்று முந்தினம் போலவே கேட்டுவிட்டுத் திரும்புவார்கள். இதேமாதிரி இரண்டு அல்லது மூன்று நாள் செய்த பிறகு பணமுள்ளவர்களிடம் சென்று மகாத்மா வந்துள்ளார், தரிசனம் செய்ய இஷ்டமுண்டானால் அழைத்துவரத் தயாராகவிருக்கிறோம் என்பார்கள். பின்பற்றிவரப்புறப்படும் பொழுது அவரை நீங்கள் என்ன கேட்கவிரும்புகிறீர்கள் என்று துணையாளிகள் வினவ புத்திரப்பேறுவேண்டுமென்றோ, நோய்தீரவேண்டுமென்றோ, திரவியம் வேண்டுமென்றோ, அல்லது சத்துருவை ஜெயிக்க வேண்டுமென்றோ சொல்லுவாகள். அவரை அழைத்துக்கொண்டு போய்ச் சித்தர் இருக்குமிடத்தில் (சித்தருக்கும், துணையாளிக்கும்) முன் தெரிவித்துக்கொள்ளப்பட்ட அடையாளப்பிரகாரம் உட்காரவைப்பார்கள். உதாரணமாகத் திரவியம் வேண்டு மென்கிறவர்களை சித்தருடைய வலதுபக்கத்திலேயும், மக்கட்பேறு வேண்டு மென்கிறவர்களை முன்னாலேயும், ரோகநிவாரணமாக வேண்டும் என்கிறவர்களை இடதுபக்கத்திலேயும், சத்துருவை ஜயிக்க வேண்டுமென்கிறவர்களைப் பின்புறமாகவும், உட்கார்த்திவைப்பார்கள். வந்தவர்கள் நமஸ்காரம் செய்தானவுடன் சித்தர் தன் சித்த சக்தியினால் உறத்தகுரலுடன் பிள்ளையை பெற்றுக்கொண்டு

போவதற்கு நான்இங்கே பிள்ளைகளைச் சேர்த்துவைத்துக் கொண்டிருக்கிறேனு? அல்லது திரவியம் சம்பாதித்துப்போகவேண்டுமென்கிற அவாவுடன் நீங்கள்வரு வதைஒட்டி பணமுடிகளை இங்கேவைத்திருக்கிறேனு? பக்கிரிகளிடத்தில் பணம் ஏது? நான் என்ன வைத்தியனு? ரோகநிவாரணம் செய்வதற்கு? வைத்தியரிடத் தில்போங்கள் "என்றுசொல்லுவான். வந்திருக்கிறவர்களுக்கும் நோயாளிகளும் உள்ள பந்து முறைமையைக்காண்பிக்க இந்தபேக்கிரிகளுள் சில குறிகளிருக் கின்றன. உதாரணமாகத் தகப்பனுயிருக்கும் பட்சத்தில் துணையாளிகளில் ஒரு வன் கைப் பெருவிரலைக் காண்பிப்பான், தாயாராயிருக்கும் பட்சத்தில் சிறு விரலையும் சகோதரனுயிருக்கும் பட்சத்தில் நடு விரலையும் மனைவியாயிருக்கும் பட்சத்தில் மோதிரவிரலையும், பெண்ணுயிருக் கும்பட்சத்தில் சுண்டுவிரலையும் முறையே காண்பிப்பார்கள். ஆகவே நம்முடைய சித்தர் உடனேதாய் தகப்பன் சகோதரி மனைவி அல்லது மக்கள் யார் நோயினுல் வருந்துகிருர்களென்று சொல்லுவான். வந்திருக்கிறவர் இப்பதில்களையெல்லாம் கேட்டு மதிமயங்கி விடு வார்கள். அப்படிகேள்ளர்கள் நாங்கள் சொன்னது சரிதானு என்பார்கள். ஆமாம் நீங்கள் சொன்னதே. அதுவே சரியானது எனக்குப்பெரும் உபகாரத்தைச் செய்தீர்கள். நான் பெரும்பாக்கியத்தையடைந்தேன். தங்களைத் தரிசனம் செய்ததினுல் பெரும்புனிதர்களானேம் என்கிருர்கள். அப்பொழுது துணை யாளிகள் "கேளும் அண்ணே; மனதைகாட்டின மகாத்மா இவர். இவ்விடம் வெகுநாள் தங்கியிருக்கமாட்டார். அவருடைய ஆசியை விரும்பினுல் தங்களுடைய உடல் பொருள் ஆவி மூன்றினுலும் பணிவிடை செய்யுங்கள் ஏனென்றுல் பணிவிடையே பலனைக் கொடுக்கும். சித்தர்களுடையவழி அபார மானது என்பதுபோல் சந்தோஷம் வந்தவர்களிடத்தில் என்னதான் அளிக்க மாட்டார் "என்பார்கள். இனிமையானவு மிருதுவானதுமான வார்த்தைகளைக் கேட்டு பெரும் சந்தோஷமடைந்து கிரகஸ்தன் வீடுபோய்ச்சேருவான். இவர்க ளுடைய பொய்வார்த்தைகள் வெளியாகாமலிருக்கும் வண்ணம் இந்த மோசக் காரர்களும் கூடவே பின்தொடர்ந்து போவார்கள். வழியில் காணும் சிநே கிதன் முதலானவர்களிடம் சித்தரைப்பற்றி புகழ்ந்து பேசுவான். மெள்ள மெள்ள வார்த்தைகள் பரவி ஊர்முழுவதும் பெரிய சந்தடியும் உண்டாகும். ஒரு பெரிய சித்தர் வந்திருக்கிருர். இன்னின்னவிடத்தில் தங்கியிருக்கிருர். அவரைப்போய் காணுவோம் என்று ஊரில் எல்லோரும் சொல்லுவது காதில் விழும். ஜனங்கள் அங்கு சென்று கூட்டமாகக்கூடி கேழ்க்கும்பொழுது அமை தியின்மை ஏற்படுகிறபடியினுல் சித்தர் வாய்ப்பேசாமல் மௌனம் சாதிப்பார். என்னைத்தொந்திரவு செய்யாதீர்களென்றும் சொல்லுவார். துணையாளர்கள் எல்லோருமாக நீங்கள் அதிகம் தொந்திரவு செய்தால் அவர்போய் விடுவார் என்பார்கள். சில சமயங்களில் கூட்டத்திலிருக்கிற தனவான் ஒருவன் துணை யாளன் ஒருவனை ஒரு பக்கமாக அழைத்துச்சென்று எங்கள் மனதிலிருப்ப தைச்சொல்லச்சொல்லுங்கள் நாங்கள் அப்பொழுது உண்மையென்று நம்பு வோம் என்பார்கள். அப்பொழுதே எதைப்பற்றி வேண்டுகிருன் என்று மோ சக்காரன் தெரிந்து கொள்ளுகிருன். தனவானும் தன்னிஷடத்தைத் தெரிவிப்

பான். முன் கூறின ஏற்ப்பாட்டின் பிரகாரம் தனவானை உட்காரவைப்பான். சித்தர் உடனே மனேவெண்ணத்தைச் சொல்லுவார். எல்லோரும் இவருடைய பதிலைக் கேழ்ப்பார்கள். அப்பொழுது ஒருவருடன் ஒருவர் சித்தர் பெரியவரோ என்று சொல்லுவார்கள். அவரவர்களுக்கேற்ற வண்ணம், மிட்டாய் திரவியம், வெள்ளி, தங்கம், ஆடை, உடை முதலியவைகளை கொண்டு வந்து கொடுப்பார்கள. பொருள் வந்து சேரும்வரையில் மோசக்காரர்கள் கொள்ளையடித்துக்கொண்டே யிருப்பார்கள். சிலசமயங்க்ளில் மூளையை விட பணம் அதிகமுள்ள இரண்டு மூன்று புருஷர்கள் நம்முடைய சித்தபுருஷரை அடைவார்கள். அவர்கள் 1000 அல்லது அதற்கு அதிகமானதொகையைக் கொடுப்பார்கள். அதற்குப்பதிலாக ஆசிர்வாதஞ்செய்த வீபூதியை உன்வணக்கம் உண்மையானுல்குழந்தைபிறக்கும் என்று சொல்லிக்கொடுப்பான். இவ்விதமாக மோசக்காரர்கள் பலபேர்களிருக்கிருர்கள். கற்று அறிந்தவர்களே இதை விசாரணை செய்யமுடியும். வேறு எவராலும் முடியாது. வேதாதி வித்தைகளைப் பயின்று நல்லசேர்க்கையினுலேயே அவர்களுடைய மோசத்திலகப்படாமல் தப்பமுடியும். ஏனெனில் மனிதனுக்கு வித்தையே நண்ணுகும். வித்தையில்லாமல் ஞானமுண்டாகாது. சிறுவயதிலிருந்து சிறந்தபயிற்சி அடைகிற மனிதன் வித்வானுகிருன். எவனுக்குக்கெட்டசேர்க்கையிருக்கிறதோ அவன்பெரும் பாபியாகிருன். கடக்கமுடியாத துக்கத்தில் உழலுகிருன். இதனுலேயே ஞானத்தைச்சிறப்பாகச் சொல்லியிருக்கிருர்கள். அறிகிறவனே நம்புகிருன்.

न वेत्ति यो यस्य गुणप्रकर्षं स तस्य निन्दां सततं करोति ।
यथा किराती करिकुम्भजाता मुक्ताः परित्यज्य बिभर्ति गुञ्जाः ॥ சாணக்.

பொருளுடைய குணத்தை யறியாதவர்கள் அதை தூஷணை செய்கிருர்கள். காட்டிலுள்ள பீல் வகுப்பினர் சுகந்தபரிமளத்துடன்கூடின குஞ்சா புஷ்பங்களை விட்டு கசமுகலத்தினுடைய மாலையைத்தரிப்பது போலேயாம். அறிஞன் ஞானி, தார்மீகன் சத்பருஷர்களுடைய சேர்க்கை இவைகளையுடையவனே யோகி. புருஷப்பிரயத்தனமுள்ளவன், அடக்கப்பட்ட இந்திரியங்கள், சுசீலை இவைகளுடன் கூடினவனே தர்மார்த்தகாம மோக்ஷத்தையடைந்து இப்பிறப்பில் மாத்திரமன்னியில் மறுபிறப்பிலும் எப்பொழுதும் ஆனந்தத்திலிருக்கிருன். ஆரியவர்த்தத்தில் வசிக்கிற ஜனங்களுடைய மதவிஷயத்தைச் சுருக்கமாக எழுதினேம். இதற்குப்பிறகு கொஞ்சம் இருக்கிற ஆரிய அரசர்களின் சரிதையை சகல ஜனங்களும் அறியும்பொருட்டு வெளிப்படுத்துகிரேம். ஆரியவர்த்ததேசராஜவம்சத்து மகாராஜயுதிஷ்டிரர் முதல் மகாராஜயசபாலன் வரையிலுள்ள சரித்திரத்தைச் சொல்லுகிரேம். மகாராஜசுவாயம்பவ மனு முதல் கொண்டு மகாராஜயுதிஷடிரர் பரியந்தமுள்ள விவரம் மகாபாரதம் முதலானவைகளில் காணப்படுகிறது. யுதிஷ்டிருக்குப்பிறகு ஆரிய அரசர்களின் சரித்திரம் கொஞ்சம் படிக்கிறவர்களுக்கு விளங்கும். ராஜபுதானத்திலி உதயபூர் சமஸ்தானத்தின் தலைநகரான சித்தூரில் ஸ்ரீ நாதத்துவாரத்திலிருந்து பக்ஷத்திற்கொருமுறை வெளிவந்துகொண்டிருந்த ஹரசந்திரகா,மோகன

சந்திரகா என்னும் பத்திரிகைகளில் வெளியானதின் மொழிபெயர்ப்பேயாகும் இது. சரித்திரம் முதலானவைகளை ஆராய்ச்சிசெய்து ஆரியஜனங்கள் வெளிப்படுத்தினல் தேசத்திற்குத் தக்கலாபமுண்டு. மேற்படி பத்திரிகையின் பத்திராதிபர் விக்கிரம் 1782 (1725 கிறிஸ்து) ல் எழுதின ஏட்டுப்பிரதிநூல் ஒன்றைத்தான் சிநேகிதர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ரும். 1893 விக்கிரம் (1882 கிறிஸ்து) 19-20 எண்ணுள்ள சஞ்சிகைகளில் ஆரிய அரசர்களின் சுருக்கமான சங்கிரகத்தைப் பிரசுரித்தார். அதுக்கீழ்க்கண்டவாறு.

1770 வருஷம் 11 மாசம் 10 நாளைக்கு மொத்தமாக யுதிஷ்டிரவம்சத்தைச்சேர்ந்த 30 சக்கரவர்த்திகள் இந்திரபிரஸ்தத்தில் ஆண்டார்கள். அவர்க விவரமாவது.

ஆரியவர்த்தத்தின் ஆரியசக்கரவர்த்திகளின் வம்சாவளி.

இந்திரபிரஸ்தத்தில் யுதிஷ்டிர சக்கரவர்த்தி முதற்கொண்டு யசபால சக்கரவர்த்திவரையில் ஆரியர்களே ஆண்டார்கள். ஏறக்குறைய மொத்தத்தில் 124 பேர்களிருந்தார்கள். அவர்களாண்டகாலம் 4157 வருஷங்கள் 9 மாசங்கள் 14 நாள்களுமாம். விவரம் கீழ்க்கண்டவாறு.

	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.		ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1	யுதிஷ்டிரர்	36	8	25	16	சுசரிதன்	42	11	2
2	பரிக்ஷித்து	60	0	0	17	சூரசேனன்	58	10	8
3	ஜனமேஜய	84	7	23	18	இரண்டாவது பர்வதசேனன்	55	8	10
4	அஸ்வமேத	82	8	22	19	மேதாவி	52	10	10
5	இரண்டாவது ராமர்	88	2	8	20	சோனசீரன்	50	8	21
6	சத்ரமலன்	81	11	27	21	பீமதேவன்	47	9	20
7	சித்திராதன்	75	3	18	22	கிருஹரிதேவன்	45	11	23
8	துஷ்டசைல்யன்	75	10	24	23	பூர்ணமலன்	44	8	7
9	உக்ரசேனன்	78	7	21	24	காதவீ	44	10	8
10	சூரசேனன்	78	7	21	25	அலம்மிகன்	50	11	8
11	புவனபதி	69	5	5	26	உதயபாலன்	38	9	0
12	ரணஜிதன்	65	10	4	27	துவனமலன்	40	10	26
13	ரிக்ஷகன்	64	7	4	28	தமதன்	32	0	0
14	சுகதேவன்	62	0	24	29	பீமபாலன்	58	5	8
15	காஹரிதேவன்	51	10	2	30	க்ஷேமகன்	48	11	21

ராஜாக்ஷேமகனை மந்திரி **விக்கரவன்** கொலைசெய்து விட்டு தானே ஆளவாரம்பித்தான. இவ்வம்சத்தைச்சேர்க்த சக்கரவர்த்தி 14 பேர்கள் மொத்தமாக இர்திரபிரஸ்தத்தில் 500 வருஷம் 3 மாசம் 17 நாள் ஆண்டார்கள்,

	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1	விச்ரவான்	17	3	29
2	புரசேனி.	42	8	21
3	வீரசேனி	52	10	7
4	அன்ங்கசாயி	47	8	23
5	ஹரிஜித்	35	9	17
6	பரமசேனி	44	2	23
7	சுகபாதாளன்	30	2	21
8	கத்ருதன்	42	9	24
9	சஜ்ஜனன்	32	2	14
10	அமரசூடன்	27	3	16
11	அமீபாவன்	22	11	25
12	தசரதன்	25	4	12
13	வீரசாலன்	31	8	11
14	வீரசாலசேனன்	47	0	14

வீரசாலசேனனை மந்திரி விரமகாக் கொன்று அவனுக்குப் பதிலாக ஆள வாரம்பித்தான். அவ்வம்சத்து 16 சக்ரவர்த்திகள் மொத்தம் 441 வருஷம் மாசம் 3 நாள் அரசுபுரிந்தார்கள்.

	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1	ராஜ வீரமகான்	35	10	8
2	அஜாதசிம்ஹன்	27	7	19
3	சர்வவத்தன்	28	3	10
4	புவனபதி	11	4	10
6	வீரசேனன்	21	2	13
6	மஹீபாலன்	40	8	7
7	சத்துருசாலன்	26	4	3
8	சங்கராஜன்	17	2	10
9	தேஜபாலன்	28	11	10
10	மாணிக்சந்து	7	7	21
11	காமசேனி	42	5	10
12	சத்துருமர்தனன்	8	11	13
13	ஜீவன்லோசன்	28	9	17
14	ஹரிராவ்	26	10	29
11	இரண்டாவது வீரசேனன்	35	2	20
16	ஆதித்யகேது	21	11	13

ஆதித்யகேதுராஜனை பிரயாகையைச்சேர்ந்த **தன்தரன்** கொன்றுவிட்டு தானே அரசாண்டான், மொத்தம் ஒன்பதரசர்கள் 374 வருஷம் 11 மாதம் 26 நாள் ஆண்டார்கள்.

	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1	ராஜதந்தரன்	42	7	24
2	மகரிஷி	42	2	29
3	சனரஞ்சி	50	10	19
4	மகாயுத்தன்	30	3	8
5	துரகாதன்	28	5	25
6	ஜீவனராஜன்	45	2	5
7	உருத்ரசேனன்	47	4	28
8	உரீலன்	52	10	8
9	ராஜபாலன்	36	0	0

சாமந்த மகாபாலன் ராஜ ராஜபாலனைக்கொன்ருன். கொன்று 14 வருஷம் ஆண்டான். திகையின் அரசனை விக்கிரமாதித்யன் அவன்மேல் படையெடுத்து மகாபாலனைத்தோற்கடித்தார். அவர் 93 வருஷங்களாண்டார் சமுத்திரபாலயோகி டைடன் என்னப்பட்ட சாலிவாஹன அரசனுடைய மந்திரியினல் கொல்லப்பட்டார். விக்கிரமாதித்யன் காலத்தில் ஆளவாரம்

பித்தார். அவ்வம்சத்து 16 அரசர்கள் மொத்தமாக 372 வருஷங்கள் 4 மாதங்கள் 27 நாள்களாண்டார்கள்.

ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1 சமுத்ரபாலன்	54	2	20	9 அம்ருதபாலன்	36	10	13
2 சந்திரபாலன்	36	5	4	10 பலீபாலன்	12	5	27
3 சாகாயபாலன்	11	4	11	11 மஹீபாலன்	13	8	4
4 தேவபாலன்	27	1	8	12 ஹரீபாலன்	14	8	4
5 நரசிம்மபாலன்	18	0	20	13 சீசபாலன்	11	10	13
6 சாமபாலன்	27	1	17	14 மதனபாலன்	17	10	19
7 ரகுபாலன்	22	3	25	15 கர்மபாலன்	16	2	2
8 கோவிந்தபாலன்	27	1	17	16 விக்ரமபாலன்	24	11	13

விக்கிரமபாலன் மேற்தேயத்து அரசனுன மலுக்சந்த் போகராவின மீது படையெடுத்து மைதானத்தில் யுத்தஞ்செய்தான். மலுக்சந்த விக்ரமாதித்தியனைக் கொன்று இந்திரபிரஸ்தத்தில் அரசாண்டான். மொத்தம் அவன் வம்சத்தரசர்கள் 191 வருஷங்கள் 1 மாசம் 16 நாள்கள் ஆண்டார்கள்.

ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1 மலுக்சந்தர்	54	2	10	6 கல்யாணசந்த்	10	5	4
2 விக்ரமசந்த்	12	7	12	7 பீமசந்த்	16	2	9
3 அமீன்சந்த்*	10	0	5	8 லோவசந்தர்	26	3	22
4 ராமசந்த்	13	11	8	9 கோவிந்த சந்த	31	7	12
5 ஹரீசந்த்	14	9	24	10 ராணிபத்மாவதி	1	0	0

பத்மாவதி ராணி சந்தானமில்லாமல் இறந்துபோனுள். மந்திரிகளெல்லோரும் கூடிக்கலந்து ஹரிராம வைராகியைச் சிம்மாசனத்திலமர்த்திஞர்கள். 50 வருஷங்கள் 2 நாள்கள் அவன் வம்சத்தரசர்கள் மொத்தமாக ஆண்டார்கள்.

ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1 ஹரீராம்	7	5	16	3 கோபால்ராம்	15	7	28
2 கோவிந்தராம்	10	2	8	4 மகாபாகு	6	8	29

ராஜமகாபாகு சிம்மாசனத்தைவிட்டு விலகி காட்டிற்குத் தவம்புரியச் சென்றூர். வங்கநாட்டு ஆதிசேனன் இதைக்கேட்டுஇந்திரப்பிரஸ்தத்திற்குவந்து முக்கியபட்டணத்தைப் பிடித்துக்கொண்டு அரசாளவாரம்பித்தான். இந்திரபிரஸ்தத்தில் 151 வஷங்கள் 11 மாசங்கள் 2 நாள்கள் ஆண்டரர்கள்.

* இவன்பெயரைச் சிலவைகள் மானக் சந்து என்கிறது.

ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1 ஆதீனசேனன்	18	5	21	7 கலியாணசேனன்	4	8	21
2 லீலாவசேனன்	12	4	2	8 ஹரிசேனன்	12	0	25
3 கேசவசேனன்	15	7	12	9 க்ஷேமசேனன்	8	11	15
4 மாதசேனன்	12	4	2	10 நாராயணசேனன்	2	2	29
5 மயூரசேனன்	20	11	27	11 லக்ஷ்மீசேனன்	36	10	0
6 பீமசேனன்	5	10	9	12 தாமோதரசேனன்	11	5	19

ராஜ தாமோதரசேனன், தன்னுடைய அதிகாரி ஜனங்களை மிகவும் துன்புறுத்தினன். தீபசிம்ஹன் என்பான் அவனுக்கு விரோதமாகி சைனியத்தையும் கூட சேர்த்துக்கொண்டான். ராஜாவைக்கொன்றுவிட்டுத்தானே ஆளவாரம்பித்தான். இவ்வம்சத்தில் 6 அரசர்களிருந்தார்கள். மொத்தமாக 107 வருஷங்கள் 6 மாசங்கள் 22 நாளும் ஆண்டார்கள். விவரம் பின்வருமாறு.

ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1 தீபசிம்மஹன்	17	1	26	4 நரசிம்ஹன்	45	0	15
2 ராஜசிம்ஹன்	14	5	0	5 ஹரிசிம்ஹன்	13	2	29
3 ரணசிம்ஹன்	9	8	11	6 ஜீவன் சிம்ஹன்	8	0	1

ராஜா ஜீவன்சிம்ஹன் காரணமன்னியில் சைனியமெல்லாவற்றையும் வடக்குக்கு அனுப்பினன். இதைக்கேட்ட வைராட்டராஜனுன பிருதிவி ராஜசௌஹன் அவனுக்கு எதிரிடையாகச்சென்று சண்டையில் கொன்று விட்டு தானே ஆளவாரம்பித்தான் *இவ்வமசத்தில் 5 அரரர்களிருந்தார்கள். மொத்தம் 56 வருஷங்களும் 20 நாள்களுமாண்டார்கள்.

ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.	ஆரியராஜாக்கள்.	வரு.	மா.	நா.
1 பிருதிவி ராஜன்	12	2	19	4 உதயபாலன்	11	7	3
2 அபயபாலன்	14	5	17	5 யசபாலன்	36	4	27
3 துர்சனபாலன்	11	4	84				

* சுல்தான் சஹபூதீன் கோரி பிருதிவி ராஜன்பேரில் படையெடுத்ததாகவும் பல தடவைகளில் தோல்வியடைந்து வீடுதிரும்பியதாகவும் சில சரித்திரபுத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. முடிவில் 1249 விக்கிர சகாப்தத்தில் ராஜா பிருதிவிராஜனுடைய நேசர்களிலிருந்த பரஸ்பர விரோதத்தினல் பிருதிவிராஜனைச் சஹபுதீன் தோற்கடித்து விட்டான். கண்ணைக்குருடாக்கிவிட்டு தன்னுடன் அழைத்துச்சென்றான். இந்திரபிரஸ்த ராஜ்யபாரத்தைத்தானே ஏற்றுக்கொண்டான். மகம்மதியர்களுடைய ஆளுகை 61 வருஷங்கள் நடந்தேறியது மொததம் 45 அரசர்கள் ஆண்டார்கள்.

*அவ்வழியைச்சேர்ந்த சுல்தான் சஹாபுதீன் சோரி ராஜயசபாலருடைய ராஜ்யந்தான் அவர்பேரில்படைஎடுத்து (தோற்கடித்து) பிரயாகைகோட்டையில் 1219 விக்கிரமசகத்தில்(கிறிஸ்து 1306 ௵) கைதியாக்கி இந்திரபிரஸ்த ராஜ்ய பாரத்தைத் தன்கையிலெடுத்துக்கொண்டான்.மீதி 754 வருஷங்கள் 1 மாதம் 17 நாள்கள்ஆண்டமொத்தம் 53 ராஜாக்களின் பெயர் எல்லா சரித்திர நூல்களிலும் இருக்கிறடியால் இங்கு அதை கூறவில்லை.

அடுத்த அத்தியாயத்தில் பௌத்த சமண சமயத்தைப் பற்றிச் சொல்லுவோம்.

பதினொன்றாவது அத்தியாயம்.

முற்றிற்று.

* இது தப்பேயாகும். ராஜயசபாலனை ஜயித்தது கஜனீமாமூது. சகபுதீன் அல்ல (மொ—ர்).

பனிரண்டாவது அத்தியாயத்தின்

முகவுரை.

மெய்ப் பொருள் எது, பொய்ப்பொருள் எதுவென உள்ளங்கை நெல்லிக் கனிபோல், விளங்குந் தன்மையதான தெய்வ நூலெனக் கொள்ளப்படும், வேதநூலை, ஆரியவர்த்த நாட்டினர் ஓதுதலை விடுத்தநாள் தொட்டு, நமதுநன் நாட்டில் அறியாமைப் பேரிருள் புகுந்தது. அதன் அடிச்சுவடு பற்றிப்பல வகுப்புகள், மதங்கள், தோன்றலாயின. சாஸ்திரத்திற்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்தாத சமண மதம் நமது நாட்டில் வேரூன்றிற்று. வால்மீகியார் ஆக்கிய ராமாயணத்திலும், சமணர்களைப்பற்றிய பேச்சு எதையும் காணமுடியவில்லை. மகாபாரதமும் இம்மதத்தை அறியாது. ஆனால் சமண நூலிலோ ராமசரிதையும் கிருஷ்ணசரிதையும் இருக்கக் காண்கிறோம்.

இதினின்று அறியற்பாலது என்னவென்றால், ராமாயண பாரதகாலத்திற்குப் பிறகு தான் இம்மதம் தோன்றியுள்ளது என்பதே. சமணர் கூறும் விதம் பண்டையமதமாயிருப்பின், சமணர்களைப்பற்றி ராமாயண பாரத நூற்களில் குறிக்கப்பட்டிருக்கவேண்டுமல்லவா ? ராமாயண பாரதக்கதைகள் சமண நூற்களிலிருந்து எடுக்கப்பட்டவையெனின் அதற்கும் மேற்கூறிய இரு நூற்களிலும் அத்தாட்சியொன்றையும் காணோம். பிள்ளையொருவன் தகப்பன் மணத்தில் விஜயமாயிருத்தல் முடியாதகாரியமல்லவா ?

பௌத்த சமண சமயங்கள், வாமமார்க்கம், சைவமார்க்கம் இவைகளுக்குப் பின்னர்தான் ஏற்பட்டிருக்கின்றன. இம்மதவிஷயமாய் நமது அபிப்பிராயங்களைப் போதியமேற்கோள்களின் துணைகொண்டே கூறியிருக்கிறோம். நாம் சமணர்களின் மீதுகுறைகூற வேண்டுமென்னும் நோக்கங்கொண்டோமில்லை. உண்மையைவிளக்குவது, மெய்ப்பொருளை யெடுத்துக்காட்டுவது என்னும் நோக்கத்துடன் தான் ஆராய்ச்சிசெய்துள்ளோம். எனவே சமணர் நம்மீது கோபங்கொள்ளத் தேவையில்லை.

இவ்வத்தியாயம் சமணர்களிடம் ஓர் எழுச்சியைத்தரும். படிக்கவும் மதவிஷயத்தை ஆராயவும் அவகாசமும் தரும். குருட்டுத்தனமாய்க் கண்டித்தல் என்பதை நிறுத்தி அறிஞர்கள் நன்கு ஆராய்ச்சிசெய்து மெய்ப்பொருள் தேடவேண்டும். சமணர்கள் தங்கள் நூற்களைப் பிறர் வாசிக்குமாறும் விடுவதில்லை. எனவே இதன் மூலம் பிறமதஸ்தர்களும் சமணர் நூற்களைப் படித்தறிதல் கூடும். நானும் பம்பாய் ஆரிய சமாஜத்தின் காரியதரிசியான

ஸ்ரீ சேவக்லால் கிருஷ்ணதாசரும் பெருமுயற்சி செய்து சமண நூற்களைப் பெற்றோம். மேலும் காசி, பிரபாகரஜீயின அச்சுக்கூடத்தரால் பிரசுரிக்கப்பட்ட சில சமண நூற்களும், பம்பாயினின்றும் வெளியிடப்பட்ட பிரகரண இரத்திநகரம் என்னும் நூலும்,இவ்வாராய்ச்சிக்கு உதவியாயிருக்தன. சமணர் தங்கள் நூற்களைப் பிறர் பார்த்தலாகாது என்று கூறுவது எவ்வளவு அழகாயிருக்கிறது பாருங்கள். அவர்கள் பிறர் எங்கே தங்கள் மதத்தைத் தாக்கப்போகிறார்கள் என் அஞ்சியே அங்ஙனம் செய்துள்ளாாகள் போலும். அவர்களுடைய கிரந்தங்கள் முன்னுக்குப்பின் முறணுடையதாயிருக்கும். பிறர் குற்றங்காணுதலே உலக வழக்கு. அவர்களுக்குத் தங்கள் மதத்தின் சிறுமைகள் புலனாவதில்லை. நாம் சமணசமயவராயச்சியை வாசகர்களுக்கு விடுத்தருக்கிறோம். பட்சாபர்தமில்லாதும், துவேஷமில்லாதும் படிப்போர் உண்மையை அறிவர் என்பதில் சந்தேகமில்லை.

இச்சிறு முகவுரையுடன் இவ்வத்தியாயத்தை அறிஞர்களின் பார்வைக்கு விடுக்கிறோம்.

பனிரண்டாவது அத்தியாயம்.

சாரவாகம், பௌத்தம், சமணம், முதலிய நாஸ்திகமத விசாரணை.

வேதம், ஈசுவரன், யக்ஞம் முதலான அறநெறிகளின் நன்மை இவைகளில் நம்பிக்கையில்லாத பிரகஸ்பதி என்பான் ஒருவன் மதம் இதுவேயாகும்;

यावज्जीवं सुखं जीवेन्नास्ति मृत्योरगोचरः ।
भस्मीभूतस्य देहस्य पुनरागमनं कुतः ॥

"எப்பிராணியும், மனிதன் உள்பட, சாவில்லாததல்ல. எல்லாம் இறப்பவைகளே. ஆகவே சரீரத்தில் உயிருள்ளளவும் மனிதன் சுகமாயிருக்கட்டும். தர்மவழியில் நடப்பதென்றால் கஷ்டமாகிறதென்றும், அவ்விதம்நடக்காவிடில் மறுபிறப்பில் துன்பம் உண்டாகிறதென்றும் சொன்னால், அதற்கு விடையாகச் சாரவாகன் சொல்வான்: இறந்தபிறகு சரீரம் சாம்பலாகிறது. ஆகவே உயிருள்ளவரையில் உண்டு களித்து கொண்டிருந்த மனிதன் இறந்தபிறகு மறுபடியும் உலகத்திற்குத் திரும்பிவருகிறதில்லை. ஆகவே அவன் மனங்கொண்டவரையில் அனுபவிக்கட்டும். காலத்திற்கேற்றவாறு நடந்து கொள்ளட்டும், திரவியத்தைச்சேமிக்கட்டும், அதை வேண்டியவரையில் சிற்றின்பசுகங்களில் செலவிடட்டும். நம்முடைய பற்றெல்லாம் இவ்வுலகத்தைச்சேர்ந்ததே. இதற்கப்புறமென்பதே கிடையாது" பிருதிவி, ஜலம், அக்னி, வாயு ஆகிய நான்கும் சரீரக் கலப்பில் சேர்ந்துள்ளது. இவைகளுடைய சேர்க்கையினாலேயே உணர்ச்சியுண்டாகிறது. லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதனால் மயக்கம் உண்டாவது போலேயாம். ஜீவன், சரீரத்துடன் கூடவே உண்டாகி, சரீரநாசத்துடனேயே அதுவும் அழிந்து போகிறது. இவ்விதமிருக்கப் பாபபுண்ணியங்களுடைவ பயனை அடைவதென்பது முடியாதகாரியமேயாகும்.

तच्चैतन्यविशिष्टदेह एव आत्मा देहातिरिक्त आत्मनि प्रमाणाभावात् ॥

இச்சரீரத்தில், நான்கு பூதங்களுடைய சேர்க்கையினாலேயே ஜீவாத்மா உண்டாகி, அவைகளுடைய வியோகத்துடன் கூடவே அதுவும் நாசத்தையடைகிறது. இறந்தபிறகும் ஜீவனிருக்கிறதைப் பிரத்யக்ஷமாகக் காட்டமுடியாது. நாங்கள் கண்களால் நேரிட்டுப்பார்க்கிற பிரத்தியட்சத்திலேயே நம்புகிறோம். பிரத்தியக்ஷமில்லாமல் அனுமானம் முதலானவைகள் சித்திக்காது. ஆகவே பிரத்தியக்ஷமே முக்கியமானயடியினால் மற்றவை யெல்லாம் பயனற்றவைகளே. ஏற்றுக்கொள்ளக்கூடியவைகளல்ல. அழகுவாய்ந்த மாதைக் கட்டிக்கொள்வதினால் உண்டாகும் ஆனந்தமே மனிதப்பிரயத்தனத்தின்பெரும் பலனாகும்.

வினா:—உன்னால் கூறப்பட்ட பிருதுவி முதலானவைகளெல்லாம் ஜடப்பொருள்களே. அவைகளுடையசேர்க்கையினால் சேதனமுண்டாகாது. மனைவி

புருஷனுடைய தேகசம்பந்தத்தினுல் சரீர உற்பத்தி உண்டாவது போலவே ஆதி சிருஷ்டியில் கர்த்தாவாகிய பரமேச்வரனன்னியில், மனிதன் முதலான சரீரங்களுடைய உருவம் உண்டாகாது. மயக்கம் உண்டாவதுபோலவே உணர்ச்சி உண்டாகிற தென்பது சரியாகாது. ஏனெனில் உணர்ச்சியுள்ள பொருளுக்கே மயக்கம் உண்டாகும். சடப் பொருளுக்காகாது. சகல பொருள்களும் நாசத்தைபடைகின்றன. அதாவது கண்பார்வையிலிருந்து மறைகின்றன. அழிந்துபோகிறதில்லை. ஆகவே, புலப்படாததினுல் ஜீவனை இல்லாததாக நினைக்கக்கூடாது. சரீரத்துடன் கூடும்பொழுது ஜீவாத்மா வெளியாகிறது. அது விட்டகலும் பொழுது, சரீரம் அழிந்துபோகிறது. முன்னிருந்த சேதன சக்தியற்றும் போகிறது. இதைத்தான் பிருகதாரண்யக உபநிடதமும் கூறுகிறது. தன் பத்தினியைப் பார்த்து யாக்ஞவல்கியர் கூறுவதாவது:—

नाहं मोहं ब्रवीमि अनुच्छित्तिधर्मायमात्मेति ॥

" மைத்ரேயீ! நான் சொல்லுவது சித்தபிரமையினுலல்ல. ஆத்மா அழிவற்றது. அதனுடைய கூடுதலினுலேயே சரீரத்திற்கு உணர்ச்சியுண்டாகிறது. ஜீவன் பிரியுங்கால் சரீரமும் உணர்ச்சி யற்றுப்போகிறது. சரீரத்திலிருந்து ஆத்மா தனியாக யில்லாவிடில், அதனுடைய சேர்க்கையினுல் சேதனமும், வியோகத்தினுல் ஜடத்தனமும், முறையே ஏன் உண்டாகவேண்டும்? கண்கள் எல்லாவற்றையும் பார்த்தபொழுதிலும், தன்னைத்தானே பார்த்துக்கொள்ளுகிறதில்லை. இவ்விதமே புலன்களால் உணரும் சக்தியை அளிக்கும் ஜீவன் அவ்வுணர்ச்சியின் பாத்திரமாயிருக்க முடியாது. கண்களின் உதவியைக் கொண்டு 'குடம்' 'படம்' போன்ற பொருள்களைக் காண்கிறோம். ஊகிப்பதனுல் ஏற்படும் ஞானத்தினுல் கண்கள் இருத்தலை அறிகிறது. பார்க்கிறவன் எக்காலமும் பார்க்கிறவனுகவே யிருக்கிறுன். பார்க்கிறதாக ஆகிறதில்லை. ஆதாரமில்லாமல் ஆதேயமும (தாங்கப்படும் பொருள்) காரணமில்லாமல் காரியமும், மொத்தமில்லாமல் பகுதிகளும், கர்த்தாவன்னியில் காரியமும், எப்படி இருக்கமுடியாதோ, அப்படியே கர்த்தாவன்னியில் பிரத்தியட்சமெங்ஙனம் உண்டாகும்? அழகிய மாதைக்கட்டிக் கொள்வதினு லுண்டாகும் ஆனந்தமே மனிதப்பிரயத்தினத்தின் சிறந்தநோக்கமென்பது ஏற்கக்கூடிய உண்மையல்ல. ஏனெனின் அது கனப்பொழுதிருப்பதேயாம். இச்செய்கையினுல் *துன்பமும் உண்டாகிறது. புருஷபிரயத்தனத்தின் முடிவானநோக்கம் இதுதானென்றுஎங்ஙனம் கூறல் கூடும். சிற்றின்பங்களினுல், சுகமேற்படாதபடியினுல், துன்பமும் துக்கமுமே விளைகின்றன. துன்பங்களைத்தாண்டி இன்பங்களை யடைவதே மனிதப் பிரயத்தினத்தின் பிரதான நோக்கமென்றுல் அதுவும் பிரயோஜன மற்றதே. ஆதலால் சிற்றின்பசுகங்களே மானிடபிரயத்தனத்தின் முடிவாகாது.

சாரவாகன்:—துன்பத்துடன் கூடினதென்று (சிற்றின்ப) சுகங்களை ஒழிக்கிறவர்கள் பெரும் மடையராவார்கள். குடியானவன், பயிரை உண்டாக்கி

---

* வீரியம் குறைந்தால் காயபலங்குறைந்து பிணியும் மூப்பும் உண்டாகின்றன, துன்பங்களை விளைவிக்காத சிற்றின்பசுகமெதுவுங் கிடையாது.

தானியத்தைச்சேர்த்து உமியை எறிந்துவிடுவது போல், புத்திமான்கள் உலகத்தில் சுகத்தைக் கைப்பற்றி துக்கத்தை விட்டுவிடுவார்கள். இவ்வுலகில் கண்ணால் பார்க்கக்கூடியதும் அனுபவிக்கக்கூடியதுமான சுகங்களைத் தள்ளிவிட்டு காணாததும் கிடைக்குமென நிச்சிய மில்லாததுமான சுவர்க்கலோக சுகங்களை விரும்பி, போக்கிரிகளாலெழுதப்பட்ட வேதானுகூலமான அக்கினி ஹோத்திரம், உபாசனை, நல்ல ஒழுக்கம், ஞானகாண்டத்தினுடைய அனுஷ்டானம், முதலானவைகளைச் செய்கிறவர்கள் பெரும் அஞ்ஞானிகளேயாவார்கள். இதற்குப்பின் ஒன்றுமில்லாமலிருக்கப் பரலோகத்திலாசைவைப்பது அறிவிலிகளின் வேலையேயாகும்.

अग्निहोत्रं त्रयो वेदास्त्रिदण्डं भस्मगुण्ठनम् ।
बुद्धिपौरुषहीनानां जीविकेति बृहस्पतिः ॥

சார்வாக சமயாசாரியனான பிரகஸ்பதி, சொல்லுவதாவது:— அக்கினி ஹோத்திரம் செய்வது, முவ்வேதங்களை ஓதுவது, மூன்றுதண்டங்களைக் கொள்வது, திருபுண்டிரம் தரிப்பது, ஆகியவைகளெல்லாம் புருஷார்த்தமில்லாத மனிதர்களினால் ஜீவனோபாயத்திற்காகச் செய்யப்பட்டது. சாதுகுத்துதல் போன்ற துன்பங்களினால் விளையும் தீங்கையே நாங்கள் நரகம் எனக்கருதுகிறோம். அரசனே பரமேசுவரன் அப்பதவியைப்பெறுதலே மோக்ஷம்.

விடை:—சிற்றின்பசுகங்களிலிருப்பதையும், அச்சுகத்தினாலுண்டாகும் துன்பத்தைத் தடுத்துக் கொள்வதையும் சுவர்க்கம் என்றும் மனித பிரயத்தனத்தின் முடிவென்றும் கருதுவது மதியீனமே யாகும். அக்கினஹோத்திரம் முதலான யக்ஞங்களினால் வாயு, மழை, ஜலம் ஆகியவைகள், சுத்தமடைந்து அதனால், ஆரோக்கியமுண்டாகி, தர்மார்த்த காமமோக்ஷம் அடைதலை இலகுவாக்குகிறது. இதையறியாமல், இறைவனையும் வேத தர்மத்தையும் தூஷிப்பது பாதகர்களுடைய வேலையாகும். திருபுண்டிரம் தரித்து திரிதண்டம் ஏந்துவதை மறுப்பது சரியானதே. முள்ளைக்கொண்டு குத்திக்கொள்வதினாலுண்டாகும் வலி நரகமாகுமேயானால் அதைவிட பெருஞ்சங்கடங்களையுண்டுபண்ணும் பிணிகள் ஏன் நரகமாகாது? பெருமையுடன் கூடி குடிமக்களைக் காப்பாற்றுகிற அரசனை அவ்விதம் நினைப்பது ஏற்றதேயாகும். ஆனால்அநியாயஞ்செய்யும் ராஜனைப்பரமேசுவரனாகநினைக்கும்உன்னை யொத்த மடையனும் உண்டோ? சரீரநாசமே சுவர்க்கமென்றால் கழுதை நாய்களாகிய விலங்குகளுக்கும் உனக்கும் உள்ளபேதம் என்ன?

अग्निरुष्णो जलं शीतं शीतस्पर्शस्तथाऽनिलः ।
केनेदं चित्रितं तस्मात्स्वभावात्तद्व्यवस्थितिः ॥

சாரவாகர்கள், அபாணகர்கள், பௌத்தர்கள், சமணர்கள் ஆகியவர்கள் உலக சிருஷ்டியை ஒரே விதமாகக் கருதுகிறார்கள். சிருஷ்டிகர்த்தா எவரும் கிடையாது. அவைகளிலுள்ள குணங்களின் சிறப்பினால் பொருள்களெல்லாம் ஒன்றாகச் சேருகிறது.

न स्वर्गो नाऽपवर्गो वा नैवात्मा पारलौकिकः ।
नैव वर्णाश्रमादीनां क्रियाश्च फलदायिकाः ॥

2. சுவர்க்கமுங்கிடையாது, நரகமுங்கிடையாது. இப்பிறப்பில் செய்யும் கர்மங்களுக்கேற்க பாபபுண்ணியங்களை அனுபவிக்க ஜீவன் என்று எதுவுமில்லை. வருணாச்சிரமவிதிகளைச் செய்வதற்கேற்றபலன்கள் ஒன்றுங்கிடையாது.*

पशुश्चेन्निहतः स्वर्गं ज्योतिष्टोमे गमिष्यति ।
स्वपिता यजमानेन तत्र कस्मान्न हिंस्यते ॥

3. யாகத்தில் ஆகுதியாக அளிக்கப்பட்ட விலங்கு சுவர்க்கத்தை யடையும்பொழுது, எஜமானன் (கர்த்தா) ஏன் தன் பெற்றோர்களை ஆகுதி செய்து சுவர்க்கத்தை அடையச்செய்யலாகாது?

मृतानामपि जन्तूनां श्राद्धं चेत्तृप्तिकारणम् ।
गच्छतामिह जन्तूनां व्यर्थं पाथेयकल्पनम् ॥

4. சிராத்தமும், தர்ப்பணமும் இறந்தவர்களுக்குத் திருப்தியையளிக்கும் பொழுது, தூரதேசம் செல்லும் பிரயாணிகள், வழிக்குச் சாப்பாடு; முதலானவைகளை எடுத்துச் செல்வானேன்? இறந்துபோனவர்களின் பெயரினால் அர்ப்பணம் செய்யப்படும் பொருள்கள், அவர்களைச் சேருமேயானால், வீட்டிலிருக்கும் உற்றார் உறவினர்களால் அளிக்கப்படும், பொருள்கள் அயல் நாட்டிற்குச்சென்றிருக்கும் மனிதனை ஏன் அடையாது? அயல் நாட்டிற்கே இவ்விதம் ஒன்றையும் வழிப்பிரயாணியுடைய சௌகரியத்திற்காக, அனுப்பமுடியாமலிருக்கச் சுவர்க்கத்திற்கு அனுப்புவது எவ்வளவு கஷ்டமாகாது?

स्वर्गस्थिता यदा तृप्तिं गच्छेयुस्तत्र दानतः ।
प्रासादस्योपरिस्थानामत्र कस्मान्न दीयते ॥

5. இவ்வுலகில் தானஞ்செய்வதினால் சுவர்க்கத்திலிருப்பவன் திருப்தியடைவானேயானால் கீழேயிருந்து கொடுக்கும் அன்னபானாதிகளினால் வீட்டின் உப்பரிகையின் மேலிருக்கும் பசியுடன் கூடினவன் ஏன் திருப்தியடைகிறதில்லை?

यावज्जीवेत्सुखं जीवेदृणं कृत्वा घृतं पिबेत् ।
भस्मीभूतस्य देहस्य पुनरागमनं कुतः ॥

6. ஆதலால் உள்ளவரையில் சுகத்துடனிருக்க வேண்டும். பொருளில்லாமல்போனால் கடன்வாங்கிக்கொள்ளட்டும். கடனைத்திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசிய மில்லை. ஏனெனில் கடனைப்பெற்றுக்கொண்ட மனிதனுடைய அதே சரீரமும், ஜீவனும், சேர்ந்து மறுபடியும் இவ்வுலகில் வருகிறதில்லை. அப்பொழுது கடனைத்திருப்பி கேழ்ப்பவர் யார்? கொடுப்பவர் யார்?

* ஜீவாத்மாவிலும், மறு உலகத்திலும் சாரவாகர்களுக்கு நம்பிக்கை கிடையாது: புத்தர்களுக்கும் சமணர்களுக்கும் உண்டு. ஏறக்குறைய எல்லோருடைய கொள்கைகளும் ஒன்றானதே.

यति गच्छेत्परं लोकं देहादेष विनिर्गतः ।
कस्माद्भूयो न चायाति बन्धुस्नेहसमाकुलः ॥

7. இறந்தபிறகு சரீரத்தைவிட்டு ஜீவன் மறு உலகத்தை அடைகிற தென்பது பொய்யே. இவ்விதமாகுமேயானால் குடும்ப ஆசை மேலிட்டு ஏன் அது மறுபடியும் வீட்டிற்குத்திரும்பிவருகிறதில்லை ?

ततश्च जीवनौ ब्रह्मणैर्विहितास्त्विह ।
मृतानां प्रेतकार्याणि न त्वन्यद्विद्यते कचित् ॥

8. ஆகவே இதெல்லாம் அவர்களுடைய ஜீவனோபாயத்திற்காகப் பிராம்மணர்களால் கற்பிக்கப்பட்டவைகளாகும். இறந்த பத்தாம் தினத்தன்று கொடுக்கும் பிண்டங்களும், அதையொட்டின உத்தரகிரியைகளும், சுயநலத்திற்காகவே கண்டுபிடிக்கப்பட்டவை.

त्रयो वेदस्य कर्त्तारो भण्डधूर्तनिशाचराः ।
जर्फरीतुर्फरीत्यादि पाण्डितानां वचः स्मृतम् ॥

9. வேதங்களை ஆக்கியவர்கள் கோமாளிகளும், பாதகர்களும் இராக்ஷசர்களுமேயாவார்கள். ஜர்பரி துர்பரி போன்ற பதங்களை உபயோகித்தலே பண்டிதர்களுடைய பாதகக்கொள்கைகளின் அடையாளமாகாதா ?

अश्वस्यात्र हि शिश्नन्तु पत्नीग्राह्यं प्रकीर्त्तितम् ।
भण्डैस्तद्वत्परं चैव ग्राह्यजातं प्रकीर्त्तितम् ॥

கவனியுங்கள் போக்கிரிகள் சொல்வதாவது:—

10. சடங்குகளைச்செய்யும் எஜமானனின் மனைவி குதிரையுடன் சம்யோகம் செய்யவேண்டுமென்றும், மணவாட்டியிடம் சிற்நின்பப்பற்றுள்ளவனுயிருக்க வேண்டுமென்றும் போக்கிரிகளைத்தவிர வேறு யார் சொல்லுவார்கள்.

मांसानां खादनं तद्वन्निशाचरलमीरितम् ॥

11. மாம்சாகாரம் செய் என்று சொல்லுகிற வேதங்களின் பாகம் இராக்ஷசர்களால் செய்யப்பட்டது.

விடை:—1. சேதன பரமேஸ்வரனன்னியில், ஜடப்பொருள்கள் ஏற்றபடி தானுகவே கலந்து வெளியாகாது. தன்னிடத்திலுள்ள சுயமான குண விசேஷத்தினல், இவ்வித மாகுமென்றால், சூரிய சந்திர நக்ஷத்திர முதலிய கிரகங்களுடையகூட்டம் வேறென்று ஏன் தானுகவெ உண்டாகவில்லை? இன்பத்தில் அனுபவிப்பது சுவர்க்கமும் துன்பத்தில் துயரப்படுவது நரகமு மாகும். சுகதுக்கங்களை அனுபவித்துக்கொண்டு இப்பொழுது ஜீவனிருப்பது போலவே மறு பிறப்பிலும் இருக்கும். சத்தியம்பேசுவதும் வர்ணச் சிரமதர்மத்திற்கேற்ப உபகாரம்செய்வதும் கூடவா பயனற்றுப் போய்விடும்?

3, 4, 5. விலங்குகளை வதைத்து யாகஞ்செய்வதற்கு வேதம், சாஸ்திரம் ஆகியவைகளில் ஆதாரங்கிடையாது. இறந்தவர்களுக்குச் சிரார்த்தம்

தர்ப்பணம் ஆகியவைகள் செய்யவேண்டுமென்பது புரோகிதர்களுடைய கட்டுரையே. ஏனெனில் வேதங்கள் முதலான சத்திய சாத்திரங்களுக்கு இது மாறாகவும், பாகவதம் முதலானவைகளைப்போன்ற புராணங்களுக்கு ஏற்றதாகவுமே இருக்கின்றன. ஆகவே நீங்கள் இவைகளை மறுக்கிறவிஷயத்தில் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை.

6. இருப்பது இல்லாமல்போகாது. விளங்கும் ஜீவன் அபாவமாகாது. சரீரம் சாம்பலாகிறதே தவிர ஜீவன் ஆகிறதில்லை. அது வேறு சரீரத்தை அடைகிறது. ஆதலால் வாங்கின கடனைத்திருப்பிக்கொடுக்காதவன் பெரும் பாபியாகிறான். மறுபிறப்பில் துக்கரூபமான நரகத்தையும் அடைகிறான்.

7. சரீரத்தை விட்டகன்ற ஜீவன்வேறு இடத்தையடைந்து மறு சரீரத்தைப்பெறுகிறது. பூர்வஜன்மம், குடும்பம் ஆகிய இவைகளுடைய ஞானம் அற்றுப் போகிறது. ஆகவே பழைய குடும்பத்திலேயே வருகிறதென்பது ஆகாதகாரியம். 8. உத்தரகிரிவை முதலியவைகள் சுய ஜீவனத்திற்காகப் பிராம்மணர்களால் செய்யப்பட்டிருந்தும், இவைகள் வேத விரோதமானபடியினால் மறுக்கத் தகுந்ததே. 9. சாரவாகர் முதலானவர்கள் வேதாதி சத்திய சாத்திரங்களைப்படித்தாவது படிக்கக்கேட்டாவது இருந்தால், கோமாளிகள், பாதகர்கள். இராக்ஷசர்கள் ஆகியவர்களால் அவைகளாக்கப்பட்டதென்று தூஷிக்கமாட்டார்கள். மகீதரரைப்போன்ற உரையாசிரியர்கள், கோமாளிகள், பாதகர்கள், இராக்ஷசர்களென்பதில் சந்தேகமில்லை. அவர்களுடைய போக்கிரித்தனத்தினாலேயே வேதங்களின் பேரில் பழிசுமத்தப்பட்டது. வேதங்களைத் தக்க ஆசிரியர்களுடன் கூடி சாரவாகர்கள், அபாணகர்கள், பௌத்தர்கள், சமணர்கள் ஆகியவர்கள், படிக்காமலிருந்தது வருந்தத்தக்க தேயாகும். இதனாலேயே புத்திமழுங்கிப்போய் வேதங்களைப்பற்றி மதியீனமாகப் பேத்த வாரம்பித்தார்கள். தீயவாமமார்க்கத்தவர்களால் எழுதப்பட்ட ஆதாரமில்லாததும், முழுப்பொய்யாயும்கேட்டுமிருக்கிற உரைகளைப்படித்து அறிவில்லாத ஆழ்ந்த பள்ளத்தாக்கில் விழுகிறார்கள். 10. சடங்களுக்கு அதிகாரியான எஜமானனின் மனைவி, குதிரையுடன்புணர்ச்சி செய்யவேண்டும். அவனுடைய பெண்களுடன் அடாதவார்த்தைகளாட வேண்டும், என்றபழக்க வழக்கங்கள் வாமமார்க்கத்தவர்கள் தவிரவேறு எவரானும் ஏற்கப்படமாட்டாதென்பதை எச்சாதாரண மனிதனும்அறிவான். இழிவான வாமமார்க்கத்தவர்களைத்தவிர வேறுயார்தான், வேதார்த்தங்களுக்கு விரோதமானதும், அருவெறுப்பானதும் ஒவ்வாததுமான இவ்வுரைகளை ஏற்பார்கள்? சாரவகர் முதலானவர்கள், யோசனையற்ற வேதங்களுடைய பழிதூற்றுகைக்கு ஆளானது மிகவும் வருந்தத்தக்கதேயாம். கொஞ்சமாவது யோசனை செய்து பார்த்திருக்கவேண்டும். சத்தியாசத்தியத்தை விசாரித்து, சத்தியத்தைப் போற்றி அசத்தியத்தை கண்டிக்கப் போதியவித்தை அவர்களுக்கு இல்லாமல் போனதிற்காக அனுதாபப் படுகிறோம்.

11. மாம்சாகாரம் வேதானுகூலமானதல்ல. வேதவாக்கியங்களைத் திருப்பி தங்களுக்கு வேண்டிய ஆதாரவை அளிக்கதக்கவாறு அவைகளுக்கு உரை எழு

தின வாமமார்க்கி ஆசிரியர்களை இராக்ஷசர்களென்றே அழைக்கவேண்டும். வாமமார்க்கி உரையாசிரியர்களும், வேதங்களைத் தக்கவாறுபடித்தோ அல்லது படிக்கக்கேழ்க்காமலோ, இருக்கிறவர்கள். அவர்கள் செய்த பாபத்திற்காக அனுபவிப்பார்கள். வேதங்களை எதிர்த்தவர்கள், இப்பொழுதும் எதிர்க்கிறார்கள். இன்னமும் எதிர்ப்பார்கள். அஞ்ஞான இருளிலகப்பட்டுக்கொண்டு இன்பத்திற் குப்பதிலாக துன்பத்தை அனுபவிப்பார்களென்பது திண்ணம். ஆகவே மனிதர்களெல்லோரும் வேதானுகூலமாய் நடந்து கொள்ளவேண்டும். மதுபானம், மாம்சாகாரம் பரஸ்திரீகமனம், ஆகிய தீயகாரியங்களைச் செய்வதற்காகவே வேதங்களில் கைகலந்து வாமமார்க்கிகள் அதைத் தூஷிக்கவாரம்பித்தார்கள். வேதானுகூலமாய் நடக்கிறோம் எனப் பெயர்படைத்து, இவ்வளவு அடாதகாரியங்களைச்செய்கிறதைக்கண்ட சாரவாகன், பௌத்தன், சமணன், ஆகியவர்கள் வேதங்களைத் தூற்றவாரம்பித்தார்கள். அதிலிருந்து தனியானதும் வேதவிரோத மானதும், ஈசுவரனில்லை என்னும்படியானதுமான நாஸ்திக மதம் ஒன்றையும் பரவச்செய்தார்கள். சாரவகர்முதலாயினர் வேதங்களுடைய மூலாதாரங்களைபடித்திருந்தால் பொய்யுரைகளை நம்பி, சத்திய வேத சமயத்திலிருந்து விலகியிருக்கமாட்டார்கள். இது வருந்தத்தக்கதே. நாசம் வரும்பொழுது புத்தியும் மழுங்கும். சாரவாகம் முதலானவைகளுக்குள்ள கொள்கைகளின் வேற்றுமைகளைச்சொல்வோம்.

1. சரீரப்பிறப்புடன் ஜீவனுடைய உற்பத்தியையும் அதனுடைய அழிவுடன் ஜீவனுடைய அழிவையும் சாரவாகர்கள் நம்புகிறார்கள்.

2. மறுபிறப்பு, விண்ணுலகம் இவைகளில் நம்பிக்கை அற்றவர்கள்.

3. பிரத்தியக்ஷப பிரமாணத்தைத்தவிர வேறு எதையும் தள்ளிவிடுகிறார்கள். வார்த்தையாடுவதிலேயும்,வாதாடுவதிலேயும் ஒருவன் ஆனந்தமுள்ளவன் என்பதே சார்வாக வார்த்தையின் பொருளாகும். பௌத்தர்களும், சமணர்களும், நாலுவித பிரத்தியக்ஷப்பிரமாணம் அநாதிஜீவன் மறுபிறப்பு,விண்ணுலகம், முக்தி ஆகியவைகளில் நம்புகிறார்கள். சாரவாகர்களுக்கும் சமணர்களுக்குமுள்ள வேற்றுமைகள் இதுவேயாகும்.

அவர்களுக்குள்ள ஒற்றுமைவிஷயங்களாவன.

(1) நாஸ்திக நம்பிக்கை (2) வேதம், இறைவன் இவைகளைத்தூற்றல் (3) பிறமதத் துவேஷம் (4) பின் கூறப்படும் ஆறுயதனங்களில் (கர்மங்களில்) நம்பிக்கை (5) ஆதிசாரணத்தில் அவநம்பிக்கை. இவ்வாறுசாரவகர்களுடைய வழியைச் சுருங்கச் சொன்னோம். இனி பௌத்தர்களுடையதைப்பற்றி சிறிது சொல்லுவோம்.

कार्यकारणभावाद्वा स्वभावाद्वानियामकात् ।
अविनाभावनियमो दर्शनान्तरदर्शनात् ॥

காரணத்திற்கும் காரியத்திற்கும் இணைவிடாத சம்பந்தமுண்டென்று பௌத்தர்கள் நம்புகிறார்கள். அதாவது காரணம் காரியத்தையும் புகட்டுகிறதாம். இவ்விதப்பிரத்தியட்ச விளக்கத்திஞல் அனுமானம் உண்டாகிறது. இவ்விதமன்

னியில் உலகவியவகாரம் சரிவர நடைபெருது" ஆகையினுல் பௌத்தம் அனுமானத்தையே பெரிதுங்கருதுகிறது. இதனுலேயே சாரவாகத்திலிருந்து பிரிந்துமிருக்கிறது. பௌத்தர்களில் நான்கு பிரிவுகள் உண்டு.

(1) மாத்தியமிக (2) யோகசார.

(3) சௌதந்திரிகா (4) வைபாஷிகா.

புத்தியாகிற பகுத்தறிவைக்கொண்டே நடக்கிறவன், என்பதே பௌத்தவார்த்தையின் பொருளாகும். அதாவது புத்திக்கு ஏற்றதையே எடுத்துக் கொண்டு ஏற்காததைத் தள்ளிவிடுவது.

(1) மாத்தியமிக:—எல்லாம் சூன்யம். அதாவது சூன்யத்திலிருந்தேசகல பொருள்களும் உண்டாகின்றன. முடிவில் சூன்யமாகவும் போய்விடும். நாம் காண்கிறது கேழ்க்கிறதெல்லாம் நம்முடைய உணர்ச்சிக் கருவிகள் அறிகிற வரையிலுமே. அவைகள் அறியாமலிருக்கும் பொழுது உணரும்பொரு ளும் சூன்யமாகிறது. உதாரணமாகச் செய்யாததற்கு முன்னுல் குடங்கிடை யாது. உடைந்தபின்னரும் அது இல்லாமலும் போகிறது. நாம் உணருகிற வரையிலேயே அது விளங்குகிறது. ஒரு பொருளாகிறது. ஆனுல்வேறு பொருள்களில் நம்முடைய கவனம் செலுத்தப்படும்பொழுது எல்லையை விட்டு (ஆகையினுல் சூன்யமாகிறது) அகலுகிறது, ஆதலால் சூன்யம் ஒரே தத்துவமே.

2. யோகசார:—மனித உணர்ச்சியைமீறினது எதுவுமில்லை. அதாவது பொருள்களெல்லாம் எண்ணத்திலேயே இருக்கின்றன. உதாரணமாக பானை இருக்கிறதென்கிற ஞானம் ஆத்மாவிலேயே இருக்கின்றன. ஆகையினுலேயே ஒரு குறித்த பொருளைப் பானை என்று அழைக்கிருர்கள். எண்ணத்தில் தோற்றமில்லாமல் போனுல் எப்படி வார்த்தையாலதைக்கூறமுடியும்?

3. சௌதந்திரிக:— உலகிலுள்ள சகல பொருள்களுடைய இருப்பும் அனுமானத்தினுலேயே புலனுகின்றன. பிரத்யக்ஷமாய் சாங்கோபாங்கமாய் தெரியக்கூடியது ஒன்றுமில்லை ? தனித்தனி அம்சங்கள் மாத்திரம் பிரத்ய க்ஷத்தினுல் விளங்கின பொழுதிலும்,முழுப்பொருளும் அனுமானத்தினுலேயே சித்தியாகின்றன. இதுவே இவர்களுடைய கொள்கையாகும்.

4. வைபாஷிக:—பிரத்தியக்ஷப்பிரமாணத்தினுல் பொருளொன்று புலனு குங்கால், மனதில அப்பொருளுடைய யர்தொரு ஞானமும் ஏற்படுகிறதில்லை. உதாரணமாக நீலக்குடம் ஒன்றிருக்கிறது என்று ஒருவன் சொல்லுங்கால் பானைரூபத்திலிருக்கிற நீலப்பொருளொன்று அவனுடைய புரத்திற்கு வெளியி லிருக்கிறதென்பதாகும். இவர்களுடைய ஆசாரிய புருஷர் ஒருவரேயான போதிலும் சிஷ்யர்களின் புத்தி வித்தியாசங்களினுல் நான்கு பிளவுகளேற் பட்டது. உதாரணமாகச் சூரியாஸ்தமனத்துடன் பெருமடையன் விலைமாதர் களை அடைகிருன். கற்றுணர்ந்தவனே, சத்கர்மங்களைச் செய்யவாரம்பிக்கி ருன். காலமும் சமயமும் ஒன்றே. ஆனுல் தங்கள் தங்களுடைய புத் திக்கேற்றவாறு இருவரும் தங்கள் தங்களுடைய காரியங்களைச்செய்கிருர்கள்.

மத்தியமீக யாவற்றையும் கணப்பொழு திருப்பதாகவே நினைக்கிறது. அதாவது புத்தி க்ஷணபங்குரமானபடியினால் முதற்கணத்தி லறிந்த மாதிரியே ஒரு பொருள் அடுத்த தருணத்திருப்ப தில்லை. ஆகவே எல்லாம் கணப்பொழு திருப்பவைகளே. யோகாசாரம் எல்லா அனுபவங்களும் துன்பத்தில் முடிகிறதென்று போதிக்கிறது. ஏனெனில் இஷ்டபோகங்களினால் திருப்தியுண்டாகிற தில்லை. ஒன்றை யடைந்த பின்னர் மற்றொன்றை யடைய வேண்டுமென்று ஆசையுண்டாகிறது. சகல பொருள்களும் அதனுடைய இலக்ஷணங்களினால் விளங்குகிறது. பசுவினுடைய சின்னங்களினால் பசுவையும் குதிரையுடையதினால் குதிரையையும் தெரிந்துகொள்ளுகிறோம். இதுவே சௌதந்திரிகா போதிப்பதாகும். வைபாஷிகம் சூன்யம் ஒன்றையே ஏகபொருளாகக் கருதுகிறது. இதில் மாத்தியமீகத்திற்கும் வைபாஷியத்திற்கும் ஒற்றுமையுண்டு. ஆகவே பௌத்தர்களுள்ளேயே கக்ஷிபேதங்கள் பல இருக்கின்றன. முக்கியமானவைகள் இன்னான்கே யாகும்.

விடை:—எல்லாம் சூன்யமானால் சூன்யத்தை அறிகிறவர் சூன்யனாக மாட்டார். சூன்யமாயிருந்தால் சூன்யத்தை (தான் சூன்யமானபடியினால்) அறியமாட்டார். ஆதலால் சூன்யத்தை அறிகிறவர், அறியப்படும் வஸ்து ஆகிய இரண்டு பொருள்களும் விளங்க வேண்டுவது அவசியம். ஆத்மஞ்ஞானந்தவிர மீதியெல்லாம் சூன்யமே என்று யோகாசாரர்கள் சொல்லும் வண்ணம், மலையைப் போன்ற பெரிய உருவங்கள் உள்ளே யிருக்கவேண்டுமே. ஆனால் இது முடியாதகாரியம். ஹிருதயத்தில் மலையையொத்த பெரும் உருவம் எங்கனம் இருத்தல் கூடும்? மலை வெளியில் விளங்குகிறது. அதன் ஞானம் உள்ளத்திலிருக்கிறது. பிரத்தியக்ஷமாக எதுவும் தெரியவருகிறதில்லை என்று சௌதந்திரிகா கூறுகிறது. அவ்விதமிருக்குமேயானால் அர்த்தம்பிக்கையை வெளிப்படுத்துவதும், படுத்துகிறவனும் அனுமானத்தினாலேயே விளங்க வேண்டும். பிரத்யக்ஷமில்லாமலிருந்தால் "இது ஒரு பானை" என்பது சரியாகாது, 'இது பானையின் ஒரு பாகம்" என வேண்டும். ஆனால் ஒரு பாகத்தை மாத்திரம் தனியாகப்பானை என அழைத்தல் பொருந்தாது. முழுப் பொருளுமே பானையாகும். "இது ஒரு பானை" என்பது பிரத்தியக்ஷமாகும். அனுமானமாகாது. ஏனெனில் அதனுடைய பகுதிகளில் மொத்தமும் பரவியிருக்கிறது. ஆகவே பிரத்தியக்ஷமாக் மொத்தத்தையும் அறிவதினால் அதன்பகுதிகளையும் அதேவிதமாக அறிந்ததாகச் சொல்லலாம். அதாவது பகுதிகள் ஒன்று சேர்ந்தே பானையாகிறது என அறிகிறோம். வெளிப்பொருள்களைப் பிரத்தியக்ஷமாகக்காணும்பொழுது அதனுடைய அறிவு உள்ளத்தில் உண்டாகிறதில்லை, யென்று வைபாஷிகர்கள் சொல்லுவது சரியாகாது. அறிகிறவரும், அறிவும் இருந்தாலொழிய பிரத்யக்ஷமாவது அசாத்தியம். பிரத்யக்ஷமாகும்பொருள் புறத்திலிருந்த பொழுதிலும் அகத்தறிவு இருந்தாலொழிய அதனுடைய உணர்ச்சி உண்டாகாது. மேற்சொன்னபௌத்தர்களுள் நான்கு பிரிவினர்களுடைய கொள்கைகளைச்சற்று கவனிப்போம்:—

(1)பொருளும் அதனுடைய அறிவும் க்ஷணபங்குரமானதாயிருந்தால், இறந்த

கால நிகழ்ச்சிகளுடைய அறிவு உண்டாகாது. ஆனால் நாம் பார்த்ததும் கேட்டதும் ஞாபகத்திலிருக்கின்றன. எனவே அறிவு க்ஷண பங்குரம் என்பது தப்பானது.

2. துக்கம் துன்பம் ஆகியவைகளைத் தவிர வேறொன்றும்இப்பிரபஞ்சத்தி லில்லை யென்பதும் கொஞ்சங்கூட இன்பங்கிடையாயென்பதும் சரியல்ல.இன் பத்திலிருந்து துன்பத்தை வேறாக எண்ணமுடியாது. இரவின்முறையிலேயே பகலையும் பகலின் முறையிலேயே இரவையும் அறிவதுபோலாம்.

3. பொருள்களில் இலக்ஷணங்கள் விளங்குகிறதென்பது தப்பு. சிலசமயங்களில் விளங்குகிறது. வேறுசிலசமயங்களில் விளங்குகிறதில்லை. உதாரணமாக, வெளிச்சம் எக்காலமும் கண்ணால் காணப்படுகின்றது. ஆகவேபின் சொன்னது முன்சொன்னதின் இலக்ஷணமும், வெளிச்சமும் இலக்ஷியமும் (லக்ஷத்தினல் அறியப்படும் பொருள்) ஆகும். இலக்ஷணமாகிற கண், இலக்ஷியமாகிறவெளிச்சத்திலிருந்து தனியானது. பானையின்நிறத்திற்கும் கண்களுக்குமுள்ள முறையைக் கொண்டே இதை?விளக்கலாம். (இலக்ஷியங்களில் இலக்ஷணம் இருக்கலா மென்பதைக் காட்டுவோம். முகருதலாகிய உணர்ச்சியை எழுப்புவது பிருதிவியின் இலக்ஷணமாகும். அது பிருதிவி யுடனேயே இருக்கிறது. அதிலிருந்து வேறாக்கமுடியாது. எனவே இலக்ஷியங்களிலேயே இலக்ஷணங்களிருக்கத் தேவையில்லை.

4. சூன்யத்தையே ஒரு பொருளென்பதை முன்னரே பரிசோதனை செய்து தப்பென்று காண்பித் துள்ளோம்.

सर्वस्य संसारस्यं दुःखात्मजत्वं सर्वतीर्थंकरसंगतम् ॥

பௌத்தர்கள் எத்தீர்த்தங்காரர்களை மதிக்கிறார்களோ அவர்களையே சமணர்களும் மதிக்கிறார்கள். ஆகவே இவ்விரண்டும் ஏற்றசமயமாகும். மேற் சொன்ன நால்வித நம்பிக்கைகளினாலேயே சகல (உலக) ஆசைகளிலிருந் தும் மீண்டு சூன்யரூபமான நிர்வாணத்தை அடையலாமென உறுதிகொண்டிருக்கிறார்கள். இதுவே அவர்களுடைய முக்தியுமாகும். யோகாசார வழியைச் சீடர்களுக்குப்போதித்து, குருவார்த்தைகளைப்பிரமாணமாகக் கொள்ள வேண்டுமென்பார்கள், பூர்வம், ஆசை இவைகளினாய் அநாதியான புத்தி மூடப் பட்டு பல உருவங்களையடைவதாகக் காணப்படுகிறது.

அவைகளாவன:—

रूपविज्ञानवेदनासंज्ञासंस्कारसंज्ञकः ॥

(1) கண்முதலான இந்திரியங்களினால் வர்ணம் முதலான பொருள்களை அறிவது ரூபஸ்கந்தம். (2) மானஸீக விஷயங்களின் ஊக்கத்தினுடைய ஞானமே விஞ்ஞானஸ்கந்தம். (3) ரூபஸ்கந்தம், விஞ்ஞானஸ்கந்தம் ஆகியவைகளிலிருந்து விளையும் இன்பதுன்பங்களை உணருவதே வேதனாஸ்கந்தம். (4) சொற்களின்'சேர்க்கையில் நம்பிக்கை அதாவது பசு என்றவுடன் அதை குறிக்கிறவையுடன் சேர்த்துக்கொள்வதே சஞ்ஞானஸ்கந்தம். (5) ராகத்

துவேஷம் முதலான கிலேசம், பசி தாகம், அதிக ஆசை, வெறுப்பு, வீண் பெருமை, நல்லகாரியம், தீயகாரியம், முதலிய உபக்கிலேசங்கள், இவைகளே சமஸ்காரஸ்கந்தங்களாம். பௌத்தர்கள் உலகமுழுவதையும் துக்கரூபமென்றும், அதற்கிருப்பிடமென்றும், சாதகமான விடமென்றும் அதிலிருந்து மீறக்கஷ்டப்படவேண்டுமென்றும் நம்புகிறார்கள். சாவகாரர்களுக்கு இதுவேபெரும் முக்தியாகும். பௌத்தர்கள் அனுமானத்தைத்தாங்கி ஜீவனைத் தள்ளுகிறார்கள்.

देशना लोकनाथानां सत्वाशयवशानुगाः ।
भिद्यन्ते बहुधा लोके उपायैर्बहुभिः किल ॥

பொருள்களின் தன்மைகளையறிந்து அவைகளுடைய பேதா பேதங்களை எடுத்து உபதேசஞ்செய்து வழியைக்காண்பித்துக் கொடுத்த, ஞானி, ஜீவன் முக்தன் முதலான தீர்த்தங்கார்களுடைய உபதேசங்களில் ஒவ்வொரு புத்தனும் நம்பவேண்டும்.

गम्भीरोत्तानभेदेन कचिच्चोभयलक्षणः ।
भिन्ना हि दशने भिन्न शून्यताद्वयलक्षणा ॥

ஆழ்ந்தகருத்து, அடங்கின பொருள், ஆகியவைகளுடன் கூடினதும், இதற்குமுன் வெளிப்படையாகவோ சிலேடையாகவோ பலகுருமார்களால் உபதேசஞ் செப்யப்பட்டதுமான சூன்யம் முதலான விஷயங்களையும் நம்பவேண்டும்

अर्थानुपार्ज्य बहुशो द्वादशायतनानि वै ।
परितः पूजनीयानि किन्यैरिह पूजितैः ॥

துவாதசயதன பூஜையொன்றே மோக்ஷத்தை யளிக்கும். இதற்காகத் திரவியம் முதலியவைகளைச் சேமித்துப் பன்னிரண்டு இடங்களையுண்டாக்கி ஏற்றவாறு பூஜைசெய்யவேண்டும். பிறவற்றை வணங்கி பூஜைசெய்வதில் பிரயோஜனங் கிடையாது. இதுவே பௌத்தர்களுடைய மதமாகும்.

ज्ञानेन्द्रियाणि पैचवं तथा कर्मेन्द्रियाणि च ।
मनो बुद्धिरिति प्रोक्तं द्वादशायतनं बुधैः ॥

காது, கண், மூக்கு, வாய் தோல் முதலிய பஞ்ச ஞான இந்திரியங்களையும், பேசுதல், ஊர்தல், இறத்தல், ஜனித்தல் முதலிய கர்ம இந்திரியங்களையும் புத்தி, மனது இவைகளையும பூஜைசெய்தல. அதாவது மேற்கூறிய இந்திரியங்களை ஆனந்தம் பெறும் வகையில் பிரயோஜனப்படுத்தலே. இதைத்தான் அச்சார்பார் துவாதசயதன பூஜையென்று கூறுகிறார்கள்.

விடை:—உலகம் துக்கரூபமானால் ஜீவப்பிராணி எதுவும் அதிலிருக்க விரும்பாதே. ஆனால் உலகவஸ்துக்களில் அவைகள் ஆசைப்படுவதை நாம் அனுபவத்தினால் அறிகிறோம். ஆகவே உலகத்தில் துக்கமும் துன்பமும் தவிரவேறொன்றும் இல்லையென்பது உண்மையாகாது. உலகில் இன்பதுன்பம் இரண்டும் உண்டு. பௌத்தர்கள் இச்சித்தாந்தத்தில் நம்பும்பொழுது அன்

னுகாரம் முதலியவைகளைப் புசித்து, சுகவாழ்வைத் தேடி, பிணிக்கு மருந்து
முதலானவைகளை, உட்கொண்டு என் சரீர ரக்ஷணத்திற்காகப் பாடுபட வேண்
டும். இவைகளெல்லாம் சுகத்தையளிக்கிறதென்று நம்புவானேன். இவை
களைச் செய்கிறோம். செய்தும் துக்கத்தையும் துன்பத்தையுமே அவை
அளிக்கின்றனவென நம்புகிறோம் என்று சொல்லுவார்களேயானால் அது
பொருந்தாது. ஏனெனில் ஜீவன் தனக்கு ஏற்றதையே எடுத்துக்கொள்ளும்
வேண்டாததைத்தள்ளி விடும். தர்மப்பழக்கம், நல்லறிவு, நல்லாருடன் பழகு
தல், ஆகியவைகளெல்லாம் சுகத்தைக்கொடுக்கின்றன. எவ்வறிஞனும் இவை
களிலிருந்து துக்கமும் துன்பமும் விளைகிறதெனச்சொல்லான். பௌத்தர்களே
கூறத் துணிவார்கள். ஸ்கந்தங்கள் ஐந்தும் பூர்த்தியானதாகவில்லை.
ஏனெனில் ஸ்கந்தங்களை விரித்துக்கொண்டேபோனால் அவை எங்கு முடியு
மென்று எவரும்கூறமுடியாது. அநாதியாயும் தனித்தலைவனுயுமிருக்கிற பரமா
த்மாவை மதிக்காமல் தீர்த்தங்கரர்களை உபதேசகர்களாகவும் லோகநாயகர்க
ளாகவும் நம்புகிறார்களே. தீர்த்தங்கரர்களுக்கு உபதேசித்தவர் யாவர்?
தானுகவே அறிந்து கொண்டார்களென்றால் காரணமில்லாமல் காரியமாகாதா
கையினால் அது ஒவ்வாது. அவர்கள் கூறுவதையே சரியெனக்கொண்டா
லும் படிக்காமலும், படித்துக் கேட்காமலும், ஞானிகளுடைய சேர்க்கை
சங்கமில்லாமலும், இப்பொழுது பௌத்தர்கள் ஏன் வித்வான்களாகக்கூடாது?
ஆதாரமற்று புத்திக்கு விரோதமான அவர்களுடையதருக்கமும், நோய் கண்
டவன் பிதற்றுவதுபோல், பொருளற்றவைகளேயாகும். உள்ள பொருள்களி
னுடைய சூன்யரூபத்தை பௌத்தர்கள் நம்புவார்களேயானால் சரியாகாது.
ஏனெனில் இருக்கும்படியான பொருள் ஒரு பொழுதும் சூன்யரூபத்தை
அடையமுடியாது. சூக்ஷ்ம காரணரூபத்தையாவது அடையமுடியும். ஆகவே
இதுவும் சித்தப் பிரமையே. திரவியங்களைச் சேமித்தலே மோக்ஷத்தை யளிக்
கும் என்றும் முன்கூறின துவாதசாயதன பூஜையையும் (பன்னிரண்டு வாய்க
ளின்* பூஜை) செய்யமுடியுமென்றால் பத்து பிராணன் (பதினொன்றாவது)
ஜீவாத்மா, இவைகளையும்கூட ஏன்சேர்த்துக் கொள்ளக்கூடாது? ஐம்புலன்
கள், அந்தக் கரணம், ஆகியவைகளுடைய பூஜையே மோக்ஷத்தை யளிக்கு
மென்றால், பௌத்தர்களுக்கும் காமாதுரமானவர்களுக்கும் என்ன வித்தியாச
மிருக்கின்றன. ஐம்புலன்களுடைய ஆதீனத்திலிருந்தே மீறமுடியாமலிருக்க
பௌத்தர்கள் முக்தியை எவ்விதம் அடைவார்கள்? ஐம்புலன்களுடைய அடி
மைகளால் முக்தி என்பது என்னவென்றுகூட ஊகிக்கமுடியாது. அறியாமை
யில் எவ்வளவு தூரமுன்னேற்ற மடைந்திருக்கிறார்கள்? அவர்களுக்கு நிகரான
வர்கள் இவ்விஷயத்தில் எவருமே கிடையாது. வேதம் ஈசுவரன் இவைகளுக்கு
விரோதமானதின் பலனேயாகும் இது. உலகமுழுவதும் துக்கரூபமானதென்று
முதலில் நினைத்துக்கொண்டார்கள், பிறகு துவாதசாயதன பூஜையை உண்டு
பண்ணினார்கள். இத்துவாதசாயதன பூஜை உலகத்திற்கு வெளியே யுள்ள

* ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், மனம், புத்தி ஆக வாயில்கள்
பன்னிரண்டு.

பொருள்களுக்கு மாத்திரமா? இப்பூஜைகளினால் முக்தி ஏற்படுமேயானால் கண்களைமூடிக்கொண்டு இரத்தினங்களையும் அடையலாமே. வேதங்களையும் ஈசுவரனையும் மதிக்காததினாலேயே இப்புத்தியற்றவார்த்தைகளை நம்பலானார்கள். சுகத்தைக் கோரினால் இப்பவும் வேதம் ஈசுவரன் ஆகியவைகளைத் தழுவி தங்கள் பிறப்பை புனிதமாக்கிக் கொள்ளட்டும். விவேக விலாச மென்னும் நூலில் பௌத்தர்களுடைய மதம் விரிக்கப்பட்டிருக்கிறது.

बौद्धानां सुगतो देवो विश्वं च क्षणभंगुरम् ।
आर्य्यसत्वाख्ययादत्वचतुष्टयमिदं क्रमात् ॥

1. பௌத்தர்களுடைய நம்பிக்கையில் நான்கு முக்கியமான தத்துவங்களாவன :—

(i) சுகததேவர் எனப்படுகின்ற புத்தரே பூஜிக்கத் தக்கவர் (ii) பிரபஞ்சம் க்ஷணபங்குரமானது (iii) மேன்மைபெற்றிருக்க, ஆடவர்களும் பெண்டிர்களும் பாடுபடவேண்டும். (iv) தத்வங்களுடைய ஞானத்தை எல்லோரும் கற்றறிய வேண்டும்.

दुःखमायतनं चैव ततः समुदयो मतः ।
मार्गश्चेत्यस्य च व्याख्या क्रमेध श्रूयतामतः ॥

(2) இப்பிரபஞ்சம் துக்கத்திற்கு இருப்பிடம் என்று அறியட்டும். அதன் பின்னரே முன்னேற்றமடையமுடியும். அதற்கு வழிகளாவன:—

दुःखसंसारिणस्कन्धास्ते च पञ्च प्रकीर्त्तितः ।
विज्ञानं वेदनासंज्ञा संस्कारो रूपमेव च ॥

3. உலகிலுள்ளது துக்கமும் துன்பமுமே. முன் சொன்ன(ஐந்து) பஞ்சஸ்கந்தங்களை அறியட்டும்.

पञ्चेन्द्रियाणि शब्दा वा विषयः पञ्च मानसम् ।
धर्मायतनमेतानि द्वादशायतनानि तु ॥

4. ஐந்து ஞானேந்திரியம், அவைகளுடைய பொருள்கள் ஐந்து, மனம் புத்தி, அந்தக்கரணம், ஆகப் பனிரண்டும் தர்மத்தினுடைய இருப்பிடமாகும்.

रागादीनां गणो यः स्यात्समुदेति नृणां हृदि ।
अत्मात्मीयस्वभावाख्यः स स्यात्समुदयः पुनः ॥

5. மனிதனுடைய ஹிருதயத்திலுண்டாகும் ஆசை, வெறுப்பு, முதலானவைகளுக்குச் சமுதயம் என்று பெயர். ஆத்மா, அதனுடன் சம்மந்தப்பட்ட குணம், முதலானவைகளுக்கு ஆக்யம் என்று பெயர். இதிலிருந்தே சமுதயம் உண்டாகிறது.

क्षणिकाः सर्वसंस्कारा इति या वासना स्थिरा ।
स मार्ग इति विज्ञेयः स च मोक्षोऽभिधीयते ॥

6. சம்ஸ்காரங்களெல்லாம் க்ஷணபங்குரமானதே. இந்த உணர்ச்சியே புத்தர்களுடைய வழியாகும். சூன்யதத்துவத்தின்படி சூன்யமாவதேமோக்ஷமாகும்,

प्रत्यक्षानुमानं च प्रमाणं द्वितयं तथा ।
चतुःप्रस्थानिका बौद्धः ख्याता वैभाषिकादयः ॥

7. பிரத்தியக்ஷம், அனுமானம் இவை இரண்டு பிரமாணங்களேயே நம்புகிறார்கள். இவைகளில் நான்குவிதமுண்டு (i) வைபாஷிகம் (ii) சௌதந்திரிகம் (iii) யோகாசாரம் (iV) மாத்யமீகம்.

अथो ज्ञानान्वितो वैभा केण बहुमन्यते ।
सौत्रान्तिकेन प्रत्यक्षग्राह्योऽर्थो न बाह्यमतः ॥

8. நம்முடைய ஞானத்தில் விளங்கும் பொருள்களை யெல்லாம் இருப்பதாகவே வைபாஷிகர்கள் நம்புகிறார்கள். ஏனெனில் ஞானத்தில் விஷயமாக இருப்பதாக நினைப்பது சித்தர் (அதாவது புத்தர்) களால் முடியாத காரியம். சௌதந்திரிகளோ அகப்பொருளாக யாவற்றையும் நினைக்கிறார்கள். வெளியிலிருப்பதாக நினைக்கிறதில்லை.

आकारा सहिताबुद्धिर्योगाचारस्य संमता ।
केवलां संविदां स्वस्थां मन्यन्ते मध्यमाः पुनः ॥

9. யோகாசாரர்கள் உருவத்துடன் கூடினதும் விஞ்ஞானத்துடன் கூடினதுமான புத்தியில் நம்புகிறார்கள். மாத்யமீகர்களோ தங்களுடைய ஞானத்திலேயே பொருள்கள் விளங்குவதாக நினைக்கிறார்கள். பொருள்கள் வெளி உலகிலிருப்பதாக நினைப்பதில்லை.

रागादि ज्ञानसन्तानवासनाच्छेदसम्भवा ।
चतुर्णामपि बौद्धानां मुक्तिरेषा प्रकीर्त्तिता ॥

10. இன்பம் துன்பம் முதலிய சித்த விகாரங்கள் மனதில்லாமல் ஒய்வடைவதையே நான்கு வகையான பௌத்தர்களும் முக்தியெனத் திடமாய் நம்புகிறார்கள்.

कृत्तिः कमण्डलुर्मौण्ड्यं चीरं पूर्वाह्नभोजनम् ।
संघो रक्तांवरत्वं च शिश्रिये बौद्धाभिक्षुभिः ॥

11. மான்தோல் (ஆசனமாக) உபயோகித்தல், கப்பரையை ஜலம் ஏந்திக்கொள்ளப்பிடித்தல், தலை, தாடி மீசை இவைகளைச் க்ஷௌரம் செய்துகொள்ளல் மர உடைதரித்தல், காலை ஒன்பது மணிக்கு முன்னரே புசித்தல், தனித்தில்லாமலிருத்தல், சிகப்புவர்ண வஸ்திரங்களைத்தரித்தல் இவைகளெல்லாம் பௌத்தசாதுக்களுடைய நடையாகும்.

விடை:— (I) புத்தனெனப்படுகிற சுகத்தேவனே, பௌத்தர்களுடைய தேவனுயிருந்தால் அவருடைய குரு யார் (என அறிய விரும்புகிறோம்.)

6. பிரபஞ்சம் க்ஷணப்பங்குரமானதாயிருந்தால், வெகுநேரம் சென்றுஒரு வஸ்துவை ஒருவன் பார்க்குங்கால் தான் முன் பார்த்த பொருளிதுதானென்று ஞாபகம் வரக்கூடாது. அப்பொருளும் அங்கிருக்கக்கூடாது. ஆகவே ஒருவருக்கும் அதனுடைய ஞாபகம் இருக்கக்கூடாது. பிரபஞ்சம் க்ஷணபங்குரமானதென்று பௌத்தர்கள் உண்மையாக நம்புவார்களேயானல் அவர்களுடைய மோட்சமும் அவ்விதமே இருக்கும்

(8) உணரப்படும்படியான பொருள்களெல்லாம் ஞானத்துடன் கூடினதாயிருக்குமேயானல்,ஜடப்பொருள்கள்கூட ஞானத்துடன்கூடினதாயிருக்கவேண்டும். ஐம்புலன்களால் அறியக்கூடிய வஸ்துக்கள் இல்லாததாக எவ்விதம் இருக்கும் ?

(9) புத்தி உருவத்துடனிருந்தால் கண்களுக்குப் புலப்பட வேண்டுமே. வெளியுலகம் நம்முடைய அறிவில் மாத்திரம் இருந்து உண்மையான உருவமற்று, இருக்கிறதென்றல் சரியாகாது. ஏனெனில் நம்முடைய அறிவில் அமரக்கூடிய பொருள்கள் இல்லாமல், ஞானமுண்டாகாது.

(10) இன்பதுன்ப முதலானவைகளுடைய ஒய்வே முக்தியாகுமானல் சுஷுப்தியும் (கனவில்லாத தூக்கம்) முக்தியாகுமே? இவ்விதம் நினைப்பது அறிவிற்கு விரோதமானபடியினல் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகாது.

பௌத்தர்களுடைய கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் சுருங்கச் சொன்னேம்.அறிவாளர்கள் இதைப்பார்த்தே இவர்களுடைய வித்தை மதம் எல்லாம் எவ்விதமானது என்று தெரிந்துகொள்ளக்கூடும். சமணர்களும் இதில் நம்புகிறர்கள்.

சமணமத விசாரணை.

பிரகரணரத்னகரம், முதல்பாகம், நயசக்கிர சாரத்தில் எழுதப்பட்டிருப்பதாவது: பௌத்தர்கள் எப்பொழுதும் நான்குவிதமான அஸ்திவாரத்தை அங்கீகரித்துக்கொண்டிருக்கிறர்கள்:—

(1) ஆகாசம் (2) காலம் (3) ஜீவன் (4) புத்கல (கணிசமான அணுக்கள்) சமணர்கள் ஆறுவகைகளில் நம்புகிறர்கள்.

1. தர்மாஸ்திகாயம் (2) அதர்மாஸ்திகாயம் (3) ஆகாசாஸ்திகாயம் (4) புத்கலாஸ்திகாயம் (5) ஜீவாஸ்திகாயம் (6) காலம்.

இவ்வாறில் காலத்தை அஸ்திகாயமாக (அஸ்திபாரம்) கொள்ளுவதில்லை. பழக்கவழக்கத்தில் அஸ்திகாயமானபொழுதிலும்உண்மையாகஅதுஒன்றாகாது.

(1) (அசையினுடைய வேற்றுமைகளினல் மாறுதலை அடைகிறது) இம்மாறுதலின் காரணத்திற்கு ஆதரவாயிருக்கும் புத்கலத்திலும் ஜீவனிலும் இருக்கிறதே தர்மாஸ்திகாயமாகும். கணக்கற்ற உலகங்களிலும் பிரதேசங்களிலும் எல்லையற்று அது பரவி யிருக்கிறது.

(2) ஜீவனிலும், அமைதியினல் மாறுதலையடையும் புத்கலத்திலும், அமைதியை ஆதரிக்கும் அஸ்திவாரமே அதர்மாஸ்திகாயமாகும்.

(3) எல்லாப்பொருள்களுக்கும், இருப்புக்களுக்கும் வெளியேறுதல், பிரவேசித்தல், அமிழ்தல் முதலியவைகளைஉடைய ஜட அணுக்களுக்கு ஆதரவாயுள்ள சர்வவியாபகமான அஸ்திபாரமே ஆகாசமாகும்.

4. காரணரூபமே புத்தகலம். அது சூக்ஷமமானது, நித்தியமானது, சாதாரணமானது. உருசி, வர்ணம், வாசனை முதலான காரியங்களால் அதை அறியவுங்கூடும். பெருக்கலுக்கும் சிதைவுக்கும் அது உட்பட்டது.

5. ஜீவன் உணர்ச்சிக்கு இருப்பிடமான மூலமாகும். ஞானத்தை அறிவதற்கு உபயோகமாகும். கணக்கற்றமாறு தல்களினால் பாதிக்கப்படுகிறது. கர்த்தா போக்த்தா (அனுபவிக்கிறவன்) இரண்டும் அதுவேயாகும்.

6. மேலே சொன்ன பஞ்சாஸ்திகாயங்களும் சமீபத்திலிருக்கிறதா, புதிதானதா, பழமையானதா, என்பதைக்குறித்துக்காட்டுவதும் நிகழ்காலத்தில் நடக்கிறதை எல்லாம் செய்வதுமே காலமாகும்.

விடை:— அஸ்திவாரங்களை ஒவ்வொரு காலத்திலும் புதியதாக சமணர்கள் நம்புவது சரியாகாது. ஏனெனில் ஆகாசம், காலம், ஜீவன், அணுக்கள் ஆகியவைகள் ஒருபொழுதும் புதியதாகாது, பழமையானது மாகாது. இவைகள் அநாதியானபொருள்கள். காரணரூபத்தினால் அழிவற்றதாகும், இவ்விதமிருக்க அவைகளைப் புதியதென்றும் பழையதென்றும் எவ்விதம் கூறமுடியும்? சமணர்களுடைய (மேற்கூறின ஆறு அஸ்திபாரங்களில்) நம்பிக்கையும் தப்பானதே. ஏனெனில் தர்மா தர்மங்கள் ஒரு பொழுதும் அஸ்திவாரமாகாது, இவைகள் (ஜீவாஸ்திகாயத்தினுடைய) குணங்களேயாகும். ஆகாசம் பரம அணு ஜீவன், காலம் இந்நான்கையுமே நம்பியிருந்தால் மேலாயிருந்திருக்கும். வைசேஷிக சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள ஒன்பது அஸ்திவாரங்களும் சரியானது. அவைகளாவன்:—பிருதிவி முதலிய ஐந்து தத்துவங்கள், காலம், இடம், ஆத்மா மனம். இவ்வொன்பதையும் தனித்தனியானதென்று அறிந்திருக்கிறார்கள். ஜீவனை மாத்திரம் சேதனமாகமதித்து ஈசுவரனை மதிக்காமலிருப்பது பௌத்த சமணர்களுடைய பக்ஷபாதமே யாகும்.

சப்த (எழு) பங்கங்கள் ஸ்யாதவாதம் என்று பௌத்தர்களும், சமணர்களும் மதிக்கிறவைளாவன:—

1. பொருள் ஒன்றினுடைய இருப்பைததிடப்படுத்துவது முதல் பங்கமாகும். உதாரணமாக "பானை இருக்கிறது" என்னுங்கால் அதனுடைய இருப்பை உறுதிப்படுத்தி இல்லாமலிருப்பதை ஒதுக்குகிறோம். 2. பொருளொன்றின் இல்லாதிருத்தலைத் திடப்படுத்துவது இரண்டாவது பங்கமாகும். பானை இல்லை என்னும் பொழுது அதன் இருப்பைத்தள்ளுகிறோம். 3, பொருள் ஒன்றின் இருப்பை உறுதிப் படுத்தி, இருக்கிறதிலிருந்து அது வேறானதில்லை என்று சொல்லுவது மூன்றாவதாகும். "பானை இருக்கிறது. அது துணித்துண்டு ஆகாது" என்னும் பொழுது பானையின் இருப்பைச்சொல்லி அது துணித்துண்டில்லை யென்கிறோம். முதல் இரண்டிற்கும் இதற்கும் பேதமுண்டு, 4. பொருளின் பாவத்தை ஸ்தாபித்து, மறு பொரு

ளாக அதேவகையின் வேறுபொருள் என்னும்பொழுது அதனுடைய பாவத்தைத் தள்ளுவதுமே நான்காவது பங்கமாகும். உதாரணமாக "பானையிருக்கிறது. ஆனால் இரண்டாவதாக இல்லை" எனுங்கால் இருத்தல் இல்லாதிருத்தல் இரண்டையும் ஒருதடவையில் சொல்லுகிறோம். 5. இல்லாததை உண்டு என்று சொல்லியழைப்பதே ஐந்தாவதாகும். உதாரணமாகப் பானையைத் துணி (துண்டு) என்பது. கட (பானை) த்தினுடைய கடபனை (அதுகுடமாயிருத்தலை) ஸ்தாபிப்பதே ஏற்றதாகும். கடபனை துணித் துண்டம் என்று தாபிப்பதுமாறுகும். 6. பானை இல்லாதிருத்தலைச் சொல்லாமலிருப்பது சரி, இருப்பதைச் சொல்லுவதும் சரியானது. பொருள் எதுவாக இல்லையோ அதை இல்லை யென்பதும், எதுவாக இருக்கிறதோ அதை இருக்கிறதென்றும் சொல்லுவதே ஆருவது பங்கமாகும், 7. சொல்லுவதற்கு ஆசையுண்டு அது இல்லை. பானையென்றழைக்கவும் தகுதியானதன்று. இதுவே ஏழாவது பங்கமாகும்.

स्यादस्ति जीवोऽयं प्रथमो भंगः ॥१॥ स्यान्नास्तिं जीवो द्वितीयो भंगः ॥ स्यादवक्तव्यो जीवस्तृतीयो भंग ॥३॥ स्यादस्ति नास्ति नास्तिरूपो जीवश्चतुर्थो भंगः ॥४॥ स्यादस्ति अवक्तव्यो जीवः पंचमो भंग ॥ स्यान्नास्ति अवक्तव्यो जीवः षष्ठो भंगः ॥६॥ स्यादस्ति नास्ति अवक्तव्यो जीव इति सप्तमो भंगः ॥७॥

1. ஜீவனிருக்கிறது. ஆனால் ஜடப்பொருள்களில்லை என்பதே முதல் பங்கமாகும். 2. ஜடப்பொருள்களில் ஜீவனில்லை யென்று உறுதிப்படுத்துவதே இரண்டாவது பங்கமாகும். 3. ஜீவன் விவரிக்கதக்கதல்ல என்று உறுதிபடுத்துவதே மூன்ருவது பங்கமாகும். 4. ஜீவன் சரீரமெடுக்கும்பொழுது வெளிப்படுகிறதென்றும், சரீரத்திலிருந்து பிரியும்பொழுது தெரியாமல் போகிறதென்றும் சொல்லுவது நான்காவது பங்கமாகும் 5. ஜீவனுண்டு ஆனால் விவரிக்க முடியாது என்பதே ஐந்தாவது பங்கமாகும் 6. பிரத்தியக்ஷ பிரமாணங்களினுல் ஜீவன்வெளியாகிறதில்லையென்பதும் புலப்படுகிறதில்லை யென்பதுமே ஆருவது பங்கமாம். 7. ஜீவனிருக்கிறது ஏனெனில் அனுமானத்தினுல் அறிகிறோம். அது இல்லை; ஏனெனில் புலப்படுகிறதில்லை. மாறமுடியாததாக இல்லை. ஆனல் அடிக்கடிமாறுகிறது. அது இருக்கிறதுமில்லை. இல்லாததுமில்லை. உள்ளதுமில்லை. இல்லாததுமில்லை. காரியமுமில்லை. இதுவே ஏழாவது பங்கமாம். இவ்விதமே நித்தியமானவும் அநித்தியமானவும் சப்தபங்கங்கள் இருக்கின்றன. அதனுடைய சாதாரணகுணம், சுவபாவம், சிறந்தகுணம் சுபாவம் மாறுதல் (அவைகளில் ஏற்படுகிற) இவைகளைக்கொண்டு ஒவ்வொரு பொருளினுடைய சப்தபங்கிகளை அறியலாம். இவைகளே பௌத்தர்களுடையவும் சமணர்களுடையவும் சப்தபங்கிகளும் ஸ்யாதவாத நியாயங்களுமாகும்.

விடை:— அனன்யபாவம், சாதர்மியம் (ஒற்றுமை) வைதர்மியம் (வேற்றுமை) இவைகளுடைய உதவிகொண்டு மேற்சொன்னவைகளெல்லாம் கூறலாம்

இத்தகைய எளியசொற்களை ஒதுக்கிவிட்டு சுற்றுனபேச்சுகளைக் கையாளுவது ஒன்றுமறியாதபேதைகளை ஏமாற்ற வேண்டும் என்கிற எண்ணத்துடனேயே தவிர,வேறெருஎண்ணத்துடனுமில்லை.கவனியுங்கள் ஜீவன் அஜீவனு? ஜீவனில்லாததாக இராது. அஜீவனில் ஜீவனுடைய பாவம் உண்டாகாது. ஜீவனும் சடத்தினுடைய இருப்பும் இருக்கிறபடியினுலேயே சாதர்மியமும், சேதனமும் ஜடமும், இருக்கிறபடினுலேயே வைதர்மியமும் முறையே ஒலிக்கின்றன. அதாவது ஜீவனில், சேதனமிருக்கிறது. ஜடத்தனம் இல்லை. (பலபொருள்களின்) குணகர்ம ஸ்வபாவத்திற்கு ஏற்றவாறு ஒற்றுமைவேற்றுமைகளை ஆராய்ச்சி செய்வதினுலேயே இவர்களுடைய சப்தங்கிகளும் ஸ்யாதவாதமும் எளிதிலேயே விளங்கும். இவ்விதமிருக்க சுற்றுச் சுழலானவும் அர்த்தமற்றதுமான இவைகளைக் கையாளுவானேன்? அற்ப விஷயங்களில் நம்பிக்கை மாறுதல்கள் இருந்தபொழுதிலும் பௌத்தர்களும் சமணர்களும் சப்தபங்கி ஸ்யாதவாத ஆகியவைக்ளில் நம்புகிறுர்கள்.

இனி சமணசமயத்தைப் பற்றியே பேசுவோம்.

चिदचिद्द्वे परे तत्त्वे विवेकस्तद्विवेचनम् ।
उपादेयमुपादेयं हेयं हेयं च कुर्वतः ॥१॥

சமணர்கள், சித், அசித் அதாவது சேதனம், ஜடம் என இரண்டு சத்துக்களில் மாத்திரமே நம்புகிறுர்கள். ஒன்றிலிருந்து மற்ெறுன்றை யறிவதே விவேகமெனப்படும். ஏற்றுக்கொள்ளவேண்டியதை ஏற்றுக்கொண்டு தள்ளவேண்டியதைத்தள்ளுகிறவனே விவேகி.

हंय हि कर्तृरागादि तत् काय्यमविवेकेनः ।
उपादेयं परं ज्योतिपयोगैकलक्षणम् ॥२॥

காமக்குரோதங்களிலிருந்து மீறின பிரபஞ்ச கர்த்தாவான சர்வேசுவரன் உலகத்தைஉண்டுபண்ணினுரென்கிற அவிவேகிகளுடைய மதத்தைவிட்டு, யோகப்பழக்கத்தினுல் அறியக்கூடிய பஞ்சேந்திரிய ஸ்வரூபமான ஜீவனை ஏற்றுக்கொள்ளுவதே ஏற்றதாகும். ஜீவனைத்தவிர இரண்டாவதான சேதன தத்துவ ஈசுவரனை நம்புகிறதில்லை. அநாதியானவும் பரிபூரணமுமான இறைவனெருவனிருப்பதாகச் சமணர்களும் பௌத்தர்களும நம்புகிறதில்லை. ராஜ சிவப் பிரசாத், தன்னுடைய இதிகாச திமிர நாசக் என்னும் நூலில் இரண்டேபெயர்கள் சமண,பௌத்த,உண்டென்கிறுர். இவையிரண்டும் 'சமானுர்த்தமுள்ள பதங்களே. ஆனுல் பௌத்தர்களில் சிலர் வாமமார்க்கிகள். மாம்சாகாரமும் மதுபானமும் செய்வார்கள். இவர்களுக்கும் சமணர்களுக்கும் பேதம் உண்டு.

மகாவீர, கௌதம கந்தார்கள் (கணங்களுடைய தலைவர்) இவர்களைப் பௌத்தர்கள் புத்தர் என்றும், சமணர்கள், கந்தர், ஜினவர், என்றும் முறையே அழைக்கிறுர்கள். பரம்பரையாய் சமணசமயத்தைச் சேர்ந்த ராஜசிவ பிரசாத், இதிகாசதிமிர நாசக், என்றும் நூலின் மூன்றுவது அத்தியாயத்தில் சங்கராசாரியாருக்கு ஒராயிரவருஷங்களுக்குமுன் ஜீனர் இருந்ததாகச்

சொல்லுகிறுர். பாரதவருஷம் பூராவும் பௌத்த அல்லது சமணசமயம் பரவியிருந்ததாம். மேலும் அவர் சொல்லுவதாவது “கணதர், மகாவீர, கௌதம சுவாமிகளுடைய காலத்திலிருந்து சங்கரசுவாமிகளுடைய காலம்வரையில் பாரதவருஷத்திலிருந்ததும், அசோகர், சாம்பிரதிமுதலான சக்ரவர்த்திகளால் நம்பப்பட்டும் வந்த வேதவிரோதமான மதத்தையே, பௌத்த (மதம்) என்னும்வார்த்தையினுல் அறிகிறோம். சமணமதமும் கூடச்சேர்ந்ததே. ஜினவிலிருந்துண்டான ஜயின சமண பதமும், புதவிலிருந்துண்டான பௌத்தபதமும் ஒரே பொருள் உள்ளவைகளே. இவ்விருபதங்களுக்கும் ஒரே பொருள்தான் என்று அகராதியில் கூறப்பட்டிருக்கிறது. இருவரும் (சமணர்கள், பௌத்தர்கள்) கௌதமரை (புத்தரை) மதிக்கிறுர்கள். புத்தர்களுடைய தீபவம்சம் போன்ற புராண நூல்களில் சாக்கியமுனி கௌதம புத்தரை மகாவீரன் என்ற பெயரைக் கொண்டும் அழைக் கின்றது. எனவே அவருடைய காலத்திலாவது இவ்விரண்டும் ஒன்ருகவே இருந்ததென்பது தெளிவாகிறது. அயல் நாட்டவர்கள் பௌத்தன் என்கிற பெயரையே கையாண்டிருக்கிறபடியினுல், கௌதமருடைய மதத்தவர்களைச் சமணர்களென்று சொல்லாமல் புத்தர்களென்றே கூறியுள்ளோம்”

सर्वज्ञः सुगतो बुद्धो धर्मराजस्तथागतः ।
समन्तभद्रो भगवान्माराजिल्लोकजिज्जिनः ॥
षडभिज्ञो दशबलोऽद्वयवादी विनायकः ।
मुनीन्द्रः श्रीघनः शास्ता मुनिः शाक्यमुनिस्तु यः ॥
स शाक्यसिंह सर्वार्थः सिद्धश्शौद्धोदनिश्च सः ।
गोतमश्चार्कबन्धुश्च मायादेवी सुतश्च सः ॥ அமரகோசம்* 1,1,8,9,10.

சர்வஞ்ஞ, சுகத, புத்த, தர்மராஜ, ததாகத, சமந்த, பத்திர, மராஜித், லோகஜித், ஜின, என்று அவருடைய நாமங்கள் பல. புத, ஜின, அல்லது பௌத்த ஜைனி, இவைகள் ஒரே பெயரா? அல்லது வேறுபட்டவைகளா? என்று இப்பொழுது கூட விளங்கவில்லை. புத, ஜின, இரண்டும் ஒருவருடைய பெயரே என்று சொல்லுவதில் அமர்சிங் கூட வழுவிவிட்டாரா? அறிவில்லாத சமணர்களுக்குத் தங்களுடைய சமயத்தைப்பற்றியுந் தெரியாது. பிறருடையதைப் பற்றியுந் தெரியாது. துராபிமான மயக்கத்தினுல் மதியீனமாய்ப் பேசுகிறுர்கள். அவர்களிலே கற்றுணர்ந்தவர்கள் புத்த, ஜின, பௌத்த, ஜைன, இவ்விரண்டுகளையும் ஒன்றுனதென்றே நன்கறிவார்கள். இதைப்பற்றி கொஞ்சமேனும் சந்தேகங் கிடையாது.

ஜீவனே பரமேசுவரனுகிறதென்றும், தீர்த்தங்கரர்கள் முக்தியைப்பெற்று பரமேசுவரனுய் விட்டார்களென்பதுமே சமணர்களுடைய உறுதி. அவர்கள் அநாதி பரமேசுவரனில் நம்புகிறதில்லை. சர்வஞ்ஞ (எல்லாமறிந்தவர்) வீத

* இது ஒரு பெரிய வட மொழி அகராதியாகும். இதை ஆக்கினவர் சமண சமயத்தைச் சார்ந்த அமர்சிங் என்பார்.

ராக (ஆசைமுதலியவைகளிலிருந்து மீறினவர்) அர்க்கன் (பூஜிக்கத்தகுந்தவர்) கேவலி (காப்பாற்றப்பட்டவர்) தீர்த்தங்கிருத் (பரிசுத்தமடைந்தவர்,) ஜின்(ஜெயித்தவர்) ஆக இவைகள் நாஸ்திகர்களுடைய தேவர்களின் பெயர்களாகும். ஆதி தேவனுடைய ஸ்வரூபத்தைக்குறித்து சந்திர சூரி என்பவர் "ஆபத் நிச்சயாலங்கார" என்னும் தன்னுடைய நூலில் எழுதுவதாவது:—

सर्वज्ञो वीतरागादिदोषस्त्रैलोक्यपूजितः ।
यथा स्तितार्थवादी च देवोर्हन् परमेश्वरः ॥

1. ராகத்துவேஷங்களிலிருந்து மீறினவர். இவ்வுலகத்திலேயும் பூஜிக்கத் தகுந்தவர். உள்ளவாறே பொருள்களைக்கூறுபவர் சர்வஞ்ஞர்; தக்க தேவன் இவரே பரமேச்வரர்.

सर्वज्ञो दृश्यते तावन्नेदानीमस्मदादिभिः ।
दृष्टो न चैकदेशोऽस्ति लिङ्गं वा योऽनुमापयेत्

2. தௌதாதிதத்தில் சொல்லுவதாவது; இச்சமயத்தில் பரமேசுவரனைப் பார்க்க முடியாதானபடியினால் எச்சர்வஞ்ஞுமான அநாதி பரமேவசுரனும் பிரத்தியக்ஷமாக ஆகிறதில்லை.

न चागमविधिः कश्चिन्नित्यसर्वज्ञ बोधकः ।
न च तत्रार्थवादानां तात्पर्यमपि कल्पते ॥

3. ஈசுவரன் பிரத்யக்ஷப்பிரமாணங்களினால் வெளியாகாமலிருக்க, அனுமானத்தினாலும் ஆகமாட்டார்- ஏனெனில் ஒருவிடத்தில் பிரத்யக்ஷமாகாமல் அனுமானமாகாது. அநாதியாயும் சர்வஞ்ஞுமாயுமுள்ள பரமாத்மாவுடைய இருப்பு வாய் வார்த்தையினால் கூட வெளியாகாது. இம்மூன்று *பிரமாணங்களும் பிரயோசனமற்றதாயிருக்க, அர்த்தவாதம் ஆதி நிந்தை பரகிருதி (ஜீவிய சரித்திரம்) இதிகாசம் (சரித்திரம்) இவைகளால் யாது பிரயோஜனம்?

न चान्यार्थप्रधानैस्तैस्तदस्तित्वं विधीयते ।
न चानुवादितुं शक्यः पूर्वमन्यैरबोधितः ॥

4. (வடமொழியிலுள்ள) பஹுவிரிஹீ: சமாசத்தைப்போல் பரமாத்மாவின் இருப்பை மெய்ப்பிக்கமுடியாது. உபதேசகர்களிடமிருந்து ஈசுவரனைப் பற்றிக் கேழ்க்காமல் எவ்விதம் உறுதி கூறமுடியும்?

விடை:—அநாதி ஈசுவரன் ஒருவரில்லாமலிருந்தால் உங்களுடைய அர்ஹ தேவதையின் பெற்றோர்களுடைய சரீரத்தைச்சிருஷ்டித்தது யார்? ஒத்த பரிமாணம், பலம் முதலானவைகளுடன் கூடினதும் சக்தியையுடையதுமான சரீரத்திற்குச்சகலஅவயவங்களையும் சேர்த்துவைக்க கர்த்தா ஒருவன் அவசியமாய்வேண்டும்? ஏனெனில் ஜடப்பொருள்களானபடியினால் இவ்வளவுநேர்த்தியான கட்டுடன் கூடின சரீரம் தானாகவே வெளியாகமுடியாது. அதனுடைய பகுதிகளுக்கெல்லாம் சுயமாகவே ஒன்று சேரும் சக்திகிடையாது. ராகத்துவேஷமுதலான சித்தவிகாரங்களுடன் கூடினபிறகு, அதிலிருந்து மீறினவன்

---

* மூன்றாவது அத்தியாயத்தில் இதை விளக்கியுள்ளோம்.

ஈசுரவனாகமாட்டான். ஏனெனில் எக்காரணத்தினால் அது ராகத்துவேஷங்களி லிருந்து மீறி முக்தியைபெருகிறதோ அது பிரயோஜன மற்ற தாகிறது. அத னுடைய காரியமான முக்தியும் அநித்தியமாகிறது. அற்பனும், அற்பஞ்ஞ னும் ஒரு பொழுதும் சர்வவியாபகனாயும் சர்வஞ்ஞனுமாகமுடியாது? ஜீவ னுடைய ஸ்வரூபம் எல்லைக்கும் கட்டுக்கும் உட்பட்டகுணகர்ம சுபாவத்து டன் கூடினபடியினால் சகல கலைகளைகளுடைய ஞானத்தை அதனால் புகட்ட முடியாது ? எனவே உங்களுடைய தீர்த்தங்கரர்களும் பரமேசுவரனாக முடி யாது ?

2. பிரத்தியக்ஷமானவைகளை மாத்திரம் நம்பி அதற்கு மாறானவைகளை நம்புகிறதில்லையா ? காதினால் உருவத்தையும் கண்ணினால் சப்தத்தையும் உணரமுடியாது. அநாதியானசர்வேசுவரனைக்காண சத்தமான அந்தஃகரணம் ஞானம்,யோகப்பியாசம் ஆகியவைகளேவேண்டிய சாதனங்களாகும். பரிசுத்த மான ஆத்மாவே பரமாத்மாவைப் பிரத்யக்ஷமாகக் காண்கிறது. அறியாமல் வித்தையுடைய பிரயோசனத்தைக்கொள்ள முடியாததலால் யோகாப்பி யாசம், விஞ்ஞானம் ஆகியவைகளன்னியில் பரமாத்மாவைக் காணமுடியாது. பிரிக்கமுடியாமல் இணைக்கப்பட்டிருக்கிற அதனுடைய உருவம் முதலான குணங்களைப்பார்த்து அறிவதனால் பூமி பிரத்தியக்ஷமாவதுபோல் பிரபஞ்சக்தி யினுடைய அதியற்புதசிறப்புகளைக்காணுங்கால் பரமாத்மாபிரத்யக்ஷமாகிறார். பாபகாரியங்களைச் செய்யுங்கால் அச்சமயம், வெட்கம், சந்தேகம், ஆகியவை நம்முடைய மனதில் உதிக்கிறது. இவைகள் அந்தர்யாமியாயிருக்கும் பர மாத்மாவினால் ஏவப்படுகின்றன. எனவே பரமாத்மா பிரத்தியக்ஷமாகிறார்.

3 பிரத்யட்சப் பிரமாணம், அனுமானம், இரண்டும் சரியாயிருக்க, அநாதி யாயும் சர்வஞ்ஞமுமான பரமாத்மாவைத் தாங்க சப்த பிரமாணமும் ஏற்றதே யாகும். இப்பிரமாணங்க ளெல்லாமிருக்க பரமேஸ்வரனுடைய குணங்களைத் துதிப்பதும் சரியானதேயாம். ஏனெனில் நித்தியமான பொருளாயிருக்க அத னுடைய குணக்ர்மசுபாவங்களும் நித்தியமானதே. எனவே அதைப்புகழுவதி லிருந்து நம்மைத்தடுப்பது ஒன்றுங் கிடையாது.

4. கர்த்தாவன்னியில் காரியம் ஒன்றும் முடியாது. அதுபோலவே இப் பெருங்காரியம்—பிரபஞ்சம்—கர்த்தாவன்னியில்பிரகாசிக்காது. இவ்விதமிருக்க முழு முட்டாள் கூட அவருடைய இருப்பில் நம்பாமலிருக்க மாட்டான். உப தேசகர்களிடமிருந்து அறிந்தபின்னர் பரமாத்மாவை உறுதிப்படுத்துவது சுலப மானதே. எனவே பிரத்யக்ஷ பிரமாணங் கிடையாதெனக் கூறி ஈசுவர னில்லை யென்று சொல்லுவது சமணர்களுக்கு ஒவ்வாத காரியமாகும்.

अनादेरागमस्यार्थो न च सर्वज्ञ आदिमान् ।
कृत्रिमेण त्वसत्येन स कथं प्रतिपाद्यते ॥

வினா:—1. அநாதிசாஸ்திரத்தை ஆக்கப்பட்டதெனல் முடியாது. ஆகவே அநாதியில்லாததொருநூல் நம்பமுடியாது. சர்வஞ்ஞமான ஈசுவரனைக் குறித்து எவ்விதம் உரைக்கும் ?

अथ तद्वचनेनैव सर्वज्ञोऽन्यैः प्रदीयते ।
प्रकल्पेत कथं सिद्धिरन्योऽन्याश्रययोस्तयोः ॥

2. தன்வார்த்தையினுலேயே பரமேசுவரன் வெளியானுல் அநாதி ஈசுவரனுல், அநாதி சாஸ்திர சித்தியும், அநாதிசாஸ்திரத்தினுல் அநாதி ஈசுவரசித்தியும் முறையே உண்டாகின்றன. இது* அன்யோன்யாசிரியகுற்றத்திற்குள்ளாகிறது.

सर्वज्ञोक्ततया वाक्यं सत्यं तेन तदस्तिता ।
कथं तदुभयं सिध्येत् सिद्धमूलान्तरादृते ॥

3. சர்வஞ்ஞன் சொன்னதைக்கொண்டு வேதவாக்கை நீங்கள் சத்தியமாக நம்பும்பொழுது, அதே வேதப்பிரமாணத்தைக் கொண்டு, கடவுள் இருக்கிருரென்பதை எவ்விதம் நிரூபிக்கமுடியும்? பரமேசுவரன் இருக்கிருரென்பதற்கும் வேதம் அவருடையவாக்கே யென்பதற்கும் வேருன தனிப்பிரமாணமொன்றை நீங்கள் காட்டவேண்டும். எனவே பிரமாணத்திற்கு முடிவே ஏற்படாது.‡

விடை:—வேதங்களில் நம்புகிற நாங்கள் பரமேசுவரன், அவருடைய குண கர்மசுபாவம் ஆகியவைகளை அநாதியாகக் கருதுகிருேம். அநாதிப்பொருள்களை அன்யோன்யாசிரிய தோஷம் பாதிக்காது. காரணத்தினுல் காரியமும், காரியத்தினுல் காரணமும் வெளியாகிறமாதிரி காரியத்தில் காரணத்தினுடைய சுபாவமும் நித்தியமாயிருக்கின்றன. பரமேஸ்வரனும், பரமேஸ்வரனுடைய அனந்த கலைமுதலான குணங்களும் நித்தியமானபடியினுல் ஈசுவரனுல் ஆக்கப்பட்ட வேதத்தை அனவஸ்த தோஷம் பாதிக்காது. தீர்த்தங்கரர்களைத் தெய்வமாகக்கருதுவது எக்காலமும் உண்மையாகாது. ஏனெனில் பெற்ருேர்களன்னியில அவர்களுடைய சரீரம் அமையவில்லை. எனவே ஞானத்தையும் முக்தியையும் எவ்விதம அடைதல் கூடும்? சம்யோகத்தினுல் உண்டானதிற்கு ஆரம்பம் வேண்டும். ஏனெனில் வியோகமன்னியில் சம்யோகம் கிடையாது. ஆகவே அநாதியான பரமாத்மாவைச் சிருஷ்டிகர்த்தாவாக நம்புங்கள் ஒருவன் எவ்வளவு சிறந்த சித்தனுன பொழுதிலும் சரீரவமைப்பு முழுவதையும் செவ்வனே அறியமாட்டான். சித்தனுடைய ஜீவனுக்கு சுஷுப்தி நிலையில் ஞாபகம் ஒன்றுங் கிடையாது: துக்கத்தையடையுங்கால் ஜீவனுடைய ஞானமும் குன்றிப்போகிறது.

தடுமாறிய புத்தியையுடைய சமணர்களைத்தவிர வேறுயாரும் ஒரேவிடத்திலிருக்கிறதும், கட்டுகுட்ப்பட்ட சத்தியையும் உடையவனைத் தெய்வமாகக் கொள்ளமாட்டார்கள். தங்களுடைய பெற்ருேர்கள் மக்களென்றே தீர்த்தங்காரர்களைச்சொல்லுவீர்களேயானுல் பெற்ருேர்கள் எவருடைய மக்கள்? எங்கிருந்து உண்டானுர்கள். ஆகவே முடிவேகிடையாது.

---

* அதாவது ஒன்றையொன்று பொருத்திருக்கிறது. பிரமாணத்திற்கு ஒன்றுக்கொன்று ஆதரவாயிருக்கிறது.

‡ வடமொழியில் இதை அனவஸ்த தோஷமென்பார்கள். அதாவது முடிவில்லாமல் சொல்லிக்கொண்டே போவது. பிரமாணத்தில் தீர்ப்பு இல்லாதது:

ஆஸ்திக நாஸ்திக வாதம்.

ஆஸ்திகன் நாஸ்திகன் இருவனுக்கும் நடந்த வாதானுவாதத்தைப்பற்றி **பிரகரண இரத்தினகரம்** இரண்டாவது பாகத்தில் கண்டுள்ளவண்ணமேஎழுது வோம். இது ஒரே மனதாய் ஜைனர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு பம்பாயில் பிரசுரஞ்செய்யப்பட்டது.

நா:—ஈசுவரசங்கல்பத்தினுல் நடப்பது ஒன்றுங்கிடையாது. நடப்பதெல் லாம் கர்மங்களினுலேயே.

ஆ:—யாவும் கர்மத்தினுடைய பயனேயானுல் கர்மங்களைச் செய்கிறவன் யாவன்? செய்கிறவன் ஜீவனே என்றுல் அதற்குச்சாதகமாயுள்ள காது முத லிய அவயவங்களை ஆக்கியவன் எவன்? அவைகள் அநாதிகாலந்தொட்டுஇருக் கிறதென்றும் சுபாவத்தினுலுண்டாகிற தென்றும் சொன்னுல் அநாதியாயுள் ளது அழியாதே. எனவே முக்தி அசம்பவமாகுமே. பிராக்பாவத்தைப் (இருப்பிற்கு முன்னுல் இல்லாமலிருக்கிற நிலை) போல் அதற்கு ஆரம்பங் கிடையாது; முடிவு மாத்திரமுண்டு என்றுல் பிரயாசையன்னியில் எல்லோரு டைய கர்மங்களும் ஒழிந்துவிடுமே. (ஊழ்வினைப்பிரகாரம் சுகதுக்கங்களை யளிக்கும்) ஈசுவரனில்லாமல் போனுல் திருடர்களும் குற்றவாளிகளும் தங்க ளுடைய களவுமுதலிய குற்றங்களுக்காகத் தாங்களாகவே மனமிசைந்து தண் டனைகளை ஏற்றுக்கொள்வதில்லை போலவே, எஜ்ஜீவனும் சுயமாகவே அதனு டைய பாபகாரியத்திறகாகக் கஷ்டத்தை அனுபவிக்காது. இராஜநீதி அவர்களை அனுபவிக்கச் செய்கிறது. அதேமாதிரி பரமேஸ்வரன் ஜீவனுடைய பாபபுண்ணியபயன்களை அனுபவிக்கச் செய்கிறுர். அவ்விதமில்லாமல் போ னுல் அமைதியற்றுப்போய்விடும். அதாவது.ஒரு ஜீவன் கர்மங்களைச் செய்ய மற்றென்று அதனுடைய பயனை அனுபவிக்கும்.

நா:—ஈசுவரன் செய்கையற்றவர். ஏனெனில் கர்மங்களைச்செய்தால் அத னுடைய பயன்களை அனுபவிக்கவேண்டியவராகிறுர். ஆதலால் எங்களைப் போலவே நீங்களும் முத்தியடைந்த செய்கையற்றவர்களில் நம்புங்கள்.

ஆ:— கடவுள் செய்கையற்றவரல்லர். அவர் சுறுசுறுப்பாகவேயிருக்கி றுர். சேதன ஸ்வரூபமாயிருக்கும்பொழுது கர்த்தாவாய் ஏனிருக்கக்கூடாது? கர்த்தாவாயிருக்கையில் கிரியைகளிலிருந்து பிரிந்திருக்கமுடியாது. முக்தியைப் பெற்ற மானிடசரீரங்களாகியத் தீர்த்தங்கரர்களைத்தவிர வேறென்றுமில்லாத உங்களுடைய போலித்தெய்வங்களை அறிவாளர்கள் எவரும் நம்பார்கள். நிமித் தக்காரணங்களினுல் செய்யப்பட்ட ஈசுவரன் அநித்தியமாகவும் பராதீனமாகவு மேயிருக்கும். ஈசுவரனுவதற்குமுன்னர் ஜீவனுகவேயிருந்தது. பின்னர்ஏதோ ஒரு நிமித்தகாரணத்தினுல் ஈசுவரனுச்சுது. பிறகும் ஜீவனுய்விடும். ஏனெனில் ஜீவத்தன்மையான தன் சுபாவத்தை ஒருநாளும் உதரமுடியாது. அனந்தகாலம் வரையில் ஜீவனுகவிருந்து அவ்விதமே யிருக்கும். ஆகவே அநாதியான சுயம்சித்த ஈசுவரனிடத்தில் நம்பிக்கைவைப்பதேமுறை. நிகழ் காலத்தில் ஜீவன் பாப புண்ணியத்தைச் செய்கிறது. சுகதுக்கங்களை

யும் அனுபவிக்கிறது. செய்கையற்றவராயிருந்தால் பிரபஞ்சத்தை ஆக்கமுடியாது. பிராக்பாவத்தைப்போல்கர்மங்களை ஆரம்பமற்றதாகவும் அழிவையுடையதாகவும் நம்பினுல் கர்மம் சமவாய (இணைவிடாமல் நெருங்கின) சம்பந்தத்திராது. அதில்லாமல் போனல் சம்யோக (சேர்க்கையின்பயன்) ஏற்படும். எனவே அழிவையும் அடையும். முக்தி நிலையிலிருக்கும்ஜீவன்களைச்செய்கையற்றதாக நீங்கள் நம்பினுல் அவைகள் ஞானத்துடன் கூடினதா ? இல்லையா? கூடினதென்ருல் மனோவேலையுடன் கூடினதாயிருக்கின்றது. கூடினதல்ல வென்ருல் இறந்துபோய் கல்லைப்போல் ஜடமாய் ஒரு மூலையில் விழுந்து செய்கையற்றிருக்கிறதா வென்றுகேட்கிறோம் ? இதற்கும் ஆம் என்பீர்களானல் உங்களுடைய முக்தி உண்மைமுக்தியாகாது. இருளும் பந்தமுமேயாகும்.

நா:—எங்கும் ஈசுவரன் வியாபித்திருக்கவில்லை, வியாபித்திருந்தால் சசலபொருள்களும் சேதனத்துடன் கூடினதாயிருக்குமே. பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் மானிடர்களுள் பிரிவும் வித்தியாசமும் ஏற்பட்டிருக்காதே ? ஈசுவரன் ஒரே மாதிரியாய் எல்லாவற்றிலும் பரவியிருக்கிறபடியினுல் பிராணிகளுள் ஏற்றத் தாழ்விருப்பானேன் ?

ஆ:— ' பரவுகிறவர்' பரவியிருப்பது இரண்டும் ஒன்றேயாகாது. பரவுகிறவரோ எல்லாவிடங்களிலு மிருக்கிருர். ஆகாசம் எல்லாவற்றிலும் பரவியிருக்கிறது. பூமி, பானை, துணித்துண்டு ஆகியவைகளைப்போன்றவைகள் ஒரே விடத்திலிருக்கின்றன. இருந்தும் ஆகாசமும் பூமியும் ஒன்ருகாது. பானைத் துணித்துண்டு ஆகியவைகளில் ஆகாயம் பரவியிருந்தும், அவைகள் ஆகாசமாகாதுபோலவே பரமேசுவரன் சகலத்திலும் இருக்கிருர். இருந்தும் எல்லாம் சேதனமாகாது. அறிந்தவன் அறியாதவன், தர்மாத்மா அதர்மாத்மா ஆகியவர்கள் ஏற்றவர்களாயில்லாதிருப்பதுபோலவே வித்தை முதலான நற்குணம் உண்மை உறைத்தல் ஆகிய கர்மம், நஷ்டத்தை ஆகிய சுபாவம் இவ்வேற்றத் தாழ்வுகளினுலேயே பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரதீண்டாதவன் என்கிற வித்தியாசங்களுமிருக்கின்றன. வர்ணவியவகாரங்களைக் குறித்து முன்னரே சொல்லியுள்ளோம் (நான்காவது அத்தியாயத்தில் காணவும்).

நா:—ஈசுவரன் சிருஷ்டிகர்த்தாவாயிருக்கப் பெற்ருேர்களுடைய பிரயோசனம் யாது ?

ஆ:—ஆதியில் ஈசுவரனுல் சிருஷ்டிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் மைதுனத்தினுல் உண்டானவர்களல்ல. இதுவே ஐசுவரிய சிருஷ்டி எனவறியப்படும். சிருஷ்டிகர்த்தா அவரல்ல. ஜீவனுடைய வேலையைக்கடவுள் செய்யமாட்டார். மரம் பழம் பச்சிலை உணவுப்பொருள் ஆகியவைகளைச் சிருஷ்டித்திருக்கிருர். இவைகளைத் திரட்டிப் போரடித்து பொடியாக்கிச் சமையல்செய்து மனிதன் சாப்பிடாமல்போனுல் அவனுக்குப்பதிலாக ஈசுவரன் எதையும் செய்யமாட்டார் ? தன்னுடைய வேலைகளைச்செய்யாமல் போனுல் ஜீவனுக்குங்கூட ஜீவனங்கிடையாது. ஆதி சிருஷ்டியில் (மானிட) சரீரத்தைச்சிருஷ்டிப்பது ஈசுவரனுடைய வேலையும் அதற்குப்பின்னர் மக்களைப் பெறுவது மனிதனுடைய வேலையுமாகும்.

நா:—பரமாத்மா சாசுவதமாயும், அநாதியாயும், சிதானந்த ஞானஸ்வரூப மாயுமிருக்க அவர் ஏன் பிரபஞ்ப கஷ்டகஷ்டங்களிலும் சுகதுக்கங்களிலும் அகப்பட்டுக்கொள்ளவேண்டும் ? சிற்றறிவையுடைய மனிதன்கூட சுகத்தைத் தள்ளி துக்கத்தைக்கொள்ளமாட்டான். ஈசுவரன் மாத்திரம் ஏன் அவ்விதம் செய்யவேண்டும் ?

ஆ:—பரமாத்மா சுகதுக்கங்களிலகப்பட்டு உழலுவதுமில்லை; தன்னுடைய இன்பநிலையிலிருந்து மாறுவதுமில்லை. ஏனெனில் குறித்த ஒருவிடத்திலிருப் பவனே சுகதுக்கங்களுக்கு ஆளாகிறான். எங்கும் பரவியுள்ளவர் ஆகிறதில்லை. சிதானந்த ஞானசுவரூபமான பரமாத்மாவைத்தவிர வேறுயாரால் இப்பிரபஞ் சத்தைச் சிருஷ்டிக்கமுடியும்? பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கவேண்டிய சக்தி ஜீவனிடம்கிடையாது, ஜடத்திற்கும் சுயமாகவே ஆக்கச் சக்திகிடையாது. ஆகவே பிரபஞ்சத்தைச்சிருஷ்டித்து இன்பநிலையிலிருப்பவர் பரமாத்மாவே. பரமாணுக்களிலிருந்து பரமாத்மா சிருஷ்டியைச்செய்ததுபோலவே நிமித்தகா ரணமான பெற்றோர்களின் மூலமாக மக்கட்பேறு உண்டாகவேண்டுமென கட் டளையிட்டிருக்கிறார்.

நா:—முக்தி இன்பஸ்வரூபமாய், அவ்வின்பத்தில் இருக்கும் ஈசுவரன், ஆக் குதல் அளித்தல், அழித்தல் முதலிய சிறு தொழில்களில் புகுவானேன் ?

ஆ:—எக்காலமும் முக்தியிலிருப்பவர் ஈசுவரர். குறிப்பிட்ட இடத்தி லிருந்துகொண்டு, முக்தியைப்பெறுவதற்குமுன்னால் பந்தத்திலிருக்கும் உங்களு டைய தீர்த்தங்கரர்களைப்போன்றவர் அல்லர். ஆனந்தசுவரூபமான குணகர்ம சுபாவத்துடன் கூடின பரமாத்மா அற்பமான உலகத்தினுடைய ஆக்குதல் அளித்தல் அழித்தல் ஆகியவைகளைச் செய்வதினால் பந்தத்திற் குள்ளாகமாட் டார். ஏனெனில் ஒன்றையொன்று பற்றின உறவை உடையதே பந்தமும் மோக்ஷமும். பந்தத்திற்கு முக்தியும் முக்திக்குப் பந்தமுமுண்டு. பந்தத்தினால் பாதிக்கப்படாத அவருக்கு முக்தி எங்கிருந்து வரும். ஒரே விடத்திலுள்ள ஜீவனே பந்தம் முக்தி இவைகளையுடையதாகவாகிறது. அனந்தமாயும் எங் கும்பரவியும், எவ்விடத்திலும் இருக்கிற ஈசுவரன் நிமித்த காரணங்களினாலேற் படும் முக்திக்குள்ளாகமாட்டார். எனவே எக்காலமும் அவர் முக்தன்.

நா:—கஞ்சா சாப்பிடுகிறவர்கள் சுயவாகவே மயக்கத்தையடைவது போல் கர்மங்களின் பயனை ஜீவன் அடைகிறது. இதில் ஈசுவரவேலை யொன்றுமில் லையே.

ஆ:—அரசனன்னியில் திருடனும் கள்ளனும் சுயமாகவே சிறைக்குள் செல்லமாட்டான். கொலைபாதகனும் தூக்குமரம் பேறமாட்டான். நாட்டின் நியாயப்பிரகாரம் அவனே அவர்களை தண்டிக்கிறான். இதேமாதிரி அதத னுடைய கர்மங்களுக்கேற்றவாறு, ஜீவன்களுக்கு ஈசுவரன் தண்டனையையளிக்கி றார். தீயகாரியங்களுடைய பலனை அனுபவிக்க எஜ்ஜீவனும் விரும்புகிறதில்லை. எனவே பரமாத்மா நீதிபதியாயிருத்தல் அவசியமாகிறது.

நா:—சிருஷ்டிக்கு ஈசுவரன் ஒருவனேயாகமாட்டான். முக்தியடைந்த ஜீவன்களெல்லாம் ஈசுவரனாகிறது.

ஆ:—இது வீண்வாதமேயாகும். ஏனெனில் பந்தத்திலிருந்தபின்னர் முக்தியைப்பெற்ற ஜீவன் மீண்டும் பந்தத்திலகப்படவேண்டும். ஏனெனில் இயற்கையாகவே அது முக்தனில்லை. முக்தியைப்பெறுமுன் உங்களுடைய இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களும் பந்தத்திலிருந்தவர்களேயாம். எனவே அவசியம் மீண்டும் பந்தத்திலுழளவேண்டியவர்களே. பல ஈசுவரனிருந்தால் (ஜீவன்கள் அநேகமானபடியினால்) நம்மிலிவ்விடமிருப்பதுபோலவே, ஒருவருக்கொருவர் சண்டைச் சச்சரவினால் அடித்துக்கொண்டிருப்பதில்லையா.

நா:—மடையா! உலகத்தை ஆக்கியோன் எவனுங்கிடையாது. சுயமாகவே சித்தமானது இவ்வுலகம்.

ஆ:—இது சமணர்களுடைய பெரும்பிழையாகும். கர்த்தாவன்னியில் காரியமும் உண்டோ? ஆக்கியோனுக்குக் கஷ்டமில்லாமல் காரியம் சித்திக்குமா? மனிதப்பிரயத்தன மன்னியில் கோதுமை மாவாக அறைபடுவதையும் மாவு ரொட்டியாக மாறுவதையும், மாறின ரொட்டி கஷ்டமன்னியில் சமணர்களுடைய நெஞ்சைத்தாண்டி உள்ளே செல்வதையும்,பார்த்தவர்கள், எவரேனும் உண்டோ? நூல், சொக்காய், கைகுட்டை, கால்சராய், தலைகுட்டை, முதலானவைகளாகப் பட்டணங்களுக்கு அனுப்புமுன்னால் பஞ்சு இவ்விதமான மாறுதல் அடைந்ததைப் பார்த்ததில்லை. எனவே, கர்த்தாவாகிய ஈசுவரன்னியில் நானாவிதமான இப்பூவுலகம் எவ்விதம் உண்டாகும்? வீண்பிடிவாதத்தினால் கர்த்தாவன்னிலேயே பிரபஞ்சம் அனைத்தும் உண்டாச்சுதென்றால் மேற்சொன்ன துணிமுதலானவைகளும் சுயமாகவே உண்டாச்சுதென்பதைப் பிரத்தியட்சம் செய்ய வேண்டும். ? இவ்விதம் நிரூபிக்காமல் போனால் பிரமாண சூன்யமான உங்களுடைய வார்த்தைகளை அறிவாளர்கள் நம்பமாட்டார்கள்.

நா:—ஈசுவரன் விரக்தனா (சகலத்தையும் துறந்தவனா) அல்லது மோகிதனா(உலகப்பொருள்களில் பற்றுள்ளவனா)? விரக்தனாயிருந்தால் உலகச் சிருஷ்டியைப்பற்றிக்கஷ்டப்படுவானேன்? மோகிதனானால் பிரபஞ்சத்தை ஆக்க வேண்டிய சக்தி அவனிடம் கிடையாது?

ஆ:—கடவுளைப்பற்றி வைராக்யம் (துறத்தல்)மோகம் (ஆசை)இரண்டையும் சொல்லமுடியாது. ஏனெனில் எங்கும் பரவியுள்ளவன் எதையும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது, எதையும் மறுக்கவு முடியாது. ஈசுவரனைவிட மேலானது ஒன்றுங்கிடையாது. அவருக்குக் கிடையாப் பொருளுங்கிடையாது. எனவே எதையும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. வைராக்கியமும் மோகமும் ஜீவனைக்குறித்ததே தவிர ஈசுவரனைக் குறித்ததாகாது.

நா:—ஜகத்கர்த்தாவாயும் ஜீவன்களுடைய கர்மபலனை அளிக்கிறவராயும் ஈசுவரனை எண்ணுவீர்களேயானால் அவர் உலகவிவகாரங்களில் ஈடுபட்டு துன்பங்களை அனுபவிக்கநேரிடுமே?

ஆ:—மனிதர்களுடைய காரியங்களுக்கேற்றவாறு கஷ்டசுகங்களை அளிக்கிற தர்மசீலனான நீதிபதிகூட இவ்வுலகில், உலக இன்பதுன்பங்களினால் பாதிக்கப்படாமலிருக்க, அளவற்ற சக்தியைக்கொண்டபரமேசுவரன், இவ்வுலகிலகப்பட்டுக்கொண்டு சுகதுக்கங்களினால் பாதிக்கப்படுவார்? உங்களைப்போலவும் பரமேசுவரனிருக்கிறார் என்று உங்களுடைய அறியாமையினால் நம்புகிறீர்கள். அறிவின் குறைவு முதலிய தீமைகளிலிருந்து மீறவிரும்பினால் வேதாதி சத்திய சாஸ்திரங்களைக்கைப்பற்றுங்கள். மாயையிலகப்பட்டு ஏன் தடுமாறுகிறீர்கள் ?

सामिअणाइ अणन्ते च तूगइ संसार घोरकान्तरे । मोहाइ कम्मगुरु ठिइ विवाग वसनुभमइजवि रौ ॥ பிரகர. இரண்டாம்பாகம். 60.

பிரபஞ்சத்தைக்குறித்துச் சமணர்கள் எவ்விதஎண்ணங்கொண்டிருக்கிறார்களென்று அவர்களுடைய சூத்திரங்களின் துணைகொண்டே காண்பிப்போம். சுருக்கமாக மூலத்தைச்சொன்னபின்னர், அது எவ்வளவு பொய்யானது, என்பதைச்சொல்லுவோம்.

இதை ரத்தினசாரபாக என்னும் நூலின் இரண்டாவது பாகத்தின் சம்யக்தவபிரகாச பிரகரணத்தில் கௌதமருடையவும் மகாவீரருடையவும் சம்வாதத்தில் காணலாம்.

உலகத்திற்கு ஆதியுங்கிடையாது; அந்தமுங்கிடையாது. ஆக்கவும்படவில்லை; அழிந்தும்போகாது. அதாவது ஒருவரும் இதைப்படைக்கவில்லை யென்பதேயாம். ஏ. மடையா! பிரபஞ்சகர்த்தா எவனும் கிடையாது. அது ஆக்கப்படவில்லை. இல்லாமலும்போகாது"

ஆ:—சம்யோகத்தினாலுண்டானவைகள் அநாதியாயுமிராது! அனந்தமாகவுமிராது. காரியத்திற்கு, முதல் முடிவு, இரண்டும் தேவை. உலகிலிருக்கும் பொருள்களெல்லாம் சம்யோகவிசேஷத்தினாலுண்டானதே. ஆக்குதலுக்கும் அழித்தலுக்கும் காரணமானதே. ஏற்ற அறிவுள்ளவர்களாக உங்களுடைய தீர்த்தங்கரர்கள் இருந்திருந்தால் இவ்வித அசம்ப வார்த்தைகளை எழுதியிருக்கமாட்டார்கள். உங்களுடைய குருவைப்போலவே சிஷ்யர்களான நீங்களும். சமணர்களான உங்களுடைய பேச்சை நம்புகிறவர்களுக்கு உட்பொருள்களுடைய உண்மையான அறிவு விளங்காது. சம்யோகத்தினின்று பொருள்களை நேரிட்டுகொணும்பொழுதே அதனுடைய உற்பத்தியிலும் அழிவிலும் ஏன் நம்பமாட்டேன் என்கிறீர்கள்? அவர்களுடைய ஆசான்களுக்குப் பூகோளசாஸ்திரம் வானசாஸ்திரம் முதலானவைகளுடைய அறிவுகிடையாது. சமணர்களுக்கும் இவைகளைப்பற்றி யொன்றும் தெரியாது. கீழ்க்கண்ட அசம்பாவித வார்த்தைகளை எங்ஙனம் நம்பமுடியும்? கவனியுங்கள்! சமணர்கள் கூறும்வண்ணம் பிருதிவியும் 'பூமியும்' ஜீவனின் சரீரமே; ஜலத்தினுமிருக்கிறபொருள்களையும் இங்ஙனமே நம்புகிறார்கள். இவ்விதம் எவனாவது மதிப்பான்? பரிபூரண ஞானியென்றும் பரமேசுவரன் என்றும் ஜைனர்களால்

போற்றப்படும் தீர்த்தங்கரர்களின் பொய்ப்போதனைகளையுடைய சிலவற்றைக் கூறுவோம்:—

இரத்தினசாரபாகம் (இதைப் பிரமாணமாகச் சமணர்கள் போற்றுகிறார்கள். ஸ்ரீ காசி, சைன பிரபாகர அச்சியந்திர சாலையில் நானக்சந்த் ஜதீ என்பவரால் 1879 ஆம் ஏப்ரல் மீ 28உ அச்சிட்டு வெளியிடப்பட்டது) 145 பக்கத்தில் காலப்பகுதியின் விளக்கம் இங்ஙனம் கூறப்பட்டிருக்கிறது.

சமயம் சூட்மகால மாகும்.

அசங்கியாத சமயங்கள் = 1 ஆவலி.

16, 27, 216 ஆவலிகள் = 1 முகூர்த்தம். 30 முகூர்த்தங்கள் = 1 திவஸ். (நாள்) 15 திவஸங்கள் = 1 பக்ஷம். 2 பக்ஷம் = 1 மாசம். 12 மாசம் = 1 வருஷம்.

7,000,000 × 10,000,000
+ 50,000 × 10,000,000 } வருஷங்கள் = 1 பூர்வம்

அஸங்கியாத பூர்வம் = 1 பல்யோபமகாலம்

அஸங்கியாதத்தின் பொருள் இதுவேயாகும். நான்கு*கோசங்களையுடைய சரிசமானமான பக்கங்களையும், அதே ஆழத்தையும் உடைய சதுரமான குழி ஒன்றைத் தோண்டவேண்டும். பின்னர் ஜுகுலி மனிதனுடைய சரீரத்தின் மயிர்களின் துண்டுகளால் அதைக் கீழ்க்காணும்வண்ணம் நிரப்பவேண்டும். நம் காலத்திய சாதாரண மனிதனுடைய மயிரைவிட ஒரு ஜுகுலியுடைய மயிர் 4096 தடவை இலேசானது. அதாவது ஜுகுலியுடைய 4096 மயிர்கள் கொண்டது சாதாரண மனிதனுடைய மயிர். ஒரு கைவிரல்பரிமாணம் அகலம் நீளம் உள்ள ஜுகுலி மனிதனுடைய மயிரை எடுத்துக் கொள்ளுங்கள். அதை எட்டுத்துண்டுகளாகப் பிரியுங்கள். அது 2,097,152 துண்டுகளாகும் வரையில் பிரித்துக்கொள்ளுங்கள். இவ்விதத்துண்டுகளால் குழியை நிரப்புங்கள். பின்னர் 100 வருஷங்களுக்கு ஒரு தடவையாகக்குழியிலிருந்து ஒவ்வொரு மயிராக எடுங்கள். இவ்விதம் குழியில் ஒன்றுமில்லாமல் காலியாக வேண்டும். இவைகளெல்லாம் செய்து முடிவதற்கு எடுத்துக்கொள்ளும் காலமே ஒரு சங்கியாதம் ஆகும். 'அசங்கியாதம் அல்ல'. பின்னர் ஒவ்வொருதுண்டையும் அசங்கியாதத் துண்டமாகச் செய்யுங்கள். ராஜ இராஜனுடைய சேனைகள் அதன்பேரில் போனபொழுதிலும் கூட காலடி அடையாளம் விழாமலிருக்கும்படி அக் குழியை முன்சொன்ன துண்டங்களினால் நிறைக்கவேண்டும். மீண்டும் 100 வருஷங்களுக்கொருமுறை ஒவ்வொரு மயிர்த்துண்டாக எடுத்துக் குழியை காலி செய்யுங்கள். இவ்வேலைகள் முழுவதும் முடிவதற்கு வேண்டிய காலமே ஒரு பூர்வமாகும். இதேமாதிரி அநேக அஸங்கியாதாதி பூர்வங்கள் கொண்டது ஒரு பல்யோபம காலமாகும்,

---

* மைல் = $1\frac{3}{4}$ கோசம். இந்தியாவின் சில விடங்களில் 2 மைல்கள் = கோசம்.

1,00,000 × 1,00,000,000 பல்யோ பமகாலம்	= 1 சாகரோபமகாலம்.
1,00,000, × 100,000000. சாகரோப மகாலம்	1 = உத்ஸர்ப்பணி

1 உத்சர்ப்பணியும், 1 அவஸர்ப்பணியும் சேர்ந்தது. 1 காலச்சக்கரம். அனந்தகாலச்சக்கரங்கள் கொண்டது 1 புத்கலபராவிருத்தம். சமண நூல்களு டைய கணக்கை மீறினதாயும், ஒன்பது உதாரணங்களினுல் விளக்கப்பட்ட தாயுமுள்ளதே அனந்தகல்பம்.

ஜீவன் திரியவாரம்பித்ததிலிருந்து இவ்விதமான அநேக , அனந்த புகலபராவிருத்தம் கழிந்துள. கணித சாஸ்திரத்தில் கை தேர்ந்த புலவர்களே! சைன நூல்களில் சொல்லி யுள்ள வண்ணம் காலத்தை நிர்ணயம் செய்வீர்களா? செய்தாலும் அதில் நம்புவீர்களா? நவீன முறையிலுள்ள கணித வித்தையைக் கற்றிருக்கிருர்கள். சணசமயத்தின் ஆசான்களும் சீடர்களும் இத்தகையோர்களே! அவர்களுடைய அஞ்ஞான த்தின் ஆழத்தை அளவிடுதல் அரிதாகும். அவர்களுடைய அஞ்ஞான இருளை விளக்க வேண்டி இன்னும் சில உதாரணங்களைக் குறிக்க விரும்புகிருேம்.ரிஷப தேவன் முதல் மகாவீரன்வரையுள்ள இருபத்திஞன்குதீர்த்தங்கரர்களாலெழு தப்பட்ட சமணசமயத்தின் சாரம் எனபதை ரத்தினசாரபாகம் பக்கம் 133ல் காணலாம். இப்புத்தகததின் 148 பக்கத்திலேயே பூமியின் பகுதிகளான பூமி யையும் கற்களையும் பிருதிவிகாயப் பிராணிகளென்று கொள்ளவேண்டும் என் கிறது. இப்பிராணிகளின் சரீரப்பரிமாணம், விரலுடைய அகலத்தின் ஒரு சிறு துளிபாகத்தை யொத்திருக்கிறது. அதாவது அதி நுட்பமானது; அவை களின்வயது 22,000 வருஷங்களுக்குமேலிருக்கும். இதே நூலின் 149 பக்கத் தில் கூறும் வண்ணம். செடியொன்றில் எண்ணுதற்கியலாத ஜீவன்களிருக் கின்றன. இவைகளே சாதாரண வனஸ்பதியாகும். கந்தமூலங்களும், வேர் களும், அனந்தகாயமுதலானவைகளும் சாதாரணசெடிகளுடைய ஜீவனுகும். அவைகளுடைய ஆயுள் காலம் ஒரு அனந்தமுகூர்த்தமாகும். மேலே சொன்ன சைன முகூர்த்தமேயாகும் இது. ஒரே இந்திரியம் (ஸ்பர்சேந்திரியம்) ஒரே ஜீவன் இவைகளேயே யுடையது சாதாரணசெடி. அஜ்ஜீவனின் சரீரப்பரிமாணம் 4,000 யோசனைகள் நீளமுள்ளது. புராணிகர்கள் (புராணங்கள் முதலானவை களை நம்புகிறவர்கள்) சொல்லும் வண்ணம் 4 கோசங்கள் கொண்டது ஒரு யோசனையாகும். சைனர்கள் கூறும் வண்ணமோ 10,0000 கோசம் கொண் டது ஒரு யோசனை 10,000 வருடங்களுக்குமேல் அதனுடைய வாழ்நாளா கும். சரீரம், முகம் ஆகிய இரண்டு இந்திரியங்களை கொண்ட ஜீவனைப்பற்றி சொல்லுவோம். சங்கு, பேன் இவைகளைப்போன்றது. அவைகளுடைய ஸ்தூலசரீரம் குறைந்தது 48 கோச நீளமுள்ளது. ஆயுள்காலம் 12 வருஷங் களே. ஆசிரியர் இவ்விஷயத்தில் பெரும்பிழையை இழைத்தவருகிருர். இவ்

வளவு பெரிய சரீரத்தையுடைய பிராணியின் ஆயுள் காலம் இன்னும் அதிகமாயிருத்தல் வேண்டும். 48 கோச நீளமுள்ள பேன்கள் சமணர்களுடைய சரீரத்திலேயேகாணப்படும். அவர்களே அதைக்காண்கிறவர்களும். வேறுயாரும் அவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் அல்லர். இரத்னசாரபர்க பக்கம் 150:-அவர்களுடைய தேள், மூட்டுப்பூச்சி, தெள்ளுப்பூச்சி, ஈ, முதலியவைகளுடைய சரீரம் ஒருயோஜனை நீளமுள்ளது. அதிகமாக அவைகள் 6 மாசத்திற்கு மேலிருப்பதில்லை, சைனர்களைத்தவிர மற்றவர்கள் 8 மைல் நிகளமுள்ள தேள்களையும் ஈக்களையும் கண்டது கிடையாது. சைனசமயத்திலேயே 8 மைல் நீளமுள்ள தேள்களும் ஈக்களுமுண்டு. இவ்விதத்தேள்களும் ஈக்களும் சைனர்களுடைய வீட்டிலேயே இருக்கும். உலகில் அவர்களே அவைகளைக் கண்டிருப்பார்கள். இவ்வித தேள்களிலொன்று சைனர்களைக்கொட்டிவிட்டால் எவ்வித கஷ்டத்தை அனுபவிப்பார்கள் என்று ஊகிக்கமுடியாது. நீரில்வாழும் மீன்போன்ற இவைகளின் சரீரங்கள் 1,000 யோசனை நீளமுள்ளன. ஒரு யோசனைக்கு 10,000 கோசங்களாக, ஜலப்பிராணிகளுடைய சரீரம் 10,000,000 கோசங்கள் நீளமானதாக இருத்தல் வேண்டும். அவைகளுடைய வயது 10,000,000 பூர்வ வருஷங்களாம். இப்பெரிய பிராணிகளைச்சைனர்களைத்தவிர வேறு யாவர் கண்டிருர்கள்? யானைகளைப்போன்ற நாலுகால்விலங்குகளுடைய சரீரம் 2 விருந்து 9 கோச நீளம் வனரயிலிருக்கிறது. அவைகளுடைய வயதும் 84,000 வருஷங்கள். சைனர்களைத்தவிர வேறு எவரும் அவைகளைக் கண்டிருக்கமாட்டார்கள். அவர்களே அவைகளுடைய வகுப்பில் நம்பவுங்கூடும். அறிவுள்ளவன் எவனும் இவை போன்றவைகளை நம்பமுடியாது.

இரத்தினசாரபாக பக்கம் 161:—நீரில்வாழும் மூலையூட்டும் பிராணி வர்க்கத்தினுடைய சரீரம் 1,000 யோசனை அல்லது 10,000,000 கோசங்கள் நீளமாகவும், 100,000,000 வருஷங்கள் வயதுள்ளதாகவு மிருக்கின்றன. இப்பெரும் சரீரத்துடன்கூடின பிராணிகளைச் சைனசமயத்தைத் தாபித்த ஆசாரியர்களே அவர்களுடைய கனவில் கண்டிருக்கக்கூடும்? இவைகளெல்லாம் பெரும்புரட்டுகளில்லையா? அவ்வளவு அவநம்பிக்கையானவைகளாயிருக்கின்றன.

பூமியுடைய பரிமாணத்தைக் கேளுங்கள்.

இரத்தினசாரபாக பக்கம் 153:—கோணலான இக்கிரகத்தில் அசங்கியாத நிலங்களும் அசங்கியாத சமுத்திரங்களும் இருக்கின்றன. 2½ சாகரோபம் காலத்தில் எவ்வளவு வருஷங்களிருக்கின்றனவோ அவைகளே அசங்கியாத காலத்தினல் குறிக்கப்பட்ட வருஷங்களாகும். இப்பூமியில் சகல தீவுகளின் மத்தியில் ஜம்பூத்துவீபம் இருக்கின்றது. அதன் சுற்றளவு 100,000 யோஜனைகள் அல்லது சதுரகோசங்களில் 1,000,000,000. நான்கு பக்கமும் உப்பு சமுத்திரத்தினல் சூழப்பட்டது. இதன் சுற்றளவு 200, 000 யோஜனைகள் அல்லது 2, 000, 000, 000 (சதுர) கோசங்கள். அதற்கடுத்தாற்போல், ஜம்பூத்வீபத்திற்கப்புரம் காதகீகண்டமிருக்கிறது. 4, 000, 00 யோஜனை அளவுள்

ளது. அதற்குப்பிறகுக் காலோததி என்னும் சமுத்திரம் இருக்கிறது; அதனுடைய சுற்றளவு 2,000,000,000 (சதுர) கோசங்கள். அதற்குப்புரம் புஷ்கராவர்த்த என்னும் தீவு இருக்கிறது. அதனுடைய உள்பாகம் ரேகைகளினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. சரி பாதிமனிதர்களால் வசிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கப்பால் கணக்கற்ற தீவுகளும் சமுத்திரங்களும் இருக்கின்றன. இவைகளில் ஊர்வனவைகள் உயிர் வாழுகின்றன.

இரத்தின சாரபாகபக்கம் 153:—ஜம்பூத்வீபத்தில் ஹிமவந்தம் ஏறண்டவந்தம், ஹரிவர்ஷம், ரம்யக், தேவகுரு, உத்தரகுரு என கண்டங்கள் ஆறு இருக்கின்றன.

விடை:—பூகோள சாஸ்திரம் அறிந்தவர்களே! உலகத்தின் அளவை அறிவதில் வழுவினவர்கள்நீங்களா அல்லது சைனர்களா? சைனர்களுடையது தப்பாயிருந்தால் தயவு செய்து திருத்துவீர்களா? அல்லது உங்களுடையதாயிருந்தால் திருத்திக்கொள்வீர்களா? இதைத் தீர்மானஞ் செய்து முடிவு செய்து கொள்ளுங்கள். சிறிதளவு யோஜனையில், சமண நூலாசிரியர்களுக்குப் பூகோள சாஸ்திரம், கணிதசாஸ்திரம், வானசாஸ்திரம் ஆகியவைகள் கொஞ்சங்கூட தெரியாதென்பது நன்கு விளங்கும். இவ்விதமானவர்கள் சிருஷ்டியை ஆக்கப்படாததாக நினைப்பதும் கடவுளை இல்லாததாகக் கருதுவதும் விந்தையோ? சைனர்கள் பிறமதங்களைச்சார்ந்த கற்றுணர்ந்தவர்களிடம் தங்கள் நூல்களைப் படிக்கக்காண்பிக்கிறதில்லை. ஏனெனில் பிரமாணங்களாகவுள்ள அவர்களுடைய தீர்த்தங்கார்களா லெழுதப்பட்ட புத்தகங்கள் அறிவிற்கு மாறானவைகளால் நிறைந்திருக்கின்றன. எவரேனும் கண்டால் அதனுடைய ஊழல்களை வெளிப்படுத்துவராகையினால் மற்றவர்களைக் காணவும் விடுகிறதில்லை. ஜைனர்களைத்தவிர கொஞ்சம் அறிவுள்ளவேறு எவரும் இவ்வித கயிறுகளை நம்பமாட்டார்கள். உலகம் அநாதி என்பதைப்புகட்டவே ஒவ்வாத இவைகளைத்தாபித்தார்கள். இது முழுப்பொய்யே! உலகத்தின் காரணம் அநாதியென்பது உண்மையே. ஏனெனில் பரமாணுக்கள்—எவ்விதத்திலும் மேலும் பிரிக்க முடியாதுளிகள்—அடிப்படை ஆதாரங்கள். ஆக்கப்படாதவைகளுக்கு நியம பூர்வகமாய் (ஏற்றவாறு) கலந்து கொள்ளவும் பிரிந்து கொள்ளவும் போதிய சக்தி கிடையாது: பரமாணுக்கள் பொருளே தனித்தனியானது ஜடமானது. தக்கவாறு தானகவே சேர்ந்துகொள்ளாது. எனவே சேர்த்துவைக்கச் சேதன பரம்பொருள் ஒன்று தேவை. அவரே ஞானஸ்வரூபர். பிருதிவி, சூரியன் முதலான உலகங்களை நியமித்திலிருத்துவது அநாதியானசேதன பரமாத்மாவினுடைய வேலையே. எதில் சம்யோக (சேர்க்கை) காரியத்தினுடைய சிறப்புவெளிப்படுகிறதோ, அந்த தூல உலகம் அநாதியாகாது. காரியத்தையே அநாதியென்றால், அதற்குக்காரணமிராது. அதாவது காரணமும் காரியமும் ஒன்றேயாகும். எனவே ஆத்மசிரயி இதுவோ உண்மையாகாது. ஏனெனில் தன்னுடைய தோள்களில் தானே நிற்கமுடியாது.

தன்னுடைய தகப்பனும், பிள்ளையும், தானே ஆகமுடியாது. எனவே உலகத்தைச் சிருஷ்டிக்கும் கர்த்தாவினுடைய அவசியம் வெளியாகிறது.

வினு:—கடவுள் ஜகத்தைப்படைத்தவராயிருக்க, அவரைப்படைத்தவன் யார் ?

விடை:—படைத்தவனுக்குப் படைத்தவனும் காரணத்திற்குக் காரணமுங்கிடையாது. முதல் படைத்தவர் அல்லது முதல் காரணம் இருந்ததினுலேயே (உலகம்) காரியம் வெளியாகிறது. சம்யோகவியோகம் இல்லாததும் முதல் சம்யோக வியோகத்தின் காரணமுமானதைப்படைத்தவரும் கிடையாது. காரணமுங்கிடையாது. இதைப்பற்றி இந்நூலின் எட்டாவது அத்தியாயத்தில் நன்கு விளக்கியுள்ளோம். சந்தேக நிவர்த்திகளுக்கு அதைக் கவனிக்கவும். வெகுசுலபமானவிஷயங்களைப்பற்றியே அறியமுடியாமலிருக்க மிகவும் நுட்பமான சிருஷ்டி விஷயத்தைப்பற்றிச் சைனாகள் எவ்விதம் அறிவார்கள் ?

சிருஷ்டி அநாதியானது; அனந்தமானது. ஒவ்வொரு பொருளின் சேர்க்கையும் அநாதியானது: அனந்தமானது. பிரதிகுணங்களும் அநாதியானது, அனந்தமானது. பிரகரண ரத்தினகரத்தில் கூறப்பட்டுள்ள சமணர்களின் இந்நம்பிக்கைகள் ஒவ்வாதது. ஏனெனில் குணங்களும் குணக்குறிகளும் எல்லையுள்ளதாயிருக்கஅவைகள் முடிவுள்ளதாகவேயிருத்தல் வேண்டும். முடிவற்றது என்னும்பதத்திற்குகணக்கற்றதெனப்பொருள் கொள்வீர்களானுல் அதுவும் தப்பானதே. ஜீவனைப்பொறுத்தவரையில் அதுசரியாயிருக்கலாம். ஆனுல்பரம்பொருளைப்பொறுத்தவரையில் ஆகாது. கீழ்க்காணும் சைனர்களுடையநம்பிக்கைகளிலிருந்து அவர்களுடைய சிற்றறிவு வெளியாகும். உலகிலுள்ள ஒவ்வொருவஸ்துக்களும் வெவ்வேறுனது; மீதி யொன்றுடன் பேச முடியாதது, காரியத்தைவிளைவிக்கவல்லது; காரணரூபங்களாகப்பிரியவல்லது. கணக்கற்றவஸ்துக்கள் உலகிலிருக்கிறபடியினுல், உருவங்களும் அனந்தமானதே. வஸ்துக்களில் உள்ளசக்தியும் அனந்தமானதே. எல்லையுள்ளதாயிருக்க பரமாணுவில் எவ்விதம கணக்கற்ற உருவங்களிருக்கக்கூடும் ? குணங்களைப் பொருத்தமட்டில கணக்கற்ற உருவங்களைக் கொண்டதென்று பொருள்களை நம்புவது குழந்தைப்பேச்சாகும். ஏனெனில் பரிமாணமுள்ளதாய்இடம் இருக்க, அதனுள் அடங்கியிருக்கும் பொருள்கள் எவ்விதம் அனந்தமாகமுடியும் ? சமணர்களுடையநூல்களில் காகா பூனைக்கதைகள் இன்னும் அதிகமாகவிருக்கின்றன. ஜீவன் அஜீவன் இவ்விருபொருள்களைப்பற்றி அவர்களுடைய சித்தாந்தமென்னவென்றுல்:—

चेतनालक्षणो जीवः स्यादजीवस्तदन्यकः ।
सत्कर्मपुद्गलाः पुण्यं पापं तस्य विपर्ययः ॥

ஜினதத்த ஸூரி என்னும் நூலில் இதைக்காண்கவும். சேதன விளக்கத்துடன் கூடினது ஜீவன். சேதனமற்றது அஜீவன். (சடம்) நற்கிரியைகளுடைய அணுவே புண்ணியமும் தீயகர்மங்களுடைய அணுவே பாபமுமாகும்.

விசாரிப்போன்:—ஜீவன், ஜடம், இவைகளுடைய விளக்கம் பொருத்தமானதே. ஆனால் ஜட அணுக்களைப் புண்ணியமானது பாபமானது என்று கூறுவது பொருந்தாது. ஏனெனில் பாப புண்ணியங்களைச் செய்யும் சுபாவம் சேதனித்திலேதான் உண்டு. கவனியுங்கள்! உள்ள சகல ஜடப்பொருள்களும், பாப புண்ணியங்களிலிருந்து, விலகினதாயிருக்கிறது. ஜீவனை அநாதியாகக் கருதுவது சரியே. ஆனால் அற்பஞ்ஞமான ஜீவனை முக்தியின்பத்தில் சர்வஞ்ஞமாக வெண்ணுவது பொய்யே. ஏனெனில் எது அற்பமோ அற்பஞ்ஞமோ அது அதனுடனேயே விளங்கும். பிரபஞ்சம், ஜீவன், ஜீவனுடைய கர்மம், பந்தம் ஆகியவைகளைச் சைனர்கள் அநாதியாகக்கருதுகிறார்கள். இவ்விஷயத்திலுங்கூட சமணர்களுடைய தீர்த்தங்கரர்கள் வழுவி விட்டார்கள். ஏனெனில் படைக்கப்பட்ட பிரபஞ்சம் (சம்யோகவிசேஷத்தினலுண்டானது), சிருஷ்டியானபிறகு சங்கிலித்தொடரைபபோல் காரியங்கள் நடைபெறுவது, மனிதனுடைய கர்மங்களும், புனர் ஜனனம், இவைகள் அநாதியாகவிருப்பது வீண்வார்த்தையே. இவ்விதமிருந்தால் சைனர்கள் இருப்பின் கோர்வையில் எவ்விதம் நம்புவார்கள். கர்மங்களைச் செய்யவேண்டியதின் அவசியமு மற்றுப் போகுமே? அநாதிக்கு முடிவு கிடையாது. அநாதிப் பொருள்களெல்லாம் அழிவுள்ளதே என்று சொல்லப்படுமேயானல் உங்களால் அநாதியென மதிக்கப்படுகிறவைகளெல்லாம் ஒரு சிலகாலமே இருக்கும். அநாதி என்னும் பதத்திற்கு 'முடிவற்றது' எனப்பொருள் கொள்ளப்படும் பட்சத்தில் கர்மங்களையும் மறு ஜனனத்தையும் எக்காலமுமில்லாததாக நினைக்காமலிருப்பது முடியாத காரியம். இவ்விதமிருக்க, ஒரு சிலகாலத்திற்கே ஓய்வை யடையும் முக்தியானது கொஞ்சகாலமே இருக்கும். எக்காலமும் இராது. கர்த்தா, காரியம் இவ்விரண்டினுடைய பரஸ்பர ஒற்றுமையும் நிரந்தரமாயிருக்கையில் காரியமற்றுபோகாது. அழியாத முக்தியின்பத்தைத் தீர்த்தங்கரர்கள் அடைந்துவிட்டார்களென்பதும் அதைப்போலவே மற்ற சமணர்களும் அடையலாம் என்பதும் சமணர்களுடைய இந்நம்பிக்கை மறுக்கிறது.

வினு:—உமியிலிருந்து வெளியானபொழுதிலும் அல்லது அக்கினி சம்பந்தப்பட்டபொழுதிலும் நெல் விளையாது. எனவே முக்தியடைந்த ஜீவன் திரும்பவும் பிறப்பு இறப்பு ரூபமாகிற சம்சாரத்தில் வரமுடியாது?

விடை:—ஜீவனுக்கும் கர்மங்களுக்கும் உள்ள சம்பந்தம் அரிசிக்கும்உமிக்கும் உள்ள சம்பந்தத்தைப்போன்றதல்ல. சமவாயி (பிரிக்கமுடியாத சேர்க்கை) சம்பந்தமேயாகும். ஜீவன் அநாதி; கர்மங்களும், கர்மங்களைச் செய்யவல்ல ஜீவனுடைய சக்தியும், அநாதி காலந்தொட்டே பிணைக்கப்பட்டது. அவைகளில் கர்மங்களைச்செய்ய வேண்டிய சக்தி இல்லையென நினைத்தால், சகல ஜீவன்களும் கற்களைப்போலாகி, முக்தியின்பத்தை யனுபவிக்கத்தகுதியற்றதாகிறதென ஏற்படுகிறது. அநாதி காலந்தொட்டு ஏற்பட்டுள்ள கர்மங்களுடைய கட்டிலிருந்து ஜீவன் விலகினுல், (சமணசமயப்பிரகாரம்) நிரந்தரமாயுள்ள முக்தியையடைந்தபிறகு மறுபிறப்பிற்கு ஆளாகும். ஏனெனில் முக்திக்குக் காரணமான கர்மங்களுடைய கட்டிலிருந்து மீறின ஜீவன், ஓயாத நித்திய

முக்தியை அடையுமேயானால், அது நித்திய முக்தியை விட்டு(பிறப்பு, இறப்பு) கட்டுக்களில் பின்னும் வரக்கூடும்? சிலகாரணங்களின் பயனாக வினை யும் காரியம் எப்பொழுதும் நித்தியமாகமாட்டாது. அதற்குவேண்டிய சாத கங்களைப் பழகாமலே முக்தி சித்திக்கும் என்று நம்புவீர்களேயானால், சாதகங்க ளன்னியிலேயே பந்தத்திற்கு ஜீவன்களுடைய திரும்புதலில் நம்ப ஏன் முடி யாது? அழுக்கினால் பாழான துணியானது தோய்ப்பதினால் சுத்தமாகிறது. பின்னும் அழுக்காகிறது. இதைப்போலவே இராகத்துவேஷத்தினால் பீடிக்கப் பட்டு பகையினால் பாதிக்கப்படுவதினால் ஜீவன்கள் கர்மங்களைச் செய்ய வேண் டியவைகளாகின்றன. மெய்யறிவு, சத்சங்கம் நல்லொழுக்கம் முதலானவைக ளினால் ஜீவன் பரிசுத்தமடைந்து, கெடுதலானவைகளினால் அசுசியாகிறது என்று நம்பினால் முக்தி இன்பத்திலிருக்கும் ஜீவன்கள் (பிறப்பு இறப்பாகிற) பந்தத்திற்குத்திரும்பும் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளவேண்டும். ஏனெ னில் வெளிச் சந்தர்ப்பங்கள் அதைப் பரிசுத்தமாக்குகிற மாதிரியே பாதிக்கவும் செய்யும். சிருஷ்டிகாலந்தொட்டு பந்தம்முக்தி இவைகளினால் ஜீவனை அநாதி என்று எண்ணுங்கள். அனந்தத்தினால் அநாதியில்லை, இதுவே உண்மையானது.

வினா:—எக்காலமும் ஜீவன் சுத்தமாகாதே. அசுசியானதே?

விடை:—எக்காலமும் சுத்தமில்லாமலிருந்தால் எப்பொழுதும் சுத்தமுள் ளதாகாது. சுயவெள்ளையான தகட்டின்பேரிலிருக்கும் அழுக்கைக்கழுவினால் சுத்தமாகும்: ஆனால் அதனுடைய இயற்கை வெள்ளை நிறத்தை மாற்ற முடி யாது. ஒருதடவை கழுவினபின்னரே அழுக்கு, தட்டை அசுசிபடுத்தக்கூடும், எனவே முக்தியடைந்த ஜீவன் பாபத்திற்காளாகலாம்.

வினா:—ஊழ்வினைப் பயனுக்கேற்ப மனிதப் பிறப்பையடையக் கடவுளு டைய இருப்பில் நம்புவது மடமையே?

விடை:—ஊழ்வினைப்பயனாலேயே சரீரமுண்டாகிறதே தவிர ஈசுவர னால் அல்ல என்றால் ஒரு ஜீவன் தானாகவே துன்பத்தைத்தரும் பிறப்பை யடையாது. எககாலமும் மேன்மேலான பிறப்பையே எடுத்துக்கொள்ளும். ஊழ்வினைப்பயனின் வசமானதே ஜீவன் என்றால் சரியாகாது. ஏனெனில் சுயமாகவே திருடன் தண்டனையை விதித்துக்கொள்ளமாட்டான் (கொலைபா தகனும்) தூக்குமரத்திலேறமாட்டான். அதிகாரம் படைத்த அரசனுடைய ஆஞ்ஞைகளினாலேயே இவைகள் நிறைவேற்றப்படுகின்றன. சரீரமெடுப்ப தற்கும் ஊழ்வினைபயன்களுக்குத்தக்கவாறு பிறப்பையளிப்பதற்கும் கடவுளே காரணமென்று நீங்கள் நம்பாமலிருக்கமுடியாது.

வினா:—குடி, மயக்கத்தை உண்டுபண்ணுவதுபோலவே வெளிசகாயமன் னியிலேயே தன் கர்மங்களுக்கேற்ற பயனை ஜீவன் பெறுகிறது?

விடை:—இது அறிவீனமே. குடிப் பழக்கத்திற்குப் புதிதானவர்கள் மயக் கத்தை அடைவது போல, பழகினவர்கள் அடைவதில்லை. உங்களுடைய சித்தாந்தம் சரியாயிருக்குமேயானால், சில பாபஞ்செய்தவர்கள் அடையும் கஷ் டங்களைவிட குறைவாகவே பெரும்பாபிகள் பெறல்வேண்டும்.

வினா:—சுபாவத்திற்கு ஏற்றவண்ணம் ஒவ்வொருவனும் தண்டிக்கப்படுகிறான். விடை:—சுபாவத்திற்கேற்ற விதமானால் அதற்கு ஆரம்பமும் முடிவும் கிடையாது. எவ்விதமெனில் எதிர்பாராத காரணங்களினால் சுத்தமான தகடு அழுக்காகாமலும் அழுக்கடைந்தது பழைய சுத்தத்திற்குத் திரும்பாமலும் இருப்பதுபோலவே அன்னியகாரணங்களால் பாபபுண்ணியபயன் ஏற்படுகிறதில்லை.

வினா:—காரியசித்திக்குச் சம்யோகம் (சேர்க்கை) தேவையானது. தயிருக்குப் பால், புளிப்பு இவ்விரண்டினுடைய சேர்க்கையும் அவசியமானது. இவ்விதமிருக்க (பரிசு, தண்டனை) இவைகள், கர்மங்களுடன் ஜீவன் சேருவதினால் உண்டாகிறதென நம்பக்கூடாது?

விடை:—சேர்த்துவைக்கிற அன்னியப் பொருளன்னியில் பாலும் புளிப்பும் சேருகிறதில்லை. ஜீவன்களுடைய கர்மங்களுடன், அவைகளுடைய பலனைச் சேர்த்துவைக்க மூன்றாவதான ஈசுவரன் தேவை. ஏனெனில் ஜடப்பொருள்கள் ஏற்றவாறு இயற்கையாகவேசேர்ந்துக்கொள்ளகூடியதன்று. ஜீவன் அற்ப்பஞ்ஞமானபடியினால் தானகவே தன்னுடைய கர்மபலன்களை அறியக்கூடியதன்று. எனவே ஈசுவரனால் நிர்ணயிக்கப்பட்ட சிருஷ்டி கிரமப்பிரகாரமே ஊழ்வினைகளுடைய பலன்விளைகின்றன.

வினா:—கர்மங்களிலிருந்து விடுதலையடைகிறவனே (முக்தியைப்பெற்று) ஈசுவரனாகிறான்! விடை:—அநாதிகாலந்தொட்டு ஜீவனுடன் கூடவே கர்மமும் இருந்துவருகிறது. அதிலிருந்து ஜீவன் விலகியிருக்கமுடியாது.

வினா:—கர்மங்களைச்செய்யவேண்டிய அவசியம் ஆரம்பமற்றதன்று.

விடை:—இவ்விதமானால் கர்மங்களை ஜீவனுக்குச் செய்ய சக்தியில்லாதிருந்தகாலம் ஒன்றிருந்திருக்கவேண்டும். எனவே அது விளங்காமலிருந்த பொருள் ஒன்றில் கர்மங்களைச் செய்யும் சக்தி புகுத்தப்பட்டதாகும். இவ்விதமிருக்க ஏன் முக்தியைப்பெற்ற ஜீவன்களைக்கொண்டு கர்மங்களைச் செய்யச் சொல்லக்கூடாது? கர்த்தாவிற்கும் கர்மத்திற்கும் உள்ள சம்பந்தம் பிரிக்கமுடியாதது. எக்காலமும் வேறாகாது. இதைப்பற்றி எட்டாவது அத்தியாயத்தில் எழுதியுள்ளோம். எவ்வளவு படர்ந்தஞானம் சக்தி ஆகியவைகளைக் கொண்டிருந்த பொழுதிலும் ஜீவன், கடவுளுக்குச்சரியாகாது. ஏனெனில் இக்குணங்கள் எல்லையுள்ளவைகளே. யோகபலத்தினால் தன் சக்தியை வேண்டிய அளவுஉபயோகித்துக்கொள்ளலாம். சரீரத்தைப்போலவே ஜீவனும் விருத்தியடையக்கூடியதென்று சமணர்கள் நம்புகிறார்கள். இது ஏற்காததே. ஏனெனில் சிறு புழுவினுடைய ஜீவன், யானையுடைய சரீரத்திலும், யானையுடைய ஜீவன் புழுவினுடைய சரீரத்திலும் தங்கமுடியாதே என்று வினவவேண்டும். துளி அணுவிலுங்கூட இருக்கவல்ல சூக்ஷ்மபொருளேயாகும் ஜீவன். ஆனால் அதனுடைய சக்தியோ கிரம்பு,மின்சாரம்,சரீரம் முதலானவைகளுடன் கூடியிருந்திருக்கிறது. எனவே சரீரத்தில் நடக்கும் எல்லாவற்றினுடைய அறிவும் அதற்கு உதயமாகிறது. நல்லொழுக்கத்தினால் நன்மையையும் தீயவொழுக்கத்தினால் தீமையையும் அடைகின்றது. சமணசமய நம்பிக்கைகளை இவைகள் விளக்கிக்காட்டும்.

रे जीव भवदुहाइं इकं चिय हरइ जिणमयं धम्मं ।
इयराणं परमं तो सुहकय्ये मूढमुसि ओसि ॥ பிரக. இரத். 2, 60, 3.

"ஏ ஜீவனே! சமணமுனிகளால் வெளியிடப்பட்ட தர்மத்தைப் பற்று வதிலுலேயே பிறப்பு இறப்பினுடைய துக்கங்களும், லௌகிகப்பொருள்களின் ஆசைகளும் தீரும். சமணமுனிகளேயே பரமாசிரியர்களாகவும் மெய்யான தேவர்களாகவும் நீ நம்புவாயாக. ரிஷபதேவர் முதற்கொண்டு மகாவீரன் வரையிலுள்ள சமணமுனிவர்களைத்தவிர வேறான பிரம்மா ஹரிஹர முத லானவர்கள் பூஜிக்குத்தகுந்தவர்களல்லர். சுய க்ஷேமத்திற்காக அவர்களைப் பூஜிப்பவர்கள் பேதைகளே. சமணசமயத்தையும் அதனுடைய முனிகளை யும் நம்பாமல் பிறசமயஆசாரியர்களின் போதனைகளை நம்புகிறவர்களுக்கு நன்மை யொன்றும் விளைகிறதில்லை" இங்ஙனம் சமணர்கள் கூறுகிறார்கள். சமண நூல்கள் எவ்வளவு திறமையற்றதென்பதை கற்றுணர்ந்தவர்கள் கவ னிக்கவேண்டும்.

अरिहं देवो सुगुरु सुद्धं धम्मं च पंच नवकारो ।
धन्नाण कयच्छाणं निरन्तरं वसइ हिययम्मि ॥ பிரக. இரத். 2, 60, 2.

தேவர்களுக்கெல்லாம் தேவனும், பிரகாச சுவரூபனும், புண்ணிய புருஷனும், சர்வத்தையும் அறிந்தவனும், சாஸ்திரங்களைப் போதிக்கிற வனும், பரிசுத்தனும், மாசற்றவனும், தயாளுவாயும், உள்ள ஜினர்களால் கூறப்பட்டவழிகளைக்கொண்டு ஒழுகுவதினுலேயே துக்கத்திலுழலுகிறவர்கள் முன்னேற்றமடையலாம். ஹரிஹர முதலானவர்களால் போதிக்கப்பட்ட சமய மானது உலகநன்மையை உண்டாக்கக் கூடியதன்று.

சால சிறந்த புண்ணியவான்களால் வெளியிடப்பட்டு போற்றப்பட்ட நான்கு நன்மை களாவன:—(1) ஜீவகாருண்ணியம் (2) மன்னிப்பு (3) மெய் யறிவு (4) நல்லோருடைய சேர்க்கையும், நல்ல ஒழுக்கமும். விசாரிப்போன்:— சகல மனிதனிடத்தும் கருணை யற்றிருப்பது ஜீவகாருண்ணியமாகாது. மன் னிப்பு விஷயத்திலும் இப்படியே. அறிவைப் பற்றிப் போற்றும்பொழுது அறி யாமையிலிருப்பது; நல்லோர்களுடைய சங்கம் சேர்க்கை இவைகளைப்பற்றி பேசிக்கொண்டு இருளில் திண்டாடுவது; பட்டினியிருப்பதை முக்தியென்று கருவது, இவைகளெல்லாம் அழகானதல்ல. சமண சமயத்தைப்பற்றி இவ்வி தம் புகழப்பட்டிருக்கிறது.

जइन कुणसि तव चरणं न पढसि न गुणोसि देसि नो दाणम् ।
ता इत्तियं न सक्किसिजं देवो इक्क अरिहन्तो ॥ பிர. இரத். 2, 2.

"மனிதனே! தவங்களைச்செய்ய நீ சக்தியற்றிருந்த பொழுதிலும், உன் னுடைய சுபாவத்தைத் திருத்திக்கொள். நீ சூத்திரங்களைப்படிக்கமுடியாது. பிரகரண இரத்தினகரம் முதலான நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் உண் மைகளைக் குறித்துத் தியானஞ்செய்; உன்னால் வேண்டியவர்களுக்குத் தானங் கொடுக்கமுடியாது. அர்ஹத் (சமணமுனி) ஒன்றையே ஆராதனைக்கும் பூஜை

க்கும் யோக்கியமென்று அறி; சமண சமயத்தை மிகச்சிறந்த சமயமென்று நம்பு; இந்நம்பிக்கைகளெல்லாம் உன் முன்னேற்றத்திற்குப் பெரும் சாதகங்களாகும்.''

விசா-ன்:—ஜீவகாருண்யமும், தயையும் நல்ல குணங்களே. என்றாலும் பட்சபாதத்தினால்மங்கிப்போனால்' ஜீவகாருண்யம் மிருகத்தன்மைக்கும் தயை அபகாரத்திற்கும் சமானமாகின்றன. எக்காலமும் எப்பிராணியிடத்தும் தயையுடனிருப்பது ஆகாதகாரிய யாகும். தண்டிப்பதினாலேயே துஷ்டனிடத்தில் தயைக்காட்டுகிறோம். தண்டியாமல் அவனை விட்டுவிட்டால் ஆயிரக்கணக்கானவர்கள் அவனால் துன்பத்திற்காளாவார்கள். மிருகத்தனத்தினால் ஏற்படக்கூடிய கஷ்டம் இவ்வித ஜீவகாருண்ணியத்தினாலும், பழிக்குப் பழிவாங்கும் குணத்தினால் விளையும் துன்பங்கள் இத்தகைய தயையினாலும் உண்டாகும். சகலபிராணிகளுடைய துன்பத்தைப் போக்குவதும், அவைகளுடைய நன்மையைக் கோருவதுமே ஜீவகாருண்யமாகும். துண்டு துணியைக் கொண்டு வடிகட்டி ஜலத்தைக்குடிப்பதும், அற்பப்புழுக்களினுடைய பிராணனைக் காப்பாற்றுவதும் அல்ல. இவ்வித ஜீவகாருண்யத்தை வாய்ப்பேச்சிலேயே சமணர்கள் நம்புகிறார்கள். காரியமுறையில் செய்து காண்பிப்பது கிடையாது. நிறத்தைக் கவனியாமல் அன்னமளிப்பதும் பிறமதத்திலுள்ள மேதைகளை வணங்கிப் போற்றுவதும் ஜீவகாருண்யமாகாது. உண்மை ஜீவகாருண்யத்தின் தத்துவத்தை யறிந்திருந்தால் இவ்விதம் கூறமாட்டார்கள்:—

(1) பிற மதவாதியைப்புகழுவது, அவனுடைய நல்ல குணங்களை மெச்சுவது; (2) அவனை வணங்குவது; (3) அதிகம் அவனுடன் 'பேசுவது; (4) அடிக்கடி அவனுடன் பேசுவது, (5) நல்ல உடை அன்னம் ஆகியவைகளை அவனுக்கு அளிப்பது; (6) அவனுக்கு விக்கிரக ஆராதனைக்குத் தேவையான புஷ்பம் வாசனைகள் முதலியவைகளை யளிப்பது. இவைகளைச் செய்வதிலிருந்து சமணர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள், இதை விவேகசாரம் பக்கம் 121-ல் காணலாம்

விடை:— தங்களுடைய சமயத்தைச் சேராமல் பிறமதத்தைக் கொள்கிறவர்களிடம் எவ்வளவு வெறுப்பு, பகை துவேஷம், ஆகியவைகளுடன் கூட சமணர்கள் நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை புத்திமான்கள் அறியட்டும். பிறமதத்வர்களிடம் கொஞ்சங்கூட மரியாதைக் காட்டாதவர்களை ஜீவகாருண்ணியமற்றவர்களென்றே சொல்லவேண்டும். தன் சொந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போற்றுவது பெருங்காரிய மாகாது. பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்றே சமணர்களைச் சொல்லலாம். எளியோர்களிடம் கொஞ்சங்கூட மரியாதைக் காட்டாதவர்களைப் புத்திமானகள் ஜீவகாருண்ணியவிளக்கமற்றவர்களென்றே கூறுவார்கள். மதுராபுரியின் அரசனுடைய திவானான நமூசி என்பவரைச் சமணர்கள், தங்கள் மதவிரோதி யென நினைத்துக்கொண்டு கொலை செய்து விட்டார்களென்று விவேகசாரம் பக்கம் 108-ல் கூறப்பட்டிருக்கிறது. தவப்பயனால் பிராயச்சிதம் செய்துகொள்ளவே கொலை பாதகர்களும்

சுத்தமாய் விட்டார்களாம். பிறமதக்காரர்களுடைய பிராணனைப் பழிவாங்கும் வகையில் குரோதபுத்தி யுடையவர்களைப் பாதகர்கள் என்று தான் கூற வேண்டும். கொலை செய்வதுதான் ஜீவகாருண்யமோ?

சத்சங்கம் முதலானவைகளின் விளக்கம் பரமா கமன சார் என்னும் நூலில் இருக்கிறது. ஏற்றநம்பிக்கை, நல்லசங்கம் நல்ல அறிவு, நல்லொழுக்கம் இந்நான்குமே மோட்ச சாதனங்களாகும். யோகதேவர் இவைகளை விரித்து விளக்கியுள்ளார். ஜீவனையும், மற்றபொருள்களையும் பற்றி ஜயின நூல்கள் கூறுவதில் உறுதியான நம்பிக்கை: சமண சமயத்தில் ஆசை: இவைகளே ஏற்ற நம்பிக்கையும் நல்ல சங்கமுமாகும்.

रुचिर्जीनोक्ततत्त्वेषु सम्यक् श्रद्धानमुच्यते ।

ஜயினர்களால் நம்பபட்ட தத்வங்களைத் தவிர்த்து வேறொன்றையும் நம்பாமலிருப்பது.

यथावस्थिततत्त्वानां संक्षेपाद्विस्तरेण वा ।
यो बोधस्तमत्राहुः सम्यग्ज्ञानं मनीषिणः ॥

ஜீவன், தத்வங்கள் இவைகளைப்பற்றின பூரணஞானத்தையும் பூரணமில்லாத ஞானத்தையும் புத்திமான்கள் நல்ல அறிவு என்கிறார்கள்.

सर्वथाऽनवद्ययोगानां त्यागश्चारित्रमुच्यते ।
कीर्तितं तदहिंसादि व्रतभेदेन पञ्चधा ॥
अहिंसासूनृतास्तेयब्रह्मचर्य्यापरिग्रहाः ।

நிந்திக்கத்தகுந்த பிறமதங்களுடைய எவ்வித சேர்க்கையு மன்னிலிருப்பது நல்லொழுக்கமாகும். விரதங்கள் ஐந்துள. (1) (ஆஹிம்சை) எப்பிராணிக்கும் தீங்கிழைக்காமலிருப்பது. (2) (ஸுனிருதா) இன்சொல் (3) (ஆஸ்தேய) களவாடாமலிருத்தல் (4) (பிரம்மச்சரிய) காமஇந்திரியங்களை அடக்குதல் (5) (அபரிக்கிரக) துறந்து விடுதல். அஹிம்சை, களவாடாமலிருத்தல், முதலானவைகள் சிறந்தவைகளே. ஆனால் பிறமதங்களின் நிந்தனை, முதலானவைகளெல்லாம் கொடியவைகளாச்சுதே. முன் சொன்னதினுடைய நன்மைகளையும் பழுதாக்கி விடும் போலிருக்கின்றனவே.

ஹரி, ஹரன் முதலானவர்களால் விதிக்கப்பட்ட கொள்கைகளின் பிரகாரம் உலகத்தின் மேன்மை பெருகாதென்று மேற் சொன்னதிலிருந்து வெளியாகிறது. சகல சாஸ்திரங்களிலே வல்லவனும், தர்மாத்மாவாயும் செய்யக்கூடிய ஒரு மதத்தை நிந்திப்பது பொறாமையே யாகும். கேவலம் தீர்த்தங்கரர்களை புகழ்வது வெறும் பிடிவாதமேயாகும். நல்லொழுக்கம். அறிவு, தர்ம குணம் இவைகளற்றிருந்த பொழுதிலும் சமண சமயத்தைச்சரியானதென்றும் சத்திய மானதென்றும் சொல்லுகிறவனைச் சிறந்தவன் என்பதும், தர்மகுணம் நல்ல எண்ணம் உடையவர்களைச் சமணசமயத்தை நம்பாத காரணத்தினால் குறைந்தவர்களென்பதும் எவ்வளவு அறிவீனமான பேச்சு? மயக்கமுடைய

வர்களென்றும், பாலபுத்தியை யுடையவர்களென்றும் சொல்லுவதை விட அவர்களை என்னவென்பது. இவைகளிலிருந்தெல்லாம் அவர்களுடைய குருமார்கள், முழுவதும் கற்றுணர்ந்தவர்களில்லை யென்பது விளங்கும். அவர்கள் சுயநலத்தைக் கருதுகிறவர்களே. மதங்கள் யாதொன்றையும் நிந்திக்காமலிருந்தால் எவரும் நேர்நெறியிலிருந்து நயங் காட்டி இழுக்கப்பட்டிருக்க மாட்டார்கள். இவர்களுடைய மனோ வெண்ணமும் சித்தித்து இராது. மக்களை நாசஞ்செய்யவே சமண சமயம் வல்லதென்றும் வேத மதமே கைத்தூக்கி விடவல்லதென்றும், ஹரிஹரன் முதலானவர்கள் சு (சரியான) தேவர்களென்றும் ரிஷபதேவர் முதலானவர்கள் பொய்யானவர்களென்றும் விளங்கும்.

जिणवर आणा भङ्गं उमग्ग उस्सूत्तले सदेसणउ ।
आणा भगे पावंता जिणमय दुकरं धम्मम् ॥ பிர. இர. 2, 6, 11.

முற்றுங்கடந்த தீர்த்தங்கரர்களால் ஆக்ஞாபிக்கபட்ட கட்டளைகளைமீறுவதினால் அவைகளைக் கீழ்படியாமலிருக்கிறவன் சீர்குலைந்து பாபரூபமான துக்கத்தை யடைந்து துன்பப்படுவான். ஜினேசுவரர்களால் விதிக்கப்பட்ட கடமைகள் போன்றவைகளைப் பின்பற்றி நடப்பது மிகவும் கடினமான காரியமாகும். எனவே அவைகளுக்குப்பங்கம் ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளவேண்டும். தற்புகழ்ச்சி, சுயசமயத்தின் பெருமை, பிற சமயங்களின் நிந்தை, இவைகளெல்லாம் அறிவீனமேயாம். பிறமதங்களிலுள்ள வித்வான்களால் புகழப்பட்டதே போற்றுவதற்கு ஏற்றதாகும். மேலும்:—

षट्गुणविज्भा निलयो उत्सुत्तभासी तहा विमुत्तव्वो ।
जहवरमणिजुतो विहुविग्घकरो विसहरो लोए ॥ பிர. இர. 2, 18.

விஷப்பாம்பின் முடியில் விளங்கும் மரகதமணியைத் தோடாமலிருப்பதே சரியானதுபோல் எவ்வளவு கற்றுணர்ந்தவர்களாயிருந்த பொழுதிலும் ஜயினரல்லாதவர்களுடைய சங்கத்தை ஜயினர்கள் தேடவேக்கூடாது. இது எவ்வளவு ஒழுங்கீனமானதென்று கவனியுங்கள்?! சமண முனிவர்களும் அவர்களுடைய சீடர்களும் கற்றுணர்ந்த வர்களாயிருந்தால், அறிவாளர்களிடம் ஆசையுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய தீர்த்தங்கரர்கூட அவித்வானுயிருக்க, வித்வான்களை அவர்கள் எவ்விதம் போற்றக்கூடும்? மலம் மண் குப்பைகளிலிருந்த பொழுதிலுங் கூட மரகதத்தை விரும்பாதவன் எவன்? சமணர்களைவிட, பட்சபாதக்காரர்களும், பிடிவாதக்காரர்களும் முரண்பாடானவர்களும், வித்தை யற்றவர்களும் வேறு யாரும் இல்லை என்பது இதிலிருந்து வெளியாகிறது.

अइ सयपा वियपा वाधम्मि अपव्वे सुतो विपावरया ।
न चलन्ति सुद्धधमार धन्ना किविपावपव्वेसु ॥ பிர. இர. 2, 3, 26.

சமண சமயத்திற்கு விரோத மானவர்களைச் சமணர்கள் பார்க்க வேண்டாம்.

இக்கட்டளை எத்தனை அசங்கியமாகயிருக்கிற தென்பதைப் படிப்போரே ஊகித்துக்கொள்ளலாம். சத்திய சமயத்தைப் பரவச் செய்கிறவன் எவனுக்கும் பயப்படவேண்டியதில்லை யென்பதில் சந்தேகம் கிடையாது. சமண ஆசிரியர்கள் தங்களுடைய போதனைகள் அறிவீனமானதென்றும் விசாரணையில் விழுந்து போய்விடுமென்றும் அறிவார்கள். எனவே வேறான மற்றவைகளைத் தூஷித்து ஒன்றும் அறியாதவர்களைத் தங்கள் வசித்திலேயே வைத்துக் கொள்ளலாம் என நினைத்தார்கள். மேலும்:—

नामं पितस्सअ सुहं जेणनिदिठाइ मिच्चपव्वाइ ।
जेसिं अणुसङ्गा उधम्मीणविहोइ पावमई ॥ பிர. இர. 3, 27.

சமணசமயத்திற்கு மாறான மற்றவைகளெல்லாம் மனித ஜாதியைப் பாபத்திற்கு ஆளாக்கும். ஆதலால் யாவற்றையும் தள்ளி சமண சமயத்தைப் பின்பற்றுதல் சிறப்பானது.

சமண சமயம், அதைச்சோரதவர்களைப் பகைத்து துவேஷம் செய்து கொண்டு விரோதம் செய்து கொள்ளச் சொல்லுகிறது. எனவே ஜனங்களைத் தீயக் குணமுள்ளவனுக்குகிறது. பிறமதங்களை வெறுப்பதில் சமணர்களைப் போன்றவர் வேறெவருமில்லை; சரிசமமாகச் சகலத்தையும் பழித்து தன்னுடையதைப் புகழுகிறார்கள். அறிவாளர்கள் எச்சமயத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி! ஒரு சமயத்தனுடைய நன்மைகளை எடுத்துச் சொல்லி தீமைகளை உதறி விடுவார்கள். இதுவும் இன்னுமொரு உதாரணமாகும்:—

हाहा गुरुअअ कज्भं सामीनहु अच्छिकस्स पुक्करिमो ।
कह जिण वयण कह सुगुरु सावया कहइय अकज्भं ॥ பிர. இர. 2, 36.

சமண சமயம், எல்லாம்வல்ல சமண முனிவர்களுடைய உபதேசம், சமணர்களுடைய போதனை இவைகளுடன் உற்று நோக்கும் பொழுது மற்றவைகள் மெலிந்துபோகும்; இதிலிருந்து விளங்குவது என்ன வென்றால் சைன ஆசாரியர்களே உண்மையான தேவர்கள். சமணசமயமே சத்தியசமயம். பிற மதாசாரியார்களுடையது பொய்யானது, அவர்களும் பொய்த் தேவர்களே!

கடைத் தெருவில் பழம் விற்கும் பெண் மக்களைப்போலவே சமண சமயமுமெனத்தோன்றுகிறது. புளித்துக் கொண்டிருந்த பொழுதிலும் தன்னுடையதை இனிமையானதெனப் புகழ்ந்து பிறர்கள்,விற்பத்தைத் தூஷிப்பதுபோலவேயாம். பிறமதக்காரர்களைப் பணிவது கூடபாபம் என்று சமணசமயம் கற்பிக்கிறது.

सप्पो इक्कं मरणं कुगुरुअणंता इदेइ मरणाइ ।
तोवरिसप्पं यहियुं मा कुगुरुसेवणं भद्दम् ॥ பிர. இர. 2. 37.

நாகத்தின் முடியிலுள்ள வைரத்தை வேண்டாமல் விட்டு விடுவது போலவே சமணர்களல்லாத தர்மபுருஷர்களைக் கூட விலக்குவதையே சமணர்கள் சரி யென்கிறார்களென்பதை முன்னரே கூறியுள்ளோம். பிறமத தூஷணையில் இன்னும் ஒரு பங்கு அதிகரித்திருக்கிறார்கள். சொல்லுவார்கள்:—

சமண முனிவர்களைத் தவிர ஏனையோர்களெல்லாம், பொய்யாச்சாரியர்களே. பாம்பை விடகெட்டவர்கள். அவர்களைக் காண்பதும் பணிவிடை செய்வதும், கூடிசேருவதும் கூடாது. பாம்புக்கடியினால் ஒருவன் ஒருதடவையே மரணத்தை யடைகிறான். சமணரல்லாத சமயத்தைப் பற்றின பிறமதாசாரியருடன் சேருவதினால் பிறப்பு இறப்புச்சக்கரங்களில் அகப்பட்டுக் கொள்ளுகிறான். நல்லவனே! சமணசமயத்தைச் சேராத ஆசான் பக்கத்தில் கூட நில்லாதே. அவனுக்குக் கொஞ்சம் பணிவிடை செய்தால் கூட துன்பம் விளையும்.

சமணர்களைவிட கல்நெஞ்சர், தவறானவழியில் செல்லுபவர், அதைச் சரியெனக் கூறுபவர் எவருமிலர். உண்டோ? பிறரைத் தூற்றியும் தன்னைப் போற்றியும் கொள்ளாவிடில் தங்களுக்குப் பணிவிடை செய்து பூசை செய்ய மாட்டார்கள் என எண்ணுகிறார்கள் போலும். உண்மையாதெனில் அவர்கள் பெரும் பாக்கியமற்றவர்களே. சிறந்த மேதைகளைப் பணிந்து அவர்களுடன் சேராதவரையில் மெய்ஞ்ஞானமும் சத்தியநெறியின் சேர்க்கையும் கிடைக்காது. எனவே கல்விக்கு விரோதமான பொய்களைக் களைந்து வேதங்களால் விதிக்கப்பட்ட சத்தியவார்த்தைகளைக்கொண்டு நடப்பதே சமணர்களுக்கு உசிதமாகும்.

मूल—किं भणिमो किं करिमो ताणह्यासाण धिठदुठाणं ।
त्ने दंसि ऊण लिङ्गं खिन्ति नरयम्मि मुद्धजणं ॥ பிர. இர. 2. 40.

சீர்திருத்தம், மாறுதல், தீச்செயல்கள் இவைகளிலிருந்து மீறினவர்களுடைய சேர்க்கையை விலக்கவேண்டும். இவர்கள், ஈவோனுடைய அழிவைத்தேடுகிறவர்களே. (பிறசமயத்தைச்சேர்ந்த) பொய்யாசாரியருக்கு நன்மை செய்யவிரும்புகிறவன் சுய நாசத்தை தேடுபவனேயாவான். சிங்கத்தின்மேல் கருணைகொண்டு அதனுடைய கண் கட்டை அவிழ்த்து விட்டவன் அதனாலேயே கொல்லப்பட்டு மாண்டுபோவது போலாம். ஆதலால் பொய்யாசாரியர்களிடமிருந்து விலகியிருப்பதே சாலச்சிறந்தது.

சமணரல்லாதவர்களை எவ்வளவு பகையுடன் சமணர்கள் நடத்துகிறார்களோ, அவ்வளவு பகையுடன் அவர்களையும் பிறர் நடத்துவார்களானால் பெருங்கெடுதல் விளையும். எவனும் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யாமலிருந்துவிட்டால் துக்கத்திற்காளாகி காரியசித்தி பெறாமலிருப்பார்கள். தன்னைப்போலவே பிறர்களையும் என்சமணர்கள் நினைக்கக்கூடாது?

मूल—जहजहतुट्टइ धम्मो जंहजह दुठाणहोय अइउदउ ।
समद्दिठिजियाण तह तह उल्लसइस मत्तं ॥ பிர. இர. 2. 42.

பார்வைக்கு அருவருப்பை யளிக்கிறவர்களும், நிஷ்டையினால் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டிய தீயச் செயல்களுடன்கூடினவர்களும், தண்டனைக்கேற்றவர்களும், பாபிகளும், நான்காம் ஆசிரமத்தைத் தழுவின திரிதண்டத்தையுடைய சந்நியாசிகளும், பிராம்மணர்களும் இவர்களுக்குப் பணிவிடை செய்து மரியாதை செய்வதைப் பார்த்தால், (அறியும் தன்மையைப் படைத்த) சமணமுனிகளின் பெருமையும், அறிவும் வெளியாவதில் விந்தை என்ன?

கவனியுங்கள்!! சமணர்களைப் போல் பிறரிடத்தில் பகை, துவேஷம், பட்சபாதம் இவைகளை அதிகமுடையவர்கள் வேறு எவரேனும் இருத்தல் முடியுமோ? பிறரிடத்தும் இக்குற்றம் உண்டு. ஆனால் இவ்வளவு அதிகமாக கிடையாது. பாபத்திற்குக் காரணம் பகையே. எனவே பாபாசாரங்களைச் செய்கிறவர்களாக ஏன் சமணர்கள் ஆகமாட்டார்கள்.

मूल—सङ्गो विजाण अहिउत्ते सिंधम्माइ जेपकुव्वन्ति ।
मुतूण चोरसङ्गं करन्ति ते चोरियं पावा ॥ பிர. இர. 2. 75.

திருடர்களுடன் சேருவதினால் உண்டாகும் பயம் மூக்கை * வெட்டி விடுவதினால் விலகிவிடுவது போல், திருடர்கள் சேர்ந்து உண்டாகும் பிறமதங்களைச் சேருவதினால் சமணர்களால்லாதவர்கள் பயப்படுகிறதில்லை.

பிறரைக்குறித்து கூறுமிடத்து மனிதனின் மனது வெளியாகிறது. சமண சமயத்தில் மாத்திரம் யோக்கியமானவர்களிருக்க பிற மதங்களில் திருடர்களிருக்கிறார்களென்பது உண்மையாகுமா? அறியாமையினாலும், தீயோர்களுடைய சேர்க்கையினாலும் மாறின புத்தியையுடையவர்களே பிறர்களுடைய விஷயத்தில் பகையுடனும் துவேஷத்துடனும் இருக்கிறார்கள். சமண சமயத்தைப்போல் பிறமதங்களிடம் பகை கொள்ளும்படி போதிப்பது வேறு எதுவும் கிடையாது.

मूल—जच्छ पसुमहिसलक्का पव्वंहोमन्ति पावन वसीए ।
पूअन्तितंपि सड्ढाहा ही लावी परायस्सं ॥ பிர. இர. 5. 76.

சமண சமயத்தைச் சேராதவர்கள் பொய்ப் போதனை செய்பவர்களே. சமணர்களுக்கே சத்திய அறிவுண்டு. எனவே பொய்ப் போதனை செய்வோர்களின் மதத்தைப் பரவச்செய்கிறவன் பாபியாவான்.

சாமுண்டா, காலிகா, ஜ்வாலா, இத்தேவதைகளுக்காக நவமி விரதமிருப்பது பாபமானால் பஜூஸண் முதலானவைகளைப் போன்ற சமண விரதங்கள் ஏன் பாபமாகாது? விரதமிருக்கப் பெரும் கஷ்டம் உண்டாகிறது. வாமமார்க்கிகளுடை லீலையைக்கண்டிப்பது பொருத்தமானதே. சாஸனதேவி, மருத தேவி முதலானவைகளைப்போன்ற அவர்களுடைய தேவதைகளைக்கண்டிக்காமலிருப்பதின் காரணந்தெரியவில்லை. இவைகளைத் துர்தேவதைகளல்லவென்று சொல்லியும் விடமுடியாது. ஏனெனில் சாஸனதேவி மனிதன், ஆடு, இருவர்களுடைய கண்களைப் பிடுங்கியிருக்கிறாள். இந்த ராக்ஷஸியை

*திருடர்களுக்குப் பண்டை காலத்தில் அளிக்கப்பட்ட தண்டனையாகும்

துர்கை, காளி முதலானவர்களின் சகோதரிகளாக ஏன் சொல்லக்கூடாது? தங்களுடைய விரதமாகிற இயச்சகானத்தைச் சால சிறந்ததென்றும், நவமி முதலானவைகளை இழிவானதென்றும் கூறுவது அறியாமையின் அடையாளமே யாகும். உண்மை உரைத்தல் என்பவைகளைப்போன்ற சத்தியவிரதங்கள் சகலருக்கும் மேன்மை யானது. சமணர்களாலும் மற்றவர்களாலும் கருதப்பட்ட விரதங்கள் ஏற்றதாகாது.

मूल—चेसाणवन्दियाणय माहणडुं बाणजर कसिरकाणि ।
भत्ता भर कठाणं यियाणं जन्ति दूरेणं ॥ பிர. இர. 2. 82.

வேசி, கோமாளி, பாடகன். பிராம்மணர்கள், யாகங்களை அங்கீகரிக்கிறவர்கள், கணேசன் இவைகளைப் போன்ற பொய்த்தேவர்களையும் தேவதைகளையும் பூஜை செய்கிறவர்கள், இவர்களெல்லோரும் அறியாமையில் அழுந்தினவர்களே. பிறருக்கும் தப்பு வழிகாண்பிப்பவர்களே. ஏனெனில் இத்தெய்வங்களினுலேயே தங்களுடைய மனோவெண்ணங்களுடையசித்தியை எதிர்பார்க்கிறார்கள். எனவே சமண முனிவர்களிடமிருந்து விலகியிருக்கிறார்கள்.

பிறதேவதைகளைப் பொய்யென்றும் சுயமானவைகளை மெய்யென்றும் அழைப்பது சமணர்களுடைய பட்சபாதமேயாகும். வாமமார்க்கிகளுடைய தேவர்களைக் கண்டிக்கிறார்கள்; ஆனால் தங்களுடைய சாஸனவைக் கொடியதெனச்சொல்லமாட்டார்கள். (உபவாசம் இருக்கவேண்டிய) இரவில் சாப்பிட்டதற்காகச் சாஸனதேவி ஒருவனையடித்து அவனுடைய கண்களிளொன்றையும் பிடுங்கிவிட்டதாகச் சிரத்தா தின கிருத்திய (பக்கம் 46) த்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பின்னர் ஆட்டினுடைய விழியைக் காவியாயிருந்த மனிதனுடைய கண்குழிகளில் வைத்தாளென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இரத்னசாகரத்தில் (இரண்டாம்பாகம், பக்கம் 67) உள்ளதைக் கவனியுங்கள். வழிப்பிரயாணிகளுடைய உபயோகத்திற்காக மருத்தேவி தன்னை விக்கிரகமாக மாற்றிக் கொண்டாள்.

मूल—किंसोपि जणाणि जाओ जणणी इकिं अगोविद्धिं ।
जइमिच्छरओ जाओ गुणे सुतमच्छरं वहइ ॥ பிர. இர. 2. 81.

சமணசமயவிரோதிகள்—பிறமதத்தவர்கள்—பிறக்காமலிருந்தாலும் மேலாயிருக்கும். அல்லது பிறந்து வளராமலிருந்தாலும் நன்றாயிருக்கும்.

முனிவர்களால் போற்றப்பட்டு கருணையை ஆதாவாய்க்கொண்ட சமண சமயம் வேண்டுமிடத்து சமணரல்லாதவர்களுடைய இறப்பைப்போதிக்கிறது. உண்மை யாதெனில் கருணையைப் பற்றி வெறும் பேச்சு பேசுகிறவர்களே. (கிரியாம்சத்தில் காட்டுகிறதில்லை.) கருணையைக் காண்பித்தால் புழு பூச்சிகளிடமே தவிர, சமணரல்லாத மானிடவகுப்பினிடமல்ல.

मूल—शुद्धे मग्गे जाया सुहेण मच्छति सुद्धिमग्गामि ।
जे पुणअम्मग्गजाया मग्गे गच्चन्ति ते चुप्पं ॥ பிர. இர. 2. 83.

சமண சமயத்தைத் தழுவுகிறவர் மோட்சத்தைப் பெறுவது அதிசயமாகாது. ஆனால் சமணரல்லாத சமயத்தினிடைப்பிறந்து பொய்ச்சமயத்தைப்பற்றினவர் மோட்சத்தையடைவது விந்தையே:

சமண சமயத்தவர்கள் மாத்திரம் மோட்சத்தை யடைகிறார்களென்பதும் ஏனையவர்கள் நரகத்தை யடைகிறார்களென்பதுமே இதன் வாதமாகும். நரகத்தையடைய சமணர்களிலேயே தீயோர்களே இல்லையா என்ன? அவர்களெல்லோருமா சுவர்க்கத்தை யடைவார்கள். அடைகிவார்களென்பது வீண் வைத்தியமே யாகும். இவ்வித ஒவ்வாதவார்த்தைகளில் அறிவீனர்களைத் தவிர வேறு எவரும் நம்பமாட்டார்கள்:

मूल—तिच्छराणं पूआसम्मत्तगुणाणकारिणी भणिया ।
साविययमिच्छत्तयरी जिण समये देसिया पूआ ॥ பிர. இர. 2. 90.

சமண மூர்த்திகளைப் பூசிப்பது நல்லது. சமணரல்லாத மூர்த்திகளைப் பூஜிப்பது நல்லதல்ல. சமணக்கட்டளைகளை நிறைவேற்றுகிறவனே ஞானியாகிறான். காப்பாற்றாதவன் அங்ஙனம் ஆவதில்லை.

என்னவிந்தை!! வைணவர்களுடையதைப்போலவே சமணர்களுடைய மூர்த்திகளும் உயிரிழந்த ஜடம் அல்லவா? விக்கிரக ஆராதனை பொய்யானதே. இது சமணர்களுடையதுமாதிரியாயிருந்தாலும்சரி அல்லது வைணர்வகளுடையது மாதிரியாயிருந்தாலும் சரி. தங்களைத் தத்துவஞானிகளென வழைத்துக் கொண்டு அன்னியர்களை அவ்விதமாக அழைக்காமலிருப்பது அவர்களுடைய தத்துவஞான சூன்னியத்தைக் காட்டுகிறது.

मूल—जिण आणा एधम्मो आणा राहि आण फुडं अहमुत्ति ।
इयमुणि ऊण यतत्तंजिण आणाए कुणहु धम्मं ॥ பிர. இர. 92.

தயை தாக்ஷிண்யம் இவைகள் சமண முனிகளால்போதிக்கப்பட்டவாறே தர்மமாகிறது. இதிலிருந்து வேறான பிறருடைய கட்டளைகளெல்லாம் அதர்மமே.

சமணர்களைத் தவிர மற்றவர்களில் சத்தியவாதியும் தர்மாத்மாவும் இல்லையென்பது எவ்வளவு அநியாயமானவார்த்தை? தர்மாத்மாவான பிறமதத்தவனைப் போற்றவுங்கூடாதா? சரீரவமைப்பு முதலானவைகள் மற்றவர்களுக்கிருப்பதைவிட விபரீதமாயிருந்தால் இது (அதாவது சமயநெறிகளில் சார்வாதிகாரம்) ஏற்கும். தங்களுடைய நூல், வார்த்தை, சாது, முனி, முதலானவர்களைத் துதிப்பதில் கூவிக்குக் கூத்தாடுகிறவர்களைக்கூட தோற்கடிக்கிறார்கள். மேலும்

मूल—वत्रेमिनारया उविजेसिन्दुरकाइ सम्भरंताणम् ।
भव्वाण जणइ हरिहररिद्धि समिद्धि विउद्धोसं ॥ பிர. இர. 2. 25.

ஹரிஹரமுதலானவர்களைப்போன்ற தெய்வங்களுடைய அதிக ஆராதனையும் ஆதிக்கியப்பெருக்கும் ஜனங்களை நரகத்தில் தள்ளும். இதைக்காணுங்கால்

சமணர்களுடைய சரீரம் சிலிர்க்கிறது. அரசனுடைய உத்தரவை பங்கம் பண்ணுவதினால் துன்பங்கள் விளைவது போலவே சமணமுனிகளுடைய கட்டளைகளைக் கெடுப்பதனால் பிறப்பு இறப்பு துக்கத்தைப்பெறுகிறான்.

கவனியுங்கள்! அவர்களுடைய சூழ்ச்சி புரட்டு, எண்ணம் இவைகளை வெளிப்படுத்தியாய்விட்டது. ஹரிஹரருடைய அதிகாரமும் பக்தர்களும் இவ்வுலகில் அதிகமாவதை அவர்கள் காணச்சகியார்கள். பிறமதத்தைச் சேர்ந்தவர்கள் பொருளைச்சேமித்தால் அவர்களுக்கு பொறாமைத் தீ பொங்குகிறது. உலக ஐசுவர்யங்களெல்லாம் அவர்களைச் சேர்ந்து (அவர்களுடைய எதிரிகள்) ஆண்டிகளாக வேண்டுமென்றே எண்ணுகிறார்கள்போலும். அவர்களுடைய ஆசான்களின் போதனைகளை மன்னனின் கட்டளைக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் பொய்யர்களும் கோழைகளும ஆவார்கள். மன்னனுடைய கட்டளைகளைச் சத்தியநெறிக்கு விரோதமானவைகளைக்கூட கொண்டு நடத்த வேண்டும். துவேஷபுத்தி, பகை இவைகளில் சமணர்களைவிட அதிகமானவர்கள் இருப்பார்களென்று நாம் எண்ணவேயில்லை. மேற்கொண்டு சொல்லுவதாவது

मूल—जो देइशुद्धधम्मं सो परमप्पा जयम्मि नहु अन्नो ।
किं कप्पद्दुम्म सरिसो इयत्तरू होइकइयाचि ॥ பிர. இர. 2. 101.

சமண சமயத்தை மறுக்கிறவர்கள் மடையர்களே. சமண முனிகளால் கூறப்பட்ட போதகாசிரியர்கள் சாதுக்கள், துறவிகள், கிரகஸ்தர்கள், ஆசிரியர்கள் முதலானவர்கள் தீர்த்தங்கரர்களுக்குச் சமானமானவர்களே. அவர்களை எதிர்க்கக்கூடியவர்கள் எவருமே கிடையாது'

என்னவிந்தை! பாலபுத்தியைக் கொண்டவர்களாக வில்லாவிடில் சமணர்கள் இவ்வறிவீனங்களுக்கு ஆளாகி அவைகளையும் கம்பிவரட்டார்கள். தற்புகழ்ச்சியைக்கூறும் வேசிகளைப்போன்றவர்களே இவர்களுடைய குருமார்களும்.

मूल—जे अमुणि अगुण दोषाते कह अवुहाणहुन्तिमभच्छा ।
अहते विहुम भच्छाता विसअमि आण तुल्लत्तं ॥ பிர. இர. 2. 102.

பெருந்தேவருக்கு (ஜின)ப் பணிவிடைசெய்யாமலும் அவர்களுடைய கொள்கைகளை ஒழுகாமலும் இருப்பது சமணர்களுக்கு அழகல்ல.

பட்சபாதம், அறியாமை, பிடிவாதம் இவைகளின் பயன் போலும். இல்லாவிடில் இவ்விதம் கூறியிருக்கமாட்டார்கள். சமண சமயத்தின் உண்மைகளெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தகாதவைகள். சாதாரண அறிவைக் கொண்டவன்கூட ஒருதடவை சமணதெய்வம் நூற்கள் முனிகள் இவைகளில் கொஞ்சம் அறிவானேயனால் அவர்களுடைய சேர்க்கையை அடியோடே ஒழித்துவிடுவான்.

मूल—वयणे विसुगुरुजिणवल्लहस्तके सिन उल्लस इसम्मं ।
अहकहादिण माणितेयं उलुआणंहरइ अन्धत्तं । பிர. இர. ௨. 108.

சமணமுனிகளுடைய போதனைகளைப் போற்றுகிறவன் பூஜிக்கத்தகுந்தவன். மீறி நடக்கிறவன் பூஜிக்கத்தகாதவன். சமணமுனிகளைத்தவிர வேறு யாரையும் பின்பற்றி நடக்கக்கூடாது.

சமணர்கள் பேதைகளை ஏமாற்றி அவர்களைத் தங்கள்முன் ஆடுமாடுகளைப்போல் ஓட்டாமல் இருந்திருந்தால், தானாகவே வாழ்க்கையின் பயனைக் கைப்பற்றி முக்திக்கேற்றவர்களாக்கிக் கொண்டிருப்பார்கள். வழிதப்பினவர்களென்றும் பொய்யர்களென்றும், பொய்ப்போதகாசிரியர்களென்றும் சொன்னால் சமணர்களுடைய மனம் புண்ணாகாதா? பிறர்களை இவ்விதமெல்லாம் கூறியழைப்பதினால் அவர்களும் அவ்விதமே வருந்துவார்கள். இதைப்போலொத்த அறிவீனங்களைப் போதிக்கிறார்கள், பாருங்கள்.

मूल—तिहुअण जणंमरन्तं दट्ठूण निअन्तिजेन अप्पाणं ।
विरमातिन पावा उधिद्धी धिठत्तणं ताणम् ॥ பிர. இர. 2. 109.

மரணம் நேரிட்டபொழுதும் வியவசாயத்தையும் வாணிபத்தையும் கொள்ளவேண்டாம். இத்தொழில்களினால் நரகமே உண்டாகும்.

சமணர்கள் இத்தொழில்களை விடுவதற்கும் மனமில்லாமலிருப்பது விந்தையே. இதை விட்டால் ஜீவனோபாயத்திற்கு வழி கிடையாது போய்விடும். எல்லோரும் இச்சமண கட்டளையைக் கைகொண்டு நடப்பார்களேயானால் சமணர்களுக்கு உண்ணவும் பிழைத்திருக்கவும் எதுவும் கிடைக்காது. இம்மாதிரி ஒவ்வாதவைகளைப் போதிப்பது அறிவீனமே. சமணமுனிகளைச் சொல்லுவதில் குற்றமில்லை. அவர்களுக்குப் படிப்பில்லை. சத்சங்கமில்லை. ஆதலால் இவ்விதமாக எழுதிவிட்டார்கள்.

मूल—तइया हमाण अहमा कारण रहिया अनाण गव्वेण ।
जेजंपन्ति उशुत्तं तेसिंदिद्धिछपाम्मिचं ॥ பிர. இர. 2. 121.

சமண நூற்களுக்கு விரோதமான நூற்களில் நம்புவோர்கள் தீயோர்கள். காரியசித்தியாகுமென்று இருந்த பொழுதிலும் சமணசமயத்திற்கு விரோதமாகப் பேசவுங்கூடாது நடக்கவுங்கூடாது. ஏதோ லாபமுண்டாகுமென்றிருந்தாலும் பிற யாதொருசமயத்தையும் கைப்பற்றவேண்டாம்.

சகல சமணமுனிகளும், அதைத்தாபித்தவர் உள்பட, பிறமதங்களைத் தூற்றுவதைவிட வேறொன்றும் செய்யவில்லை. இவ்வழியிலிருந்து மாறுவார்களென்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. சுயகாரியம் சித்திபெறவேண்டியிருக்குங்கால் சீடர்களுக்குச் சீடர்களாகவும் ஆகத்தயங்குகிறதில்லை. இவ்வார்த்தைகளைச் சொல்வதில் வெட்கமும் உண்டாகிறதில்லை. இதுவருந்தத்தக்கதே. மேலும்.

मूल—जम्बीर जिणस्सजिओ मिरइ उस्सुत्तले सदेसणओ ।
सागरकोड़ा कोड़िहिं मइ अइ भी भवरेण ॥ பிர. இர. 2. 122.

சமணமுனிவர்களிடம் தர்மமிருக்கிறது. அதுபோலவே தங்களிடத்திலும் பிறரிடத்திலும் இருக்கிறதென்கிறவன் கோடானுகோடி வருடங்கள் நரகத்திலிருப்பான். பின்னும் இழிவான பிறப்பையடைவான்.

அடடா! எவரும் அவர்களை மறுக்காமலிருக்கவேண்டி, அறிவிற்கு விரோதிகளான இவர்கள், இத்தடையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அனால் இதுமுடியாதகாரியமேயாகும். இவர்களுடன் எவ்விதம் வாதஞ்செய்யமுடியும்? மாறாகத்தெரிவித்து பிற மதங்களைத் தூற்றி காரியசித்தியைப் பெறுவதே ஏற்றதென்று எண்ணி யிருக்கிறார்கள்.

மூல—दूरे करणं दूरम्मि साहूणं तहयभावणा दूरे ।
जिधणम्भ सद्दहाणं पितिर कदुरकाइनिठवइ ॥ பிர. இர. 2. 127.

சமணசமயத்தைத் தழுவாவிட்டாலும் உலகத்தில் இதை யொன்றையே சத்தியமெனறு நம்புகிறவன் துக்கசமுத்திரத்தைத் தாண்டுவான்.

மூர்க்கர்களை இழுக்க வேறுவழியும் உண்டோ? ஏனெனில் கர்மங்களொன்று மில்லாது முக்தியைப் பெறலாமே என்றெண்ணுவார்கள். இத்தனை அறிவிற் குறைந்த மதமும் உண்டோ?

மூல—कइया होही दिवसो जइया सुगुरुण पायमूलम्भि ।
उस्सुत्त सविसलवर हिलेओनिसुणे सुजिणधम्मं பிர. இர. 2. 128.

சமண நூற்களைநம்பி பிற மதநூற்களில் பக்திகொள்ளாதிருப்பவன் துன்பக்கடலைத் தாண்டுவான்.

பேதைகளைப் பிடிப்பதற்காகவே இவ்வார்த்தைகள் கூறப்பட்டிருக்கின்றன. ஏனெனில் இவ்வாசையைக் கொள்வதினாலேயே எவனாலும் துக்கசமுத்திரத்தைத் தாண்டமுடியாது. முன்பிறப்பில் செய்த பாபகர்மங்களின் பயனை அனுபவிக்காமலுமிருக்க இயலாது. அறிவிற்கு விரோதமான இப்பொய்களைச்சமணசமயத்தார் எழுதாமலிருந்திருந்தால் அவர்களுடைய சீடர்கள் வேதங்கள், சத்தியசாத்திரங்கள் முதலானவைகளைப் படித்து உண்மையை யறிந்து சமணநூலின் சிறுமையையும் சத்தியநூற்களின் பெருமையையும் அறிந்திருப்பர். மதியீனர்கள் மயங்கிவிட்டார்கள். கற்றுணர்ந்தவர்களே இவ்வலைகளை அறுக்கமுடியும். அறிவீனர்களால்முடியாது.

மூல—जह्मजेगं हिंभाणियं सुयववहारं विसोहियंतस्स ।
जायइ विसुद्ध बोही जिणआणा राह गत्ताओ ॥ பிர. இர. 2. 128.

சமண ஆசாரியர்களாலியற்றப்பட்ட இலக்கணம், உரை, பாஷ்யம், நியாயம், முதலானவைகளைப் படிப்பவர்களே இன்பமடைந்து தர்மாத்மாவாகிறார்கள். மற்றவர்களாலெழுதப்பட்டவைகளைப் படிப்பவர்கள் முன்னேறமாட்டார்கள்.

(விரதம்) பட்டினியிருப்பதன் துன்பத்தை அனுபவிப்பது தர்மகாரியமாகுமா? ஆகாரம் பானம் இவைகளன்னியிருத்தல் தர்மகாரியமாகுமேயானால் பஞ்சத்தின் கொடுமையிலிருந்து வருந்தி பட்டினி யிருப்பவர்களும், வறுமையினால் ஆகாரமன்னியிலிருப்பவர்களும் புனிதமாகி, அதன் முடிவைப் பெறவேண்டுமே? அவர்களும் புனிதமாகிறதில்லை. இன்பப்படுவதைவிட துன்பப்படு

கிருர்கள் என்பதே உண்மையாகும். ஏனெனில் பித்தத்திலுைம், அகச்சூட்டிஞலும், அவஸ்தைப்பட்டு கஷ்டப்படுகிருர்கள். நியாயம் பிறழாமலிருத்தல்; பிரம்மச்சரியம் சத்தியமுறைத்தல் இவைகளே தர்மநெறியாகும்; அநியாயத்தைக்கொள்ளல் அசத்தியம்பேசுதல் இவைகள் அதர்மநெறியாகும். ஏற்றவாறு பரோபகாரம் செய்வதையே தர்மநேறியெனலாம். அன்ஞகாரமற்றிருப்பதற்கும் தர்மத்திற்கும் யாதொரு சம்பந்தமுங்கிடையாது. இந்த சூத்திரங்களை நம்புகிறவர்கள், அதிகம் பொய்யும் கொஞ்சம் மெய்யு மிருக்கிறபடியினல், துக்க சமுத்திரத்தில் முழுகுகிருர்கள்.

मूल—जइजाणासि जिणनाहो लोयाया राविपरकएभूओ ।

तातंतं मन्नं तो कहमन्नसि लोअ आयारं ॥ பிர. இர. 2. 148.

அதிர்ஷ்டமுள்ளவர்களே சமணசமயத்தைப் பின்பற்றுகிருர்கள். அதாவது சமணரல்லாதவர்கள் அதிர்ஷ்டமற்றவர்களாம்.

இதை என்னென்று சொல்வது? இது பொய்யல்லவா? பிறமதத்தவர்களுக்கு அதிர்ஷ்டமும் சமணசமயத்தவர்களுக்கு துரதிர்ஷ்டமும் சம்பவிக்கிறதே கிடையாதா? ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளக் கூடாதென்றும் பரஸ்பர பிரேமையுடனிருக்கவேண்டுமென்றும் சமணமுனிகள் கூறுகிருர்கள். பிறமதத்தவர்களுடன் சண்டைசெய்வதினுல் தீமை ஒன்றும் விளையாதென்று இதிலிருந்து தெளிவாகிறது. இதுவும் மடத்தனமேயாகும். ஏனென்ருல் நல்லோர்களை நேசித்து தீயோர்களைத் திருத்துவதே கடமையெனப் பெரியார்கள் கொண்டுள்ளார்கள். பிராம்மணர்களும் துறவிகளும், சந்நியாசிகளும் சமணசமயத்தின் விரோதிகளென்பதே சமணமுனிவர்களின் முடிவு. பகையுடன் யாவரையும் நோக்கி அவர்களைத் தூற்றும்பொழுது கருணை, தயை என்றும் நெறிகளைச் சமணர்கள் பழகுகிருர்கள் என்பது முறையுமாகுமோ? கருணையும் தயையும் பிறரைத் தூஷித்தல் என்பதுடன் பெருந்துமா? பிறரை வெறுக்க இந்நிலையைவிட கேடானது வேறென்றும் வேண்டாம். சமணர்கள் பிறரிடம் பகைக்காட்டும் வகுப்பினர் ஆவார்கள். இதில் அவர்களுக்கு நிகரானவர் எவருமே யில்லை. ரிஷபதேவர் முதல் மகாவீரர் வரையிலுமுள்ள இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களைப் பொருமைக் காரர்களென்றும், துவேஷயுக்தியுள்ளவர்களென்றும், பொய்சொல்லுகிறவர்களென்றும், சமணர்களை வெறிபிடித்தவர்களென்றும், அவர்களுடைய மதத்தை நரகத்திற்கும் விஷத்திற்கும் சமானமானதென்றும் முறையே கூறினல் சமணர்கள் என்ன நினைப்பார்கள். பிற சமயங்களை ஏற்காத அபவாதங்களுக்கு ஆளாக்குகிறபடியினல் சமணர்கள் பெரும் துன்பப் படுகிருர்கள். இவ்வழக்கத்தை விட்டுவிட்டால் நலமாயிருக்கும்.

मूल—एगो अगरू एगो विसाव गोचे इआणि विवहाणि ।

तच्छयजं जिणदव्वं परुप्परन्तं न विच्चन्ति ॥ பிர. இர. 2. 160

சகல சத்திய சீடர்களுக்கும் உள்ளது ஒரே தெய்வம் ஒரே ஆசாரியர், ஒரே சமயம். சமணவிக்கிரகங்கள், சமணகோயில்கள், அதைச் சேர்ந்த

சொத்துகள், இவைகளைக் காப்பாற்றி சமண விக்கிரகங்களைப் பூஜை செய்வதே தர்மமாகும்.

பல விக்கிரக பூஜைகளும், அவைகளுடன் கூடின கெடுதல்களும் தீமைகளும் சமணர்களிடமிருந்து ஆரம்பமாயின. எனவே எல்லாப்புரட்டுக்களுக்கும் முதற்காரணம் சமணர்களே.

नवकोरण विवोहो ॥ अनुसरणं सावउ ॥ वयाइं इमे ॥ जोगो ॥ चिय वन्दणगो ॥ यचरखाणं तु विहि पुच्छम् ॥

சிராவகர்கள் (சமண சீடர்கள்) யாவரும் ஆலயத்தின் வாயிலில் நமஸ்காரஞ்செய்யவேண்டும். இரண்டாவது வாயிலில் நமஸ்கரித்தவுடன் **நான் உண்மையான சீடன்** என்று உரைக்கவேண்டும். மூன்றும் வாயிலில் நமஸ்கரித்தவுடன் எங்களில் எத்தனை பேர்களுண்டு எனவேண்டும். நான்காவது வாயிலண்டை நமஸ்கரித்தவுடன் "வாழ்வின் நோக்கங்கள் நான்கில் மோட்சமே முதன்மையானது. அதைப் பெறுவதற்குச் சத்திய ஞானமே தேவை ஆதலால் **யோகம்**" என்று சொல்லவேண்டும். பாபங்களைக் கழிக்க வழிகள் ஏழும் இவைகளேயாகும். இவைகளுக்கும் யோகம் என்ற பெயருண்டு. "நாம் அதை அடைவோம்". ஐந்தாவது வாயிலில், விக்கிரகத்தின் முன் நமஸ்காரம் செய்து நைவேத்தியம் அளித்து மனதில் பூஜை செய்வேன் என்று, சொல்லிக் கொள்ளட்டும். ஆறுவது வாயிலில் கதைகளை—ஒன்பதுபிரமாணமான கதைகள்—சொல்லவேண்டிய கடமையை நினைத்துக்கொள்ளவேண்டும். மேலும் இதே புத்தகத்தில், இராப்போஜன சமயத்தில் தீர்த்தங்கரர்களுடைய மூர்த்திகளையும், கோயில் கதவுகளையும் பூஜை செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. கதவையொட்டின பூஜை முதலான முறைகள் பெருஞ்சலிப்பைத் தரக்கூடியது. பழைய கோயில்களைப் புதுப்பித்தும் கட்டியும் கொடுக்கிறவர்கள் மோட்சத்தை யடைவர்களெனக் கூறப்பட்டிருக்கிறது. விதிப்பிரகாரம் பூஜை செய்கிறவன் கோயிலில் உட்காரவேண்டும். பய பக்தியுடன் பூஜை செய்ய வேண்டும். விக்கிரத்திற்கு அபிஷேகம் செய்யும்பொழுது "ஜீன தேவருக்கு நமஸ்காரம்—பணிகிறேன்" என்றும், "அலங்கார தூப தீப நைவேத்தியங்களை" அளிக்கிறேன் என்றும் சொல்லவேண்டும். சமணக் குருக்கள் அரசனின் ஆட்சிக்குக் கூட அகப்படாதவர்கள் என்று ரத்தின சார பாகம் பக்கம் 12ல், கூறியிருக்கிறது. விக்கிரகங்களைப் பூஜை செய்வதினால் பிணிகள் நீங்கி சாதாரண தீச்சயல்களிலிருந்தும் ஒருவன் காப்பாற்றப் படுகிறானென்று சொல்லுவதை ரத்தின சார பாகம் பக்கம் மூன்றில் காணவும். ஐந்து சோழி விலையுள்ளப் புஷ்பங்களை யளித்துவிட்டதற்குப் பதிலாக 18 நாடுகளுடைய ஆட்சியையடைந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் பெயர் தான் குமாரபாலன்.

இவைகளெல்லாம் பொய்வார்த்தைகளே. அறிவீனர்களை ஏமாற்றவே இச்சூழ்ச்சி. விக்கிரகங்களைப் பூஜைசெய்தும் பிணிகளிலிருந்து வருந்துகிற

சமணர்களும், அவைகளைப் பூஜை செய்து ஒரு ஏக்கர் நிலங்கூட கிடைக்காத சமணர்களும் பலர் இருக்கிறார்கள். ஐந்து சோழிகள் விலையுள்ள புஷ்பத்திற்கு ஆட்சி கிடைக்குமேயானால், ஐந்தைந்து சோழி விலையுள்ள புஷ்பங்களை யளித்து ஏன் பூலோகமுழுவதும் சமணர்கள் பெறக் கூடாது? தங்களுடைய அரசாங்கம் விதிக்கும் தண்டனைக்கு ஏன் ஆளாகிறார் கள்? விக்கிரக ஆராதனையினால் துக்க சமுத்திரத்தைத் தாண்ட முடியுமானால் சத்தியஞானம், சத்சங்கம், சத்தியநெறி இவைகளால் யாது பிரயோஜனம்? கௌதமருடைய விரல்நுனியில் அமிருதம் இருக்கிறதென்றும், அவரைத் தியானிப்பதினால் இஷ்ட்ட சித்தியாகு மென்றும் எழுதப்பட்டிருப்பதை இரத்தினசாரம் 14வது பக்கத்தில் காணலாம். இது உண்மையானால் சமணர்க ளெல்லோரும் சிரஞ்சீவியாயிருத்தல் வேண்டும். ஆனால் உண்மையில் மரணத் திற்காளாகிறார்கள். பேதைகளைக்குத் தப்புவழிக் காட்டவே இவ்வித கதை கள் உண்டாயிருக்கின்றன. இவைகளில் உண்மை கிடையாது. பூஜை செய் யும்பொழுது அவர்கள் ஜெபிக்கும் மந்திரத்தை இரத்தின சார பாகம் பக்கம் 92ல் காணவும்.

जलचन्दनधूपनैरथ दीपाक्षतकैर्नैवेद्यवस्त्रैः ।
उपचारवरैर्जिनेन्द्रान् रुचिरैरद्य यजामहे ॥

ஜலம், சந்தனம், புஷ்ப்பம், தூபதீபநைவேத்தியம் ஆடை முதலியவை களைக் கொண்டு தீர்த்தங்கரர்களை (விக்கிரகங்களை) பூசிப்போமாக? இதைக் கொண்டே மூர்த்தி பூஜைக்குக் காரணம் சமணர்கள் என்றோம்.

"சமணவாலயத்தில் மோகம் எவனுக்குங் கிடையாது. இதைக் கொண் டே உலகக்கடலைக்கடக்கலாம்" (விவேக சாரம் பக்கம் 21).

மூர்த்தி பூஜையினால் முக்தி கிடைக்கும். சமணவாலயத்திற்குச் செல்வ தினால் மெச்சத்தகுந்த சுகங்களுண்டாகும். சந்தனம், ஜலம், முதலியவை களைக் கொண்டு தீர்த்தங்கரர்களுடைய விக்கிரகங்களைப் பூஜை செய்வோர்கள் நரகத்திலிருந்துமீறி சுவர்க்கத்தை யடைவார்கள். (விவேகசாரம் பக்கம் 51-52)

சமணவாலயத்திலுள்ள இருஷபதேவர் முதலானவர்களுடைய விக்கிரங் களைப் பூஜிப்பதினால் அறம்பொருள் இன்பம் முதலியவைகள் உண்டாகும்.
(விவேகசாரம் பக்கம் 55)

சமண விக்கிரகங்களைப் பூஜை செய்வதினால் உலகதுன்பங்களெல்லாம் தூரவிலகிவிடும். (விவேகசாரம் பக்கம் 61)

இவைகளுடைய அறிவீனத்தையும் அசம்பவத்தையும் கவனியுங்கள். இவ்விதம் செய்வதினால் பாபங்களிலிருந்து மீறி, நல்ல குணங்கள் ஏற்பட்டு, நரகத்திலிருந்து தப்பி சுவர்க்கத்தை யடைந்து, அறம் பொருள் இன்பம் வீடு இவைகளைப்பெற்று, மனோவெண்ணங்கள் நிறைவேறி, துன்பங்களி லிருந்தும் மீறுவார்களேயானால், சமணர்கள் ஏன் கஷ்டப்படவேண்டும்? விரும் பிய சிறந்த பொருள்களை ஏன் அடையாமலிருக்கவேண்டும்?

சமணவிக்கிரங்களை ஸ்தாபித்தவர்கள் தங்களுடையவும் தங்கள் குடும்பங்களுடையவும் ஜீவனோபாயத்தின் வழியைக்கண்டு பிடித்துவிட்டார்கள் என்று எழுதப்பட்டிருப்பதை விவேகசாரம் பக்கம் 3ல் காணவும். சிவன் விஷ்ணு முதலானவர்களுடைய விக்கிரகங்களைப் பூசிப்பது மிகவும் கெடுதலான காரியமாகும் என்று விவேகசாரம் பக்கம் 225ல் எழுதியிருப்பதைக் காணலாம். இப்பூஜைகளினால் நரகமே கிடைக்குமாம்.

சிவன், விஷ்ணு, முதலான விக்கிரகங்களினால் நரகம் விளையும்பொழுது சமணவிக்கிரகங்களினால் ஏன் நரகம் விளையாதென்ற கேள்வி பிறக்கிறது? எங்களுடைய விக்கிரகங்கள் துறவிகளென்றும் சாந்த மூர்த்திகளென்றும் கூறுவீர்களேயினால், மூர்த்திகளுக்காக லட்சகணக்காய்ச் செலவு செய்து கோயில்கள் கட்டி சந்தனம் கற்பூரம் முதலானவைகள் அளிக்க அவைகள் எவ்விதம் துறவியாகும்? சிவன் முதலானவைகள் வானத்தின் கீழிருக்க ஏன் துறவியாகாது? சாந்த மூர்த்திகளென்றால் ஜடப்பொருள் களெல்லாம் சாந்தமானதே. ஏனெனில் அவைகள் அசையாதவைகளே.

வினா:—ஆடை உடைகளினால் அலங்கரிக்கப் படாமலிருப்பதினாலேயே எங்களுடைய விக்கிரகங்கள் சிறந்தவைகளாகின்றன. விடை:—எல்லோருடைய முன்னிலையில் விக்கிரகங்களை நிர்வாணவாக நிறுத்துவது மிருகத்தன்மையானது.

வினா:—பெண்களுடைய பொம்மைகளைக் காணுங்கால் காம விகாரங்களின் எழுச்சியுண்டாவது போலவே சாது, யோகி முதலானவர்களுடைய விக்கிரகங்களைக் காணுங்கால் நல்லெண்ணங்கள் உண்டாகின்றன. விடை:—கல்விக்கிரகங்களைக் காணுங்கால் நல்ல குணங்களுண்டாகுமென்று எண்ணுவாயானால், சடத்தனம் முதலான விக்கிரகங்களுடைய குணங்கள் உன்னை ஏன் பாதிக்காது? சடபுத்தியுடையவனாக ஆவாயானால் உபயோகமற்றவனாய் விடுவாய். கல்விக் கேள்விகளில் சிறந்தோர்களுடைய சங்கத்திற்குப்பதிலாக விக்கிரக ஆராதனையைப் பின்பற்றுவாயேயானால் முதலிலிருந்ததை விட பெரும் மதியீனனாவாய். இந்நூலின் பதினொன்றாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களுக்குள்ளாகிவிடுவாய். விக்கிரக பூஜையைப்பற்றி பலவித ஆபாசங்களைச் சமணர்கள் சொல்லுவது போலவே அவர்களுடைய மந்திரங்களும் பலமதியீனங்களைப் போதிக்கின்றன. உதாரணமாக.

नमो अरिहन्ताणं नमो सिद्धाणं नमो आयरियाणं नमो उवज्भाभाणं नमो लोए सववसाहूणं एसो पञ्च नमुक्कारो सव्व पावप्पणासणो मङ्गलाचरणं च सव्वे सिपढमं हवइ मङ्गलम् ॥

அரிஹந்தைப்பணிகின்றேன்; சித்தர்களைப் பணிகின்றேன் முதலானவைகள்"

இம்மந்திரம் தெய்வத்தன்மையானதாம். இது குரு மந்திரமாம். இதைச் ஜபிப்பதினால் அளவிலா நன்மைகள் விளையுமாம். புராண தந்திரங்களின் ஆசிரி

யர்கள் பாடகர்கள் முதலானவர்களைவிட (இம்மந்திரத்தின் சக்தியை மிகைப் படுத்துவதில்) சமணர்கள் சிறந்தவர்களே.

नमुक्कार तउपढे ॥
जउकव्वं । मन्ताणमन्तो परमो इमुत्ति धेयाणधेयं परमं इमुत्ति ।
तत्ताणतत्तं परमं पवित्तं संसारसत्ताणदुहाहयाणम् ॥
ताणं अन्नन्तु नो अत्थि । जीवाणं भव सायरे ।
बुड्डूं ताणं इमं मुत्तुम् । न मुक्कारं सुपोययम् ॥
कव्वम् । अणोगजम्मन्तरसं चिआणम् । दुहाणंसारीरिअमाणुसाणुसाणम् ।
कत्तोय भव्वाणभविज्जनासो न जावपत्तो नवकारमन्तो ॥

சிரத்தின கிருத்திய என்னும் நூலில் இம்மந்திரத்தைப் பவித்திரமான தென்றும் பரம மந்திர மென்றும் கூறியிருப்பதைக் காணலாம். தியானஞ் செய்யவேண்டியவைகளில் முதன்மை யானது. உள்ளது எல்லாவற்றையும் விட உண்மையானது. சமுத்திரத்தைக் கடக்க கப்பலைப்போல நவகார மந்திரமும் உபயோகமானது. இதன் துணையைத் தேடாதவர்கள் உலகக்கடலில் முழுகிப் போவார்கள். தேடுகிறவர்கள் துக்கங்களை மீறுவார்கள். இம்மந்திரம் ஒன்றே துன்பங்களைத் துலைக்கும். பாபங்களிலிருந்து ஆத்மாவைக் காப்பாற்றும். முக்தியைப் பெறக் காரணமாயிருக்கும். உலகக்கடலைத் தாண்டவல்ல சக்தியையளிப்பது இம்மந்திரம் ஒன்றே. அதாவது பல பிறப்புகளில் செய்த கர்மங்களின் பாபங்களை விலக்குகிறது. தீ முதலான எண்வித தண்டனைகளை யனுபவிக்குங்கால் இம்மந்திரத்தைப் போல் உதவி யளிப்பதொன்றும் கிடையாது. இம் மந்திரத்தை விளக்கக்கூடிய ஆசான், வைடூரியம் உள்ளவனைப்போல் போற்றத்தகுந்தவனாகிறான்; சத்துருக்களின் மத்தியில் பயப்படுகிறவனுக்குக் குறையாத ஆயுதங்களைப் போலாகிறது. தெய்வப்புலமை வாய்ந்த 12 மந்திரங்களுள், சாலச்சிறந்தது இந் நவகாரம மந்திரமேயாகும். அதாவது:—(1) சகல தீர்த்தங்கரர்களுக்கும் தாழ்மையான நமஸ்காரம் (2) சகல சமண முனிவர்களுக்கும் நமஸ்காரம் (3) சகல சமண ஆசான்களுக்கும் நமஸ்காரம் (4) சகல சமண சமய போதகாசிரியர்களுக்கும் வந்தனம் (5) இவ்வுலகினுள்ள சகல சமண சாதுக்களுக்கும் வந்தனம். மூலத்தில் சமண பதம் இல்லாதபொழுதிலும் நாம் அதைக்கூட சேர்த்து எழுதியிருக்கிறோம். ஏனெனில் சமணத்தைச் சேராதவன் எவனும் வந்தனத்திற்கு ஏற்றவனில்லை யென்று அநேகமாக எல்லா சமண நூல்களும் போதிக்கின்றன.

கற்கள், கட்டைகள், முதலானவைகளைத் தெய்வமென்று எண்ணிப் பூஜிப்பவர்கள் தக்க லாபத்தைப் பெறுவார்களென்று தத்துவ விவேக நூல் பக்கம் 169ல் இருப்பதைக்காணவும். இவ்விதமிருக்க விக்கிரகங்களைப் பூசித்தும் ஏன் சமணர்கள் சுகமடையவில்லை? பாரஸ்வநாத விக்கிரகத்திற்குப் பூஜை செய்வதினால் பாபங்களெல்லாம் போய் விடும் என்று இரத்தனசாரம் பக்கம்

10ல் எழுதியிருப்பதைக் காணவும். கல்ப பாகம் பக்கம் 51ல் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ஆலயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டதாகக் கண்டிருக்கிறது. சமணர்களிட மிருந்தே விக்கிரக பூஜை உண்டான தென்பதை விளக்க இன்னும் எவ்வளவோ அத்தாட்சிகள் இருக்கின்றன.

சமண சாதுக்களுடைய லீலைகளைக் கவனிப்போம்.

கோச என்னும் வேசியுடைய சோரநாயகனன் சமண சாது விரக்திய டைந்து சுவர்க்கத்தைப் பெற்றாரென்று விவேகசார பக்கம் 228ல் இருக்கிறது. இந்நூலின் 10வது பக்கத்திலேயே அர்ணக் முனி நீதி நெறியிலிருந்து வழுவி, தத்தர்களுடைய குடும்பத்தில் சிற்றின்பசுகங்களை யனுபவித்தபின்னரே சுவர்க் கத்தை யடைந்ததாகச் சொல்லுகிறது. ஸ்தாலியா, ஸ்ரீகிருஷ்ணனின் குமார னை டன்டகன் முனியைக் கொள்ளை கொண்டுபோய்ப் பின்னர் ஒரு தெய்வ மானான். பேருக்குமாத்திரம் சாதுவாயிருந்தாலும் கூட சமணமுனிகளைச் சிராவகர்கள் வணங்கவேண்டுமென்று இதே நூலில் 193ம் பக்கத்தில் எழுதப் பட்டிருப்பதைக் காணலாம். நன்னடத்தையுடன் கூடினவர்களாயிருந்தாலும் சரி, துர் நடத்தையுடன் கூடினவர்களாயிருந்தாலும் சரி, இச் சாதுக்கள் போற் றத்தக்கவர்கள். பிற மதத்தைச்சேர்ந்த சாது நல்லொழுக்கத்துடன் கூடின வனாயிருந்தாலும் ஒழுக்கமற்ற சமண சாதுவே போற்றத் தக்கவரெனச் சொல்லியிருப்பதை 168ம் பக்கத்தில் காணலாம்

சமண லௌகிகர்கள், ஒழுக்கமற்றவனாயும் நெறிகெட்டவனாயு மிருந்த பொழுதிலும் சமண சாதுக்களைச் சேவிக்கவேண்டும் என்று 71ம் பக்கத்தில் கூறியிருக்கிறது. திருடன் தன் தலைமயிரைக் கிழித்துக்கொண்டான்; வாழ்க்கை யின் நெறியைத் தழுவினான்; பச்சாத்தாபப் பட்டான்; உடனே உண்மை அறிவையடைந்ததினால் ஆறுமாதத்திற் கெல்லாம் சித்தனாய் விட்டான். இதை பக்கம் 276ல் காணலாம். கவனியுங்கள். காமியான சாதுவுங்கூட சித்தியடைந் தான் என்பதும் ஸ்ரீகிருஷ்ணன் மூன்றாவது நரகத்தை அடைந்தாரென்பதும் (பக்கம் 106ல், பார்க்கவும்) இவர்களுடைய சமய நம்பிக்கையாகும்.

*தன்வந்திரி நரகத்தைச் சேர்ந்தார் என்று பக்கம் 145ல் காணப்பட்டிருக் கிறது. யோகிகள், புராணிக சாதுக்கள், காஜிகள் (மகம்மதியப் புரோகிதர்கள்) முல்லாக்கள்(மகமதியப் பெரியோர்கள்)இவர்கள் அறிவீனத்தின் காரணமாகத் தவஞ்செய்து கஷ்டப் பட்ட போதிலும், கீழ்க்கதியை யடைந்தார்களென்று பக்கம் 48ல் இருப்பதைக் காணவும். திருபிருஷ்ட்ட வாசுதேவ, துவிப்பிருஷ்ட வாசுதேவ, சுயம்புவாசுதேவ, புருஷோத்தம வாசுதேவ, சிம்ஹ புருஷ வாசு தேவ, புருஷபுண்டரீக வாசுதேவ, தத்தவாசுதேவ, லட்சுமண வாசுதேவ, ஸ்ரீகிருஷ்ண வாசுதேவ ஆக ஒன்பது வாசுதேவர்களும் 11வது, 12வது, 14வது, 15வது, 18வது, 20வது, 22வது, தீர்த்தங்கரர்களுடைய காலத்தில் நர கத்தை யடைந்தார்களென்றும், அசுவக்கிரீவப்பிரதி வாசுதேவ, தாரகப்பிரதி

---

* வைத்திய சாஸ்திரத்தில் பெயர் பெற்ற துறவி பெரியார்

வாசுதேவ, மோதகப்பிரதி வாசுதேவ, மதுப்பிரதி வாசுதேவ, நிசும்பப்பிரதி வாசுதேவ, பலிப்பிரதி வாசுதேவ, ராவணப்பிரதி வாசுதேவ, ஜராசிந்துப்பிரதி வாசுதேவ, ஆக நவப் (ஒன்பது) பிரதி வாசுதேவர்களும் நரகத்தையே அடைந்தார்களென்று பக்கம் 171ல் சொல்லிருப்பதைக் காணவும். இருஷப தேவர் முதல் மகாவீரர் வரையிலுள்ள தீர்த்தங்கரர்களெல்லோரும் மோட்சத்தை யடைந்தார்களென்று கல்ப பாஷியத்தில் கூறப்பட்டிருக்கிறது.

வியபசாரித்தனம் செய்தவர்கள், வேசிகளின் சோரநாயகர்கள், முதலானவர்கள் பல; உள்பட சமண சாதுக்களும் லௌகிகர்களும், தீர்த்தங்கரர்களும் மோட்சத்தைப் பெற பெரிய ஆத்மாக்களான ஸ்ரீகிருஷ்ணன் முதலானவர்கள் நரகத்தை யடைந்தார்களென்று கூறுவது எவ்வளவு தப்பென்று புத்திமான்களே அறிந்துகொள்ளுவார்களாக. உண்மையைச் சொல்லப்புகில் நல்லார் சமணர்களுடைய சேர்க்கையை வைத்துக்கொள்ளவுங் கூடாது; அவர்களைக்காணுவதுங் கூடாது. ஏனெனில் அந்த நல்லோர்க்கும் அறிவீனர்களிடம் நம்பிக்கை ஏற்பட்டுவிடும். பிடிவாதம் பாரபட்சம் இவைகளுடன் கூடி இணங்குதலினால் கெடுதல்களே விளையும். சமணர் சார்பிலுள்ள நல்லோர்களுடன் சேருவதில் குற்றமொன்று மில்லை. கங்கை ஸ்நானம் காசியாத்திரை முதலானவைகளைப் போன்றதினால் நன்மை எதுவும் ஏற்படாதாம். தங்களுடைய கிர்நார், பாலிடானா, ஆபு ஆகியவைகளைக்காணுவதினால் தான் முக்திபெற முடியுமாம். (விவேகசாரம், பக்கம் 55.) சைவ வைணவர்களுடையதைப் போலவே சமணத் தீர்த்தங்களும் க்ஷேத்திரங்களும் நீரிலும் நிலத்தின்பேரிலுமே இருக்கிறதென்பதைத் தனியாகக் கவனிக்கவேண்டியது. முன் சொன்னவைகளைத் தூற்றி, பின் சொன்னவைகளைப் போற்றுவது புத்தியின்மையேயாகும்.

சமணமுக்தியின் வர்ணனை

(இரத்தின சாபகாரம், பக்கம் 23)

மகாதேவ தீர்த்தங்கரர் கௌதமரைப் பார்த்துச் சொல்லுவதாவது :— வடப்பிரதேசத்தில் சித்தசிலா என்ற ஒரு இடம் இருக்கிறது. சுவர்க்கத்தைவிட உயரமானது. நாலரைக்கோடி யோசனை நீளமும் அகலமும் உள்ளது, 8 யோஜனைபரிமாணமுள்ளது. பசும்பாலை விடவும் முத்துமாலையைக் காட்டிலும் வெண்மையாயுள்ளது. 19வது பரப்பில் உச்சியிருக்கிறது. தங்கத்தைப் போல் பிரகாசிக்கும். ஸ்படிகத்தைவிடத் தெளிவாயிருக்கும். இன்னும் மேலே சிவபுரம் இருக்கிறது. இங்கேயே முக்தியைப் பெற்றவர்கள் வசிக்கிறார்கள். பிறப்பு இறப்பை மீறினவர்கள். முக்தியின்பத்தை நுகருகிறார்கள். இவ்வுலகத்திற்கும் திரும்பு கிறதில்லை. கர்மங்களைச்செய்ய வேண்டிய தேவையும் கிடையாது.

இதுவே சமண முக்தியாகும். வைகுண்டம், கோலோகம், சிவபுரி முதலானவைகள், நான்காவது உப்பரிகை, ஏழாவது உப்பரிகை இவைகளை முறையே புராணிகர்கள், கிறிஸ்துவர்கள், மகம்மதியர்கள் முக்திஸ்தானமாக ஸ்தாபித்துஇருப்பதுபோலவே சித்தசிலையும் சிவபுரத்தையும் சமணர்கள் உண்டு

பண்ணியிருக்கிறார்களென்பது சிறிது யோசித்தால் விளங்கும். சமணர்களால் உயர்ந்ததெனக் கருதப்படுகிறவைகளெல்லாம், பூகோளத்தில் சிலபாகங்களிலிருக்கும் ஜனங்களால் தாழ்ந்ததெனக்கருதப்படுபவையே. உயர்ந்ததும் தாழ்ந்ததும் தனிச் சொற்களல்ல. இந்தியாவிலுள்ள சமணர்களுக்கு எது உயர்ந்ததாயிருக்கிறதோ அது அமெரிக்கர்களுக்குத் தாழ்ந்ததேயாகும். இப்படியே அமெரிக்காவிலுள்ளவர்கள் விஷயத்திலும். சித்தசிலை யென்பது 90லக்ஷம் யோஜனைகள் நீளமிருந்தபொழுதிலும் முக்தியடைந்த ஜீவன்களெனப்படுகிறவைகளெல்லாம், கட்டுப்பட்டேயிருக்கும். ஏனெனில் அதை விட்டகன்றவுடன் முக்தியை இழந்துவிடும். அந்த விடத்தில் பற்றும் அதை விட்டு வெளிக்கிளம்ப வெறுப்பும் முக்தியைப்பெற்ற ஜீவன்களுக்கு உள்ளது இயல்பேயாம். விருப்பு, வெறுப்பு, ஆசை இவைகளுள்ள நிலை எவ்விதம் முக்தி நிலையாகும்? முக்தியில் உண்மையானதை ஒன்பதாவது அத்தியாயத்தில் சொல்லியுள்ளோம். சமணர்கள் நம்பும் முக்தி கட்டேயாகும் (சிறையேயாகும்). முக்திவிஷயத்தில் சமணர்கள் சிறிதளவு வழுவிட்டார்கள். வேதங்களுடைய ஞானமன்னியில் இன்ப எண்ணத்தின் சரியான தத்துவம் உண்டாகாதென்பதே உண்மையாகும். இன்னும் சில நூய்நகிக்கதைகளைச்சொல்லுவோம். கீழ்கண்டவைகளை விவேகசாகரத்தில் காணலாம்:—மகாவீரர் பிறந்தவுடன் ஒரு கோடியே எழு லட்சத்து கலசங்களின்நீரில் ஸ்நாநம் செய்தார்—(பக்கம் 78.) தசாரன அரசன் மகாவீரதரிசனத்திற்குச் சென்றார். அங்கு இறுமாப்புடனிருக்கவே அதைக் கண்டிப்பதற்காக 16, 777, 216,00. இந்திரர்களும், 13, 370, 572,800,000,000 இந்திராணிகளும், தோன்றினர்கள். இதைக் கண்ட அரசன் ஆச்சரியமடைந்தான்."

(நம் பூமி அளவுகொண்ட) எவ்வளவு உலகங்கள் இந்திரனும் இந்திராணிளும் நிற்கத் தேவையாயிருந்ததோ? சிரத்ததினகிருத்திய (ஆத்ம நிந்தபாவனு) வின் 13 வது பக்கத்தில் குளங்கள் வெட்டக் கூடாதென்றும் கிணறுகள் தோண்டக் கூடாதென்றும் தடுக்கப்பட்டிருக்கிறது.

இம்மறுப்பைக் கொண்டு வாழ்ந்தால் தண்ணீர் ஜனங்களுக்கு எங்கிருந்து கிடைக்குமோ?

வினு:—குளம் கிணறுகளைத் தோண்டுவதினுல் அநேகம் ஜீவராசிகள் மடிந்து அதனுல் பாபம் விளைகிறபடியினுல் சமணர்கள் இதைச் செய்வதில்லை.

விடை:—அறிவிலியே!! அற்ப ஜீவன்களுடைய பாபத்தைக் கருதுங்கால் மனிதன், பசு முதலானவைகளுக்கு வேண்டிய தண்ணீரைக் கொடுப்பதினுல் உண்டாகும் பெரும் புண்யத்தை ஏன் எண்ணுமலிருக்கிருய்? நந்தமணி கார் என்னும் தனவான் பாவடி (ஒருவித கிணறு) யைத்தன் ஊரில் தோண்டினன். என்றிருப்பதை தத்துவ விவேகத்தின் பக்கம் 196ல் காணலாம். நேர் நெறியினின்றும் வழுவின படியினுல் தர்மப்பிரஷ்டனுய் 16 பெரும் நோய்களால் பாதிக்கப்பட்டான். மறுபிறப்பில் அதே கிணற்றில் தன் காலத்தைக் கழிக்கவேண்டித் தவளையாய்ப்பிறந்தான். மகாவீரரைக் கண்டவுடன் அத்தவளைக்கு முன் ஞாபகம் வந்தது. பூர்வ ஜன்மத்தில் தன் தலைவனுயிருந்

ததின் ஞாபகம் வந்ததாக மகாவீரர் கூறுகிறார். அவருக்கு முன் நமஸ்காரம் செய்யச் சென்றார். சிரேனிகனின் குதிரையினால் இடரப்பட்டு இறந்துவிட்டான். நல்லெண்ணத்தின் பயனால் தர்துரான்க் என்னும் பெயரை யுடைய கடவுளானான். அற்ப புத்தியைக் கொண்டிருந்தபடியினால் மகாவீரன் அவ்விடத்திலிருப்பதாக வெண்ணி நமஸ்கரித்த பின்னர் திரும்பிச் சென்றான்.

அறிவிற்கு விரோதமான இவ்வசம்பவங்களையும் பொய்களையும் கூறுகிறவனை மகாவீரனாகக் கருதுவது பிரமையே. சிரத்ததினகிருத்ய பக்கம் 36ல் சாது மரித்தவனுடைய ஆடை உடைகளைக் கொள்ளக்கூடும் என்றிருக்கிறது.

இச்சாதுக்களும் மகாப்பிராமணர்களைப் போலாகவில்லையா? ஆபரணங்களை யார் எடுத்துக் கொள்ளுவது? மீதியிருக்கிறவர்கள், விலையுள்ளதானபடியினால், அதைத் தனக்குத் தானே வைத்துக் கொள்ளுவார்கள் போலும். இவர்களைக் குறித்து என்னவென்றெண்ணுவது.

ரத்னசாரம் பக்கம் 105ல் வறுத்தல், அரைத்தல், சமைத்தல், முதலிய காரியங்கள் பாபகரமானதன்று சொல்லப்பட்டுள்ளது.

இங்ஙனம் கூறல் முட்டாள்த்தனமாகாதா? இக்காரியங்கள் இல்லாது மனிதன் எங்ஙனம் வாழமுடியும்? சமணர்களும் சமைத்தல், புசித்தல், இவைகள் விடுத்தால் சாகவேண்டியவர்கள்தானே. இந்நூல் இத்துடன் நிற்கவில்லை.

தோட்டத்தைப் பயிருடுகிற தோட்டக்காரன் லட்சமடங்கு பாபியாகிறான் என்று பக்கம் 104ல் சொல்லுகிறது. தோட்டக்காரன் வியவசாயி பெறும் பாபியானபொழுதிலும் மலர், இலை, கரிகாய்கள் தானியம் முதலிய இனியபொருள்களையும் தருவதால் பெறும்புண்ணியம் செய்தவனாகவில்லையா?

லப்தி என்னும் சாது ஒருவர் தடுமாறி வேசி வீட்டை யடைந்து தர்மத்தின் பெயரால் பிச்சை கேட்டார். தன்னுடைய வாழ்க்கையில் தர்மத்திற்கு இடமில்லை யென்றும் பொருளுக்கே தான் இடம் உண்டென்றும் பதில் சொன்னாள். இதைக் கேட்டு அவள்வீட்டில் $12\frac{1}{2}$ லட்சம் மோகர்களை வாரி எறிந்தார். (தத்வவிவேக பக்கம் 202)

மடையனைத் தவிர வேறு எவன்தான் இதை நம்புவான். ரத்னசார பாகம் பக்கம் 67 ல், வேண்டும்பொழுது கல் விக்கிரகம் குதிரைமேல் ஏறி வந்து மனோபீஷ்டத்தை யளிக்கிறதென்று, சொல்லியிருப்பதைக் காணவும். திருடர்கள், கொள்ளைக்காரர்கள், சத்துருக்கள் முதலானவர்கள் தாக்கப்பட்டபொழுது சமணர்கள் அவ்விக்கிரகத்தினால் காப்பாற்றபடாததின் காரணம் என்ன? போலீஸ் ஸ்டேஷன் களுக்குச் சென்று முறை யிடுவானேன்?

சமண சாதுக்களுடைய குணங்களைக் காட்டவேண்டி, ஜினதத்த சூரி இச்சுலோகங்களைச் செய்துள்ளார்:—

सरजोहरणभैक्षभुजो लुञ्चितमूर्द्धजाः ।
श्वेताम्बराः क्षमाशीला निःसङ्गा जैनसाधवः ॥

लुञ्चिता पिक्षिका हस्ता पाणिपात्रा दिगम्बराः ।
ऊर्ध्वासिनो गृहे दातुर्द्वितीयाः स्युर्जिनर्षयः ॥
भुङ्क्ते न केवलं न स्त्री मोक्षमेति दिगम्बरः ।
प्राहुरेषामयं भेदो महान् श्वेताम्बरैः सह ॥

(1) *சம்ரி வைத்துக் கொள்ளுதல், பிச்சையெடுத்துச் சாப்பிடுதல் தலையை க்ஷவரஞ் செய்து கொண்டிருத்தல், வெள்ளை வஸ்திரம் தரித்தல், பிறருடன் கூடிக்கலவாதிருத்தல் இவைகளைக் கொண்டவனே யதியாகிறான். இவர்கள் சுவேதாம்பர வகுப்பைச் சேர்ந்தவர்கள். (2) ஆடை யுடை தரியா திருத்தல், தலைமயிரைப்பிடுங்கி யிழுத்தல், தனையப பெருக்க, கம்பளத்தினால் செய்யப்பட்ட துடைப்பத்தைக்கொண்டிருத்தல், பிச்சையெடுத்துக்கிடைப்பதைச்சாப்பிட்டிருத்தல், இவைகளே திகம்பர சாதுக்களுடைய அடையாளங்களாகும். கிரகஸ்தர்கள் சாப்பிட்ட பின்னர் சாப்பிடுகிறவர்களே, ஜினரிஷி சாதுக்களாவார்கள். (3) திகம்பரர்களுக்கும், சுவேதாம்பரர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுவேயாகும். பின் சொல்லப்பட்டவர்களுடையக், கட்சிப்பிரகாரம் ஸ்திரீகளும் மோட்சத்தைப் பெறலாம்; முன் சொல்லப் பட்டவர்களின் பிரகாரம் அது முடியாத காரியம். சமணர்களால் மதிக்கப்பட்ட மோட்ச மார்க்கங்களிதுவே யாகும். சமணர்கள் தலைமயிரைப்பிடுங்கிக் கொள்வது தெரிந்த விஷயமே. கைநிறைய ஐந்துதடவைப் பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்று அவர்களுடைய நூற்களில் கூறப்பட்டிருக்கிறது விவேகசாரம் பாகம் 2, பக்கம் 216ல். கைநிறைய ஐந்து தடவை மயிரைப்பிடுங்கிக்கொண்ட பிறகே ஒருவருக்குத் தீட்சையை அளித்தார்களென்று சொல்லிருப்பதைக் காணலாம். பசுவின் சரீரத்தை மூடத் தேவையானது போக மீதியான ரோமத்தைச் சாதுவினிடமிருந்து பிடுங்கி விட வேண்டுமென்று கல்பசூத்ர பாஷ்யம் பக்கம் 108ல் எழுதியிருப்பதைக் காணவும். இவ்விதமிருக்க சமணர்களா இரக்கமுள்ளவர்கள்? தானேசெய்துகொண்ட பொழுதிலும் அல்லது குருவே செய்தபொழுதிலும், மயிரைப்பிடுங்குவதினால் பெரும் உபத்திரவம் உண்டாகுமல்லவோ? ஜீவப்பிராணிகளுக்குக் கஷ்டம் கொடுப்பதே ஹிம்சை யாகும்.

விவேகசாரத்தில் விக்கிரம சகாப்தம் 1033 (கி. பி. 976)ல் சுவேதாம்பர வகுப்பைச் சேர்ந்த டூண்டியர்கள் தோன்றினதாக எழுதப்பட்டிருக்கிறது. இதேவருடத்தில் தேஹ்பந்திகளும் தோன்றினார்கள். டூண்டியர்கள் கல் விக்கிரக பூஜைகளில் நம்புகிறதில்லை. ஸ்நாநகாலம், போஜனகாலம், இவ்விரண்டு வேளைகளில் தவிர மீதிகாலங்களில் வாயைத் துணியினால் மூடிக்கொண்டிருக்கிறார்கள். யதிகளோ பாடங்களைப் பயிலுங் காலத்தில்தவிர மீதி காலங்களில் கூடக்கட்டிக்கொள்ளுவதில்லை.

வினா:— வாயுவில் சூக்ஷ்ம சரீரத்தை யுடைய ஜீவப்பிராணிகள் பல வாசஞ் செய்கின்றன. மூச்சுக் காற்றினால் அவைகள் உயிர் துறந்துவிடுமா

* உட்காரும் இடத்திலிருக்கிற தூசிகளைத்துடைக்க உபயோகமாகும்ஒருவித குச்சு.

கையினால், அந்தபாபத்திலிருந்து மீற, துணியைக் கொண்டு வாயைமூடிக் கொள்ளவேண்டும்.

விடை:— கல்விப்பயிற்சிக்கும் பிரத்தியட்சாதி பிரமாணத்திற்கும் இது முற்றும் விரோதமாயிருக்கிறது. ஜீவன் எக்காலமும் சிரஞ்சீவியானது. மூச்சுக்காற்றினால் அது இறந்து போகாது. உங்களுடைய நம்பிக்கையும் இதுவே தானன்றோ?

வினா:— ஜீவன் இறக்காது என்பது உண்மையே: ஆனால் மூச்சுக்காற்றினால் பல ஜீவன்கள் கஷ்டப்படுகின்றன. கஷ்டத்தைக்கொடுப்பவன் பாபியாகிறான். ஆதலால் வாயைத்துணியினால் மூடிக்கொள்ள வேண்டும்.

விடை:— இது முடியாத காரியம். ஏதாவது ஒரு பிராணியைக் கஷ்டப்படுத்தாமல் உலக நிர்வாகம் நடைபெறுவது அரிது. நீங்கள் கூறும் வண்ணம் வாயிலிருந்து வெளிவரும் மூச்சுக்காற்றினால் துன்பமும் துக்கமும் விளைகிறதென்றால் நடத்தல், உட்காரல், கையைத் தூக்கல், கண்ணிமைக்கொட்டல் முதலிய செய்கைகளினாலும் துன்பமும் துக்கமும் விளையவேண்டுமே? எனவே நீங்கள் கூறும் வண்ணம் பிறருக்குத் துன்பமில்லாது வாழ்க்கை நடத்தல் முடியாதகாரியம்:

வினா:— கூடுமானவரை ஜீவராசிகளைக் காத்தல் முறை அல்லவோ? ஜகமெங்கும் உயிர்ப்பிராணிகள் பரவிக்கிடக்கின்றன. வாயைமூடிக்கொள்வதைப்பரிகாசம் பண்ணுகிறீர்கள். துணியால் வாயைக் கட்டிக்கொள்ளாவிட்டால் அநேக ஜீவன்கள் இறக்காதா? அது நமக்குப்பாபமல்லவா?

விடை:— என்ன அறிவீனமான பேச்சு!! துணியைக் கொண்டு கட்டிக்கொள்ளுவதினால் பிராணிகளுக்கு இன்னும் பெரும் கஷ்டம் விளைகின்றன. எங்ஙனமெனில் வாய் அடைக்கப்பட்டிருக்கும் பொழுது, வெளிவிட வேண்டிய மூச்சுக்குப் போக வழியில்லாமல் கட்டுப்பட்டு, பின்னர் வேகத்துடன் வாயின் ஓரமாகவும் மூக்குத் துவாரங்களின் வாயிலாகவும் வெளிவரும். அடைபட்டிருந்த மூச்சின் உஷ்ணம் அதிகமாயிருக்குமாதலால் நீங்கள் கூறும் வண்ணம் பெரும் துன்பத்தை விளைவிக்கும். கவனியுங்கள், ஜன்னல்களெல்லாம் திறந்திருக்குங்காலத்தில் இருந்ததைவிட அடைக்கப்பட்டிருந்த காலத்தில் ஒரு இடத்தினுடைய காற்றின் சூடு அதிகமாயிருக்கும். நீங்கள் கூறுவதையே சரியென்று எடுத்துக்கொண்டாலும் உபத்திரவம் அதிகமாகும். எப்படியென்றால் அடைபட்டிருந்த மூச்சு, முழுவேகத்துடன் வெளியில் வருவதினால் பிராணிகளுக்கும் பெருங்கஷ்டத்தைக் கொடுத்து துன்பத்திற்கு ஆளாக்குகிறது.

ஒருவன் வாயினாலும், மற்றொருவன் குழாயினாலும் நெருப்பை ஊதுகிறான் என்று எடுத்துக்கொள்ளுவோம். வாயிலிருந்து வெளிவரும் மூச்சு விசாலமாகப் பரவி அதன் காரணமாகப் பயனற்று போகும். அடைத்து வைத்து முழுமனதுடன் ஊதும் குழாய்க் காற்றின் குணமோ இதற்கு முற்றிலும் மாறினதாயிருக்கும். வாயை மூடிக்கொள்வதின் பயனாக மூக்கில் சேர்ந்திரு

க்கும் காற்றின் தன்மையும் குணமும் இவ்விதமேயாகும். எனவே வாயைத் துணிகொண்டு கட்டிக் கொள்ளுகிறவர்களைவிட கட்டிக் கொள்ளாதவர்களே தர்மாத்மாக்கள். கட்டிக் கொள்ளுவதினுல் வார்த்தைகளையும் எழுத்துகளையும் செவ்வனே பேசவும், உச்சரிக்கவும், முடியாது. மூக்கினுல் கூடாததை மூக்கினுலேயே பேசுவது தகாதது அல்லவா? மேலும் வாயிலிருந்து வெளிவரும்துர்நாற்றத்தை(வெளிவிடாமல் தடுக்கிறீர்கள்). வெளிவரும் காற்று யாவும் அசுத்தமானதே. அதை வெளிப்படுத்தாமலிருந்தால் துர்நாற்றம் வீசத்துவக்கும். காற்றுப்போக்கு வரத்திற்கு வழியிருக்கிற கக்கூசைக் காட்டிலும் வழியில்லாத கக்கூசினுடைய துர்நாற்றம் அதிகமாயிருக்கிறது. சமணர்கள் வாயைக்கட்டிக் கொள்ளுகிறுர்கள்; பற்களைத் தேய்ப்பதில்லை; முகத்தைக் கழுவுவதுமில்லை; ஸ்நாநமும் செய்வதில்லை; எனவே அழுக்கை வெளிப்படுத்தி, வியாதிகளுடையப் விருத்திக்குக் காரணமாகிறுர்கள். அதன் காரணமாக பாபஞ்செய்தவர்களாகிறுர்கள். பெரிய கூட்டங்களில் கழிச்சல் முதலான தொத்துவியாதிகள் வருவதற்குக் காரணம் காற்று கெட்டுப்போவதேயாகும். வாயில் துணி கட்டிக் கொள்ளாமல் பற்களைத் தேய்த்து, முகத்தைக் கழுவி, ஸ்நாநம் பண்ணி, ஆடையுடைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக யுள்ளவர்களைக் காட்டிலும், சமணர்கள் வாயுமண்டலத்தின் அழுக்குக்குக் காரணமாகிறுர்கள். சுத்தமில்லாதத் *தீண்டாதவர்களிடமிருந்து விலகியிருப்பவன் நல்லவனுவதைப் போல் பின் கூறினவர்களைவிட முன் கூறினவர்களே மேலானவர்கள். கக்கூசுகளைக்கழுவுதல் முதலான அசுத்த வேலைகளைச் செய்வோர்களிடம் கூடிக்கலப்பதினுல் புத்தி விருத்தியடைகிறதில்லை. அதுபோலவே சமணர்களுடைய புத்தியும் அழுக்கடைந்தேயிருக்கும். குதர்க்க புத்தியையுடையநோயாளி தர்மத்தின் தத்துவங்களை அறியமாட்டான். இது சமணர்களுக்கும் தகும்.

வினு:— வாசல் கதவு அடைக்கப் பட்டிருக்கிற வீட்டினுள்ளிலிருந்து அக்கினி சுவாலை வெளிவர வழியிராது. அதன் காரணமாக வெளிப்பிராணிளுக்கு யாதொருவித உபத்திரவமும் விளையாது. இதேமாதிரி துணியைக் கொண்டு வாயைக்கட்டிக் கொள்வதினுல் வெளியிலிருக்கும் ஜீவப்பிராணிகளுக்கு யாதொரு வித ஹிம்சையும். விளையாது. கைகளைக்கொண்டு முகத்தை மூடிக்கொள்ளுகிறவன் அவனுக்கு முன்னே எரியும் நெருப்பின் வெப்பத்தை அதிகமாக உணருகிறதில்லை. வாயுமண்டலத்திலுள்ள பிராணிகள் சரீரத்துடன் கூடினதானபடியினுல் துன்பத்திற்கு ஆளாகும்.

விடை:— இப்பேச்சு சிறுபிள்ளைத்தனமானது. சுவர்களில் வெடிப்புகளில்லாததும், காற்றின் போக்குவரத்திற்கு வசதியுமில்லாததுமான சமண வீட்டில் நெருப்பு எரியாது. இதை நீயே அறிந்துகொள்ளலாம். எரிகிற மெழுகு வத்தியை மூடப்பட்ட ஒரு பாண்டத்திற்குள் வை. சிறது நேரத்திற்குள் அது அணைந்து விடும். நிலத்தில் வாழும் மனிதன் முதலானவர்கள் வெளிக்காற்

* கக்கூசு கழுவுதல் முதலான அசுத்த வேலைசுளைச் செய்கிறவர்கள்

றின் உதவியன்னியில் பிழைத்திருக்க முடியாது. இதேமாதிரி அக்கினியின் விஷயத்திலும். ஒரு விடத்தில் அடைக்கப்பட்டிருந்தால் மறுவிடத்தில் முழு வேகத்துடன் வெளிக்கிளம்பும். எனவே நீங்கள் கூறுவது சரியாகாது.

வினு:— பெரியவர்கள் சிறியவர்களிடத்தில் பேசுங்கால், உமிழ்நீர் அல்லது துர்க்கந்தம் வீசாமலிருக்க வேண்டி கையைக் கொண்டாவது அல்லது துணியைக் கொண்டாவது, வாயை மூடிக்கொள்ளுவது யாவரும் அறிந்த விஷயமேயாகும். புஸ்தகங்களைப் படிக்குங்காலத்திலும் எச்சில் விழுகிறது.

விடை:— ஜீவப்பிராணிகளைக் காப்பற்றுவதற்காக வாயைக் கட்டிக் கொள்ளுவது வீணே என்று இதிலிருந்து வெளியாகும். இரகசியத்தைப் பிறர் கேழ்க்காதிருக்கவேண்டிய வாயை மூடிக்கொள்வார்கள்: பகிரங்கமான சமாச்சாரங்களைப்பற்றி பேசும் பொழுது மூடிக்கொள்ளார்கள். பல் தேய்த்தல் முதலியவைகளைச் செய்யாததினுல் உங்கள் முகம் முதலான அவயவங்களிலிருந்து துர்க்கந்தம் வீசும். உங்களைச்சுற்றி உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள் மேல்பரவும். இதற்காகவே சம்பாஷணை சமயங்களில் ஜனங்கள் வாயை மூடிக்கொள்ளுகிறுர்கள். இதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. வாயைமூடிக்கொள்ளாமல் பேசும் இரகசிய சமாச்சாரம் காற்றின் மூலமாக பரவும். தனிவிடங்களில் பேசுங்கால் எவனும் மூடிக்கொள்ளுவதில்லை. உமிழ்நீரிலிருக்கும் அணுக்கள் காற்றுடன் கலந்து எல்லோரையும் அடைகிறது. எனவே அதனுடன் கலக்காமலிருக்கவேண்டுமென்பது வெறும் பேச்சேயாகும். இதை யொருதனி மனிதன் தப்பு என்பது வீண்வாதமேயாகும். மூச்சுக்காற்றினுல் வாயு மண்டலத்தில் வாழும் ஜீவப்பிராணிகள் உயிர்துறக்கிறதென்பது மடமையே-ஏனெனில் இது உண்மையானுல் கோடைகாலத்து வெப்பம் அவைகள் எல்லாவற்றையும் கொன்றுவிடுமே. எனவே (துணியைக்கட்டிக் கொள்ளும்) நம்பிக்கை பொய்யானதே. உங்களுடைய தீர்த்தங்காரர்கள் மேதைகளாயிருந்திருந்தால்இம்மாதிரி கூறியிருக்கமாட்டார்கள். சகல உறுப்புக்களுடன் கூடின யோஜனு சக்தியைக் கொண்ட பிராணிகளே ஹிம்சையை உணரக்கூடும். இதற்குப் பிரமாணமாவது:—

पञ्चावयवयोगात्सुखसंवित्तिः ॥ சாங்கியம், அத். 5. 27.

பஞ்சேந்திரியங்களும் அவைகளுக்கேற்ற பொருள்களுடன் சேரும்பொழுதே இன்ப துன்பங்களை ஜீவன் உணரும். தூஷணையினுல் செவிடனும், சிங்கம் புலி முதலிய கொடிய மிருகங்களின் வருகையினுல் குருடனும், வாசனையினுல் முகருந்தன்மையை யிழந்தவனும், தொடுவதினுல் பாரிசவாயுக்காரனும், உருசியினுல் நாக்கில்லாதவனும், முறையே பாதிக்கப்படுகிறதில்லை. இஃதே போல் இச்சிறு பிராணிகள் உபத்திரவத்தைப் யடைவது கிடையாது. சுஷுப்தி சமயத்தில் இன்ப துன்பங்களை மனிதன் அறிகிறதில்லை. ஏனெனில் சரீரத்தில் அவைகள் அப்பொழுதும் இருந்தாலும், அச்சமயத்தில், சரீர உருபுக்கள் அவைகளுடன் சேருகிறதில்லை. (ஆபரேஷன்) இரணசிகிச்சை செய்யுங்காலத்தில் குளோரோபாரம் என்னும் மயக்க மருந்தை வைத்

தியர்கள் அளிக்கும்பொழுது நோயாளி, நோவுண்டாகிறதை உணருகிற தில்லே. வாயு மண்டலம் முதலானவைகளிலிருக்கும் பிராணிகள் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படுகிறதில்லே. அறிவிழந்தது இன்ப துன்பங்களே உணருகிறதில்லே. அதே மாதிரியே இப்பிராணிகளும் இங்ஙனமிருக்க கஷ்டட த்திலிருந்து காப்பாற்று என்ற பேச்சிற்கு பொருள் என்ன?

வினு:—ஜீவன்களான படியினுல் சுகதுக்கங்கள் ஏன் அவைகளேயும் பாதிக்காது?

விடை:—கேளும்! பேதைகளே!! சுஷுப்தி யிலிருக்குங்கால் ஏன் இன்ப துன்பங்களே நீங்கள் உணருகிறதில்லே யென்று கூறுங்கள்? சுகதுக்கங்களுக்குக் காரணம் (ஆத்மாவிற்கும் அவயவங்களுக்கும்) உள்ள பிரசித்த சம்பந்தமே யாகும். குளோரோபாரம் கொடுத்தபின்னர் வைத்தியர்கள் அங்கங்களே அறுக்கிருர்கள்; சரீரத்தின் பாகங்களேக் கீறுகிருர்கள். இருந்தும் நோயாளி ஹிம்சையை உணருகிறதில்லே. இதேமாதிரி எக்காலமும் மூர்ச்சையிலிருக்கும் ஜீவன்களுக்கு இன்ப துன்பங்களுடைய உணர்ச்சி கிடையாது.

வினு:—பாருங்கள்! நாங்கள் கந்த மூல பல, கனுவர்க்கங்களே உண்பது கிடையாது. ஏனெனில் முன் சொன்னவைகளில் பல ஜீவன்களிலிருக்கின் றன, பின்சொன்னவைகளிலோ கணக்கு வழக்கில்லாதிருக்கின்றன. இவைகளே த்தின்போமேயானுல் இவ்வுயிர்களேத் துன்புறுத்தி கொலே செய்த பாபத்திற் காளாவோம்.

விடை:--இந்நம்பிக்கைக்கும் காரணம் உங்களுடைய அறிவீனமேயாகும்? காய் கரிகளேச் சாப்பிடுவதினுல் எவ்விதமாக ஜீவன்கள் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படுகிறதென்று நம்புகிறீர்கள்? பிரத்தியட்சப் பிரமாணத்தினுல் அறிகி றீர்களா? ஆம் என்ருல் இவ்வழியை நாங்களும் அறிய ஆவலுள்ளவர்களாயிருக் கிருேம். நீங்களும் அறியமாட்டீர்கள்; எங்களுககும் சொல்லமாட்டீர்கள். பிரத் தியட்சப் பிரமாணத்தினுலேயே இது சித்திக்காமல் போனுல், அனுமானம் உபமானம், சப்தம் முதலிய பிரமாணங்களினுல் யாது பிரயோஜனம்? அடர் ந்த அந்தக்காரத்திலும், பெரும் மயக்கத்திலும் இருக்கும் ஜீவன்கள் இன்ப துன்பங்களின் உணர்ச்சியை அறிகிறதென்று நினேத்த உங்களுடைய தீர்த்தங் கரர்களின் தப்பேயாகும் இது. யுக்திக்கும் புத்திக்கும் விரோதமான இவை களே உங்களுக்குக் கற்பித்துள்ளார்கள். விசாலத்தில் கட்டுப்பட்டுள்ள பொருள் களில் கணக்கற்ற பிராணிகள் எவ்விதம் இருக்க முடியும்? காய்கரி கிழங்குகளு டைய பரிமாணத்தை நாம் பார்க்கும்பொழுது அவைகளிலிருப்பதின் தொகை எவ்விதம் அனந்தமாகும்? எனவே நீங்கள் கூறுவது மதியீனமேயாகும்.

வினு:—நெருப்பைக் கொண்டு காய்ச்சாத தண்ணீரைக் குடிப்பதினுல் பாப த்தைச் செய்தவர்களாகிறீர். காயச்சின ஜலத்தையே எங்களேப் போல், நீங்களும் அருந்தவேண்டும்.

விடை:—இதுவும் பிரமையே. தண்ணீரைக் காய்ச்சுங்கால் அதிலுள்ள பிராணிகளெல்லாம் உயிர் துறக்க நேரிடுமே? காய்ச்சின தண்ணீரில் அவைக

களுடைய சரீரத்தின் அணுக்கள் முழுவதும் கலந்து கொள்ளுகிற படியினால் இச்சிறிய இறந்த ஜீவப் பிராணிகளின் கஷாயத்தையே குடிக்கிறவர்களாகிறீர்கள்.* எனவே நீங்கள் பெரும் பாபிகள். காய்ச்சப்படாத நீரைக் குடிக்கிறவர்கள் பாபம் ஒன்றும் செய்கிறவர்களாக ஆகிறதில்லை. ஏனெனில வயிற்றுச் சூடு பட்டவுடன், மூச்சுக் காற்றுடன் வெளியில் வந்து விடும். உண்மையைச்சொல்லப்புகில் இருவர்களும் பாபம் செய்கிறார்களில்லை. ஏனெனில் முன் கூறின விதம் இன்ப துன்பங்களின் உணர்ச்சியை இச்சிறு பிராணிகள் அறிகிறதில்லை.

வினா:—வயிற்றுச் சூட்டினால் இவைகள் வெளியாகும் பொழுது, வெளியில் காய்ச்சும் பொழுதும் ஏன் வெளியாகாது?

விடை:—வெளியாய்விடுவது உண்மையே. ஆனால் நீங்கள் கூறும் வண்ணம் மூச்சுக் காற்றினால் கூட இறக்கிற இவைகள், காய்ச்சுவதினால் ஏன் மரிக்காது. அல்லது சரீரத்துடன் தப்பியோடுவதற்கு முந்தி ஏன் பெருங்கஷ்டத்தையடையாது? அல்லது ஜலத்துடனேயே ஏன் சேர்ந்துவிடாது? இதினால் நீங்கள் பெரும் பாபிகளாகிறீர்கள் அல்லவா?

வினா:—நாங்கள் எங்கள் கைகளைக் கொண்டு காய்ச்சுகிறதில்லை. அல்லது கிரகஸ்தர்களையும் காய்ச்சச் சொல்லுவதில்லை. எனவே பாபிகளாக மாட்டோம்.

விடை:—வெந்நீரை நீங்கள் காய்ச்சவும் குடிக்கவும் மறுக்கும் பொழுது உங்களுக்காகக் கிரகஸ்தனும் காய்ச்சமாட்டான். ஆதலால் பாபத்திற்குக் காரணம் நீங்களேயாவீர்கள். நாங்களறிந்த வரையில் கிரகஸ்தர்களைக் காட்டிலும் நீங்கள் பெரும் பாபிகள். ஏனெனில் கிரகஸ்தர்களிடம் முன்னரே சொல்லியிருந்தால் அவாகள் ஒரு தரமே காய்ச்சுவர்கள். சாதுக் களாகிய உங்களுடைய வருகை நேரத்தை யறியாத, அவர்களில் ஒவ்வொருவரும் எக்காலமும் கொதித்த ஜலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே பாபத்திற்கு நீங்களே காரண புருஷர்கள் என்று கூறவேண்டும்.

உணவு பதார்த்தங்களைச் சமைத்தல், உழுது பயிரிடல், வியாபாரஞ் செய்தல் முதலிய வேலைகளில் செலவாகும் ஏரி துரும்புகளுக்கும், தீக்கும் காரணம் நீங்கள்தான் என்று மேற்சொன்னவைகளைக் கொண்டே காட்ட முடியும். நீரைக் கொதிக்க வைப்பதற்குக் காரணம் நீங்களே. காய்ச்சின ஜலத்தைக் குடித்துக் காய்ச்சாததைக் குடிக்காமலிருக்க உபதேசம் செய்கிறவர்களும் நீங்களே. ஆதலால் முக்கியமாக நீங்களே பாபிகள். உங்களை பின் பற்றி நடப்பவர்களும் பாபிகள். அறியாமையால் அழுந்தினவர்களென்று உங்களை அழைப்பது மிகையாது. சமணசமயத்தைச் சேராதவர்களைத் தூஷித்து நிந்தனை செய்வது பாபமல்லவா? உங்களுடைய தீர்த்தங்கரர்

---

* இதிலிருந்து நூலாசிரியர் காய்ச்சின தண்ணீரைக் குடிப்பதற்கு விரோதமாயிருக்கிறாரென்று எடுத்துக்கொள்ளக் கூடாது. சமணர்களுடைய ஆயுதத்தைக் கொண்டே அவர்களை எதிர்க்கிறார். (மொ—ர்)

களின் மதம் உண்மை யாகுமேயானால் கடவுள் இச்சிருஷ்ட்டியில் நதிகளை ஓடச் செய்வானேன்? ஜலத்தை விடுவானேன்? உங்களுடைய நம்பிக்கைப் பிரகாரம் கோடிக்கணக்கான ஜீவன்களை வதைக்கவல்ல உஷ்ணத்தைக் கொடுக்கும் சூரியனையும் கூட சிருஷ்ட்டித்திருக்கக்கூடாது. நீங்கள் ஈசுவரன் என்று நம்பு படியானவர்கள் ஏன் கருணை கூர்ந்து சூரியவெப்பத்தைத் தணித்து மேகத்தைக் கூடாமல் செய்யக்கூடாது? நாம் முன் சொன்ன வண்ணம் விளங்கும் பிராணிகளைத் தவிர கந்தமூல புலங்களில் வாழும் ஜீவராசிகள் சுக துக்கங்களை அனுபவிக்கிறதில்லை. சகல பிராணிகளிடத்தும் தயையுடனிருப்பது துக்ககரமானதே. ஏனெனில் இவைகள் (இப்பிராணிகள்) எல்லாம், உங்களுடைய நம்பிக்கை பிரகாரம் மானிடப் பிறப்பை யடைந்து, திருடன் கள்ளன் முதலானவர்கள் கூட தண்டிக்கப் படாமலிருந்துவிட்டால், பாபம் பெருகிக் கொண்டு போகுமே. தீயோர்களைத் தண்டித்து நல்லோர்களைக் காப்பாற்றுவதே உண்மையான கருணையாகும். இதற்கு மாறுபடுவது கருணை கடாட்சம் இவ்விரண்டும் பிறழுவதேயாகும். வியாபாரத்திலிறங்கி, பொய் சொல்லி, பணம்பறித்து, ஏழைகளை ஏமாற்றுகிற சமணர்கள் பலரிருக்கிறார்கள். சிறப்பாக இத்தியவழக்கங்களைத் தொலைத்துவிடும்படி ஏன் நீங்கள் உபதேசம் செய்யக்கூடாது? வாயை மூடிக்கொள்ளுதல் முதலான சூழ்ச்சிகளை ஏன் கையாளுகிறீர்கள்? (ஆண் பெண் இருபாலர்களுக்கும்) தீட்சை யளிக்கும் பொழுது தலைமயிரைப் பிடுங்கல், பல நாள் உபவாசம் இருத்தல், முதலான கஷ்ட்டங்களை ஏற்று ஆத்மஹத்திக்கு ஆளாகிறீர்கள். யானை,குதிரை,ஒட்டகம், இவைகளில் சவாரி செய்வதையும், பிறர் உங்களுக்காக உழைப்பதையும் ஏன் பாபமாக நீங்கள் எண்ணுகிறதில்லை? நன்றாய்த் தெரிகிற பொய் புரட்டுகளைக் கூட சரியானதென, உங்களால் நிரூபிக்க முடியாமலிருக்க, தீர்த்தங்கரர்களினாலுங்கூட அது முடியாததேயாகும். உங்களுடைய சமய நூற்களைப் படிக்கும் பொழுதும் சொல்லும் பொழுதும், உங்கள் நம்பிக்கைப் பிரகாரமே, நீங்களும், உங்களுடைய சீடர்களும் பல பிராணிகளை வதைக்கிறீர்கள். இப்பாபத்தை ஏன் செய்கிறவர்களாகிறீர்கள்? நாம் விரிவாகக் கூறியில்லாமலிருந்த பொழுதிலும் இதை அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. பூமி, ஜலம், ஆகாரம் முதலான விடங்களில் இருக்கும், ஸ்தாவர சரீரத்தையுடைய முழு அறிவுமிழந்திருக்கிற பிராணிகள் ஒரு பொழுதும் உணரமாட்டாது.

சமணர்களுடைய இன்னும் சில அசம்பவங்களைச் சொல்லுவோம். மானிட சரீரத்தின் கையைப் போல் மூன்றரை கொண்டது ஒரு தனுஷ். இது ஒரு அளவைக் கருவியாகும்.

கால அளவை முன்னரே கூறியுள்ளோம். இரத்தின சாரம், முதல் பாகத்தின் 166, 167 பக்கங்களில் எழுதப்பட்டிருப்பதாவது:—

	பெயர்.	சரீரநீளம்.	வயது.
1.	இருஷபதேவர்	500 தனுஷ்	8,4000,000 பூர்வவருடங்கள்.
2.	அஜிதநாதர்	450 ,,	7,200,000 ,,

3.	சம்பவநாதர்	400	,,	6,000,000	,,
4.	அபிநந்தனர்	350	,,	5,000,000	,,
5.	சுமதிநாதர்	300	,,	4,000,000	,,
6.	பத்மப்பிரம	140	,,	3,000,000	,,
7.	பாரசுவநாதர்	200	,,	2,000,000	,,
8.	சந்திரப்பிரபா	150	,,	1,000'000	,,
9.	ஸுவிதிநாதர்	100	,,	200,000	,,
10.	சீதளநாதர்	90	,,	100,000	,,
11.	ஸ்ரேயாம்சநாதர்	80	,,	8,400,000	,,
12.	வாசுபூஜ்யசுவாமி	70	,,	7,200,000	,,
13.	விமலநாதசுவாமி	60	,,	6,000,000	,,
14.	அநந்தநாதசுவாமி	40	,,	3,000,000	,,
15.	தர்மநாதசுவாமி	45	,,	1,000,000	,,
16.	சாந்திநாதசுவாமி	40	,,	100,000	,,
17.	குந்துநாதசுவாமி	35	,,	95,000	,,
18.	அமரநாதசுவாமி	30	,,	84,000	,,
19.	மல்லிநாதசுவாமி	25	,,	5,5000	,,
20.	முனிஸுவிருதசுவாமி	20	,,	30,000	,,
21.	நமிநாதசவாமி	14	,,	10,000	,,
22.	நேமிநாதசுவாமி	10	,,	10,000	,,
23.	பாரசுவநாதசுமாமி	9	,,	100	,,
24.	மகாவீரசுவாமி	7	,,	72	,,

இவ்விருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களும் சமண சமயத்தையுண்டு பண்ணின ஆசாரியர்களும் குருமார்களுமாவார்கள். சமணர்கள் இவர்களைச் சருவேசுவரனுக்கருதுகிறார்கள். இவர்களெல்லோரும் மோட்சத்தை யடைந்தவர்கள். மானிட சரீரம் இவ்வளவு பெரிய உடலைத் தாங்கி, இவ்வளவு காலம் வாழ முடியுமா வென்பதைப் புத்திமான்கள் யோசிக்கவேண்டும். இம்மாதிரியானவர்களிருந்தால் இப்பூகோளத்தில் வெகு சிலரே இருக்க முடியும். இஜ்ஜயின புரட்டுகளைப் பின்பற்றி புராணிகர்களும். 1,000. 10,000. 100,000. வருடங்கள் மக்கள் வாழ்ந்திருந்ததாக எழுதி வைத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் அசம்பவமான படியினால் சமணர்கள் கூறுவதும் அங்ஙனமே. இன்னும் சில உதாரணங்களாவன:—

1. நாககேது ஒருகிராமத்தையொத்தக் கல்லைத் தன் கைவிரலில்) தாங்கினான். (கல்ப்ப பாஷியம் பக்கம் 4.)

2. மகாவீரர் தன் கை விரலைப் பூமியின் பேரில் அழுத்தவே சேஷ சர்ப்பம் நடுங்கிற்று. (ஷ்டி பக்கம் 46.)

3. பாம்பு மகாவீரரைக் கடித்தது. இரத்தத்திற்குப் பதிலாக பால் வந்தது. பாம்பும் சுவர்க்கத்தை யடைந்தது. (ஷ்டி பக்கம் 46.)

4. மகாவீருடைய பாதங்களின் மேல் பணியாரம் சமைத்தார்கள். இருந்தும் கால் எரிந்து போகவில்லை. (ஷை பக்கம் 47.)

5. சிறியதொரு பாண்டத்தில் ஒட்டகத்தை நிறகச் செய்தார்கள். (ஷைபக்கம் 10.)

6. சரீரத்தின் அழுக்கைக் கழுவவுங் கூடாது, துடைக்கவுங் கூடாது. (இரத்தின சாரம் முதற்பாகம் 14 பக்கம்.)

7. தமசாரர் எனப் பெயருள்ள சமண சாது கோபங் கொண்டு மந்திரத்தை ஜபிக்கவே பட்டணம் தீக்கிரையாயிற்று. (விவேகசாரம், முதற்பாகம், பக்கம் 15.)

8. அரசாக்ஞையைக் கீழ்ப்படிந்தே தீரவேண்டும். (விவேகசாரம். முதற்பாகம் பக்கம் 14.)

9. **கோஷா** என்னும் வேசி, தட்டில் எண்ணெய் விதைகளை நிறப்பினாள். பூக்களினால் மூடப்பட்ட ஊசியை நடுவில் நிறுத்தி அதன் மேலிருந்துகொண்டு தாண்டவமாடினாள். இருந்தும் ஊசி காலைக் குத்தவில்லை. விதைகளும் இடம் விட்டு இடம் மாறவில்லை. (ஷை 227.)

10. **ஸ்தூலமுனி** இதே வேசியுடன் 12 வருடகாலம் கூடி வாழ்ந்தார். பின்னர் திட்சை பெற்று நற்கதியை யடைந்தார். வேசியும் சமண சமயத்தைப் பின்பற்றின படியினால் நல்ல கதியை யடைந்தாள். (தத்துவ விவேக 228.)

11. சித்தருடைய கழுத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த பையானது ஒரு வேசிக்கு 500 **மோகர்களை** யளித்தது. (விவேகசாரம்,முதற்பாகம், 185.)

12. பலமுள்ளவன், கடவுள், குரு, பெற்றோர், குலப்புரோகிதர், உற்றார் உறவினர்,இவர்களுடைய வார்த்தைகளைக் காப்பாற்றவேண்டிய சமயத்திலும், வனத்தின் நடுவிலும், தர்மத்தினின்று பிறழின போதிலும் பயனில்லாமல் போய்விடாது. (ஷை பக்கம் 228.)

இவர்களது பெரும் பொய்களின் சிறுமை என்னே! கிராமத்தின் பரிமாணக் கல்லைத் தூக்குவதும், கை பெருவிரலைக் கொண்டு பூமியை அழுத்துவதும், சாத்தியமா? பூமியின் கீழ் பாம்பில்லாமலிருக்க அது எவ்விதம் நடுங்கமுடியும்? சமையல் செய்த பொழுது மகாவீரரின் கால்கள் ஏன் எரிந்து போகாமலிருந்தது? ஒரு சிறிய பாண்டத்தில் ஒட்டகம் அடங்குவதுசாத்தியமா? இவைகளை வாசகர்கள் கவனித்தல் வேண்டும். சரீரத்திலுள்ள அழுக்கைக் கழுவாமல் இருக்கிறவர்கள், அத்துர் நாற்றத்தினால் கஷ்டப் படுவார்கள். நகரத்தை எரித்த சாது கருணையற்றவராயும் கடின சித்த முள்ளவராயுமிருந்திருக்கவேண்டும். **மகாவீருடைய** சேர்க்கையினால்கூட ஆத்ம சுத்தியுண்டாகாமலிருக்க அவரின் மூலமாகச் சமணர்களுக்கு நற்கதி எவ்விதம் கிடைக்கும்?(ஏனெனில் அவர் இறந்துபோய் விட்டாரே.) அரசனைக் கீழ்ப்படி யென்பது சிறந்ததே. ஆனால் **பனியா** வகுப்பைச் சேர்ந்தவர்களான படியினால் பயத்தின் மேலீட்டினால் இத் தாக்கீதை உண்டு பண்ணி யிருப்பார்கள் போலும். கால் குத்தாமலும்,விதைகள் பரவாமலும் வேசி **கோஷா** எவ்வளவு இலேசான சரீரத்தையுடைவளாயிரு

க்தபொழுதிலும்—ஊசி யின் பேரில் நடனம் பண்ணினுளென்பது பொய்யே யாகும். என்ன நேர்ந்த பொழுதிலும் தர்மத்தைப் போற்றி நடக்க வேண்டும். உடையோ துணியாலாக்கப் பட்டது. இருந்தும் அது எவ்விதம் 800 தங்க மோகர்களை அளிக்கும்? இவ்வித அசம்பவங்களைத் தொகுத்துக்கொண்டு போனுல் சமண நூற்களைப் போல் நம்முடையதும் விரியும். சிற்சிலவற்றைத் தவிர சமணசமயம் கூறுவதனைத்தும் பொய்யேயாகும்.

दोससि दोरवि पदमे । दुगुणा लवणं मिधाय ईसं मे ।
वारससि वारसरवि । तत्यभि इंनि दिठ ससि रविणो । பிரகரண, 4. 77.

ஜம்பு துவீபத்தின் பரப்பு 1,00,000, யோஜனைகள். தீவுகளில் முதன்மை யானது இதுவே. இதில் இரண்டு சந்திரனும் இரண்டு சூரியனும் பிரகாசிக்கி ரூர்கள். உப்பு சமுத்திரத்திலுள்ளது 4 சூரியன்கள், 4 சந்திரன்கள். காதகீ கண்டத்தில் 12 சூரியன்களும், 12 சந்திரன்களும் இருக்கின்றன. 12 × 3 = 36. இத்துடன் கூட ஜம்புதுவீபத்திலுள்ள 2 சூரியன்களையும் 2 சந்திரன்களையும் உப்பு சமுத்திரத்திலுள்ள நான்கையும் சேர்க்கவும். ஆகவே கலோததி சமுத் திரத்திலுள்ளது 42 சந்திரன்களும் சூரியன்களும் ஆகும். ஆகமொத்தம் 42 × 3 = 126 சந்திர சூரியன்கள். உப்புசமுத்திரத்திலுள்ள 4 சூரியன், 4 சந்திரன், காதகீபரப்பிலுள்ள 12, ஜம்புதுவீபத்திலுள்ள 2, இவற்றைச் சேர்க்கவும். ஆக மொத்தம் புஷ்கரதுவீபத்திலுள்ளது 144 சந்திரன்கள். மனிதர்கள் வாழும் மொத்தத்தில் பாதியான பூகோளத்தின் கணக்கேயாகும் இவைகள். மனித வாழ்க்கை யற்ற பரப்புகளில் சூரியச் சந்திரன்கள் பல விருக்கின்றன. ஆனுல் அவைகள் அசைவற்றிருக்கிறது. 144 × 3 = 432. ஜம்புதுவீபத்திலுள்ள 2, உப்பு சமுத்திரத்திலுள்ள 4, காதகீயிலுள்ள 12, கலோததீயிலுள்ள 42, இவைகள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால், புஷ்கரத்தில் இருப்பது 492 சூரியன்களும் 492 சந்திரன்களும் என்று வெளியாகும். இவைகளெல் லாவற்றிற்கும் சித்தாந்த கிரந்தங்களான ஸ்ரீஜினபத்திர கனீணீ க்ஷமாசிரமண சங்கியாமி, யோதி ஸகாண்டக பயன்னுச் சந்திரபன்னதீ, சூரபன்னதீ முதலான வைகளில் காணலாம்.

பூகோள சாஸ்திர, கணித சாஸ்திர மேதாவிகள் கவனித்தல் வேண்டும். ஒரு வகைப் பட்ட கணக்கின் உதவியைக்கொண்டு இப்பூகோளத்தில் 492 சூரி யன்கள், 492 சந்திரன்கள் இருப்பதாகவும், வேருெரு வகையான கணக்கைக் கொண்டு கணக்கிடமுடியாத சூரிய சந்திராதிகளும் இருப்பதாகச் சமணர்கள் அறிகிருர்கள். வேதத்தில் நம்பிக்கையுள்ள வானசாஸ்திரி முதலானவர்களாலெ ழுதப்பட்ட சூரியசித்தாந்தம் முதலிய நூல்களைப் படிப்பதினுல் இச்சாத்திரங்க ளின் உண்மையை நீ அறிந்து கொள்ளமுடியும். அது உன்னுடைய அதிர்ஷ்ட் டவசமேயாகும். சமணமாகிற இருட்டிலகப்பட்டுக் கொண்டிருந்தால், சமணர் களைப்போல் திசை தெரியாமல் தவிக்கவேண்டியதே. ஜம்புதவீபம் முழுவ திற்கும் ஒரே சூரியன் சந்திரன் போதாதென்று அவ்வறிவில்லாதவர்களுக்கு யாராவது சொல்லியிருக்கவேண்டும். ஏனெனில் ஒரே சந்திர சூரியன் 24 மணி

நேரத்தில் பூமியைப் போன்ற பெரிய பரப்புகளில் பிரகாசிக்க முடியாது. சூரியனைவிடப் பூமி பெரியதென்கிற நம்பிக்கை கொண்டவர்கள் இத்தப்பிற்கு ஆளாகிறார்கள். மேலும் சமண நூற்கள் கூறுவதாவது:—

दो ससि दो रवि पंती एगंतरियाछ सठिसंखाया ।

मेरुंपयाहिणंता ! माणुसखित्ते परिअडंति ॥ பிரகரண. 4. 79.

சூரிய சந்திரன்களுடை தொடர்ச்சியைக் குறித்து பேசுவோம். இவ்வித தொடர்புகளில் இரண்டிருக்கின்றன். 10,000 யோஜனை தூரத்திலிருந்து ஒவ்வொன்றும் நடக்கிறது. சந்திரர்களுடைய தொடர்பையடுத்து சூரியர்களுடையதும் சூரியர்களுடையதையடுத்துச் சந்திரர்களுடையதுமிருக்கின்றன. ஆகவேதொடர்ச்சிகளின் எண்ணிக்கை நான்காகின்றன. சூரியனுடைய தொடர்ச்சி ஒவ்வொன்றில் 66 சூரியன்களும், சந்திரனுடைய தொடர்ச்சி ஒவ்வொன்றில் 66 சந்திரன்களும் இருக்கின்றன. இந்நான்கு தொடர்ச்சிகளும் ஜம்புத்வீபத்திலுள்ள மேருபர்வதத்தை வலம் வந்த பின்னர் மனித சஞ்சாரமுள்ள பூகோளத்தில் திரிகிறது. மேருவிற்குத் தெற்கேயொன்றும், அதற்குத் தெற்கில் மற்றொன்றும் சுற்றுகின்றது. உப்பு சமுத்திரத்தின் ஒவ்வொரு திசையில் இரண்டுசூரியனும், காதகீபரப்பில் 6 ம், கலோததியில் 21 ம், புஷ்கரத்தில் 26 ம் முறையே திரிகின்றன. இவ்விதமாக வடதிசையில் 66 சூரியன்களும் தென்திசையில் 66 சூரியன்களும் திரிகின்றன. எல்லாவற்றையும் கூட்டினால் 132 சூரியன்களும் 132 சந்திரன்களும் பூகோளத்தில் மனித சஞ்சாரமுள்ள பரப்புகளில் திரிகின்றன. சந்திரன்களுடைய நக்ஷத்திரங்களின் தொடர்ச்சி பலவைகளுமிருக்கின்றன.''

கவனிக்கவேண்டும். 132 சந்திரன்களும் 132 சூரியன்களும் சமணர்களுடைய இல்லத்திலிருக்கின்றனவோ என்னமோ? இருந்தால், அதில் வாழுகிறவர்கள் எவ்விதம் இவைகளுடைய குளிரையும், வெப்பத்தையும் சகித்துக்கொண்டு இருக்கிறார்களோ? பூகோள சாஸ்திரம் பூமி சாஸ்திரம் இவைகளையறியாதவர்களே இப்பொய்யை நம்புவார்கள். நாமிருக்கும் கிரகத்தையொத்த, பலவைகளில் பிரகாசிக்கவல்ல ஒருசூரியன் இருக்கும்பொழுது, அது நம் பூமிக்கு வெளிச்சங்காட்ட முடியாதென்பதை எவன் சந்தேகிப்பான்? சூரியனைச் சுற்றி பூமியும், பூமியைச் சுற்றி சூரியனும் பிரயாணம் செய்யாமலிருந்தால் பலவருடங்கள் வெளிச்சத்திலேயோ அல்லது இருட்டிலேயோ நாம் வாழ நேரிடும். ஹிமாலயத்திற்குச் சுமேரு என்ற மற்றொரு பெயருண்டு. குடத்திற்கு முன் கடுகு எப்படியோ அப்படியே தான் அது சூரியன் முன்னிலையிலும். அவர்கள் சமயத்திலுள்ளவரையில் சமணர்கள் இவைகளையறியாமல் இருட்டிலேயே திண்டாடுவார்கள்.

समत्तचरण सहियासव्वंलोगं फुसे निरवसेसं ।

सत्तयचउदसभाए पंचयसुपदेसविरईए ॥ பிரகரண. 4, 135.

"முக்தியைப் பெற்ற, தர்மஜீவன்கள், சுயேச்சையாயிருப்பதினுல், 14 இராஜ்யங்களிலும் திரியும், இதற்குக் காரணம் அவைகளுடைய ஆத்மசக்தியேயாகும்," 14 வது இராச்சியத்தின் உச்சியில் சர்வார்த்த சித்தி விமானத்தின் கொடிமரத்திற்குக் கொஞ்ச தூரத்திற்கு மேல், சமணர்கள் கூறும் வண்ணம், சித்தசிலே திவ்விய ஆகாசம் என்னும்படியான சிவபுரி முதலானவைகளிருக்கின்றன. சர்வஞ்ஞமும் பரிபூரண பரிசுத்தமும் அடைந்தவர்களே அவ்விடத்தில் போகமுடியும். அவ்விடத்திலும் சுய ஆத்ம பலத்தைக் கொண்டு வசிக்கமுடியும்".

வரையறுக்கப்பட்ட எல்லையையுடையது எங்கும் பரவியதாகாது. எங்கும் பரவாதது எல்லாம் அறிந்த சர்வஞ்ஞமாகாது. எதனுடைய ஆத்மா குறிப்பிட்ட ஒரு பிரதேசத்திலிருக்கிறதோ அதுவே போய் வந்து கொண்டிருக்க முடியும். கட்டுப்பட்டது, ஞானி, அஞ்ஞானி, இவைகளைப் பொருத்தவரையிலேயே இது சரியாகும். சர்வ வியாபியாயும் சர்வஞ்ஞமாயுமுள்ளவனுக்கு இது ஏற்காது. சமணர்களுடைய தீர்த்தங்கரர்கள் அற்பமாயும் அற்பஞ்ஞர்களாயும், இருந்திருந்தால் ஒருபொழுதும் சர்வஞர்களாயும், சர்வ வியாபிகளாயும் மாறமுடியாது. ஆதியந்தமற்ற சர்வ வியாபக சர்வஞ்ஞ, பவித்திர ஞானசுவரூபரான இறைவனைச் சமணர்கள் நம்பாதது வருந்தத்தக்கதே. மேலும் அவர்கள் சொல்லுவதாவது:—

गब्भनरति पलियाऊ । तिगाउ उक्कोसते जहन्नेणं ।
मुच्छिम दुहावि अन्तमुहु । अङ्गुल असंख भागतणू ॥ பிரகரண, 4, 241.

மானிடவகுப்பை இருவிதமாகப் பிரித்திருக்கிறார்கள். (1) கர்ப்பந்தரித்து பிறந்தவர்கள். (2) கர்ப்பந்தரிக்காமல் பிறந்தவர்கள். பின் கூறினவர்கள் 3 பல்யோபம காலம் வசித்து 3 கோச நீளமுள்ளவர்களாகவிருப்பார்கள்.

இத்துணை ஆயுசும் பரிமாணமும் உள்ள வெகு சிலரே இவ்வுலகில் இருக்கமுடியுமென்றே நாம் நம்புகிறோம். ஆயுள் காலம் முழுவதும் ஜீவித்திருந்தால் அவர்களுடைய மக்களும் அவர்களைப் போலவே யிருப்பார்கள். பம்பாயையொத்த நகரத்தில் இம்மாதிரி 2 மனிதர்களும், கல்கத்தாவில் 3 அல்லது 4 மனிதர்களுமே இருக்கமுடியும். சமணர்களோ பட்டணங்களில் கோடிக் கணக்கானவர்கள் வசித்தார்களென்கிறார்கள். ஆகையினுல் அப்பட்டணங்களுடைய விஸ்தீரணம் லக்ஷக்கணக்கான மைல்களிருக்கவேண்டும். பூகோளத்தில் அம்மாதிரி பட்டணம் ஒன்றைக்கூட அமைக்கமுடியாதே.

पणया ललरकयोयण । विरकंभा सिद्धिशिलफलिहविमला ।
तदुवरि गजोयणंते लोगन्तो तच्छ सिद्धठिई ॥ பிரகரண, 4. 245.

சர்வார்த்த சித்தி விமானத்தின் கொடி மரத்தின் மேல் 12 யோஜனை தூரமுள்ள சித்தசிலேயின் விஸ்தீரணம் 45 லக்ஷம் யோஜனைகள். சித்தசிலேயிலமைக்கப்பட்டுள்ள சித்தபூமிவெண்மை நிறமானது, பளப்பளப்பானது, தங்கமயமானது, கண்ணுடியைப் போல் பிரகாசிக்கக்கூடியது, சித்தர்களிருக்கும்

இடம் இதுவேயாகும். சிலர் இதை ஈஷத் பிராக்பரா என்றும் அறிகிறார்கள். சர்வார்த்தசித்தி விமானத்திற்கு 12 யோஜனைகளுக்கப்பால் அலோகம் (ஸ்பரிசிக்கமுடியாதது) இருக்கிறது. முக்தியை யடைந்தவர்களே இதன் மர்மத்தை யறியமுடியும். விமானத்தின் மத்தியதேச பரிமாணம் 8 யோஜனைகள். நான்கு திக்குகளிலும் சித்தசிலை அமைக்கப்பட்டு அங்கிருந்து வளைந்து போகிறது. பரந்த குடையை யொத்திருக்கிறது. சிறிய ஈயின் இரகைப் போலிருக்கிறது. சிலையின் 1 யோஜனைத் தூரத்திற்கப்பால் முக்தியின்பப் பிரதேசத்தின் முடிவாகும். சித்தர்கள் வாழும் இடம் இதுவேயாகும்".

கவனியுங்கள்! சர்வார்த்த சித்தி விமானத்தினுடைய கொடிமரத்தின் மேல் இருப்பது சமணர்களுடைய முக்தியிடம். அதன் விஸ்தீரணம் 45,000,000 யோஜனைகளாம். எத்துணை சிறந்ததாயும், நிர்மலமாயும் அந்த விடமிருந்தபொழுதிலும், அதில் வசிக்கும் முக்தியடைந்த ஜீவன்களை ஒருவிதத்தில் பந்தத்திற்குட்பட்டதென்றே சொல்லலாம். ஏனெனில சிலையிலிருந்து வெளிவந்தவுடன் முக்தியிலிருந்து நழுவி விடுகிறதாகிறது. உள்ளே வாசம் செய்யும் வரையில் சுவாசிக்கக் காற்றுகூட கிடையாது. இவைகளெல்லாம் பேதைகளைப் பிடிப்பதற்கென்று பரப்பப்பட்ட வலைப் பின்னலேயாகும். மேலும் சமண நூற்களில் சொல்லுவதாவது:—

वितिचउरिं दिस सरीरं । वार सजोयणति कोसच उकोसं जोयणसहस
पणिंदिय । उहे वुच्छन्ति विसेसंतु ॥ பிரகரண 4. 267.

ஏகேந்திரியத்தைக் கொண்ட (ஒரே இந்திரியம்) பிராணியின் தேகத்தின் அதிக நீள அளவு 1,000 யோஜனைகள். இரண்டு இந்திரியங்களை (சங்கு முதலானவைகளைப் போன்றது) உடையதின் நீளம் 12 யோஜனை; நான்கு இந்திரியங்களைக் கொண்டதின் அளவு 5 கோசம்; பஞ்சேந்திரியங்களைக் கொண்டதின் அளவு 1000 யோஜனைகள்.

1000 யோஜனை நீளமுள்ள சரீரத்தையுடையவைகளிருந்தால, பூமி நிறைந்துவிடுமே. நூறு பேர்களைக்கூடப் பிடிக்காதே. அச்சமயத்தில் எங்கு வசிப்பது, எவ்வழி போவது, என்று கேட்டால், அவர்களுடைய நூல்கள் வீட்டினுள் அடைப்பட்டு கிடக்கும். 4000 கோசம் பருமனுள்ள மனிதனுக்குக் குறைந்தது 320,000 கோசம் விஸ்திரணமான வீதி வேண்டியிருக்கும். இவ்வளவு விசாலமான வீட்டைச் சமணர்கள் எல்லோரும் சேமித்து வைத்திருக்கும் தொகையைக் கொண்டுகூட கட்டமுடியாது. 8,000 மைல்களுக்கதிகமான விஸ்திரணத்தையுடைய கூரைகளைத் தாங்கவிட்டங்கள் ஏது? இவ்வித வீட்டிற்குத் தூண்கள் வைப்பது எங்ஙனம் முடியும்? எனவே எல்லாம் பொய்யே. மீண்டும் இந் நூலிலியே சொல்லுவதாவது:—

ते थूला पल्ले विहुसं खिज्जाचे वहुति सव्वेवि ।
तेइक्किक असंखे । सुहुमे खम्मे पकप्पेह ॥ பிரகரண. 4. 4.

4 கோசம் அகலமும் 4 கோசம் ஆழமுமுள்ள கிணறு கைவிரல் நீளமுள்ள மயிரினால் நிரப்பட்டிருக்கிறது. கைவிரல் நீளமான மயிரை மொத்தம் 330,762,108,246,562,542,199, 20,97,152 பாகங்களாகத் துண்டிக்கலாம் 6097,5361,000,0000 இவ்வளவு விசாலமான பல்யோமத்திலிருக்கும் மயிர்களே சங்கியாத காலமெனப்படும். எண்ணுவதற்கியலாத மயிரின் பாகங்கள் பலவற்றை ஊகிப்பதே அசங்கியாத காலமாம்.

சமணர்களுடைய கணக்கின் போக்கை கவனியுங்கள். எவ்விதமாக மயிர் ஒரு அளவு கருவியாகும்? அசங்கியாத காலத்தை ஊகித்தறிவதற்கு மயிரின் பாகங்களை மனதில் எண்ணிக்கொள்ளவேண்டுமென்றபொழுது, கைகளின் உதவியால் (சங்கியாத காலத்தை அறியுங்கால்) முதலில் மயிரை கோடானக் கோடிக் கணக்காய்த் துண்டிக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. கைகளினால் இவ்வேலை யாகாமலிருக்கும் பொழுது மனதைத் தேடினார்கள். கைவிரல் நீளமான மயிரைச் சங்கியாதப் பாகங்களாககூடத் துண்டிக்க முடியுமா?

जंबूदीपपमाणं गुलजोयाणलरक वट्टविरकंभी ।
लवणाईयासेसा बलया मादुगुणदुगुणाय ॥ பிரகரண, 4. 12.

ஜம்பூத்துவிபத்தின் விஸ்தீரணம் 4 லக்ஷம் யோஜனை. நடுவில் பள்ளமாயிருக்கிறது. (முன் சொன்ன மாதிரி) பூமியில், ஜம்பூதுவீபத்தைப் போல் ஏழு துவீபங்களும் (தீவுகளும்) உப்பு சமுத்திரத்தைப் போல் ஏழு நீர் பரப்புகளும் இருக்கின்றன. ஒவ்வொன்றும் பரிமாணத்தில் ஜம்புத்துவீபத்தைக் காட்டிலும் பெரியது. அதாவது வரிசைக் கிரமத்தில் முன்னுக்குட் பின்னிருப்பது பெரியது,

ஜம்பூத்துவீபத்தை விடப் பெரியதான இரண்டாவதின் விஸ்தீரணம் 200,000 யோஜனை, மூன்றாவதின் விஸ்தீரணம் 400,000; நான்காவதின் வீஸ்தீரணம் 8000,000; ஐந்தாவதின் விஸ்தீரணம் 1,160,000 ஆறாவதின் விஸ்தீரணம் 3,2,00,000; ஏழாவது 6,400,000 இதேமாதிரியோ அல்லது அதிகமான பரிமாணத்தையுடைய ஏழு சமுத்திரங்கள் இவைகளை யெல்லாம் 50000 யோஜனை சுற்றளவுள்ள பூமி தாங்குமோ?

कुरुनईचुलसी सहसा । छवेवन्तनरई उपइ विजयं ।
दोदो महानईउ । चनुदस सहसा उपत्तेयं ॥ பிரகரண. 4. 63.

விடை:—குருக்ஷேத்திரத்திற்குள் 84,000 நதிகள் இருக்கின்றனவே.

வினா:—குருக்ஷேத்திரம் நிலத்தின் ஒரு சிறிய துண்டேயாகும். அவ்விடத்தைச் சென்று பார்க்காமல் சமண ஆசிரியர்களுக்கு இதை யெழுதுவதில் நாணந் தோனறவில்லையா? மேலும்

यामुत्तरा उताउ । इगेग सिंहासणाउ अइपुव्वं ।
चउ सु वितास निआसण, दिसिभवजिण मणज्जं होई ॥ பிரகரண. 4. 116.

சிலையின் தெற்கிலும், வடக்கிலும் சிங்காசனங்களிருக்கின்றன. நேர் தெற்கே யிருக்கும் நிலத்தின் பெயர் அதிபாண்டகம்பளா; நேர் வடக்கே யிருப்பதின் பெயர். அதிரிக்தகம்பளா. இச்சிம்மாசனங்களில் வீற்றிருப்பவர் தீர்த்தங்கரர்களே. தீர்த்தங்கரர்களுடைய பிறந்த தினத்தைக் கொண்டாடும் இடங்கள் இது! சமணமுக்திக் கிருப்பிடம் இச்சித்தசிலையே யாகும்

சமண நூற்களில் இவ்விதம் நாய்ப் பூனைக் கதைகள் பலவிருக்கின்றன. அவைகளெல்லாவற்றையும் பற்றி கூறுவதால் பயனில்லை. சமண சமயத்திலுள்ள மூன்று நல்ல விஷயங்களாவன:—

1. வடிக்கட்டின தண்ணீரைக்குடித்தல். 2. (ஒப்புக்குமாத்திரமேயானாலும்) சிறியஜீவனிடம் கருணையுடன் இருத்தல். 3. இரவு வேளைகளில் சாப்பிடாமலிருத்தல்.

அவர்களுடைய மீதி உபதேசங்களெல்லாம் வீணே. சமண நூற்களிலுள்ள அசம்பவங்களை யெல்லாம் எடுத்து எழுதப்புகின் இதைப்போல் அநேகம் புத்தகங்கள் எழுதவேண்டிவரும். மனிதாயுசுக்குள் படிக்கவும் முடியாது. சிறியபுல், காற்று எத்திசையில் வீசுகிறதென்பதைக் காட்டுவதுபோல், சமண வெண்ணங்களை யறிய புத்திமான்களுக்கு நாம் கொடுத்திருக்கும் உதாரணங்களே போதுமானது. அதிநுட்பமாகப் போவதில் பிரயோஜனமில்லை. புத்திமான்களுக்கு எப்பொழுதும் ஒரு வார்த்தை போதுமானதல்லவா?

அடுத்த அத்தியாயத்தில் கிறிஸ்துவ மதவிசாரணை செய்வோம்.

பனிரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதின்மூன்றாவது அத்தியாயத்தின்

முகவுரை.

பைபிலிலிருந்து பிறந்த மதங்களில் கிறிஸ்துவ மதமே சிறந்தது. யூதமதமும் பைபிலைத் தழுவியதேயாகும். நாம் இப்பதின்மூன்றாம் அத்தியாயத்தில் கிறிஸ்துவமதத்தைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏனெனின் பைபிளினின்று எழுந்தமதங்களில் இது சிறந்ததும், முக்கியமானதுமாகும். யூதமதமும், வேறுசிலவும் கிறிஸ்துவமதத்தைப்போல் தலைசிறந்து விளங்கவில்லை. நாம் கிறிஸ்துவ மதவிஷயமாய்ச் சொல்லுவதே, இதர மதங்களுக்கும் என்று எல்லோரும் கொள்ளவும். கிறிஸ்துவர்களாலும், யூதர்களாலும் ஏற்றுப் போற்றப்படும் பைபிலை எடுத்து ஆராய்வோம்.

பைபில் சிறந்த பாதிரிமார்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பொது பாஷையாகிய ஹிந்தியிலும் சமிஸ்கிருதத்திலும் மொழிபெயர்ப்பு உளது. நாம் இவைகளைப் படித்துப்பார்த்ததில் நமக்குப் பல சந்தேகங்கள் ஏற்பட்டன. எல்லோரும் அறியும் பொருட்டு இவைகளில் சிலவற்றை இவ்வத்தியாயத்தில் விடுக்கிறோம்.

சத்யவிருத்தி, அசத்தியநாசம், இந்நோக்கத்துடனே தான் இவ்வத்தியாயத்தைத் துவக்குகிறோம். ஒருவருக்கு அதிருப்தியைக் கொடுப்பதும் மனதைப் புண்படுத்துவதும் அல்லது பொய்க் குற்றங்களைச் சுமற்றுவதும் நமது கருத்தல்ல. இவ்வத்தியாயத்தைப் பார்த்த பின்பு இப்பைபில் எத்தகையது, இதன் உட்கருத்தென்ன, இதனால் எவ்வாறு பயனுள்ளது, என்பது புலனாகும். கிறிஸ்துவமதக் கொள்கைகளை எல்லோரும் ஊன்றிப் படித்தல் எளிதாகும். மேலும் மனிதர்களுடைய தர்மவிஷயங்களின் ஞானம் இதனால் பெருகவே சத்தியாசத்தியம், முதலியவை விளங்கும். அசத்யத்தை (செய்யக்கூடாத காரியம் இவைகளை) விட்டு சத்தியத்தை (செய்யவேண்டிய காரியத்தை) கைப்பிடிக்க உபகாரமாயிருக்கும்.

ஒரு மதத்தை ஏற்கவோ, அல்லது கண்டிக்கவோ ஒருவன், சகலமதங்களை முதலிற் கற்றுணரவேண்டும். எல்லா மதங்களின் சாரத்தை அறியாது வாயில் வந்ததைப் பேசுவது மனிதத் தன்மையாகாது. படியாதவர்கள் கேழ்விமூலம் எல்லாவற்றையும் அறிதல்வேண்டும். படிப்பதால் ஒருவன் பண்டிதனாவதுபோல் கேட்பதாலும், அறிவைப் பெறல்கூடும். மேலும் கேட்

டவன் பிறருக்குப் போதிக்க முடியாதபோதிலும், தான் விஷயத்தை அறிதல் கூடும். ஆத்மா சத்தியாசத்தியத்தை அறியும் சக்தி பெற்றது. எனவே, படித்தவனும், கேட்டவனும் தான் படித்ததையும் கேட்டதையும் சரியானதா அல்லவா என்று நிதானித்தல் முடியும். சமயங்களின் ஞானமில்லாமல் விஷயங்களை விவாதித்தறியமுடியாது. அஞ்ஞானிகள் அசத்தியப் படு குழியில் எளிதில் விழுந்துவிடுவார்கள். அவர்களைத் தப்புவிக்கவே இந்நூல். இந்நூலைப் படித்தவர்கள், இதிலில்லாத பிறவிஷயங்களை அனுபவத்தினால் அறிந்து கொள்ளலாம்.

எல்லோராலும் ஒப்புக்கொள்ளத் தகுந்த உண்மயானது எச்சமயத்திற்கும் ஏற்றதே. எவ்விடத்தில் பொய்க் கொள்கைகளும், எவ்விடத்தில் ஒருபுறம் பொய்யும் மற்றொருபுறம் மெய்யும் இருக்கிறதோ அவ்விடத்திலேயே வாதங்கள் விளையும். உண்மையை அறியவேண்டும என்கிற முழு எண்ணத்துடனேயே விவாதித்தால், எளிதில் முடிவைப் பெறலாம்.

எல்லோரும் அறியும்பொருட்டு இப்பதின்மூன்றும் அத்தியாயத்தில் கிறிஸ்துவமத விஷயங்களை விடுக்கிறோம். அவரவர்களின் இஷ்டப்பிரகாரம் அறிந்துகொள்ளவும்.

புத்திமான்களுக்கு ஒரே வார்த்தை போதுமானதென்று நம்புகிறோம்.

பதின்மூன்ருவது அத்தியாயம்.

கிறிஸ்துவமத சித்தாந்த ஆராய்ச்சி.

—:o:—

இனி நாம் கிறிஸ்துவ சமயத்தைப்பற்றி ஆராய்தல் வேண்டும். அம்மதம் மாசற்றதா என்றும, சத்தியவேதம் என்று அழைக்கப்படும் 'பைபில்' தேவ வாக்குத்தானு என்றும் விசாரணை செய்வோம்.

ஆதியாகமம்.

1. ஆதியிலே தேவன் வானத்தையும். பூமியையும் சிருஷ்டித்தார். பூமி யானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய், இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.

ஆராய்ச்சிக்காரர்:—ஆதியென்று எதைசொல்லுகிறீர்.

கிறிஸ்துவர்:—ஆதியான சிருஷ்டியை.

ஆ:—சிருஷ்டியின் துவக்கமே இதுதானு? இதற்கு முன் வேறு சிருஷ்டிகள் இருந்ததில்லையோ?

கிறி:—இதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எல்லாம் வல்ல தேவனுக்குத்தான் தெரியும்.

ஆ:—தெரியாதாயின் இப் 'பைபில்' என்னும் புத்தகத்தின்மேல் ஏன் நம்பிக்கை வைக்கவேண்டும்? சிருஷ்டியைப்பற்றி சந்தேகமற விளக்காத புத்தகத்தில் நம்பிக்கை வைத்தும், பிறருக்கு இதை உபதேசம் செய்தும் சந்தேக நிவர்த்தி செய்யாத சித்தாந்தங்களைக் கூறி ஜனங்களை இதில் சிக்கவைத்தும் வருகிறீர்கள். எல்லாச் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்யும், சுடர்விளக்குப்போன்ற வேதத்தை ஏன் நீங்கள் கொள்ளலாகாது? ஈசுவர சிருஷ்டியை அறியாத நீங்கள், சிருஷ்டிகர்த்தாவான ஈசுவரனை எங்ஙனம் அறியப்போகிறீர்கள். நிற்க 'வானம்' என்று எதைக்கருதுகிறீர்கள்?

கிறி:—எட்டாததும், அதிக உயரத்திலிருக்கிறதும், சூன்யத்தைக்கொண்டது மானதை நாங்கள் ஆகாசம் என்கிறோம்.

ஆரா:—ஒன்றுமில்லாத சூன்யவஸ்து எங்ஙனம் சிருஷ்டிக்கப்படும். அது எங்கும் நிறைந்தது. அதிக சூட்சுமமானது. கீழும், மேலும் ஒருதன்மையைக் கொண்டது. ஆகாசம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன் அங்கு என்ன விருந்தது என்று எண்ணுகிறீர்கள்? வானம் என்பது இருந்ததா? இல்லையா? ஆகாசம் சிருஷ்டிக்கப்படுமுன் வானம் இல்லையானல், பிரபஞ்சத்திற்குக் காரணமான ஈச்வரனும், ஜீவன்களும் எங்கு இருந்தன? ஆகாசம் இல்லாது எப்பதார்த்தமும் இருக்கமுடியாது. ஆகாசம் சிருஷ்டிக்கப்பட்டது என்று உங்கள் நூல் கூறுவது ஏற்கக் கூடாததல்லவா? இது நிற்க இன்னொரு விஷயத்தைக்

கேட்கிறேன். ஈச்வரன் ஒழுங்கம், முறை இவைகள் அற்றவரா? அல்லது அவரது கர்மமும் ஞானமும் ஒழுங்கான முறையைக் கொண்டவையா?

கிறி:— ஒழுங்கைப் பூஷணமாகக் கொண்டவரே கடவுள்.

ஆரா:—நல்லது. அப்படியானல் ஈச்வரனல் சிருஷ்டிக்கப்பட்ட பூமி ஒழுங்கீனமாய் இருந்தது என்று பைபில் கூறுகிறதே. அதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்.

கிறி:—ஒழுங்கீனம் என்ருல் மட்டமானதாயிருக்கவில்லை என்பது பொருள். அதாவது மேடு பள்ளங்களை உடையதாயிருந்தது. பிறகு மட்டமாகச் செய்யப்பட்டது.

ஆரா:—இன்னும் பூமி மேடு பள்ளங்களைக் கொண்டிருக்கவில்லை. ஈச்வர சிருஷ்டி ஒருநாளும் ஒழுங்கு அற்றதாய் இருக்கமுடியாது. பகவான் சர்வஞ்ஞர். அவரது கிருஷ்டியில் பழுதும், தவறுதலும் இருந்தால் முடியாது. எனவே சிருஷ்டியை ஒழுங்கற்றதாயிருந்தது என்று கூறும் பைபில் ஈச்வரனல் செய்யப்பட்டதல்லவென்பது விளங்கவில்லையா? இனியும் பார்ப்போம். ஈச்வரனின் ஆத்மா எத்தகையது? அது விஷயமாய் உங்கள் அபிப்பிராயமென்ன?

கிறி:—சேதனமானது.

ஆரா:—உருவ முள்ளவரா? உருவ மில்லாதவரா? எங்கும் பரவியுள்ளவரா? ஓர் இடத்திற்குரியவரா?

கிறி:—உருவ மில்லாதவர் (நிராகாரர்) சேதனர். ஆனல் சனயி பர்வதத்திலும், நான்காவது சுவர்க்கத்திலும், இன்னும் சில இடங்களிலும் விசேஷமாக இருக்கிருர்.

ஆரா:—நிராகாரரா யிருந்தால் அவரை யார் பார்த்திருக்கக்கூடும்? எங்கும் வியாபகமாயுள்ள வஸ்து ஜலத்தின்மேல் அசையமுடியாது. ஆவியானது (ஆத்மா) ஜலத்தின்மேல் அசையும் போது தேவன் (ஈச்வரன்) எங்கிருந்தார் அவருடையதேகம் வேறெங்கேயாவது இருந்திருக்கவேண்டும். அல்லது அவரது ஆத்மாவின் ஒரு பாகத்தை ஜலத்தின்மேல் அசையவிட்டிருக்க வேண்டுமென்பதைக் காண்பிக்கிறது. ஆனல் இப்படி இருக்கும் பட்சத்தில் சர்வவியாபகராயும் சர்வஞ்ஞராயும் இருக்க இயலாது. சர்வஞ்ஞராயும் வியாபகராயுமவரில்லையானல், ஆக்கல், அளித்தல், அழித்தல், இவைகளைச் செய்வதும், கர்மங்களுக்குத்தகுந்த பிரயோஜனங்களைக் கொடுப்பதும் இயலாது. ஏனென்ருல் எல்லை யுள்ளவருக்கு எல்லையுள்ள காரியந்தான் செய்யமுடியும். வேதத்தில் அவர் சர்வவியாபகர், அனந்த குணகர்ம ஸ்வபாவயுக்தர், சச்சிதாநந்த ஸ்வரூபர், நித்யர், பரிசுத்தமுள்ளவர், மேதாவி, இயற்கையாய் முக்தி (விடுதலை) யடைந்தவர் ஆதி அந்தமில்லாதவர் என்று சொல்லப்படுகிறது. இக்குணங்களைக் கொண்ட ஈச்வரனை மதிக்கவேண்டும். இவ்வெண்ணமே காப்பாற்றும்.

2. தேவன் வெளிச்சமுண்டாகக் கடவது என்றார். வெளிச்ச முண்டா யிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். (1. 3. 4.)

ஜடரூபமான வெளிச்சம் ஈச்வரன் சொன்னதைக் கேட்கும் சக்திபெற் றதா? கேட்குந் திறமையுண்டானால் தற்காலம் சூரியன், தீபம், அக்னி, இவை கள் ஏன் நாம் சொல்லுகிறதைக்கேட்கிறதில்லை? ஜடமான ஒளி ஒரு போதும் சொல்வதை கேட்கமுடியாது. ஈச்வரன் வெளிச்சத்தைப் பார்த்தபிறகு தான் அதை நல்லதென்று கண்டார். முதலில் அவருக்குத் தெரியவில்லை போலும். தெரிந்திருக்குமேயானால் பார்த்த பின்னரே நல்லது என்று தெரிந்து கொண்டிருக்க மாட்டார். தெரியாமலிருந்திருப்பின் அவர் ஈச்வரனாகமாட் டார். ஆகையால் பைபில் தேவவாக்கல்ல. அதில் சொல்லப்பட்ட ஈசுவரனும் சர்வஞ்ஞரல்ல.

3. பின்பு தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாகக் கடவது என்றும் அது ஜலத்தி னின்று ஜலத்தை பிரிக்கக் கடவெதென்றும் சொன்னார். தேவன் ஆகாயவிரிவை உண்டு பண்ணி ஆகாய விரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாய விரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரி வுண்டாக்கினார். அது அப்படியே ஆயிற்று. தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பேரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று. (1. 6. 7. 8.)

ஜலமும் அகாயமும் கூட ஈச்வரன் சொன்னத்தைக் கேட்டு அதன்படி நடந்ததா? ஜலத்தின் நடுவில் ஆகாசமில்லையானால் ஜலம் எங்கிருந்திருக்கக் கூடும்? முதல்வரியில் ஆகாசம் சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்லி யிருக்கி றபடியால் இரண்டாந்தடவை அதைச் சிருஷ்டிப்பது பிரயோஜன மற்ற தேயாம்.

ஆகாசம் சுவர்க்கமாகும் பட்சத்தில் அது சர்வவியாபக மாகிற படி யினால் ஸ்வர்க்கமும் எங்கும் வியாபகமானதாகவிருக்கவேண்டுமே. அப்படி ஆகும் பட்சத்தில் உயரத்தில் தான் ஸ்வர்க்கம் இருக்கிறது என்பது பொருள ற்றதே. சூரியன் சிருஷ்டிக்கப்படாத காலத்து இரவும் பகலும் எங்ஙனமுண் டாகும்? இனிவரும் அசம்பாவித மானவரிகளைக் காண்க:—

4. பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனி தனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகா யத்துப் பறவைகளையும் மிருக ஜீவன்களையும் பூமியனைத்தையும் பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக் கடவர்கள் என்றார். தேவன் தம் முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார். அவனை தேவசாயலாகவே சிரு ஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். (1. 26. 27. 28.)

ஈச்வரன் தன்னைப் போலவே மானிடர்களை உண்டுபண்ணியிருந்தால் அவருடைய ஸ்வரூபம் பரிசுத்தம், ஞானரூபம் ஆனந்த மயம் என்னும் இலட் சணங்கள் மனிதனிடத்தி லிருக்கவேண்டும். அவருக்குச் சமானமாய் மனி தர்கள் அவரது ஸ்வரூபத்தைக் கொள்ளவில்லை என்பது விளங்கும். மனி

தன் சிருஷ்டிக்கப்பட்டு அவருடைய ஸ்வரூபத்தி லிருக்கிறபடியால் கடவுளுடைய ஸ்வபாவமும் உற்பத்திக்குள்ளாகிறது. இதனால் அவரது நித்ய லட்சணம் பங்கப்படுகிறது. நிற்க, மனிதனைக் கடவுள் எதன் துணை கொண்டு படைத்தார் என்பதை விளக்குவீர்களா ?

கிறி:—மண்ணிலிருந்து சிருஷ்டித்தார்.

ஆரா:—மண்ணை எதிலிருந்து உண்டுபண்ணினர்?

கிறி:—அவரது ஒப்பற்ற சாமர்த்தியத்தினுல்.

ஆரா—அவருடைய சாமர்த்தியம் ஆதியந்த மற்றதா?

கிறி:—ஆதியற்றதே.

ஆரா:—அனுதியாயிருக்கும் பட்சத்தில் ஜகத்தின் காரணமும் அனுதி (சனுதனம்) ஆகின்றது. அபாவத்திலிருந்து பாவம் எங்ஙன முண்டாகும்.

கிறி:—சிருஷ்டியின் முன் ஈச்வரனைத் தவிரவேறு ஒரு வஸ்துவும் இல்லை.

ஆரா:—பிறகு இவ்வுலகம் எங்கிருந்துவந்தது?

ஈச்வரனுடைய சமர்த்தியம் ஒருபொருளா; அல்லது குணமா? பொருளாயிருக்கும் பட்சத்தில் அவரை விடவேறுன பதார்த்தம் ஒன்று இருந்திருக்க வேண்டும். குணமாயிருக்கும் பட்சத்தில் அதிலிருந்து பதார்த்தம் உண்டாக இயலாது. அதாவது உலகமும் அதிலிருந்து சிருஷ்டியும் ஆகமுடியாது. வெளிச்சத்தி லிருந்து பொருளும் நீர்த் தன்மை லிருந்து நீரும் ஒரு நாளுமுண்டாகாது. ஈச்வரனிலிருந்து உலகம் உண்டாயிருந்தால் ஈச்வரனிடத்திலிருக்கும் சமானமான குணம், கர்மம் ஸ்வபாவம், உலகத்திற்கும் இருக்க வேண்டும். அப்படி யில்லாம லிருப்பதே அவரிடமிருந்து உண்டாகவில்லையென்பதை நிச்சயஞ்செய்கிறது. ஆனல் பரம அணு முதலிய ஜடபதார்த்தங்களே இதற்குக் காரணமாகும். வேத சாஸ்த்திரங்களில் சொல்லும் வண்ணம் சர்வ வல்லமையுள்ள ஈச்வரனே சிருஷ்டிக்குக் காரணம்.* ஆதாமின் அகக் குணத்தை ஜீவனுகவும், வெளிரூபத்தை மனிதனுகவும் கருதும் பட்சத்தில் ஈச்வரனுடைய ஸ்வபாவமும் ஏன் அப்படி யிருத்தல்கூடாது? ஏனென்றால் ஆதாமை ஈச்வர ஸ்வரூபத்தி லிருந்து உண்டு பண்ணினபடியால் ஈச்வரனும் மனித ஸ்வரூப மாகவேதானிருக்கவெண்டும்.

5. தேவனுகிய கர்த்தர் மனிதனை பூமியின் மண்ணினுலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினர். மனிதன் ஜீவாத்மாவானுன். தேவனுகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஓர் தோட்டத்தை உண்டாக்கி தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். தேவனுகிய கர்த்தர் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவே ஜீவ விருட்சத்தயும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கச் செய்தார். (2. 7. 8 9.)

எப்பொழுது ஏதேன் தோட்டத்தை உண்டுபண்ணி ஆதாமை அதில் வைத்தாரோ, அதிலிருந்து அவனை வெளிப்படுத்தப் போகிறேமென்பது அவருக்குத் தெரிந்திருக்க வில்லையா? மண்ணிலிருக்கும் தூளினுல் ஆதாமை

உண்டுபண்ணின படியால் அவன் ஈச்வர ஸ்வரூபமாகச் செய்யப்படவில்லை. ஏனென்றால் அப்பொழுது ஈச்வரனும் தூளியிலிருந்து செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆதாமினுடைய நாசியில் ஊதின ஜீவ சுவாசம் ஈச்வரஸ்வரூபமா அல்லது அவரைவிட வேரானவஸ்துவா? வேறு வஸ்துவாயிருக்கும் பட்சத்தில் தன் சுய ஸ்வரூபத்தில் செய்யப் படவில்லை யென்றாகிறது. வேறு வஸ்து இல்லாமலிருக்கும் பட்சத்தில் ஈச்வரனும் ஆதாமும் ஒன்றே போல் ஆகிறார்கள். ஒன்று போல் ஆகிறபடியால் ஈச்வரனும், மனிதனைப் போல பிறப்பு, இறப்பு, மூப்பு, க்ஷயம் பசி தாகம் முதலிய ஸ்வபாவமுள்ளவராக ஆகிறார். இத்தோஷங்களால் பாதிக்கபடுபவர் எங்ஙனம் ஈச்வரனாதல் கூடும்? இக்காரணங்களால் இப்பழைய ஏற்பாட்டில் எழுதியிருப்பவைச் சரியானவையாகாது. இப்பழைய நூல் தேவவாக்காகாது என்று வெளிப்படையாகிறது.

6. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரை அடைந்தான். அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் எடுத்தவிலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனிதனிடம் கொண்டுவந்தார். (2. 21. 22.)

இங்ஙனம் பைபில் கூறுகிறது. ஈச்வரனானவர் மண் தூளியிலிருந்து ஆதாமை உண்டு பண்ணியபோது அவனுடைய ஸ்திரீயையும் ஏன் அப்படி செய்யவில்லை? எலும்பிலிருந்து ஸ்திரீயை செய்யும்போது ஏன் ஆதாமையும் அப்படிசெய்யவில்லை? (23. 24. யும் பார்க்க) ஆணிலிருந்து உண்டுபண்ணிய படியால் பெண் என்றபெயர் ஏற்பட்டதென்றால், பெண்ணிலிருந்து மனிதன் உற்பத்தியாவதால் ஆண் என்று வந்தது எனக் கொள்ளவேண்டும். பரஸ்பர அன்புவேண்டுமே. ஸ்திரீ புருஷனை எப்படி நேசிக்கிறாளோ அப்படியே புருஷனும் ஸ்திரீயை நேசிக்கவேண்டும். நேயர்கள் கவனிக்க வேண்டும். ஈச்வரனுடைய தத்துவ ஞானம் எங்ஙனம் பிரகாசிக்கின்றது? மனிதனுடைய விலாவெலும் பின் ஒன்றிலிருந்து பெண் உண்டு செயயப் பட்டதால் மனிதர்களுக்கு ஏன் ஒரு எலும்பு குறைவாயில்லை? ஒருவிலா எலும்பிலிருந்தே ஸ்திரீ செய்யப்பட் டிருந்தால் அவளில் ஒரு எலும்பே இருக்கவேண்டும். எந்தப் பதார்த்தங்களினால் உலகத்தை உண்டு பண்ணினாரோ அதனால் ஸ்திரீயையும் செய்து இருக்கக் கூடாதா. இதனால் பைபிலின் சித்தாந்தங்கள் சிருஷ்டிமுறைக்கும் வித்தைக்கும் விரோதமாகக் காணப்படவில்லையா?

7. பைபில் மேலும் கூறுவதாவது:—தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டுஜீவன்களை காட்டிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின்கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோவென்று, கேட்டது. ஸ்திரீ 'நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்;—ஆனால் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியை நீங்கள் சாகாதிருக்க விரும்பினால் புசிக்கவும் அதைத்தொடவும் வேண்டாம் என்று தேவன் சொன்னார்' என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி 'நீங்கள் சாகமாட்டீர்கள். நீங்கள் இதைப்புசித்தால் உங்கள் கண்கள் திறக்கப்

படும். நன்மை தீமைஅறிந்து நீங்கள் தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்று தேவன் அறிவார் என்றது.

அப்போது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக் கின்பமும் புத்தியை வளர்க்கத்தக்கதாயும் அவ்விருட்சமிருக்கிறதெனக் கண்டு அதின் கனியைப் பறித்து புசித்துத் தன்புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்—அப்பொழுது தேவனுகிய கர்த்தர் சர்ப்பத்தை நோக்கி "நீ இதைச் செய்தபடியால் சகல மிருகங்களிலும் சபிக்கப்பட்டு இருப்பாய். நீ உன்வயற்றிஞல் நகர்ந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய். உனக்கும் ஸ்திரீக்கும் உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன்தலையை நசுக்குவார், நீ அவர் குதிகாலை நசுக்குவாய் என்ருர். அவர் ஸ்திரீயைநோக்கி "நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன். வேதனையோடு பிள்ளைபெறுவாய், உன் ஆசை உன்புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்" என்ருர். பின்பு அவர் ஆதாமை நோக்கி "நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து புசிக்கவேண்டாமென்று நான் உனக்குச் சொன்ன விருட்சத்தின் கனியை புசித்தபடியால் பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடு அதன் பலனை புசிப்பாய் அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். (3. 1-7. 14-18.)

ஈச்வரன் சர்வஞ்ஞராயிருந்திருக்கும் பட்சத்தில் தந்திரமுள்ள சர்ப்பத்தை (சைதானை) ஏன் படைப்பிக்கவேண்டும்? அவர் படைத்தபடியால் சைதான் செய்யும் துஷ்டசெயல்களுக்கெல்லாம் ஈச்வரனும் பொறுப்பாளி. அவர் படைத்திராமல் இருந்தால் சைதானும் துஷ்டகாரியங்கள் செய்திருக்காது. பூர்வஜன்மத்தை நம்பாத கிறிஸ்துதேவன் யாதொரு தப்பையுங் காணமல் ஏன் சர்ப்பத்தைத் துஷ்ட சுவபாவமுள்ளதாய் சிருஷ்டிக்கவேண்டும். உண்மையை உரைக்குங்கால் அது சர்பபமில்லை. மனிதனுகத்தானிருக்கக் கூடும். இல்லையேல் எங்ஙனம் மனித நாக்குடன் பேசும்? பொய்சொல்லி ஏனையோர்களையும் அப்படிச்செய்யச் சொல்லி தூண்டுவதே சைதான் என்ருல் இச்சந்தர்ப்பத்தில் அவன் (சைதான்) உண்மையை உரைத்தான். ஸ்திரீயை கெட்டவழியில் தூண்டவில்லை. உண்மையையே உரைத்தான். ஈச்வரன் ஆதாம் ஏவாளுக்கு பொய்யைச் சொன்னர். ஞானத்தையும் பகுத்தறிவையும் உண்டுபண்ணுகிற பழத்தைத் தின்பதிஞல் மரணம் விளையும் என்றுரைத்தது பொய். நல்லது கெட்டது என்பதைக் காண்பிக்கிறதும் அமரத்துவத்தைக் கொடுக்கத் தக்கதுமான பழத்தைத்தின்ன கூடாதென்று அவர் ஏன் உரைத்தல் வேண்டும்? மரத்தின் பழம் ஞானத்தையும், சுகத்தையும் உண்டுபண்ணி; மரணத்தையும் அஞ்ஞானத்தையும் ஒழித்தது. பழம் தின்பது கூடாது என்ருல் ஏன் அவ்விருட்சத்தைச் செய்யவேண்டும்? தன் உபயோகத்திற்காகச் சிருஷ்டித்துக் கொண்டார் என்ருல், அஞ்ஞானம், மரணம் இவைகளிஞல் அவருக்கு அவசியமாயிருந்ததா? மனிதர்களுக்கெனச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் அதைத் தின்பதஞல் யாதொரு பாபமும் கிடையாது. ஞானமும் அமரத்துவமும் கொடுக்கிறதான எவ்வித மரமும் தற்காலத்தில் எங்கும் இல்லையே.

அவைகளினுடைய வித்தைகளையும் அழித்து விட்டாரா? இவ்விதமே மனிதொருவன் செய்திருந்தால் கபடன் வஞ்சகன் என்றழைக்கப்படுவான். அப்படி கடவுளும் செய்யும் பட்சத்தில் அவரையும் ஏன் அங்ஙனம் அழைக்கக் கூடாது? மூன்று நிரபராதிகளுக்குச் சாபங்கொடுத்தமையால் ஈச்வரன் அநியாயஞ்செய் தவராகிறார். அந்த ஈச்வரன் சபிக்கப்பட் டிருக்கவேண்டும். ஆதாம் ஏவாளை வஞ்சித்துப்பொய் சொல்லியபடியால் அவரே சாபத்திற்கு ஏற்றவர். வலியும் துக்கமு மன்னியில் எப்பொழுதாவது ஸ்திரீகள் கருத்தரித்து பிள்ளை பெறுதல் முடியுமோ. கஷ்டப்படாமல் எவனாவது சீவனஞ் செய்யமுடியுமோ. முள், செடி முதலியவைகள் முன்னர் இல்லையா? புல் பூண்டு காய் கனிகளைப் புசிப்பது நியாயமானபடியால் புதிய ஏற்பாட்டில் மாம்சாதிகளைச் சாப்பிட ஏன் அனுமதி கொடுத்தல் வேணடும். இரண்டில் ஒன்று பிழையானது. பாபச் செய்கைகளைச் செய்த குற்றங்கள் ஒன்றும் நிரூபிக்கப்படாதிருக்க ஆதாமின் சந்ததியான மனிதர்களை ஏன் கிறிஸ்துவர்கள் பாபிகள் என்றழைக்கவேணடும். எப்படி இப்புத்தகமும் இதில் கூறப்படும் ஈச்வரனும் அறிஞர்களால் அபிமானிக்கப்படும்?

8. பின்பு தேவனாகிய கர்த்தர் இதோ மனிஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான் இப்பொழுதும் அவன் தன்கைகளை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து புசித்து என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச செய்யவேண்டும், என்று அவர் மனுஷனைத் துரத்திவிட்டு ஜீவவிருட்சத் துக்குப் போம்வழியை காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்கு கிழக்கே கேருபீன்களையும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். (3, 22. 24.)

ஈச்வரன் ஏன் ஆதாமினிடத்தில் அவ்வளவு பொறாமை யுள்ளவராக வேண்டும்? ஞானத்தில் தனக்குச் சமானமாய் விட்டான் என்று ஏன் அவ்வளவு தடுமாற்ற மடையவேண்டும்? தனக்குச் சமான மாய்விடுவானோ என்ற பயம் ஏன் வேண்டும்? எப்படி யிருந்தபோதிலும் அவருக்குச் சமானமாய் எவனால் வரமுடியும்? இதுவே அவர் மனிதனைத் தவிர கடவுள் இல்லை என்று காண்பிக்கின்றது. பைபில் மனிதனைப் போலதான் கூறுகிறது, ஆதாமுக்கு ஞானம் விருத்தியாவதில ஈச்வானுக்கு எவ்வளவு வருத்தம் வருவானேன்? அமர விருட்சத்தின் பழங்களைத் தின்பதினால் ஆதாமின் பேரில் எவ்வளவு பகை காட்டினார். ஆதாம் ஏவாளை முதலில் தோட்டத்தில் இருக்க செய்கையில் அவர்களை இதிலிருந்து வெளிக் கடத்தவேண்டி வரும் என்று அவருக்குத் தோன்ற வில்லையா. மேற்கூறியகாரணங்களால் கிறிஸ்துவர்களின் ஈச்வரன் சர்வஞ்ஞரில்லை. ஜீவ விருட்சத்தைக் காப்பதற்கு சுவாலையுள்ள கத்தியை வைத்தது மனிதனுடைய வேலை என்று காண்பிக்கறதே ஒழிய ஈச்வரனுடையாகத் தெரியவில்லை.

9. சில நாள் சென்ற பின்பு காயீன் நிலத்தின் கனிகளை கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான்—ஆபேலும் தன்மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவை களிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார,

காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிக்க எரிச்சலுண்டாகி அவன் முகநாடிவேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனைநோக்கி உனக்கு என் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி என் வேறுபட்டது. (4. 3. 4. 5. 6.)

கடவுள் மாம்சகாரியாய் இல்லாதிருந்திருக்கும் பட்சத்தில் அவர் எப்படி ஆபேலின் காணிக்கைகளை ஏற்றுக்கொண்டு காயீனின் காணிக்கையை மறுத்திருக்கக் கூடும்? அவ்விருவருக்கு முண்டான இச்சண்டைக்குக் காரணமா யிருந்து ஆபேல் இறந்ததற்குங் காரணம் இவரே. கிறிஸ்துவ தேவன் மனிதரைப் போலவேபேசுகிருர். தோட்டத்தை உண்டுபண்ணி மனிதனைப் போல் வருகிறதும் போகிறதுமாக யிருந்தார். ஆதலால் பைபில் மனிதன் செய்தபுத்தகமே என்பதில் என்னசந்தேகம்?

10. கர்த்தர் காயீனை நோக்கி உன் சகோதரனுகிய ஆபேல் எங்கே என்ருர். அதற்கு அவன் நான் அறியேன் என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்ருன். அதற்கு அவர் என்னசெய்தான்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னைநோக்கி கூப்பிடுகிறது. இந்த பூமியில் சபிக் ப்பட்டிருக்கிருய். (4 9. 10. 11.)

காயீனை விசாரிக்காமலே உங்களுடைய தேவனுக்கு ஆபேலின் மரணம் தெரிந்திருக்காதா? யாரிடத்திலாவது மண்ணிலுள்ள இரத்தம் முறையிடுமா? அறிவீனர்களின் வார்த்தைகளே இவைகள்.

11. ஏனேக்கு மெத்தூசலாவைப் பெற்றபின் முன்னூறுவருஷம் தேவனேடே சஞ்சரித்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்ருன். (5 22.)

கிறிஸ்துதேவன் மனிதராயில்லாம லிருந்திருக்கும் பட்சத்தில் ஏனேக்கு எப்படி அவருடன் நடந்திருக்கக்கூடும்? இதனுல் கிறிஸ்துவர்கள் வேதோக்தமாயுள்ள நிராகார ஈச்வரனை மதிக்கும் பட்சத்தில் ஆனந்தம் அடைவார்கள்.

12. மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிகசௌந்தர்ய முள்ளவர்களென்று கண்டு அவர்களுக் குள்ளே தங்களுக்குப் பெண்களை தெரிந்துகொண்டார்கள். அப்பொழுது கர்த்தர் என் ஆவி என்றைக்கும் மனுஷனேடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபதுவருஷ மென்ருர். அந்நாட்களில் இராட்சதர்கள் பூமியிலே இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடு கூடுகிறதினுல் இவர்கள் அவர்களுக்கு பிள்ளைகளைப் பெற்ற போது; இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானுர்கள். மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்ற மெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர்கண்டு—தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப் பட்டார். அது அவர் இருதயத்திற்கு விசனமா யிருந்தது. அப்பொழுது கர்த்தர்நான் சிருஷ்டித்த மனுஷனை பூமியின்மேல் வைக்காமல் மனுஷன் முதற்கொண்டு மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிற வைகளை நான் நிக்கிரகம் பண்ணுவேன். நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமா யிருக்கிறது என்ருர். (6. 1. 7).

ஈச்வரனுடைய மக்கள், மாமனார், மாமியார், மைத்துனன் முதலியவர்கள் யார் என்று கிறிஸ்துவர்களைக் கேட்கவேண்டும். அவர்களுடைய குமாரர்கள் மானிடப் பெண்களை மணந்தபடியால் ஈச்வரன் அவர்களுக்குப் பந்துவாகஆகிறார். அவர்கள் குழந்தைகள் இவருக்கு பேரன் பேத்திகளாக ஆகிறார்கள். ஈச்வரவிஷயத்தில் இவைகள் உண்மையாகக்கூடுமா? அவருடைய புத்தகத்திலும் இவைகள் இருக்கக்கூடுமா? இப்புத்தகங்களை யெல்லாம் எழுதியவர் கடவுளைப் பற்றி கொஞ்சமேனும் அறியாத காட்டுத்தன்மை யுள்ள மனிதராக இருக்கவேண்டும். சர்வஞ்ஞராக இல்லாதவர், எதிர்காலம் அறியாதவர் கடவுள் அல்ல; மனிதர்தான். உலகத்தைச் சிருஷ்ட்டி செய்யு முன்னால் மனிதர்கள் இப்படி துஷ்டர்களாகப் போவார் என்பதை அறியமாட்டாரா? காரியத்தைச் செய்தபின் துக்கமுறுதலும், பிழைபடக் காரியம் செயததற்குப் பச்சாத்தாப்படலும் கிறிஸ்துவ தேவனுக்குத் தான் இயல்பு. அவர்கள் கடவுள் பூர்ண வித்வானாகவும், யோகியாகவும் கூட இல்லாதபடியினால் தான் சாந்தம், விஞ்ஞானம், முதலிய சோகாதி துக்கங்களிலிருந்து விலகியிருப்பது முடியாமல் போய்விட்டது. மிருகங்களும் பட்சிகளும் கூடவா அழிக்கத்தகுந்த அவ்வளவு கெடுதலாக ஆகிவிட்டது? அவர் சர்வஞ்ஞராக இருந்திருக்கும் பட்சத்தில் இப்படி ஏன் புத்தி யற்றவராக ஆகவேண்டும்? இதனால் இவர் ஈச்வரனு மல்ல; அவர்கள் புத்தகமும் தேவவாக்கல்ல. பாபம், சோகம், கிலேசம், தூக்கம் முதலிய வைகளிருந்து விலகின வேதோக்த ஈச்வரனாகிய சச்சிதானந்த ஸ்வரூபத்தை வழிபட்டு இருக்கும் பட்சத்திலும் இனியாவது வழிபடும் பட்சத்திலும் பலனை யடைந் திருப்பார்கள், அல்லது இனியாவது அடைவார்கள்.

13. நீ அதைப் பண்ணவேண்டிய விதம் என்னவென்றால் பேழையின் நீளம் முன்னூறுமுழமும் அதின் அகலம் ஐம்பதுமுழமும் அதின் உயரம் முப்பதுமுழமுமா யிருக்கவேண்டும்---நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உன் மனைவியும் உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசியுங்கள். சகலவிதமாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகையொன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு பேழைக்குள்ளே சேர்த்துக்கொள். ஜாதி ஜாதியான பறவைகளிலும் ஜாதி, ஜாதியான மிருகங்களிலும், பூமியிலுள்ள சகல ஜாதி ஜாதியான ஊரும் பிராணிகளிலும் வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னிடத்திலேவரக்கடவது. உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாக சகலவித போஜன பதார்த்தங்களையும் உன்னிடத்தில் வைத்துக்கொள் என்றார்—நோவா அப்படியே செய்தான்-தேவன் தனக்குக் கட்டளை யிட்டபடியெல்லாம் செய்து முடித்தான்.

(6-15, 18, 22.)

அசம்பவமாகிற இவைகளைக் கூறுபவனை ஈச்வரனாக படித்தவர் எவரேனும் கருதுவரா? மேற்சொல்லிய அளவுள்ள பேழையில் (ஆண், பெண்) யானை குதிரை, ஒட்டகம், இன்னும் இலட்சக்கணக்கான உயிர்ப் பிராணிகளுடன், எல்லாவித அன்ன ஆகாரதி பானாதிகளும், நோவாவின் குடும்பங்களுடன் எப்படி அடைந்து உள்ளே இருக்க முடியும்? இதனாலேயே புன்கவிகளின் கூற்றே இப்புஸ்தகம் என்று புலனாகவில்லையா?

14. அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலி பீடங்கட்டி சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு அவைகளைப் பலிபீடத்தின் மேல் தகனபலிகளாகப் பலியிட்டான். சுகந்த வாசனையை கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர் நான் இனி மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை. மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்தது போல இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும் சீதளமும் உஷ்ணமும் கோடைகாலமும் மாரிகாலமும் பகலும் இரவும் ஒழிவதில்லை. என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்—(8. 21. 20. 22)

பலிபீடம் கட்டுவதும், பலியிடுவதும் வேதத்திலிருந்து கடன் வாங்கப்பட்டவை. சுகந்தவாசனைகளை நுகர அவருக்கு மூக்கும் உண்டா? மனிதர்களைப் போல் கிறஸ்துவக்கடவுள் அற்பஞானமுள்ளவரா? சாபம் கொடுக்கிறார். பிறகு பச்சாத்தாபப் படுகிறார். இனிமேல் சபிப்பதில்லை என்கிறார். முதலிலும் சாபம் கொடுத்திருக்கிறார். இனிமேலும் கொடுப்பார். எல்லா ஜீவப் பிராணிகளையும் முதலில் அழித்தார். பிறகு இனிமேல் அழிக்கப் போவதில்லை என்கிறார். குழந்தைகளுடைய காரியம் போல் இருக்கிறதே வொழிய ஈச்வரனுடைய சொல்களாகக் காணப்படவில்லை. படித்தவர்களும் முறன்படக் கூறமாட்டார்கள். கிறிஸ்தவக் கடவுள் கூறுவதெல்லாம் முறணாக விருக்கிறது.

15. பிறகு தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள். நடமாடுகிற எல்லா ஜந்துக்களும் உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக. பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல் அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன். மாமிசத்தை அதின் உயிராகிய இரத்தத்துடன் புசிக்கவேண்டாம். (9. 1. 3. 4)

ஒரு பிராணனின் கஷ்டத்தினால் மற்றொரு ஜீவனை ஆனந்தப்படச் செய்வது கிறிஸ்து தேவனின் இரக்கமற்ற தன்மையைக் காண்பிக்கவில்லையா? ஒரு பிள்ளையை மற்றொரு பிள்ளையின் ஆகாரத்திற்காகக் கொல்லுபவர்கள் பாபிகள் அல்லரா? எல்லாரும் கடவுளின் பிள்ளைகள் அல்லவா? கிறிஸ்துவ தேவன் கசாப்புக்காரன் போல் ஆகிறார். மனிதர்கள் கல் நெஞ்சாயிருப்பதற்கும் கொடியவராவதற்கும் இதுவே காரணம். தேவனே இரக்கமற்றவரா யிருக்கையில் ஏன் பாபியாக மாட்டார்?

16. பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்தது. பின்னும் அவர்கள் நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாதபடிக்கு நமக்கு ஒரு நகரத்தையும் வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்கு கர்த்தர் இறங்கினார்: அப்பொழுது கர்த்தர் : இதோ ஜனங்கள் ஒரே கூட்டமாக இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள். இப்பொழுது தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைப்படமாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப் போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள்

பாஷையை தாறுமாருக்குவோம் என்ருர். அப்படியே கர்த்தர் அவர்களை அவ் விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினுர். அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள். (11. 1. 4. 8.)

இவ்வுலகத்தில் ஒரேபாஷை யிருந்திருக்கும் பட்சத்தில் எவ்வளவு ஆனந்தமாய் இருந்திருக்கும்? பொருமையுள்ள கிறிஸ்துவ தேவன் பாஷைகளைப் பல வாருகச் செய்து, ஆனந்தத்தைக் கெடுத்த படியால் நாம் அவரை என்னென்று அழைப்பது? இதனுல் சத்யத்தின் அழிவை உண்டுபண்ணி பெரிய தோஷத்தைச் செய்தார். சைதான் செய்ததைவிட மிகவும் கெட்ட காரியமில்லையா? கிறிஸ்துவதேவன் சனுயி போன்ற மலையில் எங்கேயோ இருந்துகொண்டு ஜனங்களின் நன்மையை நாடவில்லை. சாதாரணமாகப் படித்தவனும் இவ்வேலையைச் செய்யத் துணியமாட்டான். இப்புத்தகம் எப்படி தேவவாக்காய் இருக்கக்கூடும்?

17. தன்மனைவி சாராவைப் பார்த்து நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்றறிவேன்—எகிப்தியர் உன்னைக் காணும்போது இவள் அவனுடைய மனைவி என்று சொல்லி என்னைக்கொன்றுபோட்டு உன்னை உயிரோடே வைப்பார்கள். ஆகையால் உங்கிமித்தம் எனக்கு நன்மை உன்டாகும்படிக்கும் உன்னுல் என்னுயிர் பிழைக்கும்படிக்கும் நீ உன்னை என்சகோதரி என்று சொல் என்ருர்.
(12-11-13).

கவனியுங்கள்; தீர்க்கதரிசி என்று கிறிஸ்துவாகளாலும் மகம்மதியர்களாலும் கருதப்படும் இந்த ஆபிராஹாம் பொய்வார்த்தைகளைச் சொல்லுகிறவனுயும் இன்னும் பல கெட்ட காரியங்களைச் செய்பவனுகவும் ஆகிருன். தாழ்ந்த சுவபாவங்களோடு கூடிய இந்த தீர்க்கதரிசிகளைக் கைப்பற்றுபவர் எப்படி உண்மையான ஆனந்தத்தையும் அறிவையும் அடையக் கூடும்?

18. பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி இப்பொழுது நீயும் உனக்கு பின் தலைமுறை தலைமுறையாகவரும் உன்சந்ததியும் என் உடன்படிக்கையைக் கொள்ளுங்கள். எனக்கும் உங்களுக்கும் உனக்கு பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும் நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கையென்னவென்ருல்:—உங்களுக்குப் பிறக்கும் சகல ஆண் பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணவேண்டும். உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்கு முள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்—உங்களில் தலைமுறை தலைமுறையாய்ப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். வீட்டிலேபிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் உன் வீட்டில் பிறந்த பிள்ளையும் உன் பணத்திற் கொள்ளப்பட்டவனும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டியது அவசியம். இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாமிசத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது. நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளை யிருந்தால் அந்த ஆத்மா என் உடன்படிக்கையை மீறினபடியால் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறப்புண்டு போவான் என்ருர். (17-9-14).

இயற்கைக்கு விரோதமான தேவனின் கட்டளையைப் பாருங்கள்! நுனித் தோலைச் சேதனஞ்செய்வது அவருடைய [illegible] சிருஷ்டியைச் [illegible] அதில்லாமல் உண்டு பண்ணி யிருக்கக்கூடாதா? கண்ணின்மேல்மூடி கண்ணை க்காப்பாற்றுவதற்கு இருப்பது போல், உள்ளிருக்கும் நுண்ணிய கருவியை காப்பாற்று வதற்கே நுனித்தோல் இருக்கின்றது. கொஞ்சம் பட்ட போதிலும் அதிகம் நோவையும், எறும்பு கடித்தபோதும் அதிகக்கஷ்டத்தையும் உண்டு பண்ணும் அந்த அமைப்பிற்கு நுனித்தோல் இல்லையேல் பெருந்தீங்கு உண்டாகும். வெளியில் போனபிறகு மூத்திரம் துணியில்பட்டு கெட்ட வாசனையும் வராமலிருப்பதைத் தடுக்கும். இதனால் நுனித்தோலைச் சேதனஞ் செய்வது தப்பானதே. கிறிஸ்துவர்கள் ஏன் இக்கட்டளையைக் கையாளுவதில்லை. எப்போதும் கையாளத் தகுந்த ஆஞ்ஞையில்லையா? கட்டளையில் "ஒரு வார்த்தையும் பொய்யில்லை" என்று கிறிஸ்து சொன்னதைப் பொய்யாக செய்துவிடுகிறது. கிறிஸ்துவர்கள் இதை யோசிக்கவெண்டும்.

19. தேவன் ஆபிரகாமோடே பேசிமுடிந்த பின்பு அவர் அவனை விட்டு எழுந்தருளினார். (17-22.)

தேவன் மனிதனா அல்லது மேலும் கீழும் போகும் பட்சியா என்று தெரியவில்லை? இந்திரஜால வித்தைகாரன் போலும்.

20. இதோ மூன்று புருஷர்கள் அவனுக்கெதிரே நின்றார்கள். அவர்களைக்கண்டவுடனே அவன் கூடாரவாசலில் இருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடி தரைமட்டும் குனிந்து—ஆண்டவரே உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்தால் நீர் உமது அடியேனை விட்டுக்கடந்து போகவேண்டாம்—கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும். உங்கள் கால்களைக் கழுவி மரத்தடியில் சாய்ந்து கொண்டிருங்கள். நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்த கொஞ்சம அப்பம் கொண்டுவருகிறேன். அப்புரம நீங்கள் உங்கள் வழியே போகலாம். இதற்காகவே அடியேன் இடம் வரைக்கும வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்கள் நீ சொன்னபடிசெய் என்றார்கள். அப்பொழுது ஆபிரகாம் தீவிரமாய் கூடாரத்தில் சாராளிடத்திற்குப் போய் நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லியமாவு எடுத்துப் பிசைந்து அப்பம் சுடு என்றான். ஆபிரகாம் மாட்டு மந்தைக்கு ஓடி ஒரு நல்ல இளங்கன்றைப் பிடித்து வேலைக்காரன் கையிலே கொடுத்தான். அவன் அதை சீக்கிரத்தில் சமைத்தான். ஆபிரகாம் வெண்ணையையும் பாலையும் சமைப்பித்த கன்றையும எடுத்துவந்து அவர்கள் முன்பாக வைத்து அவர்கள் அருகே மரத்தடியில் நின்றுகொண் டிருந்தான். அவர்கள் புசித்தார்கள். (18-2-8.)

கவனியுங்கள்! பக்தர்களான கிறிஸ்துவர்கள் ஏன், பசு, கன்று முதலிய மிருகங்களின் மாம்சங்களைச் சாப்பிடுகிறார்கள்? வாய் இல்லாத மிருகங்களின் பேரில் தயையில்லாதவரும் மாம்சாகாரத்தில் ஆசை உள்ளவரும் ஒருநாளும் ஈச்வரனா யிருக்கமுடியாது. அவர் மனிதன் தான். தேவனுடன்கூட யாரோ இருவர் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர்களை யார் என்று சொல்லவில்லை. காட்டுத் தன்மையுள்ள ஒருகூட்டத்தின் தலைவருக்கு ஈச்வரன் என்ற நாமம் சூட்டப்பட்டது. இப்பேர்ப்பட்ட விஷயங்கள் தான் (மாம்சாகாரம

… வளாக … வில்லை.
பைபிலைக் கடவுளுடைய புத்தகமாகக் கருதவும் கூடவில்லை.

21. அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, சாராள் நகைத்து நான் கிழவியாயிருக்கப் பிள்ளை பெறுவது மெய்யோ என்று சொல்வானேன்—கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவ காலத் திட்டத்தில் உன்னிடத்தில் திரும்பவருவேன் அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். (**18**-13-14.)

ஆகா!! கவனியுங்கள்—குழந்தைகளைப் போலவும் ஸ்திரீகளை போலவும் சீக்கிரத்தில் வெறுத்து விட்டு, சாராவைப் பயமுறுத்துவானேன்?

22. அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கோமோராவின் மேலும் கர்த்தராலேவானத்திலிருந்து கந்தகத்தையும் அக்னியையும் வருஷிக்கப் பண்ணி அந்தப் பட்டணங்களையும், அந்தச்சம பூமியனைத்தையும் அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்து போட்டார். (**19**-24-25.)

பைபில் தேவனின் இந்த லீலையையும் பாருங்கள்! ஸ்திரீகள் பேரிலும் குழந்தைகள் பேரிலுங்கூட தயை வரவில்லை. பட்டணங்களை அழித்து அவர்களை அதன் கீழே புதைப்பதற்கு யோக்யதையான அவ்வளவு துஷ்டச்செயல்களை அவர்கள் செய்தார்களா? இவைகளெல்லாம், நியாயத்திற்கும் தயைக்கும், ஞானத்திற்கும் விரோதமாகிறது. தோஷமுள்ள இத்தேவனின் செயல்களை ஏன் கிறிஸ்துவர்களும் செய்யக் கூடாது.

23 நம்முடைய தகப்பனால் சந்ததியுண்டாகும்படிக்கு அவருக்கு மதுவை குடிக்கக்கொடுத்து அவரோடே சயனிப்போம் வா என்றாள். அப்படியே அன்றிரவிலே தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக்கொடுத்தார்கள். மூத்தவள்போய் தன் தகப்பனோடே சயனித்தாள். அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன் உணராதிருந்தான். மறுநாளிலே மூத்தவள் இளையவளைப் பார்த்து, நேற்று இராத்திரி நான் தகப்பனோடே சயனித்தேன். இன்று இராத்திரியும் மதுவைக் குடிக்கக் கொடுப்போம். நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்படி நீபோய் அவரோடே சயனி என்றாள். அப்படியே அன்று இராத்திரியிலும் தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்தார்கள். அப்பொழுது இளையவள் எழுந்து போய் அவனோடே சயனித்தாள். அவள் சயனித்ததையும் எழுந்ததையும அவன் உணராதிருந்தான். இவ்விதமாய் லோத்தின் குமார்த்திகள் இருவர்களும் தங்கள் தகப்பனாலே கர்ப்பவதியானார்கள். (**19**-32-34-36)

மதுபானம் செய்வதினால் எவ்வளவு கெடுதல் விளைகிறது என்பதைப் பாருங்கள். பெற்றோர், மக்கள் என்கிற வித்தியாசமும் இல்லாமல் எவ்வளவு அநீதமான காரியம் செய்தார்கள். நல்லோர்கள் மதுபானம் செய்யும் எண்ணத்தையே நினைக்கலாகாது.

24. கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள் பேரில் கடாட்சமானார். கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார். சாராள் கர்ப்பவதியானாள். (**21**. 1. 2)

எங்ஙனம் கர்ப்பமடைந்தாள்?-வாசகர்களே கவனியுங்கள். கடவுள் சாராளிடம் கடாட்சமானர். அதனல் சாராள் கர்ப்பவதியானள். அவள் கருவிற்கு, சாராளேயும் விட வேறு யாராவது காரணமுண்டோ? பரமேச்வரனுடைய கிருபையினல் கர்ப்பவதியாயிருக்கலாம்!!

25. ஆபிரகாம் அதிகாலேயில் எழுந்து அப்பத்தையும ஒருதுருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாரினுடைய தோளின் மேல்வைத்து பிள்ளேயையும் ஒப்புக்கொடுத்து அவளே அனுப்பி விட்டான். அவள் புறப்பட்டுபோய் பெயர்சேபாவின் வனந்திரத்திலே அலேந்து திரிந்தாள்.—துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்த பின்பு அவள் பிள்ளேயை ஒரு செடியின் கீழே விட்டு பிள்ளே சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். தேவன் பிள்ளேயின் சப்தத்தைக் கேட்டார்—(21. 14. 17)

கிறிஸ்து தேவனின் கோண வழியைப் பாருங்கள். நியாயமன்னியில் சாராவுடன் முதலில்சேர்ந்தார். (21-12) பிறகு ஆபிரகாமை வீட்டை விட்டுத்துரத்தினர். பிறகு அவள் கத்தினதும் குழந்தையின் சப்தத்தை செவியுற்ருர். என்னபுதுமை!! குழந்தையின் குரலேத தவறுதலாய் செவியுற்றிருக்கலாம். அவர் கடவுளாக இருக்க இயலுமா! பைபிலும் தேவவாக்காக முடியுமா? சாதாரண மனிதர்களால் எழுதக்கூடிய சில உண்மைகளேத் தவிர, மற்றதெல்லாம் ஒவ்வாதவைகளே.

26. இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனே நோக்கி: ஆபிரகாமே என்ருர்; அவன்: இதோ அடியேன் என்ருன்.—அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலேகள் ஒன்றின்மேல் அவனேத் தகனபலியாகப் பலியிடு என்ருன்.....................
தன் குமாரனகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனேக் கிடத்தினன்.—பின்பு ஆபிரகாம் தன் குமாரனே வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்.—அப்பொழுது கர்த்தருடைய தூதனனவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்: இதோ, அடியேன் என்ருன்.—அப்பொழுது அவர்: பிள்ளேயாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்ருர்—(22. 12, 9, 12.)

இப்பொழுதேனும் பைபில் தேவனுடைய ஞானம் எல்லேக்குட்பட்டதேயென்றும் அகண்டமானதல்லவென்றும் விளங்கும். ஆபிரகாம் ஒன்றுமறியாதவர். இல்லேயேல் அவ்விதம் செய்திருப்பாரா? பைபில் தேவன் எல்லாம் அறிந்தவராயிருந்தால் தன்னுடைய சர்வஞ்ஞ அறிவின் உதவியினல் ஆபிரகாமனுடைய பக்தியின் ஆழத்தைக் கண்டிருக்கலாமே. இதிலிருந்து அவர் அங்ஙனமில்லே யென்பது விளங்கும்.

27. தங்கள் கல்லறைகளில் முக்கியமானதிலே பிரேதத்தை அடக்கம் பண்ணும்; நீர் பிரேதத்தை அடக்கம் பண்ண எங்களில் ஒருவனும் தன் கல்லறையை உமக்குத் தடைசெய்வதில்லே (11 23. 6.)

பிரேத அடக்கம் செய்வது உலகத்திற்கே பாதகமானது. ஏனெனில் சவம் அழிய வாரம்பிக்க அதிலிருந்து வெளிவரும் நாற்றம் வாயுவை நாசம் செய்து வியாதியைத் தருகிறது.

கிறி:—நாம் நேசிக்கிறவர்களைத் தகனஞ்செய்வது சரியாகாது. பிரேத அடக்கம் செய்வதே அவர்களைத் தூங்கசெய்வது போலாம். ஆகவே அடக்கம் செய்வதே உசிதமானது.

ஆரா:—இறந்தவர்களை நேசித்தால் ஏன் அவர்களை உங்கள் வீட்டினுள்ளேயே வைத்துக்கொள்ளக் கூடாது? ஏன் புதைக்க வேண்டும்? நீங்கள் நேசிக்கும் ஜீவாத்மா வெளியேறி விடுகிறது. துர்க்கந்தத்துடன் கூடின சவத்தை நேசிப்பதினால் யாதுபயன்? நீங்கள் நேசிப்பீர்களே யானால் பூமியின் கீழ் ஏன் புதைக்கிறீர்கள். "பூமியினுள்ளே உன்னைப் புதைப்போம்" என்று சொல்லுவதைக் கேழ்க்க எவனும் விரும்ப மாட்டான். மேலும் சரீரத்தின், கண்கள், வாய், மார் முதலிய பாகங்களில் மண், கட்டி, கல், சுண்ணாம்பு முதலானவைகளைப் போடுவது நேசபாவத்தைக் குறிக்காது. புதைப்பதற்கு முன்னால், சவப்பெட்டியில், பிரேதத்தை வைப்பதினால் நாற்றம் வெளிக்கிளம்புகிறது. அது வாயுவுடன் கலந்து வியாதிகளுக்கு இடங்கொடுக்கிறது. மேலும் குறைந்தது 3 கெஜ நீலமும் 2 கெஜ அகலமுமுள்ள பிரேதம் ஒன்றை அடக்கம் செய்ய இடம் வேண்டும். இவ்விதமே லக்ஷக்கணக்கான பிரேதங்களைப் புதைப்பதால் பூமிநாசமாகிறது. பிரேதங்களால் நிரப்பப்பட்டபூமி பயிர் செய்யவும் பிரயோஜனப்படாது, வசிக்கவும் ஏற்றதாகாது. ஆதலால் புதைத்தல் மிகவும் கெடுதலானது. ஓடுகிற தண்ணீரில் எறிந்து விடுவதே கொஞ்சம் மேலானது. ஏனெனில் தண்ணீரில் வசிக்கிற முதலை முதலான பிராணிகள் அதைக்கிழித்துத்தின்றுவிடும். ஆனபொழுதிலும் மீதி யிருக்கும் எலும்பு முதலியவைகள் அழிந்து நீருடன் கலந்துபோய் அதையும் காற்றையும் நாசஞ் செய்துவிடுகிறது. அதனால் உலகத்திற்குக் கேடு ஏற்படும். வனத்தில் விட்டுவிடுவது இன்னும் கொஞ்சம் மேலானது. மாம்சாகாரிகளான மிருகங்களும் பக்ஷிகளும் அதைத் தின்றுவிடும். எலும்பு முதலானவைகள் காற்றை நாசம் பண்ணி அதற்கேற்றவாறு பொதுஜன சுகத்திற்குப் பாதகம் விளைவிக்கும். தகனம் செய்வதே எல்லாவற்றையும் விடச் சிறந்தது. ஏனெனில் நெருப்பினால் ஒவ்வொருபொருளும் அதனுடைய அணுக்களாகப் பிரிக்கப்பட்டு ஆகாசத்தை அடையும்.

கிறி:—தகனஞ் செய்வதினாலேயும் துர்நாற்றம் உண்டாகுமே?

ஆரா:—சரியாகத் தகனஞ் செய்யாவிடில் கொஞ்சம் உண்டாகும். ஆனால் புதைப்பது முதலானவைகளினால் உண்டாவதைப்போல அவ்வளவாகாது. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் முறைப்பிரகாரம் தகனஞ் செய்தால் காற்று கெட்டுப்போகாது.

அதாவது:—$7\frac{1}{2}$ அடி நீளம் $4\frac{1}{2}$ அடி ஆழம் $5\frac{3}{4}$ அடி அகலமுள்ள வேதி ஒன்று பூமியில் தோன்றவேண்டும். அகலத்தில் பாதி கீழேயிருக்கும்

வண்ணம் பக்கச்சுவர்களைச் சாய்த்து வெட்டவேண்டும். சந்தனக்கட்டை கஸ்தூரிக்கட்டை முதலான மரத்துண்டுகளை வேதியில் அடுக்கி அதன்பேரில் பிரேதத்தை வைக்கவேண்டும். அதன் மேலேயும் அதேமாதிரி துண்டுகளை (வேதியின் வாயிலிருந்து ஒரு அடிக் குறைய) அடுக்கவேண்டும். கட்டைக் குவியலில்வேண்டிய அளவு கற்பூரம் ஆகியவைகளை, [illegible] வேண்டும். பின்னர் குவியலுக்கு நெருப்புவைக்கவும். பிரேதத்தின் கனத்திற்குச் சரியான அளவு, நெய்யைக் கொண்டு ஆஹுதி செய்யவேண்டும். ஒரு பவுன் எடை நெய்யிற்கு ஒருதோலா பச்சைக்கற்பூரம் ஒருதோலா குங்குமப்பூவும் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். இவ்விதத் தகனஞ் செய்வதானது தானற்றம் ஒன்றையும் உண்டு பண்ணாது. இதை அந்தியேஷ்டி நரமேத, புருஷமேதயக்ஞம் எனறும் கூறுவார்கள். இறந்தவன் என்ன ஏழையாயிருந்தபொழுதிலும் பிரேதத் தகனத்திற்குக் குறைந்தது 40 பவுன் நெய்யாவது உபயோகம் செய்யவேண்டும். அந்நெய் பிச்சையெடுத்து கிடைத்தாலும் சரி; சாதிச் சனங்களிடமிருந்து இனாமாகக் கிடைத்தாலும் சரி; அல்லது வேண்டியிருந்தால் கவர்ன்மெண்டிடமிருந்தாலும் சரி; எவ்விதத்திலும் சரீரம் மேற் சொன்னமாதிரியே தகனஞ் செய்யப்பட வேண்டும். நெய் முதலானவைகள் எவ்வழியிலும் கிடைக்காமல் போகும் பக்ஷத்தில், புதைப்பதை விட, கட்டையைக் கொண்டு தகனஞ் செய்வது மிகவும் மேலானது. 20¼ சதுர கெஜமுள்ள அல்லது ஒரே வேதியில்கூட கோடிக் கணக்கான பிரேத தகனஞ் செய்யலாம். புதைப்பதிலாவதுபோல் பூமியும் கெட்டுப்போகிறதில்லை. கோழை மனது சவக்குழியைக் கண்டும் நடுங்கும். ஆகவே புதைப்பது வெறுக்கத் தகுந்தது.

28. என் எஜமானுகிய ஆபிரகாமின் தேவனுயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானைவிட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம் பண்ணி வருகையில், கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தார் (24. 27.)

அவர் ஆபிரகாமின் ஈச்வரன் மாத்திரமா என்ன? வழியைக்காட்டிக் கொண்டு தன் யஜமானனுக்கு முன்னால் வழிகாட்டி அல்லது தூதன் போவதே போல் ஈசுவரனும் செய்தார். தற்காலத்திலும் ஏன் அப்படியே அவர் செய்லாகாது? முன் காலத்தில் செய்தது போலவே இப்பொழுதும் ஏன் மனிதர்களிடம் அவர் பேசுகிறதில்லை? இவ்வார்த்தைகள் ஈசுவரனைக் குறித்தாவது அல்லது ஈசுவர புஸ்தகத்தைக் குறித்தாவது ஒரு பொழுதும் உண்மையாகாது. காட்டுத் தன்மையுள்ளவர்களைக் குறித்தே இவைகள் சரியாகும்.

29. பற்பல சந்ததிகளாய்ப் பிரிந்த இஸ்மவேலின் புத்திரருடைய நாமங்களாவன; இஸ்மவேலுடைய மூத்த மகன் நெபாயோத்; பின்பு கேதார்; அத்பியேல்; மிப்சாம்;—மிஷ்மா; தூமா; மாசா—ஆதார், தேமா, யெத்தூர், நாபீஸ் கேத்மா என்பவைகளே. (25—13-15)

இந்த இஸ்மவேல், தன் பணிவிடைக்காரியுடன் ஆபிரகாமிற்குப் பிறந்த மகன்.

30. நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்பேன். உன் தகப்பன் தாம் மரணமடையுமுன்னே உன்னை ஆசீர்வாதிக்கும்படி அவர் புசிப்பதற்கு நீ அதை அவரிடத்தில் கொண்டு போக வேண்டும் என்றாள். பின்பு ரெபெக்காள் வீட்டிலே தன்னிடத்திலிருந்த தன் [illegible] வஸ்திரங்களை எடுத்துத் தன் இளைய மகனாகிய யாக்கோபுக்கு உடுத்தி வெள்ளாட்டுக் குட்டிகளின் தோலை அவன் கைகளிலேயும் ரோமமில்லாத அவன் கழுத்திலேயும் போட்டாள். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனை நோக்கி நான் உமது மூத்தமகனாகிய ஏசா: நீர் எனக்குச் சொன்ன படியே செய்தேன்; உம்முடைய ஆத்மா என்னை ஆசீர்வதிக்கும்படி. நீர் எழுந்து உட்கார்ந்து, நான் வேட்டை யாடிக் கொண்டு வந்ததைப் புசியும் என்றான். (**27**—9, 10. 15. 17. 19)

பாருங்கள்! இம்மாதிரி மோசத்தினால் (தகப்பனாரிடமிருந்து) ஆசீர்வாதம் பெற்று, சித்தனென்றும் தீர்க்கதரிசி என்றும் பேசிக்கொள்ளுகிறான். இது அவ்வளவு அதிசயமாகாது? கிறிஸ்து மத போதகர்கள் இவ்விதமிருக்க அம்மதம் முரண்பாடுகளால் நிறைந்திருப்பது வியக்க தக்கதல்ல.

31. அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ்வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி அதின்மேல் எண்ணெய் வார்த்து அந்தஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பேரிட்டான். நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும். (**28**, 18, 19, 22.)

இதைச் சற்று கவனியுங்கள். அவர்கள் கற்களைப் பூஜித்தும் பிறரைப் அங்ஙனம் பூஜை செய்யவும் சொன்னது காட்டுமனிதர்களைப் போல் நடந்ததாகாதா? இதை முஸ்லீம் "பயதல் முகதஸ்" (பரிசுத்த பெத்தேல்) என்கிறார்கள். அக்கல்லில் மாத்திரமா ஈச்வரனிருக்கிறார். அதுவா அவருடைய இருப்பிடம்? அடடா: கிறிஸ்துவர்களே: என்ன சொல்ல விருக்கிறது. நீங்கள் பெரும் விக்கிரக ஆராதனைக் காரர்களேதான்.

32. தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத் தேவன்செவிகொடுத்து அவள் கர்ப்பந்தரிக் கும்படி செய்தார்—அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றாள்.

(**30**. 22-23.)

நல்லவேலை செய்தீர்; கிறிஸ்துதேவரே! நீங்கள் பெரும் வைத்தியரேயாவீர்கள். கர்ப்பப்பையைத்திறக்கும் பொழுது என்ன என்ன ஆயுதங்களையும் மருந்துகளையும் உபயோகித்தீர். அல்லது இதையெல்லாம் குருட்டுத்தனமாய்ச் செய்தீர்களா?

33. அன்று ராத்திரி தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி; நீ யாக்கோபோடே. நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார். இப்பொழுதும் உன் தகப்பனுடைய வீட்டின் மேலுள்ள வாஞ்சையினால் நீ புறப்பட்டுப் போகிறதானால் போகலாம், என் தெய்வங்களை என் திருடிக் கொண்டு போகிறாய் என்று கேட்டார். (**31**. 24, 30.)

மனிதர்களுடைய கனவில் தோன்றினார் பேசினார், தூங்காமல் தூங்கிக்கொண்டிருக்குங்கால் வந்தார், உண்டார், உறங்கினார், போனார், என்று

பைபிளில் கூறப்பட்டிருக்கும்படியான ஆயிரக் கணக்கானவைகளில் இது ஒன்றேயாகும். ஆனால் இப்பொழுது அவர் இருக்கிறாரோ இல்லையோ என்று சொல்ல முடியாது. ஏனெனில் எவருடைய கனவிலேயும் தோன்றவில்லை. இக்காட்டு மனிதர்கள் கல் முதலான விக்கிரகங்களை இறைவனாக நினைத்து பூஜித்துவந்தார்கள். கிறிஸ்துவர்களுடைய ஈசுவரன்கூட கற்களைக் கடவுளாகக் கருதுகிறார். இல்லையென்றால் "தெய்வங்களைத் திருடிக்கொண்டு போகிறாய்" என்று எவ்விதம் சொல்லமுடியும்?

34. யாக்கோப்பு பிரயாணம் பண்ணுகையில் தேவதூதர்கள் அவனைச் சந்தித்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டபோது, இது தேவனுடைய சேனை என்று சொல்லி அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான். (**32**. 1. 2.)

கிறிஸ்துவர்களுடைய ஈசுவரன் மனிதனாகவிருப்பதில் கொஞ்சமேனும் சந்தேகமுண்டோ? ஏனெனில் சேனை வைத்துக்கொண்டிருக்கிறார். அவரிடத்தில் யுத்த தளவாடங்களுமிருக்கவேண்டும். பிறரைத்தாக்குஞ் சுபாவத்திலுமிருக்கவேண்டும். சண்டையையும் செய்யவேண்டும். இல்லையென்றால் சைனியம்வைத்துக் கொள்ளுவதினால் என்ன பிரயோஜனம்?

35. யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச் சந்தைத் தொட்டார்; அதினால் அவருடன் போராடுகையில் யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கிற்று—அவர்: நான் போகட்டும் பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன் நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன் என்றான். அவர் உன்பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான்—அப்பொழுது அவர் உன்பேர் இனி யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் எனப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்று கேட்டான். அதற்கு அவர் நீர் என் நாமத்தைக் கேழ்ப்பானேன் என்று சொல்லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார்—அப்பொழுது யாக்கோபு; நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன். உயிர் தப்பிபிழைத்தேன். என்று சொல்லி அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பேரிட்டான்.

அவன் பேனியேலைக் கடந்து போகையில் சூரியன் உதயமாயிற்று; அவன் தொடைச் சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான்—அவர் யாக்கோபுடைய தொடைச் சந்து நரம்பைத் தொட்டபடியினால், இஸ்ரவேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தொடைச் சந்து நரம்பைப் புசிக்கிறதில்லை. (**32**. 24- 32.)

கிறிஸ்துவர்களுடைய ஈசுவரன் சரியான மல்லுக்கு செட்டியான படியினாலேயே சாராவிற்கும் ராகேலிற்கும் புத்திரப் பேறுண்டாகுமாறு அருளினார். இவர் எப்பொழுதாவது ஈசுவரனாக முடியுமா? பின்னும் அவருடைய நடவடிக்கையைக் கவனியுங்கள். யாக்கோபு அவரைப் பெயரென்னவென்று கேட்டான். அவர் சொல்லவில்லை. யாக்கோபினுடைய தொடைச் சந்தைச்சுளுக்கச் செய்தார். ஆனால் அவர் தோற்றுவிட்டார். அவர் வைத்தியராயிருந்திருக்கும் பக்ஷத்தில் அதையுங்கூட நிவர்த்தி செய்திருப்பார். இவ்வித ஈசுவர பக்தியினால் யாக்கோப்பு நொண்டியானது போல் இதர பக்தர்களும் நொண்டியாக வேண்

டும். இறைவனை நேராகக் கண்டு மல்யுத்தம் செய்தானென்றால் சரீரத்தை யுடைய ஒருவனாலேயே அதுமுடியும். இதுவெறும் குழந்தைப்பேச்சேயாகும்.

36. யூதாவின் மூத்தமகனாகிய ஏர் என்பவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனாயிருந்ததினால், கர்த்தர் அவனை அழித்துப்போட்டார். அப்பொழுது யூதா ஓனானை நோக்கி நீ உன் தமையன் மனைவியைச் சேர்ந்து, அவளை மைத்துனச் சுதந்தரமாய் படைத்து உன் தமையனுக்குச் சந்ததியை உண்டாக்கு என்றான். அந்தச் சந்ததி தன் சந்ததியாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே, அவன் தன் தமையனுடைய மனைவியைச் சேரும் போது தன் தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் விந்துவைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்தான். அவன் செய்தது கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்ததினால் அவனையும் அழித்துப் போட்டார்.

இதெல்லாம் மனிதர்களுடைய வேலையே என்றும் இறைவனுடையதல்லவென்றும் எல்லோருக்கும் புலப்பட்டிருக்கவேண்டும். ஓனன் ஏருடைய மனைவியுடன் *நியோகம் செய்தான். ஏன் இறைவன் அவனைக் கொன்று அழிக்க வேண்டும்? அவனுடைய புத்தியை ஏன் சரியாகச்செய்யவில்லை.

யாத்திராகமம்

37. மோசே பெரியவனானகாலத்தில், அவன் தன் சகோதரரிடத்தில்போய், அவர்கள் சுமை சுமைக்கிறதைப் பார்த்து, தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு அங்கும் இங்கும் பார்த்து, ஒருவரும் இல்லை என்று அறிந்து, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே புதைத்துப் போட்டான். அவன் மறுநாளிலும் வெளியெ போன போது, எபிரேய மனுஷர் இருவர் சண்டை பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவன் அநியாயம் செய்கிறவனை நோக்கி; நீ உன் தோழனை அடிக்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவன் எங்கள் மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக்கொன்றுபோட்டதுபோல், என்னையும் கொன்று போட நினைக்கிறாயோ என்றான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான். (2. 11-14.)

பைபிளினுடைய முக்கிய தீர்க்கதரிசியும் மதாசாரியருமான மோசையே கோபம் முதலிய தீயக் குணங்களுக்கு அடிமை யானவன். சாதாரண திருடனைப் போல் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டி தன் குற்றத்தை மறைத்தபடியினால், பொய் சொல்லும் பழக்க முடையவனாயிருக்கவேண்டும். இம்மாதிரி மனிதன்கூட ஈசுவரனைச்சந்தித்தான்; பெரும் தீர்க்கதரிசி யானான். யூதசமயத்தையும் ஸ்தாபித்தான். ஆகவே மோசேய் முதலான கிறிஸ்துவர்களுடைய தீர்க்க தரிசிகள் எல்லோரும் நாகரீகமற்றவர்கள்; கல்விப் பயிற்சியற்றவர்கள் என்பது திட்டமாய் தெரியவருகிறது.

38. பஸ்காவை அடியுங்கள்—ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்துக்கிண்ணியிலிருக்கும் இரத்தத்தில்தோய்த்து அதில் இருக்கும் அந்த இரத்தத்தைவாசல் நிலைக்கால்களின் மேல் சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்! விடியத்காலம் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலை

* தேசங்கள் எல்லாவற்றிலும் நியோகமிருந்ததென்பது இதிலிருந்து தெளிவாகிறது

விட்டுப் புறப்படவேண்டாம்—கர்த்தர் எகிப்தியரை அதம் பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்: நிலையின்மேல்ச் சட்டத்திலும் வாசலின் நிலைக் கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக் காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம் பண்ணுகிறதற்கு வரவொட்டாமல் வாசற்படியை விலகிக் கடந்து போவார். (12 21-23)

மந்திர சக்தியைப்போல் காணப்படுகிறது. இஸ்ரவேல் குலத்தவர்களுடைய வீட்டை ரத்தக்குறியன்னியில் அறியமுடியாத அவர் சர்வஞ்ஞராயிருக்க முடியுமா? அற்பபுத்தியுள்ள மனிதர்கள் செய்யும் வேலையைப் போலிருக்கிறது. ஏதோ ஒரு காட்டு மனிதரால் இவைகள் எழுதப் பட்டதென்று இதிலிருந்து விளங்கும்.

> 39. நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல், காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார். அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; சாவில்லாத ஒரு வீடு எதுவும் இருந்ததில்லை. (12. 29. 30.)

சபாஷ்! கிறிஸ்துவ ஈச்வரன் என்ன அருமையான வேலையைச் செய்தார். கன்னக் கள்வனைப் போல் நடு நிசியில் தயை யன்னியில் குழந்தைகளையும், குழவிகளையும், முதிர்ந்தவர்களையும் ஒன்றுமறியாத ஆடு மாடுகளையும் கூடக் கொன்ருர். அவர்களின் பேரில் கொஞ்சங்கூட இரக்கங்காட்டவில்லை. "மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று" உண்டாகியும் இக்கிறிஸ்துவ இறைவனின் உள்ளம் உருகவில்லை. ஈசுவரனை விட்டுவிட்டபொழுதிலும் கேவலம் மனிதன் கூட இக்காரியத்தைச் செய்யமாட்டான். "மாம்சாகாரக் காரனுக்குத் தயை எங்கிருந்து வரும்" என்பது போல் இதில் அதிசயம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவ ஈசுவரன் மாம்சாகாரரான படியினுல் தயை இரக்கம் இவைகளைக் கொண்டு அவருக்கு ஆகவேண்டியதென்ன?

> 40. கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்......புறப்பட்டுப் போங்கனென்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு. நீ உன் காலை ஓங்கி உன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாகக் கட்டாந்தரையில் நடந்து போவார்கள். (14. 14-16.)

நல்லது! ஐயா! ஆதிகாலத்தில், தன்னுடைய மந்தையை ஓட்டிக்கொண்டு ஆட்டிடையன் பின்னுல் போவது போல், ஈசுவரன் இஸ்ரவேல் குல மக்களுக்குப் பின் போய்க்கொண்டிருந்தார். இப்பொழுது எங்கு மறைந்துக் கொண்டிருக்கிருரோ? அவர் இருந்திருப்பாரானுல், உலகத்திற்கே பெரும் உபகாரத்தைச் செய்கிற ரயில் பாதையைச் சமுத்திரம் முழுவதும் போட கிறிஸ்தவர்களுக்கு உதவியாயிருந்திருப்பார். கப்பல்கள் முதலானவைகளைக் கட்டும் கஷ்டத்தையும் அது குறைத்திருக்கும். என்ன செய்வது? இக்

கிறிஸ்துவ இறைவன் எங்கு மறைந்திருக்கிறார் என்று யாரும் அறியார்கள். அசம்பவ லீலைகள் அநேகத்தை இதுமாதிரி மோஸையின் பைபிளில் காணும்படி ஈசுவரன் செய்திருக்கிறார். கிறிஸ்துவ ஈசுவரன் எப்படியோ, அப்படியே அவருடைய பக்தர்களும்; அவரால் செய்யப்பட்ட நூலும்; என்னும் வார்த்தையின் உண்மை வெளியாகிவிட்டது. இம்மாதிரி நூலும் இம்மாதிரி ஈசுவரனும் நம்மிடமிருந்து தூர விலகியே இருக்கட்டும். அப்பொழுது தான் நமக்கு க்ஷேமம் உண்டாகும்.

41. ……உன் தேவனாகிய கர்த்தாவாயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்……(**20**. 5)

தகப்பனாரின் பாவத்திற்காக, நாலு தலைமுறைவரையிலுள்ள குழந்தைகளைத் தண்டிப்பது என்ன நீதியாகும்? நல்ல தகப்பனுக்குத் துஷ்ட குமாரனும் துஷ்ட தகப்பனுக்கு நல்ல குமாரனும் உண்டாகிறதில்லையா? இவ்விதமிருக்க நான்கு தலை முறைவரையில் எவ்விதம் தண்டிக்கலாம்? ஐந்தாவது தலைமுறைக் கப்புறம் துஷ்டர்களாகிவிட்டால் தண்டிக்க முடியாதே. அபராத மன்னியில தண்டிப்பது அநியாயக்காரர்களுடைய பேச்சேயாகும்.

42. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறு நாளும் நீ வேலை செய்து; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள் ……கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதை பரிசுத்தமாக்கினார். (20. 9-11.)

ஞாயிற்றுக் கிழமை மாத்திரமா பரிசுத்தமானதினம்? மிகுந்த நாட்கள் ஆறும் பரிசுத்தமற்றதா? பரமேச்வரன் ஆறு நாளும் அவ்வளவு சிரமப்பட்டுவிட்டாரா ஏழாம் நாள் ஓய்வு எடுத்துக் கொள்ள? ஞாயிற்றுக் கிழமையைப் புனிதமாக்கினாரென்றால், மீதி ஆறுநாள்களுடன் என்ன செய்தார்? அவைகளைச் சபித்திருக்க வேண்டும்? இக்காரியத்தைக் கற்றுணர்ந்தவர்களே செய்யமாட்டார்களென்றால், ஈசுவரனைப் பற்றி என்ன சொல்லுவது? ஒன்றைப்புனிதமாக்கி வரம் கொடுத்து மீதியானவைகளைப் பரிசுத்தமில்லாததாகச் செய்யவேண்டிவளவு ஞாயிற்றுக் கிழமையில் என்ன குணத்தையும் மற்றவைகளில் என்ன தோஷத்தையும் கண்டாரோ அறியோம்.

43. பிறருக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக. பிறருடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக;பிறருடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும் அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையும், பின்னும் பிறருக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. (**20**. 16, 17.)

அடே! தாகமுள்ளவனும் பசியுள்ளவனும் வெகு ஊக்கத்துடன் குடிக்கத் தண்ணீரையும் உண்ண உணவையும் முறையே தேடுவது போல் கிறிஸ்துவர்கள் அந்நியர்களுடைய பொருளுக்கும் உடைமைக்கும் ஆசைப்படுகிறார்கள். இந்நிபந்தைகளின் அதிகாரியைப் போலவே கிறிஸ்துவ ஈசுவரனும் பேராசையும் பொருமையும் உள்ளவராக யிருப்பார். பிறர் என்னும் வார்த்தை

க்கு யாரேனும் மனிதவர்க்கமே என்று பொருள் படுத்துவராகில் அது உண்மையாகாது. ஏனெனில் இச்சிக்க, மனைவி, வேலைக்காரி முதலியவர்களை உடையவர்கள் யாவரும் இருக்கமாட்டார்கள். ஆகையினால் இதெல்லாம் சுயநலப் பிரியர்களான மனிதர்களுடையதே. ஈசுவரனுடையதில்லை.

44. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையும், புருஷ சம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்று போடுங்கள், புருஷ சம்யோகத்தை யறியாத எல்லா ஸ்திரீகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள். (எண்ணாகமம் **20**. 17. 18.)

நல்லது! உங்களுடைய தீர்க்கதரிசி மோசேய், உங்களுடைய ஈச்வரன் இவர்கள் புனிதமானவர்கள்? பெண்பிள்ளைகள், குழந்தைகள், வயது சென்றவர்கள், ஆடு மாடுகள் இவர்களுடைய பிராணனை வாங்குவதிலிருந்து கூடதனியாக விருக்கமாட்டார்கள். மோசேய் காமாதுரமுள்ளவனாயிருந்திருக்கவேண்டுமென்று இதிலிருந்து நன்றாகப் புலப்படுகிறது. சிற்றின்பப் பிரியமுள்ளவனாய் இருந்திராமல் போனால் கன்னி கழியாதப் பெண்களைத் தனக்காகவும் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்காகவும், மன்னித்திருக்கமாட்டார். தயையில்லாத இவ்வளவு குரூரமான ஆக்ஞையும் (சிற்றின்பத்தை பெருகச் செய்கிற) வெளிப்படுத்தியிருக்கமாட்டார்.

45. ஒருமனிதனை சாகும்படி அடித்தவன், நிச்சயமாய் கொலை செய்யப்படக்கடவன். ஒருவன் பதிவிருந்து கொல்லாமல், தெய்வச்செயலாய் தன் கைக்கு நேரிட்டவனைக் கொன்றால் அவன் ஓடிப்போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்தை உனக்கு நியமிப்பேன். (யாத்திராகமம்-**21**. 12, 13.)

ஈசுவரனுடைய இந்த நீதி சரியானபடியிருந்தால் ஒருமனிதனைக்கொன்று புதைத்துவிட்டு ஓடிப்போன மோசேயக்கு ஏன் தண்டனை அளிக்கவில்லை? மோசேயினிடத்தில் பக்ஷபாதம் காட்டின குற்றத்தினுடனிருக்கிறார். இல்லையென்றால் நாட்டின் அதிகாரியினால் விசாரிக்கப் படுவதற்கு மோசையை ஏன் அவர் விடவில்லை?

46. ....கர்த்தருக்குச் சமாதானப் பலிகளாகக் காளைகளை பலியிட்டார்கள். அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து பாதி இரத்தத்தை பலிபீடத்தின் மேல் தெளித்தான். அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து ஜனங்களின் மேல் தெளித்து இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான். (**24**, 5. 6, 8. 12.)

இக்காரியங்களின் அதிகாரிகளெல்லோரும் மிருகத் தன்மையுள்ளவர்களா, இல்லையா? என்று இதைப்படிக்கிறவர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது. காளைகளின் பலிதானத்தை ஏற்றுக்கொண்டு, பரமேச்வரன், பலிபீடத்தின் மேல் இரத்தத்தைத் தெளிக்க ஒத்துக்கொண்டார் என்று நினைக்க எவ்வளவு கடினமாயும் குரூரமாயும் இருக்கிறது. அவர்களுடைய தெய்வம் இவ்விதமிருக்க அவருடைய பக்தர்கள் காளை, பசு, முதலானவைகளின் மாமிசத்தைக் கொண்டு வயிறு நிரப்பி அதனால் உலகத்திற்கே ஏன் நஷ்டத்தை விளைவிக்

காமலிருப்பார்கள்? இத்தீய உபதேசங்களை பைபிள் கொண்டிருக்கிறது. இத்திய வழக்கத்தைக்கொண்டே வேதங்களிலும் இக்கொடிய குற்றம் இருக்கிறதைப் பார்க்கிறார்கள். ஆனால் வேதங்களில் இவ்வார்த்தைகளின் பெயர்கூட இல்லை. கிறிஸ்துவ ஈசுவரன் மலைவாசியென்றும் மலையிலேயே வசித்திருந்தாரென்றுங்கூடத் தெரியவருகிறது. காகிதம், மை, பேனா இவைகளைச் செய்யமுடியாமலும் கிடைக்காமலும் போகவே கல்வில்லைகளில் எழுதி மோசேக்குக் கொடுத்தார். காட்டு மனிதர்முன் அவர் ஈசுவரனாயிருந்திருக்கலாம்.

47. நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார். பின்னும் கர்த்தர்: இதோ என்னண்டையில் ஒரு இடமுண்டு, நீ அங்கே கல்மலையில் நில்லு; என் மகிமை கடந்து போகும்போது நான் உன்னை அந்தக் கல்மலையின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகும் மட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன். பின்பு என் கரத்தை எடுப்பேன்; அப்பொழுது என் பின் பக்கத்தைக் காண்பாய். என் முகமோ காணப்படாது என்றார். (**33.** 20-23.)

இதைப் படிக்கிறவர்களே! கிறிஸ்துவ ஈசுவரன் மனிதனைப் போல் சரீரத்தைத் தரித்து இருந்தாரென்பதற்குச் சந்தேகமுண்டோ? கவனியுங்கள். மோசேயுடன் கூடி ஈசன் என்று சொல்லிக்கொண்டார். பின் பக்கத்தைப் பார்க்கிறவன் உருவத்தைக் காணமாட்டானா?

லேவியராகமம்.

48. கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு அவனை நோக்கி இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லவேண்டியது என்னவென்றால், உங்களில் ஒருவன் கர்த்தருக்குப் பலிசெலுத்த வந்தால், மாட்டுமந்தையிலாவது ஆட்டுமந்தையிலாவது ஒரு மிருகத்தைத் தெரிந்தெடுத்து, பலி செலுத்தவேண்டும். (**1.** 1, 2.)

காளை, பசு, இவைகளுடைய பலியை ஏற்றுக்கொள்கிறவரும், தனக்காக இவ்வித பலிதானங்களைச் செய்யச் சொல்லி உபதேசிக்கறவருமான கிறிஸ்துவர்களுடைய ஈச்வரன், பசு முதலான மிருகங்களுடைய மாமிசத்திற்கும் இரத்தத்திற்கும் ஆசைப்படவில்லையா என்று பார்க்கவேண்டும். இவ்வித மிருக்க ஈசுவரனாகமாட்டார். அஹிம்சையுடன் கூடினவராயும் காணப்படவில்லை. மாம்சாகாரம் செய்யும் பூதம்போல் காணப்படுகிறார்.

49. கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன்! அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அந்த இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலிலிருக்கிற பலிபீடத்தின் மேல் சுற்றிலும் தெளிக்கக் கடவர்கள். பின்பு அவன் அந்த சர்வாங்க தகன பலியைத் தோலுரித்து அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கக் கடவன். அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின் மேல் அக்கினியைப் போட்டு, அக்கினியின்மேல் கட்டைகளை அடுக்கி,— அவன்குமாரராகிய ஆசாரியர்கள், துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்திலுள்ள அக்கினியிலிருக்கிற கட்டைகளின் மேல் அடுக்கி வைக்கக் கடவர்கள். அதின் குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினால் கழுவவானாக; அவைகளையெல்லாம் ஆசாரியன் பலி

பீடத்தின்மேல் சர்வாங்கதகனபலியாகத் தகனிக்கக்கடவன்; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி. (1. 5-9.)

பரமேச்வரனுக்கு முன் அவருடைய பக்தர்கள் மாட்டை வெட்டுவது; பலிபீடத்தின் நாலாப்பக்கங்களிலும் அதனுடைய இரத்தத்தைத் தெளிப்பது; பலிபீடத்தின்பேரில் அதன் மாமிசத்தைப் பலியாக ஹோமம் செய்வது; அதை ஈசுவரன் சுகந்தத்துடன் முகர்வது; இதெல்லாம் கொலைக்களத்தைவிட மேலாயிராது. பைபிள் ஈசுவரனால் செய்யப்பட்டதல்லவென்றும், அதனுடைய ஈசுவரன் காட்டு மனிதனைவிட மேலானவரல்லவென்றும் இவைகள் நிரூபிக்கும்.

50. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:—நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லவேண்டியது என்னவென்றால், ஒருவன் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை அறியாமையினால் மீறி, செய்யத்தகாததைச் செய்து பாவத்துக்கு உட்பட்டால் அறியவேண்டியதாவது:—அபிஷேகம் பெற்ற ஆசாரியன், ஜனங்கள் குற்றத்திற்கு உட்படத்தக்கதாகப் பாவம் செய்தால், தான் செய்த பாவத்தினிமித்தம் பழுதற்ற ஒரு இளங்காளையை பாவநிவாரண பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கடவன்.—அவன் அந்தக் காளையை ஆசாரிப்புக் கூடாரவாசலிலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அதின் தலைமேல் தன் கையை வைத்து, கர்த்தருடைய சந்நிதியில் அதைக் கொல்லக்கடவன்.—(2. 1. 3. 4.)

பாவங்களுடைய பரிகாரத்தைக் கவனியுங்கள். மனிதன் பாபஞ் செய்கிறான். அதற்குப் பிராயச்சித்தமாக உபயோகமான மிருகங்களைக் கொலை செய்கிறான். கிறிஸ்து ஈசுவரனும் அதை ஆதரிக்கிறார். புனிதமான கிறிஸ்தவர்களே!! இவ்வேலைகளைச் செய்யச் சொல்லுகிறவரைக்கூட ஈசுவரனாக நினைத்து அவர்மூலமாய் முக்தியையடைய விரும்புகிறீர்கள்.

51. ஒரு பிரபு பாவத்துக்குட்ப்பட்டுக் குற்றவாளியானால்.........அவன் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு இளங்கடாவைப் பலியாகக் கொண்டுவந்து...... கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலி கொல்லப்படும் இடத்தில் அதைக்கொல்லக்கடவன்; இது பாவநிவாரணபலி. (4. 22-24.)

சபாஷ்! ஓ கிறிஸ்துவர்களே! இவ்விதமிருக்க கிறிஸ்துவ அதிகாரி, நீதிபதி, சேனாதிபதி முதலானவர்கள் பாபம் செய்வதிலிருந்து பயப்படுவானேன்? அவரவர்கள் மனங்கொண்ட வரையில் பாபம் செய்யலாம். அதற்குப் பிராயச்சித்தமாகப் பசு, கன்றுகுட்டி, முதலான மிருகங்களுடைய பிராணனைப் பழிவாங்கலாம். மிருகம், பக்ஷி, இவைகளுடைய பிராணனை அழிப்பது என்பதில் கிறிஸ்துவர்களுக்கு அச்சமே இருப்பதில்லை. கேளுங்கள் கிறிஸ்துவ மகாஜனங்களே! நீங்கள் இந்த மிருகத்தன்மையான மதத்தை விட்டுவிட்டு அறிவுமயமாயும் தர்மமயமாயுமிருக்கிற வைதிகமதத்தை அங்கீகரியுங்கள். அதுவே உங்களுக்குச் சுகத்தைக் கொடுக்கும்.

52. ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால், அவன் செய்த குற்றத்தினிமித்தம் இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக் குஞ்சுகளையாவது, கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக்கட

வன். அதின் தலையை அதின் கழுத்தினிடத்தில் கிள்ளட்டும்...........ஆனால் அதை இரண்டாக்கக் கூடாது...........இவ்விதமாக அவன் செய்த பாவத்தை ஆசாரியன் நிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும். இரண்டு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது கொண்டுவர அவனுக்குச் சக்தியில்லாதிருந்தால் பாவம் செய்தவன், * பாவ நிவாரணத்துக்காக ஒருஎம்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கைத்தன் காணிக்கையாகக் கொண்டுவருவானாக. அதன்மேல் எண்ணெய் வார்க்காமலும் இருப்பானாக. (5. 7, 8, 10, 11. 13.)

கிறிஸ்துவர்கள் பணக்காரனானாலும் சரி, ஏழையானாலும் சரி; பாபம் செய்வதிலிருந்து பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் செய்த பாபங்ளின் பிராயச்சித்தத்தை வெகு எளிதில் முடிக்கலாம். கஷ்டம் ஒன்று மன்னியில், தன் பாபங்களிலிருந்து ஒருவன் மீறலாம் என்று சொல்லுவதே கிறிஸ்துவபைபிளிலுள்ள விந்தையாகும். கிறிஸ்துவன் பாபம் ஒன்றைச் செய்துவிடுகிறான்; அதனுடைய கஷ்டங்களிலிருந்து மீற மிருகங்களைக் கொலை புரிகிறான். அதனுடைய மாமிசத்தைச் சாப்பிட்டு பாபங்களைக் கழித்துக் கொள்கிறான். புறாவின் கழுத்திலிருந்து தலையைக் "கிள்ளின" வுடன் கொஞ்ச நேரம் அது துடிக்குமே. அப்பொழுது கூட கிறிஸ்துவர்கள் பக்ஷியினிடம் பரிதாபப் படமாட்டார்களா? ஹிம்சை செய்வதற்கு ஈசுவரனுடைய அதிகார மிருக்கும்பொழுது பரிதாபம் எவ்விதம் உண்டாகும்? சகல பாபங்களையும் இவ்விதமாகக் கழிக்கலாமென்றிருக்கும்பொழுது இயேசுவினிடத்தில் நம்பிக்கை வைப்பதினாலேயே பாபங்கள் தீருமென்கிற பெரும் புரட்டை ஏன் ஏற்படுத்தியிருக்கிறார்கள்?

53. ஒருவனுடைய, சர்வாங்க தகனபலியைச் செலுத்தின ஆசாரியன் தான் செலுத்தின தகனபலியின் தோலைத் தனக்காக வைத்துக்கொள்ளவேண்டும். அடுப்பிலே பாகம் பண்ணப்பட்டதும் சட்டியிலும் தட்டின்மேலும் சமைக்கப்பட்டதுமான போஜனபலியாவும் அதைச் செலுத்தின ஆசாரியனுடையவைகளா யிருக்கும். (7. 8. 9.)

---

*குறிப்பு:—கன்றுக்குட்டி, ஆடு, ஆட்டுக்குட்டி புறா, மாவு, இவைகளை ஏற்றுக்கொள்ள உடன்பட்ட இந்த ஈசுவரனுக்கு ஆயிரங் கோடி வந்தனம்! கழுத்திலிருந்து கிள்ளப்பட்ட தலையையுடைய புறாக்களை ஏற்றுக்கொள்ளுவது விந்தையே! அதாவது கழுத்திலிருந்து தலையைக்கிள்ளும் சிரமம் கூட அவருக்குக் கிடையாது. அக்காட்டுமிராண்டிகளில் அதிகம் புத்தியுள்ள ஒருவனிருந்தானென்றும் அவன் மலையுச்சியில் வசித்துக்கொண்டு ஈசுவரன் என்று சொல்லிக்கொண்டிருந்தானென்றும் இவ்வார்த்தைகளிலிருந்து தெளிவாகிறது. அறிவில்லாத காட்டுமிராண்டிகள் அவனை ஈசுவரனென்று அங்கீகாரம் செய்துகொண்டார்கள். அவனுடைய தந்திரத்தினால் அம்மலையேலேயே, தன் ஆகாரத்திற்கு வேண்டிய மிருகம் பக்ஷி, மாவு, உணவுப்பொருள் முதலானவைகளைக் கொண்டுவர செய்துகொண்டிருந்தான். தன் ஏவல்களைசெய்ய தூதர்களென்கிறவர்களை வைத்துக்கொண்டிருந்தான். கன்றுக்குட்டி, ஆடு, ஆட்டுக்குட்டி, புறா, "மெல்லிய" மாவு முதலானவைகளைச் சாப்பிடுகிற பைபிளிலிருக்கிற இந்த ஈசுவரனுடன், சர்வ வியாபகனையும், சர்வஞ்ஞனையும், பிறப்பற்றவனையும், உருவமில்லாதவனையும், சர்வ சக்திமானையும், நியாயம் செய்கிறவனையும், இன்னும் இவ்விதமான சிறந்தகுணங்களுடன் கூடின வேதத்திலிருக்கிற ஈச்வரனைப் புத்திமான்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

பைரவதேவியின் ஆலய வழிபாட்டுக்கர்த்தாக்களின் போப்லீலைகளையே, தந்திரமானது என்று இதுவரையில் எண்ணியிருந்தோம். ஆனால் கிறிஸ்துவ ஈசுவரனுடையதும் அவருடைய பூஜாரிகளுடையதும் ஆயிரம் தடவை அதிகமாக விருக்கிறது. பலிகொடுத்த மிருகங்களின் தோலை விற்ற திரவியத்தைப் பெறவும், அவைகளுடைய மாம்சத்தைச் சாப்பிடவும் கிறிஸ்துவாகளுக்கு அகமகிழ்ச்சியை யளித்திருக்கும். தகப்பன் தன் இரண்டு பிள்ளைகளில் ஒன்றைக் கொன்று, அம் மாமிசத்தை மற்றொருவனுக்குச் சாப்பிடக் கொடுப்பானா? அதேமாதிரி எப்பொழுதாவது முடியுமா? அப்படிப் பிள்ளையைப்போலிருக்கிற, மனிதன், மிருகம் பக்ஷி, முதலானவைகளிலெல்லாம் பரமேசுவரன் இக்காரியத்தைச் செய்வாரா? பைபிள் ஈச்வரனால் செய்யப்பட்டதில்லையென்றும், அதி லெழுதியிருக்கும் ஈச்வரனும், அதைப் போற்றுகிறவனும், தர்மம் சத்தியம் இல்லனதென்று விளங்காதவர்களென்றும் இதிலிருந்து நன்கு விளங்குகின்றன. சொல்லமுடியாத இம்மாதிரி ஒவ்வாத வர்த்தைகளினால் இந்நூல் நிரைக்கப் பட்டுள்ளது.

எண்ணாகமம்.

54. கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு, வழியை விட்டு வயலிலே விலகிப் போயிற்று. கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான். உடனே கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார்; அது பிலேயாமைப் பார்த்து; நீர் என்னை இப்பொழுது மூன்றுதரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது. (22. 22, 28.)

ஆதியில் கழுதையுங்கூட தேவதூதர்களைப் பார்க்கும். இப்பொழுதோ பிஷப்பும், பாதிரியும் கூட (நல்லவர்களும், கெட்டவர்களும்) தேவனையாவது அல்லது அவருடைய தூதரையாவது பார்க்கமுடிகிறதில்லை. இக்காலத்தில் கடவுளும் அவருடைய தூதர்களும் இருக்கிறார்களா இல்லையா? இருந்தால் ஏன் காணப்படுகிறதில்லை? அவர்கள் அயர்ந்து தூங்குகிறார்களா அல்லது நோயினால் பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்களா அல்லது வேறு உலகம் போய்விட்டார்களா? அல்லது கிறிஸ்துவர்களுடன் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்களா? அல்லது இறந்துபோய்விட்டார்களா? அவர்களுக்கு யாது நேரிட்டதென்று எவரும் அறியார்கள். ஆனால் இப்பொழுது அவர்களில்லை யென்றும் காணப்படுகிறதில்லை யென்றும் இதற்கு முன்னிருந்ததில்லை யென்றும் காணப்படவில்லை யென்றும் எல்லோரும் அறிவார்கள். இந்நூல்களை நூற்றவர்கள் பைபிலை உண்டுபண்ணின ஆசிரியர்களே யாவார்கள்.

II. சாமுவேல்.

55. அன்று ராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி அவர்: நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி; கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?—நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும், நான் ஒரு ஆலயத்தில் வாசம்பண்ணாமல், கூடாரத்திலும், வாசஸ்தலத்திலும் உலாவினேன். (7. 4-6.)

கிறிஸ்துவ ஈசுவரன் மனிதனைப் போல் சரீரத்துடன் கூடினவராயிருந்தாரென்பதில் கொஞ்சமேனும் சந்தேகம் கிடையாது. நான் ரொம்ப கஷ்டப் பட்டேன் என்றும் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தேன் என்றும், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவிக்கொண்டிருந்தேன் என்றும், இருக்க ஒரு வீடுமில்லை யென்றும் புலம்புகிறார். தாவீது வீடு ஒன்று அமைத்துக்கொடுத்தால் அதில் தங்கியிருப்பார். இவ்வித ஈச்வரனையும் புஸ்தகத்தையும் நம்ப கிறிஸ்துவர்களுக்கு வெட்கமாகவில்லையா? அவர்களுக்காக இரங்க வேண்டும். பேதை கிறிஸ்துவர்கள்!! வலையில் அகப்பட்டுக் கொண்டுவிட்டார்கள். அதிலிருந்து மீற பெருமுயற்சி செய்யவேண்டும்.

2. இராஜாக்கள்

56. ஐந்தாம் மாதம் ஏழாந்தேதியிலே நேபுகாத்நேச்சர் என்னும் பாபிலோன் ராஜாவின் பத்தொன்பதாம் வருஷத்திலே, பாபிலோன் ராஜாவின் ஊழியக்காரனாகிய நெபுசராதான் என்னும் காவல் சேனாபதி எருசலேமுக்கு வந்து—கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமின் சகல கட்டடங்களையும், பெரிய வீடுகள் எல்லாவற்றையும் அக்கினியால் சுட்டெரித்துவிட்டான். காவல் சேனாபதியோடிருந்த கல்தேயரின் ராணுவத்தாரெல்லாரும் எருசலேமைச்சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப் போட்டார்கள். (25. 8, 9, 10.)

கிறிஸ்துவ ஈச்வரனிடம் அனுதாபங்காட்ட வேண்டும். தாவீதினால் அவருக்கென்று வசிக்க வீடொன்று கட்டப்பட்டது. அதில் அவர் சுகமாய் காலங்கழித்திருக்கவேண்டும். நெபுசராதான் அதை அக்கினியால் சுட்டெரித்துவிட்டான். தேவனும் அவருடைய தூதர்களும் அவனுக்கு எதிராக ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆரம்பத்தில் யுத்தஞ்செய்து பெருஞ்சண்டைகளில் ஜெயித்திருக்கிறார். ஆனால் இப்பொழுதோ நெபுசராதான் தன் வீட்டை நாசஞ்செய்ய விட்டு விட்டிருந்தார். அவருடைய தூதர்களும் எங்கு ஓடிப் போனார்களோ? இச்சந்தர்ப்பத்தில் எவரும் உபயோகப் படவில்லை. ஈசுவரனுடைய பராக்கிரமும் எங்கு சென்றிருந்ததோ? சிறகுகளின் உதவியால் பறந்து போய்விட்டதா? இங்கே கூறியிருக்கும்படியானது உண்மையாயிருக்குமேயானால் பைபிளில் எழுதப்பட்டிருக்கும்படியான வெற்றிக் கதைலாம் வீண் பொய்யேயாகும். எகிப்தியக் குழந்தைகளைக் கொன்று போடுவதில் மாத்திரந்தான அவருக்கு அவ்வளவு வீரசூரத்தனமிருந்தது. வீரபுருஷர்களின்முன் இவர் ஏன் ஒன்றும் செய்யாமலிருந்தார்? இந்நடத்தையினால் கிறிஸ்துவ ஈசுவரன் தனக்கே அபகீர்த்தியையும் அவமரியாதையையும் வரவழைத்துக் கொண்டார். இம்மாதிரி விவேகமில்லாத ஆயிரக் கணக்கான கதைகளினால் நூல் நிறைந்திருக்கின்றன.

2. நாளாகமம்.

57. ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலில் கொள்ளைநோயை வரப்பண்ணினார். அதினால் இஸ்ரவேலில் எழுபதினாயிரம் பேர் மடிந்தார்கள். (21. 14.)

கிறிஸ்துவ ஈசுவரனின் லீலையைப் பாருங்கள்! தான் அநேக வரங்களை யளித்து, அல்லும் பகலும் அதைக் காப்பாற்றுவதிலேயும் பாடுபட்டுக்கொண்டிருந்த இஸ்ரவேலில், கோபவெறியில், கொள்ளை நோயை யுண்டுபண்ணி எழுபதினயிரம் பேரை மடியச் செய்தார்.

क्षणे रूपः क्षणे तुष्टो रूष्टतुष्टः क्षणे क्षणे ।
अव्यवस्थितचित्तस्य प्रसादोऽपि भयङ्करः ॥

ஒரு கவி கூறும் வண்ணம் "ஒரு *கனத்தில் சந்தோஷத்தையும், மறு கனத்தில் கோபத்தையும் அடைகிற அதாவது கோபமும் சந்தோஷமும் க்ஷணபங்குரமாயிருக்கும் மனிதனுக்கு, சந்தோஷமிருக்கும் பொழுதுங்கூட பயப்படவேண்டியதே"

கிறிஸ்துவ ஈசுவரனுக்கு இது ஏற்றதாகும்.

யோபுடைய சரித்திரம்.

58. பின்னெரு நாளிலே தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது சாத்தானும் அவர்கள் நடுவிலே கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றான். கர்த்தர் சாத்தானைப்பார்த்து; நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித் திரிந்து வருகிறேன் என்றான். அப்பொழுது கர்த்தர் சாத்தானைநோக்கி: நீ என் தாசனுகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனுகிய அவனைப் போல் பூமியில் ஒருவனுமில்லை.; முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும் அவன் இன்னும் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக தோலுக்குப் பதிலாகத் தோலையும் தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும் மனுஷன் கொடுத்துவிடுவான்—ஆனாலும் நீர் உம்முடைய கையை நீட்டி அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானே பாரும் என்றான். அப்பொழுது கர்த்தர் சாத்தானைநோக்கி: இதோ அவன் உன் கையிலிருக்கிறான். ஆகிலும் அவன்பிராணனை மாத்திரம் தப்பவிடு என்றார். அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். (2. 1-7.)

கிறிஸ்துவ ஈசுவரனுடைய பராக்கிரமம் எவ்வளவு வலியது! பாருங்கள்! சாத்தான் அவருக்கு எதிரிலேயே அவருடைய பக்தரைத் துன்புறுத்துகிறான். சாத்தானைத் தண்டிக்கவுமில்லை; தன் பக்தனைக் காப்பாற்றவுமில்லை; அவருடைய தூதர்களில் ஒருவரேனும் அவனை எதிர்க்க முடியவில்லை. சாத்தான் ஒருவனே அவர்களை உள்ளங்கலங்க பயமுறுத்திவிட்டான். மேலும் கிறிஸ்துவ ஈசுவரன் சர்வஞ்ஞரில்லைபோலிருக்கிறது. சர்வஞ்ஞராயிருந்தால் சாத்தான்மூலமாய் யோபைப் பரிசோதனை செய்வதேன்?

பிரசங்கி.

59. என் மனம் மிகுந்த ஞானத்தையும் அறிவையும் கண்டறிந்தது. ஞானத்தை அறிகிறதற்கும் பைத்தியத்தையும் மதியீனத்தையும் அறிகிறதிற்கும், நான் என் மனதைப் பிரயோகம் பண்ணினேன்; இதுவும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறதென்று கண்டேன். அதிக ஞானத்தினாலே அதிக சலிப்புண்டு; அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன். (1. 16-18.)

கவனிக்கவேண்டியது! ஞானம், அறிவு இவ்விரண்டும் சமானார்த்தபதம். இதை வேறுபட்ட இரண்டாக நினைக்கிறார்கள். ஞான விருத்தியினால் சோகமும் துக்கமும் விருத்தியாகிறதென்று அறிவில்லாதவர்களைத் தவிர வேறு யார் சொல்லக்கூடும். பைபிள் ஈசுவரனால் செய்யப்பட்டதென்பது ஒருபுறமிருக்கட்டும். கற்றறிந்தவன்கூட இவ்விதம் எழுதமாட்டான்.

பழைய ஏற்பாட்டைப் பற்றி சுருக்கமாக எழுதினோம். மத்தேயு எழுதின சுவிசேஷம் முதலானவைகளையுடையவும், கிறிஸ்துவர்களால் பெரும் பிரமாணமாகக் கருதப்படுவதும், பைபில் எனப்படுவதுமான புதிய ஏற்பாட்டைப் பற்றி கொஞ்சம் எழுதுவோம்.

மத்தேயு எழுதின சுவிசேஷம்.

60. இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது. அவருடைய தாயாராகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடி வருமுன்னே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு; தாவீதின் குமாரனாகிய யோசப்பே, உன்மனைவியாகிய மரியாளைச்சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. (1. 18-20.)

பிரத்தியக்ஷாதி பிரமாணங்களுக்கும், சிருஷ்ட்டி நியாயத்திற்கும் எதிரிடையான வார்த்தைகளில் நம்புவது அறிஞர்களுக்கு ஏற்றதாகாது. காட்டுமிருண்டிகளாலேயே இது நம்பமுடியும். கற்றுணர்ந்தவர்களால் முடியாது. பரமேச்வரனுடைய நியமங்களைத் தலைகீழாகச் செய்யமுடியுமா? அவ்விதமானால் அவருடைய நிபந்தனைகளை யாரும் கைப்பிடித்து நடக்கமாட்டார்கள். அவரே கீழ்ப்படியாமலிருக்கமுடியாது. ஏனெனில் அவர் சர்வஞ்ஞர், பிழைபடாதவர். கிறிஸ்து பிறப்பைக் கூறும் இக்கதை உண்மையென்றால் கலியாணமாகாமல் கர்ப்பந்தரிக்கிறப் பெண்ணும் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானேன் என்று சொல்லிக்கொள்ளலாம். பரமேச்வரனுடைய தூதன் கனவில் கண்டு "தன்னிடத்தில் உற்பத்தியாயிருப்பது, பரிசுத்த ஆவியினால் உண்டானது" எனச் சொல்லிற்றென்று தெரிவித்துக் கொள்ளலாம். புராணங்களில் குந்தி சூரியனால் கர்ப்பவதியானாள் என்பதைப் போல் அசம்பாவிதமானது. 'மூளையைவிட திரவியம்' அதிகமுள்ளவர்களே இப்பிரமையிலகப்பட்டு பொய் நம்பிக்கைகளுக்கு ஆளாவார்கள். ஏதாவதொரு புருஷனுடன் சம்யோகஞ் செய்ததினால் மேரி கர்ப்பவதியாயிருத்தல் வேண்டும். அவள் அல்லது, வேறு ஒருத்தி ஈசுவரனால் கர்ப்பவதியானதாகக் கூறியிருக்கவேண்டும்.

61. அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப் படுவதற்கு ஆவியான வராலே வனாந்திரத்திற்குக் கொண்டுபோகப் பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமிருந்த பின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானல், இந்தக்கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்ருன். (4. 1-3.)

திட்டமாக இதிலிருந்து என்ன வெளியாகிறதென்ருல் கிறிஸ்தவ ஈசுவரன் சர்வஞ்ஞரல்ல. ஏனெனில் சர்வஞ்ஞராயிருந்தால் சாத்தானைக் கொண்டு இயேசுவைப் பரிசோதனை செய்வானேன்? தன்னுடைய சர்வசக்தியினால் தானகவே எல்லாவற்றையும் அறிந்திருப்பார். நாற்பது நாளும் நாற்பது இரவும் அன்ன ஆகாரமில்லாது வைத்திருந்தால் கிறிஸ்தவனொருவன் பிழைத்திருத்தல் கூடுமா? இயேசுவும் தேவபுத்திரன் அல்ல; அவருக்கு அதிசய சக்தியும் ஒன்றும் கிடையாது; என்று இதிலிருந்து வெளியாகிறது. இல்லையென்ருல் ஏன் கற்களை அப்பங்களாக மாற்றியிருக்கமாட்டார்? பசியின் கொடுமையினால் அவரே வருந்திருப்பானேன். உண்மை யாதெனில் பரமேச்வரன் கற்களையுண்டுபண்ணினர். அதை எவருலும் அப்பங்களாக மாற்ற முடியாது. ஈசுவரனே முதல் செய்த நியாயத்திற்கு விரோதமாய்ப் போகமுடியாது. ஏனெனில் அவர் சர்வஞ்ஞர். அவருடைய காரியங்களெல்லாம் பிழைப்படாதது.

62. என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்ருர். உடனே அவர்கள் வலைகளைவிட்டு, அவருக்குப் பின் சென்ருர்கள். (4. 19-20.)

இப்பாபத்தின் காரணத்தினலேயே அதாவது பத்து ஆஞ்ஞைகளில் ஐந்தாவதான "தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" இவ்வாக்ஞையை, மீறி நடந்ததினலேயே அவர் அதிகநாள் வாழவில்லை போலும். ஏனெனில் தன் தாயையும் தகப்பனையும் அவர் பணியவில்லை. பிறரையும் பணியவிடவில்லை. பிறரை ஏய்ப்பதற்காகவே இயேசு தன் மதத்தை உண்டுபண்ணினர் போலிருக்கிறது. செம்படவனைப்போல் மற்றவர்களைத் தன் வலையில் அகப்படச் செய்து தன் எண்ணத்தை முடித்துக்கொள்ளப் பார்த்தார்போலும். தங்களுடைய மதத்திற்கு ஆள் சேர்த்துக் கொள்வதில் கிறிஸ்தவ பாதிரிமார்கள் தங்கள் தலைவரைப் பின்பற்றி நடக்கிறதில் ஏதேனும அதிசயமுண்டோ? அநேகம் பெரிய மீன்களைப் பிடிக்கிறவனுக்கு நல்ல பெயரும், பொருளும் வருவது போல் கிறிஸ்துவ வலையில் அதிகம் ஜனங்களைப் பிடிக்கிற பாதிரிக்கு நல்ல புகழும், பதவியும் கிடைக்கிறது. வேதம், சாஸ்திரம் இவைகளைப் படிக்காமலும் படித்தும் கேட்டிராத பேதைகளை அவர்களுடைய வலையில் இழுத்துக் கொண்டு தாய் தகப்பன் குடும்பம் முதலானவைகளிலிருந்தும் பிரிக்கிருர்கள் ஆகையால் கற்றுணர்ந்த ஆரியர்கள், இப்பிரமஜால வலையிலிருந்து தப்பி ஒன்றுமறியாத ஏனையோர்களையும் அப்படியே அதிலிருந்து காப்பாற்ற பாடுபடவேண்டும்.

63. பின்பு இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து,

ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திர ரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார். (4. 23, 24.)

மந்திர சக்தி, மந்திரோச்சாரணம், ஆசீர்வாதம், சாம்பல் அளித்தல் முதலானவைகளினால் பேய் பிசாசுகளை ஓட்டி நோய்களைத் தீர்த்துவிடுவதாகச் சொல்லும் தற்போதைய போப்லீலைகள் உண்மையாகுமானால், இயேசுவைப் பற்றி பைபிலில் எழுதப்பட்டிருப்பதையெல்லாம் நம்புவோம். ஒன்றுமறியாத கபடமற்ற பேதை மனிதர்களைக் குருட்டு நம்பிக்கைகளில் பிடிக்க இவைகளெல்லாம் ஏற்ற வழியாகும். இயேசுவினுடைய வார்த்தைகளைக் கிறிஸ்துவர்கள் நம்பும்பொழுது, நம்முடைய போப்புக்கள் தேவியைப்பற்றி சொல்வதில் ஏன் அவர்கள் நம்புகிறதில்லை, ஏனெனில் இரண்டும் சமமாகவே இருக்கிறது.

64. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது. வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் எனப்படுவான். (5. 3, 18, 19.)

சுவர்க்கம் ஒன்றாகவே யிருந்தால் ராஜாவும் ஒருவனே அங்கிருக்க வேண்டும். "ஆவியில் எளிமையுள்ள" எல்லோரும் சுவர்க்கத்தையடைந்தால், அவ்விடத்தில் இராஜ்யாதிகாரம் எவனுக்கு ஏற்படும்? இவ்விஷயமாகப் பெரும் கூக்குரலும் அமளியும் உண்டாகி, சமாதானமில்லாமல் போய்விட்டாலும் விடுமே. "ஆவியில் எளிமையுள்ளவர்கள்" என்பதற்கு ஏழையாயிருக்கிற எல்லோரும் என்றாலும் உண்மையாகாது. "எண்ணத்திலிருந்து மீறினவர்கள்", என்றாலும் சரியாகாது. ஏனெனில் "ஆவியில் எளிமையுள்ளவர்களென்பதும்" எண்ணத்திலிருந்து மீறினவர்களென்பதும் ஒன்றானதல்ல. "ஆவியில் எளிமையுள்ள"வன் ஒருபொழுதும் மனமுவந்தவனாயிருக்கமுடியாது. 'நியாயப் பிரமாணம்" வானமும் பூமியும் இருக்குமளவே இருக்கும் என்பது மனிதனால் செய்யப்பட்ட சட்டங்களுக்கே ஏற்றதாகும். ஏனெனில் அது அழியக்கூடியது. சர்வஞ்ஞமான ஈச்வரனால் செய்யப்பட்ட நித்திய சட்டங்களைப் பற்றி இது உண்மையாகாது. "இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் ஒன்றையாகிலும் மீறி அவ்விதமாய் மனிதருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் சிறியவன் எனப் படுவான்" என்று ஜனங்களைக் கலங்கச் செய்து பயமுறுத்துவதற்காகவே சொல்லப்பட்டிருக்கிறது.

65. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்; பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். (6. 11, 19.)

ஜனங்கள் வறுமையினின்றும் கஷ்டப்பட்டுக்கொண்டு வெறுங்காட்டாளர்களாய் இயேசு நாதர் காலத்திலிருந்ததாகவும் அன்றன்றைக்கு வேண்டிய ஆகாரத்திற்குக்கூட ஈசுவரனை வேண்டிக்கொண்டும் மற்றவர்களையும் வேண்டிக்கொள்ளச் சொல்லும் ஏழ்மைத்தனத்தில் எல்லோரையும் போல் கிறிஸ்துவும் இருந்ததாகவும் இதிலிருந்து தெரியும். பைபிலின் கோட்பாட்டிற்கு விரோதமாயிருக்க, கிறிஸ்துவர்கள் ஏன் புதையல்களைக் குவிக்கிருர்கள்? இயேசுவினுடைய கட்டளைகளுக்கு விரோதமாகப் போகாமல் சகல ஐசுவரியத்தையும் தானம் செய்துவிட்டு ஏழைகளாகவேண்டும்?

66. என்னை நோக்கி; கர்த்தாவே, கர்த்தாவே, என்று சொல்லுகிறவன் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை. (7. 21.)

பெரிய பிஷப்புக்களும், பாதிரிகளும், கிறிஸ்துவர்களும் இயேசுவினுடைய இவ்வார்த்தையை நம்பினுல், இயேசு கிறிஸ்துவை 'கர்த்தாவே' என்று ஒருபொழுதும் அழைக்கக் கூடாது. அப்படிச் செய்ய மறுப்பார்களேயானுல், அவர்கள் பாபியாவார்கள்.

67. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே, கர்த்தாவே என்பார்கள்; அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குசசொல்வேன். (7. 22, 23.)

கிறிஸ்து எவ்விதம் காட்டு மிராண்டிகளை ஏமாற்றி, தீர்ப்பு தினத்தில் சுவர்க்கத்தில் நீதி பதியாயிருப்பது போல் பாவனைக் காட்டினுர் என்று கவனியுங்கள். இது ஒன்றுமறியாத கபடமற்ற பாமரர்களுக்கு ஆசைக் காட்டவேயாகும்.

68. அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து; ஆண்டவரே! உமக்குச் சித்தமானுல், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்ருன். இயேசு தமது கையை நீட்டி அவனைத்தொட்டு; எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகுமென்ருர். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானுன். (8. 2. 3.)

இவையெல்லாம் அறிவில்லாதவர்களை அகப்பட்டுக் கொள்ளச் செய்வதற்கேயாகும். ஞானத்திற்கும் சிருஷ்டிக் கிரமத்திற்கும் மாருன இவ்வார்த்தைகளைச் சத்தியமாகக் கிறிஸ்துவர்கள் நம்பும்பொழுது, புராணங்களிலுள்ள சுக்கராசாரியர், தன்வந்தரி, கச்யப முதலானவர்களை ஏன் நம்புகிறதில்லை? உதாரணமாகப் புராணங்களில் இறந்து கிடந்த தைத்தயர்களுடைய சேனைகளில், பலபிழைத்தெழுந்தன எனவிருக்கிறது. பிரகஸ்பதியுடைய பிள்ளை கச் என்பவனைத், துண்டுதுண்டாக வெட்டப்பட்டு மீன்களால் விழுங்கப்பட்டிருந்தும், சுக்கராச்சாரியர் அவரை உயிர் பிழைக்க செய்தார். பிறகு அதே சுக்கராசாரியர் கச்சைக் கொலை செய்து இறையாக அளித்துவிட்டார். பிறகு வயிற்றிலேயே உயிர் பிழைக்கசெய்து வெளியில் கொண்டுவந்தார். சுக்காராசாரியரே இறந்துவிட, கச் அவரைத் திரும்பவும் உயிர்பிழைக்கச் செய்தார். தக்ஷகனுல் சாம்பலாக்கப்பட்ட பிறகு மரத்தையும், மனிதனையும் காச்

யப முனி, உயிருள்ளதாகச் செய்தார். தன்வந்திரி லக்ஷக்கணக்கானவர்களுக்கு உயிர் அளித்தார். கோடிக் கணக்கான குஷ்ட ரோகிகளைச் சொஸ்தமாக்கினார்; லக்ஷக்கணக்கான குருடர் செவிடர்களுக்குப் பார்வையையும் கேட்கும் சக்தியையும் தந்தார். இக்கதைகளெல்லாம் பொய்யெனப்படும்பொழுது இயேசுவினுடைய வெறுங்கதை ஏன் பொய்யாகலாகாது? ஒரு இனத்தார் கூறுவனவற்றைப் பொய்யென்றும் ஆனால் தான் கூறுவனவெல்லாம், மனித அறிவிற்குப் பெரும் பொய்யெனப்பட்டபோதிலும், மெய்யென்றும் சொல்லுபவன் பிடிவாதக்காரன் அல்லவா? எனவே கிறிஸ்தவர்கள் செய்வது பிடிவாதமேயாகும். பிடிவாதம் செய்தல் குழந்தைகளின் செயலாகும்.

69. பிசாசு பிடித்திருந்த இரண்டு பேர் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தார்கள். அவர்கள் அவரை நோக்கி இயேசுவே தேவகுமாரனே! எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள். அவர்களுக்குக் கொஞ்சதூரத்தில் அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தன. அப்பொழுது பிசாசுகள்; நீர் எங்களை துரத்துவீரானால் நாங்கள் அந்தப் பன்றிக் கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும் என்று அவரை வேண்டிக் கொண்டன. அதற்கு அவர் போங்கள் என்றார். அவைகள் புறப்பட்டு, பன்றிக் கூட்டத்தில் போயின; அப்பொழுது பன்றிக் கூட்டமெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, ஜலத்தில் மாண்டுபோயின. (8. 28, 33.)

இவ்வார்த்தைகளெல்லாம் பொய்யானவையேயென்று கொஞ்ச யோசனை செய்தால் புலப்படும். சவக்குழியிலிருந்து இறந்தவர்கள் ஒரு பொழுதும் வரவும் முடியாது. ஒருவரிடமும் சென்று சம்பாஷணை செய்யவும் முடியாது. ஒன்றுமறியாதக் காட்டுமனிதர்களே இவ்விஷயங்களை நம்புவார்கள். அப்பன்றிக் கூட்டத்தினுடைய நாசத்திற்குக் காரணம் இயேசுவானபடியினால், அக்கூட்டத்தின் சொந்தக் காரனுக்கு நஷ்டத்தைச் செய்த பாபத்திற்கு ஆளாகிறார். பாபங்களை மன்னித்து பரிசுத்தம் செய்வதாகக் கிறிஸ்துவர்கள் இயேசுவை நம்பும்பொழுது, அப்பிசாசுகளை ஏன் அவர் பரிசுத்தமாக்கவில்லை. சொந்தக்காரனுடைய நஷ்டத்திற்கு ஏன் அவர் ஈடு கொடுக்கவில்லை? ஐரோப்பியரைப் போன்ற கற்றுணர்ந்த கிறிஸ்துவர்கள்,' இந்தக்கட்டுகளை நம்புகிறார்களா? நம்பினால் மூடபக்தியில் முழுகினவர்களாவார்கள்.

70. அங்கே படுக்கையிலே படுத்திருந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி மகனே, திடன்கொள். உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது என்றார். நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதிற்கு அழைக்க வந்தேன் என்றார் (9. 2, 13.)

முன் சொல்லப்பட்டவைகளைப்போல் இதுவும் அசம்பவமானதே. பாபங்கள் மன்னிக்கப்படுமென்பது பேதைகளுக்கு ஆசைகாட்டி இழுக்க மயலூட்டும் இரையேயாகும். கள்ளு, கஞ்சா, சாராயம் இவைகள், குடிக்கிறவர்களையே மயக்கி மற்றவர்களைப் பாதிக்காமலிருப்பது போலவே ஒருவன் செய்த பாபம் மற்றொருவனைக் கஷ்டப்படுத்தாது. செய்கிறவனே அநுபவிப்பான்.

இது ஈச்சுவர நியாயமாகும். ஒருவன் செய்த பாப புண்யங்களுக்கு வேறொருவன் ஆளானாலும், குற்றவாளியினுடைய குற்றத்தை நீதிபதி, தானே ஏற்றுக்கொண்டாலும் ஈசுவான் அநியாயம் செய்கிறவராவார். தர்மம் ஒன்றே சுபத்தை உண்டுபண்ணும்; இயேசுவினால் முடியாது. அல்லது தீர்க்கதரிசியினால் முடியாது அல்லது வேறு எதினாலும் முடியாது. தர்மாத்மாக்களுக்கு இயேசு முதலானவர்கள் தேவையில்லை. பாபிகளுக்கும் தேவையில்லை. ஏனெனில் எவனாலேயும் பாபத்தை மன்னித்தில் முடியாது.

71. அப்பொழுது அவர் தம்முடைய பன்னிரண்டு சிஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும், அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர். பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும், பிரிவினையுண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. (**10**. 1, 20, 34-36.)

இச்சிடர்களிலொருவன் 30 ரூபாய்க்குக் கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்து துரோகஞ் செய்தான். மற்றவர்கள் ஓட்டமெடுத்தார்கள். பிசாசு பிடிக்கிறது, பிசாசை ஓட்டுகிறது, மருந்து, பத்தியம் இவைகளில்லாது வியாதியைச் சொஸ்தப் படுத்துகிறது, முதலானவைகளெல்லாம் அறிவிற்கும் சிருஷ்டிக்கும் விரோதமானது. ஆகையால் அசம்பவமே. இவைகளில் நம்பிக்கை வைப்பது அறிவில்லாதவர்களுடைய வேலை. ஈசுவர ஆவியே பேசுவது, ஜீவனல்ல என்றால், ஜீவனுடைய வேலையென்ன? மனிதனுடைய பாப புண்யத்தின் சுக துக்கத்தை அனுபவிக்கிறவர் ஈசுவரனேயாகவேண்டும். இது வீண் பொய்யேயாகும். கிறிஸ்து ஒருவருக்கொருவர் பிரிவினையையும் சண்டையையும் உண்டாக்கவே வந்தார். அதில் அவருக்கு ஜயமும் கிடைத்தது. அதே சச்சரவு இன்றும் மனிதர்களுக்குள் இருந்துவருகிறது. மனிதர்களுக்கு எப்பொழுதும் துக்கத்தைக் கொடுக்கும் பிரிவினையையுண்டாக்குவது எவ்வளவு தீய காரியம். ஆனால் கிறிஸ்தவர்கள் இதைக் குருமந்திரமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. கிறிஸ்துவே ஒருவருக்கொருவரைப் பிரிக்கவந்தபொழுது அவரைப் பின்பற்றுகிறவர்கள் ஏன் அம்மாதிரி நடக்கக் கூடாது. வீட்டிற்குள்ளேயே சத்துருத்தனம் செய்து வைப்பது இயேசுவினுடைய வேலை. சிறந்தவர்களுடையதாகாது.

72. இயேசு உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டென்று கேட்டார். அவர்கள் ஏழு அப்பங்களும் சில சிறுமீன்களும் உண்டு என்றார்கள். அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியிருக்கக்கட்டளையிட்டு அந்த ஏழு அப்பங்களையும் அந்த மீன்களையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி பிட்டுத் தம்முடைய சிஷர்களிடத்தில் கொடுத்தார்; சிஷர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள். ஸ்திரீகளும், பிள்ளைகளும் தவிர, சாப்பிட்ட புருஷர் நாலாயிரம் பேராயிருந்தார்கள். (**15**. 34-39.)

தற்போதைய செப்படி வித்தைக்காரன் ஜாலவித்தைக்காரன் இவர்களுடைய மாய வேலைகளைவிட இது எவ்விதத்திலாவது சிறந்ததா? (ஜனங்களுக்குப் பரிமாற) அப்பங்களும் மீன்களும் எங்கிருந்து கிடைத்தது? இயேசுவினிடத்தில் அவ்வளவு, மந்திர சக்தி இருக்கும்பொழுது தனக்குப் பசி யுண்டாயிருந்த காலத்தில் அத்தி மரத்தின் பழத்திற்காக ஏன் அவர் அவ்வளவு பாடு பட்டிருக்கவேண்டும்? கற்கள், மண், ஜலம் இவைகளை ஏன் அப்பங்களாகவும் பானகமாகவும் மாற்றியிருக்கக் கூடாது? இதெல்லாம் சிறு குழந்தை விளையாட்டைப் போலவிருக்கிறது. (இவ்வித) சூதுகளால் வைராகிகளும் பிச்சைக்காரர்களும் அநேகம் பெயர்கள், ஒன்றுமறியாத பேதைகளை ஏமாற்றி பணத்தைப் பறித்து விடுகிறார்கள்.

73. அப்பொழுது அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். (**16**-27.)

கிரியைக்குத்தக்க பலனளிக்கும்பொழுது பாபம் மன்னிக்கப்படுமென்று கிறிஸ்துவர்கள் உபதேசம் செய்வது வீணேயாம். பின் சொன்னது மெய்யானால் முன் சொன்னது பொய்யாயிருத்தல் வேண்டும். மன்னிக்க யோக்கியமுள்ளவர்களை மன்னித்து யோக்கியமில்லாதவர்களை மன்னிக்கிறதில்லையென்று கிறிஸ்துவர்கள் சமாதானங்கூறினால் சரியாகாது. ஏனெனில் கர்மத்திற்கு ஏற்ற பலாபலன்களைச் சரியாக அளிப்பதினாலேயே நியாயமும், தயையும், ஏற்றதாகும்.

74. விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார். கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்தமலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது. என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (**17**. 17-20.)

"வாருங்கள்-எங்களுடைய மதத்தைப் பின் பற்றுங்கள். பாபங்களைப் போக்கிக் கொள்ளுங்கள். முக்தியை யடையுங்கள்" என்று கிறிஸ்துவர்கள் உபந்நியாசஞ் செய்துகொண்டே போகிறார்கள். இதெல்லாம் முழுப் பொய்யே. இயேசுவிற்குப் பாபங்களை மன்னிக்கவும் தமதுமதத்தைச் சேராதவர்களுக்கு நம்பிக்கையுண்டாக்கி பரிசுத்தமாகச் செய்யவும் சக்தியிருந்திருந்தால் ஏன அவர் தன் சீடர்களைப் பாபங்களிலிருந்து மன்னித்து அவர்களைப் பரிசுத்தமானவர்களாகச் செய்திருக்கக் கூடாது? தன் கூடவே வந்துகொண்டிருந்தவர்களைப் பரிசுத்தமாகவும் நம்பிக்கையுள்ளவர்களாகவும் பாபமில்லாதவர்களாகவும் செய்ய முடியவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்று இப்பொழுது நமக்குத் தெரியாது. எனவே நமக்குத் தெரியாது ஒளித்துக்கொண்டிருக்கும் இயேசு நாதர் எங்ஙனம் நம்மைப் பரிசுத்தமாக்கப் போகிறார்? இயேசுவுடைய சீஷர்களுக்குக் கடுகு விதையளவுகூட விசுவாசம் இல்லாமலிருந்தது. இவர்கள் தான் பைபில் புஸ்தகத்தைச் செய்தவர்கள்: இது எவ்விதமாகப் பிரமாணமா

கும்? விச்வாசமில்லாதவர்கள், பரிசுத்தமில்லாதவர்கள், தர்மமில்லாதவர்கள் இவர்களாலெழுதப்பட்ட நூலகளை க்ஷேமத்தை விரும்புகிற மனிதர்கள், நம்பக் கூடாது. இயேசுவினுடைய இவ்வார்த்தை உண்மையாயிருக்கும் பக்ஷத்தில், கடுகுவிதையளவு கூட விசுவாசம் கிறிஸ்துவர்களுக்கு இல்லையென்று ஏற்படு கிறது. எங்களுக்கு முழு விச்வாசமோ அல்லது துளி விச்வாசமோ இருக் கென்று சொல்லும் கிறிஸ்துவர்களிடத்தில, ஓரிடத்திலிருந்து மற்ருெரு விட த்திற்கு மலையைப் போகச்செய்யும் என்று சொல்லவேண்டும். அவ்விதம் மலை யைப் போகச் செய்வதில் ஜெயித்தாலுங்கூட, முழு விச்வாசமுள்ளவனுகச் சொல்லமுடியாது. கடுகு விதையளவு விசுவாசம் உள்ளவனென்றே சொல்ல வேண்டும். ஜெயிக்காமல் போனுல் ஒரு துளி விசுவாசம் அல்லது தர் மங்கூட இல்லாதவனுக ஆகிருன். 'இதெல்லாம் கட்டுரை, 'மலை' என்ருல். ஆர்வம் முதலான மனோகுணங்களையே குறிக்குமென்ருலும் சரியாகாது. ஏனெனில் இறந்தவர்களை உயிர் பிழைக்கச் செய்தல், குருடர்களுக்குப் பார் வை அளித்தல், குஷ்டரோகத்தைத் தீர்த்து வைத்தல், பிசாசடித்தல் முதலானவைகளெல்லாம் கட்டுரையாகாது. இறந்தவர்களையும் சோம்பலான வர்களையும் பிழைக்கச்செய்தார், சோம்புதனத்திலிருந்துதிருப்பினுர், குருடனை ச்சரியாகச் செய்தார் என்ருல் மனக்கண் குருடானவர்களின் இருளை, ஒளி மயமாக்கினுரென்றும், வியபசாரியை வியபசாரித்தனத்திலிருந்தும், மூட நம்பிக்கைக்காரனை மூட நம்பிக்கையிலிருந்தும் இயேசு மீற்ருர் என்றும் அர்த் தங்கொள்ளலாம். இவ்விதம் பொருள் கொள்ளுவதும் சரியாகாது. ஏனெ னில் இவ்விதமிருந்தால் தன் சொந்த சீஷர்களை ஏன் திருத்தியிருக்கக் கூடாது? அசம்பவ வார்த்தைகளைச் சொல்லுவதினுல் இயேசு தன்னுடைய அஞ்ஞான த்தை வெளிப்படுத்துகிருர். இயேசுவினிடத்தில் கொஞ்சமேனும் வித்தை இருந்திருந்தால், கல்வி, அறிவு, உலகஞானம் அற்ற காட்டிலிருந்து வந்த மனிதனைப் போல் அவர், பொருளற்ற வார்த்தைகளைக் கூறியிருக்கமாட்டார். "மரமில்லாத ஊரில் ஆமணக்கெண்ணெய் செடியே எல்லாவற்றையும் விட பெரிய மரமாயும் மேலானதாயும் கருதப்படும்" என்பது போல் அறிவில் லாத பெருங்காட்டு மிருண்டிகளுடைய தேசத்தில் இயேசு பெரியவராயிருக்க லாம்; ஆனுல் அறிவு நிரம்பிய இன்னுளில் அவர் பெரியவராயிருத்தல் முடி யாது.

75. நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொ ல்லுகிறேன். (18. 3.)

மனந்திரும்பி ஒருவன் மாறுவதினுல் சுவர்க்கத்தையும் மாருதிருப்பதி னுல் நரகத்தையும் அடைந்தால், ஒருவனுடைய பாப புண்யத்தை மற்ருெரு வன் ஏற்றுக்கொள்ள முடியாதென்று, தெரிகிறது. "நீங்கள் பிள்ளைகளை ...." என்று சொல்லுவதெல்லாம் அறிவிற்கும் சிருஷ்டித்தன்மைக்கும் விரோதமா யிருக்கிறது. ஜனங்கள் சிறு குழந்தையைப் போல் நான் சொல்லுவதை ஏற்று க்கொள்ளட்டும் என்று அவருடைய மனதிலிருந்தது போலும். அதாவது

கேழ்வி கேழ்க்காமல் கண்மூடித்தனமாய ஒத்துக்கொள்ளவெண்டும் என்பதேயாகும். குழந்தையைப் போல் குருட்டு நம்பிக்கையுள்ள கிறிஸ்துவர்கள் பலரிருக்கின்றனர். இல்லையென்றால் சாஸ்திரத்திற்கும் புத்திக்கும் விரோதமாயிருக்கிற இவ்வார்த்தைகளில் நம்புவானேன்? இயேசுவே வித்தையில்லாமலும் பாலபுத்தியுடனும் கூடினவராக இல்லாமலிருந்தால் ஏன் பிறருக்குப் பாலபுத்தியுடனிருங்கள் என்று உபதேசம் செய்கிறார்? ஏனெனில் தானிருப்பது போலவே மற்றவர்களையும் ஆக விரும்புவது சகஜமே?

> 76. ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (**19**. 23, 24.)

இயேசு ஏழையாயிருந்தார் என்று இதிலிருந்து புலப்படும். ஐசுவரியவான்கள் இவரை மரியாதை செய்யவில்லைபோலும்; அதினாலேயே இதைச் சொல்லியிருப்பார். ஐசுவரியவான்களிலும் ஏழைகளிலும் நல்லோர்கள் தீயோர்களிருக்கிறபடியினால் இது உண்மையாகாது. மனிதன் நல்லகாரியத்தைச்செய்தால் நல்லபலனையும் கெடுதலைச்செய்தால் கெட்டபலனையும் முறையே அடைகிறான். ஈசுவரனுடைய ராஜ்யம் ஒரே விடத்திலிருப்பதாகவும், எங்குமில்லாததாகவும் இயேசு நினைத்ததாகத் தெரிகிறது. அவ்விதமாயின் அவர் ஈசுவரனாகமாட்டார். யார் ஈசுவரனோ, அவருடைய ராஜ்யம் எங்கும் பரவியுள்ளது. மேலும் அதில் "பிரவேசிப்பது" அல்லது "பிரவேசிக்காமலிருப்பது" என்று சொல்லுவது அறிவில்லாதவர்களுடைய வார்த்தையேயாகும். தனவான்களான கிறிஸ்துவர்கள் எல்லோரும் நரகத்தையே அடைவார்களா? தரித்திரர்கள் எல்லோரும் சுவர்க்கத்திற்கே செல்வார்களா? (நல்லது செய்ய) தனவந்தர்களுக்குச் சாதனங்களிருப்பதுபோல் ஏழைகளுக் கில்லையென்று இயேசு கிறிஸ்துவிற்குக் கொஞ்சயோசனையில் தெரிந்திருக்கும். தனவான்கள் விவேகத்துடன் தர்மமார்க்கத்தில் தங்கள் திரவியத்தைச் செலவிட்டால் உத்தம பதவியை யடைவார்கள். தரித்திரன் இழிவான பதவியிலே கிடப்பான்.

> 77. அதற்கு இயேசு: மறு ஜென்ம காலத்திலே மனுஷ குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றி நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார். (**19**.. 28, 29.)

விஷயம் வெளியாகிவிட்டது; பாருங்கள். அவர் இறந்தபிறகும்கூட அவருடைய வலையிலிருந்து யாரும் தப்பித்துக்கொள்ளக் கூடாதென்ற எண்ணத்

துடனேயே தன் சீஷர்களுக்கு இதைச் சொன்னார். அற்ப ரூபாய் முப்பதிற்காக தன் கர்த்தாவைக் காண்பித்துக்கொடுத்து அவரைச் சிலுவையில் அறைவதற்கும் காரணமாயிருந்த படுகள்ளனான அந்த சீடன்கூட அவருடன் சிங்காசனத்தில் வீற்றிருப்பான். அவர்கள் (12சீஷர்கள்) இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும், நியாயந்தீர்க்கிறவர்களாவார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் மக்களின் பாபங்களெல்லாம் மன்னிக்கப்படுமாதலால், இஸ்ரவேலைத் தவிர மற்ற கோத்திரங்களின் நியாயந்தீர்க்கிறவர்களாகவே இருப்பார்கள்போலிருக்கிறது. இக்காரணத்திலேயே தங்களுடைய சுயஜாதிச் சனங்களிடத்தில் கிறிஸ்துவர்கள் அவ்வளவு அன்புடனிருக்கிறார்கள். மேலும் வெள்ளைமனிதன், கருப்புமனிதன் ஒருவனைக் கொலை செய்துவிட்டால், நீதிபதியும் ஜூரிகளும் வெள்ளைமனிதர்களானபடியினால் குற்றவாளியைத் தப்புசெய்யவில்லை என்று சொல்லி சில சமயங்களில் விட்டுவிடுவதை அடிக்கடி பார்க்கப்படுகிறது. இப்படியே இயேசுவுடைய சுவர்க்கத்திலும் நியாயங்கிடைக்கலாம். ஒருவன் உலகாரம்பத்தில் இறந்துபோயிருக்கலாம். மற்றொருவன் தீர்ப்புதினத்தின் முந்தின சாயந்திரம் இறந்துபோயிருக்கலாம். ஆகையினால் 'விசாரணை நாள்' எனப்படும் ஒரே தினத்தில் எல்லோரையும் விசாரிப்பதானது விரும்பத்தகாததே. ஒருவன் ஆரம்பத்திலிருந்து சிருஷ்டி முடிவுவரையில் தன்னுடைய விசாரணைக்குக் காத்துக்கொண்டிருக்க வேண்டிவரும்! மற்றொருவனோ உடனே விசாரிக்கப்படுவான். அவன் காத்திருக்கவேண்டிய அவசியமே கிடையாது. இது என்ன அநியாயம்? மேலும் நரகத்தை யடைகிறவன் அனந்தகாலமும் அதிலேயே கஷ்டப்படவேண்டும். சுவர்க்கத்தைப் பெறுகிறவன் எப்பொழுதும் அதையே அநுபவிக்கவேண்டும். இதுவும் பெரும் அநியாயமேயாம். ஏனெனில் முடிவையுடைய கர்மங்களினுடையவும் சாதனங்களினுடையவும் பலன்கள் முடிவுள்ளதாகவே இருக்கவேண்டும். சரியான பாப புண்யத்தையுடைய இரண்டு ஜீவன்கள் ஒருபொழுதும் கிடையாது. ஆகவே இன்பதுன்பங்கள் ஏற்றகுறைவாயிருக்க, அந்தந்த ஜீவனுக் கேற்றவைகளை அனுபவிக்கத்தக்க அநேக நரகங்களும் சுவர்க்கங்களும் இருக்கவேண்டும். கிறிஸ்துவர்களுடைய புஸ்தகத்தில் இதைப்பற்றி ஒன்றுமில்லாதபடியினால் அது தெய்வவாக்கு ஆகாது. இயேசுவும் தேவனுடைய குமாரனாயிருக்கமாட்டார். நூறு பெற்றோர்களையுடைய ஒருவனிருக்கிறானென்பது பொருளற்ற வெறும்பேச்சாகும். ஒருவனுக்கு ஒரே தாய் தகப்பன்தானிருக்கமுடியும். இருந்தும் "என் நாமத்தினிமித்தம்...................... நூறத்தனையாய் அடைந்து" என்று பைபிள் கூறுகிறது. மகம்மதியர்களுடைய நூலில் விசுவாசமுள்ளவன் சுவர்க்கத்தில் மாதர்களை யடைவான் என்றிருப்பது பைபிளிலிருந்தே எடுத்ததுபோல் காணப்படுகிறது.

78. காலையிலே அவர் நகரத்திற்குத் திரும்பி வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதினிடத்திற் போய் அதிலே இலைகளையன்றி வேறொன்றையும் காணாமல்; இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார்; உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று. (21. 18, 19.)

பாதிரிகள் இயேசு எப்பொழுதும் சாந்தத்தைப் பூஷணமாகக் கொண்டவர் அன்புள்ளவர் கோபம் முதலான தீயக்குணங்களில்லாதவர் என்று சொல்லுகிறார்கள். இயேசு கோபமுள்ளவரென்றும், பருவகாலங்களினுடைய அறிவு இல்லாதவரென்றும், காட்டுமனிதனைப்போல் நடந்துகொண்டார் என்றும் இதிலிருந்துதெரியவரும். மரம், சடப்பொருளாச்சுதே? சாபமிடும்படியான தப்பு அதென்னசெய்தது. மரம் பட்டுபோனதென்பது உண்மையானால் அது சாபத்தினாலிராது; ஏதாவது மருந்தினால் அது பட்டுப்போயிருந்தால் நமக்கு விந்தையாகாது.

70 அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். (**24**. 29.)

சபாஷ் இயேசுவே!! நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழுமென்று எச்சாத்திரத்தினாலறிந்தீர்? இயேசு கொஞ்சம் படித்திருந்தால் நட்சத்திரங்களெல்லாம் நம்முடைய பூமியைப்போல் கோளங்களென்றும் அது விழக்கூடியதல்லவென்றும் திட்டமாக அறிந்திருப்பார். அவர் தச்சனுடைய பிள்ளையென்றும் பலவருடங்கள் மரங்களை வெட்டி, அறுத்து இழைத்து, புனைத்துத் தச்சு வேலை செய்திருக்கவேண்டும் என்றும் இதனால் தெரியவரும். நானும் இந்தக் காட்டுஊரில் தீர்க்கதரிசி ஆவேன் என்று அவருக்குத் தோன்றினவுடனே, உபதேசம் செய்யவாரம்பித்தார். சில நல்ல வார்த்தைகளையும் பல தீயவார்த்தைகளையும் சொன்னார். அவ்வூர் மனிதர் காட்டாளர்களானபடியினால் அவர் சொல்லுவதை நம்பினார்கள்; இப்பொழுதிருக்கும் வண்ணம் ஐரோப்பா சிறந்த யோஜனையுடன் அப்பொழுது இருந்திருந்தால் இவர் தீர்க்கதரிசியாயிருக்க மாட்டார். இப்பொழுது கொஞ்சம் சிறந்த யோசனையுடன் கூடினவர்களாயிருந்தபொழுதிலும் ஐரோப்பியர்கள் சுயலாபத்தினாலோ அல்லது பிடிவாதத்தினாலோ இந்த வெறுமையான மதத்தைத் தள்ளி, எப்பொழுதும் உண்மையான வேதமார்க்கத்தைத் தழுவாமலிருப்பது அவர்களுடைய குறைகளில் ஒன்றேயாம்.

80. வானமும் பூமியும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிற மற்றொருவனும் அறியான். (**24**. 35.)

இதுவும் இயேசுவுடை அறிவின் குறைவையும் மூடத்தனத்தையும் வெளிப்படுத்துகிறது. (ஆகாசம்) வானம் எங்கே ஒழிந்துபோகும்? ஆகாசம் அதிசூட்சமமானபடியினால் கண்ணால் காணமுடியாதது. ஒழிந்துபோவதை எவரால் பார்க்கமுடியும்; தானாகவே தன்னைப் புகழ்ந்து கொள்ளுவது நல்லமனிதர்களுடைய வேலையாகாது.

81. அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணைப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை. (**25**. 41.)

தன் சீடர்களைச் சுவர்க்கத்திற்கும் மற்றவர்களை 'நித்திய அக்கினிக்கும்' அனுப்புவது எவ்வளவு பக்ஷபாதமான செயல். ஆகாசமில்லாமலிருக்க நித்திய அக்கினியும், நரகமும் எங்கு இருக்கும்? சாத்தானையும் அவனுடைய தூதர்களையும் ஈசுவரன் படைக்கவில்லையா? அப்படியிருக்க நரகத்திற்கு இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்வானேன்? சாத்தான் என்பவன் ஈசுவரனுக்குப் பயந்து நடுங்காமலிருக்க அவர் ஈசுவரன் எப்படி ஆவார். ஏனெனில் அவருடைய தூதனாகவேயிருந்தான். அவருக்கு விரோதமானான். அவனை முதலிலேயே பிடித்து ஏன் சிறைபடித்திருக்கக்கூடாது? இயேசுவிற்கே நாற்பது நாள் கஷ்டத்தை யுண்டு பண்ணினான். இப்படி யிருக்க அவருக்கு ஈசுவரத் தன்மை எங்கிருந்துவரும்? இயேசு, கர்த்தருடைய குமாரனா யிருந்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகையினால் இயேசு ஈசுவரனுடைய குமாரனாக மாட்டார். பைபிலினுடைய ஈசுவரனும், ஈசுவரனாகமாட்டார்.

82. அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்—நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். (**26**. 14. 15.)

இதோ இயேசுவினுடைய ஈசுவரத்தன்மையும் மாயாசக்தியும் வெளியாகி விட்டது. தன்னுடன் எப்பொழுதும் கூடயிருந்த முக்கிய சிஷ்யனைப் பரிசுத்தமாகச் செய்ய முடியாதிருக்க, இறந்தபிறகு அவர் ஜனங்களைப் பரிசுத்தமாக எவ்விதம் செய்யமுடியும்?

83. அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசிர்வதித்து அதைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து! நீங்கள்வாங்கிப் புசியுங்கள்; இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள், இது புது உடன்படிக்கைக் குரிய என்னுடைய இரத்த மாயிருக்கிறது என்றார். (**26**. 26. 28.)

அறிவாளி ஒருவன் இக்காரியத்தைச் செய்வானா? ஒன்று மறியாத காட்டுமிராண்டியே செய்வான். கற்றுணர்ந்த எவனும் தன் சிஷ்யர்களுடைய ஆகாரத்தைத் தன் சரீரம் (மாமிசம்) என்றும், பானத்தைத் தன்னுடைய இரத்தமென்றும் சொல்ல மாட்டான். தற்போதைய கிறிஸ்துவர்கள் இதைக் கர்த்தருடைய போஜனமென்று அழைக்கிறார்கள். தங்களுடைய அப்பம் கிறிஸ்துவுடைய மாம்சம் என்றும், பானம், அவருடைய இரத்தமென்றும், நினைத்துக் கொண்டு சாப்பிட்டுக் குடிக்கிறார்கள். ஐயோ! தன் குருவுடைய மாம்சம் இரத்தமென்ற எண்ணத்தி லிருந்து தன்னுடைய ஆகாரத்தையும் பானத்தையும் கூடப் பிரிக்கமுடியாம லிருக்கிறவர்கள், பிறருடைய மாம்சத்தையும் இரத்தத்தையுமா விட்டுவிடுவார்கள்?

84. பேதுருவையும், செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக் கொண்டு போய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொ

ழுது அவர்; என் ஆத்மா மரணத்துக் கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி என்னோடே கூடவிழித்திருங்கள் என்று சொல்லி சற்ற அப்புறம் போய், முகங்குப்புறவிழுந்து; என் பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படி யல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். (**26**. 37. 39.)

கேவலம் வெறும் மனிதனாக வில்லாமல், ஈசுவரனுடைய பிள்ளையாயும், திரிகாலதரிசியாயும், வித்வானாயும் மிருந்திருந்தால் இவ்வேலையை செய்திருக்க மாட்டார். இயேசு தேவகுமாரர்; வருங்கால மறிந்தவர்; பாபங்களை மன்னிக்கக் கூடியவர்; இப் பொய்யெல்லாம் இயேசுவினாலேயோ அல்லது அவருடைய சீடர்களினாலேயோ வெளிப் படுத்தப் பட்டிருக்கவேண்டும் என்று இவைகளின்று புலனாகின்றன. கள்ளங் கபடமற்ற கல்விப் பயிற்சி பெறாத சாதாரண மனிதரென்பது நிச்சயமாகிறது. அவர் அறிஞருமல்லர், யோகியுமல்லர், சித்தனுமல்லர்.

85. அவர் இப்படி பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடே கூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அவரைக் காட்டிக் கொடுக்கிறவன்; நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். உடனே அவன் இயேசுவினிடத்தில் வந்து; ரபீவாழ்க என்று சொல்லி அவரை முத்தஞ் செய்தான்.........அப்பொழுது அவர்கள் கிட்டவந்து இயேசுவின்மேல் கைப்போட்டு அவரைப் பிடித்தார்கள். அப்பொழுது சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். கடைசியில் இரண்டு பொய்ச் சாட்சிகள் வந்து; தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும் மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான்.—இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது பிரதான ஆசாரியன் அவரை நோக்கி நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இது முதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு இவன் தேவதூஷணம் சொன்னான். இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன, இதோ இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள் மரணத்திற்குப் பாத்திரனா யிருக்கிறான் என்றார்கள். அப்பொழுது அவருடைய முகத்தில் துப்பி அவரைக் குட்டினார்கள். இவர் அவரைக் கன்னத்தில் அறைந்து; கிறிஸ்துவே உம்மை அடித்தவன்யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். அத்தருணத்தில் பேதரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது வேலைக்காரி ஒருத்தி

அவனிடத்தில் வந்து; நீயும் கலிலேயனாகிய இயேசுவின் கூட இருந்தாய் என்றாள். அதற்கு அவன் நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான். அவன் வாசல் மண்டபத்திற்குப் போனபொழுது வேறொருத்தி அவனைக் கண்டு இவனும் நசரேனாகிய இயேசுவோடே கூட இருந்தான் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான். அப்பொழுது அவன் அந்தமனுஷனை அறியேன் என்று சொல்லி சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். (26. 47-50. 56. 60-72. 74.)

பேராசையினால் குருவைக் காட்டிக் கொடுத்து, விற்றுப் பொய்சொல்லி, பொய்ச்சாட்சி கூறாமல் இருக்கச் செய்யவும் தனக்கு வேண்டி சீஷர்கள் பிராணனையும் துறக்க சித்தமா யிருப்பதற் கான நம்பிக்கையைத் தன் சீஷர்களிடம் உண்டுபண்ண வேண்டிய சக்தியும் பிரதாபமும் இல்லாத இயேசுவை என்னவென்று நினைக்கிறீர்கள்? அல்லது ஆச்சரிய சக்தியையும் கொண்டவரல்லர், * சொதோம் பட்டணத்து மனிதர்கள் எல்லோரும் ஈசுவரனுடைய இரண்டு தூதர்களைக் கொல்ல, அவர்கள் விருந்தினர்களா யிருந்த லோத்தினுடைய வீட்டை உடைக்க லானார்களென்று ஆதியாகமத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அவர்கள் (தூதர்கள்) அவர்களுடைய கண்பார்வையை இழக்கச் செய்தார்கள். இவ்வார்த்தையும் அசம்பவமா யிருந்த பொழுதிலும் தூதர்களிருவரிடமு மிருந்த சாமர்த்தியங்கூட இயேசுவிற்கு இல்லையே. இவ்விதமிருக்க இயேசுவுடைய அபாரசக்திகளைப் பற்றி கிறிஸ்துவர்கள் கூறுவதற்கு முடிவு முண்டோ?. இத்துர்த்திசையில் இறந்திருப்பதை விட அவர் ஆயுதங்கொண்டு தற்கொலைசெய்து கொண்டிருந்தாலும் அல்லது வேறு எவ்விதமாயிருந்தாலும் நலமாயிருந்திருக்கும். வித்தையில்லாம லிருக்க இவருக்குப் புத்தி எங்கிருந்துவரும்?

86. நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால் அவர் பன்னிரண்டு லேகியானுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? (26. 53.)

தன் தகப்பனுடைய மகிமையையும் தன்னுடைய தையும் பற்றி வீம்பு பேசிக் கொள்கிறார். இருந்தும் ஒன்றும் செய்யமுடியவில்லை. பிரதம ஆசாரியன் எழுந்திருந்து அவரை நோக்கி இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறதைக்குறித்து நீர் ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான். இயேசு அதற்குப் பேசாமலிருந்தார். அவர் அம்மாதிரி செய்தது முறையோ? உண்மையை உரைத்திருக்க வேண்டும். தன் பெருமையை இவரும் புகழ்ந்து கொண்டிருக்க கூடாது. பொய்க் குற்றத்தின் பேரில் அவரை மரணத்திற்கு ஆளாக்கினவர்கள் செய்ததும் சரியானதில்லை. இயேசுவினிடத்தில் அவர்கள் குற்றஞ் சுமத்திய தப்பும் கிடையாது. ஆனால் அவர்களும் காட்டுமிராண்டிகள், நியாயத்தை பற்றி யாது அறிவார்கள். இயேசு ஈசுவர குமாரன் என்ற பாவனை பண்ணிக் கொள்ளாமலும் அவர்களும் (யூதர்களும்) அவ்வளவு கொடுமையாய் நடத்தாமலு மிருந்திருந்தால் இருகக்ஷிக்கும் நன்று யிருந்திருக்கும்.

* ஆதியாகமம் 19. 11.

ஆனால் இதை அறிந்து உணர்ந்து நடக்கவேண்டிய வளவு வித்தை, தார்மிகத் தன்மை, நீதி நெறி இவைகள் எங்கிருந்து வரும்?

87. இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்! தேசாதிபதி அவரை நோக்கி; நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு இயேசு; நீர் சொல்லுகிறபடிதான் என்றார். பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ் சாட்டுகையில், அவர் மாறுத்தரம் ஒன்றுஞ் சொல்லவில்லை அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி; இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே. நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை; அதினால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான். பிலாத்து அவர்களை நோக்கி அப்படியானால், கிறிஸ்து எனப்பட்ட இயேசுவை நான் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். அவனைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று எல்லாரும் சொன்னார்கள். அப்பொழுது அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக் கொடுத்தான். அப்பொழுது தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவை தேசாதிபதியின் அரமனையிலே கொண்டுபோய் போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச் செய்து அவர் வஸ்திரங்களைக் கழற்றி சிவப்பான மேல் அங்கியை அவருக்கு உடுத்தி முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு; யூதருடைய ராஜாவே வாழ்கஎன்று அவரைப் பரியாசம் பண்ணி அவர்மேல் துப்பி, அந்தக்கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள். அவரைப் பரியாசம் பண்ணின பின்பு அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரை சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள். கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து குடிக்க மனதில்லாதிருந்தார். அவரைச்சிலுவையில் அறைந்தார்கள். அன்றியும் அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும் பொருட்டு இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாகவைத்தார்கள். அப்பொழுது அவருடைய வலதுபக்கத்தில் ஒருவனும் அவருடைய இடதுபக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவையில் அறையப் பட்டார்கள். அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே; உன்னை நீயே இரட்சித்துக்கொள். நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்—தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லி தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்.—அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள். ஆறுமணிநேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம் மணிநேரத்தில் இயேசு" "எலி! எலி! லாமா சபக்தானி" என்று மிகுந்த

சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! என் என்னை கைவிட்டீர் என்று அர்த்தமாம். அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். உடனே அவர்களில் ஒருவன் ஓடி கடற்காளானை எடுத்து காடியில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார். (**27**. 11-14, 22, 26-31, 33-35, 37-48, 50.)

எப்பொழுதும் இயேசுவை அத்துஷ்டர்கள் கொடுமையுடனேயே நடத்தினார்கள். ஆனால் இயேசுவிடத்திலும் தோஷமுண்டு. ஏனெனில் ஈசுவரனுக்குக் குமாரன் யாருங்கிடையாது. அவர் யாருடைய தகப்பனுமாகார். இவ்விதமிருந்தால் அவர் மாமனார், மச்சினன் முதலானவராயுமிருக்கவேண்டும். தேசாதிபதி நீ யூதர்களுடைய ராஜாவா என்று கேட்ட கேழ்விகளுக்கு இவருக்கு உண்மை என்று விளங்கினதை உரைத்திருக்க வேண்டும். இவரால் செய்யப்பட்ட அற்புதங்களெல்லாம் உண்மையானால் சிலுவையிலிருந்து கீழே இறங்கிவந்து எல்லோரையும் திருப்பியிருப்பார். அவர் ஈசுவரனுடைய குமாரனாயிருந்தால் அவரே காப்பாற்றியிருப்பார். திரிகாலமும் மறிந்தவராயிருந்தால் கசப்புக் கலந்த காடியை ருசிபார்க்காமலே குடிக்க மறுத்திருப்பார். அதனுடைய குணங்கள் முன்னமேயே அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும். அவரிடம் பெருஞ் சக்தி எதாவதிருந்திருந்தால் ஆவியை விடுமுன்னே அவ்வளவு சத்தமிட்டிருக்க மாட்டார். மனிதன் எவ்வளவு தந்திரமுள்ளவனாயிருந்தபொழுதிலும் கடைசியில் உண்மை வெளியாகிவிடுமென்பதை இது புகட்டுகிறது. அக்காலத்துக் காட்டுமிருண்டிகளில் இவர் கொஞ்சம் மேலானராவரென்றும் தெரிகிறது. அவரிடத்தில் அற்புத சக்தி ஒன்றும் கிடையாது. அவர் ஈசுவரனுடைய குமாரனுமில்லை; வித்வானுமில்லை. இருந்தால் ஏன் இப்படித் துக்கங்களை அனுபவிக்க வேண்டும்.

88. அப்பொழுது பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கிவந்து வாசலிலிருந்த கல்லைப் புரட்டித்தள்ளி அதன்மேல் உட்கார்ந்தான். அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்! கர்த்தரை வைத்த இடத்தை வந்துபாருங்கள். அவர்கள் அவருடைய சிஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசுதாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து அவர் பாதங்களைத்தழுவி அவரைப் பணிந்து கொண்டார்கள், அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி; பயப்படாதிருங்கள்; நீங்கள் போய் என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார். பதினொரு சிஷர்களும் கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக்கண்டு பணிந்துகொண்டார்கள். சிலரோ சந்தேகப்பட்டார்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (**28**. 2, 6, 9, 10, 16-18, 20.)

சிருஷ்டிக் கிரமத்திற்கும் வித்தைக்கும் விருத்தமாயிருக்கிற இவ்வார்த்தைகள்கூட நம்புவதற்கு முடியாதது. ஈசுவரனிடம் தூதர்களிருப்பதாகவும்

அவர்களை இங்குமங்கும் அனுப்பினதாகவும், மேலேயிருந்து அனுப்பின தாகவும் நம்புவதால் கிறிஸ்துவர்கள் கடவுளைத் தாசில்தாராகவும்க் கலக்டராக வும் செய்யவில்லையா? அதே சரீரத்துடன் சுவர்க்கத்திற்குப போனுரா? ஸ்திரீகள் பாதங்களைத்தழுவி அவரைப்பணிந்து கொண்டார்களெனச் சொல்ல ப்பட்டிருக்கிறது. அப்பொழுது அதே சரீரம் இருந்ததா? மூன்று நாளைக்கு அச்சரீரம் புதைக்கப் பட்டிருந்தபடியினுல் அது கெட்டுப் போகவில்லையா என்று அறியவிரும்புகிறோம். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று அவர் வாயினுலேயே சொல்லுவது வீண்பெருமை வார்த்தையேயாகும். சிஷ்யர்களைச் சந்தித்து, பேசினுரென்பது அசம்பவமேயாம். ஏனெனில் இதெல்லம் உண்மையானுல் தற்காலத்தில் ஏன் யாரும் இறந்ததிலிருந்து உயிர் பெற்று எழுந்து அதே சரீரத்துடன் சுவர்க்கத் திற்குப் போகிறதில்லை.

இதுவரை மத்தேயு எழுதின சுவிஷேத்தைப் பற்றி எழுதினேம். இனி மாற்கு எழுதினதைக் கவனிப்போம்.

மாற்கு எழுதின சுவிசேஷம்.

89. இவன் தச்சன் அல்லவா? (6. 3.)

ஜோசப் உண்மையாக தச்சனே. இயேசுவும் (அவருடைய பிள்ளை யான படியினுல்) தச்சனே. கொஞ்ச வருடங்கள் அவ்வேலையிலேயே இருந்துவிட்டு பிறகு தீர்க்கதரிசியாக வேண்டுமென எண்ணங் கொண்டார். ஈசுவரகுமாரன் என்று வேஷங் காட்டிக்கொள்ள, (அவரைச் சுற்றியிருந்த) காட்டுச் சனங்க ளும் அப்படியே நம்பினுர்கள். சனங்களைப் பிரித்து சண்டை சச்சரவுகளை உண்டு பண்ணினது அதிசயமில்லை.

லூக்கா எழுதின சுவிசேஷம்

90. அதற்கு இயேசு; நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன் தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவரு மில்லையே. (18. 9.)

'தேவன்' ஒருவரைத் தவிர வேறுயாரும் நல்லவனில்லையென்று சொல்லு கையில் கிறிஸ்துவர்களுக்குப் பரிசுத்த ஆவி, பிதா, பிள்ளை என இம்மூன்றும் எங்கிருந்து வந்தன.

91. அவன் (பைலாத்து) ஏரோது வினிடத்திற்கு அவரை அனுப்பினுன். ஏரோது இயேசுவைக் குறித்து அனேகக் காரியங்களைக் கேழ்விப்பட்டிருந்ததி னுலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி யிருந்ததினுலும் அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண் டிருந்தான். அநேக காரியங்களைக் குறித்து அவரிடத்தில் வினவினுன். அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. (23. 7-9.)

மத்தேயுவினுல் எழுதப் பட்டதில் இவ்விஷயம் காணப்படவில்லை. ஆகை யினுல் இச்சாட்சிகளெல்லாம் நம்பமுடியாதவர்கள். ஏனெனில் சாட்சிகளில் ஒற்றுமை வேண்டும். இயேசுவிற்குச் சாமர்த்திய மிருந்து அற்புதங்களைக் காட்டச் சக்தியிருந்திருந்தால் ஏரோது வினவினவுடன் மறுமொழியாக அற்

புதச் செயலைக்காட்டி யிருக்கவேண்டும். இயேசுவிற்கு வித்தையும், அற்புதச் செயலை செய்யும் குணமும் கிடையாதென்றும், இதிலிருந்து தெளிவாகிறது.

யோவான் எழுதின சுவிசேஷம்.

92. ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்தவார்த்தை தேவனிடத்தி லிருந்தது. அந்த வார்த்தை தேவனுயிருந்தது. அவர் ஆதியிலே தேவனேடி ருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டான தொன்றும் அவ ராலே யல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. (1. 1-4.)

சொல்லுகிறவ னில்லாமல் ஆதியிலே வார்த்தை இருந்திருக்க முடியாது. ஆகையினுல் அந்தவார்த்தை ஈசுவரனிடத்தி லிருந்ததென்பது வீண்வார்த் தையே யாகும். வார்த்தை ஒருபொழுதும் ஈசுவர ஞகமுடியாது. தேவனுடன் ஆதியில் வார்த்தையும் இருந்தபடியினுல் முதலில் தேவனிருந்தாரு அல்லது வார்த்தை யிருந்ததா என்று சொல்லமுடியாது. வார்த்தையைக் கொண்டு ஒரு பொழுதும் சிருஷ்டியை, அதற்கு வேண்டிய காரணமில்லாமல் செய்யமுடி யாது. வார்த்தை யில்லாமலே, பேசாமல் இருந்துகொண்டு படைத்தவர் சிருஷ்டியைச் செய்யக்கூடும். ஜீவன் எதிலிருந்தது என்னவாக விருந்தது? (அவருக்குள் ஜீவனிருந்தது)இவ்வார்த்தையினுல் ஜீவன் அநாதியாகும். அநாதி யாளுல் மனிதருடைய நாசித்துவாரங்களில் கர்த்தாவான தேவன் மூச்சைப் புகவிட்டார் என்று ஆதியாகமத்தில் சொல்லியிருப்பது தப்பாகும். ஜீவன் மனிதனுக்கு மாத்திரமா ஒளியாகிறது? மிருகங்கள் முதலான பிராணி களுக் கில்லையா?

93. போஜனம் முடிந்தபிறகு சீமோனின் குமாரனுகிய யூதாஸ்காரி யோத்து அவரைக் காட்டிக் கொடுக்கும்படி, பிசாசானவன் அவன் இருதயத் தைத் தூண்டினுன். (13. 2.)

இது உண்மையாகாது. ஏனெனில் பிசாசானவன் எல்லோரையும் தூண்டு கிருன் என்றுல் பிசாசைத் தூண்டுகிறவன் யாரென்று கிறிஸ்துவர்களை வினவ வேண்டும். பிசாசு தன்னைத் தானே தூண்டிக்கொள்ளுகிறதெனின் மனிதனும் தன்னைத்தானே தூண்டிக்கொள்ளக்கூடும். அப்படி யிருக்கப் பிசாசுக்கு என்ன வேலை? பிசாசைத் தூண்டுகிறவன் பரமேச்வரனே யாளுல் கிறிஸ்துவ ஈசுவரன் பெரும் பிசாசுகும். தன் மூலமாகச் சகல மனிதர்களை ஏமாற்றின குற்றவாளி யாகவேண்டும். இக்காரியத்தைப் பரமேச்வரன் கூடச் செய்வாரா? உண்மை என்ன வென்றுல் இப்புத்தகத்தை (பைபிள்) எழுதி, இயேசுவை ஈசுவரகுமா ரன் என்று அழைத்தவர்கள் பிசாசு என்றுல் நமக்கு வியப்பு உண்டாகக்கூ டாது. இந்நூல் ஈசுவரவாக்கு மாகாது; அதிலிருக்கிற ஈசுவரனும் உண்மை ஈச்வரனுகாது; இயேசவும் ஈசுவரகுமாரனுகமாட்டார்.

94. உங்களுடைய இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசு வாசமா யிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமா யிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி யில்லாதிருந்தால் நான் உங்க ளுச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்

போகிறேன். நான் போய் உங்களுக்காக ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள் என்றார். நானேவழியும் சத்தியமும் ஜீவனு மாயிருக்கிறேன். என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திலே வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். (14. 1-4. 6. 7.)

இயேசுவினுடைய வார்த்தையைக் கவனியுங்கள். போப்பிலேகளைவிட இது குறைவானதா? இப்பிரமையை அவர் உண்டுபண்ணும விருந்தால் எவர்தான் அவருடைய வலையில் அகப்பட்டு கொண்டிருப்பார்கள்? தன் பிதாவினுடைய ஏகபோகப்பத்திரம் இயேசுவிற்கே உள்ளதா? அவருடைய மேற்பார்வையின் கீழிருந்தால், பராதீனமாய் அதினாலே ஈசுவரனா யிருக்கமுடியாது. என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திலே வரான் என்று சொல்லுவது எப்பொழுதும் உண்மையாகாது. ஏனெனில் ஈசுவரனுக்குப் பரிந்து பேசுவோன் யாரும்வேண்டியதில்லை. இயேசுவிற்கு முந்தியாரும் ஈசுவரனை அடையவில்லையா? தன் தகப்பனுடைய வாசஸ்தானங்கள், தன் சிஷர்களுக்கு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவது, தானேவே தான் வழியும், சத்தியமும், ஜீவனும் என்று சொல்லிக்கொள்ளுவது; இப்புகழ்ச்சிகளெல்லாம் வீண்பெருமையே தவிர வேறே ஒன்றுமில்லை. ஆகையினால் இதெல்லாம் உண்மையாகா.

95. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான், (14. 12.)

கிறிஸ்துவர்கள் இயேசுவை நம்பி விசுவாசம் வைத்திருந்தால் ஏன் அவர்கள் இறந்தவர்களைப் பிழைப்பு மூட்டுதல் முதலிய அற்புதங்களைச் செய்யக்கூடாது? இயேசுவி னிடத்திலுள்ள விசுவாசத்துடன் கூட அற்புதங்கள் ஒன்றும் செய்ய முடியாதென்பது நிச்சயமானது. ஏனெனில் என்னை விசுவாசிக்கிறவன்......................கிரியைகளையும் செய்வான்" என்கிறார். ஒரு தனி கிறிஸ்துவன் கூட அற்புதம் ஒன்றும் செய்யமுடியாமலிருக்க இயேசுவுடைய அற்புதச் செயல்களில் நம்புகிறவன் சித்தசக்தி இழந்தவனே யாவான்.

96. ஒன்றான மெய்த்தேவன். (17. 3.)

இரண்டற்ற ஒரே ஈசுவரனிருக்கக் கிறிஸ்துவர்கள் மூன்றுஎன்பது எப்பொழுதும் புரட்டேயாகும்.

(பிதா - குமாரன் - பரிசுத்த ஆவி.)

திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்.

யோவான் சொல்லும் அதிசயங்களைக் கேளுங்கள்.

97. தங்கள் சிரசுகளில் பொன்முடி சூட்டிக் கொண்டிருந்தது............ தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்து கொண்டிருந்தன. அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப்

பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது.........அந்த சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன. அவைகள் முன்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன. (4. 4-6.)

கிறிஸ்தவ சுவர்க்கம் நகரமொன்றுக்குச் சரியாயும் அவருடைய ஈசுவரனும் தீபத்தைப் போலவும் இல்லையா? பொன்முடி முதலிய ஆபரணங்கள் சூட்டிக் கொள்ளுவதும் முன் 'புறத்திலும் பின் புறத்திலும்' கண்களால் நிறைந்த ஜீவன்களிருப்பதும் அசம்பாவமான காரியமே. இவைகள் நாலுசிங்கங்களெனப்பட்டிருக்கிறது. எவனால் இதை நம்பமுடியும்?

98. உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு ஏழுமுத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய வலது கரத்திலே கண்டேன். புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார்............? வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும் அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது. ஒருவனும் அந்தப் புஸ்தகத்தை திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன். (5. 1-4.)

என்ன நேர்த்தியான கிறிஸ்துவ சுவர்க்கம்!! சிங்காசனங்களும், ஜனத்திரளும், அநேகம் முத்திரைகளால் முத்திரிக்கப் பட்டிருந்தவும், வானத்திலாவது பூமியிலாவது அதைத்திறக்கக் கூடியவர்களாவது பார்க்கக்கூடியவர்களாவது இல்லாத நூலும் அங்கு இருக்கின்றன. அப் புஸ்தகத்தைத் திறந்து படிக்கவும் பார்க்கவும் யோக்யதையுள்ள ஒருவனையும் காணாதது பற்றி அழுத யோவானும் அங்கு இருக்கிறார். "யாருக்குக் கலியாணமோ அவனுடைய புகழே" என்பது போல் இயேசுவைப் பெரியவராக்குவதற்கே இவையெல்லாம் கூறப்பட்டுள்ளன. இவையெல்லாம் கட்டுக்கதைகளைப் போல் இருக்கவில்லையா?

99. அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன் களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியில் நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். (5. 6.)

திவ்யவாசகனாகிய யோவானுடைய கனவின் கற்பனாசக்தியைக் கவனியுங்கள். அச்சுவர்க்கத்தில் நான்கு ஜீவன்களும் கிறிஸ்துவும், கிறிஸ்துவர்களும் மாத்திரமேயிருக்கிறார்கள். வேறு யாருமில்லை. பூமியிலிருக்கும் பொழுது இயேசுவிற்கு இரண்டு கண்கள் மாத்திரம் இருந்து கொம்பின் பெயர்கூட இல்லாமலிருந்து சுவர்க்கத்தில் ஏழு கண்களும் ஏழு கொம்புகளும் அவருக்கு உண்டானது விந்தையே. அவர்கள் ஈசுவரனுடைய ஏழு ஆவிகளாம். கிறிஸ்துவர்கள் இவ்வித வார்த்தைகளைச் சுருதியாகக் கருதுவதே மிகவும் வருந்தத்தக்கது. கொஞ்சம் யோசனை செய்திருக்க வேண்டும்.

100. அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்திநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும்,

பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கல சங்களையும் பிடித்துக்கொண்டு ஆட்டுக்குட்டி யானவருக்கு முன்பாக வணக்க மாய் விழுந்தார்கள். (5. 8.)

இயேசு சுவர்க்கத்திலில்லாம லிருந்தபொழுது இந்நான்கு ஜீவன்களும், இருபத்திநான்கு மூப்பர்களும் எவருக்குத் தூபதீபநைவேத்திய ஆரத்தியைச் செய்துக் கொண்டிருந்தார்களென்றே நாம் யோசிக்கிறோம். இவர்களுடைய சுவர்க்கம் மூர்த்தி பூஜைக்கு இருப்பிடமா யிருக்கப் பிராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்கள் மூர்த்தி பூஜையைக் கண்டனஞ் செய்கிறார்கள்.

101. ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக் கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக் கேட்டேன்.—நான் பார்த்தபோது இதோ. ஒரு வெள்ளைக் குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப் பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.

அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக் கேட்டேன்.—அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ள வர்கள் ஒருவரை யொருவர் கொலைசெய்யத் தக்கதாகச் சமாதானத்தைப் பூமி யிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

அவர் மூன்றும் முத்திரையை உடைத்தபோது.........ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன்; அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது........... இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கன்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர். (6. 1-5, 7-8.)

புராணங்களின் கதைகளைவிட இது இன்னும் அசங்கதமானதாயில்லையா? புஸ்தகங்களின் முத்திரைகளுள் குதிரையும், குதிரை சவாரிக்காரர்களும் எவ்வித மிருக்கமுடியும்? யோவன் கனவினுடைய பேத்தல்களை உண்மையென கைக்கொள்ளுகிறவர்கள் அறிவில்லாமையின் உருவமே யாவார்கள்.

102. அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எது வரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.—அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தலைகளைப் போலக் கொலைச் செய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்சகாலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப் பட்டது. (6. 10, 11.)

ஊரில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கும் நியாயாதிபதிகளிடம் கிறிஸ்துவர்களை ஒப்புவிக்க, அவர்கள் நியாயத் தீர்ப்புச் செய்வதற்காக உரக்கவே சத்த மிடுவார்கள். ஆனால் வேதமார்க்கத்தைத் தழுவுகிறவர்கள் நியாயத் தீர்ப்பிற்

காகக் காத்திருக்கவேண்டாம். ஈசுவரனுடைய காரியாலயம் மூடப்பட்டு இப்பொழுது நியாயத்தீர்ப்பு செய்யப்படாமலாவிருக்கிறதென்று அவர்களை வினவவேண்டும். நியாயாதிபதிகள் வேலையில்லாமலா உட்கார்ந்திருக்கிருர்கள்? கிறிஸ்துவ ஈசுவரனை வெகு சுலபமாய் ஏமாற்றி விடலாம். ஏனெனில் இவர்களுடைய வேண்டுகோளின்பேரிலேயே அவர்களுடைய சத்துருக்களின்பேரில் பழிவாங்கப்புறப்படுகிருர். அது பகைசாதிக்கிற குணமாயிருக்கிறது. ஏனெனில் இறந்துங்கூட பகைவரிடத்தில் பழிவாங்குகிருர்கள். அவர்களுக்குக் கொஞ்சங்கூட பொறுமையில்லையென்று தோன்றுகிறது. பொறுமையில்லாத விடத்தில் துக்கத்திற்கும் கஷ்டத்திற்கும் அளவு கிடையாது.

103. அத்திமரமானது பெருங்காற்றினுல் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.—வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப் போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. (6. 13, 14.)

திவ்யவாசகனுகிய யோவானுக்கு வித்தையில்லாதபடியினுலேயே இவ்வித அர்த்தமற்றவைகளைப் பேசினுன். நட்சத்திரங்கள் கிரகங்களாயும் கோளங்களாயுமிருக்கப் பூமியில் எப்படி விழும்? கிரகமண்டலத்தைவிட்டுச் சூரியன் அங்கும் இங்கும் மாறிப்போகுமா? ஆகாசம் பாயைப் போலிருக்கிறதென்று (சுருட்டுவதற்கு) நினைத்தானு? ஆகாசம் உருவமில்லாதபடியினுல் அதைச் சுருட்டவும் முடியாது. திரட்டவும் முடியாது. யோவான் முதலானவர்கள் காட்டுமிருண்டிகளா யிருந்தார்களென்றும் அவர்களுக்கொன்றும் தெரியாதென்றும் நன்கு விளங்குகிறது.

104. முத்திரை போட்டவர்களின் தொகையைச்சொல்லக் கேட்டேன்; இஸ்ரவேல்புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சித்து நாற்பத்து நாலாயிரம்பேர்.— யூதாகோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். (7. 4, 5.)

பைபிளில் எழுதப்பட்டிருக்கும் ஈசுவரன் இஸ்ரவேல் குலத்தின் தெய்வமா அல்லது உலக தெய்வமா? அவர்களுடைய தெய்வமாக மட்டுமில்லாமவிருந்தால் அக்காட்டாளர்களுக்கு மாத்திரம் பரிந்து கொள்ளமாட்டார். அவர்களுக்கே அவர் உதவி எப்பொழுதும் புரிந்தார். பிறரைப் பெயரால் கூடச் சொல்லவில்லை. ஆகையினுல் அவர் ஈசுவரனுகமாட்டார். இஸ்ரவேல் குலச்சனங்களுக்கு மாத்திரம் முத்திரைவைப்பது அவருடைய கட்டுக்குட்பட்ட ஞானத்தைக் காட்டலாம் அல்லது யோவானுடைய தப்பெண்ணமாயு மிருக்கலாம்.

105. ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து இரவும்பகலும் அவருடைய ஆலயத்திலேயேஅவரைச் சேவிக்கிருர்கள். (7.15.)

ஒழுங்கீனமான விக்கிரக ஆராதனை யல்லவா இது? பைபிளினுடைய ஈசுவரன் மனிதனைப்போல் தேகத்தையுடையவராயும், ஒரேவிடத்தைச் சேர்ந்தவராயு மில்லையா? இரவு முழுவதும் கிறிஸ்துவர்களுடைய ஈசுவரன்

தூங்குவதுங்கூட கிடையாது. தூங்கினால் இரவில் என் பூஜை செய்கிறார்கள். தூங்கினாலும் அதிகத்தொந்திரவுகளின் நடுவே தூங்கவேண்டும். இரவும் பகலும் வேலை செய்தாலும் மிகவும் சிரமப்பட்டு பலவித ரோகங்களிலிருந்து வருந்துவேண்டுமே.

106. வேறொரு தூதனும் வந்து தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்து பலிபீடத்தின் படியிலே நின்றான். மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று. பின்பு; அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின. (8. 3; 4; 5.)

(கிறிஸ்துவர்களுடைய சுவர்க்கத்தில்) கூட பலிபீடம், தூபதீப நைவேத்தியமும் எக்காளம் ஊதுவதின் சத்தமும் இருக்கின்றன. பைராகிகளுடைய ஆலயத்தைவிட கிறிஸ்துவர்களுடைய சுவர்க்கம் குறைவானதா என்ன? பகட்டும் ஆடம்பரமுமே அதிகமாக விருக்கிறது.

107. மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று. (8 7.)

கிறிஸ்துவ, முக்கால மறிவோனே! நல்லது! இந்த ஈசுவரன், ஈசுவரனுடைய தூதன், தாரைகளின் சப்தம், பிரளம் இல்லீலைகளெல்லாம் சிறுபிள்ளை விளையாட்டைப் போலிருக்கின்றன.

108. ஐந்தாம் தூதன் எக்காலம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது:—அவன் பாதாளக்குழியைத்திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று; அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப் பட்டது:—அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது.—பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை மாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.—ஐந்துமாதமளவும் அவர்களை வேதனைப் படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. (9. 1-5.)

தாரைகளின் சப்தத்தைக் கேட்டவுடன் தூதர்களின் மேலும் சுவர்க்கத்திலேயுமா விழுந்திருக்கும்? இப்பூமியில் ஏன் விழவில்லை. பிரளயகாலத்திற்காகவா ஈசுவரன் பாதாளக் குழிகளை வைத்து வெட்டுக்கிளிகளை வளர்த்து வந்தார்? மனிதரைச் சேதப்படுத்துவதற்கும், படுத்தாதற்கும், முத்திரையைத் தரித்திருக்கிறானோ வென்று வெட்டுக்கிளிகள் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். அவிவேகியான பேதைகளை ஏமாற்றி பயமுறுத்திக் கிறிஸ்துவ மதத்தைச் சேரச்செய்வதற்காகவே இதெல்லாம் ஏற்பட்டது. அதாவது கிறிஸ்துவமதத்தைக் கைப்பற்றாவிட்டால் வெட்டுக்கிளிகளுடைய சித்திர

வகைக்கு ஆளாவார்களென்றுப் பயப்படுகிருர்கள். வித்தை குன்றின நாட்டிலேயே இவ்வார்த்தைகள் பெருகி நிகழும். ஆரியவர்த்தத்தில் நடவாது. பிரளவார்த்தை ஆகக்கூடியதா?

109. குதிரைச் சேனைகளாகிய ராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது. (9. 16.)

இவ்வளவு குதிரைச் சேனைகள் சுவர்க்கத்தில் எங்கே மேய்ந்து நிற்கின்றன உலாவுகின்றன? கழிவு எவ்வளவு சேரும்? அதிலிருந்து துர்நாற்றம் எவ்வளவு வீசும்? இச்சுவர்க்கம் இவ் ஈசுவரன், இம் மதம், எல்லாவற்றிற்கும் ஆரியர்கள் எள்ளும் தண்ணீரும் விட்டுவிட்டார்கள். கிறிஸ்துவர்களும் சர்வ சக்திமானுடைய கிருபையினுல் இத்தடைகளி லிருந்து மீற நலமாயிருக்கும்

110. பின்புபலமுள்ள வேருெரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது. அவனுடைய சிரசின்மேல் வான வில்லிருந்தது, அவனுடையமுகம் சூரியனைப் போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப் போலவும் இருந்தது.—திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலது பாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடது பாதத்தைப் பூமியின்மேலும் வைத்தான். (10 1-3.)

இத்தூதர்களுடைய கதை புராணங்கள், கோமாளிகள் முதலியவர்களுடையதை கூட மங்கச் செய்யவில்லையா?

111. பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது, அப்பொழுது தேவதூதன் நின்று, என்னை நோக்கி: நீ எழு தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார்.—(11. 1.)

பூமியில் மாத்திரமே யல்லாமல், கிறிஸ்துவர்களுடைய சுவர்க்கத்திலும் ஆலயங்களைக்கட்டி யிருக்கிருர்கள். அளந்தும் பார்க்கிருர்கள், அவர்களுடைய சுவர்க்கத்தைக் போலவே உபதேசமும் மதியீனமா யிருக்கிறது. கர்த்தருடைய போஜனத்தை எடுத்துக் கொள்ளுவோம். அதில் அப்பத்தையும், கள்ளையும், கிறிஸ்துவுடைய மாம்சம் என்றும் இரத்தமென்றும் முறையே எண்ணிக் கிறிஸ்துவர்கள் சாப்பிட்டுக் குடிக்கிருர்கள். மாதாக் கோவிலில் சிலுவையின் விக்கிரகத்தை வைப்பது விக்கிரக ஆராதனையைவிடக் குறைந்ததல்ல.

112. அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது. (11. 19.)

சுவர்க்கத்திலிருக்கிற ஆலயம் சாதாரணமாய் அடைப்பட்டிருக்கிறது போலிருக்கிறது. சிலசமயங்களில் திறக்கப்படுகிறது. பரமேச்வரனுக்கு ஆலயங் கூட உண்டோ? வேதானுகூலமான சர்வவியாபக ஈசுவரனுக்கு ஆலயங் கிடையாது. உருவத்துடன் கூடின கிறிஸ்துவர்களுடைய பரமேச்வரனுக்கு சுவர்க்கத்திலும், பூமியிலும், ஆலயமுண்டு. பூ! பூ! என்று தாரைகளின் முழக்கம இங்கிருப்பது போலவே சுவர்க்கத்திலுமுண்டு. உடன்படிக்கையின்

பெட்டியைக் கிறிஸ்துவர்கள் சமயாசமயங்களில்தான் பார்க்கிறார்கள். அதை அங்கு வைத்திருப்பதின் அபிப்பிராயத்தை எவனும் அறியான். மனிதர்களுக்கு ஆசை காட்டுவதற்காகவே இதெல்லாம் செய்யப்படுகிறது மேலும்.

113. அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.—அவள் கர்ப்பவதியாயிருந்து; பிரசவவேதனை யடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.

அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழுமுடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது.—அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று: (**12.** 1-4.)

(திவ்யவாசகனென யோவான் நூற்ற) நூல்கள் எவ்வளவு நீளமானது. பாவம்! அவள் கிறிஸ்துவசுவர்க்கத்தில்கூட வருத்தப்பட்டு அலறினாள். இருந்தும் அவளுடைய வருத்தத்தைத்தீர்க்கிறவர்கள் யாருமில்லை. விசாரிக்கிறவர்களுமில்லை. வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து பூமியில் விழத்தள்ளின அந்தவலு சர்ப்பத்தின் வால் எவ்வளவு பெரியதா யிருக்கவேண்டும். பெருங்கோளங்களான நட்சத்திரங்களுடன் நம் பூமியைப்பார்க்கும் பொழுது இது மிகவும்சிறியது. அவைகளிலொன்றை நம்முடைய பூமி தாங்காது. வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கு இந்நூலை எழுதினவருடைய இல்லத்தில் விழுந்ததாகவும், வானத்தின் மூன்றிலொரு பங்கு நட்சத்திரங்களை இழுத்துக் கீழேதள்ளக்கூடியவளவு பெரியதான வாலையுடைய வலுசர்ப்ப (பறவைநாகம்) மும் இவருடைய இல்லத்திலேயே இருந்ததாகவும் நாம் திடமாகக்கொள்ளலாம்.

114. வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.—(**12.** 7.)

கிறிஸ்துவர்களின் சுவர்க்கத்திற்குப் போகிறவர்களெல்லாம் அங்கு நடக்கிற யுத்தத்தினால் பெருந்துக்கத்தை அனுபவிக்கவேண்டும். அச்சுவர்க்கத்தின் ஆசையைவிட்டு கையைக் கட்டிக்கொண்டு இங்கேயிருப்பதே நலமானது. சமாதான பங்கமுண்டாகி யுத்தம் நடக்கிற விடங்களே கிறிஸ்துவர்களுக்கு ஏற்றவிடம் போலும்.

115. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. (12, 9.)

சாத்தான் சுவர்க்கத்திலிருந்தகாலத்தில் ஜனங்களை ஏமாற்றவில்லையா? ஏன் அதை ஆயுள்பரியந்தம் அடைக்காவது அல்லது அதனுடைய பிராணனையாவது எடுக்கவில்லை? ஏன் அதைப் பூமியில் தள்ளிவிட்டார்? சாத்தான்

உலகமுழுவதும் தூண்டினல் அதைத் தூண்டுகிறவன் யார்? தன்னைத்தானே தூண்டிக்கொண்டால், மனிதனும் அதனுடைய ஏவுதலன்னியில் தன்னைத்தானே தூண்டிக் கொள்ளக் கூடும். பரமேச்வரன் அதைத் தூண்டினல் அவர் ஈச்வரனாக மாட்டார். கிறிஸ்துவர்களுடைய ஈசுவரனும் சாத்தானுக்குப் பயப்படுவதுபோல் புலப்படுகிறது. சாத்தானைவிட ஈசுவரன் சக்தியுள்ளவரானல் ஏன் அது தப்புச் செய்யும்பொழுதே தண்டித்திருக்கக் கூடாது? உலகில் சாத்தானுக்கு எவ்வளவு அதிகாரமிருக்கிறதோ அதில் நூறில் ஒரு பங்கு கூட கிறிஸ்துவர்களுடைய ஈசுவரனுக்கு இல்லையா? அவனுடைய போக்கிரித்தனமான காரியங்களிலிருந்து சாத்தானைத்தடுக்க அந்த ஈச்வரனல் முடியவில்லை போலும்: கள்ளன் துஷ்டன் முதலானவர்களுக்கு உடனே சிட்சையை அளிக்கிற தற்கால இராச்சியாதிகாரிகளைப் போன்றவரும் அல்லர்: வைதிகமதத்தை விட்டு பொய மதமான, கிறிஸ்துவ மதத்தைக் கைப்பற்றும் படியான புத்தியில்லாதவர்கள் இருக்கிறார்கள்?

116. பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும். (**12**. 12.)

கிறிஸ்துவ ஈசுவரன் அவ்விடத்தினுடைய (சுவர்க்கம்) சுவாமியும் ஈச்வரனு மாத்திரமா? பூமி, மனிதன், முதலான ஜீவன்களுடைய ரக்ஷகனும் சுவாமியுமல்லவா? பூமிக்கும் இராஜாவாயிருந்தால் சாத்தானை ஏன் அவர் கொல்ல முடியவில்லை? சாத்தான்போய் ஒவ்வொருவனையுந் தூண்டுகிறன். ஈசுவரனே நேராகப் பார்த்துக்கொண்டிருக்கிறார். உண்மை யாதெனில் ஒரு நல்ல கடவுளும், ஒறு கெட்ட கடவுளும் (வலுவுடன் கூடியதாய்) இருப்பதாகத் தோன்றுகிறது.

117. நாற்பத்திரண்டுமாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.—அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும் அவருடைய வாசஸ்தலத்தையும் பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்து, மேலும் பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதுமல்லாமல் ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரன் மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. (**13**. 5, 6, 7.)

பூமியிலிருக்கிற ஜனங்களைத் தூண்டவும் பரிசுத்த மனிதர்களுடன் யுத்தஞ்செய்யவும் சாத்தான், மிருகம் முதலானவைகளை அனுப்புகிற அவர்களைக் கூட்டத்தலைவரைப் போலாகவில்லையா? இக் காரியங்கள் ஈசுவரன் அல்லது அவருடைய பக்தர்களால் செய்ய முடியாது.

118. பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும் அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக்கண்டேன். (**14**. 1.)

வாசகர்கள் கவனிக்கவேண்டியது. கடவுள் சீயோன் மலைமேல் வசிக்கிறார். அப்படியே அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்துவும் தகப்பனு

டன் வசிக்கிறார். நாற்பத்து நாலாயிரம் ஜனங்கள் எவ்விதம் கணக்கிடப்பட்டார்கள். 44,000 ஜனங்கள் மாத்திரமா சுவர்க்கத்திலிருக்கிறார்கள். அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்ட கோடிக் கணக்கானவர்களைப் பற்றி என்னவாச்சுது? அவர்கள் எல்லோரும் நரகத்தையடைந்தார்களா? சீயோன் மலைக்குக் கிறிஸ்துவர்கள் போய் இயேசுவின் பிதாவும் அவருடைய சைனியங்களும் அங்கு இருக்கிறார்களாவென்று காணவேண்டும். அவர்கள் அங்கே யிருந்தால் பைபிலில் எழுதியிருப்பதெல்லாம் உண்மையே. இல்லையென்றால் அதெல்லாம் பொய்யே. அவர்கள் வேறு எங்கேயிருந்தாவது வந்தால் எங்கிருந்து வந்தார்கள்? சுவர்க்கத்திலிருந்தென்றால் மேலுங் கீழும் பறக்கக் கூடிய பறவைகளா அவர்கள். மேலும் கீழும் போய் வருகிறவர் என்னும் ஊர் சுற்றுகிற மாஜிஸ்டிரேட்டைப் போலாகிறார். அவர் அப்பொழுது ஒன்று, இரண்டு அல்லது மூன்றாய்கூட இருக்கமுடியாது. அவருடைய எண்ணிக்கைக் கணக்கில்லாததாயிருத்தல் வேண்டும். நம்முடைய பூமியைப்போன்ற கோளத்திற்கு ஒருவர் வேண்டும். ஒருவர், இருவர் கணக்கற்ற பிரம்மாண்டங்களிலுள்ளவர்களுக்கு நியாயந்தீர்க்க முடியாது. ஒரே இடத்தில் ஒரே சமயத்திலிருக்கவு முடியாது.

119. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழித்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்'' என்று பரலோகத்திலிருந்து உண்டான சத்தம் சொல்லிற்று (14. 13.)

கவனிக்கவும். மனிதர்களுடைய கிரியைகள் அவர்களுடன் கூடப்போகும் எனக் கிறிஸ்துவ ஈசுவரன் கூறுகிறார். அதாவது கர்மானுசார பலனை அளிப்பார் என்றாகிறது. ஆனால் இயேசு பாபங்களை ஏற்றுக் கொள்வார். மன்னிப்பார். என்று சொல்லுகிறார்கள். ஈசுவரன் சொல்லுவது சரியா அல்லது கிறிஸ்துவர்கள் நமக்குரைப்பது சரியாவென்று புத்திமான்கள் ஊகிக்கக் கூடும். இரண்டும் சரியாயிருக்க முடியாது. ஏதாவதொன்று தப்பாகவிருக்க வேண்டும். கிறிஸ்துவர்களோ அல்லது அவர்களுடைய தெய்வமோ. எதுவாயிருந்தாலும் நமக்குப் பாதகமில்லை.

120. தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான்.—நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப் பட்டது; அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகி வந்தது. (14. 19-20.)

புராணங்களுடைய நூலைவிட இது இன்னும் நீளமாகவில்லையா? கிறிஸ்துவர்களுடைய ஈசுவரன் கோபமாயிருக்கும் பொழுது ரொம்ப துக்கத்தையடையவேண்டும். ஆலை ள் நிரம்பவும் அவருடைய கோபாக்கினையிருந்ததினால், அது நீரா அல்லது பாத்திரங்களில் நிறையக்கூடிய திரவ பதார்த்தமா? "ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு" இரத்தம் புறப்பட்டுப் பெருகமுடியாது. ஏனெனில் காற்று கலந்தவுடன் அது இறுகிவிடும். பிறகு எப்படி அது பெருகும்? ஆகவே இதெல்லாம் பொய்ப் பேச்சேயாம்.

121. இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது. இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது. (15. 5.)

கிறிஸ்துவர்களுடைய ஈச்வரன் சர்வஞ்ஞராயிருந்தால் சாக்ஷிகளுக்கு என்ன அவசியமிருக்கிறது. ஏனெனில் தானுகவே எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருப்பார். இவர்களுடைய ஈச்வரன் சர்வஞ்ஞரில்லை என்பது எப்பொழுதும் நிச்சயமாகும். மனிதனைப்போல் 'அற்பஞ்ஞனே'. அவரால் ஈச்வரனுடைய வேலையை எப்படிச் செய்யமுடியும்? ஒரு பொழுதும் முடியாது. இப்புத்தகத்தில் தூதர்களைப்பற்றி அசம்பவமான அதிக வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை உண்மையென எடுத்துக்கொள்ள முடியாது கூற முடியாத மதியீனமான விஷயங்களால் புஸ்தகம் நிறைந்திருக்கிறது.

122. அவருடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்.—அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவருடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாய் அவளுக்குக் கலந்து கொடுங்கள்.—(**18.** 5, 6.)

கிறிஸ்துவ ஈசுவரன் பிரத்தியக்ஷமாக அநியாயம் செய்கிறவருகிருர். எவ்வளவு கர்மங்களை எப்படி செய்திருக்கிருனே அதற்கு ஏற்ற வண்ணம் தண்டனையையாவது, பரிசையாவது கொடுப்பதே நியாயமெனப்படும். அதற்கு அதிகமான பலனளிப்பது அநியாயமாகும். அநியாயஞ் செய்கிறவரைத் துதிக்கிறவன் ஏன் அநியாயம் செய்கிறவனுகமாட்டான்.

123. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. (**19.** 7.)

கிறிஸ்துவர்களுடைய சுவர்கத்தில் விவாகமும் நடைபெருகிறது. ஏனெனில் இயேசுவுடைய விவாகத்தை ஈசுவரனே அங்கே நடத்தினர். அவருடைய மாமனர், மாமியார், மச்சினன் முதலானவர்கள் யாராரென்று கிறிஸ்துவர்கள் தயவு செய்து நமக்கு சொல்லுவார்களா? அக் கலியாணத்தினுல் அவருக்குக் குழந்தைகளுண்டு. வீரிய நாசத்தினுல் பலம், புத்தி, பராக்கிரம், ஆயுசு, எல்லாம் குன்றி போகிற படியினுல் இயேசு இதுவரையில் இறந்திருக்கவேண்டும். இதுவரையில் கிறிஸ்துவர்கள் இயேசுவிடத்தில் நம்பிக்கை வைத்து ஏமார்ந்தார்கள். இன்னும் அப்படியே எவ்வளவு நாளிருப்பார்களென்று யார் அறிவார்?

124. பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம் போகாதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரை போட்டான். (**20.** 2-3.)

பெரும் பிரயாசையினுலேயே சாத்தான் பிடிக்கப்பட்டு ஆயிரம் வருஷம் தள்ளியடைக்கப்பட்டான். விடுதலை செய்தவுடன் திரும்பவும் ஜனங்களைத் தூண்டமாட்டானு? அத் துஷ்டனை ஆயுள் பரியந்தம் அடைத்திருக்கவேண்டும். அல்லது கொலை செய்திருக்கவேண்டும். உண்மை யாதெனில் இது கிறிஸ்துவர்களுடைய பிரமையே. சாத்தான் என்பது எதுவுங் கிடையாது. ஜனங்களை நடுங்கச் செய்து தங்களுடைய வலையில் பிடி

க்கவே இவ்வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். "என்னுடன் வாருங்கள், சுவாமி நாராயணனைக் காண்பிக்கிறேன்" என்று போக்கிரி ஒருவன் பேதை ஜனங்கள் சிலரிடம் சொன்னது போலாகும். நாலு கையுள்ளவராகத் தோற்றும் படியாக ஒருவனை முன்னமேயே அடர்ந்த வனத்தின் நடுவில் தனியானவிடம் ஒன்றில் உட்கார வைத்திருந்தான். அவன் சொன்னபொழுது கண்களை மூடிதிறக்கவேண்டுமென்று அவர்களுக்குச் சொன்னான். அப்படி சொல்லுகிறதைக் கேட்காதவர்களுடைய கண்கள், பார்வையை இழந்து விடும் என்றான். பிறகு அவர்களுடன் கூட அந்த இடத்திற்குச் சென்றான். நாலு கை மனிதனுள்ள இடத்திற்கு வந்தவுடன் அவர்களை முன்புறம் பார்க்கச் சொல்லிவிட்டு அடுத்த கணத்தில் கண்களை மூடிக் கொள்ளவேண்டியதென உத்திரவளித்தான். நாலு கை மனிதன் புதரின் மத்தியில் மறைந்துகொண்டவுடன், அவர்களுக்குக் கண்களைத் திறந்துகொள்ளும்படி உத்தரவிட்டான். உடனே "நீங்கள் எல்லோரும் நாராயணனைக் கண்டீர்கள்" என்றான். அவர்களுடைய வலையில் விழாமல் கவனித்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

125. *அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.*

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.—(**20.** 11. 12.)

இதெல்லாம் குழந்தைத்தனமில்லையா? பூமியும் வானமும் எவ்விதம் அகன்று போகும்? எவருடைய சமுகத்திலிருந்து அகன்று போயிற்று. அவரும் அவருடைய சிங்காசனமும் எங்கேயிருந்தது. இறந்தவர்கள் முன்னிலையில் நிற்க, பரமேச்வரன் உட்கார்ந்திருக்கவேண்டும் அல்லது நின்றுக்கொண்டிருக்கவேண்டும். சச்சரவுகளையும், கணக்குகளையும் தீர்க்கக் கச்சேரிகளும் கடைகளிலும் புஸ்தகம் தஸ்தாவேஜுகள், வேண்டியிருப்பது போலவே ஈசுவரனுடைய வேலையுமா? ஜீவபுஸ்தகத்தில் ஈச்வரனால் தாகல் செய்யப்பட்டதா? அல்லது அவருடைய குமாஸ்தாவினால் செய்யப்பட்டதா? இவ்வித அநீச்வரனை ஈச்வரனாகவும் ஈச்வரனை அநீச்வரனாகவும் கிறிஸ்துவமதத்தவர்கள் செய்து விட்டார்கள்.

128. *தீட்டுள்ளதும் அருவெறுப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை.* (**21**, 27.)

இவ்வாறிருக்க ஏன் பாபிகள் கூட கிறிஸ்துவர்களாக மாறினால் சுவர்க்கத்தையடையலாம் எனக் கிறிஸ்துவர்கள் கூறுகிறார்கள்? இது வுண்மையாகாது. இதுவுண்மையானால் திவ்யவாசகனாகிய யோவான் சுவர்க்கத்தில் பிரவேசிக்க முடியாது. ஏனெனில் அவருடைய நூலில் அவ்வளவு பொய்களைச் சொல்லியிருக்கிறார். இயேசுவுங்கூடப் போயிருக்க முடியாது. ஏனெனில் ஒரு

பாபிகூட பிரவேசிக்கக் கூடாதென்றிருக்க அநேக பாபிகளுடைய பாபத்தின் சுமையுடன் கூடியிருக்கிற அவர் எவ்விதம் சுவர்க்கவாசியாகக்கூடும்?

> 129. இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.—அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.—அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். (**21**. 3-5.)

கிறிஸ்துவர்களுடைய சுவர்க்கவாசத்தைக் கவனியுங்கள். தேவனும் ஆட்டுக்குட்டியும் எக்காலமும் தங்கள் தங்களுடைய சிங்காசனங்களில் உட்கார்ந்து கொண்டிருப்பார்களா? ஊழியக்காரர் எப்பொழுதும் அவர்களுடைய முகத்தைப் பார்த்தவண்ணமாயிருப்பார்களா? உங்களுடைய ஈச்வரன் முகம் ஐரோப்பியரைப் போல் வெண்மை நிறமானதா அல்லது நீக்ரோவைப் போல் கறுப்பானதா? அந்த ஈசுவரன் எத்தகையது. உங்களுடைய சுவர்க்கங்கூட சிறையைப்போலிருக்கிறது. பெரியவர்கள் சிறியவர்களென்ற வித்தியாசமிருக்கிறது. சமத்வங்கிடையாது. அதற்குத்தக்க துக்கமுமிருக்கும். முகத்தையுடைய ஈச்வரன் சர்வஞ்ஞராயும் சர்வேசுவரனாயும் ஒருபொழுது மிருத்தல் முடியாது.

> 130. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய, கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. (**22**. 12.)

அவனவனுடைய கர்மானுசாரம் பலனடைகிறான் என்பது உண்மையானால், பாபங்களை மன்னிக்கவேமுடியாது. அவைகள் மன்னிக்கமுடியுமேயானால் பைபிளில் இது சொல்லப்பட்டிருப்பது தவறு. பாபங்களை மன்னித்தல் கூட பைபிளில் கூறப்பட்டிருக்கிறதென்றால் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையதாகும். ஆகையால் அவைகளை நீ நம்பக்கூடாது.

கிறிஸ்துவ பைபிளில் லக்ஷக்கணக்கானவைகள் கண்டிக்க விருக்கிறது: மதிஹீனமான சிலவற்றையே உதாரணமாக நாம் எடுத்தோம். புத்திமான்களுக்கு அவைகளுடைய பொய்யை விளக்க அதுவே போதும். ஒரு சிலவற்றைத் தவிர, மற்றவையெல்லாம், முழுப் பொய்யானதே. ஜலத்துடன் கலந்த பால், பாலாகாதது போல், பொய்யுடன் கலந்த உண்மை உண்மையாகாது. ஆகையினால் அவைகளிருக்கிற நூலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகாது. எனவே வேதங்களை அங்கீகாரம் செய்வது சகல சத்தியத்தையும் அங்கீகாரம் செய்வதேயாகும்.

பதின்மூன்றாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயத்தின்

முகவுரை.

இப்பதினான்காவது அத்தியாயத்தில் முகம்மதிய மத ஆராய்ச்சி செய்துள்ளோம். குர்-ஆன் வாக்குகளைத் தழுவியே இவ்வாராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. குர்-ஆன் வாக்குகளில் சில பதங்களையொட்டிப் பொருள் வேற்றுமையும் அதையொட்டின பிரிவினைகளும் இருக்கின்றன. எனினும் குர்--ஆன் ஆண்டவன் வாக்கு என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். அரபி மொழியிலுள்ள குர்-ஆன் தேர்ந்த முகம்மதியக் கல்விமான்களால் உருது பாஷையில் செய்யப்பட்டுள்ளது. இம்மொழி பெயர்ப்பு சம்ஸ்கிருத எழுத்தில் ஹிந்தியிலெழுதப்பட்டு, அரபி படித்தவர்களால் பார்வையிடப்பட்டு திருத்தப்பட்டிருக்கிறது. நமது மொழி பெயர்ப்பைப்பற்றி குறை கூறுபவர்கள் முதலில் முகம்மதியக் கல்விமான்களால் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதைத் தவறென்று நிரூபிக்கவேண்டும். பற்பல மதங்களின் போதனைகளையறியவும் உண்மையிலிருந்து பொய்யைத் தள்ளி அதன் மூலமாக மானிடவகுப்பின் முன்னேற்றத்தைத் தேடுவதுமே இவ்வாராய்ச்சியின் நோக்கமாகும். எவ்விதமெனில் குற்றங்களைத் தள்ளி குணங்களைக்கொள்ள பேருதவியியிருக்கும். அன்யோன்ய வாதத்திற்கு இடங்கொடுக்கும்.

இதையாவது அல்லது வேறு எதையாவது காரணமன்னியில் கண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இதை ஆக்கவில்லை. சத்தியமற்றதை விலக்கவும், சத்தியத்தை ஏற்றுவளரச் செய்ய உபகாரமாயிருக்கவே இவ்வேலையை முற்கொண்டோம். ஏனெனில்எவனும் பொய்யை மெய்யெனக்காட்டி சத்திய வளர்ச்சியைத் தடுத்தல் கூடாது. இவ்விஷயங்களில் கட்டாயப்படுத்த முடியாதாகையினால் இதைப் பிரசுரித்த பின்னரும் சத்தியத்தை ஏற்பதற்கும் விலக்குவதற்கும் அவரவர்களுக்குப் பூரண சுயேச்சையுண்டு. நல்லோர்கள், அவைகளுடைய குணாகுணங்களைக் கண்டறிந்தவுடன் நன்மைகளைப் போற்றி தீமைகளைத் தள்ளி, பிடிவாதம் பாரபட்சம் இவைகளைக் கண்ட விடங்களிலெல்லாம் புறக்கணித்து விடுவார்கள். பிடிவாதத்தினால் விளையும் பெருங் கெடுதல்களை அறியாதார் யார்? நிலையற்ற இவ்வாழ்க்கையில் பிறருக்குத் துன்பம் விளைத்தல், தனது நலத்தை நாடுதல் என்பது முறையல்ல. இவ்வாராய்ச்சியில் விஷயங்களுக்கு விரோதமாய் யாதேனும் உளதாயின் வாசகர்கள் எடுத்துக் காட்டலாம். அதை நாம் எடுத்துக் கொள்ளுவோம். ஏனெனில் பிடிவாதம், பாரபட்சம், பகை, பொறாமை அசூயை, வீண் வாதங்களில் (ஆசை) இவைகளைந்து, வளர வொட்டாமல் தடுப்பதே இதன் எண்ணமாகும். பிறருக்குத் துன்பம் விளையாமல் பார்த்துக் கொள்ளுவதும் ஒவ்வொருவருடைய நன்மையை மேம்படுத்துவதுமே நம்முடைய கடமைகளில் சாலச்சிறந்ததாகும். இதை நன்றாகப் பார்த்த பின்னர் அறிவிற்கும் புத்திக்கும் சரியெனப்பட்டதை எடுத்துக்கொண்டு அவைகளுக்கு விரோதமானவைகளைத் தள்ளிவிடுவார்கள் என்னும் நம்பிக்கையுடன் முகம்மதிய மதவாராய்ச்சியாகிற இவ்வத்தியாயத்தைச் சத்தியத்தைக் கோருகிறவர்களின் பார்வைக்கு விடுக்கிறோம்.

புத்திமான்களுக்கு ஒரே வார்த்தை.

பதினான்காவது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் நாம் இஸ்லாம் மதத்தைப்பற்றி ஆராய்வோம்.

(1) பொறுத்தருள்பவனே! தயாபரனே, ஆண்டவனே (அல்லாவின் திருநாமத்தால் ஆரம்பஞ் செய்கிறேன்). *

முகம்மதியர்கள் குர்.ஆனைக் கடவுளின் அருள்மொழி எனக் கொள்கிறார்கள். மேல் கூறப்பட்டதிலிருந்து இந்நூலை ஆக்கியவர் கடவுள் இல்லை என்றும் ஒருதனி மனிதன் என்றுமே புலனாகும். இந்நூல் கடவுளால் ஆக்கப்பட்டதெனின் 'அல்லாவின்பேரால் இந்நூலைத் ஆரம்பிக்கிறேன்' என்று சொல்லப்பட்டிருக்க வேண்டியதில்லை. மனித ஜாதியின் நன்மையை ஒட்டி நான் இப்புத்தகத்தை ஆக்குகிறேன் என்று சொல்லியிருக்கலாம். மனிதன் வாழ்க்கையில் எப்படி நடக்கவேண்டும் எக்காரியத்தைச் செய்யவேண்டுமென்பதைக் காட்டவே இது செய்யப்பட்டது என்றால், மனிதன் கெட்ட காரியத்தைக் கடவுளின் பெயரால் செய்து அவருக்கு அவமதிப்பை விளைவித்தல் கூடும். கிற்க கடவுள் தயாளு என்று துவக்கத்தில் கூறப்படுகிறது. தயாளுவாயின் ஜீவன்களைக் கொலைசெய்து வருத்துதலை அவர் எங்ஙனம் ஆமோதித்தல்கூடும். ஜீவஹிம்சை கடவுளின் தயாளுத்தன்மைக்கு பங்கம் விளைப்பதாகுமன்றோ. கால்நடைகள் நிரபராதிகள் அல்லவா? அவை யாருக்குத் தீங்கு இழைத்துள்ளன. அவைகள் ஆகாராதியாகக் கொல்லப்படுகின்றன. கால்நடைகளும் கடவுளின் சிருஷ்டியில் உட்பட்டவைகள் அல்லவா? கடவுள் குர்.ஆனைச் செய்திருப்பின் அவர் மனிதனைக் கெட்டகாரியம் செய்யும்படி ஒருநாளும் கூறியிருக்கமாட்டார். எனவே துவக்கத்தில் கூறப்பட்ட வாசகம் பொருளற்றதாக இருக்கிறது. கொலை, களவு, வியபசாரம், பொய் இவைகள் கடவுள்பேரால் செய்யப்படலாமா என்று கேட்கிறோம்? கொலைக்காரர்கள், கால்நடைகளைக் கொலை செய்கையில் "பிஸ்மில்லாகி" என்கின்றனர்

இதிலிருந்து விளங்குவதென்னை? இஸ்லாம் மதத்தினர் மேற்கூறிய கொடுந்தொழிலைக் கடவுளின்பேரால் செய்கிறார்கள். எனவே இஸ்லாம் மதக் கடவுளைத் தயாளு, கருணாநிதி என்று அழைத்தல் முடியாது. ஏனெனின் அவர்கள் பிராணிகளிடம் கருணை காட்டவில்லை. இந்த முதல் வாக்கியத்தின் பொருள் வேறாயின் அது என்னவென்று முகம்மதியர்களைக் கேட்கிறோம்.

(2) எல்லாச் சிருட்டியின் முதல்வனே அல்லாவே, அருளாளனே, தயாபரனே, உனக்கே எனது வழிபாடு. (1 1-2).

* கடவுள் சிருஷ்டியின் நாயகனாய், தயாளுவாய், ஜீவன்களிடத்தில் கருணை வாய்ந்தவராயிருப்பின், அவர் பிறமதத்தாரையும், கால்நடைகளையும் கொலை செய்தலை ஆதரிப்பாரா? உண்மையில் தயாளுவாயின் பாபிகளிடமும் அவர் கருணை காட்டுவாரா? கருணைக் காட்டுவார் என்று பதில் அளிக்

* குறிப்பு :—இது ஸூரா அல்லது அத்தியாயத்தின் எண்ணிக்கை.

கப்படுமாயின், அப்பதில் பொய்யான வார்த்தையாகும். ஏனெனில் காப்பிரிகளைக் கத்திக்கு இரையாக்கு என்று இம்மதம் கூறுகிறது. (அதாவது) குர்ஆனில் நம்பிக்கையில்லாதவன், மதத்தில் நம்பிக்கை யில்லாதவன் என்று கொள்ளப்படுகிறான், எனவே; குர்.ஆனை ஏற்காதவனையும் நபியிடம் நம்பிக்கை அற்றவனையும் கொல்லுதல்சரியென்று ஆகிறது. மகம்மதியர்களல்லாதாரிடத்தில் குர்-ஆன் கொடுமையுடனிருப்பதால், பசு முதலிய கால்நடைகளிடத்தில் பச்சாத்தாபமற்றதா யிருப்பதால் இது கடவுளின் வாக்காகாது.

(3) தீர்ப்புநாளின் தலைவா! உனக்கே தொழுகை. உன்னையே நாடுகிறேன். எனக்கு வழிகாட்டி அருள்வாய். (1. 3-5).

கடவுள் எப்பொழுதும் நியாயத்தை அளிப்பவரல்லவா? நியாய காரியங்களைப்பற்றி அவர் குறித்த ஒரு நாளில்தான் கவனிப்பார் என்றால் அவர் குற்றம் செய்பவராவார். துஷ்கிருத்தியங்களைப் புரிவதற்கும் அவரது துணை நாடுவது நியாயமாகுமா? மற்ற மார்க்கங்கள் சரியானவை அல்லவா? தீயவழியில் நடத்தும் மார்க்கத்தை அவர்கள் சரியான மார்க்கம் எனக் கூறுகிறார்களா. நல்லது என்பது சகல மதங்களின் சம்மதமாயின் முகம்மதிய மதம் மாத்திரம் எல்லா மதங்களையும்விட எப்படி உயர்ந்ததாகும்? மற்ற மதங்களும், தங்களுடையதைபோல், நல்லமார்க்கம் தர்மம் இவைகளைக் கொண்டுள்ள தல்லவென்றால் அவர்கள் அசூயையினால்தான் சொல்ல வேண்டும்.

(4) உன் கோபத்திற்குள்ளாகாதும் உனது ஆக்ஞையை மீறி நடக்காதும் இருப்போருக்கு அருள்புரிந்து வழியைக் (காண்பிப்பாயாக). (1. 6-7).

முகம்மதியர் பிறவிகளில், முன் ஜென்மத்தில், மறுபிறப்பில் நம்பிக்கை யில்லாதவர்கள். எனவே, கர்மவினைக்கேற்றவாறு பயன் என்பது அவர்கள் மதப்பிரகாரம் ஏற்படாது. ஆதலால், ஒருவனைக் கஷ்டத்திற்குள்ளாக்குவதும், ஒருவனுக்குச் சுகத்தைத் தருவதும், மற்றொருவனுக்குத் துக்கத்தைத் தருவதும் கடவுளின் பாரபட்சத் தன்மையைக் காட்டவில்லையா? ஒருவனைக் காரணமில்லாது சுகப்படுத்துவதும், ஒருவனைத் துக்கத்திற்குள்ளாக்குவதும், கடவுள் தன்மையைக் குலைக்கிறது. மேலும் தனது இஷ்டப்படியும் இக்காரியம் செய்தல் முறையல்ல. ஜென்மமில்லாதும் எனவே புண்ணிய பாப கிருத்தியங்களுக்கு உள்ளாகாததுமான ஜீவன்களில் ஒன்றிற்கு நன்மையையும் மற்றொன்றிற்குக் கெடுதலையும் தருதல் தருமமாகுமா? கடவுளுக்கு அழகுதான் ஆகுமா!

மேலும் மேலே குறிக்கப்பட்டிருக்கும் வரியைக் கடவுள், ஜனங்கள் இதை உச்சாரணம் செய்யும்படி நேரில் சொல்லிக்கொடுத்தார் என்று ஒரு உரை கூறுகிறது. அரிச்சுவடியையும் கடவுளே நேராகச் சொல்லி வைத்திருக்க வேண்டுமென்று இதிலிருந்து தோன்றவில்லையா! இல்லையேல் இந்தச் சுலோகத்தை அவர்கள் எங்ஙனம் கற்றிருக்க முடியும்? அல்லது கடவுள் வாய்ப் பாடமாய்ச் சொல்லி வைத்தாரா? அப்படியாயின் குர்-ஆன் முழுவதும் வாய்ப் பாடமாய் கற்கப்பட்டதாகும்.

கிற்க மேற்கூறியதின் மூலம் கடவுள் பாரபட்சமானவர் என்று புலனு கிறது. அத்தகையாரைக் கடவுள் என்று வழிபடக்கூடாது. குர்-ஆன் அரபி பாஷையில் எழுதப்படடது என்று கூறப்படுகிறது. அங்ஙனமாயின் அரபியர் கள் இதைச் சீக்கிரத்தில் கற்றிருக்க முடியும். பிறர் அவ்வளவு இலகுவாய் கற்றிருக்க முடியாது. வேதத்தை இறைவன் எல்லாருக்கும் பொதுவானதும், ஒரு வகுப்பாருக்கு நாட்டாருக்குச் சொந்தமற்றதுமான பாஷையில் அருளி யதுபோல் செய்திருந்தால் நலமாயிருந்திருக்கும். எல்லோரும் படித்து அறிய லாம், உலகத்தில் அனைவரும் சிரமப்பட்டுப் படித்து வேதத்தை அறியவேண் டும். சம்ஸ்கிருதம் ஒருவர் பாஷையல்ல, பொது பாஷை, இங்ஙனம் குரான் செய்யப்படவில்லை.

(5) இப்புத்தகத்தைக் குறித்துச் சந்தேகமே இல்லை. பயமுள்ளவன், நம்புபவன், குறிப்பிட்ட நேரத்தில் நமாசு படிப்பவன், அருளால் பெற்றதைத் தானஞ் செய்பவன், முதலியவர்களுக்குப் பாதையைக் காண்பிக்கும். உனக்காக அனுப்புவித்த இப்புத்தகத்தை நம்புபவன், உனக்கு முன்னமேயே தீர்க்கதரிசி களுக்கு அருள்புரிந்து, வரும் வாழ்நாளில் பூர்ண நம்பிக்கை உள்ளவன், இவர் களெல்லாம் ஆண்டவனுலேயே ஆட்டப்படுகிறார். அவர்கள் வாழ்வார்கள். காபிரிகளுக்கோ நம்பாதவர்களுக்கோ எச்சரிக்கை செய்வதும் வீண், அவர்கள் நம்பார்கள். ஆண்டவனுல் அவர்கள் மனமும் செவிகளும் அடைக்கப்பட்டிருக் கிறது. கண்கள் மேல் மூட்டம். அவர்களுக்கோ அளவற்ற தண்டனை. (2. 1-6).

கடவுள் தமது புத்தகமாகிய குரானை அதிகம் புகழுகிறார். இது தற் புகழ்ச்சி அல்லவா? நல்லவர்கள், பக்தர்கள் எத்துணையுமில்லாது ஒளியின் பாதையில் நடப்பார்கள். அவர்களுக்குக் குர்-ஆன் துணை தேவையில்லை. கெட் டவர்களுக்குக் குரான் ஒளிதரமறுக்கிறது. அவர்களுக்கல்லவோ துணை வேண் டும். இஸ்லாம் கடவுள் முகமதியர்களுக்கு அவர்களது செலவிற்கென்று தமது பொக்கிஷத்திலிருந்து பொருள் உதவுகிறாரா? மனிதன் சிரமமில்லாது, அவனது செயலை கவனியாது. கடவுள் எல்லோருக்கும் பணமூட்டை யைக் கட்டிக் கொடுக்கிறாரா? அங்ஙனமாயின் ஏன் அவர் எல்லோருக்கும் பணத்தைத் தரலாகாது? ஏன் முகமதியர்கள் கஷ்டப்படடுச் சம்பாதிக்கிறார் கள்' பைபிளும் வேதபுத்தகமல்லவா? அங்ஙனமிருக்க முகம்மதியர்கள் ஏன் அவர்கள் குரானில் வைக்கும் நம்பிக்கையைப் பைபிளில் வைக்கக்கூடாது? பைபிளிலும் நம்பிக்கை வைத்தலை முகம்மதியர் கண்டிக்கவில்லை என்றால் குர்-ஆன் ஏன் அருளப்பட்டிருக்க வேண்டும். குர்-ஆன் பைபிளைவிட அதிக விரிவான தத்துவங்களைக் கொண்டதெனின், கடவுள் முதல் புத்தகத்தில் எல் லாவற்றையும் சொல்ல மறந்துவிட்டாரா? அவர் மறந்திருப்பின் குர்-ஆனை ஆக்கியதும் பிரயோசனமற்றதாகும். குர்-ஆனையும் பைபிளையும் நோக்கின் இரண்டிற்கும் அதிகவித்தியாசமில்லை. அனேக விஷயங்களில் இரண்டும் ஒன்றாய்த்தான் இருக்கின்றன. கடவுள் ஆக்கியதெனின் ஏன் இரண்டு புத்தக மில்லாது வேதத்தைப்போல் ஒரு நூலை அவர் அருளியிருக்கக்கூடாது.

தீர்ப்புத்தினம் என்னும் ஒரே தினத்தைத்தானு நம்பவேண்டும். கிறிஸ்து வர்களும், முகம்மதியர்களுந்தானு கடவுள் அருள்பெற்றவர்கள். இங்ஙனம் கடவுள் கூறின் அவரது பாரபட்சமுள்ள தன்மையைப் புலப்படுத்த வில்லையா? அந்த இருமதத்தினர்களில் பாபிகள் இல்லையா? கிறிஸ்துவ முகம்மதிய வகுப்பில் பாபிகளும் வளர்ச்சி அடைவார்கள்; மற்றவர்கள் எவ்வளவு தர்மாத்மாக்களா யிருந்தாலும் கடவுள் அருள்பெற்று வளரமுடியாது. இதுதான் முகம்மதியர்கள் அபிப்பிராயமா? இஸ்லாமில்லாதவர்களைக் காபிரிகள் என்பதுதான் நியாயமோ? எனவே கடவுள் கூறிய தத்துவம் மனிதனைத் தீய வேலைகளில் புகச் செய்யின், அது கடவுளின் குற்றமேயாகும். அங்ஙனம் கடவுள் செய்துவிட்டு நல்லவழியில் செல்லாதவனைத் துன்புறுத்தலும் துஷ்டத்தனமாகும். ஒருவன் ஏன் கஷ்டப்படவேண்டும்? ஒருவன் சுகப்படவேண்டும்?

(6) அவர்கள் உள்ளத்தில் இருப்பவை ரோகம். அல்லாவானவர் அதை அதிகரிக்கிறுர். (2. 9).

அவர்கள் நிரபராதியாயிருக்கத், தீய விஷயங்களில் நடத்தல் என்னும் ரோகத்தை வளர்க்கிறுர் என்பதுதான் உங்கள் கொள்கையோ. கடவுளுக்கு இரக்கமில்லையா? இது மிருகத்தனமல்லவா? ரோகத்தை வளர்த்தல் என்பது கடவுளின் வேலையாயிருத்தல் கூடாது. மனிதன் தீய விஷயம் செய்வது அவனது பாபச் செயல்களினுல்தான். அது அவனது காரியமேயாகும்.

(7) பூமியைப் படுக்கைபோல் விரித்து, ஆகாசத்தை உனக்கு போர்வை போல் செய்தானார். (2. 20).

சுவர்க்கலோகம் பூமியின் கூரையாகுமா? இது குரான் செய்த கடவுளின் அறியாமையைக் காட்டவில்லையா? வானம் கூரையென்று கூறுதல் அசட்டுத்தனமாகும். முகம்மதியர்கள் சில கிரகங்களை சுவர்க்கம் என்று கூறினர். அது அவர்களுடைய மனேபாவ சிருஷ்டியே யாகும்.

(8) அல்லாவின் கிருபையால் உண்டான குர்ஆனில் சந்தேகமுற்றால் இதைப் போலுள்ள ஒரு அத்தியாயத்தைச் செய்வாயாக! உண்மையாலுல் அல்லாவைத் தவிர வேறு சாட்சியைத் தயார் செய்வாயாக.

நம்பி, நற்காரியஞ் செய்வோர்களுக்கு ஆனந்த திருபீ வாக்கியத்தை அளி. அவர்களின் தோட்டத்தில் ஆற்று நீர் பாயும். (2. 21-22).

சரி, கவனிப்போம். இதைப்போல் ஒரு அத்தியாயம் எழுதுதல் முடியாததா? அக்பர் காலத்தில் மோல்விபெய்ஸ் என்பவர் குர்-ஆன் உதவியில்லாது ஒரு புதிய குர்-ஆனைச் செய்யவில்லையா? நரகம் என்பதில் இருக்கும் தீ எத்தகையது. இந்த உலகத்திலுள்ள நெருப்புக்கு அஞ்சவேண்டாமா! தீ தன் வயப்பட்டவைகளை அழிக்கவில்லையா? குரான் நம்பிக்கை அற்றவர்களுக்கு (இஸ்லாம் மதத்தினரல்லாதவர்களுக்கு) கல்லுதான் என்று கூறுவது புராணங்களில் மிலேச்சர்களுக்கு நரகந்தான் என்பது போலிருக்கிறது. இந்த இரண்டில் புராணங் கூறுவதை ஏற்பதா? அல்லது குரான் சொல்வதை ஏற்பதா?

இரண்டும் உண்மையாக முடியாது. நல்லவர்களும், தர்மாத்மாக்களுந்தான் நற்கதியை அடைவார்கள். துஷ்டர்கள் துக்கத்தைத்தான் அடைவார்கள்.

> (9) ஆகாரத்திற்காகப் பழம் தின்னும்பொழுதெல்லாம் இதுதான் நாம் முன் தின்றது என்பார்கள். ஒன்றேபோல் வேறொன்று உள்ள பலவகைப் பழங்கள் அவர்களுக் களிக்கப்படும். மிகவும் புனிதமான மனைவிகளை அடைவார்கள். தீயோர்களைத் தவிர மற்றவர்கள் தீயவழியில் திருப்பப்படுவார்கள். (2. 24).

குரானில் கூறும் சுவர்க்கம் இந்த உலகத்தைவிட மேலானதாகவில்லை. இந்த உலகில் கிடைக்கக் கூடியதுதான் அங்கும் கிடைக்கிறது. ஒரு வித்தியாசமுளது. இங்கு மனிதர்கள் சாகிறார்கள். அங்கு சாகிறதில்லை. மாதர்கள் இங்கு இறக்கிறார்கள். அங்கு சிரஞ்சீவியாக இருக்கிறார்கள். சுவர்க்கதியிலிருக்கும் மாதர்கள் தீர்ப்பு தினம் வரையில் எங்ஙனம் காலத்தைக் கழிக்கிறார்கள். முகம்மதியக் கடவுள், இம்மாதர்களின் துணையாயிருந்து காலங் கழிக்க உதவுகிறார் போலும். இது கோஸாவிகள் கூறும் கோலத்தைப் போலிருக்கிறது. கடவுளின் சந்நிதியாகிய சுவர்க்கத்தில் மாதர்களுக்கு மதிப்பு அதிகமா யிருக்கிறது. மாதர்கள் எப்பொழுதும் சுவர்க்கத்தில் இருக்கிறார்கள். மனிதர்கள் மாத்திரம் அங்கு இல்லை. இத்தகைய ஏற்பாடு கடவுள் விருப்பமின்றிருக்க முடியாது. எனவே முகம்மதியக் கடவுளுக்கு ஸ்திரீகளின் காம வலையில் சிக்கும் ஆபத்திருந்து வருகிறது.

> (10) ஆதாமுக்கு எல்லாப் பெயரையும் கற்பித்தார், தேவர்களின் முன்னிலையில் வைத்து உண்மையை உரைப்பாயானால் "இதன் பெயரை எல்லாம் சொல்" என்றார். "ஆதாமே அவர்களுக்கு இப்பெயரைச் சொல்" என்றார். அவர்களின் பெயரை உரைத்தவுடன் பூமியினுடையவும் ஆகாசத்தினுடையவும் இரகசியங்களையும் நீ அறிவதையும் நீ மறைப்பதையும் நான் அறிவேனென்று சொல்லவில்லையா என்றார்?

தனது பெருமையை விளக்கும்பொருட்டு கடவுள் இங்ஙனம், தன்னகமுள்ள தேவர்களை ஏமாற்றலாமா? இங்ஙனம் செய்தல் பிசகல்லவா? அறிவாளிகள் இங்ஙனம் கடவுள் செய்தலை நம்பமாட்டார்கள். கடவுளும் இங்ஙனம் செய்யாது. இத்தகைய புன்சொல், அறிவும் நாகரீகமும் படைத்தவர்களிடம் செல்லாது. காட்டுமிறாண்டிகள்தான் நம்புவார்கள்.

> (11) ஆதாமைத் தொழு எனத் தேவர்களுக்குச் சொல்ல எல்லோரும், எபிலிசை (சைத்தான்) தவிர அவரைத் தொழுதார்கள். அவன் கர்வத்தினால் திரம்பி காபிரிகளில் ஒருவனானான். (2. 32).

இது முகம்மதியக் கடவுளின் சர்வ வல்லமையுள்ள சக்தியைக் காட்டவில்லை. இதிலிருந்து அவருக்கு முற்காலத்தை உணரும் தன்மை யிருப்பதாகவும் தெரியவில்லை. சர்வ வல்லமையுள்ள அருட்பெருங் கடவுளாயிருப்பின் சாத்தானை அவர் படைத்திருக்கமாட்டார். சாத்தான் கடவுள் கட்டளையை மறுத்தும், அவரால் சாத்தானை அடக்க முடியவில்லை. இந்த ஒரு சாத்தானை அடக்கி ஆளும் திறமை படைக்காத கடவுள் எங்ஙனம் லட்சக் கணக்கில்

இருக்கும் சாத்தான் துணைவர்களைத் (நம்பிக்கை யற்றவர்கள்) தீமை செய்யாது பார்த்துக்கொள்ள முடியும். மனிதன் மனத்திடை உள்ள பலஹீனத்தைக் கடவுள் வளர்க்கிறார். சிலரைத் தப்பு வழியில் செல்லவிடுகிறார். இதிலிருந்து கூறப்படும் உண்மையாது? சாத்தானிடம் இருந்து கடவுள் கொஞ்சம் படித்துக் கொண்டுள்ளார். சாத்தான் கடவுளிடமிருந்தும் கொஞ்சம் கற்றுக் கொண்டிருக்கிறான்.

(12) ஆதாமே நீயும் உன் மனைவியும் தோட்டத்தில் வசி. எல்லா மரங்களின் பழத்தை நன்றாய் ருசிபார்க்க. ஆனால் இம்மரத்தண்டை அணுகாதீர்கள். இல்லையேல் அத்துமீறி நடப்பவர்கள் ஆவீர்கள். ஆனால் ஷயிலிசு அவர்களைச் சுவர்க்கத்தைத் துறக்கச்செய்து ஆனந்தத்திலிருந்து தூரத்தப்படும்படி செய்தான். நாம் உடனே சொன்னதாவது. பூமியே உன் இருப்பிடம். உங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர சத்துருவாவீர்கள். சிலகாலம் கழியும்வரை இலாபம். தலைவனின் சிலவார்த்தைகளைக் கேட்டு பூமியில் இறங்கினான். (2. 33-35).

முதலில் கடவுள் ஆதாமைச் சுவர்க்கம்போன்ற தோட்டத்தில் இருக்கச் செய்தார். பிறகு தோட்டத்திலிருந்து தள்ளிப் போட்டார். வருங்காலத்தை அவர் அறிந்திருந்தால் ஆதாமிற்கு இந்த உயர் வாழ்வைத் தந்திருக்க வேண்டாம். மேலும் கடவுளுக்குப் பிறரை மயக்கித் தீமையை விளைக்கும் சாத்தானைத் தண்டிக்கவும் போதிய சக்தியில்லை.

நல்லது கெட்டது என்று உணர்ச்சி தரும் மரத்தைத் தோட்டத்தில் பயிராக்கியது யார். கடவுள் பயிர் செய்தாரா? அவருக்காகவா? அல்லது பிறருக்காகவா? பிறருக்கென்றால் ஆதாம் எவாளை இம்மரத்தின் பழத்தைத் தின்னவேண்டாம் என்று தடுத்திருக்க வேண்டியதில்லையே? உண்மையான கடவுள் இத்தகைய முரண்பாடான காரியங்களைச் செய்திருக்கமாட்டார். அவர் புத்தகத்திலும் இத்தகைய கதைகள் இருத்தல் முடியாது. ஆதாம் கடவுளிடம் இருந்து கற்றுக்கொண்டதொன்றே? அந்தச் சுவர்க்கத் தோட்டத்திலிருந்து ஆதாம் எவாளுடன் எங்ஙனம் வீழ்ந்தார்? சுவர்க்கத் தோட்டம் எங்கிருக்கிறது? வானத்திலா? எங்காவது மலையுச்சியிலா? பட்சிபோல் பறந்து ஆதாம் கீழே விழுந்தாரா? அல்லது கல்லைப்போல் கீழே விழுந்தாரா?

ஆதாம் இருந்த சுவர்க்கத் தோட்டத்தில் மண் இருப்பதாகத் தெரிகிறது. ஏனெனின் ஆதாம் மண்ணால் செய்யப்பட்டார். மண்ணால் செய்யப்பட்டது மண்ணுடன் மடியவேண்டியது நியாயமே. சுவர்க்கத்திலிருக்கும் தேவதைகளும் சாவுடையவர்கள் எனின் அவர்கள் செத்தபிறகு எங்கு செல்லுகிறார்கள். அவர்கள் சாகமாட்டார்கள் என்றால், சாவற்றதற்குப் பிறப்புமில்லை. ஏனவே தேவதைகள் என்பவை இருக்க முடியாது. பிறந்தது இறந்தே தீரவேண்டும். இங்ஙனமிருக்கக் குர்-ஆன் சுவர்க்கத்திலிருக்கும் மாதர்கள் சிரஞ்சீவி என்று கூறுகிறது. அங்ஙனம் இருத்தல் முடியாது. எனவே இதிலிருந்து அறியற்பாலது என்னவென்றால் சுவர்க்கத்தி லிருப்பவர்களுக்கும் சாவுண்டு என்பதே.

(13) ஒரு ஜீவன் மற்றொன்றுக்குத் திருப்தி யளிக்க வல்லமையற்றது. அந்த தினத்தைப்பற்றிப் பயப்படு. அவர்களிடமிருந்து எந்தவிதமான சிபார்சும் ஏற்படாது. பிரதிபயனும் ஏற்படாது. சகாயமும் கிடைக்காது. (2, 46).

நாம் எப்பொழுதும் தீச் செயல்களைக் கண்டு அஞ்சவேண்டும். இது நாம் என்னாளும் செய்யவேண்டியதே. உனக்காகப் பரிந்து பேசுபவர்களின் பேச்சு ஏற்கப்படாது என்று குர்-ஆன் கூறுகிறது. தீர்க்கதரிசிகளின் துணையினால் ஒருவன் சுவர்க்கம் செல்லலாம் என்னும் முகம்மதிய நம்பிக்கைக்கு இது முரணாவில்லையா? கடவுள் சுவர்க்கத்தி லிருப்பவர்களைத்தானா ஏற்று உதவிபுரிகிறார்? நரகத்தி லிருப்பவர்களிடம் அவருக்குக் கருணையில்லையா? அங்ஙனமாயின் கடவுள் பாரபட்சமுடையவர் என்று தோன்றவில்லையா?

(14) மூசாவிற்கு புத்தகங்களையும் அற்புதங்களையும் அளித்தோம். நிந்திக்கும் குரங்குகளாக மாறுவாய் என்றோம். அக்காலத்தி லுள்ளவர்களுக்கு அது உதாரணமாவது மன்னியில் வருபவர்களுக்கும் அப்படியே புனிதமானவர்களுக்கும் அது எச்சரிக்கையாகிறது. (2, 50;61).

இப்புத்தகம் மூசா கையில் கொடுக்கப் பட்டதெனின் குர்-ஆன் கடவுளால் அளிக்கப்பட்டது என்பது பொருளற்றதாகிறது. குரானும், பைபிலும் மோசேயினிடம் அரும் பெரும் சக்தி அளிக்கப்பட்டதென்று கூறுகின்றன. இது நம்பத் தக்கதல்ல. ஒருவனும் ஆச்சரிய சக்திகளைச் செய்யும் இயல்புடையவனாய் இருக்க முடியாது. இருப்பின் ஏன் இக்காலத்தில் நாம் அத்தகைய சக்தி படைத்தவனைக் காண முடியவில்லை. இன்று இல்லாதது, பண்டைக்காலத்திலும் இருந்திருக்க முடியாது.

அறியாமையில் இருக்கும் சாதாரண ஜனங்களைக் கெட்டிக்காரனாய் இருப்பவன் ஏமாற்றுவதுபோல, மூசாவும் செய்திருக்கிறார் என்றே கொள்ள வேண்டும். கடவுள் இக்காலத்தி லிருப்பவர்களில் ஒருவனிடம் கூட ஏன் அந்த அபார சக்திகளைத் தரவில்லை. அக் கடவுள் இன்றுமிருக்கிறார். அவரைப் பின் பற்றுபவர்களும் இருக்கிறார்கள். ஏன் ஒருவரும் பெருஞ் சக்தியையும் படைத்தவர்களா யிருக்கவில்லை. மூசாவினிடம் கடவுள் ஒரு நூலைத் தந்த பிறகு, ஏன் அவர் மீண்டும் குரானை வழங்கவேண்டும்? கடவுளின் போதனை மனிதர்களைத் தீய காரியங்களிலிருந்து விலக்கி நன்மார்க்கத்திற்குக் கொண்டு வருதல் ஆயினும், பைபில், குரான் என்னும் இரண்டு புத்தகம் எதற்கு? ஒரு புத்தகம் போதாதா? மூசா கையில் கொடுத்த புத்தகத்தில் சொல்ல மறந்ததைக் கூறக் குரானை அளித்தாரா? மேலும் கடவுள் காட்டிய பாதையினின்று விலகியுள்ளவர்கள் குரங்காக மாற்றப்படுவார்கள் என்று கடவுள் கூறியது இதுவரை நடந்தேறவில்லை. எனவே இது மோசவார்த்தையாகும். மேலும் இங்ஙனம் யாராவது செய்தாலும், அவர்கள் கடவுளாகமாட்டார்கள். இங்ஙனம் கூறும் புத்தகமும் சத்திய நூலாகாது.

15. அப்படியே அல்லாவானவர் இறந்தவனை உயிர்ப்பிக்கிறார். அவர் அடையாளங்களை நீ அறிந்து கொள்வதற்காகக் காண்பிக்கிறார். (2, 67).

பழமையில் கடவுள் இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யின், அவர் ஏன் இப்பொழுது அவ்வாறு செய்தல் கூடாது? இறந்தவர்கள் தீர்ப்புத்தினம் வரையில் புதை குழியில் இருக்க வேண்டியதுதானு? உங்கள் கடவுளுக்கு நேரம் அகப்படாதோ. சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறாரா? அந்த தீர்ப் புத்தினத்தன்றுதான் அவகாசம் ஏற்படுகிறதா? செத்தவர்களைப் பிழைக்கச் செய்தல் கடவுள் இருப்பதற்காகச் செய்யப்படும் வேலையா? பூமியும், சந்திரனும், சூரியனும் அவர் இருப்பதைக் காட்டுவதற்காகச் செய்யப்படும் வேலையாகாதா? கிரகங்களின் நிலை கடவுளின் இருப்பைப் புலப்படுத்தவில்லையா?

(16) அவர்கள் எப்பொழுதும் தெய்வலோக வாசிகளாக இருப்பார்கள் (2, 75).

ஆத்மா வரம்புகுட்பட்டது. அதன் கிருத்தியங்கள் நல்லதாயினும் சரி கெட்டதாயினும் சரி வரம்பிற்குட்பட்டதே. ஆத்மா, நரகத்திற்கோ, சுவர்க்கத்திற்கோ அழைத்துச் செல்லப்படாது. கடவுள் அப்படிச் செய்தால் அவரது பாரபட்சமற்ற நியாயம் என்பதற்கு குறைவு ஏற்படும். நல்ல ஆத்மாவாயினும் சரி, தீய ஆத்மாவாயினும் சரி தீர்ப்புத்தினம் வரை காத்திருக்கவேண்டுமெனின் தீமைக்கும், நன்மைக்கும் வேற்றுமையில்லாது போய்விடுகிறது. மனித கர்மங்கள் வரம்பிற்குட் பட்டதாகையால், அதற்கு அளிக்கும், வெகுமானமோ அல்லது தண்டனையோ வரம்பிற்குட்பட்டதாகவே யிருக்கவேண்டும். முகம்மதியர்கள் இவ்வுலகம் 7000 அல்லது 8000 வருஷங்களாகத்தான் இருப்பதாக நினைக்கிறார்கள். நம்பவும் செய்கிறார்கள். அங்ஙனமாயின் கடவுள் சிருஷ்டிக்குமுன் என்ன செய்து கொண்டிருந்தார். சும்மா கையைக் கட்டிக்கொண்டு சோம்பேரியாய் இருந்தாரா? கடவுளுக்கு ஓய்வென்பது கிடையாது. எப்பொழுது வேலை செய்துகொண்டே யிருக்கிறார். அவர் சோம்பேரியல்ல. நன்மை தீமை அறிந்து அவைகளுக்கு ஏற்றவாறு வெகுமானமும், தண்டனையும் அளித்து வருகிறார். எனவே குர்-ஆன் சொல்வது உண்மையல்ல. குழந்தை விளையாட்டே ஆகும்.

(17) உன் இரத்தத்தைச் சிந்தக் கூடாதென்றும், பரஸ்பரம் இருப்பிடத்திலிருந்து விலகக்கூடாது என்றும் உம்மிடம் பிரதிக்ஞை செய்யப்பட்டபொழுது அதற்கு நீங்கள் சம்மதித்தீர்கள். அதற்குச் சாட்சிகளும் நீங்களே. நீங்கள் தான் ஒருவரை யொருவர் கொன்றீர்கள், உங்களுடைய ஜனங்களையே நீங்கள் இருப்பிடத்திலிருந்து துரத்தினீர்கள். (2, 78, 79).

மனித சமூகத்தார் சௌக்கியத்தை ஒட்டிய விதிகளையும், பாகுபாடுகளையும் செய்தல் மனிதன் வேலையா? கடவுள் வேலையா? கடவுள் எல்லாம் வல்லவராயிருக்க, மனிதனைப்போல் காரியங்கள் செய்தல் கூடாது. மனிதனைக் கொல்வதும், வருத்துவதும், அவன் சொத்துக்களைப் பறிப்பதும் தப்பு இல்லை என்று கருதுதல் எங்ஙனம் முறையாகும். இத்தகைய நம்பிக்கைக்குக் காரணம் அறியாமை. முகம்மதியக் கடவுள், கிறிஸ்தவக் கடவுளைப் போலவேதான் அனேக அம்சங்களில் இருக்கிறார். குரான் தனிப்புத்தகம் என்று சொல்லப்படினும், இது பைபிளின் எதிரொலியே யாகும்.

(18) வருங்கால வாழ்வை வாங்குபவர்கள் இவர்களே. அவர்கள் பாபம் குறைக்கப்படாது; அவர்களுக்குச் சகாயமும் கிடைக்காது. (2, 80).

இங்ஙனம் கடவுள் ஆக்கையுடனும், சந்தேகத்துடனும் நிகழ்த்தல் அவருக்கு அழகாமோ? பாபங்களைச் செய்திருப்பினை கடவுளின் ஆதரிப்பையும் பெறும், நபர்கள் யாவர். இங்ஙனம் சிலரின் பாபகிருத்தியம் மன்னிக்கப்படின் பட்சபாதமாகக் காரியங்களைச் செய்பவராகாரா? பக்தர்களின் பாபங்கள் மன்னிக்கப்படும் எனின், பக்தர்கள், பாபகிருத்தியம் செய்தல் முடியாது. எனவே எவரது துணையும் அவர்களுக்கு வேண்டியதில்லை யல்லவா? ஆதலால் இத்தகைய முரண்பாடான தத்துவத்தைக் கூறினவர் அறிஞனுகமாட்டார்; என்பது வெளிப்படை. நற்கர்மம் செய்தார் நன்மையையும், தீய கர்மங்களைப் புரிந்தோர் தண்டனையையுந்தான் ஏற்பார்கள். நல்லவர்கள் சந்தோஷத்தைப் பெறுவர். இதுதான் சத்தியமாகும்.

(19) மூசாவிற்குக் "கிரந்தத்தை" அருளினேம். அவருக்குப் பின் தீர்க்க தரிசிகளை யனுப்பினேம். மேரியம்மாளின் மகனை இயேசுவிற்குத் தெய்வ சக்தியையும் சாமர்த்தியத்தையும் (அற்புதத்தையும்) அருளினேம். எவ்வளவு தடவை தீர்க்கதரிசிகள் வந்தபோதிலும் கர்வத்தால் நிரம்பி சிலரை நிராகரித்துக் கொல்லவும் செய்கிறீர்கள். (2. 81).

கடவுள் மூசாவிக்குச் சட்டத்தை அளித்ததைக் குரான் அறியுமானல் முகம்மதியர்கள் மூசா வகுத்த சட்டத்தில் அல்லவா நம்பிக்கை வைக்க வேண்டும். ஆச்சரியங்களைப்பற்றிச் சொல்லப் பட்டிருப்பதும் பொருளற்றதாகும். சாதாரண ஜனங்களை ஏமாற்றவே தந்திரக்காரர்கள் இக்கதையைக் கட்டிவிட்டிருக்கின்றனர். இயற்கையின் தத்துவத்திற்கு விரோதமான எல்லாச் சட்டங்களும், பாகுபாடுகளும் பொய்யானதே. சிலர் ஆச்சரியங்களைச் செய்தார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்நாளில்தான் அவை செய்யப்பட வேண்டுமோ? அந்நாளில் செயயப்படுமாயின் இந்நாளிலும் செய்யப்பட வேண்டுமல்லவா? இப்பொழுது எவராலும் அந்த அபூர்வ சக்தியைக்கொள்ள முடியவில்லை. எனவே அந்நாளிலும் ஒன்றும் செய்ய முடியாது.

(20) தொழுகை செய்யாதவர்களுக்கும் அவர்கள் ஐயத்தின் நிமித்தம் தொழுகை செய்தவர்கள் அதைப்பற்றி அறிந்திருந்தும் குரான் சரீபு இறங்கினவுடன் அதை ஆதரிக்கவில்லை. காபிரிகளுக்கு அல்லாவின் சாபம். (2, 83).

இஸ்லாம் மதத்தைத் தழுவாத பிறமதத்தினரை நம்பிக்கையற்ற மதமற்ற புல்லியர் என்று அழைக்கிறீர்கள். அவர்களும் உங்களை அங்ஙனந்தான் அழைக்கிறார்கள். உங்கள் கடவுள் அவர்களைச் சபித்திருப்பதுபோல அவர்கள் கடவுளும் உங்களைச் சபிக்கவே செய்கிறது. இவைகளில் எது சரியானது. எது பொய் என்று அறிய விரும்புகிறோம். எல்லாக் கொள்கைகளிலும் தப்பு இருக்கிறது.

(21) எவனொருவன் அல்லாவின் அல்லது தேவனின் அல்லது கேபிரியிலின் அல்லது மைக்கலின் விரோதியோ அவன் அல்லாவின் சத்துருவே

ஆகிறான். ஏனென்றால் உண்மையாகக் கடவுள் காபிரியின் விரோதியா யிருக்கிறார். (2, 92).

இந்தக் கூட்டாளிகள் எங்கிருந்து வருகின்றனர். இஸ்லாம் மதம் சொல்வதுபோல் கடவுள் ஒருவர் எனின் கூட்டாளிகள் இருக்க முடியாதல்லவா? பிறருக்கு விரோதி கடவுளுக்கு விரோதியே. எனவே கடவுள் எவனுக்கும் விரோதியல்ல. கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் விரோதி என்பதில் பொருள் இல்லை.

(22) பொறுத்தருள்வாய் என்று உரை. உன் பாபங்களை எல்லாம் மன்னித்து விடுவோம், நற்காரியங்களைச் செய்வோருக்கு அதிகரிப்போம். (2, 54).

தெய்வ தத்துவம் என்று சொல்லப்படும் இவை மனிதனைப் பாபச் செயல்களைப் புரியுமாறு தூண்டவில்லையா? பாபத்திலிருந்து நீக்கப்படுவார்கள் என்று கூறப்படுகையில் ஒருவர் ஏன் பாபத்திலிருந்து விலகவேண்டும். பாபத்திலிருந்து காப்பாற்றுவேன் என்று வாக்குக் கொடுப்பவன் கடவுளாகமாட்டான். அங்ஙனம் கூறும் நூலும் சத்திய நூலாகாது. கடவுள் ஒருநாளும் நியாயமற்றதைச் செய்யமாட்டார்; பாபிகளை அவர் மன்னித்தால் அவர் நியாயம் செய்பவராகமாட்டார்.

(23) ஜனங்களின் நிமித்தம் மூசா பருகக் கேட்டபொழுது "கல்லைக் கழியால் அடியும்" என்றோம். அதிலிருந்து பன்னிரண்டு சுனைகள் பாய்ந்தது. (2, 57).

இஸ்லாம் கடவுளைத் தவிர வேறு யாரும் இவ்வளவு தைரியமாய், இத்தகைய பொய்களையும், முடியாத பொருளற்றவைகளையும், கூற முடியாது. ஒரு மலையை மாத்திரம் கோலால் தொட்டவுடன் பன்னிரண்டு ஊற்றுக் கண்கள் கிளம்பியது என்பது பெரும் சொப்படி வித்தை. மலையைத் துளைத்து தண்ணீரைவிட்டு, 12 துவாரங்களைச் செய்திருக்க வேண்டும். இல்லையேல் எங்ஙனம் ஊற்றுக்கண் நிரம்பக்கூடும்.

(24) அவருக்கு இஷ்டமான விடத்தில் தனித் தயையை அல்லாவானவர் அருளுவார். (2, 99).

கடவுள் விரும்பிய சிலருக்குத் தமது விசேஷ மன்னிப்பைக் காட்டுவாரா? அங்ஙனம் செய்யின் அவர் துஷ்டராவார். மனிதனைப் பாப கர்மத்தைச் செய்யும்படி தூண்டிய பாபத்திற்குள்ளாவார். மேலும் இங்ஙனம் ஒரு வேத நூல் கூறுமாயின் உலகில் எவரும் நற்காரியத்தைச் செய்ய முற்படார். ஏன் என்று கேட்கலாம். கடவுள் தமது இஷ்டப்படி மன்னிப்பையும் கோபத்தையும் அளிக்கிறார் என்று கூறப்படுகிறது. தன் கர்மத்திற்குத் தக்கவாறு பலன் அளிக்கப்படுவதில்லை என்பது சித்தமாகிறது. எனவே எல்லோரும் கெட்ட காரியங்களைச் செய்யவே முற்படுவார்கள்.

(25) சர்வைதயினால் உன்னை, ஜனங்கள் உன் மதத்திலிருந்து திருப்பாமலிருக்கட்டும். நம்புபவர்களின் நண்பர்கள் பலர் அதில் இருக்கின்றனர். (2, 110).

இந்த ஆச்சரியத்தை நோக்குங்கள். ஜனங்கள் தங்கள் மதத்தைவிட்டு வேறு மதம் செல்லாதிருக்க வேண்டி பக்தோபஸ்துக்களையும் செய்திருக்கிறார். இங்ஙனமாயின் சர்வ வல்லமை அற்றவரா? இத்தகைய கூற்றுகள் உண்மையாகுமா?

(26) எப்பக்கம் திரும்பியபோதிலும் அல்லாவின் முகமே (2. 109).

இது உண்மையாயின் ஏன் முகம்மதியர்கள் பிரார்த்தனை சமயம் மெக்கா இருக்கும் திசையில் திரும்பவேண்டுமென்கிறார்கள். இத்திசையாகத் திரும்ப வேண்டுமென்று கடவுள் கூறியிருப்பின் எத்திசையிலும் நான் இருக்கிறேன் என்றும் கூறியிருக்கிறார். எனவே எத்திசையிலும் திரும்பி பிரார்த்தனை செய்யலாம் அல்லவா? இந்த இரு கட்டளைகளில் எதை எடுத்துக் கொள்கிறது, எதை விட்டுவிடுவது. கடவுளுக்கு முகம் இருக்குமாயின் அந்த முகம் ஒரு திசையில்தான் இருக்கவேண்டும். எல்லா திசையிலும் இருக்க முடியாது.

(27) பூமியையும், ஆகாசத்தையும் முழுவதும் உற்பத்தி செய்தவர் அவரே. அவர் எதை வேண்டியபோதிலும் உரைக்க வேண்டியதுதான் பாக்கி, அது அப்படியே நடந்துவிடும். (2, 111).

'அப்படியே யாகட்டும்' என்று கடவுள் கூறியதை யார் பார்த்தார்கள். யாருக்கு இவ்வார்த்தை சொல்லப்பட்டன. எப்பொழுது? குர்-ஆனைச் சிருஷ்டிக்குமுன் கடவுளைத் தவிர யாருமில்லை, ஒன்றுமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'அப்படியே யாகட்டும்' என்ற வார்த்தையாலா உலகம் உண்டாச்சுது. இந்த உலகத்தின ஆக்குதலுக்குக் காரணமென்ன, காரணமில்லாது காரியம் ஏற்படல் கூடுமா? ஜடக்காரணம் இல்லாது எதுவும் செய்தல் முடியாது. ஒரு ஈயின் காலைக்கூட உன்னால் செய்யமுடியாது. கடவுளது பொருளற்ற உள்ளத்திலிருந்து சிருஷ்டி ஏற்பட்டது என்று குர்-ஆன் நம்புதல் கூடுமா?

முகம்மதியர் :—கடவுள் சர்வ வல்லமை உள்ளவர். அவர் நினைத்த எதையும் செய்ய முடியும்.

ஆரா :—'சர்வ வல்லமை' என்பதின் பொருள் என்ன?

முகம்மதியர் :—அவர் விரும்பியதைச் செய்யும் சக்தி.

ஆரா :—அவர் இன்னொரு கடவுளைச் சிருஷ்டிக்க முடியுமா? அவர் சாக முடியுமா? அவருக்கு நோய் வருமா? அறிவை இழப்பாரா?

முகம்மதியர் :—இல்லை.

ஆரா :—கடவுள் அவரது இயற்கைத் தத்துவத்திற்கு விரோதமாய் எதையும் செய்ய முடியாது என்பது இதிலிருந்து விளங்கவில்லையா? குண கர்ம ஸ்வபாவங்களுக்கு விரோதமாகவும் ஒன்றும் செய்ய முடியாது. ஒரு காரியத்தைச் செய்ய இக்காரணங்கள் தேவை. அவையாவன :—

(1) பானை செய்யக் குயவன் தேவைப்போல் படைப்பின் அதிகாரி ஒருவர் வேண்டும்.

(2) பானை செய்ய குயவன் மாத்திரம் போதுமா? மண்ணும் தேவை. அதைப்போல் ஜடமும் தேவை.

(3) பானை செய்ய ஒரு ஆயுதமும் தேவையாயிருக்கிறது. இது பிரகிருதி

ஒரு பானை செய்யக் களிமண்ணும், ஆயுதமும், பானை சிருஷ்டியின் முன்னிருக்க வேண்டும். இதேபோல் கடவுளும், ஜட பதார்த்தமும், பிரகிருதியும் உலகத்தை ஆக்க வேண்டும். எனவே குர்-ஆன் சொல்வது பொருளற்றது. அறியாமையினின்று எழுந்தது.

(28) காபா என்பது புனிதமென்று நான் ஆக்ஞாபித்தபடியால் ஆபிரகாமினுடைய இடஞ்சென்று தொழுகை செய்யவேண்டும். (2, 117).

காபா வென்னுமிடத்தைப் புண்ணிய ஸ்தலமாகச் செய்யுமுன் கடவுள் வேறு ஒரு ஸ்தலத்தையும் விடுக்கவில்லையா? அப்படிச் செய்யவில்லை எனின் ஏன் இப்பொழுது செய்யவேண்டும்? காபா புண்ணிய ஸ்தலமாகுமுன் ஜனங்கள் எங்கு சென்று தொழுதார்கள். ஐயோ பாவம், காபாவிற்குமுன் பிறந்த ஜனங்களுக்குத் தொழவும் புண்ணிய ஸ்தலம் கிடையாது. காபாவைப் புண்ணிய ஸ்தலமாக்குவதற்கு முன் முகம்மதியக் கடவுளுக்கு ஒரு புண்ணிய ஸ்தலம் ஏற்படுத்த வேண்டுமென்று தோன்றவில்லை போலும்: பரிதாபம்.

(29) தன் ஜீவனை இழிவாகச் செய்தவனைத் தவிர வேறு எவன் ஆபிரகாமை விரும்பாமல் இரான். இவ்வுலகில் அவனை விரும்பினோம். வருங்காலத்தில் நியாயத்தில் சேர்ந்திருப்பான். (2, 124).

ஆபிரகாமை நம்பாதவன் முட்டாள் என்பது உண்மையாகுமா? ஏன் கடவுள் ஆபிரகாமை மாத்திரம் மதஸ்தாபகராக எடுக்கவேண்டும். ஆபிரஹாம் பக்திமான் என்றால், அவரைப்போல் அநேக பக்திமான்களில்லையா? ஏன் அவர்களை எடுத்திருக்கக் கூடாது. ஆபிரஹாம் பக்திமான் இல்லாதிருந்தும் எடுத்திருப்பின் கடவுள் துஷ்டர்களைத்தான் தமக்கு வேண்டியவர்களாகச் சேர்த்துக் கொள்கிறார் என்பது சித்தமாகிறது.

30. ஆகாசத்தின் ஒவ்வொரு திசையிலும் அவர் திரும்புவதைப் பார்த்திருக்கிறோம். கிப்லாப்பக்கம் உங்களைப் பார்க்கச் செய்வோம். அது உங்களுக்கு இன்பமளிக்கும். புனித மசூதியின் திசையில் உன் முகத்தைத் திருப்பு. எங்கு இருந்தபோதிலும் அப்பக்கமே உன் முகத்தைத் திருப்புவாயாக. (2, 139).

இது உருவ வணக்கமே யாகும் முரட்டுத்தனமான மூர்த்தி பூஜையே யாகும்.

முகம்மதியர்:—முகம்மதியர்களாகிய நாங்கள் உருவ வழிப்பாட்டுக்காரர்களல்ல. உருவத்தைத் தகர்ப்பவர்கள். ஏனெனில் கிப்லாவைக் கடவுளென்று நம்பவில்லை.

ஆராய்ச்சிக்காரன்:—உருவத்தை வழிபடுபவர் என்று உங்களாலழைக்கப்பட்டவர்களும் உருவத்தை வழிபடவில்லை. உருவத்தினுள் இருக்கும் கடவுளைத்

தான் வழிபடுகிறுர்கள். நீங்கள் உருவத்தை உடைப்பவர்களாயின் ஏன் பெரும் உருவமான கிப்ளாவை உடைக்கக் கூடாது ?

முக :—நல்லது. கிப்ளாவை நோக்குவதற்குக் குர்-ஆன் அத்தாட்சியிருக்கிறது. உருவ வழிபாட்டிற்கு வேதத்தில் எதுவும் சொல்லப்படவிட்டு. நாங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

ஆரா :—உங்களுக்குக் குர்-ஆன் எங்ஙனம் சொல்லுகிறதோ அங்ஙனமே அவர்களது புராணங்களும் கூறுகின்றன. நீங்கள் குர்-ஆனைக் கடவுள் வாக்கென நம்புவதுபோல அவர்களும் வியாச பகவானுல் வகுக்கப்பட்ட புராணங்களைக் கடவுள் வார்த்தைக்குச் சமானமாக மதிக்கிறுர்கள். உங்களுக்கும், புராணிகர்களுக்கும் ஒரு வித்தியாசமுண்டு. நீங்கள் ஒரு பெரிய உருவத்தை வழிபடுகிறீர்கள். புராணிகர்கள் பல சிறிய உருவங்களை வழிபடுகின்றனர். நீங்கள் வேதத்தைப் பின்பற்றி இந்த வழக்கங்களை விடுதலே சரியான வழி. நீங்கள் மலைபோன்ற மசூதியாகிய உருவ வழிபாட்டை விடாது, பிறரை விக்கிரக ஆராதனைக்காரரென்று தூற்றுவது உங்களுக்கு வெட்கமாயில்லையா ? நீங்கள் பிறரைப் பழிக்குமுன் உயர்வைப் பெற முயலுங்கள். உருவ வழிபாட்டை விடுங்கள்.

31. *அல்லாவின் காரியத்தில் இறந்தவர்கள் இறந்தவர்களல்ல. அவர்கள் உயிருடன் இருப்பவர்களே. நீ இதை அறிகிறுய் இல்லை.* (**2**, 149).

ஏன் ஒருவரைக் கொல்லவேண்டும் ? இதெல்லாம் உங்களுடைய சுய நலத்திற்காகச் செய்யப்படும் காரியமல்லவா ? ஏன் யோக்கிய பொறுப்புடன் இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. பிறரைக் கொன்று கொள்ளையடித்து நீங்கள் நன்ருயிருக்கப் பிறருடன் சண்டை செய்கிறீர்கள்.

32. *அல்லாவானவன் கடுந்துயரத்தை யளிப்பவன். ஷைத்தானை ஒரு நாளும் தொடராதே. நீ யறியாத தீயச் செயல்களையும் கடுங்காரியங்களையும் அவன் செய்யச் சொல்வான்.* (**2**, 164-165).

உங்கள் கடவுள் தீயோர்களைத் தண்டித்து நல்லோர்களைக் காப்பாற்றியும் வருகிறுரா ? அல்லது முகம்மதியர்களைக் காப்பாற்றியும் மற்றவர்களை வருத்தியும் வருகிறுரா ? பின்னர் கூறியதை எங்கள் கடவுள் செய்யின் அவர் கடவுளாகமாட்டார். முன்னர் சொன்ன விதமாயிருப்பின் குர்-ஆனிலும் மகம்மதுனிடமும் நம்பிக்கை பொய்யாகும். கடவுள் ஏன் சயித்தானைப் படைக்க வேண்டும் ? படைத்ததினுல்லவா அவன் மனித ஜாதியை ஏமாற்றி வருகிறுன். கடவுளுக்கு வருங்காலம் தெரியாதா ? மனிதனைப் பரீட்சிக்கச் சயித்தானைப் படைத்தார் கடவுள் என்று சொல்லுவீர்களே யானுல் இது ஒழுங்காகாது. கட்டுக்குட்பட்ட அறிவை யுடையவன்தான் இத்தகைய பரீட்சை முறைகளை அநுசரிப்பான். சரி சயித்தான் மனிதவர்க்கத்தைத் தீய வழிகளில் திருப்புகிறுன் என்ருலும் சயித்தானைக் கெட்டகாரியம் செய்யுமாறு தூண்டியது யார்? சயித்தான் தன்னைத் தானே தூண்டிக் கொண்டான் என்ருல் ஏன் பிறரும் தன்னைத் தானே கெடுத்துக் கொள்ள முடியாது ? அல்லது கடவுள் பிசாசை

ஏமாற்றுபவராயின், இவர் பிசாசைவிடக் கெட்டவராகாரா? கடவுளைப்பற்றி இங்ஙனம் கூறல் முடியாது. கெட்டவழியில் செல்லுபவர்கள் அறியாமையினால் தாங்களாகவே தான் செல்லுகிறார்கள்.

33. தானாக இறந்ததும், இரத்தமும், பன்றி மாம்சமும், தின்னத் தகாதவை. அல்லாவின் பெயரன்னியில் அழிக்கப் பட்டதையும் அங்ஙனமே கருதவேண்டும். (**2**, 168).

இங்கு நாம் கொஞ்சம் நிதானித்தல் வேண்டும். பிராணிகள் கொல்லப் பட்டாலும் சரி, தானாச் செத்தாலும் சரி, அது சவமே. பன்றியின் மாமிசம் தடுக்கப்பட்டிருக்கிறது. (ஆனால் மனிதன் மாமிசம் தடுக்கப்படவில்லை) எனவே நாம் மனிதனைக் கொன்று தின்னலாம் என்று கொள்ளல் கூடுமா? இங்ஙனம் கூறில் கடவுள் பேரில் பழிசுமத்தல் ஆகுமா? பிராணிகளிடத்தில் முகம்மதியக் கடவுள் அன்பு கொண்டவரல்லவா? மேலும் முகம்மதியக் கடவுள் மனித னுக்கு உபயோகமாயுள்ள பிராணிகளைக் கொல்லவேண்டாம் என்று சொல்லவில்லை. இதனால் கடவுள் மனித ஜாதியின் விரோதியாய் விட்டார். அம்மட்டோ? தன்மீது பாபங்களைச் சுமத்திக் கொண்டார். உண்மையான கடவுள் இங்ஙனம் ஒன்றும் கூறியிருக்க முடியாது.

34. நோன்பின் இரவுகளில் மனைவிகளோடு நன்றாய்ச் சேரலாம். அவர் கள் உங்களுடைய உடை. நீங்கள் அவர்களுடைய உடை. அதில் எற்படும் பிழையை அறிகிறார். ஆனால் உம்மைப் பார்த்து மன்னிக்கிறார். எதற்காக உம்மை உண்டு செய்தாரோ அதை மனம் திருப்தியளிக்குமளவும் அனுபவி. உதயத்தில் கருப்பு வெள்ளை நூல் வித்தியாசம் காணுங்கால் அதை விட்டுவிடு. (**2**. 183).

முகம்மதிய மதம் கிளம்புமுன் ஒரு அராபியன் சாந்திராயன விரதம் எப்பொழுது எப்படி அனுஷ்டிப்பதென்று ஒரு புராணிகனைக் கேட்டிருக்க வேண்டும். இப்புராணிகன் விஷயத்தைச் சரியாய் அறியாது சந்திரனைப் பார்த்துச் சாப்பிடவேண்டும் என்று கூறியிருக்க வேண்டும். முகம்மதியர்கள் இவ்விரதத்தை மாறான ஒரு வழியில் அனுஷ்டிக்கத் துவக்கினர் போலும். இந்தச் சாந்திராயன விரதத்திற்கும் முகம்மதியர்கள் அனுஷ்டிக்கும் விரதத் கும் வித்தியாசமுண்டு. சாந்திராயன விரதத்தில் மாதருடன்கூடல் கூடாது. குர்-ஆன் பூர்ண ஆசையுடன் இந்த விரதகாலத்தில் மாதர்களை யனுபவி யென்று கூறிவிட்டது. மேலும் விரதம் என்றால் பட்டினியிருப்பது என்பது பொருள். முகம்மதியர்கள் இரவில் பலமுறையும் இவ்விரதகாலத்தில் புசிக்க லாம். பகலில் சாப்பிடாமலும் இரவில் சாப்பிடுவதும் விரதமாகுமா? மேலும் இது இயற்கைக்கும் விரோதமாயிருக்கிறது

35. உன்னிடம் சண்டை செய்பவர்களிடம் அல்லாவின் காரணத்திற்காகச் சண்டை செய். எங்கு பார்த்தாலும் அவர்களைக் கொன்றுவிடு. எங்கிருந் தெல்லாம் உங்களைத் துரத்தினார்களோ அங்கிருந்தெல்லாம் அவர்களைத் துரத்து. கொலையைக் காட்டிலும் கலகச் சச்சரவு தீங்கானது. உன் சச்சரவு ஒழி யும் பொழுது கொலையை நிறுத்து. (**2**, 186-187, 189).

குர்.ஆனில் இவ்விஷயங்களில்லாவிடில் முகம்மதியர்கள் பிற மதத்தாரிடம் இவ்வளவு கொடுமையுடன் இருக்கமாட்டார்கள். பல நிரபராதிகளை முகம்மதியர்கள் மதத்தின் பெயரால் கொன்றனர். முகம்மதியரல்லதவர்களைக் கொல்லல் நியாயம் என்று முகம்மதியர் கருதுகிறார்கள் போலும். இங்ஙனம் இவர்கள் கடவுள் " சண்டை " ப்பட்டு அரசியல் செல்வாக்கையும் இழந்தனர். இஸ்லாம் கொடிய தத்துவங்களைப் போதிக்கிறது. நமது வீட்டில் புகுந்து திருடியவர் வீட்டில் நாமும் புகுந்து திருடவேண்டுமா? ஒரு அறியாதவன் ஒரு காரியத்தைச் செய்யின் நாமும் அதை உடனே செய்தல் வேண்டுமா? இதுதான் அறவழியோ. இவ்விதம் கடவுளும் அவரது தீர்க்கதரிசிகளும் கூறல் கூடுமா? இங்ஙனம் சுயநலப் பிரியர்களும், முட்டாள்களும் அல்லவா கூறுவார்கள்.

36. அவர் ஒழுக்கின்மையை விரும்புகிறதில்லை (சண்டையின் சிநேகதரில்லை). நம்புவோர்களே !! உண்மை மதத்தில் முழுவதும் பிரவேசியுங்கள் (**2**, 202, 204).

கடவுள் குழப்பத்தை விரும்பாதிருந்தால் ஏன் சண்டையைச் செய்யச் சொல்லவேண்டும்? முகம்மதிய மதத்தைத் தழுபவன் மீதுதான் அவர் அன்பு கொள்கிறார். அங்ஙனமாயின் அவர் ஓர் வஞ்சனைக்காரர் என்பதில் என்ன தடை? இத்தகையார் உலகக் கடவுளாய் இருத்தல் முடியாது? குர்-ஆனில் கூறும் கடவுளும் உண்மைக் கடவுளல்ல. குர்-ஆனும் தேவ வாக்கல்ல.

37. இஷ்டப்பட்டவருக்கு அளவன்னியில் அளிக்கிறார். (**2**, 208).

நம்முடைய நன்மை தீமைகளைக் கவனியாது அவர் எல்லோருக்கும் அருள் புரிகிறாரா? எனவே துன்பத்தை யளிப்பதும் இன்பத்தைக் கொடுப்பதும் அவரிஷ்டத்தைப் பொருத்திருக்கிறதா? இத்தகைய துர்போதனைகள் தான் முகம்மதியர்களைக் கெடுத்துவிட்டது. அவர்களைத் தீய வழிகளில் நடத்தி வருகிறது. இத்தகைய துர்ப்போதனையின்படி நடவாத முகம்மதியர்களில் பலர் அற வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள்.

38. ஸ்திரீகளின் தீண்டலைப்பற்றிக் கேட்பார்கள். ஆமாம் தீண்டல் தான். அவர்கள் சுத்தமாகும் வரையில் அவர்களை அணுகாமல் தனிமையாய் இருங்கள். அவர்கள் சுத்தமானவுடன் அவர்களை அணுகுங்கள். அதுதான் அல்லாவின் ஆக்ஞை. ஸ்திரீகள் உங்களின் பயிரிடும் நிலம் போன்றவர்கள். உங்களது இஷ்டம்போல் அவர்களைச் சேருங்கள். கவனமற்ற ஆணைகளுக்கு அல்லாவானவர் உங்களைத் தண்டிக்கமாட்டார். (**2**, 222, 209. 224).

மாத விடாய்க்காலத்தில் பெண்களிடம் போகலாகதென்று தடுக்கப்பட்டிருத்தல் மிகவும் சிறந்தது. ஆனால் பெண்களை வயலுக்கு ஒப்பிட்டு புருஷர்கள் இஷ்டப்பட்ட பொழுது அவர்களிடம் செல்லலாம் என்று கூறல் மனிதனைக் காமியாக்கும். கவனமற்ற சத்தியம் செய்பவர்களைக் கடவுள் தண்டிக்கவில்லை யெனின் எல்லா மனிதர்களும் பொய்யர்களாகி விடுவார்கள். கடவுள் மனிதர்களைப் பொய் சொல்லும் வரையில் தூண்டினவராவர்,

39. நல்லதோர் கடனை அல்லாவுக்கு யார் அளிப்பார்கள்? அவனுக்கு மறு படியும் மறுபடியும் இருமடங்கு பொருள் ஏற்படும். (**2**, 246).

கடவுள் ஏன் கடன் வாங்கவேண்டும்? உலகத்தைச் சிருஷ்டிக்கக் கடவுளுக்கு மனிதன் உதவி வேண்டுமா? கடவுளுக்கு மனிதன உதவி எந்நாளும் வேண்டாம். அறிவிலிகள் கடவுளுக்கு இந்த இழிவான குணங்களைக் கற்பிப்பார்கள். கடவுள் பொக்கிஷம் வற்றிவிட்டதா? கடவுள் வர்த்தகம் செய்து ஏழையாய்ப் போய்விட்டாரா? தனக்குக் கடன் கொடுப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்ததைப்போல் இரட்டிப்பு மடங்கு தருவேன் என்பது வியாபாரிகள் கூறும் வார்த்தையைப் போலாகவில்லையா? பொருளில்லாதவனும் தனது கைப்பொருளுக்குமேல் செலவழிப்பவனுந்தான் இத்தகைய வார்த்தைகளைக் கூறிக் கடன் வாங்குவான். கடவுள் அங்ஙனம் செய்யமாட்டார்.

40. சிலர் நம்பினவர்கள். சிலர் காபிரிகள். அல்லாவானவர் இஷ்டம் வைத்திருந்தால் அவர்கள் இங்ஙனம் சண்டை யிடமாட்டார்கள். அல்லாவானவர் இஷ்டமானதைச் செய்கிறார். (**2**, 254).

உலகத்தினிடம் சண்டைகளெல்லாம் கடவுள் விருப்பத்தினலா உண்டாகிறது. இத்தகைய பாபங்களைக் கடவுள் விருப்பங் காரணமாகச் செய்யலாமா? இங்ஙனம் விரும்புபவனும், விருப்பத்தை யொட்டி காரியங்களை நிகழ்த்துபவனும் ஒருபொழுதும் கடவுளாகமாட்டான் கடவுள் ஒரு புறமிருக்க நற்கிருத்தியங்களைச் செய்யும் மனிதனும் இத்தகைய நிகழ்ச்சிகளை ஏற்படுமாறு செய்யமாட்டான்.

41. பூமியிலும், வானத்திலும் உள்ளதெல்லாம் அவருக்காகவே. அவருடைய நாற்காலி வானத்திற்கும், பூமிக்கும் சமானமா யிருக்கிறது. (**2**. 150).

கடவுள் கிரகங்களையும், வானத்தையும, மற்றவைகளையும் ஜீவன்களின் நன்மைக்காகப் படைத்தார். தமது நலத்திற்கல்ல. தமது இச்சையைக் கடவுள் செய்வர். இதனுல் கடவுளுக்குப் "பூர்ணகாமன்" என்று பெயருண்டு. கடவுளுக்கு ஒன்றுந் தேவையில்லை. எதனுடைய உதவியில்லாமலும் அவர் சுகமாயிருக்க முடியும். நாற்காலி முதலிய புறப்பொருளைத் தேடுபவன் கடவுளுமல்ல.

42. "அல்லாவானவர் சூரியனைக் கிழக்கிலிருந்து. உதிக்கச் செய்கிறபடியினுல் நீ, மேற்கிலிருந்து, செய்வாயோ" காபிரி கலவரத்தை யடைந்தான். ஏனென்றால், அல்லாவானவர் தீயோனுக்கு வழிகாட்டுகிறார் இல்லை. (**2**, 260).

என்னே அறியாமை! அதனுல் ஏற்படும் மயக்கம்!! சூரியன் கிழக்கிலும் உதிக்கவில்லை; மேற்கிலும் முடியவில்லை, மேற்கிலும் உதயமாகவில்லை; கிழக்கிலும் மறையவில்லை. தன்னிருப்பிடத்தைக் சுற்றிக் கொண்டிருக்கிறது. குர்ஆனுக்கு வான சாஸ்திரமுந் தெரியவில்லை; பூமி சாஸ்திரமுந் தெரியவில்லை. கடவுள தப்பு செய்கிறவருக்குத் துணையா யிருக்கமாட்டார். எனவே நல்லவர்களுக்கு அவருடைய துணை தேவையில்லை. வழி தப்பியிருக்கும் அறி

விலிகளுக்குத்தான் துணைவன் வேண்டும். குர்ஆன் கடவுள் அறியாதவனுக்கு உதவி செய்தல் என்னும் கடமையிலிருந்து வழுவிவிட்டார்.

43. “நான்கு பட்சிகளை எடுத்துத் துண்டு துண்டாகச் செய்து ஒவ்வொரு மலையிலும் ஒரு பாகத்தை வைத்து, நீ கூப்பிட்டால் அவைகள் வேகமாக வருமென்று” அல்லாவானவர் உரைத்தார். (2. 262).

இதிலிருந்து முகம்மதியக் கடவுள் வித்தையாண்டியாகச் செய்து கொண்டு விட்டார் அவரது கடவுட்டன்மை இத்தகைய செய்கைகளில் தானா விருக்கிறது. அறிஞர் இக்கடவுளை விட்டகன்று தூரத்திலிருப்பர். அறிவிலிகள் தான் இக்கடவுளின் மாயவலையில் சிக்கிக்கொள்வர். முகம்மதியக் கடவுள் தன்னை உயர்த்திக் கொள்வதற்குப் பதிலாக வீழ்த்திக் கொள்கிறார்.

44. இஷ்டமானவர்களுக்கு வழிகாட்டுகிறார். (2, 274).

தனக்கு இஷ்டமானவர்களைத்தான் கடவுள் சரியான வழியில் நடத்துகிறார் என்றால் தமக்கு இஷ்டமில்லாதவர்களைத் தவறான வழியில் நடத்துகிறாரென்று விளங்கவில்லையா? எல்லோரையும் பாரபட்சமில்லாது நடத்துபவர்தான் உண்மையான கடவுளாவார்.

45. இஷ்டம் வைத்தவரைப் பொறுத்தருள்வார். இஷ்டமானவரைத் தண்டிக்கச் செய்கிறார். ஏனென்றால் அவர் சர்வ சக்திமான். (2, 266).

மன்னிக்கத் தக்கவர்களை மன்னிக்காதும், மன்னிக்கத் தகாதவர்களை மன்னிக்கும் கடவுள் காரியங்களைச் செய்வாரானால் அவர் ஒரு கொடுங்கோலனாகமாட்டாரா? கடவுள் தமது இஷ்ட காரியங்களை நடத்தினால் ஆத்மா கர்மங்களுக்கு எங்ஙனம் ஜவாப்தாரியாகும்? ராணுவக்காரன் தனது அதிகாரியின் ஆணைப்படி ஒருவனைக் கொன்றால் அந்த ராணுவக்காரன் இக்கொலைக்கு ஜவாப்தாரியல்ல. எனவே ஆத்மாவும் ஜவாப்தாரியல்ல.

46. அல்லாவின் முன்னிலையில் பயப்படுவோனுக்கு உண்டாகும் சிறந்த வஸ்துக்களைச் சொல்லட்டுமா. அங்கு பூங்காவனம் உண்டு, அதன்கீழ் ஆறுகள் ஓடும். அங்கு எப்பொழுதும் புனிதபெண்கள் இருக்கிறார்கள், ஏனென்றால் கடவுள் தனது தாசர்களைக் கருதுகிறார். (3, 12).

இது சுவர்க்கமா அல்லது வேசிகள் வசிக்கும் இல்லமா? இத்தகையோனை நாம் கடவுள் என்றழைப்பதா? அல்லது காமியென்றழைப்பதா? இத்தகைய நூலை அறிவாளி சத்திய நூலெனக் கொள்ளமாட்டான். கடவுள் ஏன் பாரபட்சம் காட்டவேண்டும்? சுவர்க்கத்தில் வாழும் மாதர்கள் எங்கே பிறந்தவர்கள்? இவ்வுலகில் பிறந்து பின்னர் சுவர்ககம் சென்றார்களா? பிறக்காமலே அங்ஙனமே அங்கேயிருக்கிறார்களா? இவ்வுலகத்தில்தான் பிறந்து அங்கு சென்றார்களெனினும் அவர்கள் தங்களது புருஷனுக்கு முன் அங்கு செல்லவேண்டும். தீர்ப்பு தினத்திற்குமுன் ஏன் கடவுள் மாதர்களை மாத்திரம் கவனிக்கவேண்டும். மாதர்களை பொட்டி அவரது சட்டத்திற்கு விரோதமாகக் காரியங்களைச் செய்கிறார். சுவர்க்கத்திலேயே இருக்கிறார்கள் எனின் அவர்கள் எங்ஙனம் அவர்களுடைய காமத்தை அடக்கமுடியும். அல்லது மாதர்கள்

தங்கள் புருஷர்களுடன் தானிருக்கிறார்களெனின், கடவுள் எங்ஙனம் தன்னிடம் அன்புகொண்டவர்களுக்குச் சுவர்க்கத்தில் பெண்களைக் கொடுக்க முடியும்? ஏன் கடவுள் மனிதர்களையும் சுவர்க்கத்தில் எப்பொழுதும் வைத்துக் கொள்ளவில்லை? இதிலிருந்து முகம்மதிய கடவுள் அறிவிலி என்றும் நியாய மற்றவரென்றும் புலனாகவில்லையா?

47. அல்லாவின் உண்மை மதம், இஸ்லாமே. (3, 17.

கடவுள் என்பவர் முகம்மதியர்களுக்குத்தான் சொந்தமானவரோ. ஆயிரம் வருடங்களுக்கு முன் தெய்வமதம் நிலைநின்று வரவில்லையா? இதிலிருந்து குர்-ஆனில் சொல்லப்படுவது கடவுள் வாக்கு அல்லவென்பதும் ஒரு பிடிவாதக்காரன் வார்த்தையென்பதும் புலனாகவில்லையா?

48. ஜீவன்கள் சம்பாதித்ததெல்லாம் அவைகளுக்கே கொடுக்கப்படும். அநியாயம் ஒருபொழுதும் செய்யப்படமாட்டாது. சர்வசக்தி அமைந்த அல்லாவே! இஷ்டமானவர்களுக்குக் கொடுத்து மற்றவர்களிடமிருந்து எடுத்துவிடுகிறாய். இஷ்டமுடையோனை உயர்த்தி எனையோனைக் இறக்கிவிடுகிறாய். எல்லாம் உன் கையிலேயே. இரவு முடிவுபெற்று பகலாவதற்கும் பகல் இரவாவதற்கும் நீயே காரணம். இறந்தவனை உயிருடனும், உயிருள்ளவனை இறக்கவுஞ் செய்கிறாய். அளவன்னியில் இஷ்டமுடையோனுக்கு ஆதரவு அளிக்கிறாய். காபிரிகளை ஒருபோதும் நண்பர்களாகக் கருதாதே. நம்புகிறவர்களே அதற்கு யோக்கியதை. இங்ஙனஞ் செய்வோர்கள் அவனிடமிருந்து ஒன்றையும் எதிர்பார்த்தால் வேண்டாம். அல்லாவை நேசித்தால் என்னைப் பின்பற்று. அல்லா உன்னை நேசித்து உன்னை பொறுத்தருள்வார். ஏனென்றால் பொறுத்தருளுகிறவனும் தயாபரனும் அவரே. (3, 21-24 27).

ஒவ்வொரு ஆத்மாவும் தனது கர்மங்களுக்கேற்றவாறு தண்டனையையே நன்மையையோ பெறுகிறதெனின், ஒரு ஆத்மா செய்த பாபங்கள் மன்னிக்கப்படலாகாது. பாபத்தை மன்னிப்பது நியாய விரோதமாகும். கடவுள் சட்டம் மாற்றவும், மீறவும் முடியாதது. எனவே இறந்தவர்களை உயிர்ப் பிழைக்கச் செய்வதும் உயிரோடிருப்பவனைச் சாகச் செய்வதும் முடியாத காரியமாகும்.

நிற்க இஸ்லாம் மதத்தைச் சேராதவரைக் காபிரிகளென்று அழைத்தல் முறையோ? இங்ஙனம் கூறல் சிறுமைத் தனத்தையல்லவா காட்டுகிறது. பிற மதத்தினுள்ள மிகவும் நல்லவர்களான மனிதர்களுடனும், கூட்டுறவு வைத்துக் கொள்ளலாகாது என்று முகம்மதியர்களுக்குப் போதிக்கும் பிராணி கடவுளாகுமா? துஷ்டராயினும் முகம்மதியர்களாயின் நண்பர்களெனக்கொள் என்றும், கூறுகிறது. அதிலிருந்து குர்-ஆன் கடவுளும், குர்-ஆனும் முகம்மதியர்களும் அறியாமை, பிடிவாதம், என்னும் நோயின் வசமாயிருக்கிறார்களென்பது விளங்கும். இருட்டில் நடமாடுகின்றனர், வாசகர்களே கவனியுங்கள்!! முகம்மது சாயார்த்தியத்தைக் கவனியுங்கள். முகம்மதிய மதத்தினரைக் கடவுள் நேசிக்கிறாரென்றும், அவருடைய பாபங்களை மன்னிப்பார் என்றும் முகம்மது கூறுகிறார். இது துலவிய ஹிருதயத்தைக் காட்டவில்லை. சயநலத்தைக் கருதியே முகம்மது குர்-ஆனைச் செய்தார்.

49. மேரியே! அல்லா உன்னையே புனிதமாக்கினர். எல்லாப் பெண்களிலும் உயர்ந்தவள் நீயே! (3, 33).

கடவுளும் தேவதைகளும் பூலோகம் வந்து மனிதர்களுடன் அக்காலத்தில் பேசினர்கள் என்பதை நாம் எப்படி நம்புவது? அக்காலத்தில் ஜனங்கள் நல்லவர்களா யிருந்தனரென்று கூறலாம். அது ஏற்கக் கூடியதல்ல. அக்காலத்தில் அதிகமாகச் சனங்கள் நாகரிகமில்லாது கல்வி அறிவு இல்லாது இருந்து வந்தார். எனவே தான் இந்த கிறிஸ்துவ மதமும் முகம்மதிய மதமும் கல்வி அறிவில்லாத ஜனங்களிடம் வேறு ஊன்றிற்று. அறிவு ஒளியுடன் கூடின இந்நாளில் எவரும் இந்திர ஜாலங்களை நம்பமாட்டார்கள். இந்த நம்பிக்கையும் சுருங்கிவருகிறது.

50. "ஆகட்டு" மென்ருர். அப்படியே முடிந்தது. காபிரிகள் அல்லாவிடம் வஞ்சகஞ் செய்தார்கள். அல்லாவும் அப்படியே செய்தார். ஏனென்ருல் அவர் இதில் மகா தந்திரசாலி. (3, 52-50).

குர்-ஆன் கூற்றின்படி சிருஷ்டிக்குமுன் கடவுளைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை. எனவே கடவுள் யாருக்கு இந்த உத்தரவிட்டார்? எது உண்டாயிற்று? இக்கேழ்விகளுக்கு முகம்மதியர்கள் ஏழு ஜன்மமெடுத்தாலும் பதில் கூற முடியாது. காரண பதார்த்தமில்லாது காரியம் ஒருநாளும் ஏற்படாது. வேறு விதமாக எண்ணுபவர்கள் தனது பிறப்பிற்குத் தனது பெற்ருேர்களை மறப்பவர்கள் ஆவார்கள். பிறரை ஏமாற்றுபவரும், தந்திரங்கள் செய்பவரும், ஒருநாளும் கடவுளாகமாட்டான். அவனைக் கடவுளென்றும் அழைக்கக் கூடாது.

51. மேலிருந்து மூவாயிரம் தேவர்களைக் கொடுத்து உதவுவது போதாதா. (3, 120).

உண்மையில் கடவுள் 3000 தேவதைகளின் துணைகொண்டு முகம்மதியர்களுக்கு உதவி செய்திருக்குமேயானல் ஏன் இப்பொழுதும் அங்ஙனம் செய்தல் கூடாது. இந்தியாவிலும், மற்ற நாடுகளிலும், அவர்கள் ஆட்சி புரிய உதவக்கூடாது? சாதாரண சனங்களை ஏமாற்றவே இம்மேற்கோள் செய்யப்பட்டிருக்கிறது. சாதாரண ஜனங்களை முகம்மதிய வலையில் சிக்கவைக்க இது ஒரு கருவியாகும்.

52. நம்பாதவர்களிலிருந்து என்னைக் காப்பாற்றும், அல்லாவே!! அல்லாவே உன் உண்மைத் தலைவன், உண்மை சகாய யளிப்பவன், கடவுள் பாதையில் கொல்லப்பட்டாலும், இறந்தாலும். (3, 141, 142, 151).

வாசகர்கள் இங்கு முகம்மதியர்களின் பெரும் பிழையை நன்கு கவனிக்க வேண்டும். தங்கள் மதத்திற்கு வேறுபாடான மத நம்பிக்கையுள்ளவர்களின் அழிவிற்கு முகம்மதியர்கள் பிரார்த்தனை செய்கின்றனர். கடவுள் இவர்களது பிரார்த்தனைகளைப் பூர்த்தி செய்துவைக்கக் கூடிய அவ்வளவு அசடரா? மேலும் கடவுள் முகம்மதியர்களின் உண்மையான துணைவராயிருப்பின் ஏன் முகம்மதியர்கள் தாங்கள் தொடுக்கும் காரியங்கள் அனைத்திலும் வெற்றி பெறுகிறதில்லை. நிற்கக் குர்-ஆனின்படி கடவுள் முகம்மதியர்கள் பால் அதிக

நேசம் கொண்டவராயிருக்கிறார். இவர் இத்தகைய பாரபட்ச முடையவரா யிருப்பின் நல்லவர்கள் அவர் வழிபடத் தகுந்தவர் அல்லர்.

> 53. அல்லாவின் இரகசியத்தை உனக்கு வெளியிடக் கட்டுப்படவில்லை. அவைகளைத் தூதர்கள் அறியும்வண்ணஞ் செய்வார். ஆதலால் தூதர்களையும், அவரையும் நம்பு. (3, 174).

கடவுளைத் தவிர தாங்கள் யாரையும் பணிவதில்லை யென்று முகம்மதியர் கள் கூறுகின்றனர். அங்ஙனமிருக்க இம்மேற்கோள் ஏன் முகம்மது நபியை உயர்த்துகிறது? அவரிடம் நம்பிக்கை வைக்குமாறு கூறுகிறது. இதிலிருந்து கடவுள் நிகரற்றவரென்று கூற முடியாதல்லவா? முகம்மது தீர்க்கதரிசி என்ற வகையில் அவரிடம் நம்பிக்கை வைக்க வேண்டுமெனின் தீர்க்கதரிசிக்குத் தான் அவசியமேது? தீர்க்கதரிசியின் துணையில்லாது கடவுளுக்கு அவர் காரியத்தைச் செய்ய முடியாதாயின் கடவுள் வல்வமையற்றவரென்று புலனாக விலலையா?

> 54. நம்புபவர்களே! பொறுமையா யிருங்கள். அததனிடத்தில் அவ் வவைகளை இறுத்துங்கள். சண்டைசெய்து கொண்டே இருங்கள். முத்தி அடைய அல்லாவிற்கு பயப்படுங்கள். (3, 178).

குர்-ஆன் கடவுளும் தீர்க்கதரிசியும் சண்டைக்காரர்கள். தன்னைப்பின் தொடர்பவர்களைச் சண்டையிடுமாறு கூறும் மனிதன் அமைதியை குலைப் பவனாவன். ஒருவன் கடவுளுக்குப் பயந்திருப்பதினால் மோட்சம் பெறுவானா? அல்லது நியாயமற்ற சண்டையிலிருந்து விலகியிருந்து மோட்சம் பெறுவானா? முன்னது பொருளற்றது: பின்னது சரியானது.

> 55. இவைகளெல்லாம் அல்வாவின் எல்லைகள். அல்லாவையும், தூதனை யும் நம்புபவர்கள் ஓடும் அருவிகளுள்ள விண்ணை அணுகுவார்கள். அதுதான் மாணிடமோக்கம் அல்லவோ அல்லது தீர்க்கதரிசியின் கட்டளையைத் தாண்டு கிறவர்கள் அவர் எல்லையிலிருந்து நீக்கப்படுவர். அழியா நெருப்பில் எரிக்கப் படுவன் நித்திய கட்டம் அவன் துக்கத்தை அதிகரிக்கும். (4, 12-13).

கடவுள் முகம்மதைத் தமது கூட்டாளியாகச் செய்து கொண்டுவிட்டா ரென்று முகம்மது குர்-ஆனில் கூறுகிறார். கடவுளுக்கு முகம்மதினிடம் அவ் வளவு பிரியம். சுவர்க்கத்திலும் தனது சரி பாகஸ்தனாக வைத்துக்கொண்டு விட்டார். எனவே முகம்மதிய கடவுளை சுதந்தரநாயகன் எனக் கூறமுடி யாது. எச்சிறுகாரியத்திலும் கடவுளுக்கு முகம்மதின் துணைவேண்டி யிருக் கிறது. சத்திய நூலில், கடவுளாலளிக்கப்பட்ட புத்தகத்தில் இத்தகைய பொருளற்ற முரண்பட்டான விஷயங்கள் இருத்தல் முடியாது.

> 56. அநியாயத்தை ஒரு அணுக்கூட அல்லாவானவர் செய்கிறதில்லை. நற்காரியங்களுத் இருமடங்காய்த் தருகிறார். (4, 45).

பாரபட்சமற்ற கடவுள் ஏன் முகம்மதியர்களுக்கு அவர்களது நற்கருமத் திற்கு இரண்டு மடங்கதிகமாய் வெகுமானத்தைக் கொடுக்கவேண்டும். இது பாரபட்சமல்லவா? நற்காரியத்திற்கோ அல்லது தீயகாரியத்திற்கோ அள

விற்கு மீறிக் கடவுள் வெகுமானமோ, தண்டனையோ, கொடுத்தல் நியாய விரோத மாகாதா ?

57. உன் முன்னிலையிலிருந்து அகன்றால் அவர்களில் சிலர் உன் வார்த்தைகளில் நழுவி ஏனைய எண்ணங்களை எண்ணுகிறார்கள். அவர்கள் எண்ணுவதையெல்லாம் அவர் எழுதிவிடுகிறார். அல்லாவினிடமிருந்து அகன்றவர்களுக்கு வழியைக் காட்டு, அல்லாவால் அகற்றப்பட்டவனுக்கு உன்னாலும் வழி காண்பிக்க இயலாது. (4, 4·90).

இதிலிருந்து சர்வவல்லமையற்றவர் என்று சித்தமாகிறது. அவர் பேரேடு, குறிப்பு முதலியவைகளை ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளுகிறார். கடவுளே ஜனங்களைத் தீயவழியில் செல்லப் பாதைகாட்டுகையில், கடவுளுக்கும், சாத்தானுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது என்று ஒருவர் கேட்கக்கூடும் ? ஆனால் ஒரு வேற்றுமை உண்டு. கடவுள் சாத்தானைக் காட்டிலும் பொல்லாத சாத்தான். இதுதான் வித்தியாசம். பிசாசைப் படைத்தவன் பெரும் பிசாசு என்று முகம்மதியர்களே கூறுகின்றனர். எனவே முகம்மதியக் கடவுள் பெருந் துஷ்டப் பிசாசு,

58. அவர்கள் கையை விடாமல் இருந்தால் காணும் இடங்களில் எல்லாம் அவர்களைப் பிடித்துக் கொல்லுங்கள். முசல்மான் தவறால் மாத்திரமே முசல்மானைக் கொல்லுகிறான். தவறிக் கொன்றால் அடிமையிலிருந்து ஒருவனை மீட்க வேண்டியவனாகிறான். பழியின் பணத்தையோ, பிச்சைக் காசையோ நஷ்டமடைந்த வீட்டார்களுக்குக் கொடுக்கவேண்டும். முசல்மானாயிருக்கும் அடிமையை விடுதலைசெய். வேண்டுமென்றே யோசனைசெய்து முசல்மானைக் கொல்லுபவன் அழியா நரகத்தை அடைந்து அல்லாவின் கோபத்திற்கு ஆளாவான், (4, 94-95).

இது பிறமதங்களிடத்திலுள்ள அசூயையைக் காட்டுகிறது. குர்-ஆன் முகம்மதியர்களைக் காப்பாற்றுமாறும், அல்லாதவர்களைக் கொல்லுமாறும இரக்கமின்றிக் கூறுகிறது. ஒரு முகம்மதியனை ஒருவன் தவறிப்போய்க் கொன்றுவிடின், அதற்கு அவன் ஜவாப்தாரியாகவேண்டும். அல்லா தவனைத் தெரியாது கொல்லவும் உடனே சுவர்க்கம் கிடைக்கிறது. இத்தகைய போதனைகள் அகற்றத் தக்கவையாகும். இத்தகைய புத்தகமும், இத்தகைய தீர்க்கதரிசியும், மதமும் யாருக்கும் நன்மையைத் தராது. உலகத்தில் தீமையை வளர்க்கும். இவைகள் இல்லையேல் உலகிற்கு நன்மை. அறிஞர்கள் இத்தகைய சிறுமை மதங்களைத் தள்ளி வேத மதத்தைக் கைப்பற்றல் நலம், வேத மதம் மாசு அற்றது. முகம்மதியர்களைக் கொன்றால் நரகமென்றும், அல்லாதவர்களைக் கொன்றால் புண்ணியமென்றும் குர்-ஆன் கூறுகிறது. பிறமதங்கள் முகம்மதியர்களைக் கொல்லல் புண்ணியம் என்கின்றன. எதை நம்புவது. எது உண்மையானது மாசுடைய எல்லா மதக்கொள்கைகளையும் களைந்து வேதமதத்தைப் பின்பற்ற வேண்டும்.

59. "வழி" விளக்கப்பட்டபின் தீர்க்கதரிசியைப் பின்பற்றாமல் முசல்மான் வழியிலிருந்து வேறு வழி சென்றால் அவனை நாம் நரகத்தில் இடுவோம், (4, 113).

கடவுளுடையதும், தீர்க்கதரிசியுடையதுமான, அசுயையைச் சவனியுங்கள். முகம்மது கெட்டிக்காரர். தெய்வச் சிறப்புத் தராவிடில், தமது போதனைகளைச் சனங்கள் ஏற்கமாட்டார்கள். தாங்களும் சுகவாழ்வு வாழ முடியாது. தனது சுயநலத்தை ஒட்டி நன்கு காரியங்களைச் செய்தார். சுயநலப் பிரியன் மனித ஜாதியின் நண்பனுக முடியாது. இத்தகையார்கள் அறிவிலிகளாலும் ஏற்கப்படார்கள்.

60. அல்லாவையும், தேவர்களையும், புத்தகத்தையும், தீர்க்கதரிசியையும், கடைசிதினத்தையும் நம்பாதவர்கள் வழிதப்பியவர்கள். (4, 135).

இனி நீங்கள் கடவுள் ஒருவர் என்றும் அவருக்கு நிகரான இரண்டாவதானவன் கிடையாதென்றும் எப்படிக் கூற முடியும்? அப்படிச் சொல்லுவீர்களேயானல் முன்னுக்குப்பின் முரண்படக் கூறியதாகாதா? கடவுள் ஒருவர் என்றும் கூறுகிறீர்கள், உடனே அவருக்குச் சமானமானவர்களும் இருக்கின்றனர் என்கிறீர்கள். மூன்றுமுறை அல்லா-ஹூத்-ஆலா பாபத்தை மன்னித்துவிட்டதால் அவர் பாபத்தை மன்னித்துவிடுகிருர் அல்லவா? மனிதர்கள் அல்லாவையும் அவரது தூதர்களையும் மூன்றுமுறை அவமதித்தும் கடவுள் மனிதனுக்குத் துணையாயிருந்து வருகிருர் அல்லவா? இம்மேற்கோள் மனிதனைத் தீயவழியில்தான் நடத்தும்.

61. காபிரி முசல்மானுக மாறி, மறுபடியும் காபிரியாகி முசல்மானுக மாறினவன் ஒருகாலும் மன்னிக்கப்படுகிறதில்லை. வழியையும் அடைகிறதில்லை. (4, 134).

வஞ்சகர்கள் அல்லாவை ஏமாற்றுவார்கள். ஆனல் அவர்களே அல்லாவால் ஏமாற்றப்படுவார்கள். (4, 141).

முசல்மான்களைத் தவிர காபிரிகளைச் சிநேகிதர்களாகச் செய்துகொள்ள வேண்டாம். (4. 148).

முகம்மதியர்கள் சுவர்க்கம் செல்வார்களென்பதற்கும், காப்பிரிகள் நரகம் செல்வார்களென்பதற்கும், என்ன ருசு விருக்கிறது. இத்தக் கடவுள் நல்ல கடவுள். மனிதனை ஏமாற்றியும் மனிதனுல் ஏமாற்றப்பட்டும் இருந்துவரும் கடவுள் நம்மைவிட்டு விலகி யிருக்கட்டும். அவர் போக்கிரியோடும், துஷ்டர்களோடும், அயோக்கியர்களோடும் சேர்ந்துகொள்ளட்டும். ஏனெனில் இனத்துடன் இனஞ் சேருமல்லவோ? ஏமாற்றும் குணமுள்ள கடவுளைப் பின்பற்றுபவர்களும் பிறரை மோசம் செய்பவர்களே யாவார்கள். ஒரு பொல்லாத முகம்மதியரை நேசிப்பதும், பரம சாதுவான முகம்மதியரல்லாதவனை வெறுப்பதும் நியாயமாகுமா?

62. மானிடர்களே! அல்லாவினிடமிருந்து தீர்க்கதரிசி உண்மையைக் கொண்டுவந்து இருக்கிறன். அவைகளை நம்புகள் (4. 168).

குர்ஆன் தீர்க்கதரிசிகளிடம் மகம்மதியர்களைப் பக்தியாயிருக்குமாறு கூறுகிறது. எனவே கடவுளது பிரத்தியேக உரிமைகளை இவர்கள் பகிர்ந்து கொள்கிருர். மனிதர்களின் வழிபாட்டை ஏற்கிருர். தீர்க்கதரிசி அவரிடமிருந்து வந்தவர் என்றுல் கடவுள் சர்வஞ்ஞர் என்பதற்கு விரோதமாகிறது.

எனவே இது கடவுளாகாது. குர்-ஆனில் ஓரிடத்தில் கடவுள் எங்கும் நிறைந்தவரென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொரு விடத்தில் அவருக்குத் தனியிடமும் சர்வஞ்ஞரில்லாத தன்மையும் அளிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து புலனாவது குர்-ஆன் ஒருவனா லெழுதப்பட்டில்லை; பலரா லெழுதப்பட்டது.

63. விலக்கப்பட்டவைகளாவன :—தானாக இறந்தது, இரத்தம், பன்றி மாமிசம், அல்லாவின் நாமத்தைத் தவிர வேறு நாமத்தால் கொல்லப்பட்டது, தூக்கில் இட்டது, அடியால் மடிந்தது, விழுந்தது, கொம்பினால் குத்தப்பட்டது, பறவையினால் உருசிபார்க்கப்பட்டது. (5, 4).

தடுக்கப்பட்ட பிராணிகள் இவைகள் தானா? இதிலிருந்து இவைகளைத் தவிர மற்ற ஜீவப்பிராணிகள் ஊர்வன, பறப்பன வாகிய சிறு பூச்சிகள், எறும்புகள், உள்பட எல்லாம் முகம்மதியர்களின் ஆகாராதிகளாகக் கொல்லப்படலாம் என்று சித்தமாகிறது. இதிலிருந்து குர்-ஆன் கடவுள் வாக்கல்லவென்பதும் வெளிப்படையாகிறதல்லவா? இது மனிதனுடைய வேலையே. எனவே இதை நம்புதல் கூடாது.

64. தீச்செயல்களை உன்னிடமிருந்து விலக்குவேன். அருவிகளோடும் பூங்காவனத்தில் உன்னைச் சேர்ப்பேன். கடனைத் தாராளமாகக் கொடு. உன்னைச் சுவர்க்கத்திற்கு அனுப்புவேன். (5, 10).

மகம்மதியக் கடவுள் கொடிய வறுமையினின்றும் அவஸ்தைப்படுகிறாரெனத் தெரிகிறது. இல்லையேல் உங்களுக்குப் பாபத்தை நீக்கி சுவர்க்கத்தை அளிக்கிறேன் கடன் கொடுங்கள் என்று முகம்மதியர்களைக் கேட்கத் தேவையில்லை. கடவுள் பேரைச் சொல்லி ஜனங்களை ஏமாற்றி மகம்மது தனது நன்மையைத் தேடிக்கொண்டார் என்பது நன்கு விளங்குகிறது.

65. தமது இஷ்டப்படி ஒருவனைத் தண்டிக்கவும், மன்னிக்கவும் வல்லவர் அல்லா. இதுவரை மானிடர்களுக்குத் தராததை அருளியிருக்கிறார். (5, 21-23).

சாத்தான் அவனது இஷ்டப்படி மனிதர்களைக் கலைத்து தீயவழிகளில் நடத்துவதுபோலவே முகம்மதியக் கடவுள் தமக்கு இஷ்டமானவர்களுக்குச் தண்டனையைத் தருகிறார். குர்-ஆன்படி நல்லதையும், கெடுதலையும் செய்பவர் அவரே. என்வே கடவுள் சுவர்க்கத்திற்கோ நரகத்திற்கோ செல்ல வேண்டும். ஆத்மாவிற்கு விடுதலை இல்லை. எனவே நன்மை தீமை யென்னும் சொற்களுக்கு ஆத்மா பொருப்பாளியல்ல. கடவுளே ஜவாப்தாரி, ஏனெனில் சேனாதிபதியைப்போல் கடவுள் ஆட்டிவைக்கிறார்.

66. அல்லாவையும், தீர்க்கதரிசியையும் கீழ்ப்படி. (5, 93).

"இரண்டற்ற ஒரே கடவுள்" என்பதை இது மறுக்கிறது. ஏனெனில் அவருக்குச் சமானமானவர்களிருக்கிறார்கள். இங்ஙனம் நம்புவது மதியீனமாகும்.

67. கழிந்தவைகளை மன்னித்துவிடுகிறார். மீண்டுஞ் செய்வோனைப் பழிவாங்குகிறார். (5, 96).

பாபத்தை மன்னிப்பது என்பது பாபச் செயலை ஆதரிப்பது போன்ற வளவு கெட்டது. பாப வளர்ச்சிக்குத் துணை நின்று அதை வளரச் செய்யும் நூல் ஈசுவர வாக்கும் ஆகாது; அறிஞன் மொழியு மாகாது. இந்நூல் தீயகாரியங்களை வளர்க்க வல்லது. கடவுளைத் துதித்து, செய்த காரியங்களுக்கு வருந்தி, இனி நல்ல காரியங்களைச் செய்ய முயலுவது, முதலானவைகளெல்லாம் ஏற்கக் கூடியதே.

68. அல்லாவைப்பற்றி பொய்ச் சொல்வோனைக் காட்டிலும் தீயோன் உண்டோ? அருளப்படாமல் இருக்கும்பொழுது "அல்லாவிலிருந்து இறங்கியது" என்று கொள்ளப்பட்டவனும் அப்படியே. இதைப்போலுள்ள அல்லாவால் அருளிய கிரந்தத்தைச் செய்வேன் என்பவனும் தீயோனே. (**5**,93).

முகம்மது நபி இறைவன் மொழி யெனக் குர்-ஆனைக் கூறின காலத்து வேறு ஒருவன் கடவுள் வாக்கென்று வேறு புத்தகத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அவனும் தன்னை நபிநாயகம் என்று கூறியிருக்கவேண்டும். தனது எதிரியை விரட்டவும், சுயமதிப்பை அதிகப்படுத்தவும், குர்-ஆனில் இது சேர்க்கப்பட்டிருக்கிறது போலும்.

69. உம்மைப் படைத்தோம், திருத்தி அமைத்தோம். ஆதாமுக்குப் பணி என்றோம். எபிலிசானவன் மறுத்து அல்லாவைவிட நான் உத்தமன் என்றான். மண்ணிலிருந்து யாவற்றையும் சிருஷ்டித்தாய், என்னையோ அனலிலிருந்து உண்டு செய்தாய் என்றான். சுவர்க்கம் உன்னுடைய இடம் அல்ல. இழிவுள்ளவனே! இங்கு இருந்து ஓடு. இறப்பிலிருந்து எழும்வரை அங்கிருப்பாய் என்று சபித்ததும் அவன் என்னைச் சபித்தபடியால் உனது நேர் வழியிலிருந்து வருபவர்களைத் தடுப்பேன். அவர்கள் முன்னிலிருந்தும், பின்னிலிருந்தும், வலதிலிருந்தும், இடதிலிருந்தும் வேலை செய்வேன். உனக்கு நன்றியுள்ளவர்கள் அதிகம் இரார்கள். என்னிடம் நில்லாதே! நிந்திக்கப்பட்டவனே! தள்ளப்பட்டவனே! உன்னைப் பின்பற்றுபவனும் நரகத்தை அடைவான். (**10**, 10-17).

கடவுளுக்கும் சாத்தானுக்கும் ஏற்பட்ட வாக்கு வாதத்தை வாசகர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இந்தச் சாத்தான் சுவர்க்கத்தில் இருந்த ஒரு தேவதை. கடவுளால் இதை அடக்கி ஆள முடியவில்லை. இந்த தேவதையின் மனதைச் சுத்தப்படுத்தி வைக்கவும் முடியவில்லை. மேலும், இந்தச் சாத்தானைக் கடவுள் தன் வழி நடக்க விட்டுவிட்டார். சாத்தான் மனிதவர்க்கத்தைத் தீய வழிகளில் பயமில்லாது நடத்த கடவுள் இச்சாத்தனைத் தண்டிக்கவில்லை. இது கடவுள் செய்த பெரும் பிழை. சாத்தான் மனிதரை ஏமாற்றுபவன், கடவுள் சாத்தானை ஏமாற்றுபவர். ஏனவே கடவுள் பெரிய ஏமாற்றக்காரர். இதிலிருந்து சித்தமாவது என்ன? கெடுதல்களுக்கு எல்லாம் மூல காரணம் கடவுள் என்பதல்லவா? முகம்மதியர்களால் எங்ஙனம நம்பிக்கை வைக்க முடியும். அறிஞர்கள் இக்கதையில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். கடவுள் அளவிற்குட்பட்டவர், நியாயமற்றவர் என்பதும் இவர் தேவதைகளுடன் மனிதரைப்போல் பேசினர் என்பதும் இதிலிருந்து விளங்கவில்லையா? ஆகவே கல்விமான்கள் இஸ்லாம் மதத்தை ஏற்க மறுக்கின்றனர்.

70. உன் தலைவன் அல்லா, ஆறு தினத்தில் வானத்தையும் பூமியையுஞ் செய்தான். பிறகு சிம்மாசனம் ஏறினன். பணிவுடனும் இரகசியமாயும் உன் அல்லாவை அழைப்பாய். (7, 52-53).

ஆறு தினங்களில் உலகத்தைச் சிருஷ்டித்து, பின்னர், சுவர்க்கத்தில் சுகமாக வீற்றிருப்பவர் சர்வ வல்லமை யுள்ளவராய் சர்வ வியாபியாய் இருக்க முடியுமா? அத்தகைய பரிபூரண சுவபாவமில்லாததைக் கடவுளென்று அழைக்க முடியுமா? சத்தத்துடன் கூவினல் உங்கள் கடவுளுக்குக் கேழ்க்குமா? இதெல்லாம் கடவுளிடமிருந்து வெளிவந்ததாகாது. எனவே குர்-ஆன் இறைவன் அருளியதாகாது. ஆறு தினங்கள் பிரயாசையுடன் உலகத்தைச் சிருஷ்டித்த கடவுளுக்கு ஓய்வு வேண்டியதுதான். அவர் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிருரா அல்லது இப்பொழுது விழித்துக் கொண்டுவிட்டாரா என்று நமக்குத் தெரியவில்லை. விழித்துக் கொண்டுவிட்டார் எனின் என்ன செய்துக் கொண்டிருக்கிருர்? உல்லாசமாக உலாவிக்கொண்டு களிப்புடனிருந்து வருகிருரா?

71. அட்டூழியத்தினல் பூமியை நாசஞ் செய்யாதே. (7, 52).

இது நல்ல புத்திமதியே. வேறு பல விடங்களில், குர்-ஆன் சண்டையிடும்படி கூறுகிறதே. காபிரிகளைக் கொல்லுமாறு தூண்டுகிறதே. இது முன்னுக்குப் பின் முரண் அல்லவா? இதன் பொருள் என்ன? மகம்மது தனது அதிகாரத்தைப் பூர்ணமாய் ஸ்தாபிக்குமுன் சண்டை செய்யுமாறு தூண்டினர் போலும். தான் சகல அதிகாரத்துடன் கூடினவுடன் பின்னதைக் கூறினர் போலும். முன்னது, பின்னதும் முரண்பாடானபடியினல் உண்மையாகாது.

72. கழியைக் கீழே எறிந்தார். ஓகோ அது பாம்பாக மாறிற்று. (5, 105).

கடவுளும், முகம்மதும் இப்பொய்களில் நம்பிக்கை உள்ளவர்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே இருவரும் அறிவற்றவர்கள். இயற்கைச் சட்டத்தை மாற்றி அமைக்க முடியாது. காது பார்க்கும் சக்தி பெறவும், கண் கேட்கும் சக்தி பெறவும் யாராலாவது செய்ய முடியாது. இது ஜாலமாகும்.

73. பிரளயத்தையும், தத்துக்கிளியையும், பல்லி, தவளை, இரத்தம் முதலியவற்றை அனுப்பினேம். பழிக்குப்பழி வாங்க, அகாதத்தில் அவர்களை அமிழ்த்தினேம். கடல்தாண்டி இஸ்ரவேல் குழந்தைகளைக் கொணர்ந்தோம். அவர்கள் செய்யும் தொழுகை வீண். (7, 130, 132, 134).

ஒருவனைப் பயப்படுத்த வேண்டி பாம்பை வரவழித்து உன்னைக் கொல்லச் செய்வேன் என்று ஒரு ஜால வேடிக்கைக்காரன் கூற்றைப்போல் இது தோன்றவில்லையா? ஏன் கடவுள் ஒரு ஜாதியாரைக் கடலில் முழுகிப் போகுமாறு செய்யவேண்டும். மற்றொரு ஜாதியார் நன்மைக்காகக் கடவுள் இங்ஙனம் செய்யலாமா? இங்ஙனம் செய்யும் கடவுள் பாபி அல்லவா? பிறமதம் பொய் என்றும், தனது மதந்தான் உண்மையானது என்றும் கூறும் மதம் உண்மை மதம் ஆகுமா? ஒரு மதத்தைப் பின்பற்றுபவர் அனைவரும் நல்லவர்கள் என்று சொல்ல முடியுமா? ஒருதலைப் பட்சபாதமான தீர்ப்பு முட்டாள்கள் வேலையாகும். பழைய பைபிளின்மேல் ஸ்தாபிக்கப்பட்ட மதம் பொய்

யானதோ. அல்லது வேறு எந்த மதம் பொய் என்று கூறப்படுகிறது. குர்-ஆன் பொய் என்று கூறும் மதம் எது.

74. என்னைப் பார்க்கவேண்டாம். அல்லாவானவர் மலையில் பிரகாசிக்க அவர் பொடிப் பொடியாக செய்துவிட்டார். மூசாவானவன் மயங்கி விழுந் தான். (7, 139).

கண்ணில் புலப்படும் பொருள் சர்வ வியாபியாக இருத்தல் முடியாது. அவர் பெரும் ஆச்சரியங்களை அப்பொழுது செய்திருப்பின் இப்பொழுதும் ஏன் செய்யலாகாது? தருக்கத்திற்குமுன் நிற்காததும், அறிவிற்கு விரோத யானதுமானதையும் நம்ப முடியாது.

75. உன்னிலேயே அல்லாவை நீ பயமுடனும் பணிவுடனும், சப்த மன்னியிலும் காலை மாலையிலும் நினை. (7, 204).

ஓரிடத்தில் குர்-ஆன் கடவுளைக் கூவி அழைக்க வேண்டுமென்று கூறு கிறது. இங்கு மனதில் சத்தமில்லாது ஸ்மரிக்கவேண்டும் என்று குர்-ஆன் கூறுகிறது. இந்த இரண்டில் எது உண்மையானது. எதை நம்புவது? இத் தகை முன்னுக்குப்பின் விரோதமான வார்த்தைகளைப் புத்தி மாருட்டக் காரன், தான் கூறுவான். மனிதன் பிழை செய்யலாம். அதை ஒப்புகொண் டால் நல்லது.

76. அபகரித்தவைகளைப் பற்றி கேட்பார்கள். அபகரித்தவைகள் அல்லா விற்கும் தீர்க்கதரிசிக்கும் சொந்தமானவைகள். ஆகையால் அவருக்குப் பய முடன் இரு. (8, 1).

பிறரை வஸதத்து கொள்ளை யடிப்பவர்கள், கொள்ளையையே பிழைக்குந் தொழிலாகக் கொள்ளுபவர்கள் பிறரைக் கொள்ளை வழியில் தூண்டுபவர்கள் கடவுள் என்றும், தீர்க்கதரிசி என்றும், உண்மையான நம்பிக்கை கொண்டவர் கள் என்றும் அழைத்துககொள்ளுதல் நமக்கு வியப்பைத் தருகிறது. ஒரு மூச்சில் கொள்ளை; இரண்டாவதில் கடவுளுக்கு அஞ்சேல் என்று போதிப்பவர் கள், தங்கள் மதந்தான் சத்தியமதம் என்று வெட்கமில்லாது கூறிக் கொள் கிருர்கள். பிடிவாதத்தினுல் வேத மதத்தைத் தழுவ மறுப்பவர்களுமுண்டோ?

77. காபிரிகள் உயர்வாக மதிப்பதை வெட்டிவிடுங்கள். ஒன்றின்பின் ஒன்ருய் ஆயிரம் தேவர்களைத் துணை அனுப்புவோம். காபிரிகளின் மனதில் பயத்தை இறுத்துவோம். ஆகையால் அவர்கள் கழுத்தை எடுத்துவிடு. ஒவ் வொரு விரல்களையும் துண்டித்துவிடு. (8, 7, 9, 12).

காபிரிகளின் தலையை வெட்டு என்று கூறும் நபியும் கடவுளும் எவ்வளவு கருணை அற்றவர்கள்? இங்ஙனம் சொல்லுமாறு தூண்டுபவர்கள் ராவணன் என்னும் ராக்ஷஸனைவிட எவ்விதத்தில் மேம்பட்டவர்கள். இது குர்.ஆனைச் செய்தவன் கூற்று. கடவுள் கூற்றல்ல. இது கடவுளின் கூற்ருயின் அக்கட வுள் நம்மைவிட்டு விலகி நிற்கட்டும்.

78. முசல்மான்களோடு அல்லா. ஏ நம்புபவர்களே அவரையும் தீர்க்க தரிசியையும் கீழ்ப்படியுங்கள். அவரையும் தீர்க்கதரிசியையும் வஞ்சிக்காதே

யுங்கள். உங்கள் மதத்தைப் புத்திக்கு விரோதமாய் செய்யாதே யுங்கள். அல்லா வானவர் அவர்களுக்கு விரோதமாய் சதிசெய்து இருக்கிறார். சதி செய்வதில் சிறந்தவர். (8. 19, 23, 26, 29).

கடவுள் மகம்மதியரிடந்தான் பற்றுக் கொண்டவரா? அங்ஙனமாயின் அவர் அநியாயக்காரர். கடவுள் லோக நாயகன். அவர் மகம்மதியருக்கு மாத்திரம் நாயகரல்லர். உங்கள் கடவுள் செவிடரா நீங்கள் கூவி வழிபடுவதற்கு? கடவுளின் நாமத்துடன் நபியையும் சேர்ப்பது பிழையல்லவா? கடவுள் பொக்கிஷம் எங்கிருக்கிறது. யாராவது அதைத் திருடிவிடுவார் என்று அவர் அஞ்சக் கூடிய அப்பொக்கிஷம் எங்குளது என்று சொல்லக் கூடுமா? கடவுளுடைய பொக்கிஷத்தையும், முகம்மதின் பொக்கிஷத்தையும் தவிர மற்றவர்களுடைய சொத்துக்களைக் களவாடல் நியாயமாகுமா? அறிவிலியும், போக்கிரியுந்தான இத்தகைய போதனைகளைச் செய்யக்கூடும், இவைகளிலிருந்து ஒருவர் அறியக் கிடப்பது குர்-ஆன் கடவுள் வாக்கல்லவென்பதே. இதை ஆக்கியவன் பொய்யன்; தந்திரக்காரன். இல்லையேல் இத்தகைய துர்போதனைகள் நூலில் மலிந்து கிடக்க முடியாது.

79. ஒழுங்கின்மை ஒழியும் வரை சண்டை செய். முழுவதையும் அல்லாவின் மதமாகவேச் செய்துவிடு. கொள்ளையடித்ததில் ஐந்தில் ஒருபங்கு அல்லாவுக்கும் தீர்க்கதரிசிக்கும் சொந்தமானவை. (8. 40-42).

சண்டை செய்வதும், பிறரைச் செய்யுமாறு தூண்டுவதும், அமைதியைக் குலைப்பதுமான செயல்களையும் மகம்மதியக் கடவுளைத் தவிர வேறு யாவர் செய்வார்கள்? நபியின் நன்மைக்காக இம்மதம் கொள்ளை யடித்தலை ஆதரிப்பதைக் கவனியுங்கள், தக் என்போர்களைக் காட்டிலும் இவர்கள் மேம்பட்டவர்களா? கொள்ளையில் தனது பாகத்தை ஏற்கும் கடவுளும் அதில் கலந்தவராவர். இத்தகைய தீய காரியங்களை ஆதரிப்பதினால் கடவுள் தன் மானத்தைக் குறைத்துக் கொள்கிறார். உலகத்தார்கள் நேசத்தையும் உலகத்தின் சந்தோஷத்தையும் குலைத்து மானிட வகுப்பிற்குத் துன்பத்தை விளைக்கவல்ல இம்மதமும், கடவுளும், நபியும், குர்-ஆனும் எங்கிருந்து வந்தது என வியப்படைகிறோம்? இத்தகைய பொய் மதங்கள் தோன்றியிராவிடில் உலகம் அமைதியில் வாழ்ந்திருக்கும்.

80. காபிரிகளைத் தேவர்கள் கொல்வதைப் பாருங்கள். கன்னங்களிலும் முதுகிலும் அடித்து அனலின் அவஸ்தையை அனுபவியுங்கள். பாபத்திற்காக அவர்களை அழித்தோம். பரோவாவின் ஜனங்களை அமிழ்த்தினோம். உன் சக்தியை யெல்லாம் திரட்டி அவர்களுக்கு விரோதமாயிரு. (8. 52, 56, 62).

தற்பொழுது ருஷியா துருக்கியை யடக்கிற்று. இங்கிலாந்து எகிப்ததைத் தன் வசபடுத்திக் கொண்டது. இருந்தும் கடவுளும், தேவதைகளும். முகம்மதியர்களுக்கு எவ்வித உதவியும் புரியவில்லை. அவர்கள் தூங்குகிறார்களா? பழமையில் முகம்மதியர்களின் விரோதிகளைக் கடவுள் கொன்றும், ஜலத்தில் மூழ்கடித்தும் வந்தார். ஏன் இப்பொழுது மாத்திரம் முகம்மதியர்களுக்கு உதவி செய்யாதிருக்கிறார்? இதிலிருந்து அவர் எக்காலத்திலும் எதுவும் செய்ய

வில்லை யென்பது உள்ளங்கை நெல்லிக்காய். காபிரிகளை வறுத்துங்கள், துன் புறுத்துஙகள், என்று கடவுளிடும் உத்தரவைக் கவனியுங்கள். கடவுள் ஒருபுற மிருக்கப் படித்தவன் தயாள குணமுள்ளவன் எவனும் இங்ஙனம் சொல்லான். ஆனல் முகம்மதியர்கள் தங்கள் கடவுளைத் தயாளு, நியாயஞ் செய்கிறவர் என்று அழைக்கின்றனர். இது பொருந்துமோ என்பதே கேள்வி.

81. தூதனே! அல்லாவே உனக்கு ஆதரவு. முசல்மான்களைச் சண்டைக்குமுன் செலுத்தும் தலைவனயிரு. இருபது ஆட்கள் ஒற்றுமையுடன் எப்பொழுதும் இருந்தால் இருநூறு ஆட்களை வென்றுவிடலாம். சம்பாதித் ததையும் சரியானதையும் சிறந்தவைகளையும் தின்னுங்கள். அவர் தயாபரனும் பட்சமுள்ளவர். (8. 65-66-70).

தன்னைச் சேர்ந்தவர்கள் என்ற காரணமாகப் பெரும் தீய காரியங்களைச் செய்பவர்களை ஆதரிப்பது என்பது எத்தகைய நீதியென்பதைக் கவனியுங்கள். கொள்ளை யடிக்கத் தூண்டுபவனும், கொள்ளையில் பங்கெடுத்துக கொள்பவ னும் கொள்ளையை நியாயமென்று அழைப்பவனும் தயாளுவாயிருக்க முடியுமா? நல்ல மனிதனும் இக்காரியங்களைச் செய்யான். செய்தலையும் ஆதரி யான். இத்தகைய துர்போதனைகள் குர்-ஆன் கடவுள் வாக்கு என்பதை நம்ப இடந்தரவில்லை.

82. அவர்கள் அதிலேயே எப்பொழுதும் இருப்பார்கள். அல்லாவே அள வற்ற வெகுமதி. முசல்மானைவிடக் காபிரியாக இருந்தால் அப்படியுள்ள தகப்ப னையும், சகோதரனையும் நண்பனுக எண்ணுதீர்கள். முசல்மான்களுக்கும் அல் லாவிற்கும் தன் பந்தோபஸ்தை யனுப்புவித்தார். தேவர்களின் சைனி யத்தை யனுப்புவித்து அவர்களைத் தண்டித்தார். அவைகளை அவர்கள் காண வில்லை. கிருபையுள்ளவனிடம் திரும்புவார். அல்லாவை நம்பாதவனேடு சண்டை செய்யுங்கள். (8. 12, 20, 24, 25, 27).

சுவர்க்கத்தில் வசிப்பவர்களின் பக்கத்தில கடவுளிருக்க அவர் எங்ஙனம் சர்வ வியாபியாக இருக்க முடியும்? சர்வ வியாபியாக இல்லாதவன் உலகத் தைச் சிருஷ்டிக்க முடியாது. அதன் நாயகனுகவுமிருக்க முடியாது. பெற் றோரை மறுத்தல் பிசகே. ஆனல் பெற்றோர்கள் தீய போதனைகளைக் கூறி வந்தால் நாம் எப்படி கீழ்ப்படிய முடியும்? அவைகளுக்கு நாம் கீழ்ப்படிய முடியாது. முகம்மதியர்கள் மீது வரம்பு கடந்த அன்புகொண்டு அவர்களுக் குதவி காத்த தேவதைகளை யனுப்பிய கடவுள் இன்று ஏன் அங்ஙனம் செய் யாது சும்மாயிருக்கிறார். காபிரிகளைக் கடவுள் தண்டித்தது உண்மையாயின் இன்றும் ஏன் அங்ஙனம் செய்யக்கூடாது? கடவுள் தன்னைப்பின் பற்றுகிற வர்களைச் சண்டைக்குத் தூண்டாது அவரது மதத்தைச் சனங்களிடம் பரப்ப முடியவில்லை போலும். அத்தகைய ஈசனுக்கு நாம் செலவு கொடுத்தனுப்பு வோம்.

83. அல்லாவினிடமிருந்தாவது அல்லது என்னிடமிருந்தாவது நீ தண் டனை அடைவதற்கு காத்திருக்கிறோம். (8. 53)

மகம்மதயர்கள் கடவுளின் போலீஸ்காரர்களா? பிற மதத்தாரை இவர்கள் பிடித்து வருத்த உத்தரவுபெற்றவர்களா? கோடிக் கணக்காய் இருக்கும் பிற மதத்தார் கடவுளின் விரோதிகளா? பெரும் பாபிகளாகியும் மகம்மதியர்கள் கடவுளின் நண்பர்களா? இங்ஙனமாயின் மகம்மதியக் கடவுள் பெரும் கொடுங்கோலன். அறிஞர்களான மகம்மதியர்களும், சிந்தனைக்கும், தருக்கத்திக்கும் முன் நிற்க முடியாத ஆதாரமற்ற இந் நூலில் நம்பிக்கை வைத்திருப்பது நமக்கு வியப்பைத் தருகிறது.

84. முசல்மான்களுக்கு (ஆண் பெண் அடங்க) அருவியுடன் கூடின பூங்காவனத்தையும் தங்கியிருக்க அந்த எடேன் நந்தவனத்தில் மாளிகையையும் வாக்களிக்கிறார். அதில் சிறந்ததான அல்லாவின் ஆனந்தம் அவர்கள் மேல் உண்டு. இது தான் பரமானந்தம். இதை நிந்திப்பவர்கள் அல்லாவால் நிந்திக்கப்படுவார்கள். (8, 75-80).

மீனைப்பிடிக்க, தூண்டியில் ஆகாரம் வைப்பதுபோல் முகம்மது தனது சுயநலத்திற்காகக் கடவுள் பேரால், மகம்மதியர்களைத் தனது தூண்டியினால் இழுக்கிறார். முகம்மது தூண்டியில் சிக்கிவிட்டனர். மனிதன் தான் ஒருவனையொருவன் நிந்திப்பான். கடவுள் அங்ஙனம் செய்யமாட்டார். அங்ஙனம் செய்தல் கடவுள் தன்மையாகாது. குர்-ஆன் அண்டப்புளுகை ஆதாரமாகக் கொண்ட கட்டுக்கதை.

85. சரீரத்தினாலும் பணத்தாலும் தூதனும் அவர்களும் மதத்திற்காகப் பாடுபடுகிறார்கள். இதெல்லாம், அவர்களுக்காக, அவர்கள் மனதை அல்லாவானவர் முத்திரையிட்டிருக்கிறார். அவர்கள் அறியவில்லை. (8, 89-94).

சுயநலத்தைக் கவனியுங்கள். முகம்மதினிடம் நம்பிக்கை வைத்தவர்கள் தான் நல்லவர்களாம். மற்றவர்கள், கண்டிக்கத் தகுந்தவர்களாம். இக்கூற்று விந்தையாக இருக்கவில்லையா? கடவுளே அவர்கள் இருதயத்தில் நல்லவர்கள் என்ற முத்திரை வைத்துவிட்டபடியால் அவர்களை நாம் குறைகூற முடியாது. குற்றம் கடவுளுடையது. நல்லது செய்தல் என்னும் எண்ணத்தைக் கடவுள் ஒழித்துவிட்டார். அனியாயத்தைக் கவனியுங்கள்.

86 தானத்தின் இரசத்தை எடு. புனிதமாகச் சென்று அதற்குத் தொழுகை செய். உன்னுடைய தொழுகை அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும். சக்தியையும் சரீரத்தையும் சுவர்க்கத்தின் நிமித்தம் அர்ப்பணஞ் செய்தார்கள். அல்லாவின் வழியில் நின்று சண்டை செய்யவும் சிதறுண்டு போகவும் தயார். (இவையெல்லாம் சுவர்க்கத்திற்கே). (10, 106-113).

இது விந்தையே! தன்னைத் திருப்தி செய்கிறவர்களின் நன்மைக்காகத் துதிசெய்யும் போப் புரோகிதரைப்போல், முகம்மதும் காணப்படுகிறார். முகம்மதியர் மூலமாய் ஏழை எளியோர்களுடைய உயிர்வதையினால் அவர் வியாபாரஞ் செய்கிறாரென்று நினைப்பவன் எவன்? அநாதைகளை நரகத்திற் தள்ளி துன்புறுத்துகிற கடவுள் கொடுமைக்கும் அநீதிக்கும் ஆளாகிறார். இது அவருடைய ஈசுவரத் தன்மையைக் குலைப்பதாகும். தர்மாத்மாக்களும் பெரியார்களும் காரணமன்னியில் அவரை மதிக்கவில்லை.

87. முசல்மான்களே! அண்டையிலுள்ள காபிரிகளுடன் சண்டை செய்யுங்கள், உங்களைக் கடுமையானவர்கள் என்று அவர்கள் அறியட்டும். வருடத்தில் ஒருமுறை அல்லது இருமுறை அவஸ்தையைப் பார்க்காமல் இரார்களா? அவர்கள் திரும்புகிறதுமில்லை. எச்சரிக்கையும் வேண்டாம். (9, 124-127).

மனிதனின் உயர் வெண்ணத்திற்கு மாறாக ஒருவனுடைய நண்பனையுங் கொல்லுமாறு கூறுவதைக் கவனியுங்கள். அயலார்களுடன் சண்டையிடவும் அவர்களைக் கொல்லவும் செய்யுமாறு தூண்டுகிறது. அறிவு ஒளிபடர்ந்த இக் காளில் இத் துர்போதனைகளைக் களையவேண்டும். இங்ஙனம் செய்ய முற்படாபவர்கள் பலனைப் பெறுவார்கள்.

88. வானத்தையும் பூமியையும் ஆறே தினங்களில் செய்தது அல்லாவே! இவைகளைக் காக்க சிங்காசன மேறினார். (15, 3).

ஆகாசம் என்பது செயற்கைப் பொருளல்ல. அது சிருஷ்டிக்கப்படாத பெரும்பொருள். அது சிருஷ்டிக்கப் பட்டதென்று உறுதிசெய்வது குர்-ஆன் ஆசிரியரின் இயற்கைத் தத்துவஞான சூன்யத்தை வெளிப்படுத்துகிறது. கடவுள் ஆறு தினங்களில் பிரயாசைப்பட்டு சிருஷ்டித்தாரா? "இரு" என்றார், உலகம் "இருந்தது" என்று குர்-ஆன் கூறுவது ஆறுநாள் சிருஷ்டியைப் பொய்யாக்குகிறது. முகம்மதியக் கடவுள் சர்வ வியபகராயிருந்தால் ஏன் வானத்திலோ அல்லது சுவர்க்கத்திலோ தனது இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்? தமது அதிகாரத்தைப் பற்றியும் அதை அமுல் செய்வதைப் பற்றியும் சிந்தித்து வருவாரானால் கடவுள் மனிதரைப் போலாவார். சர்வ வல்லமையுள்ள கடவுள் ஏன் சுவர்க்கத்திலிருந்து கொண்டு சிந்தனை செய்ய வேண்டும்? கடவுளறிவில்லாதவனும் அறியாமையிலழுந்தினவனுமே குர்-ஆனைச் செய்தானென்று விளங்குகிறது.

89. வழியும் தயையும் முசல்மான்களுக்கு. (10, 55).

கடவுள் முகம்மதியர்களுக்குத்தான் சொந்தமானவரா? பிறருக்கு அவர் சொந்தமானவரல்லரா? அவர் அவ்வளவு பாரபட்சமானவரா? முஸ்லீம்களுக்குத்தான் அவர் அருள் புரிகிறாரா. மற்றவர்களிடத்தில் கருணையற்றவரா? முஸ்லீம்களைத் தவிர மற்றவர்களுக்கு அவர் ஆணைவரா யிராவிடில் அவரது அறிவு பயனற்றதாகும்.

90. உங்களில் இறந்தோன் என்பதை நிரூபணஞ் செய்வதற்கு. "இறந்தபின் எழுவாய்" என்றால் "இது ஏதோ ஜாலம்" என்பார்கள். (11, 9-10).

கடவுளுக்குத் தான் செய்த வேலையை மீண்டும் பரிட்சித்துப் பார்க்கும் அவசியம் ஏற்படின் அது அவருடைய சர்வ வல்லமையைக் காட்டாது. எனவே இங்ஙனம் செய்யும் கடவுள் சர்வ வல்லமை யுள்ளவராகமாட்டார். இறந்தவர்களைக் கடவுள் உயிர்ப்பிக்கிறாரென்றால், இங்ஙனம் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் எல்லையில்லாத காலம் வரை தாங்கள் விதியின் முடிவைப்பெறாது காத்திருக்கவேண்டுமே. மேலும் இறந்தவர்களை உயிர்ப்பித்தாரென்பது அவருடைய தெய்வக் கட்டளைக்கு விரோதமாகவிருக்க வில்லையா? இங்ஙனம் அவர்தான் தனது சட்டத்தை மீறலாமா?

91. பூமியே! “ஜலத்தை விழுங்கிவிடு”, “வானமே நின்றுவிடு” என்று சொல்லப்பட்டது. ஜலம் குறைந்தது. இதுதான் அல்லாவின் ஒட்டகம். இதுதான் அடையாளம். எங்கும் போகட்டும். அல்லாவின் பூமியில் மேயட்டும். (**11**, 43; 46).

இது குழந்தைப் பேச்சாகக் காணப்படவில்லையா? பூமிக்கும் சுவர்க்கத்திற்கும் கேட்கும் சக்தி யிருக்கிறதா? கடவுள் ஒரு பெண் ஒட்டகத்தை வைத்திருப்பின், அவர் ஒரு ஆண் ஒட்டகத்தையும் வைத்திருக்கவேண்டும். தவிரவும் அவர் யானை, குதிரை, கழுதை முதலிய பரிவாரங்களையும் வைத்திருக்கவேண்டுமே. தனது பெண் ஒட்டகத்தைக் கடவுள் பிறர் தோட்டத்தில் மேயவிட்டால் அவர் பெருமைக்குப் பங்கம் விளைக்காதா? கடவுள் பெண் ஒட்டகத்தில் ஏறி சவாரி செய்கிறாரா? இது முகம்மதியக் கடவுளின் வாழ்க்கையாயின் பூலோகத்திலிருக்கும் சீமான்களைப்போல் அவரும் ஆடம்பர வாழ்க்கையையும் வீடு வாகனங்களையும் கொண்டவரா?

92. வானமும் பூமியும் இருக்கும்வரை அங்கு இருப்பார்கள். அருளியவர்களுக்குப் பூங்காவனமே. அங்கே அவர்கள் வானமும் பூமியும் இருக்கும் வரை இருப்பார்கள். (**11**, 109-110).

தீர்ப்புத் தினத்திற்குப் பிறகு மனிதர்கள் சுவர்க்கம் அல்லது நரகத்திற்குச் செல்ல வேண்டுமெனின் பிறகு உலகம் எதற்கு? வானம் எதற்கு? பூமியும் வானமும் இருக்குமளவும் சுவர்க்கமும் நரகமும் இருக்க வேண்டுமாயின்” எக்காலமும் அவர்கள் சுவர்க்கத்திலோ அல்லது நரகத்திலோ வாழ்வார்களென்பது” ஆதாரமற்ற வார்த்தையே. அறிவிலிகளே இங்ஙனம் கூறுவார்கள். கடவுளும் அறிஞர்களும் கூறமாட்டார்கள்.

93. “தகப்பனே உண்மையாகவே பதினொன்று நட்சத்திரங்களையும் சூரிய சந்திரனையும்” ஜோசப் பார்த்தேன் என்றபொழுது. (**1** ; 4).

இம்மேற்கோளில் தகப்பனுக்கும், பிள்ளைக்கும் ஏற்பட்ட வாக்கு வாதம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து குர்.ஆன் கடவுள் வாக்கல்ல வென்றும், யாரோ ஒரு மனிதன் மானிட வர்க்கத்து வாழ்க்கைச் சரிதையை வைத்து எழுதியது என்பதும் சித்தமாகும்.

94. அல்லாவானவர் வானத்தைத் தூண் அன்னியில் நிறுத்தினார். அதை நீ அறியாய். சிங்காதனமேறி சூரிய சந்திரனைச் சட்டத்திற்குட்படுத்தினார். பூமியைப் பரப்பினார். வானத்திலிருந்து மழையைப் பெய்யச் சொல்லுகிறார். அருவிகளையும் ஓடச்செய்கிறார். (**13**, 15)

இஷ்டம்போல் தாராளக் கைகளை உடையவர். நிதானமாகவும் உபயோகப் படுத்துபவர். (**13**, 2, 3, 15, 22).

மூஸ்லீம் இறைவனுக்கு ஜட சாஸ்திரம் தெரியாதென்று இதிலிருந்து விளங்கும். ஏனெனில் ஜடசாஸ்திர ஞானம் இருப்பின் சுவர்க்கம் தூண்களிவிருக்கிறதென்று கூறியிருக்கமாட்டார். ஒரு தனிவிடத்திலோ அல்லது சுவர்க்கத்திலோ கடவுள் இருப்பாரானால் அவர் சர்வ வியாபியாகவும்

... வல்லமை யுள்ளவராகவும் இருத்தல் முடியாது. மேகத்தைப்பற்றின சாஸ்திர ஞானமிருந்திருப்பின் கடவுள் "சுவர்க்கத்திலிருந்து மழையைப் பெய்யச் செய்தார்" என்பதுடன் "ஆகாயத்தில் நீரைப் போகச் செய்தார்" என்றும் சேர்த்திருப்பார். எனவே குர்ஆனை ஆக்கியவருக்கு மேக அறிவு போதாதென்பது சித்தம். மனிதனுடைய காரியங்களைக் கவனியாது சிலருக்குச சுகத்தையும் வேறு சிலருக்குத் துக்கத்தையும் அவர் தருவாரேயானல் அறிவில்லாதவரென்றே சொல்லவேண்டும்.

95. இஷ்டப்பட்டவர்களைக் கெட்டவழியில் சேர்ப்பவர், தன்னைப் பார்ப்பவர்களுக்கு வழிகாட்டுபவர் (**13**, 23).

கடவுள் இங்ஙனம் மனிதனை மயக்குவாரானல் அவருக்கும் சாத்தானுக்கும் என்ன வித்தியாச மிருக்கிறது? ஜனங்களை ஏமாற்றித் தீய வழியில் நடத்துங் காரணத்திற்காகச் சாத்தான் கண்டிக்கப் பட்டான். சயித்தானைப்போல் காரியம் செய்யும் கடவுளைத் தண்டித்துத் தள்ளிப் போடவேண்டாமா? இத் தப்பு கர்மத்திற்காக ஏன் கடவுளை நரகத்தில் தள்ளக் கூடாது?

96. குர்-ஆன் ஷரீபை அரபியில் கட்டளைபோல் அனுப்பி யிருக்கிறோம். இவ்வறிவு தெரிந்தவுடன் அல்லாவிற்கு விரோதமாக உனக்கு ஆதரவு உள்ளவனும் காப்பாற்றுபவனும் இல்லை. **13**, 38).

குர்-ஆனைக் கடவுள் எங்ஙனம் அனுப்பினார்? அவர் ஆகாசத்தில் வசிக்கிறாரா? இங்ஙனம் அவர் எங்கும் நிறைந்த ஸ்வரூபியாயிருக்க முடியாதல்லவா? கடவுள் அவ்வளவு உயரத்திலிருந்தால் அவருக்கு ஒரு தூதன் தேவை. எனவே மனிதனைப் போன்றவராகிறார். இதிலிருந்து குர்-ஆன் கடவுளால் அருளப்பட்டதல்லவென்பதும் மனிதனால் செய்யப்பட்ட தென்பதும் நன்கு விளங்கவில்லையா?

97. சந்திர சூரியனை அலைய ஆக்ஞாபித்தார். மனிதன் உண்மையாகவே பாபியும் அநியாயமும் செய்பவன். (**14**, 27).

சூரியனும் சந்திரனும் ஓயாது அலைந்து கொண்டிருக்கின்றனவா? பூமியும் சுற்றுமலிருக்குமானல் இரவு பகல் பல வருடங்களாக மாறும். நிற்க மனிதன் இயற்கையாகவே கொடுஞ் சுபாவம் உள்ளவன். எனவே குர்-ஆன் மூலமாக அவனுக்கு எச்சரிப்பு முடியாது. இயற்கையிலேயே தீயோர்கள் நல்லோர்களாவது கஷ்டம். உலகத்தில் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கின்றனர். எனவே இத்தகைய மாறுபாடான விஷயங்களைக் கூறும் புத்தகம் கடவுளது நூலாகுமா? ஒரு நாளும் ஆகாது.

98. "அவனை அமைத்து என் உணர்வை அளித்தபொழுது கீழேவிழுந்து அவனைத் தொழு." "என் பிரபுவே! என்னை வஞ்சித்தபடியால் பூமியிலுள்ள யாவற்றையும் நல்லதுபோல் தென்படச் செய்கிறேன். நிச்சயமாகவே எல்லோரையும் ஏமாற்றுகிறேன்". (**16**. 29, 39).

தனது தன்மையைக் கடவுள் ஆதாமிடம் அளித்தார் என்றால், ஆதாமும் கடவுளாக வேண்டுமே. அவர் சயித்தானை ஏமாற்றுபவராயின் சயித்தானின்

குருவாகிய கடவுள் ஏன் பெரிய சயித்தானைக் கண்டிக்கின்றனர். உண்மையில் கடவுளை அல்லவா அவர்கள் நிராகரிக்கவேண்டும்? மேலும் கடவுள் முன்னிலையில் சயித்தான் "நான் நல்லோரையும் கெடுப்பேன்" என்று கூறிய பொழுது அவனைக் கொல்லவோ அல்லது பிறரைக் கெடுக்காமலிருக்க வேண்டி ஒரு சிறையிலிடவோ கூடாது?

99. ஒவ்வொரு ஜனங்களுக்கும் தூதரை அனுப்பினோம். நினைத்த போது எது வேண்டுமானாலும் ஆகக் கடவது என்போம். அது ஆகிவிடுகிறது (**16**, 38, 42).

எல்லா வகுப்பு ஜனங்களுக்கும் கடவுள் தமது தூதரை அனுப்பினர் என்றால், பிறமதங்களைப் பின்பற்றுபவரை நம்பிக்கை அற்றவர் என்று ஏன் அழைக்கவேண்டும். உங்களுடைய நபிகளைத் தவிர பிற நபிகளை எவரும் பணிதல் கூடாதா? இங்ஙனம் கூறுதல் பிடிவாத குணமல்லவா? எல்லா நாட்டிற்கும் கடவுள் தூதரை அனுப்பினர் என்பது உண்மையாயின், அவர் ஏன் ஆரியவர்த்தத்திற்கும் ஒருவரை அனுப்பவில்லை? எனவே குர்-ஆனின் கூற்று ஏற்கத் தக்கதல்ல. கடவுள் 'பூமி இருக்கட்டும்' என்று கூறிய கட்டளையை உயிரற்ற பூமி எங்ஙனம் கேட்க முடியும்? முகம்மதியர்கள் கூறியதுபோல் சிருஷ்டிக்குமுன் எதுவும் இல்லையெனில் கடவுள் கட்டளையை எது கேட்டது? அது எங்ஙனமாயிற்று. சாஸ்திர ஞானம் அற்றவர்களே இங்ஙனம் கூறுவார்கள். இங்ஙனம் கூறுவதையும் நம்புவார்கள். இவைகள் எல்லாம் அறியாமையின் மயக்கமேயாகும்.

100. அல்லாவிற்குப் பெண்கள் உண்டென்பார்கள். அவருக்கு ஜயம்! இதற்கு முன்னமேயே அவர்களுக்குத் தூதர்களை அனுப்பியிருக்கிறோம் (**16**, 59, 65).

கடவுள் பெண்களை வைத்துக் கொண்டு என்ன செய்யமுடியும்? மனிதர்களுக்குத்தான் பெண்கள்வேண்டும். கடவுளுக்கு ஏன் ஆண்குழந்தைகள் தேவையில்லை? ஏன் பெண்களை மாத்திரம் புத்திரிகளாகக் கொண்டார். அயோக்கியர்களும் பொய்யர்களுந்தான் சத்தியம் செய்வார்கள். கடவுளுக்குச் சத்தியம் செய்ய வேண்டியதில்லை. நமது அனுபவத்தில் பொய்யர்கள் சத்தியம் செய்வதைக் காண்கிறோம். உண்மையைப் பேசுபவர்கள் ஏன் சத்தியம் செய்யவேண்டும்? நல்லவர்களுக்குச் சத்தியத்தின் உதவி தேவையில்லை.

101. அல்லாவினால் மூடப்பட்ட மனம் காது கண் இவைகளை உடையவர்கள்; ஒவ்வொரு ஜீவனும் காரியங்களுக்குத் தக்க பயனை அனுபவிக்கும். அவைகளுக்கு ஒருபொழுதும் அனியாயம் செய்வதில்லை. (**16**. 110, 112.)

கடவுளே மனிதர்களின் ஹிருதயத்தைப் பூட்டி விட்டார் என்று கூறுகிறீர்கள். அங்ஙனமாயின் மனிதர்கள் தாங்கள் ஜவாப்தாரியாகாத குற்றங்களுக்குத் தண்டிக்கப் படுகின்றனர். இதென்ன நியாயம் பாருங்கள். குர்-ஆன் முழுவதிலும் முரண்பாடான விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன. மற்றோரி

டத்தில் மனிதர்கள் அவர்களது செயலுக்கு ஏற்றவாறு தண்டிக்கவோ அல்லது வெகுமதி கொடுக்கவோ படுகிறுர்கள் என்று கூறப்பட்டிருககிறது.

மனிதர்களைத் தங்கள் பாப கர்மங்களுக்கு ஜவாப்தாரியாகாது விட்டுப் பின்னர் அவர்களது பாபத்திற்குத் தண்டித்தல் பொருந்துமோ? தண்டனைக்குள்ளாக்க வேண்டியவர் கடவுளே அல்லவா? அவர் பாபத்தை மன்னித்துவிடுகிறுர் என்று கூறின் கடவுள் நியாயத்தை அழிப்பவருகிறுர். இவ்வாறு கடவுள் காரியங்களை நிகழ்த்த முடியாது. மனிதன் தான் செய்ய முடியும்.

102. காப்பிரிகளுக்கே நரகம் சொந்தமானவை. அவனவனுடைய விதியை அவனவன் கழுத்தில் கட்டி இருக்கிறேம். தீர்ப்பு தினத்தில் தூங்கி எழுங்காலையில் திறந்த புத்தகம் மொன்று கொண்டுவரப்படும். நோவாவுக்குப் பின் எத்தனை தேசங்களை அழித்திருக்கிறேம்? (**17**. 8, 14, 18.)

குர்-ஆனையும், முகம்மதையும் குர்ஆன் கடவுளையும் ஏழு சுவர்க்கங்களையும், முகம்மதியர் பிரார்த்தனைகளையும் நம்பாதவர்கள் நம்பிக்கை அற்ற காபிரிகளானுல் அவர்கள் நரகத்திற்குச் செல்லவேண்டியது என்ருல், இது பிடிவாதமுள்ளவர்களின் கூற்று என்பதில் என்ன சந்தேகம்? குர்-ஆனில் நம்பிக்கை உள்ளவர்கள் அனைவரும் நல்லவர்களா? அற்றவர்கள் கெட்டவர்களா? ஒவ்வொருவனது தலைவிதியும் அவனவன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கிறது என்று கூறல் குழந்தைப் பேச்சாகக் காணப்படவில்லையா? எவர் கழுத்திலும் விதிச்சீட்டிருப்பதைக் காணமுடியவில்லை. இதின் பொருள் அவனவது கருமத்திற்கேற்ற பலன் என்பதாகுமானுல் கடவுள் ஹிருதயத்தையும், கண்களையும் பூட்டி முத்திரை போட்டுவிட்டார் என்று கூறுதல் விநோதமாய்க் காணப்படவில்லையா? தீர்ப்புத்தினத்தன்று கடவுள் தமது சிட்டைப்புத்தகத்தை எடுத்துக் கொண்டு வருவார் என்று கூறப்படுகிறது. அது உண்மையாயின் அப்புத்தகம் இப்பொழுது எங்கிருக்கிறது? வியாபாரிகளைப்போல் கடவுள் தினம் குறிப்பு எழுதுவரோ? முன்பிறப்பு என்பது இல்லையெனில் மனிதனின் கர்மங்கள் எங்கிருந்து வருகிறது. பின்னர் சிட்டை எழுதுவதற்குத் தேவையே யிராதல்லா? மனிதன் கர்மாதிகளைச் செய்யாதிருக்கையில் சீட்டு எழுதப்படுமாயின் கடவுளைக் கொடும்பாபி என்று கூறவேண்டும். முற்பிறப்பு, முன்கர்மம் இல்லையெனில் ஏன் சிலர் சுகமாய் இருக்கவேண்டும், சிலர் கஷ்டப்படவேண்டும்? கர்மம் இல்லாத காலத்தில் கடவுள் இங்ஙனம் சுகதுக்கங்களை அளிப்பின் அவரது செயல் நியாயமாகுமா? தீர்ப்பு தினத்தன்று யார் புத்தகத்தைப் படிப்பவர்? கடவுளே வாசிப்பாரா? அல்லது வேறு ஒரு தூதுவனைப்பழகும் பொருட்டு அமர்த்திக் கொள்வாரா? மேலும் சீக்கிரம் தீர்ப்பு சொல்லாது. ஆத்மாக்களை வெகுநாள் காத்திருக்கவைப்பவன் கடவுளல்ல; கொடுங்கோலனே. கொடுங்கோலன் கடவுளாக முடியாது.

103. அவர்கள் கண் எதிராக தேமாடுவுக்கு ஒட்டகத்தைக்கொடுத்தோம். உன்குரலால் முடியாதவர்களை வயப்படுத்து. ஒருநாள் ஜனங்களையும் அவர்களது தலைவர்களையும் அழைப்போம். அவர்களுடைய வலதுகையில் புஸ்தகங்கள் அளிக்கப்படும்.

தனது ர்வவல்லமையை ருசுப்படுத்தவே இறைவன் பெண் ஒட்டகத்தை வைத்திருக்கிறார்போலும். சாத்தானைக் கடவுள் ஜனங்களைத் தீயவழியில் நடத்தச் சொல்லின் அவர் பெரிய சாத்தான். இத்தகைய செயல்களைக் கொண்டவனைக் கடவுள் என்றழைப்பது மடமை. திர்க்கதரிசியையும் அவரது அநுசரணைக் காரர்களையும் தீர்ப்புத் தினத்தன்று விசாரணை செய்ய அழைப்பார் எனில் அதுவரையில் அவர்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கவேண்டுமே. அதாவது விசாரணையில்லாவது காவலில் வைத்திருப்பதைப் போல் தோன்றுகிறது. இது முறையாகுமோ? 50 அல்லது 60 வருடங்களுக்கு ஒரு முறை எல்லாக் குற்றவாளிகளையும் ஒன்றாக சேர்த்து விசாரித்து நியாயமளிப்பதாகச் சொல்லும் நீதிபதியின் கூற்றாகத் தோன்றவில்லையா? இது நியாயமாகாது. நியாயமென்பதை அறிய வேதத்தைப் படியுங்கள். மனுஸ்மிருதியைப் படியுங்கள். ஒரு நிமிஷமும் தாமதமின்றி நியாயம் செய்யவேண்டுமென்று மனுஸ்மிருதி கூறுகிறது. மேலும் தீர்ப்புத்தினத்தன்று கடவுள் சாட்சியாக முகம்மது நபியைக் கூப்பிடுகிறாரென்பது கடவுளது அபாரசக்திக்கு ஹானியை விளைக்கிறது. இத்தகைய புத்தகம் தெய்வ நூலாகுமா? இதை ஆக்கியவன் கடவுளுமாக முடியுமா?

104. அவர்களுக்காக ஏதேன் தோட்டம். அந்த நிழலில் நல்ல அருவிகள் ஒடுகின்றன. நகைகளால் அவர்கள் அலங்காரம் செய்து கொண்டும் பச்சைப்பட்டும் விலை உயர்ந்த ஆடைகளும் அணிந்து உல்லாஸமாகச் சாய்ந்து இருப்பார்கள். ஆனந்தம், பேரானந்தம் உல்லாஸமான சயனம். (18. 30.)

குர்-ஆனில் கூறப்பட்டுள்ள சுவர்க்கம் உண்மையில நல்ல சுகமான வீடமாகும். அங்கு தோட்டங்களிருக்கின்றன. நகைகளுக்குக் குறைவில்லை. மெத்தைகளும் நாற்காலிகளும், ஆடைகளும் இருக்கின்றன. அங்கு வாழ்தல் சுகமாகவே யிருக்கும். அறிஞன் தான் பொறுப்பாளியாகாத கர்மங்களுக்கு நரகத்தையும் சுவர்க்கத்தையும் அநுபவித்தல் என்னும் கூற்றைக்கண்டு ஆச்சரியப்படுவான். மேலும் வரம்பிற்குட்பட்ட கர்மங்களுக்கு வரம்பு கடந்த தண்டனை யென்பதும் விரோதமானதே. வரம்பு கடந்த இன்பமும் துன்பமாய் முடியும். இனிப்புள்ள பதார்த்தங்களை அளவுக்கு மிஞ்சி உண்டால் அதில் வெறுப்பு எற்படாதா? எனவே ஹிந்துக்கள் கூறும் விதம் அவரவர்கள் கர்மங்களைக் கேற்றமாதிரி கடனுற்ற சுகதுக்கங்களை அனுபவித்து ஆத்மா தேவியை எடுத்து வருகிறது என்பதும் யுகப்பிரளயம் வரையில் அங்ஙனமே நடந்து வருகிறது என்பதுமே நம்பக்கூடிய சத்தியத்தத்துவமாகும்.

105. பாபிகளான பிறகு அவர்களுடைய நகரங்களை அழித்தோம். அவர்களின் அழிவை முன் எச்சரிக்கை செய்தோம். (18. 58.)

ஒரு குறித்தவிடத்தில் இருக்கும் ஜனங்களனைவரும் எப்பொழுதும் பாபிகளாயிருக்கமுடியுமா? சில விடங்களில் பாபகர்மங்களதிகரித்தலைப் பார்த்த பின்னர் கடவுள் அழித்தாரென்பது அவரது அளவற்ற வல்லமையைப் புலப்படுத்தவில்லை. வருங்கலஞானம் கடவுளுக்கில்லை என்று இதனால் தெரிய

வில்லையா? பல கிரகங்களை அவர் அழித்தார் என்பது அவரது கருணை அற்ற தன்மையையும் புலப்படுத்துகிறது.

106. சிறுவனுக்கோ அவன் பெற்றோர்கள் முஸல்மான்கள். அவன் பிழையாலும் பாபத்தாலும் தொந்தரவு செய்வான் என்று அஞ்சினோம். சூரியாஸ்தமனமாகையில் சூரியன் சேற்றுநீரில் அஸ்தமிப்பதைக் கண்டான். "ஜஜூல் கர்னெங்கே" யாஜூஜ் மாஜூஜ் நிலத்தை அழிக்கிறார்கள். உமக்குக் காணிக்கை செலுத்தட்டுமோ? நமக்கும் அவர்களுக்கும் நடுவில் கோட்டை ஏற்படுத்தவேண்டுமோ.

என்னே கடவுளின் நியாயத்தன்மை. அந்த பையனின் பெற்றோர்கள் தனது சட்டளையை மீறு மாறு செய்யப் படுவார்கள் என்று கண்டு கடவுள் அஞ்சினார். இது கடவுட்டன்மைக்கு ஏற்றதாகுமா? மேலும் குர்-ஆன் ஆசிரியனின் அறியாத்தன்மையைப் பாருங்கள். அவர் சூரியன் ஒரு ஏரியில் மாலையில் மூழ்கி வருகிறது என்று எண்ணினார். விடியற் காலையில் மீண்டும் ஏரியினின்று வெளிக்கிளம்புகிறான் என்று எண்ணினார். சூரியன் பூமியை விடப் பெரிதானது என்பதை அவர் அறியவில்லை. பூமியைவிடப் பெரிய சூரியன் எவ்வாறு ஏரியிலே சமுத்திரத்திலே இருக்கமுடியும். குர்ஆன் ஆசிரியருக்கு, பூகோள சாஸ்திரமும் வான சாஸ்திரமும் தெரியாதென்று புலனாகவில்லையா? இச்சொல்லில் நம்பிக்கை வைத்தவர்களும் கல்வி அறிவில்லாதவர்கள். இல்லையேல் இப்புத்தகத்தில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்க மாட்டார்கள். கடவுள் சிருஷ்டி நாயகனாயிருந்தும் காக்கும் மாகாக்கும் சண்டை யிடுமாறு செய்தார். இத்தகைய புத்தகத்தை காட்டு மிராண்டிகள்தான் நம்புவார்கள்.

107. குர்-ஆனில் மேரியின் கதையை நினை. அவள் குடும்பத்திலிருந்து கிழக்குப்புறமாய்த் திரும்பியபொழுது காப்ரியலை மனித உருவத்தில் அவள் முன் நிறுத்தினோம். அவனை அஞ்சி என்னை அணுகாதே என்று கெஞ்சி அல்லாவே தஞ்சம என்றாள். நான் அவன் தூதன் நீ மக்கட்பேறு அடைவாய் என்றான். புருஷன் தொடாமல் எப்படி அடைவேன் என்றதற்கு காப்ரியல் அல்லாவின் கிருபையால் எனக்கு இது சுலபம். நாம் செய்வோம். மனிதர்களுக்கு அடையாளமாகும். நம்முடைய கருணை. இதுவே கட்டளை. அவள் கருத்தரித்து கர்ப்பாசயத்தில் அவனுடன் தூரமாகச் சென்றாள். (**19**. 12, 16, 18)

தேவதைகளனைத்தும் கடவுள் சுபாவமுள்ளவர்கள். எனின் அவர்கள் கடவுளிலிருந்து பிரிந்து வேறாக இருக்க வேண்டியதில்லை? மேரி கன்னிகையாயிருக்கையில் குழந்தையைப் பெற்றாள். அவள் ஆணுடன் கூட விரும்பவில்லை. ஆனால் கடவுளின் விருப்பப்படி தேவதைகளின் உதவியினால் கர்ப்பவதியானாள் கடவுள் இங்ஙனம் செய்தல் பிழையல்லவா? இன்னும் குர் ஆனில் விரும்பத்தகாத விடயங்கள் இருக்கின்றன. அவைகளை நாம் எண்டு கூற விரும்பவில்லை.

108. காப்பிரிகளைப் பாபத்தில் செலுத்த சயிதானை அனுப்பப்படுவதைப் பார்க்கவில்லையா. (**19**. 78.)

கடவுள் காப்பிரிகளைத் தீயவழியில் நடத்த துர்த்தேவதைகளை அனுப்புவதால் நாம் துஷ்டதேவதைகளின்மீதும் காப்பிரிகளின்மீதும் கோபங் கொள்ள

வேண்டியதில்லை. நியாயகர்த்தாவாகிய கடவுளே அவரது இத்தீச் செய லுக்கு நரகத்தை யனுபவிக்கவேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் அவர் பாப த்தை உலகில் பரப்புபராவர்.

109. பச்சாதாபப்பட்டு நம்புவோனுக்கு எனது கிருபை, சரியானவழியில் போவான். அதுவே சரியானவழி. (**20**. 76.)

ஒருவரது பாபங்கள் அவர் பச்சாதாபப்பட்டால் கழிந்து போகிறது என்று குர்-ஆன் கூறுகிறது. எனவே இது பாபத்தைச் செய்யத் தூண்டுகி றது. எனவே குர்-ஆனும் அதன் ஆசிரியரும் பாபச்செயல்களை வளர்க்கின் றனர்.

110. அசையாமலைகளைப் பூமியிலவைத்தோம். ஏனென்றால் அது அவை களுடன் அசையும். (**21**-31.)

பூமி சுழலுகின்ற தத்துவத்தைக் குர்-ஆன் ஆசிரியர் அறிந்திருப்பின், பூமி அசையாமல் அப்படியே இருக்கிறதென்று கூறியிருக்கமாட்டார். மலைகள் பூமியை அசையாது செய்கிறது, எனக் கூறப்படுகிறது. பூமியில் உஷ்ணம் அதிகப்படுங்கால் ஏன் அசைகிறது.

111, கன்னிகைப் பருவத்தைக்காத்தலை நினை. அவளுக்கு நம் உண ர்வை அளித்தோம். (**21**-88.)

இத்தகைய விரும்பத்தகாத விஷயங்கள் தெய்வநூலில் கூறப்பட லாமா? நாகரிகமுள்ள படித்தமனிதனும் கூறத்துணியான். மனிதன் விரும் பாத விஷயங்களைக் கடவுள் எவ்வளவு துணிவுடன் கூறுகிறார்? இத்தகைய கூற்றுகள் குர்-ஆனின் மதிப்பைக் கெடுக்கின்றன. குர்-ஆன் சத்திய நெறி களைக் கூறியிருப்பின் வேதத்தைப்போல் போற்றப்படும்.

112. பூமியிலும், ஆகாயத்திலும் உள்ளவைகளெல்லாம் தொழுவதை நீ பார்க்கவில்லை? சூரியன், சந்திரன், நட்சத்திரம், மலை, மரம், மிருகம், அனேக மானிடர்கள். தங்காபரணங்களும், முத்துக்களும், பட்டாடைகளும் அணிவார் கள். நிற்போருக்கும் என்மேல் ஆசையுள்ளோருக்கும் "என் வீட்டைப் புனித மாகச் செய்". அவர்களில் நீக்கப்பட்டவைகளை சேர்ப்பி. தங்களின் வேண்டு கோள்களை நிறைவேற்றி முடியுங்கள். அல்லாவின் பெயரை நித்தியமாக்குங். (**22**. 18, 23, 28, 30, 32.)

தாவர வர்க்கங்களும் மனிதரில்லாத பிராணிகளும் கடவுளை யறிய முடி யாதெனின் அவைகள் எங்ஙனம் ஈசனை பக்திப் பண்ணமுடியும்? இது தெய்வ நூலாகாது. அறிவிலியால் எழுதப்பட்ட நூலெனவே காணப்படுகிறது. பட்டாடை உடை ஆபரணங்கள் இருக்கும் சுவர்க்கம் அழகானதே. அரச மாளிகையைக் காட்டிலும் இச்சுவர்க்கம் உயர்ந்ததாக இருக்க முடியாது. கட வுளிருக்கு மிடம் சுவர்க்கமாயின் குர்-ஆன் உருவ ஆராதனையை ஆதரிப்பதாகத் தோன்றவில்லையா? புராணத்தில் கூறும் துர்க்கை பைரவிக் கூற்றுப் போலவேத் தான் குர்-ஆனும் கூறுகிறது ஏனெனில் மனிதன் அளிக்கும் சாப்பாடு முத லானவைகளைக் கடவுள் ஏற்கிறார். மசூதி ஒரு பெரிய விக்கிரகமாகும். எனவே முகம்மதியர்கள் கேவலமான விக்கிரக ஆராதனைக்காரர்கள். புராணிகர்களும்

சமணர்களும், முகம்மதயர்களுக்குச் சமானமான விக்கிரக ஆராதனைக்காரர்களல்ல.

113. பிறகு தீர்ப்புநாளில் எழுப்பப்படுவாய் (23. 16).

கடைசி நாள்வரை இறந்தவர்கள் கல்லறைகளில் வசிக்கிறார்களா? அல்லது வேறு இடத்தில் வசிக்கிறார்களா? கல்லறைகளில் வசிக்கிறார்களெனின் நல்ல ஆத்மாக்களும் அங்கே தானிருக்க வேண்டுமா? இந்நியாயம் ஆச்சரியமாயிருக்கிறது. மேலும் முகம்மதியக் கடவுளும் அவரைப் பின்பற்றுபவர்களும் எங்கும் பிணியைப் பரப்புவர்களாவார்கள்.

114. அவர்கள், அவர்களின் கைகால் அவைகளின் செய்கைகளினால், நாவானது அவர்களுக்கு விரோதமாய் சாட்சி கொடுக்கும். வானத்திற்கும் பூமிக்கும் அல்லாவே தீபம். சுவற்றின் சிறு அறையிலுள்ள தீபம்போல், தீபமுள்ள கண்ணாடி, நட்சத்திரம் போல் பிரகாசிக்கிறது. தீபம் விருட்ச எண்ணெயால் எரிக்கப்படுகிறது. கிழக்குமேற்கினுடையது இல்லை. அதற்கு வேண்டியது சிறியதளவு. அவ்வெண்ணெயால் வெளிச்சம். ஆனால் அனலோ படவில்லை. தீபத்தில் தீபம் சேர்ந்தது போலாகின்றது. இஷ்டமுடையோனுக்குத் தீபத்தை யருளுபவர். (24, 24-35).

காலும் கையும் உணர்வற்ற படியினாலே அவைச் சாட்சியம் கூறமுடியாது. இரண்டாவதாகக் கூறப்பட்டவை இயற்கைத் தத்வத்திற்கு மாறுபானவை. எனவே உண்மையாகாது. கடவுள் நெருப்பா மின்சாரமா? குர்-ஆனில் கூறியிருப்பவைப் பொருந்தாது.

115. ஜல ஜந்துக்களை அவனே சிருட்டித்தான். வயிற்றால் சிலவை நகருகின்றன. யார் அல்லாவையையும் தூதனையும் பணிகிறானோ—சொல்லு. அல்லாவையும் தூதனையும் பணி. தயைப் பெற தூதனைப் பணி. (24, 45, 51, 53, 55).

ஜலத்திலிருந்து ஆத்மாக்களின் கூடு முதலிய ஜடப் பொருள்கள் உண்டானதெனக் கூறுவது நூதனமானது. இது அறியாதார் கூறும் வார்த்தை. கடவுள் வார்த்தைபோல் நபிகளின் வார்த்தைகளுக்கும் கீழ்ப்படியவேண்டுமென்பது கடவுளுக்குச் சமானமான பங்காளிகளை ஏற்படுத்துவதாகும். இது உண்மையாயின் கடவுளுக்கு அருகர் எவருமில்லை என்று குர்-ஆனில் சொல்லப்பட்டிருப்பது பொருளற்றதா? எனவே ஏன் இப்படி மாறுபாடான விஷயங்களைப் போதிக்கவேண்டும்?

116. அந்நாளில் ஆகாயம் அதிர்ச்சி பெறும். தேவர்கள் தெரியும் வண்ணம் இறங்குவார்கள். ஆகையால் காபிரிகளை ஒருபொழுதும் நம்பாதே. இயன்ற அளவு அவர்களை எதிர்த்துப் போராடு. அல்லாவானவர் அவர்களைத் தீய வொழுக்கங்களிலிருந்து திருப்புவர். உண்மையாக உணர்ந்து பச்சாதாபப்படுபவன் மாறு யோக்கியதையுள்ளவன். (25, 25, 50, 68, 69).

வானம் மேகத்தால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று கூறுதல் ஒருநாளும் உண்மையாகாது. வானம் ஜடமானால்தான் பிரிக்கப்படும். குர்-ஆன் போதனைகள் சண்டையும் அமைதியின்மையும் உண்டாக்குகிறது.

எனவே தான் நல்லவர்கள் புண்ணியாத்மாக்கள் இதில் நம்பிக்கை வைப்ப தில்லை. பாபமும் புண்ணியமும் எண்ணெய் வித்துக்கு ஒப்பிடல் பொருந் தாது. செய்த தவறுதல்களுக்கு வருத்தமுறுவதால் பாபம் நீங்கி கடவுளை நெருங்கிட்டலாம் எனின் எவனும் பாபம் செய்யப் பயப்படமாட்டான். வருத்தப் படுதல் என்னும் மருந்து இருப்பதால் பெரும் பாபங்களைச் செய்ய முற்படு வான். இவைகள் எல்லாம் ஆராய்ச்சிக்கு முன் நிற்பவைகளல்ல.

117. மூசாவுக்கு முன்னதாக அறிவித்தோம், "இரவில் ஆள்களுடன் ஓடிப் போய்விடு. அல்லது பிடிக்கப்படுவாய்" பாரோவானவன் சைனியங் களைச் சேர்ப்பிக்க அதிகாரிகளை அனுப்பித்தான். சிருட்டித்தது யார், வழி காட்டுவது யார்? அன்னபானம் அளிக்கும் அவர் தீர்ப்புநாளில் என்னை மன் னிப்பார். (**25**, 50, 51, 76, 77, 80).

கடவுள் மூசாவிற்குப் புஸ்தகத்தை யளித்தார் எனின் பின்னர் அவர் ஏன் தாவிதிற்கும், இயேசுவிற்கும் முகம்மது நபிக்கும் முறையே உப தேசத்தை யளிக்கவேண்டும். இரண்டாவதாகக் கடவுள் உபதேசம் செய்த படியினால் முதல் செய்த உபதேசம் குற்றமுடையதென்று புலப்படுகிறது. முதலில் கூறிய மூன்றும் உண்மை நூற்களாயின் குர்-ஆன் பொய்யாகவேண் டும். இந்நான்கு புத்தகங்களும் சத்திய நூற்களாக முடியாது. மேலும் இந் நான்கு புத்தகங்களிலும் ஒன்றிற்கொன்று முரண்பாடான விஷயங்களும் இருக்க முடியாது. கடவுள் ஆத்மாக்களைப் படைத்தார் என்றால் ஒருநாள் அவைகள் முடிவைக் காணவேண்டும். கடவுள் மனிதனைப் போஷிக்கிறரென் றால் மனிதனுக்கு நோய்கள் ஏன் ஏற்படவேண்டும்? ஏன் எல்லோரும் ஒரே அளவு உணவை யடைகிறதில்லை? அரசன் அதிகமாகவும் ஏழை குறைவாகவும் உணவை ஏன் அடைதல் வேண்டும். கடவுளே போஷித்துச் சுகாதாரத் திட் டத்தைச் செய்கிறபடியினால் நோயே இருத்தல் கூடாது. ஆனால் முகம்மதி யர்களும் நோயினால் வாடுகின்றனர். கடவுள் நோயை விலக்குகிறரென்றால் முகம்மதியர்கள் மாத்திரமே தப்பித்தல் வேண்டும். எனவே முகம்மதிய அல் லாவானவர் சிறந்த வைத்தியரல்லவென்பதாகிறது. அப்படியானால் முகம்மதி யர்கள் வழியில் திரும்புவார்கள். அவரே ஜனங்களைச் சிருஷ்டித்துச் சம் ஹாரம் செய்வாரென்றால் அவரே அதன் பயனை அடையவேண்டும். பல பிறப்புகளின் கர்மங்களுக்கேற்றவாறு பயனென்றால் அவரைக் குறை கூறு வதற்கில்லை. கடை தினத்தில் மன்னித்து நியாயம் வழங்குகிறர் என்றால் பாபியும் அதை அதிகரிக்கிறவனாகவு மாகிறர். பாபத்தை மன்னிக்கவில்லை யானல் இவ்வுபதேசமடங்கிய குர்-ஆனைப் பொய்யன்னியில் வேறு என்ன சொல்லுவது?

118. என்னைப்போல் நீயும் ஒருமனிதனே. உண்மையானல் ஒரு அடை யாளத்தைக் காண்பியும். பெண் ஒட்டகமே அடையாளம். அவள் பங்கு ஜலத்தை அடைவள் என்று சொன்னர். (**25**. 154-155).1

கல்லிலிருந்து ஒட்டகம் உண்டாயிற்று என்று கூறல் யாவர் ஏற்பர்? இதில் நம்பிக்கை வைப்பவர்கள் காட்டு மிருண்டிகளே. ஒட்டகத்தினிடம்

தெய்வ குணங்கிடையாது. முரட்டுதனமாய்க் காணப்படுகிறது. கடவுளருளிய நூலாயின் இத்தகைய அறிவற்ற விஷயங்கள் இராது.

119. மூசாவே! உண்மையாகவே நானே அல்லா. வல்லவன், ஞானமுள்ளவன். கழியைக் கீழேவிடு. அவன் அது விழுந்ததையும் அது அசைந்ததையும், பாம்புபோல் நகறுவதையும் பார்த்துப் பயந்தோடினான். மூசாவே பயம் வேண்டாம். என் முன்னிலையில் தூதர்களுக்கு யாதொரு பயமும் இல்லை யென்றார்.

எனக்கு விரோதயாகக் கிளம்பாதே. என்னைச் சரணம் புகு. (**27**. 9, 10, 27, 32).

வாசகர்களே! ஊன்றிக் கவனியுங்கள்! கடவுள் தாமாகவே பெரியவரென்று கூறிக்கொள்கிறார். மனிதனும் இவ்வண்ணம் தற்புகழ்ச்சி செய்து கொள்ளமாட்டான். இக்கடவுள் காட்டுமிருண்டிகளை ஏமாற்றி அவர்களுக்கு ஆண்டவனாய் விட்டார். கடவுள் நூலில் இத்தகைய வேடிக்கைகளிருக்குமா. கடவுள் ஏழாவது சுவர்க்கத்தின் நாயகனாயின் அவர் எங்கும் பரவியுள்ள கடவுளாக முடியாது. சண்டையிடுவது தவறாயின் கடவுள் தூண்டுதலின்மேல் மகம்மது நபி எவ்வளவு பேர்களை வதைத்துள்ளார். இது நியாயமா? குர்-ஆன் முழுதும் பொருளற்றதும் முரண்பட்டானதுமான விஷயங்கள் மலிந்து கிடக்கின்றன.

120. மலைகள் அழுத்தமாய் நிறுத்தப்பட்டிருக்கிறதே என்று எண்ணாதே. மேகங்கள்போல் அவைகள் மறைந்துவிடும். இது அல்லாவின் வேலை. எல்லாவற்றையும் முடிப்பவர். நீ செய்வதெல்லாவற்றையும் அவர் அறிவர். (**27**. 90).

குர்-ஆன் ஆசிரியர் வசித்த நாட்டில் மலைகள் மேகங்களைப்போல் பறந்தன போலும். வேறு எங்கும் இத்தகைய நிகழ்ச்சிகள் இருக்க முடியாது. சாத்தானைப் பிடித்துத் தண்டிக்க முடியாததிலிருந்தே கடவுளின் பெருமை விளங்கவில்லையா? கலகம் விளைக்கக் கூடியவனைப பிடித்து அடக்க முடியாததிலிருந்து கடவுளின் செயல் புலப்படவில்லையா?

121- மூசா மணிக் கட்டினால் அடித்துக் கொன்றான். என் ஜீவனுக்கே தீங்கு விளைவித்துக் கொண்டேன் என்று அல்லாவினிடம் கதறினான். அவர் அவனை மன்னித்தார். அல்லா மன்னிக்க எப்பொழுதும் தயார். அவர் தயாளு. நினைத்ததைச் சிருட்டிப்பார். எல்லாம் அவர் இஷ்டம். (**28**. 14, 15, 66).

மீண்டும் ஊன்றிக் கவனியுங்கள். கடவுளும், மூசாவும், இஸ்லாம் நபிகளும், கிறிஸ்துவர்களும் நியாயமற்றவர்களென்று காணப்படவில்லையா? பினனவர் ஜனங்களைக் கொன்றனர். இப்பாபம் மன்னிக்கப்பட்டது. கடவுள் அவரிஷ்டத்தால் உலகைச் சிருஷ்டித்தார். ஒருவன் அரசனாய்ப் பிறப்பதும் ஒருவன் ஆண்டியாய்ப் பிறப்பதும் கடவுள் இஷ்டந்தானே? ஒருவன் முட்டாளாயிருப்பதும் படித்தவனாயிருப்பதும் கடவுளிஷ்டந்தானே? இது உண்மையானால் குர்-ஆன் சத்தியத்தைப் போதிக்கும் நூலாகாது. முகம்மதியக் கடவுள் இத்தகைய நியாயமற்ற செயல்களைச் செய்வதால் கடவுளாக முடியாது.

122. பெற்றோர்களுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டுமென்பதை முன்பே வற்புறுத்தியிருக்கிறோம். நீ யறியாத ஒன்றில் என்னைக் கலந்து உனக்குச் சொன்

னால் அதைக் கீழ்ப்படிய நீ மறுப்பாயாக. முன்பு இதற்கேதான் நோவாவை அனுப்பித்தோம் அவர் பூலோகத்தில் ஆயிரத்தில் ஐம்பது குறைய இருந்தார். (**29**, 7-13).

பெற்றோர்களைப் பணிதல் நன்மையே. வேறொருவருக்கு அடங்கியிருக்கும் கடவுளைப் பணிதல் வேண்டுமென்றால் அதை நிராகரிப்பதே உசிதமாகும். பொய் சொல்வது கட்டளையானால் அதை நம்புதல் கூடாது. எனவே இக்கட்டளையின் அரைப் பாகமே உண்மையாகிறது. நோவாவையும் நபியையும் அவர் அனுப்புகிறாரென்றால் ஏனைய ஜீவன்களை அனுப்புவது யார். எல்லாவற்றையும் அனுப்புவாரென்றால் எல்லோரையும் நபி என்று ஏன் நம்புதல் கூடாது. பூர்வத்தில் 1000 வருடங்கள் வாழ்ந்தார்களென்றால் இப்பொழுது ஏன் முடிகிறதில்லை. இதுவும் பொய்யே.

123. சிருட்டிகளைச் செய்கிறார். மறுபடியும் உயிர்ப்பிப்பார். அப்பொழுது எல்லாரும் அவனிடம் திரும்புவார்கள். தீயோன் பயந்து மௌனமாவன். நம்பினோன் (முசல்மான்) நற்காரியஞ் செய்தோன் ஆனந்த மைதானத்தில் அமறுவான். புயற்காற்றை ஏவினால் அவர்கள் தானியம் மஞ்சள் நிறமடைந்து எரிந்து விடும். காபிரிகளின் மனதை இப்படிதான் மூடிடுவார். (**30**. 10, 11, 14, 50, 58).

கடவுள் இரண்டுதரந்தான் சிருஷ்டி செய்கிறாரென்று கூறினால் முதல் சிருஷ்டிக்கு முன்னும் இரண்டாவது சிருஷ்டிக்குப் பின்னும் அவர் சும்மா அல்லவா வீற்றிருக்க வேண்டும். உலகத்தை இருமுறை சிருஷ்டித்துவிட்டு அவர் சோம்பேரியாய்த் திண்ணைத் தூக்கம் போடுவாரேயானால் அவர் வலியிழந்து அல்லவா போய்விடுவார். நிற்கப் பாபிகள் தீர்ப்பு தினத்தன்று வழி தெரியாது ஊமையாக மாறுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. முகம்மதியர்களல்லாத மற்றவர்கள் தான் இப்படி ஊமையாக மாறி தவிப்பார்கள் என்பது இம்மேற்கோளின் கருத்தவல்லவென்று நம்புகிறோம். இச்சந்தேகம் ஏன் எழுந்தது என்றால் குர்-ஆனின் பலவிடங்களில் காப்பிரிகள் தான் பாபிகளெனக் கூறப்பட்டிருக்கிறது. முகம்மதிய சுவர்க்கத்தில் கட்டடங்களும் இதர சுகங்களும் இருப்பின் அது இவ்வுலகைப் போன்றதேயாகும். எனவே அங்கு தோட்டக்காரர்களும் ஆபரணங்களை ஆக்குவோரும் இருக்கவேண்டுமென்று சித்தமாகிறது. எனவே குறைவான ஆபரணாதிகளைக் கொண்டவர்கள் திருட முற்படுவார்கள். பிறகு அவர்கள் நரகத்திற்கு அனுப்பப் படுவார்கள். எனவே சுவர்க்கத்தின் பெருமை குறைகிறது. கடவுள் விவசாய விஷயங்களைக் கவனித்து மேற்பார்வை செலுத்தி வருகிறாரென்றால் அவர் விவசாய அனுபவம் சிறந்த நிபுணராய் இருக்கவேண்டும். மனிதர்களின் மனதைமூடி பாபச் செயல்களைச் செய்யுமாறு செய்த கடவுள் மனிதனின் பாபத்திற்கு உத்தரவாதியாகவேண்டும்.

124. ஞானக் களஞ்சியத்தின் அடையாளம். பார்க்க இயலாத தூண்களால் வானத்தை நிறுத்தியுளார். திடமாய் ஆழ்ந்திருக்கும் மலைகளையும் நிறுத்தியுளார். ஏனென்றால் அவை நகரும். பகலுக்குப் பின் இரவு, இரவுக்குப் பின் பகல் ஆகிறதையும் பார்க்கவில்லையா? அல்லாவின் ஆக்ஞையால கப்பல்

மிதப்பதையும் பார்க்கவில்லையா. இதெல்லாம் அவரின் அடையாளங்கள். (**31**. 1, 9, 28, 30).

என்ன விந்தை பாருங்கள். இந்நூல் அறிவு புகட்டும் நூலெனக் கூறப் படுகிறது. இந்நூலோ அறிவிற்கும் சாஸ்திரத்திற்கும் மாறுன விஷயங்களைப் பூரணமாய்க் கொண்டிருக்கிறது. சுவர்க்கம் கண்ணிற்குட்படாத தூணின் துணையைக் கொண்டிருக்கிறதாம். மலை பூமியை ஓடாது அசையாது செய்கிறதாம். கொஞ்சம் படித்தவனும் இங்ஙனம் எழுதியிருக்கமாட்டான். இரவும் பகலும் இணை பிரியாது சேர்ந்திருக்கிறதாம். இது யாருக்குத் தெரியாது? வேதத்தில் இத்தகைய முட்டாள்தனமான வாசகங்கள் இருக்கமாட்டா. கடவுள் துணையில் கப்பல் சமுத்திரத்தில் செல்லுகிறது என்று கூறுவது எவ்வளவு வேடிக்கையாக விருக்கிறது. உண்மையில் இயந்திரங்களும் மானுமிகளும் கப்பல்களை நடத்துகின்றனர். இரும்பால் அல்லது கல்லால் கப்பல் செய்யப்பட்டிருப்பின் அது முழுகிவிடும். அப்பொழுது கடவுள் என்ன செய்வார்? எனவே இந்நூல் கடவுளால் அருளப்பட்டதல்ல. கற்றறிந்தவனுல் செய்யப் பட்டதுமல்ல.

> 125. ஆகாயத்திலிருந்து பூமிவரை ஆளுகிறுர். நீ எண்ணும்படியாக ஆயிர வருடங்களுக்கப்பால் அவரிடம் போய் சேர்வார்கள். நிகழ்வதையும், எதிர் காலத்தையுமறிவார். வல்லவன் தயாளர். ஒழுங்கான உருவை அமைத்து உணர்வை ஊதினுர். உன்னைக் காவல் புரியும் தேவனே உன் மரணத்திற்குக் காரணமாயிருப்பான். நினைத்திருந்தால் ஜீவனைச் சரிவழியில் விட்டிருப்பேன். ஆனுல் நான் நினைத்ததை முடித்தே தீர்வேன். நரகம் பெரியோராலும் மனிதனுலும் நிரம்பி இருக்கும். (**32**. 4, 5, 8, 10-12).

இதிலிருந்து கடவுள் மனிதனைப் போல வரம்பிற்குட்பட்டவர் என்று சித்தமாகிறது. கடவுள் சர்வ வியாபியாகவிருந்தால் அவர் ஓரிடத்திலிருப்பதாகக் கூற முடியுமா? அவர் கீழே வருவதும் மேலே போவதுமாக விருப்பாரா? மேலும் அடிக்கடி தேவதைகள் கடவுளின் தூதராகக் கீழே அனுப்பப் படுகின்றனர் என்றும் கூறப்படுகிறது. இது கடவுளது பெருமையைக் குறைப்பதாகும். மேலும் உலக விஷயங்களை அறியவோ தூதர்களை யனுப்புகிறுர். இதனுல் கடவுள் இருந்த விடமிருந்தே எல்லா விஷயங்களையும் அறியும் வல்லமை அற்றவர் என்பது சித்தமாகிறது. மனிதர்கள் லஞ்சம் வாங்கிக் கொண்டு பொய் சொன்னுல் கடவுள் உண்மையை எப்படி அறிவார். சர்வ சக்திமானுயும் முக்கால மறிந்தோனுயும் இருந்தால் தூதர்களை அனுப்பத் தேவையில்லை. தூதாகச் செல்லும் தேவதைகள் மீண்டும் கடவுளிடம் செல்ல 1000 வருடம் செல்லும் என்றும் சொல்லப்படுகின்றன. தேவதைகளில் சாகும் தேவதைகள் உண்டெனின் அவர்களுக்குச் சாவைத் தருவது எது? அவர்கள் அநாதிகளானுல் கடவுளின் அநாதி தத்துவத்திற்குப் பங்கம் ஏற்படுகிறது. ஒரு தேவதை ஒரே சமயத்தில் பலரை நரகத்திற்கு அனுப்ப முடியாது. கடவுள் நரகத்தில் வாடும் நிரபராதிகளைக் கண்டு களிக்கிறுர் எனின் அவர் கொடியவரே ஆவார். இங்ஙனம் கூறும் நூலும் தெய்வ நூல் ஆகுமா? இந்நூல் கூறுவதில் நீதி, கருணை யென்பதே காணவில்லை.

126. **சாவில் இருந்தாவது சிதையிலிருந்தாவது பறந்தால் வெளிச்சம் உனக்கு இலாபத்தை அருளாது. தூதனின் மனைவிகளே, விளங்கும் தீயச் செயல்களைச் செய்தீர்களானல் நீங்கள் இருமடங்கு தண்டனை அடைவீர்கள். இது அல்லாவிற்குச் சுலபம்.** (**33.** 16-30).

யுத்தகளத்திலிருந்து மரணத்திற்குப் பயந்து ஓடாதிருக்குமாறு செய்ய முகம்மது இம் மேற்கோளைச் செய்தார் போலும். ஏன்? தனக்குக் கதிகாரம் செல்வாக்கு அதிகரிகக; வெற்றிபெற; தனது மதம் வளர. நபியின் நாயகி முகமூடி யில்லாது வெளிச் செல்லலாகாது என்று கூறின் நபி மாத்திரம் செல்லலாமா? மனைவி சென்ருல் தண்டனை; நபிக் கொன்றுமில்லை.

127. உம் இருப்பிடத்திலேயே இருங்கள். அல்லாவையும் அவன் தூதனையும் கீழ்ப்படியுங்கள்.

தத்துபிள்ளைகளின் மனைவிகளை விவாகஞ் செய்த அபவாதம் வரும் என்கிறதை, ஜயித் தீர்மானித்தவுடன் உமக்கு விவாகஞ் செய்து வைத்தோம். அல்லாவின் ஆக்ஞை நடைபெறல்வேண்டும்.

அல்லாவின் ஆக்ஞை என்று அபவாதம் எதையாவது தூதர்கள் செலுத்தலாகாது. உங்களில் எவரது தந்தையும் அவரல்ல. தூதனுக்குச் சரணமடைந்த ஸ்திரீகளிலும் இல்லை. இஷ்டமுள்ள மனைவிகளைத் தாமதப்படுத்திப் படுக்கைக்குப் பின் அழைத்துக் கொள்ளலாம். இஷ்டமுள்ளவளை முன் அழைத்துக் கொள்ளலாம். அது பிழையாகாது. முசல்மான்களே! தூதன் வீட்டில் நுழையாதேயுங்கள். (**33.** 32, 37, 38, 40, 44, 51, 53).

மனிதன் மாத்திரம் எங்கும் செல்லலாம், பெண்கள் மாத்திரம் வீட்டுக்குள்ளேயே கைதிபோல் அடைத்துக் கிடக்கவேண்டும். இது கொடுமை அல்லவா? நல்ல காற்றைச் சுவாசிக்க, தோட்டங்களில் நடக்க, இயற்கை வளத்தைக் கண்டு அநுபவிக்கப் பெண்களுக்கு ஆசையிராதா? இதன் காரணமாக முகம்மதியர்கள், வியபசாரத்தில் அதிகமாயிருக்க வேண்டும். எனவேதான் இம் மாதிரி நிபந்தனை ஏற்பட்டிருக்கவேண்டும். கடவுளும் நபியும் ஒரே மாதிரியான சட்டங்களைத்தான் போடுகிருர்களா? அல்லது ஒன்றிற்கொன்று முரண்பாடான சட்டதிட்டங்களை இடுகிருர்களா? முன்னதாக இருவர் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டுமெனின் அதற்குப் பொருள் இல்லை. பின்னது என்ருல் ஒன்றுதான் உண்மையானதா யிருக்கவேண்டும். இரண்டும் உண்மையாய் இருத்தல் முடியாது.

இது நிற்க மேலே கவனிப்போம். பிறர் துன்பத்தில் தனது நலத்தைத் தேடும் போதனையைக் கொண்ட நூல் தெய்வ நூலாகுமா? குர்-ஆன் இத்தகைய விஷயங்களைக் கொண்டதாயிருக்கிறது. மேற்கூறியதிலிருந்து முகம்மது பெருமானுமி என்று விளங்குகிறது. இல்லையேல் தனது மருமகளை (பிள்ளையின் மனைவியை) தனது மனைவியாகக் கொள்வாரா? இதைக் கடவுளும் ஆதரிக்கிருர். இது நியாய விரோதமான செயல் அல்லவா? முகம்மது யாருக்கும் தந்தை அல்லவெனின் ஜையித் என்னும் அடிமையின் தந்தையாரென்று அறிய விரும்புகிருேம். தனது மகன் மனைவியை அனுபவிக்க எண்ணிய

முகம்மது பெண்கள் கூட்டத்தில் யாரைத்தான் அனுபவிக்க விரும்பான். இதை எந்தவிதமாக மறைக்கக் கருதினாலும், மறைத்தல் முடியாது. அவ்வளவு பெரிய குற்றமாகும். இங்ஙனம் ஒருமாது தனது இஷ்டப்படி காரியத்தை நிகழ்த்தினால் அது சரியென்று கருதப்படுமா? முகம்மது தனது மனைவிகளைத் தள்ளியது கொடுஞ்செயல் அல்லவா? அவர் தனது இஷ்டப்படி மனைவிகளைத் தள்ளும் உரிமை ஏற்கக் கூடியதா? புருஷன் தவறாக நடந்தாலும் பெண்கள் புருஷனைத் தள்ளக்கூடாது. அவர்களுக்கு அந்த உரிமை கூடாதா? முகம்மதின் மனைவிகளை அனுபவிக்கவேண்டும் என்னும் எண்ணத்துடன் எவனும் முகம்மதின் வீட்டில் நுழையக் கூடாது எனின், முகம்மது மாத்திரம் பிறர் வீட்டில் அவர்களது மனைவிகளை அனுபவிக்க வேண்டும் என்னும் தீய எண்ணத்துடன் செல்லலாமோ. முகம்மதிற்கு மாத்திரம் ஏன் இந்த உரிமை? இத்தகைய விஷயங்களைக் கொண்ட குர்-ஆனைத் தெய்வநூல் என்றும், முகம்மதை நபி என்றும் குர்-ஆனில் கூறப்படும் கடவுளை, எல்லாம் வல்ல இறைவன் என்றும் நம்புகிறவர்கள் முட்டாளாகவே யிருக்கவேண்டும். அராபியர்கள் இந்த நன்னெறியற்ற நூலில் நம்பிக்கை வைத்தது நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

128. தூதனுக்கு யாதொரு கவலையையும் அளியாதேயுங்கள். அவன் மனைவிகளை விவாகஞ் செய்து கொள்ளாதேயுங்கள். அல்லாவின் முன்னிலையில் இது பாபமாகும். அல்லாவையும் தூதனையும் தூஷிப்பவனுக்கு அல்லாவின் சாபம். முஸ்லிம் ஆண் பெண் இருவருக்கும் தீங்கு செய்பவர்கள் விளங்கும் அநியாயத்திற்கும் அபவாதத்திற்கும் அகாரண பாத்திரர்கள் ஆகிறார்கள். சபிக்கப்பட்டபடியால், கண்ட இடங்களில் எல்லாம் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள். அல்லாவே அவர்களுக்கு இருமடங்கு தண்டனை அளியும். பெருஞ் சாபமும் இடவேண்டும். (33. 54, 57: 58, 62, 68).

முகம்மதியக் கடவுள் நியாய முறையில் தனது சர்வ சக்தியை வெளியிடுத்தலோ இது. ஆச்சரியம்! முகம்மதிற்கு எவரும் துன்பம் விளைக்கக் கூடாதாயின், முகம்மதுவும் பிறருக்குத் தீங்கு செய்தல் தடுக்கப்படவேண்டுமல்லவா? ஏன் கடவுள் அங்ஙனம் ஆக்ஞை செய்யவில்லை. கடவுள் துன்பங்களுக்கு உட்பட்டவரா? அங்ஙனமாயின் அவர் கடவுளாக முடியாது. கடவுளுக்கும், முகம்மதுவுக்கும் துன்பங்களைத் தரலாகாது என்று கடவுள் ஆக்ஞை இடுவதிலிருந்து இவர்கள் மாத்திரம் மற்ற ஜனங்களுக்கு துன்பம் தரலாம் போலும். இந்த இரு நபர்களைத் தவிர மற்றவர்கள் கஷ்டப்படத்தான் வேண்டுமா? மற்க, முகம்மதியர்களுக்கும் அவர்களது மனைவிகளுக்கும், எவரும் தீங்கு இழைத்தல் ஆகாதெனின் முகம்மதியர்கள் அல்லாதாருக்கும் எவரும் தீங்கு செய்தலாகாது. இதை முகம்மதியர்கள் ஏற்க மறுத்தால், அவர்களும், அவர்களது கடவுளும், முகம்மதும், பட்சபாதமுள்ளவர்கள், அசூயைப் பிடித்தவர்கள் என்றே சொல்லவேண்டும். முகம்மதியர்கள் அல்லாதாருக்கு இரண்டுமடங்கு கடுமையான தண்டனை கிடைக்க வேண்டுமென்று கடவுளைத் துதிக்கிறார். இது நெறிமுறையா? அறிவில்லாத மனிதர்கள் மிருகங்களை ஒப்பார் என்று கூறப்பட்டிருக்கும் வாக்கியம் ஏற்கத்தக்கதே.

129. அல்லாவே காற்றை அனுப்புகிறார். மேகத்தைக் கிளப்புகிறார். அதையே காட்டில் ஓட்டுகிறோம். இறந்தபின் பூமியை சுறுசுறுப்பாகச் செய்கிறோம். அப்படியே தீர்ப்புக் காலத்தையும் அவருடைய கருணையால் நித்திய இருப்பிடத்தையும் அடைந்தோம். எக்கஷ்டமும் நம்மை அணுகாது. எக்களைப்பும் நம்மைப் பாதிக்காது. (**35.** 9, 35).

கடவுள் கூறும் நூதன தத்துவ முறையைக் கவனியுங்கள். கடவுள் காற்றைக் கிளப்பினார். மேகத்தை வரவழித்தார், இவைகளின் துணையால் இறந்தவனைப் பிழைப்பித்தார் என்று கூறப்படுகிறது. இது கடவுள் தன்மையைக் காட்டுமா ? கட்டினால்தான் வீடாகும். கட்டப்பட்டது எக்காலமும் இருக்க முடியாது. தேகத்தைப் படைத்தவன் காரியமில்லாது சலனமில்லாது சும்மாயிருக்க முடியாது. இருந்தால் மனவமைதி யில்லாதிருப்பான். நோய்க்கு ஆளாவான். ஒரு மாதோடு வாழ்ந்தாலே துக்கத்தையும் நோயையும் அடையவேண்டி வரும். சோம்பேரியாய் பலமாதர்களுடன் புணர்ச்சியில் வாழ்ந்தவர்கள் கதி என்னாகும் ? எனவே முகம்மதியர், சுவர்க்கத்தில் திருப்தியாய், பூர்ண சந்தோஷத்துடன் இருத்தல் முடியாது.

130. அறிவுபுகட்டும் குர்-ஆன் ஆணையுடன், நான் சொல்வதாவது நீ கடவுளின் தூதனே. நல்வழி காட்ட யனுப்பப்பட்டவன். வல்லவனும் தயாபரனும் அனுப்பினது. (**35.** 1, 2, 3, 4).

குர்-ஆன் கடவுள் நூலாயின் அவர் அக்குர்-ஆனின் மேல் சத்தியம் செய்வாரா ? முகம்மது கடவுளால் அனுப்பப்பட்ட நபியாயின் அவர் மருமகளிடம் காதல் கொள்வாரா ? குர்-ஆனில் நம்பிக்கை யுள்ளவன்தான் சத்திய வழியில் நடப்பவன், நற்வாழ்க்கையுடையவன், சத்தியம் பேசுபவன், நியாயத்தைத் தர்மமாக உடையவன், அசுயை யற்றவன், பட்சபாதமில்லாதவன் என்று கூறுதல் முட்டாள்தனமாகும். குர்-ஆனும் கடவுளும் நன்னெறி என்னும் விதிக்கு அடங்கியவர்களாகக் காணப்படவில்லை. முகம்மது உண்மையான நபியாக இருப்பின், அவர் கல்விக் களஞ்சியமாக இருக்கவேண்டும். அங்ஙனம் ஒன்றும் காணப்படவில்லை. முகம்மது, மகம்மதிய மதத்தைப் புகழ்வது, மாம்பழ வியாபாரி தனது பழம் உயர்ந்தது என்று சொல்வதுபோல் இருக்கிறது.

131. பேரிகை முழக்கத்துடன் கல்லறையிலிருந்து கிளம்பி அல்லாவை அணுகுவார்கள். அவர்கள் கைகளும் கால்களும் அவர்களைப் பற்றிக் கூறும். அவர் கட்டளை நினைத்தமாத்திரத்திலேயே "ஆகுக" என்றால் அங்ஙனமே முடிந்துவிடும். (**36.** 50, 63, 80).

என்னே அறிவீனம் ! ! கால்கள் சாட்சியம் கூறமுடியுமா? கடவுளைத் தவிர எதுவும் சிருஷ்டிக்குமுன் இல்லை என்று குர்-ஆன் கூறுகிறது. யாருக்குக் கடவுள் உத்தரவிட்டார். யார் இவரது கட்டளையைக் கேட்டார்கள். என்ன கட்டளையின்படி எழுந்தது. சிருஷ்டிக்குமுன் ஒன்றுமில்லையாயின், மேற்கூறியது பொருள் அற்றது. ஏதாவது இருந்திருப்பின், கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பது பொய்.

132. பானகப் பிரியர்களுக்குக் கலக்கமற்ற சுனையிலிருந்து கிண்ணத்தில் சுத்த ஜலம் சுற்றி யளிக்கப்படும். காதலர்களைத் தவிர ஏனையோர்களிடஞ் கண் செல்லாமலிருக்கும் தேவகன்னிகைகள் அவர்களிடம் இருப்பார்கள். தூளி களிலுருந்து காப்பாற்ற சிறகினால் மூடப்பட்ட தீப்பறவை முட்டைபோல் அவர்கள் கண்கள்.. எம்மால் அனுப்பப்பட்டவரில் லூத் ஒருவன். பின் கின்ற தில் இறந்த அவன் மனைவியும் கிழவியும் தவிர அவனையும் அவன் குடும் பத்தையும் மீட்டோம். பின் மற்றவர்களை நாசஞ் செய்தோம். (43. 44, 45, 48, 57, 131, 132, 133, 134);

நல்லது. இப்பூலோகத்தில் சாராயம் குடிப்பது பாபமாகும் என்று முகம் மதியர்கள் கூறுகிறார்கள். முகம்மதியர்கள் சுவர்க்கத்திலோ என்றால் சாராயம் ஆறுகளாக ஓடுகிறது. குடியை ஒழிக்கும் வகையில் முகம்மதியர்கள் உதவி யானார்கள் என்பது ஏற்கத்தக்கது. இதற்குப் பதிலாக அவர்கள் சுவர்க்கம் குடியைத் தொழிலாகக் கொண்டது. சுவர்க்கத்திலோ எவ்வொரு மனிதனுக் கும் பலமாதர்கள் இருக்கிறார்கள். பலர் இருப்பதால், ஒருவன் தனது விருப்பை ஒருவர்பால் வைத்தல் கஷ்டமாயிருக்கும். சுவர்க்கத்தில் இருப்பவர்களுக்குத் தேகம் இருந்தால், அவர்கள் இறக்கவேண்டும். தேகம் இல்லையாயின் புணர்ச்சி என்பது முடியாது. பிறகு சுவர்க்கத்தில் பிரயோசனந்தான் என்ன. லூத்தை நபியெனக் கொள்வீர்களேயானால் தன் மகளிடத்திலேயே அவர் மக்களைப் பெற்றாரென்று பைபிளில் கூறியிருப்பதை நம்புவீர்களா? அத்தகையோர் களுக்கும் அவர்களுடைய துணைவர்களுக்கும் உங்கள் இறைவன் முக்தியளிப் பாராயின் அவரும் அவர்களைப்போலவே யிருக்கவேண்டும். பழங்குருடி கதை களைக் கூறிக்கொண்டு பொறாமையினால் பிறரைக் கொன்றும் வருகிறவர் கடவு ளாகார். ஏனெனில் அத்தகைய கடவுள் முகம்மதியர்களுடைய வீட்டில் தவிர வேறு எங்கும் வசிக்கமாட்டார்.

133. நித்திய இருப்பிட ஸ்தலம். அவைகளின் கதவுகள் எப்பொழுதும் திறக்கப்பட்டிருக்கும். அங்கு படுப்பார்கள். பற்பல பழவர்க்கங்களைக் கேட்பார்கள். பானங்களையும் கேட்பார்கள். தேவகன்னிகைகள் சமீபத்தில் காத லர்களைத் தவிர பிறரைப் பார்க்காமல் இருப்பார்கள். சம வயதுள்ளவர்கள்.

கர்வத்தினால் திமிரடைந்த எபிலிசைத் தவிர எல்லா தேவதைகளும் அவனைத் தொழுகை செய்தார்கள். அல்லாவானவன், "என் கையால் சிருஷ்டிக் கப்பட்டதைத் தொழுகைசெய்ய உன்னைத் தடுப்பதேது. வீண் கர்வம் ஏனோ? உண்மையில் உயர்ந்தவனா நீ?" "அவனைவிட நான் உயர்ந்தவன், என்னை அனலில் இருந்தும், அவனை மண்ணிலிருந்தும் சிருஷ்டித்தாய்". "நீ இப்போ இனிமேல் தயவு இல்லை தீர்ப்புநாள்வரை உன்மேல் என் சாபம்". "தீர்ப்பு நாள்வரை என்னை தண்டனை செய் என்றான். உண்மைதான் தண்டனை அடை வதில் நீ ஒருவன் என்றான். சத்தியமாக நான் எல்லாரையும் கெடுத்துவிடு கிறேன் என்றான். (38. 49, 50, 51, 70-78).

சுவர்க்கத்தில் பூந்தோட்டங்களும் பழமரங்களும் இருக்கின்றனவென்று குர்-ஆன் கூறுவதை நீங்கள் நம்பினால், அவைகள் சாசுவதமாய் அழியாமல் இருக்க முடியுமா? ஜடப்பொருளின் கூட்டால் ஏற்பட்டவைகள் அழியவேண்டு மல்லவா? அவைகள் சாசுவதமாய் இருக்க முடியாது. ஜடசங்கமத்திற்கு

முன்னும் இருக்க முடியாது, பின்னும் இருக்க முடியாது. எனவே பூந்தோட்டங்களும், பழமரங்களும், அழியவேண்டியவைகளே. இவைகள் அழியுங்கால் சுவர்க்கவாசிகள் எங்ஙனம் அங்கு எப்பொழுதும் இருக்க முடியும்? சுவர்க்கத்தில் சுகமும், பொருளும், கனியும் இருப்பதாகச் சொல்லப்பட்டதிலிருந்து முகம்மதியமதம் காணப்பட்டபொழுது அராபியர்கள் ஏழ்மையில் வாழ்ந்தவர்களென்று தெரிகிறது. அவர்கள் நகரமும் செழுமையாயிருக்கவில்லை என்பதைக் குறிக்கிறது. இவ்வித சுவையான வார்த்தைகளால் முகம்மது ஜனங்களைத் தமது வலையில் சிக்கவைத்தார்போலும். மேலும் மாதர்களிருக்குமிடத்தில் சாச்வதமான இன்பம் இருத்தல் முடியாது. சுவர்க்கத்திலிருக்கும் மாதர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அங்கு அழைத்துச் செல்லப்பட்டார்களா? அல்லது சாசுவதமாய் அங்கு இருந்தார்களா?

உலகில் புத்துயிர் ஏற்படும் வரை அம்மாதர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள். சோம்பேரிகளாகக் காலத்தைக் கழித்து வந்தார்களா? சாத்தானைத் தவிர மற்ற தேவதைகள் அனைவரும் ஆதாமை வழிபட்டுக் கடவுளைத் திருப்தி செய்தனர். கடவுளின் பெருமையை நோக்குங்கள். சாத்தான் மாத்திரமே தனியாக விருந்தான். "நான் ஆதாமை எனது இரு கைகளினால் செய்தேன். கர்வம் கொள்ளாதே" என்று கடவுள் சாத்தானுக்குக் கூறினாராம். இதிலிருந்து கடவுள் இரண்டு கையுள்ள ஜீவன் என்பது புலனாகிறது. எனவே இச்சீவன் சர்வ வல்லமை படைத்த கடவுளாகாது. ஆதாமைவிட நான் உயர்ந்தவன் என்று சாத்தான் கூறியது சரியான வார்த்தையே. இதில் ஏன் கடவுளுக்குக் கோபம் ஏற்படவேண்டும். கடவுளுடைய வீடு ஆகாயத்திலிருக்கிறதா? அல்லது பூலோகத்திலிருக்கிறதா? காபா என்னுமிடம் கடவுளின் வாசஸ்தானம் என்று முதலில் அழைக்கப்பட்டது. எக்காரணம் கொண்டு இங்ஙனம் அழைக்கப்பட்டது? கடவுள் எங்ஙனம் தனது சிருஷ்டியினின்று தன்னைப் பிரித்துக் கொள்ள முடியும். உண்மைக் கடவுளுடையது சிருஷ்டி. சிருஷ்டியினின்று கடவுள் வேறாக முடியாது. குர்-ஆனின்படி கடவுள் சுவர்க்கத்தின் சொந்தக்காரர் என்று புலப்படுகிறது. அவர் சாத்தானைச் சபித்து சிறையிலிட்டாராம். சாத்தான் தீர்ப்புதினம் வரைத்தன்னை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டானாம். அவர் அவனது இஷ்டப்படியே விடுதலை செய்தார். சாத்தான் விடுதலை பெற்றவுடன் நான் ஜனங்களைத் தீய வழிகளில் நடத்துவேன் என்று கூறி கடவுளுக்கு விரோதமாகக் கலகக் கொடியைத் தாங்கினான். உனது வார்த்தையைக் கேட்டு கெடுபவர்களை நான் நரகத்தில் தள்ளுவேன் என்று இறைவன் கூறினார். வாசகர்களே! இதை ஊன்றிக் கவனியுங்கள்!! கடவுள் சாத்தானைக் கெடுத்தாரா? அல்லது அவன் தானாகவே கெட்டானா? கடவுள் தான் சாத்தான் கெட்டதிற்குக் காரணம் எனில் கடவுள் பெரிய பிசாசு. அவன் தானாகவே கெட்டான் என்றால் இதைப்போல ஜனங்களும் பிறர் துணையில்லாது கெட்டுப் போகக் கூடும். எனவே ஜனங்கள் கெட சாத்தான் துணைவேண்டாம். அவர் சாத்தானை விடுதலை செய்ததால் அவன் செயலுக்கு ஜவாப்தாரியாகவேண்டும். திருடும்படி ஒருவனைத் தூண்டிவிட்டுப்

பிறகுத் திருடனைத் தண்டிப்பவர் கெட்டவரா? அல்லது திருடன் கெட்டவனா?

134. அல்லாவானவர் எல்லா பாபத்தையும் மன்னிக்கிறார். அவர் பட்சமும் தயவுமுள்ளவர். தீர்ப்புநாளில் இவ்வுலகமெல்லாம் அவர் கைப்பிடியிலேயே அடங்கிவிடும். ஆகாயம் அவரது வலதுகையில் அடங்கிவிடும். பூமி அல்லாவின் ஒளியால் விளங்கும். புத்தகம் திறந்து வைக்கப்படும். தூதர்களும், தியாகிகளும் சாட்சிகளும் இருப்பார்கள். தீர்ப்பு அளிக்கப்படும். (**39**. 53, 67, 69).

கடவுள் எல்லோருடைய பாபத்தையும் மன்னிக்கிறார் என்றால், அவர் உலகத்தைத் தீய வழியில் செல்லத் துணை செய்தவராவார். துஷ்டனை மன்னிப்பதால், கருணையற்றவராகிறார். ஏனெனில் துஷ்டர்களை மன்னிப்பதால் பல நல்லவர்களுக்குத் தீங்கிழைத்தவராகிறார். ஒரு சிறு குற்றமும் தண்டிக்கப்படாதுபோயின் உலகம் அதிக துன்பத்தை அனுபவிக்கவேண்டிவரும். கடவுள் தீயைப்போல் ஜோதியாயிருக்கிறாரா? விதிப் புஸ்தகம் எங்கே? அதை யார் எழுதுகிறவர்? நபிகளினதும், சாட்களினதுமான வாக்கு மூலங்களை அறிந்து கடவுள் விசாரணை செய்கிறார் என்றால், அவர் வரம்பிற்குட்பட்ட புத்தியை உடையவராவர். கடவுள் நீதிபதியாயின், பாரபட்சமில்லாது மனித ஜாதிகளுக்கு அவரவரது கர்மத்திற்கேற்றவாறு வெகுமானத்தையோ, அல்லது தண்டனையையோ அளித்து வரவேண்டும். பாபத்தை மன்னித்தல், ஹிருதயத்தை மூடல், ஜனங்களிடம் அறிவு புகாது செய்தல் பிசாசு வலை போடல், ஜனங்கள் அகப்படுதல் அக்குற்றத்திற்குத் தண்டித்துத் துன்புறுத்தல், இவை போன்றவைகள் பெருந் தவறாகும்.

135. இக்குர்-ஆன் ஷரீபானது அல்லாவினிடமிருந்து அருளப்பட்டது. வல்லவர், சர்வஞ்ஞானி, பாபத்தைப் பொறுத்தருள்பவர். (**40**. 1, 2).

நிறைந்த அறிவுபெறாதவர்களை இதை ஏற்குமாறு செய்யும் நோக்கத்தையே இந்நூல் கொண்டதாகும். குறைவான எண்ணங்களையும் பொய்த் தத்துவங்களையும் இது கொண்டிருக்கிறது. குர்-ஆனும், குர்-ஆன் கடவுளும், இதை ஏற்பவர்களும், உலகத்தில் பாபம், அநியாயம், இவைகளை வளர்க்கவும், பாபகாரியங்களைச் செய்யத் தூண்டவுமே துணை நிற்கின்றன. இத்தகைய போதனைகள் முகம்மதியர்களைப் பாப கர்மங்களைச் செய்யச் செய்கிறது.

136. ஏழு சுவர்க்கமாக இரண்டு தினத்தில் செய்தார். ஒவ்வொரு சுவர்க்கத்திலும் அதன் தொழிலை விளக்கினார்.

அங்கு சேரும்வரை அவர்கள் கண்கள் காதுகள், தோல் அவர்களின் செயல்களைப் பற்றிச் சாட்சி கொடுக்கும். தோலே எனக்கு விரோதியாய் ஏன் சாட்சி சொல்லுகிறாய் என்றால், எல்லாவற்றிற்கும் கொடுத்ததுபோல் அல்லாவானவர் எனக்கும் வாயை அருளியிருக்கிறார் என்று கூறும். (**40**. 11, 19, 20, 38).

முகம்மதியர்களே நல்ல காரியம் செய்தீர்கள். இவர்தானா உங்கள் சர்வ வல்லமையுள்ள கடவுள். ஏழு சுவர்க்கங்களைச் செய்யக் கடவுளுக்கு இரண்டு

நாள் பிடித்தது. உள்ளபடி சர்வ சக்தியுள்ள கடவுள் இவ்வுலகத்தைக் கண் கொட்டும் நேரத்திற்குள் செய்துவிடலாம். கடவுள் காது, கண், தோல் இவைகளை உயிரற்றதாகச் செய்திருக்கும் பொழுது எப்படி இவைகள் ஒன்றிற்கொன்று சாட்சியங்களாக விருக்க முடியும்? அவரால் இவைகளுக்குத் தீர்ப்புத் தினத்தன்று உயிரளிக்க முடியுமென்று கூறுவீர்களேயானால் கடவுளது இயற்கைத் தத்துவத்தை நீங்கள் மீறுவதாகாதா? இது மலடிவயற்றுப் பிள்ளையின் முகத்தைக் கண்டேன் என்பதைப் போலிருக்கிறது. மலடிக்குப் பிள்ளை யிருப்பின் அவள் மலடியாயிருக்க முடியாது. உண்மையில் மலடியா யிருப்பின் அவளுக்குப் பிள்ளை யிருக்க முடியாது. செத்தவர்களைக் கடவுள் எழச் செய்தால், அவர் ஏன் முதலில் சாகச் செய்யவேண்டும்? அவர் தாமாகச் சாவாரா? சாவார் என்றால் ஏன் அவர் சாவைக் கேவலமாகக் கருதவேண்டும்? எந்த முகம்மதியர் இல்லத்தில் ஆத் மாக்கள் தீர்ப்புத்தினம் வரை இருந்துவருகின்றன? ஏன் கடவுள் தீர்ப்பு நாளை அதிகம் ஒத்திப் போட்டு வைக்கிறார்? ஏன் அவர் உடனுடனே விசாரித்து தீர்ப்புத்தரல் கூடாது? கடவுள் தத்துவத்திற்கு இவைகள் யெல்லாம் குறைபல்லவா?

137. சுவர்க்கத்திலுடையவும் பூமியுடையவும் சாவிகள் அவரிடம். இஷ்டம் போல் தாராளமாயும் செட்டாயும் சிலவழிக்கிறார்.

இஷ்டம்போல் சிருஷ்டித்து பெண்களை வேண்டிய இடத்திலும் பிள்ளைகளை வேண்டிய இடத்திலும் அருளுகிறார். இரண்டையும் அளித்து பிள்ளைகள் இல்லாமையும் சிலருக்குச் செய்கிறார். அல்லாவானவர் மனிதனோடு பேசத் தேவையில்லை. கனவிலாவது திரை மூடியின் மூலமாவது பேசுகிறார். இஷ்டமானதைக் காண்பிக்கத் தூதனை அனுப்புகிறார். (42. 48, 49, 50, 51).

பல விடங்களின் கதவை ஒவ்வொன்றாய் திறக்க வேண்டியிருப்பதால் கடவுளிடம் கணக்கற்ற சாவிக் கொத்துகளிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. பாப புண்ணியங் கருதாது தனக்கு இஷ்டமானவர்களுக்குச் சுகத்தைத் தருவதும் வேறு சிலருக்குத் தண்டனையைத் தருவதும் குழந்தைத்தனமாக விருக்கவில்லையா? தமது இஷ்டப்படி காரியங்களைக் குழந்தைகளைப் போல் செய்பவராயின், அவர் அநியாயம் செய்பவராவர். குர்-ஆன் ஆசிரியர் மிகவும் சமர்த்தர். மாதர்களைத் தனது வலையில் சிக்கவைக்கச் செய்யப்பட்ட தந்திரமாகும். முகம்மதியக் கடவுள் தான் விரும்பியதைச் சிருஷ்டிக்குக் திறமையுடையவராயின் அவரால் மற்றொரு கடவுளைப் படைக்க முடியுமா? முடியாதாயின் அவரது சக்தி அவ்வளவுதான் என்று நாம் கொள்வதா? மாதர்களுக்குக் குழந்தையை யளிப்பவர் கடவுளாயின் பறவை மீன் முதலிய ஜீவராசிகளுக்கும் கால்நடைகளுக்கும் குட்டிகளைத் தருவது யார்? கடவுள் குழந்தைகளைத் தருபவராயின் ஏன் ஆணும் பெண்ணும் சேராத காலத்திலும் தரக் கூடாது. ஏன் அவர் சில மாதர்களை மலடியாயிருக்குமாறு செய்கிறார். நிற்க அவரிருக்கையில் ஒருவரும் பேசக்கூடாது என்றிருக்கிறது. ஆச்சரியமான கடவுளே! திரை மறைவிலிருந்து பேசலாம் என்று கூறியிருக்கிறார். இது உண்மையாயின் கடவுள் நபி தேவதை

இவர்களது கைப்பொம்மை யாவார். அவர் எல்லாம் வல்ல சர்வ வியாபி யென்பது உண்மையாயின் அவருக்குத் திரைமறைவுப் பேச்சும், சமாசாரங் களைச் சொல்ல இடைமனிதர்களும தேவையில்லை யல்லவா? இடை மனிதர் துணை அவசியமா யிருப்பின் அவர் கடவுளாகார். வினோதமான சுவபாவ முள்ள மனிதனுகவே இருத்தல் வேண்டும். எனவே குர்-ஆனைத் தெய்வ நூலென முடியாது.

138. விளக்கும் நிரூபணத்தோடு இயேசு வந்தபொழுது. (**42**. 59).

இயேசுநாதரை அனுப்பியவரும் கடவுளாயின், அவர் ஏன் பிறகு குர்-ஆனை—பைபிலுக்கு மாறுன நூலை—அருளவேண்டும்? பைபிலும், குர்-ஆனும் ஒன்றுக்கொன்று எதிரான கொள்கைகளை யுடையதாயிருப்பதால் இரண்டும் அதாவது குர்-ஆனும், பைபிலும் தெய்வ நூல்களாகாது.

139. அனலின் நடுவில் அவனைப் பிடித்து இழுக்கவும். கறுத்துப் பெருத்த கண்கள் உள்ளவர்களோடு கலியாணஞ் செய்துவைப்போம். (**44**. 43, 50).

கடவுள் மனிதனைப் பிடிப்பதும், அவனை இழுப்பதும் போன்ற காரியங் களைச் செய்தல் வினோதமாகவே யிருக்கிறது. கடவுள் இங்ஙனம் செய்கையில், அவரைப் பணியும் முகம்மதியர்கள், வலியற்றவர்களை, துணையற்றவர்களை திக்கற்றவர்களை வருத்துதல் ஆச்சரியமாகாது. கலியாணங்களில் கடவுள் துணை நிற்கிறாரா? துணை நிற்கிறார் என்றால், கடவுள் கலியாணம் செய்து வைக்கும் ஆள் போன்றவராகிறார். இது முகம்மதியர்களின் காஜி என்பவர்களின் வேலையைப் போலிருக்கிறது.

140. காபிரிகளைக் கண்டால் அவர்கள் கழுத்தை வெட்டிவிடவும். அதிக மாக அவர்களைக் கொலை செய்தவுடன் மீதியுள்ளோரை விலக்கிடவும். (**47**. 4).

உன்னை நுழைத்துவித்த நகரங்களைக் காட்டிலும் எவ்வளவு பெரிய பெரிய நகரங்கள். அவைகளை அழித்தோம். அவைகளைக் காப்பாற்ற ஒருவருமில்லை. (**47**. 14).

அல்லாவிடம் பயமுள்ளோருக்குக் கிட்டும் சுவர்க்கம் எங்ஙனம் இருக்கு மென்றால் கெடாத தண்ணீர் உடைய நதிகள், எப்பொழுதும் கெடாமல் இருக்கும் பால் ஆறுகள், உருசியுள்ள சாராயம். (**47**. 16).

தெளிந்த தேன் நதிகள் அல்லாவினிடமிருந்து பலவகை பழவர்க்கங்கள் (**47**. 17).

இவைகளிலிருந்து குர்-ஆன் கடவுளும், முகம்மதியர்களும் அமைதி நிலையைக் குலைப்பவர்கள், துன்பம் இழைப்பவர்கள், சுயநலக்காரர்கள்; என்று விளங்கும். காபிரிகள் முகம்மதியர்களை வருத்தினுல், முகம்மதியர் எங்ஙனம் கருதுவர். அதைப்போலத்தானே பிறரும் கஷ்டமுறுவார்கள். நபியை விரட்டிய நாடுகளைக் கடவுள் அழித்தது அனியாயமே யாகும். நல்ல ஜலத்தை யும், பாலையும், தேன் ஆறுகளையும் கொண்ட முகம்மதியர்கள் சுவர்க்கம் இவ் வுலகத்தைவிட உயர்ந்ததாகக் காணப்படவில்லை. ருசி மாறுத பால் நதியிருக்க முடியாது. பழம் பால் புளிக்க வேண்டியதே. இத்தகைய வினோத போதனை களைக் கூறும் இதைப் புத்திசாலிகள், ஒருநாளும் ஏற்று நம்பமாட்டார்கள்.

141. பூமி அதிர்ச்சியால் அதிரும் மலைகள் பொடிப் பொடியாகிச் சுற்றியும் பரவும். (**56.** 4, 6).

வலது பக்கம் ஜனங்கள். வலது பக்கம் ஜனங்கள் யாராய் இருப்பார்கள். இடது பக்கம் ஜனங்கள் யாராய் இருப்பார்கள். (**56.** 8, 9).

இருபக்கமும் நட்சத்திரம் பதித்த அச்சயனம் தங்கத்தினல் செய்யப் பட்டதாய் இருக்கும். இளங்காளைகள் மதுபான கலசத்தை ஏந்திச் செல்வார்கள். அவர் புருவங்களுக்கு சிரமம் உண்டாகிறதில்லை. உணவும் குறைகிறதில்லை. நினைத்த பழங்கள் கிடைக்கும். இஷ்டமுள்ள பறவைகளின் மாம்சங்களும் சிப்பியில் மூடியுள்ள முத்துக்கள் போல் பெருங் கண்கள் உள்ள கன்னிகைகள். (**56,** 18-22).

உயர்ந்த சயனத்தில். அபூர்வமான கன்னிகைகளாகவே அவர்களை வைத்திருக்கிறோம். சமவயதுள்ள காதலர்களோடு அன்புடன் இருப்பார்கள். நன்றாய் வயிற்றை நிரப்புங்கள். விழும் நட்சத்திரத்தினல் ஆணை செய்கிறேன். (**56.** 54, 74).

குர்–ஆன் ஆசிரியரது லீலையைக் கவனியுங்கள். பூமி எப்பொழுதும் சுற்றிக்கோண்டே யிருக்கிறது. குர்-ஆன் ஆசிரியர் பூமி ஒரேவிடத்தில் சாச்வதமாய் இருப்பதாக எண்ணியுள்ளார். குர்-ஆன் கடவுள் மலைகளைப் பட்சிகள் போல் பறக்கச் செய்வாரா? துணடங்களாக மாற்றப்படுமேயானல் அவைகள் சிறு சரீரத்தைக் கொண்டேதானிருக்கும். இங்ஙனமிருக்க ஏன் அவைகளுடைய மறுபிறப்பை மறுக்கிறீர்கள். இஸ்லாம் கடவுள், ஜடமில்லாதவரானல் அவருக்கு முன்னும் பின்னும் எங்ஙனம் எவனுவது நிற்கமுடியும்? சுவர்க்கத்தில் தங்கத்தினலாக்கப்பட்டு நட்சத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆசனங்கள் இருக்குமேயானல் அங்கு தங்கவேலைக்காரரும் தட்டான்களும் இருக்கவேண்டும். படுக்கையில் தூங்குகிறவர்களை உபத்திரவம் செய்ய மூட்டைப் பூச்சியும் இருக்கவேண்டும். சுவர்க்கத்திலிருப்பவர்கள் ஒரு வேலையுமில்லாது தங்கள் தலையணிகளில் சாய்ந்துகொண்டு காலத்தைக் கழிக்கிறார்களா? அல்லது ஏதாவது செய்கிறார்களா? அவர்கள் வேலை யில்லாது இருப்பின் உண்ணும் உணவும் ஜீரணமாகாதே. எனவே உடனே நோய் வருமே. பிறகு இறக்கவேண்டியதே. ஏதாவது வேலை செய்யின் அவர்களுக்குக் கூலி கிடைக்கவேண்டும். இது இவ்வுலகைப் போலவே யிருக்கிறது. பின்னர் இங்கிருக்கும் மனிதர்களுக்கும் சுவர்க்கத்திலிருப்பவர்களுக்கும் வேற்றுமை யொன்றையுமே காணுமே. உண்மையில் பொய் சொல்வதைத் தொழிலாகக் கொண்டவர்கள்தான் சத்தியம் செய்பவர்கள். சத்தியவாதிகளுக்குச் சத்தியம் செய்யவேண்டிய தேவையில்லை. கடவுள் சத்தியம் செய்வதால் அவர் பொய் சொல்லும் சுபாவமுடையவராகவே யிருக்கவேண்டும்.

அந்தப் பையன்கள் எப்பொழுதும் சுவர்க்கத்திலிருந்தால் அவர்களுடைய பெற்றோர்கள் மாமியார்களும், மாமனர்களும் அங்கேதான் எக்காலமு மிருக்கவேண்டும். எனவே சுவர்க்கம் ஒரு குடியேற்ற நாடாகவேண்டும். அங்கு மலஜலாதி அழுக்குகளால் நோயும் பிணியும் குடிகொண்டிருக்க வேண்டும்.

அங்கிருப்பவர்கள் பழத்தைத் தின்று தண்ணீரையும் சாராயத்தை யும் குடித்து வந்தால் அவர்களுக்குத் தலைவலி முதலிய நோய்கள் ஏற்பட வேண்டுமே. நெறி மீறிய செயல்களையும் அவர்கள் நிகழ்த்தி வரவேண்டும். அவர்கள் மிதமிஞ்சி பழங்களையும் தின்று வந்தால் நோய் வயப்படவேண்டியவர்களே. மேலும் அங்கு கால் நடைகளை வதைக் கும் சாலைகளும் இருக்கவேண்டும். கசாப்பு கடைகளும் இருக்கவேண் டும். இத்தகையது முஸ்லீம் சுவர்க்கம். இதை எங்ஙனம் புகழ்ந்துரைப்போம் என்று தெரியவில்லை. அரபியாவைவிட மேலானதென்றே தோன்றுகிறது. மாமிசாகாரங்களையும் மதுபானங்களையும் செய்பவர்களைக்கொண்ட சுவர்க்கத் தில் அழகிய இளம் மாதர்களும் காளையர்களும் இருக்கவேண்டுவது அவசி யமேயாகும். இல்லையேல் மூளையில் மயக்கமும் புத்தியில் தடுமாற்றமும் எற் படும். அங்கு வசிப்பவர்களின் சுகத்திற்குப் படுக்கைகளும் இருக்கவேண்டிய தவசியமே.

சுவர்க்கத்தில் இள மாதர்களைக் கடவுள் படைத்திருக்கையில் இளங்காளை யர்கள் இருக்கவேண்டியது நியாயத்திற்கடங்கிய விஷயமே. ஆனல் இம்மாதர் கள் பூலோகத்திலிருந்து சுவர்க்கத்திற்கு வரும் மனிதர்களுக்கென்று சொல்லப் படுகிறது. அங்கு சாச்வதமாய் வசிக்கும் ஆடவர்களின் கதி என்ன ? இவ்வாட வர்களுக்குக் கலியாணம் கிடையாதா ? இது விஷயத்தில் கடவுள் மௌன மாய் இருக்கிறார். சுவர்க்கத்திற்கு வரும் மனிதர்களுக்கு அளிக்கும் பெண் களுடன் இந்த ஆடவர்களும் அளிக்கப்படுவார்களா ? இது விஷயமான விவரம் ஒன்றையும் கூறாது அவர் விட்டார். சரிவயதுள்ள ஆடவரும் பெண்டிரும் இணைக்கப்படுகிறார்கள் என்றால் பொறுத்தமாயிராது. ஆடவன் பெண் ணைக் காட்டிலும் மூப்படைந்தவனு யிருக்கவேண்டும். இனி இஸ்லாம் நரகத்தைப் பற்றி கவனிப்போம். அதற்குத் தோஹர் என்று பெயர். (இப்பதத்தின் பொருள் முற்களடைந்த புதர் என்பதேயாம்) இம்மரத்துப் பழத்தைத் தின்று வெந்நீரைக் குடிப்பார்கள். இவ்வித வேதனைக்குள்ளாக வேண்டும்.

> 142. கனத்த சுவற்றைப்போல் நின்று சண்டை செய்வோரிடம் அல்லா அன்பு பாராட்டுகிறார். நெருங்கி நின்று சண்டை செய்வோரையும் அப்படியே நேசிக்கிறார். (54. 4).

இத்தகைய போதனையினல்தான் அராபியர்கள் சண்டைக்குத் தூண்டப் பட்டார்கள். பிற நாட்டாரை எதிரியாகச் செய்து கொண்டார்கள். மதம் ஜனங்களைச் சண்டைக்குத் தூண்டும் கருவியாயிற்று. இதனல் ஜனங்களுக்குக் கஷ்டம். அறிவாளி இவ்வாறு போதனை செய்யும் ஜீவனைக் கடவுள் என்று ஒருநாளும் கொள்ளான். மனிதருக்குள் சச்சரவை தருபவன்தான் துக்கத் திற்கும், மனித ஜாதியின் கஷ்டத்திற்கும் காரணமாவான்.

> 143. ஓ ! நபியே உனக்கு சட்டமானதை ஏனையோருக்கு ஏன் மறுத் தாய் ? உன் மனைவிகளைத் திருப்தி செய்வதற்காகவோ ? அவர் தயாளுவும் கருணையுமுள்ளவர். அல்லாவே அவர் இரட்சகர். உங்கள் இருவர்களையும்

தள்ளிவிட்டார்களேயானல் அதற்குப் பதிலாகவே வேறு நல்ல மனைவிகளை அவர் அளிப்பர். முசல்மான்களே! நம்புபவர்களே! பக்தியுள்ளவர்களே, பச்சாதாபமுள்ளவர்களே, நோன்பு நூற்பவர்களே கன்னிகைகளையும் காளைகளையும் அறிந்தவர்களே! (66. 1-5).

கொஞ்சம் சிந்தனை செய்தால் வாக்கியங்களிலிருந்து கடவுள் முகம்மதுவின் வேலையாள் என்று புலனாகும். முதல் வாக்கியத்தை யொட்டி இரண்டு சிறு கதைகள் கூறப்படுகின்றன. முகம்மதுவிற்கு ஜலத்தின் பேரிலும் மதுவின்பேரிலும் அதிகப் பிரியம். முகம்மதுவிற்குப் பல மனைவிகள் உண்டு. ஒரு மனைவி வீட்டில் இருந்துவர இவருக்கு நாழிகை ஆனதனல் மற்ற மனைவிகளுக்குக் கோபம் உண்டாயிற்று. எனவே குடித்ததினல் அல்லவா, நாழிகை ஆயிற்று என்றுநினைத்து அவர் இனி மதுபானம் செய்வதில்லையென்று வாக்குதத்தம் செய்துகொண்டார். இது முதற்கதை. இரண்டாவது கதையாவது:—ஒரு நாள் முகம்மது ஒரு மனைவியின் வீட்டிற்குச் சென்ருர். அவள் அங்கு இல்லை. தனது தகப்பனது வீட்டிற்குச் சென்றிருந்தாள். அப்பொழுது ஒரு அடிமை வேலைக்காரியை உயர்வடையச் செய்துவிட்டார். மனைவி, செய்தியை யறியலானதும் கோபங் கொண்டாள். முகம்மதுவை இனி இத்தகைய காரியம் செய்வதில்லை யென்று வாக்குதத்தம் செய்து தரச்சொன்னள். இவ்விஷயத்தை வெளியிடாமலிருப்பதாகவும் அவள் ஒப்புக்கொண்டாள். பிறகு முகம்மது வேறு மனைவியின் வீட்டிற்குச் சென்றதும் இக்கதையைச் சொன்னர். அப்பொழுது கடவுள் முகம்மதுவின் பேரில் ஆவேசமாகப் பின்வருவது வெளிப்பட்டது:—கடவுள் சட்டத்திற்குள்ளடங்கியதாகச் செய்திருப்பதை நீ ஏன் மறுக்கப்பட்டதெனக் கொள்ளுகிருய்.........".

மனிதனது குடும்ப விஷயங்களில் கடவுள் வந்து தலையிடுவாரா வென்பதை அறிவாளிகள் சிந்திக்கவேண்டும். மேற்கூறிய கதைகளில் முகம்மது குணம் நன்கு புலனாகிவிட்டது. பலமாதர்களைப் பெண்டாளுபவன் எங்ஙனம் யோக்கியனாகவும் தெய்வ பக்தியுள்ளவனாகவும் நபியாகவும் இருக்க முடியும். இவர் மனைவிகளிடம் பட்சபாதமாய் நடக்கவில்லையா? பட்சபாதமாய் நடத்தல் பாபமில்லையா? ஒரு மனைவியிடம் அதிகம் அன்பு காட்டியும் ஒருவளைப் புறக்கணித்தும் நடப்பது பாபமில்லையா? தனக்கோ பல மனைவிகள். மனைவிகளும் போதாமல் அடிமைப் பெண்களுடனும் கூடும் மனிதன் பக்தனாய் எங்ஙனம் இருக்க முடியும்? "வியபசாரம் செய்பவன் வெட்கமடைகிறதில்லை" என ஒருவர் சொல்லியது பொருத்தமான வார்த்தையே.

மேலும் இஸ்லாம் கடவுள் முகம்மதுவிற்கும அவரது மனைவிகளுக்கும் ஏற்படும் சண்டைகளில் மத்தியஸ்தர் வேலையை ஏற்ருர். இதிலிருந்து குர்-ஆன் கடவுள் அருளிய நூலா, சுயநலப் பிரியமுள்ள ஒருவன் செய்த நூலா வென்பதை அறிவாளிகள் அறியலாம். இது நிற்க இரண்டாவது வாக்கியத்தைப் பற்றி ஆராய்வோம். முகம்மதுவின் மனைவிகள் முகம்மதுவினிடம் சண்டையிட்டதால் மனைவிமார்களைக் கடவுள் பயமுறுத்தி வந்தார். நீங்கள்

சண்டையிட்டுக் கொண்டு விலக்கப்பட்டால் நான் முகம்மதுவிற்குப் புருஷர்களுடன் கூடாத நல்ல பெண்களைத் தருவேன் என்றும் கூறிவந்தார். இங்ஙனம் கடவுள் கூறுவாரா? இது சுயநலப் பிரியர்களின் விஷமமல்லவா? மேற்கூறியவைகளில் ஒரு விஷயம் நன்கு புலனாகவில்லையா? கடவுள் அங்ஙனம் ஒன்றும் சொல்லவில்லை. முகம்மது வேண்டியவைகளை வகுத்து அது அருள் வாக்கென்று கூறியுள்ளார் என்று புலனாகவில்லையா? சிந்தனைசக்தியுள்ளவர்கள் முகம்மதியக் கடவுள் முகம்மதுவிற்கு மனைவி தேடிக் கொடுப்பவர் என்றே கூறுவார்கள்.

> 144. நபியே!! காபிரிகளின்மேலும் வஞ்சகர்களின்மீதும் சண்டை செய்யவும். கடுமையுடன் நடத்தவும். (**66**. 9.

முகம்மதியக் கடவுளால் செய்யப்பட்ட ஆச்சரியங்களை ஊன்றிக் கவனியுங்கள். முகம்மதுவையும், முகம்மதியர்களையும் பிறமதத்தினருடன் சண்டை செய்யும்படி கடவுள் தூண்டுகிறார், இக்காரணத்தால்தான் முகம்மதியர்கள் ஓயாது சண்டையிடுகின்றனர். முகம்மதியர்கள் சண்டையிடுதலை ஒழித்துப் பிறருடன் நட்புரிமை பூண்டு வாழக் கடவுள் அருள் புரியட்டும்

> 145. ஆகாயம் உடைந்துபோய்விடும். ஏனெனில் அந்நாளில் பலவீனமாயிருக்கும். தேவர்கள் பக்கத்திலிருப்பார்கள். உன் அல்லாவின் பீடத்தை எட்டு தேவர்கள் தாங்குவார்கள். வலது கையில் புஸ்தகத்தை அளிக்கப் பட்டவன் தன் நண்பர்களிடம் சொல்வான் "இதை எடுத்து எனக்காகப் படியும் என்பான்" இடது கையில் புத்தகம் அளிக்கப்பட்டவன் "இதை நான் அடையவேயில்லை" என்பான். (**69**. 16-19, 25).

என்ன தத்துவம்! என்ன நியாயத்தின் போக்கு. சுவர்க்கம் இரண்டாக வகுக்கவோ பிரிக்கவோ படுமா? சுவர்க்கம் இஷ்டப்படி கிழிக்கப்படும் துணியோ? நாம் அறியோம். ஆகாயத்தைச் சுவர்க்கம் என்று அழைத்தால் வான சாஸ்திரத்திற்கு விரோதமாகும். இதிலிருந்து குர்-ஆன் கடவுளுக்குத் தேகமுண்டு என்பது சித்தமாகிறது. தேகம் இல்லாதவன் சிங்காசனத்தில் வீற்றிருக்க முடியாது. எட்டு மனிதர்கள் தாங்கியிருக்கும் ஆசனத்தில் அமரும் கடவுளுக்கு மனிதனைப்போல் தேகமிருக்கவேண்டும். தேகந் தாங்கியவன் வரம்பிற்குள்ளாகவேண்டும். உடலைத் தாங்கியவர் சர்வ சக்தியையும் சர்வ வியாபகத் தன்மையும் கொண்டிருக்க முடியாது. ஜீவன்களின் செயல்களையும் அறிய முடியாது. நல்லவர்களின் வலது கையில் அவர்களது புண்ணிய கர்மங்களைக் கொண்ட புத்தகத்தை வைத்து சுவர்க்கத்திற்கு அனுப்புவதும் பாபிகளின் இடது கையில் அவர்களது துஷ்கிருத்தியங்களைக் கொண்ட புத்தகத்தை வைத்து நரகத்திற்கு அனுப்புவதும் சர்வ வல்லமையுள்ள கடவுளின் செயலாகுமா? எல்லாம் அறிந்த கடவுள் இங்ஙனம் காரியங்களை நிகழ்த்துவாரா? இது வேடிக்கையாகவே யிருக்கிறது. இது குழந்தைகள் கூறும் மழலைப்பேச்சல்லவா?

> 146. 50,000 வருடம் நீளமுள்ள ஒரு நாளில் அவனிடம் தேவர் முதலானவர்கள் எதனால் ஏறுவார்களோ, கொடிமரத்தினிடம் போய்ச் சேருகிற

வர்களைப்போல் எத்தினத்தில் கல்லறைகளிலிருந்து சேருவார்களோ. (70. 4-42)

50 ஆயிரம் வருஷம் ஒரு பகலானால், இரவும் அவ்வளவு பெரியதாகத் தான் இருக்க வேண்டும். இரவு அவ்வளவு பெரிதல்லவாயின் பகலும் அவ்வளவு பெரிதாயிருக்க முடியாது. கடவுளும் தேவதைகளும் கையில் விதிப் புத்தகத்தைத் தாங்கிய வண்ணம் 50 ஆயிரம் வருஷங்களைக் கொண்ட நாள் முழுதும், அலைந்து கொண்டிருக்க வேண்டும். இதுவாயின் எல்லோரும் நோய் கொண்டு இறக்க வேண்டியதுதான். செத்தவர்கள் உயிர்பெற்று தீர்ப்பு தினத் தன்று எழுந்திருப்பார்களா? கல்லறைகளுக்கும் எவ்வாறு சம்மன் அனுப்ப படுகிறது. செத்தவர்களில் நல்லவர்களும் இருக்கலாம். பாபிகளும் இருக்கலாம். ஏன் இந்த நல்ல ஆத்மாக்களும் இவ்வளவு வருஷம் காத்திருக்கவேண்டும்? மற்ற நாட்களில் கடவுளின் நியாயஸ்தலம் முடப்பட்டிருக்கிறதா? நியாயஸ்தலம் மூடியிருக்கும் காலங்களில் கடவுளும் மற்ற தெய்வலோக வாசிகளும் குடிப்பதும், நடப்பதும், உறங்குவதும், நடன லீலைகளைக் கண்டு களிப்பதுமாகிய வாழ்க்கை நடத்தியே வரவேண்டும். மனிதனுடைய வாசஸ்தலத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகள் ஒன்றுமிராது. இத்தகைய வார்த்தைகளை காட்டு மிருண்டிகளைத் தவிர மற்ற யார் நம்புவர்.

147. ஒன்றன்பின் ஒன்றாய் உன்னை உருவாக்கியது அவர்தான். ஏழு சுவர்க்கத்தையும் ஒன்றன்மேல் ஒன்றாய் எங்ஙனம் செய்தார் என்பதை நீ காணவில்லையா? சந்திரனைத் தீபம்போலவும் சூரியனைத் தீவத்திபோலவும் நிறுத்தியிருக்கிறார். (71. 14-16).

கடவுள் ஆத்மாவைச் செய்திருப்பின் அது அழியாத் தன்மையைக் கொண்டதாயிருக்க முடியாது. சிருஷ்டிக்கப்பட்டது இறக்க வேண்டியதே. சுவர்க்கத்திற்கு மேல் சுவர்க்கத்தைக் கடவுள் எங்ஙனம் செய்ய முடியும்? ஆகாசந்தான் சுவர்க்கம். அதைத் தவிர வேறு எதற்கும் அப்பெயர் பொருந்தாது. சுவர்க்கம் என்பது உருவற்றது. சுவர்க்கத்திற்குமேல் சுவர்க்கமாகக் கடவுள் கட்டியிருப்பின் சூரியனும் சந்திரனும் எங்ஙனம் இரண்டிற்கும் இடையில் வைக்கப்பட முடியும்? இடையில் இருப்பின் எப்படி இரண்டு சுவர்க்கத்திற்கும் வெளிச்சம் ஏற்படும்? இவையெல்லாம் கட்டுக்கதை.

148. அல்லாவிற்காகவே கோவில் ஏற்பட்டது. வேறு எதையும் அல்லாவுடன் அங்கு அழைக்காதே. (72. 18).

இது உண்மையாயின் ஏன் முகம்மதியர்கள் முகம்மது நபியின் பெயரைச் சேர்க்கிறார்கள். எனவே "அல்லாவும் அவரது நபியுமான முகம்மதையுந் தவிர வேறு ஆண்டவன் கிடையா" தென்பது குர்-ஆனுக்கு விரோதமானதே. இவ்வாக்கியம் உண்மையாயின் குர்-ஆன் மேற்கோள் பொய்யானதே. மசூதிகள் கடவுள் இருப்பிடமாயின் முகம்மதியர்கள் பெரும் விக்கிரக ஆராதனைக்காரர்களே. ஏனெனில் விக்கிரகங்களைக் கடவுள்வாழும் இடம் என்று அழைக்கும் புராணிகர்களும் சமணர்களும் விக்கிரகஆராதனைக்காரர்

ளாயின், மசூதியைக் கடவுள் வசிக்கும் இடம் என்று கூறும்முகம்மதியர்களும் உருவ ஆராதனைக் காரர்களல்லவா ?

149. சந்திரனும் சூரியனும் சேர்ந்திருக்கும். (75. 8).

சூரியனும் சந்திரனும் எப்பொழுதாவது ஒன்று சேரமுடியுமா? இது என்ன விந்தை ! சூரியனையும் சந்திரனையும் சேர்ப்பதினால் என்ன பயன் விளையும் ? ஏன் சகல உலகத்தையும் ஒன்றாய்ச் சேர்த்தல் கூடாது ? இத்தகைய செய்ய முடியாத காரியங்களைக் கடவுள் கூறல் ஆகுமா ? இவைகள் அறிவிலியின் மனோநிகழ்ச்சிகளே.

150. உன்னைச் சுற்றியுள்ள இளங்காளைகளைப் பார்த்தால் வாரி இறைத்த முத்துக்களென வெண்ணுவாய். வெள்ளி நகைகளால் அலங்கரிக்கப்பட்டு பரிசுத்த பானகம் அல்லாவால் பருக அளிக்கப்படும். (76. 19-21).

முத்தையொத்த முகத்தினையுடைய காளையர்கள் ஏன் சுவர்க்கத்திலிருக்கும்படி கடவுள் செய்யவேண்டும். சுவர்க்கத்திற்கு வருபவர்களுக்கு வயது சென்றவர்களும் மாதர்களும் பணி செய்து திருப்தி செய்தல போதாதா ? சில கெட்ட மனிதர்கள் இயற்கைக்கு விரோதமான செயல்களைச் சிறு பையன்களுடன் செய்யும் பழக்கம் இதிலிருந்துதான் உண்டாச்சுதோ என்னவோ அறியோம். சிலருக்கு மாத்திரம் வேலையாளர் கொடுக்கும் பாரபட்சம் சுவர்க்கத்திலு மிருப்பானேன் ? சுவர்க்க வாசிகளுககுக் கடவுள் சாராயத்தைத் தன் கையில் அளிக்கிறார் என்றால் கடவுளும் ஒரு வேலைக்காரனே. இது கடவுளின் பெருமைக்குப் பங்கம் விளைக்கவில்லையா ? சுவர்க்கத்திலிருக்கும் மாதர்கள் புணர்ச்சியினால் கருத்தரிக்கிறார்களா ? குழந்தைகள் பிறக்கின்றனவா ? இல்லையேல் தேக சம்பந்தம் பிரயோசனமற்றதே. பொருளற்றதே. (பூலோகத்தில்) கடவுளை வழிபடாது ஏன் சுவர்க்கத்தில் பூஜிக்கப் படுகிறார்கள். சிலர் மத நம்பிக்கையுடன் பூலோகத்தில் வாழவும் சுவர்க்கம் பெறவும், வேறு சிலர் மத நம்பிக்கை யில்லாது பூலோகத்தில் வாழாது சுவர்க்கத்திலே எப்பொழுதும் இருக்கவும் செய்வது நியாயமாகுமா ?

151. தக்க பயன் அளிக்கப்படுவார்கள். திண்ணங்கள் நிறைந்திருக்கும். தேவர்களும் ஒரே வரிசையிலிருப்பார்கள். (78. 26, 32, 36).

பாப புண்ணியங்களுக்கேற்றவாறு இறந்தவர்கள் சுவர்க்கத்தையும் நரகத்தையும் அடைகிறார்கள் என்றால் ஹௌரிகளும் தேவதைகளும் முத்தின் முக முறுவலைக்கொண்ட காளையர்களும் எந்நாளும் சுவர்க்கத்திலிருக்கும் பாக்கியத்தை எங்ஙனம் பெற்றார்கள். எப்பொழுதும் குடித்துக் கொண்டிருந்தால் சுவர்க்கவாசிகள் குடிவெறி கொள்ளமாட்டார்களா ? அதனால் சண்டையிட்டுக் கொள்ளமாட்டார்களா ? எல்லாத் தேவதைகளைக் காட்டிலும் அதிக பலமுடைய தேவதையின் பெயர் ரூஹ். ரூஹையும் ஏனைய தேவதைகளைக் கொண்டு கடவுள் படையைத் தயார் செய்வாரா ? தவறு செய்யும் ஆத்மாக்களைத் தண்டிக்கும் அதிகாரத்தை அதற்களிப்பாரா ? உட்கார்ந்து கொண்டிருப்பாரா ? தீர்ப்பு தினத்தன்று கடவுள் இப்படைகளைக் கூட்டிச் சயித்தானைப் பிடித்துவிட்டால் அவரது ஆட்சி சாசுவதமாய விடும். நல்ல கடவுள் !

152. சூரியன் மடிக்கப்படும், நட்சத்திரம் விழும், மலைகள் அசையும், சுவர்க்கம் கீழே இறக்கப்படும். (**18.** 1,3, 11).

சூரியன் பாய்போல் மடிக்கப்படும் என்று சொல்லுவது முட்டாள் சொல்லும் வார்த்தையைப்போல் தொனிக்கவில்லையா? எப்படி நட்சத்திரம் விழும்? உயிரற்ற மலைகள் எப்படி நகரச் செய்யப்படும்? ஆகாயம் என்பது ஒரு மிருகமா? அதையெப்படி அடிக்க முடியும்? காட்டு மிருண்டி நம்பிக்கையே யாகும் இது.

153. சுவர்க்கம் பிரியும்; நட்சத்திரம் கலையும்; சமுத்திரங்கள் கலக்கும்; கல்லறைகள் திருப்பப்பட்டு மேலே எழும். (**80.** 1, 4).

குர்-ஆனின் வேதாந்த ஆசிரியரே! எப்படி சுவர்க்கத்தைக் கிழித்து நட்சத்திரங்களை யகற்றுவீர்? ஆறுகள் மரக்கட்டைகளா? நீர் துண்டுகளாக அறுப்பதற்கு. உயிர்பெற்று எழுந்திருக்கச் சவக்குழிகள் சவங்களா? குழந்தை பேச்சைவிட இவைகள் சிறந்ததல்ல.

154. கோபுரம் நட்சத்திரங்களினால் நிறைந்துள்ள ஆகாயம், நித்தியக் கற்களில் செதுக்கப்பட்ட குர்-ஆன் ஷரீபு. (**85.** 1, 21).

குர்-ஆன் ஆசிரியருக்கும் கோளமும் வான சாஸ்திரமும் தெரியாது. யாராவது ஆகாயத்தைக் கோபுரங்களையுடைய கட்டடங்களுக்கு ஒப்பிடுவார்களா? மேஷம் முதலான இராசிகளைக் கோபுரங்களென்று அழைத்தால் ஏனைய நட்சத்திரங்களை ஏன் அங்ஙனமே அழைக்கக் கூடாது. இவைகள் கோபுரங்களல்ல. பல கிரகங்களே. குர்-ஆன் ஆசிரியர் கடவுளானால், அறியாமையில் முழுகியவரா யிருக்கவேண்டும்.

155. எனக்கு வஞ்சகஞ் செய்கிறார்கள். அவர்களுக்கு வஞ்சகம் நான் செய்வேன். (**86.** 46).

ஏமாற்றலும் மோசஞ் செய்தலும் ஒன்றே. ஒருவன் திருடினால் நாமும் பதிலுக்குத் திருடவேண்டியதுதானே? பொய்க்குப் பதில் பொய்தானா? நல்ல உபதேசம். குர்-ஆன் ஆசிரியரே.

156. அல்லாவும் வருவார். தேவர்களும் படிப்படியாக வருவார்கள். நரகமும் அங்கு கொண்டுவரப்படும். (**89.** 23, 24).

கடவுள் போலீஸ் இன்ஸ்பெக்டர் அல்லது தளகர்த்தனைப்போல் படையைப் பரீட்சிக்கிறாரா? நரகம் பானையைப் போன்றதா? நினைத்த விடத்திற்குத் தூக்கிச் செல்ல. இவ்வளவு சிறியதாயின் கணக்கற்ற கைதிகளை எங்ஙனம் அடக்கிக கொள்ளும்?

157. அவர்களுக்குத் திரு நபி சொன்னதாவது :—" அல்லாவின் ஒட்டகத்தைக் கவனி, அது ஜலமருந்தட்டும்." பொய் வஞ்சகனைப்போல் அவனைக் கருதி அவன் காலைத் துண்டித்தான். அக்குற்றத்திற்கு அவனை அழித்தார். எல்லாரையும் அப்படிச் செய்தார். (**91.** 15, 18).

கடவுள் ஒட்டகம் மீதேறி சவாரி செய்கிறாரா? இல்லையேல் அம்மிருகம் அவருக்கு எதற்கு? தீர்ப்பு தினத்திற்கு முன் தமது சட்டத்திற்கு விரோத

மாய்ப் பிணிகளைப் பரவச் செய்து ஜனங்களைத் துன்புறுத்துவானேன்? தண்டனையாக இவைகளைச் செய்தால் தீர்ப்பு தினமும் அத்தினத்தில் ஜனங்களை விசாரிப்பதும் பொய்யே. ஒட்டகக் கதையிலிருந்து அரேபியாவில் அதைத் தவிர வேறு மிருகங்களில்லை யென்பதும் அரேபியா வாசி யொருவன் இதை எழுதினன் என்பதும் விளங்கும்.

158. அவன் நிற்கவில்லையானல் பாபஞ் செய்யும் வஞ்சகமான நெற்றி மயிரைப் பிடிப்போம். நரகத்தின் காவலாளர்களையும் அழைப்போம். (**76**. 15, 16, 18).

ஒருவனைக் கட்டி யிழுப்பது—கடவுள் சாதாரண வேலைக்காரன் வேலையையும் செய்தவராகிறர். தலைமயிர் குற்றவாளியும் பொய்யனுமாகுமா? ஆத்மா தான் ஆகும். ஜயில் அதிகாரி வார்டர்களை யழைப்பதுபோல நரகக் காவல்காரர்களை அழைக்கிறவர் கடவுளாமோ?

159. அல் கதர் இரவில் இறக்கக் காரணமா யிருந்தோம். அல் கதர் இரவு என்ன என்பதை யார் கற்பிப்பார்? ஒவ்வொரு விஷயத்திற்கும் தேவரோ, குருக்களோ அல்லாவின் ஆக்ஞையால் அங்கிருந்து கிளம்பும். (**77**. 1, 2, 4).

குர்-ஆன் முழுதும் ஒரே இரவில் செய்யப்பட்டதாயின் சிற்சில சமயங்களில் சிற்சில பாகங்கள் கடவுளா லருளப்பட்டதென்பது எங்ஙனம் உண்மையாகும்? இரவு இருளாய்த்தானிருக்க முடியும். இதற்கு உபதேசம் தேவையில்லை. ஆகாயத்தில் மேலுங்கீழுமிருக்க முடியாதென்று கூறியுள்ளோம். ஆனல் ஆண்டவன் ஆணைப்படி தேவதைகளும் பரிசுத்த ஆவியும் பூலோகத்துக் காரியங்களை நிர்வகிக்க வந்தார்களெனக் கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து மனிதனைப்போல் கடவுளும் ஒரே விடத்தில் இருக்கிருரென்பது சித்தமாகிறது. இதுவரையில் குர்-ஆன், கடவுள், தேவதை, நபி, இவர்களைப்பற்றியே பேசிற்று. இப்பொழுது பரிசுத்த ஆவியெனப் புதிதொன்று வந்திருக்கிறது. இது யார் யென்று தெரியவில்லை. கடவுள், மகன், பரிசுத்த ஆவி என்று கிறிஸ்துவர்கள் கூறுவதற்கு மேல் இதொன்று அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. முன் கூறிய மூன்றையும் கடவுள் என்று முகம்மதியர்கள் நம்பவில்லையாயின் அப்படியே இருக்கட்டும். பரிசுத்த ஆவி வேருனதாயின் மற்றவைகளை என்னவென்றழைப்பது? மற்ற மூன்றும் தெய்வ தத்துவமுடையதெனின் ஏன் ஒன்றைமாத்திரம் பரிசுத்த ஆவியென்றழைக்க வேண்டும்? நிற்கக் கடவுள் இரவு, பகல், குதிரை, பிற மிருகங்கள் குர்-ஆன் இவைகளின் மேல் ஆணையிடுகிறர். நல்லவர்கள் ஆணையிடுவார்களா?

எமது குர்-ஆன் ஆராய்ச்சியைக் கற்றறிந்து சிந்தனசக்தி யடைந்தவர்களின் யோசனைக்கு அளிக்கிறேம். அவர்களே இந்நூலின் பெருமை சிறுமை இவைகளை யறிந்து கொள்ளட்டும். இக்குர்-ஆன் கடவுளால் செய்யப்பட்டதுமல்ல. கல்வி அறிவு பெற்றவன் ஆக்கியதுமாகாது என்பது வெளிப்படை. இதில் மலிந்துகிடக்கும் குறைகளையும் தவறுகளையும் எடுத்து விளக்கியுள்ளோம். வேதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் மாறுபடாத இதிலிருக்கும் ஒருசில உண்மைகள் ஏற்கக் கூடியதே. பெரும்பாகம் பொய்களையும் பிழைகளையும் கொண்டுள்ளது இந்நூல். மனித ஜாதியின் துன்பங்களை யதிகரிக்கச்

செய்ய வல்லது. மனிதனை மிருகமாக்குகிறது. அமைதியைக் குறைக்கும் தன்மையது. கூறியது கூறல் என்னும் குற்றத்திற்குக் குர்-ஆன் இருப்பிடமாயிருக்கிறது. மனிதவர்க்கம் அன்பில் வாழவும் பரஸ்பர பிரேமையுடன் நேசிக்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக. பாரபட்சமன்னியில் பிறருடைய குற்றங் குறைகளையும் என்னுடையதையும் எடுத்துக் காட்டியிருக்கிறேன். அறிஞர்களெல்லோரும் இவ்வழியே நடந்தால், ஜனங்கள் பரஸ்பர பகையைவிட்டு உண்மையை யடைய பாடுபடும் ஒரே சமயத்தின சமாதானத்தையும் சாந்தியையும் அநுபவித்து வாழ பெரும் பிரயாசை யாகுமோ? குர்-ஆனைக் குறித்துச் சுருங்கச் சொன்னோம். அறிஞர்களும் தர்மாத்மாக்களும் நல்லெண்ணத்துடன் உட்கருத்தையறிந்து பயனடைவார்களாக. பிழையிருப்பின் சரிவர அறிய அதைத் தயவுடன் திருத்தவேண்டும்.

நாம் இதை முடிப்பதற்குமுன் ஒரு விஷயத்தை மாத்திரம் கூற விரும்புகிறோம். சாதாரணமாக முகம்மதியர்கள் அவர்களுடைய மதம் எழுத்து மூலமாகமோ பேச்சு மூலமாகவோ அதர்வ வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறுகின்றனர். இதைப்பற்றி அவ்வேதத்தில் ஒரு வார்த்தை கூட கிடையாதென்பதே இதற்குப் பதில்.

வின:—அதர்வ வேதம் முழுவதையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா பார்த்திருந்தால் அல்லோப நிடதத்தைக் கவனியுங்கள். இதில் இப்பதம் கூறப்படவில்லையா? இவ்விதமிருக்க நீங்கள் ஏன் ஒரு வார்த்தை கூட இல்லையென்று கூறிவிடுகிறீர்கள்.

अस्माल्लां इल्ले मित्रावरुणा दिव्यानि धत्ते। इल्लल्ले वरुणो राजा पुनर्ददुः। हया मित्रो इल्लां इल्लल्ले इल्लां वरुणो मित्रस्तेजस्काम् ॥ १ ॥ होतारनिन्द्रो होतारमिन्द्र महासुरिन्द्राः। अल्लो ज्येष्ठं श्रेष्ठं परमं पूर्णं ब्रह्माणं अल्लाम् ॥ २ ॥ अल्लोरसूल महामदरकबरस्य अल्लो अल्लाम ॥ ३ ॥ आदल्लाबूमकमेककम्। अल्लाबूक निखातकम् ॥ ४ ॥ अल्लो यज्ञेन हुतहुत्वा। अल्लासूर्य चन्द्र सर्व नक्षत्राः ॥ ५ ॥ अल्ला ऋषीणां सर्व दिव्यां इन्द्राय पूर्वं माया परममन्तारक्षा ॥ ६ ॥ अल्लः पृथिव्या अन्तरिक्ष विश्वरूपम् ॥ ७ ॥ इल्ले कबर इल्ले कबर इल्लां इल्लल्ले ति इल्लल्लाः ॥ ८ ॥ ओम् अल्ला इल्लल्ला अनादिस्वरूपाय अथर्वणाश्यमा हुँ ह्रीं जनानपशुनसिद्धान् जलचरान् अदृष्टं कुरुकुरु फट ॥९॥ असुरसंहारिणी हुं ह्रीं अल्लोरसूल महमदरकबरस्य अल्लो अल्लाम इल्लल्लेति इल्लल्लाः ॥ १० ॥ அல்லோபநிடதம் முகம்மது ரஸூல் அல்லாஹ் என்னும் வார்த்தைக் கண்காணத் தெரிகிறதே. கடவுளின் நபியாச்சுதே முகம்மது. எனவே முகம்மதியர்களின் மதம் வேதாதரவைப் பெற்றதென்று வெளியாகவில்லையா?

விடை:—ஐயா! நீர் அதர்வ வேதத்தைப் படித்திராவிடில் எங்களிடம் வாரும், படியும். அல்லது அதை யறிந்த யாரிடமாவது செல்லும்! 20 அத்தியாயங்களையும் ஆரம்பமுதல் கடைசிவரையில் கேட்டறியும். அப்பொழுது உங்களுடைய நபியின் பெயர் அதிலில்லாததை அறிவீர்கள். அல்லோபநிஷத்தென்பது வேதத்திலும் கிடையாது கோபத பிராம்மணத்திலும் கிடையாது. உரைகளிலும் கிடையாது. அக்பர் காலத்தில் யாரோ எழுதியிருப்பதாகப் புலப்படுகிறது. அவருக்குக் கொஞ்சம் வடமொழியும் அரபியும் தெரியுமென்று நூலிலிருக்கும் அரபு சமஸ்கிருத பதங்களிலிருந்து புலனாகிறது. உதாரணமாக அஸ்மல்லாம், இல்லே என்னும் சொற்களுக்குச் சரியான சம்ஸ்கிருத மொழிகளாவன:—மித்ரா வருணா திவ்யானி தத்தே. மொத்தமாகப்பார்த்தால அரபு சமஸ்கிருதம் இரண்டையும் அறிந்தவனாலேயே செய்யப்பட்டிருக்கிறதென்பது வெளியாகும். பொருளைக் கவனித்தாலும், வேதம், வியாகாரணம் இவைகளுக்கு விரோதமாயும் பிரயாசையுடனும் சம்பந்தமில்லாமலும் செய்யப்பட்டதாகத் தெரியும். இதைப்போல் மதப் பிரிவினைக்காரர்கள் பலர், ஸ்வரோபநிடதம், நிருஸிம்ஹதாபனி, ராமதாபனி, கோபாலதாபனி என்னும் முதலியவைகளைச் செய்திருக்கிறார்கள்.

வினா:—இதுவரை உங்களைப்போல் எவரும் கூறியதில்லை. எனவே நீங்கள் கூறுவதை எங்ஙனம் நம்புவது?

விடை:—நீர் நம்பினும் நம்பாவிடினும், நாம் சொல்வது தவறாயிருக்க முடியாது. நான் ருசுபிப்பதுபோல் நீர் உபநிஷத்தை அதர்வேதம், கோபதம் அல்லது அதனுடைய கிளைகள் அல்லது பழைய சுவடிகள் அல்லது தர்க்க நியாயம் முதலானவைகளைக் கொண்டு ருசுபிக்கவேண்டும்.

வினா:—எங்களுடையது எவ்வளவு உயர்ந்த மதம்? இன்ப சுகங்களும் இருக்கின்றன. முடிவில் முக்தியும் கிடைக்கும்.

விடை:—பிற மதக்காரர்களெல்லோரும் எங்களதுதான் உயர்ந்ததென்றும் எங்களது கொள்கையை ஏற்காத எவனும் முக்திபெற முடியாதென்றும் மாறானவைகளெல்லாம் கெட்டதென்றும் கூறுகிறார்கள். எதை சரியென்று ஏற்பது? உண்மை உரைத்தல், பச்சாதாபம், ஒழுங்கு, அஹிம்சை, முதலான சுபகுணங்கள் எல்லா மதத்திற்கும் சமானமானதென்றே நாம் நம்புகிறோம். பிடிவாதம், பகை, துவேஷம், பொய்பேசுதல், இவைகள் எம்மதத்திலிருந்த பொழுதிலும் கெடுதலானதே. சத்திய சமயத்தைப் பெற விரும்பினால், வைதிகத்தை அங்கீகரியுங்கள்.

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

எனது கொள்கை.

——:o:——

எல்லோராலும், எக்காலமும், எவ்வுலகிலும் எத்தருமம் மதிக்கப்பட்டும் மதிக்கப்படுகிறதும் மதிக்கப்படுவதுமாயிருக்கிறதோ அதுவே ஸநாதன தர்மம். எனவே அது மானிட வகுப்பு வேற்றுமைகளை மீறினது. அறியாமையிலகப்பட்டுக் கொண்டவர்களாலும், கட்சிபேதங்களைக் கொண்டவர்களாலும் நம்பப்பட்டவைகள் அறிஞர்களால் போற்றத் தகுந்தவைகளல்ல. மனோவாக்குக் காயம் முதலானவைகளினால் சத்தியமாயிருப்பவர்கள், பாரபட்சமற்றவர்கள்; அறிஞர்கள்; முதலானவர்களான ஆப்தர்களெனப்படுவோர்களால் நம்பப்படுபவைகளே சத்தியமானது. அவர்களால் ஒதுக்கப்பட்டவைகளெல்லாம் நம்பத்தகாதவைகளென்றும் பொய்யானவைகளென்றும் கொள்ளவேண்டும். வேதாதிசத்திய சாஸ்திரங்களின் ஆதரவைப் பெற்றதும் பிரம்மா முதல் ஜெய்முனிவரை ஏற்கப்பட்டதுமான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதே, இறைவன் விஷயம், உலகாயுத நோக்கம் முதலியவைகளைப் பற்றி நான் கொண்டுள்ள கொள்கை. நல்லோர் அங்கீகாரத்திற்காக நான் அவைகளை வெளியிடுகிறேன். எக்காலமும் எல்லோராலும் நம்பத் தகுதியுள்ளதையே ஏற்றதெனக் கொள்ளுகிறேன். புதியதொரு சமயத்தையோ வகுப்பையோ சமைக்கவேண்டுமென்ற எண்ணத்தைக் கொஞ்சமேனும் நான் கொண்டவனல்ல. சத்தியத்தை நம்பிப் பிறரையும் நம்பச் செய்வது; சத்தியமற்றதைத் தள்ளி பிறரையும் தள்ளச்செய்வது; இது என்னுடைய முக்கிய நோக்கம். நான் ஒருதலை வாதியாயிருந்திருப்பேனேயானால் ஆரிய வர்த்தத்தில் இப்பொழுது இருந்துவரும் பற்பல சமயங்களில் ஏதேனும் ஒன்றைப் போற்றியிருப்பேன். ஆனால் நான் அவ்விதம் செய்யவில்லை. இந்நாட்டிலாயினும் சரி பிறநாட்டிலாயினும் சரி எங்கிருந்த பொழுதிலும் அதர்மத்தை நான் அங்கீகரிக்கவில்லை; தர்மத்தை வெளிதேசத்திலிருந்தாலும் ஏற்றுக்கொள்ள நான் மறுத்ததில்லை. ஏனெனில் அங்ஙனம் செய்யாவிடில் மனிதத் தன்மைக்கே விரோதமாகும். தன்னைப்போலவே பிறருடைய சுகதுக்கம், லாபநஷ்டம் முதலானவைகளைக் கருதியும், எத்துணை செல்வாக்குடனும் பலத்துடனும் கூடியிருந்த பொழுதிலும் அநியாயத்திற்குப் பயப்படாமல், பலக் குறைவானதாயிருந்தபொழுதிலும் நியாயத்திற்குப் பயப்படுகிறவனே மனிதன் என்னும் பெயருக்கு ஏற்றவன். வறுமை, பலயீனம், பதவி முதலானவைகளிருந்த பொழுதிலும் தர்மாத்மாக்களைச் காப்பாற்றி அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு அவர்களுடைய நன்மையைத் தேடுவதிலேயே காலத்தைக் கழிக்கவேண்டும். சீரு, செல்வாக்கு, பலமு, இவைகளுடன் கூடினதா

யிருந்த பொழுதிலும் அநியாயம் இவ்வுலகில் எங்கு காணப்பட்டாலும் அதை அவமானப்படுத்தி அழிப்பதற்குப் பாடுபடவேண்டும். அதாவது அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநிறுத்தத் தன்னால் கூடிய வரையில் மனிதன் பாடுபட வேண்டும். பெருந் துன்பங்களும் கஷ்டங்களும் விளையும். கடமையைச் செய்து முடிப்பதில் பிராணனையே கொடுக்க நேரிடும். ஆனால் மனித தர்மத்தைச் செய்வதிலிருந்து பின்வாங்கக் கூடாது.

பர்த்திருஹரி சொல்லுவதுபோல்

निन्दन्तु नितिनिपुणा यदि वास्तुवन्तु
लक्ष्मीः समाविशतु गच्छतु वा यथेष्टम् ।
अद्यैव वा मरणमस्तु युगान्तरे वा
न्याय्यापथः प्रविचलन्ति पदं न धीराः ॥

நிபுணர்களென்போர்கள் தூற்றுவார்கள், அல்லது போற்றுவார்கள், வறுமைத் துன்புறுத்தும் அல்லது செல்வம் சிரிக்கும், உடனே மரணம் வரும் அல்லது வெகு காலம்வரை உயிர் இருக்கும், எங்ஙன மிருந்தாலும் அறிஞர்கள் அறமார்க்கத்திலிருந்து பிறழமாட்டார்கள்.

न जातु कामान्न भयान्न लोभाद् ।
धर्मं त्यजेज्जीवितस्यापि हेतोः ।
धर्मो नित्यः सुखदुःखे त्वनित्ये ।
जीवो नित्यो हेतुरस्य त्वनित्यः ॥ மகாபாரதம்.

வெறி, ஆசை, பயம், மோகம், உயிர், எக்காரணத்தைக் கொண்டாயினும் தர்மத்தை மனிதன் நழுவவிட வேண்டாம். ஏனெனில் தர்மம் அழியாதது, இன்ப துன்பங்கள் அழிந்துபோவது; ஜீவன் நித்தியமானது, சரீரம் அநித்தியமானது.

एक एव सुहृद्धर्मो निधनेप्यनुयातियः ।
शरीरेण समं नाशं सर्वमन्यद्धि गच्छति ।। மநு.

இறந்த பின்வரும் இருப்பது தர்மம் ஒன்றே. வேறு யாவும் சரீரத்துடன் நாசமடையும்.

१. सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततोदेवयानः ।
येनाक्रमन्त्यृषयो ह्याप्तकामा यत्र तत्सत्यस्य परमं निधानम् ॥ ॥ ४ ॥
२. नहि सत्यात्परो धर्मो नानृतात्पातकं परम् ।
नहि सत्यात्परं ज्ञानं तस्मात्सत्यं समाचरेत् ॥ உபநிடதம்.

1. சத்தியம் ஒன்றே ஜயிக்கும், பொய் ஜெயிக்காது. உண்மை வழியையே அறிவாளிகளும் பக்திமான்களும் ஒழுகியிருக்கிறார்கள். இவ்வழி சென்றதினாலேயே ஆசையை யடக்கின ஆதிரிஷிகள் சுவர்க்கத்தைச் சேர்ந்தார்கள்.

2. சத்தியத்தைக் காட்டிலும் சிறந்ததொரு தர்மங் கிடையாது சத்தியமற்றதைவிட இழிவானதொன்றும் கிடையாது. உண்மையைவிட உயர்ந்ததொரு அறிவுங் கிடையாது. எனவே எல்லோரும் கைப்பற்றவேண்டியது சத்தியமே யாகும். உண்மையாயும் உயர்ந்ததாயும் பாரபட்சமன்னியிலு மிருக்கும் மேற்சொன்ன இருஷிகளின் அறவழியை யாவரும் போற்றி நடக்கட்டும்.

எனது கொள்கைகளைக் கூறுவேன். விவரங்களை இந்நூலில் வேண்டிய விடங்களில் கூறியுள்ளேன்.

1. எவன் பிரஹ்ம்மமோ; பரமாத்மாவோ; எங்கும் பரவியுள்ளவனோ; சச்சிதாநந்த ஸ்வரூபனோ; பரிசுத்த குணகர்ம ஸ்வபாவத்தையுடையவனோ, சர்வஞ்ஞனோ; நிராகாரனோ; பரிபூரணமான சகல சக்தியையுங் கொண்டவனோ; கருணாநிதியோ; நீதிபதியோ; சர்வசிருஷ்டிக்கும் காரணமோ; அவைகளைப் பரிபாலித்து அழிக்கிறவனோ; சகல ஜீவன்களுடைய கர்மங்களுக்கேற்ற வண்ணம் முறையே பலாபலன்களை யளிக்கிறவனோ; அத்தகையோனையே பரமேச்சுரன் எனவறிந்து நம்புகிறேன்.

2. அறிவுக் களஞ்சியமாயும், தர்மஸ்தானமாயும் விளங்கும் நான்கு வேதங்களையும் தேவ வாக்கெனக் கொள்ளுகிறேன். இவைகள் சம்ஹிதையும் மந்திர பாகமுமேயாகும். பிழையன்னியில் அவைகள் தனக்குத்தானே பிரமாணமாய் இருக்கின்றன. எனவே அவைகளைக் காக்க வேறொரு நூலின் தேவையில்லை. சூரியன் (அல்லது விளக்கு) சுய வெளிச்சத்தினால் தன் குணங்களையும் பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களின் குணங்களையும் காட்டுவது போலவே வேதங்களுமாகும். வேதங்களின் உரைகளாவன:— ஐதிரேயம், சதபதம், சாமம், கோப்தம், எனப் பிரமாணங்கள் நான்கு; சிட்சை, வியாகரணம், சந்தசம், நிருக்தம், சோதிடம், கற்பம், என வேதாங்கங்கள் ஆறு; ஆயுர்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், என உப வேதங்கள் நான்கு; சாகைகள் ஆயிரத்து நூற்றிருபத்தியேழு; இவைகளையெல்லாம் துணைப் பிரமாணங்களாகக் கருதுகிறேன். அதாவது வேதங்களுக்கு ஒற்றுமையிருக்கிற வரையிலேயே பிரமாணங்களாகும். அதற்கு மாறுங்காலத்தில் பிரயோசனமற்றவைகளே.

3. பாரபட்சமன்னியில் அறவழியை அநுசரித்தல்; உண்மையை மனோ வாக்குக் காயங்களினால் போற்றுதல்; ஈசுவர வாக்கான வேதங்களுக்கு விரோத மன்னியிலிருத்தல்; இவைகளே தர்மமெனப்படும். பாரபட்சத்துடனிருத்தல், மனோவாக்குக் காயங்களினால் உண்மையில்லாததைப் போற்றுதல்

ஈசுவர வாக்கான வேதங்களுக்கு விரோதமாயிருத்தல் இவைகளே அதர்ம மெனப்படும்.

4. இராகத்துவேஷம், சுகதுக்கம், இன்பதுன்பம், ஞானம் முதலான குணங்களுடனும் அற்ப அறிவுடன் கூடினதும், நித்யமானதுமானதே ஜீவன்.

5. இயற்கையாய் வேறுபட்டும், மாறுன குணம், சுபாவம் இவைகளுடனும் கூடினபடியாஞல் கடவுளும், ஜீவனும் வெவ்வேறுனதே. ஆஞல் வியாப்ய வியாபக சம்பந்தத்திஞல் இரண்டும் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே அவைகளுக்குச் சமானமான குணங்களுண்டு. பொருளொன்று ஆகாசத்தின் ஆதாரவிலிருந்தாலும் அதிலிருந்து வேறுகவும் தனிமையாகவுமே இருக்கிறது, இருந்தது, இருக்கும். ஆஞல் எக்காலமும் ஒன்ருக ஆகாது. அஃதேபோல் ஈசுவரனும் ஜீவனும் ஆகும். இரண்டிற்கும் உள்ள உறவு வியாபகவியாப்ய சம்பந்தமேயாகும். தகப்பன் பிள்ளையைப் போலாம். இது உபாசிக்கிறது. அது உபாசிக்கப்படுகிறது.

6. ஈச்சுரன், ஜீவன், உபாதான காரணமான பிரகிருதி இம்மூன்றும் அநாதி, நித்தியமானது. இவைகள் எப்படி நித்தியமோ அப்படியே இவைகளுடைய குணகர்மஸ்வபாவங்களுமாகும்.

7. சம்யோகத்தின் பயஞக விளையும் பொருள், குணம், சுபாவம் முதலியவைகள் வியோகத்திஞல் விலகிவிடும். ஆஞல் சம்யோகத்திற்குக் காரணமாயிருக்கும் சக்தி எக்காலமும் அநாதியானது. அது சம்யோகத்திற்கும் வியோகத்திற்கும் காரணமாக யிருந்து கொண்டேயிருக்கும். சம்யோகம், வியோகம், ஆக்கல் அழித்தல் முதலானவைகள் முறையே அநாதியாக நடந்து வருகின்றன.

8. வெவ்வேறுன பொருளை ஞானத்திற்கும் யுக்திக்கும் ஏற்றவாறு கலந்திருப்பதிஞல் ஏற்படும் விளைவே சிருஷ்டி.

9. ஈச்சுரனிடத்திலுள்ள படைக்குந் தன்மையை இயற்கையாய் உபயோகிப்பதே சிருஷ்டியின் நோக்கமாகும். "கண்களிஞல் யாது பயன்" என்று வினவுங்கால் "உண்மையாகவே பார்ப்பதற்கு" என்பதுபோலவே இவ்விஷயத்திலும். கடவுள் படைக்குந் தன்மையைப் பிரயோகிக்கவும், ஜீவன்களுடைய கர்மாநுசாரம் பலாபலன்களை யனுபவிக்கவும் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்க வேண்டியது அவசியம்.

10. பிரபஞ்சம் படைக்கப்பட்டது. படைத்தவர் மேற்சொன்ன ஈச்சுவரன். பிரபஞ்சத்தின் கண் காணப்படும் அமைப்பையும், விதைமுதலானவைகளைப் போன்ற ஜடப்பொருள்கள் சுயமாகவே ஏற்றவாறு சேர்ந்துகொள்ள சக்தியற்றிருப்பதையும் நோக்குங்காலே சிருஷ்டி கர்த்தாவின் தேவை தெளிவாகும்

11. பந்தத்திற்குக் காரணமுண்டு. பாபத்திற்கு இருப்பிடமான இதுவே அவித்தையாகும். இதுவே கடவுளற்ற பிறபொருளை உபாசிக்கவும், அஞ்

ஞானத்தை விளைவித்து அதன் பயனாகத் துக்கத்தையும் துன்பத்தையும் தரும். இதிலிருந்து எல்லோரும் விலக முயலுவதால் பந்தமென்ற பெயர் உண்டாயிற்று.

12. பற்பல துன்பம் துக்கம் முதலியவைகளிலிருந்து மீறி விடுதலையடைந்து சர்வவியாபியான ஈச்சுரவனிடத்திலும் அவனுடைய சிருஷ்டியிலும் நிர்ணயஞ் செய்த காலம் வரையில் திருப்தியின்பத்தை யனுபவித்து ஆனந்தமடைந்த பின்னர் சுயரூபத்தில் உலகத்திற்குத் திரும்புவதுமே முக்தியாகும்.

13. முக்திக்குச் சாதனங்களாவன:—யோகப்பியாசம், தர்மானுஷ்டானம், பிரம்மச்சரியாப்பியாசத்தினால் அறிவைப் பெறல், அறிவாளர், புத்திமான் இவர்களுடைய சேர்க்கை, மெய்ஞ்ஞானவாசை, நல்லெண்ணம், புருஷப் பிரயத்தினம் முதலியன.

14. தர்மவழியில் பெறுவது அர்த்தம் (பொருள்). மாறானவழியில் பெறுவது அனர்த்தம்.

15. தர்மம் அர்த்தம் இவைகளினால் விளைவதே கர்மம்.

16. குண கர்மஸ்வபாவப் பிரகாரம் வருணாச்சிரமத்தை யறிகிறேன்.

17. சுபகுணகர்மசுவபாவத்துடன் கூடினவனாயும் பாரபட்சத்திலிருந்து விலகினவனாயும் நீதிநெறி வழியே பெற்றோர்களைப்போல பிரஜைகளிடம் நடந்துகொண்டு அவர்களுடைய அபிவிருத்தியைப் பெருக்குவதிலேயே பிரயாசைப்படுகிறவனாயு மிருப்பவனே அரசன்.

18. சுத்தகுணகர்ம ஸ்வபாவத்துடன் கூடினவர்களாய் பாரபட்சமற்று அறவழியைக் கைப்பற்றி பிற பிரஜைகளுடையவும் அரசனுடையவும் சுகத்தைப் பரப்புவதிலேயே கருத்து கொண்டு இராஜத்துரோகமில்லாதவர்களாய் பெற்றோரைப்போல் அரசனைப் பாவித்து நடக்கிறவர்களே பிரஜைகள்.

19. தீர விளங்க ஆலோசித்து எச்சமயத்திலும் உண்மையைக் கைக்கொள்ள பேராவல்கொண்டு அநியாயத்தை யழித்து நியாயத்தை நிலைநிறுத்தி தன்னுயிரைப்போல் மன்னுயிரை நினைப்பவனையே நீதிமான் என்று எண்ணுவேன்.

20. அறிஞர்களே தேவர்கள். அறிவிலிகளே அசுரர்கள், தீயபாபத்தை மதிக்கிற தீயோர்களே பிசாசுகள். குணவேஷதாரிகளே இராக்ஷசர்கள்.

21. அறிஞான், பெற்றோர், ஆசாரியன், அதிதி, நீதிமான், அரசன், தர்மாத்மா, பதிவிரதை, ஏகபத்னிவிரதன் இவ்விதமானவர்களை மதித்துப் பூஜை செய்வதே தேவபூஜையாகும். இதற்கு மாறாய் இவர்களுடையவும் ஏனைய மூர்த்திகளையும் பூஜிப்பது அதேவ பூஜையாகும். ஷைவர்களைப் பூஜிப்பதே ஏற்றது, வேறான உயிரற்ற சடங்களைப் பூஜிப்பது ஏற்காததே.

22. அறிவு, ஞானம், அறவழி, தன்னடக்கம், முதலானவைகளைப் பெற எது துணையாயிருக்கிறதோ, எதனால் அவித்தை முதலான குற்றங் குறைகள் நீங்குகிறதோ அதுவே சிட்சை (பயிற்சி).

23. பிரம்மா முதலான இருடிகளால் ஆக்கப்பட்ட ஐத்ரேயம் முதலிய பிரமாணக் கிரந்தங்களே புராணமாம். கல்ப்பம் காதம் (கதை) காரசம்லீ (சரிதை) முதலானவைகளிலேயே உண்மையான இதிகாசம் கிடைக்கும். புராணங்களென்பது பாகவதம் முதலானவைகளல்ல.

24. துன்பக் கடலைத் தாண்ட துணையாயிருப்பதே தீர்த்தம். எனவே அவைகளாவன :—மெய்யுரைத்தல், அறிவு வளர்ச்சி, நல்லோருடன் இணங்கல், இயமநியமங்களைப் பழகுதல், யோகப்பியாசம் செய்தல், புருஷப்பிரயத்தினம், அடக்கம், மனக்கட்டு, பெருந்தன்மை, விஞ்ஞானவாராய்ச்சி, உதார குணம் ஆகியவைகளே. அறிவிலிகள் அழைக்கும் நகரங்கள், நதிகள், ஓடைகள், முதலானவைகள் துன்பக்குழியும் பயங்கரப் பள்ளமுமேயாகும்.

25. பூர்வவினைப் பிரகாரம் விளையும் விதியெனப்படுபவைக்கு விடுத்துச் சும்மாயிராமல் சுறுசுறுப்புடனிருத்தலே சிறந்தது. ஏனெனில் மறுபிறப்பில் கர்மங்களைத் திருத்தி அதுவே யமைக்கிறது. பிரயத்தினமன்னியிலிருப்பது யாவற்றையும் கெடுத்துவிடும். எனவே குருட்டுத் தலைவிதியைக் காட்டிலும் இப்பிறப்பில் செய்யும் கர்மங்களே சிறந்தது.

26. பிறருடைய இன்பதுன்பம் லாபநஷ்டம் முதலியவைகளை இரக்கத்துடன் நோக்கி, குணங்களுக்கேற்றவாறு அறிவதினாலேயே மனிதனின் சிறந்த சுபாவம் வெளியாகும். இதற்கு மாறானது வெறுக்கத்தக்கதே.

27. எதினால் மனோ வாக்கு காயம் மூன்றும் மேம்படுகிறதோ அதுவே சம்ஸ்காரம். தொட்டிலிலிருந்து சுடுகாடுவரையிலுள்ள சம்ஸ்காரங்கள் 16. இவைகளை மனிதன் நடத்தியே தீரவேண்டுமென வெண்ணுகிறேன். இறந்தவர்களுக்குத் தகனத்திற்குப்பின் ஒன்றும் செய்யக்கூடாது.

28. தகுதிகளுக்குத் தக்கவாறு அறிஞர்களை அபிமானித்தல்; தொழில் முறை; சிற்பசாஸ்திரம்; இரசாயனம் முதலானவைகளைப் பயிற்சி செய்து பயன்படுத்திக்கொள்ளல்; கல்வியறிவை யூட்டுதல்; அக்னிஹோத்திரத்தின் மூலமாக வாயு, வானம், மழை, காற்று முதலியவைகளையும் பரிசுத்தமாக்கல்; இவைகளே யக்ஞம். கடமைகளில் சாலச்சிறந்தது இதுவே.

29. சிறந்த குணகர்ம சுபாவத்துடன் கூடினவர்களைப் பழைய முறைக் கேற்க ஆரியர் எனவேண்டும். இழிவான குண கர்மஸ்வபாவத்தையுடையவர்களைத் தஸ்யுக்களெனவேண்டும்.

30 சிருஷ்டி முதற்கொண்டு மானிடவர்க்கத்தின் பகுதியான ஆரியர்கள், இங்கு வசித்தபடியினால் இந்தியாவிற்கு ஆரியவர்த்தம் என்று பெயர். வடக்கில் ஹிமாலயமலைகளினாலும், கிழக்கில் அட்டக்கினாலும் தெற்கில் விந்தியபர்வதத்தினாலும் மேற்கில் பிரம்மபுத்திர நதயினாலும் சூழப்பட்டிருக்கிறது. இவ்வெல்லைக்குள் வாழும் சனங்கள் ஆரியர்கள்.

31. சாங்கோபாங்கமாய் வேதவித்தையைக்கற்று சத்தியாசாரத்தைக் கைப்பற்றி பொய்யாசாரத்தை விலக்குகிறவரோ ஆசாரியர்.

32. சத்தய சிக்ஷையையும் வித்தையையும் கிரகிப்பதற்கு அருானையும் அதை அடைவதற்கு இச்சையுள்ளவனையும், ஆசாரியரிடத்தில் பிரியத்தை உண்டுபண்ணுகிறவனையுமே இருப்பவனுமே சிஷ்யன்.

33. தாய் தகப்பன், சத்தியத்தைக் கிரகிக்கச் செய்து அசத்தியத்தை விடச்செய்கிறவன் இவர்களே, குரு.

34. தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு நன்மை செய்து சத்யத்தை உபதேசிக்கிறவர் புரோகிதர்.

35. வேதத்தில் ஒரு பாகத்தையாயினும் அங்கத்தையாயினும் கற்றுக் கொடுக்கிறவர் உபாத்தியாயர்.

36. தர்மாசரணையின் பிரகாரம் பிரம்மசரியத்திலிருந்து வித்தைகளைக் கற்றுப் பிரத்தியட்சாதி பிரமாணங்களினால் சத்தியாசத்தியங்களை நிர்ணயித்து அசத்தியத்தை விட்டொழிப்பதே சிஷ்டாசாரம். இத்தகையவர்தான் சிஷ்டர்.

37. பிரத்யக்ஷாதி பிரமாணங்களான எட்டையும் ஒற்றுக்கொள்ளுகிறேன்.

38. உண்மையைப் பேசுகிறவன் தர்மாத்மா. சகலருடைய சுகத்தின் பொருட்டு பாடுபடுகிறவன் ஆப்தன்.

39. பரீட்சை ஐந்து வகைப்படும். (i) ஈஸ்வரன் குணகர்ம ஸ்வபாவம் வேதவித்தை. (ii) பிரத்யக்ஷாதி எட்டுப் பிரமாணம். (iii) சிருஷ்டி கிரமம். (iv) ஆப்தர்களுடன் விவாதம். (v) ஆத்மா வித்தை. இவ்வைந்து பரீக்ஷைகளினால் சத்யாசத்யத்தை நிர்ணயித்துச் சத்யத்தைப் பின்பற்றி அசத்தியத்தை ஒழிக்கவேண்டும்.

40. மனிதனின் துராசாரம் கலக்கம் இவைகளிலிருந்து நீங்கிக் கொண்டு சிரேஷ்டாசாரத்தையும் சுகத்தையும் விருத்திபண்ணுவதே பரோபகாரம்.

41. ஜீவன் தன்னுடைய காரியங்களைச் செய்வதில் சுதந்திரன். கர்மங்களுடைய பலன்களை அநுபவிப்பதிலோ பரதந்திரன். ஈசுவரன் தன்னுடைய சத்யாசார முதலிய காரியங்களைச் செய்வதில் சுதந்திரன்.

42. தடையில்லாது சுக விசேஷங்களை அனுபவிப்பதும் அதற்குத் தகுந்தவைகளைப் பெறுவதுமே சுவர்க்கம்.

43. துன்பங்களை அனுபவிப்பதும் அதற்கு வேண்டியவைகளைச் செய்வதுமே நரகம்.

44. சரீரத்துடன் உலகில் ஜீவன் பிரவேசிப்பதே (பிறப்பு) ஜன்மம். காலக்கணக்கில் இறந்தகாலம் நிகழ்காலம் வருங்காலம் எனப் பிரிக்கப்படுகிறது

45. ஜீவன் சரீரம் இவைகளுடைய சம்யோகம் பிறப்பும் வியோகம் இறப்பும் ஆகிறது.

46. நியாயப் பிரகாரம் பகிரங்கமாய் பரஸ்பர சம்மதத்துடன் சம்பந்தம் செய்துகொள்ளுவதே விவாகம்.

47. புருஷன் இறந்த காரணத்தினாலோ அல்லது நபும்சகம் முதலிய ஸ்திரீ ரோகங்களினாலோ, பெண் தன் வர்ணத்தில் அல்லது உயர்ந்த வர்ணத்திலுள்ள புருஷனுடன் சிறிதுகாலம் மக்கட்பேறுக்காகச் சேர்ந்திருப்பதே நியோகம்.

48. ஞாபகமிருக்கவேண்டி குணங்களைப் பாடிப் புகழ்வது ஸ்துதி, அதனால் அன்பும் அதையொத்தநன்மைகளும் மிளிரும்.

49. சுயப்பிரயத்தினத்தினால் கைகூடாத அறிவு முதலிய வரங்களைக் கேழ்ப்பதே பிரார்த்தனை. இதனால் விளைவது நிரபிமானம், வணக்கம், சாந்தி இவைகளே.

50. ஈசுவரனுடைய குணகர்ம சுவபாவங்களைப்போல் தனது குணகர்ம ஸ்வபாவங்களைப் பரிசுத்தமாகச் செய்துகொண்டு அவரைச் சர்வ வியாபியாக வெண்ணி, ஈசுவரனின் சமீபத்தில் தானும், தன் சமீபத்தில் ஈசுவரனும் இருப்பதை யோகப்பியாசத்தினால் பிரத்தியட்சம் செய்து கொள்வதே உபாசனை. இதனால் அறிவைப்பெற மனம் இடங்கொடுக்கும்.

குணங்களைக் கற்பித்து பிரார்த்தனை உபாசனை செய்வது சகுணோபாசனை. அனீசுவர குணங்களிலிருந்து அவரை வேறுபடுத்திக் கூறுவதே நிர்குணோபாசனை. தர்மகுணங்களை பெறக்கோருவதே சகுணோபாசனை; தீயகுணங்களைத் துலைக்கக் கடவுளருளைக் கோருவது நிர்குணோபாசனை. கடவுளின் பரிசுத்தத்தில் பூரண நம்பிக்கை சகுணோபாசனை. கடவுளுடைய நியாயத்திற்கும் அருளுக்கும் அடிமையாயக் கிடப்பதே நிர்குணோபாசனை.

என்னுடைய புஸ்தகங்களாகிற சத்தியார்த்தப் பிரகாசம், இருக் வேதாதி பாஷ்ய பூமிகை முதலானவைகளில் விளக்கப்பட்டுள்ள இவைகளே எனது கொள்கை. மெய்யுரைத்தல், பொய்பேசாதிருத்தல் முதலிய தத்துவங்களை யொத்துக்கொள்ளுகிறேன். ஆனால் பலமதப் பிரிவினைகளுடைய சண்டைகளை வெறுக்கிறேன். ஏனெனில் அதன் பயன் வீண் கோபமும மதத்தின் பெயரால் முரட்டுத்தனமான சித்தாந்தங்களுமே. எனவே எனது வாழ்நாளின் நோக்கங்களாவன:—மனோவாக்கு எண்ணங்களில் சத்தியத்தை நிலவச் செய்தல்; சமயசேர்க்கை; பரஸ்பர பகையொழித்தல்; நேசபாவத்துடன் தர்க்கித்தல்; மானிட குடும்பத்தின் க்ஷேமத்திற்குக் கீழ்ப்படிந்து பொது நன்மையை வளர்த்தல். சர்வவல்லமையுள்ள பரமாத்மாவின் கருணையினாலும் அருளாலும் ஆப்தர்களுடைய உதவியாலும், எல்லா சனங்களும சுலபமாகவே தர்மார்த்த காமமோட்சத்தைப் பெற்று அதன் பயனாக எந்நாளும் சிறந்து விளங்கி இன்பமடைய வேண்டி "இச்சித்தாந்தங்கள் சகல பூகோளத்திலும் சீக்கிரமாகவே பரவவேண்டும்".—ஓம்—சாந்தி—சாந்தி—சாந்தி.

இரண்டாம் பாகம் முற்றிற்று.

சூசிகை.

	அத்தியாயம்.	பக்கம்.
அக்னிஹோத்திரம்	4	116
,,	3	47
அங்கத்தினர்கள்	6	7
அதிகாரிகளின் கடமை	6	16
அதிதி யக்ஞம்	4	110
அந்தக்கரணம்	9	111
அபாவம்	3	66
,,	3	72
,,	3	73
அமெரிக்கா	10	142
அனர்த்தகல்பம்	12	173
அரசன்	6	4
அரச உபதேசங்கள்	6	21
,,		29
அரசிறை	6	13
அர்த்தாபத்தி	3	65
அவதாரம்	7	58
ஆகாரம்	10	136
ஆசாரம்	10	141
ஆசாரிய கடமை	3	61
ஆசிரம விதிகள்	4	100
ஆத்மா	3	61
ஆரியர்களின் முன்னேற்றம்	8	99
ஆஸ்திக நாஸ்திக வாதம்	12	117
இதிகாசம்	3	65
இராஜாக்கள்	13	244
இராஜநீதி	6	42
இராமனுஜர்	11	35
இரசாயனம்	2	37
இராமேசுவரம்	11	51
இல்லரநேசம்	4	107

	அத்தியாயம்.	பக்கம்.
ஈசுவர நிரூபணம்	7	46
உண்மையறியா பக்தனின் கதை	11	32
உருத்திராட்சம்	11	31
உபதேசம்	3	58
உபமானம்	3	70
உபாசனை	7	55
ஓய்வுநாள்	13	238
கட்டாயப்படிப்பு	3	81
,,	3	43
கயா சிராத்தம்	11	48
கபீர்பக்தி	11	96
கர்ப்பகால ஒழுக்கம்	4	105
கர்ப்பகால ஆகாரம்	2	30
கர்ப்பதான காலம்	2	30
கர்மம்	3	70
காயத்ரீ	3	43
காலம்	3	68
கிரகபலன்	11	73
குருகுல வாசதத்துவம்	3	43
குருபூஜை	11	61
குடும்பக் கல்வி	2	30
குழந்தைகளைக் காப்பாற்றல்	2	31
குழந்தைகளின் பயிற்சி	2	32
கோசேனர்கள்	11	103
சரீரங்கள்	9	121

	அத்தியாயம்.	பக்கம்.
சந்தியோபாசனை	3	45
சபை கிரமங்கள்	6	32
சபைத் தலைவர்.	6	3
சத்தியமுரைத்தல்	4	109
சத்திய தீர்த்தம்	11	59
சன்மார்க்க போதனை	2	39
சரீரத்தின் நான்கு பர்வங்கள்	3	53
சம்பவம்	3	66
சமணமதம்	10	145
சந்நியாசி ஆசிரமம்	5	144
சாகம்	2	77
சாங்கியம	3	82
சிராத்தம்	11	27
சிருஷ்ட்டி	8	85
சிராவகன்	12	193
சுகதுக்கம்	4	121
சுகாதார எச்சரிக்கை	2	40
சுதந்திரம்	4	121
சோமனுதபுரம்	11	53
சோதிடம்	2	35
ஜபம்	3	44
ஜாதகர்மம்	4	106
ஜீவன்	8	85
ஜீவன்கதி	9	116
தனுர்வேதம்	3	78
தண்டனைகள்	6	36
”	6	37
தட்சிணம்	11	52
தந்திரங்கள்	11	40
தர்ப்பணம்	11	77
தர்மம்	5	144
தர்மலட்சணம்	5	146

	அத்தியாயம்.	பக்கம்.
தாதுபக்தி	11	100
துவாரகை	11	52
தூரவிவாக குணங்கள்	4	89
தேவி பாகவதம்	11	30
தேவப் பிரயாகை	11	56
தேவயக்ஞம்	3	47
நரசியுடைய ஹுண்டியல்	11	54
நவத்திரவியங்கள்	3	67
நவீனவேதாந்திகள்	9	109
நாஸ்திகர்	8	88
நரகம்	9	130
நாளாகமம்	13	241
நானக்	11	97
நாராயண தரிசிகள்	11	113
நிகண்டு	3	76
நியமங்கள்	3	55
நியாயம்	3	82
நியோகம்	4	126
நிமித்த உபாதான காரணம்	8	80
பக்தமாலை	11	92
பஞ்சதேவ பூஜை	11	47
பரமேசுவரனுடைய சதநாமங்கள்	1	6
”		29
பலிவைசு தேவம்	4	116
பாகவதம்	11	65
பாணினி	3	75
பாசாக்குக்காரர்களின் இலட்சணங்கள்	4	118
பிதாமகன்	4	114
பித்ரு பூஜை	11	4
பிதருயக்ஞம்	4	115

22151 4